(Plato) பிலேற்றோ என்பவர் கிறிஸ்து ரக்ஷகர் பிறப்பதற்கு 400-வருஷத்திற்குமுன் இருந்தவர்; இவர் சோக்கிரேத்துஸ் என்பவருக்குச் சீஷன்; இவர் 1-வது: பரப்பிரம வஸ்துவும் சடப்பொருளும் நித்திய ஆதிகாரண வஸ்துக்கள் என்றும், 2-வது: பரப்பிரம வஸ்துவினர் நித்தியமாயிருக்கப்பட்ட சடப்பொருளைக்கொண்டு பிரபஞ்சத்தைப் பண்டத்தார் என்றும், 3-வது: தேவதன்மையைப் பொருந்தியவர்கள் இரண்டுமூன்றுபேர்உண்டென்றும், 4-வது: ஆத்துமாவானது அழிவில்லா வஸ்துவாயும், பல ஜனங்களுக்கு உடன்பட்டதாயும் இருக்கிறது என்றும், 5-வது: சடப்பொருளாலுண்டான பிரபஞ்சமானது எங்கும் வியாபித்திருக்கிற ஆத்துமாவைத் தனக்குயிராகக்கொண்டிருப்பதுமன்றி, மனிதருடைய ஆத்துமங்களை அதில் ஒரு பங்காய் அடக்கியிருக்கிறது என்றும், 6-வது: உலகமானது உன்னத தேவனால் சிருஷ்டிக்கப்படாமல், பூதங்கள் என்னப்பட்ட கீழான தேவர்களால் சிருஷ்டிக்கப்பட்டது என்றும், 7-வது: குறிக்கப்பட்ட காலவட்டங்களை நிறைவேற்றிக்கொண்டுவருகிற பிரபஞ்சகாலமானது ஒவ்வொரு காலவட்டத்தின் முடிவிலும் ஆதியிலிருந்த ஸ்திதிக்கு வரும் என்றும், 8-வது: கடைசியில் மனுஷருடைய ஆத்துமா பிரபஞ்சத்தின் ஆத்துமத்தோடு வியாபித்துப்போகும் என்றும், 9-வது: ஆத்துமாவானது சடப்பொருளோடு சம்பந்தப்பட்டிருப்பதினாலே உலகத்தில் தீமையுண்டாயிற்று என்றும், 10-வது: ஐம்புலன்களை ஒடுக்கிச் சடப்பொருளினாலுண்டான தீமைக்கு விலகுவதே மானிடர் செய்யவேண்டிய பிரதான கடமை என்றும் போதித்தார். "உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியவில்லை" என்றும், "இவ்வுலகத்தின் ஞானத்தைத் தேவன் பைத்தியமாக்கவில்லையா" என்றும் சத்திய வேதம் சாற்றுவது யதார்த்தமே.

Moral condition of heathen nations

விக்கிரகாராதனைக்காரர்களுக்குள் இப்படிப்பட்ட விபரீதக்கொள்கைகள் இருக்குமாகில், சாதாரண ஜனங்களுக்குள் எவ்வளவு குழப்பங்களும் குசமசக்குகளும் இருக்குமென்பதை யாவரும் அறிந்துகொள்ளுவார்; அவர்களுக்குள் தேவபக்தியும் பயமும் இஞ்

சித்தும் இல்லாமையால், சகலவிதமான தீய ஒழுக்கங்களையும் அனுசரிக்கலாயினர்; அவர்கள் நடக்கையைப்பற்றிச் சத்தியவேதம் திட்டமாய்க் கூறுகிறது. ரோ. 1. 24-32.

State of the Jews

இவர்களை விட்டுவிட்டு யூதஜாதியாருடைய உள்ள ஸ்திதியை நோக்குங்கால் கேவலம் அதுவும் பரிதாபமாயிருந்ததென்றே தீர்க்கவேண்டியிருக்கிறது. உலகத்தில் சத்தியசாட்சிகளாய் விளங்கும்படி தேவன் அவர்களை ஏற்படுத்தியிருந்தார்; அவர்களுக்குப் "புத்திரசுவிகாரமும், மகிமையும், உடன்படிக்கைகளும், நியாயப்பிரமாணமும், தேவாராதனையும், வாக்குத்தத்தங்களும்" அருளப்பட்டிருந்தன. ரோ. 9. 4. கடவுள் விஷயங்களில் அறிவுண்டாகும் பொருட்டு தீர்க்கதரிசிகள் முதலான தேவபக்தர் அவர்களுக்குள் எழும்பி தேவோத்தத்தையும், பிரமாணங்களையும் கூறிவந்தார்கள்; அப்படியிருந்தும், அவர்கள் தங்கள் பாரம்பரை என்னும் மனுஷர் கோட்பாட்டினால் தேவனுடைய திருவாக்கை அவமாக்கிப் போட்டார்கள்; அவர்கள் பலபேதமான கொள்கைகளை அனுசரித்து, அகங்காரத்தினாலே ஒருவருக்கொருவர் அசூயபகை சாதித்துவந்தார்கள்; இவர்களுக்குள் பரிசேயர் என்றும், சதுசேயர் என்றும், எஸேனர் என்றும், ஏரோதியர் என்றும் பல வகுப்பார் இருந்தனர்.

Pharisees

பரிசேயர் என்றால் "பிரிதல்" என்றர்த்தம்; இவர்கள் உலகத்தை விட்டுப் பிரிந்து கடவுளுக்குத் தொண்டு செய்கிறவர்கள் என்று எண்ணினதால், இவர்களுக்கு இந்தப் பெயர் உண்டாயிற்று. சத்தியவேதத்திலுள்ள சில உபதேசங்களைச் சரியாய் அறிந்துகொண்டார்கள். சுத்தஆவிகளும் அசுத்தஆவிகளும் உண்டென்றும், ஆத்துமா அழிவில்லாததென்றும், மரித்தவர்கள் உயிரோடெழும்புவார்கள் என்றும், மோட்சம் நரகம் உண்டென்றும் ஒப்புக்கொண்டு நடந்தார்கள்; இத்துடனே முன்னோருடைய பாரம்பரைகள் தேவவசனத்துக்குச் சமானம் என்று கொண்டு, வேதக்கருத்தை மாறுபாடாய்க் கூறினார்கள்; மதவிஷயத்தில் மகா பக்திமான்கள்போல மாரீசம் செய்தனர்; விஸ்தாரஜெபமும், கடுந்தபமும், வெளிச்சுத்தமும், விசேஷ உடையும், மேட்டிமைநடையும், வீண் பக்திவைராக்கியமும், மாயவித்தையும் அவர்களுக்குள் குடிகொண்டிருந்தன; அவர்களுடைய அகந்தையின் அளவைக் குறிக்கும்படி உலகரகஸ்கர் அவர்களை "வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள்" என்றார்.

சதுசேயர் இறிஸ்துநாதர் பிறக்க 260–வருஷத்துக்கு முன்னிருந்த யூதசாஸ்திரியாகிய (Sadoc) சாதோக் என்பவனுடைய கொள்கைகளை அனுசரித்தவர்கள். பரிசேயரிலும் சதுசேயர் குறைவாயிருந்தபோதிலும், இவர்களில் அதிகர் கனமும் தனமுமுடையவர்களாயிருந்தனர்; இவர்கள் மறுமையுமில்லை, ஆவியுமில்லை, மோட்சமுமில்லை, நரகமுமில்லை என்று சாதித்து சிற்றின்பப் பிரியராய் நடந்து வந்தவர்கள்.

Sadducees 260 B.C.

எஸேனர் இறிஸ்துநாதர் பிறக்க 200–வருஷத்துக்குமுன் தோன்றினவர்கள். சீரியபாஷையில் "எஸா" என்றால் "குணமாக்குதல்" என்றர்த்தம்; அவர்கள் சரீரப்பிணிகளையும், விசேஷமாய் மனநோவையும் தீர்க்கிறவர்கள் என்று தங்களைப் பாராட்டினபடியால், அவர்களுக்கு அர்த்தப் பெயர் வந்தது; அவர்கள் சந்நியாசிகளைப்போல் இல்வாழ்க்கையைத் தள்ளிவிட்டு, தபத்தை அனுஷ்டித்து வந்தவர்கள். மரித்தவர்கள் உயிரோடெழும்புவார்களென்ற விஷயத்தைத் தவிர, மற்ற விஷயங்களிலெல்லாம் பரிசேயருடைய கோட்பாட்டையே தழுவி நடந்தார்கள்; மோசேயின் சடங்குப்பிரமாணத்தைத் தள்ளிவிட்டு, நன்னெறிப் பிரமாணத்தை அங்கீகரித்தார்கள்; அவர்கள் இப்படி தாழ்ந்தவர்களாயிருந்தமையால், அவர்களைக்குறித்து சுவிசேஷத்தில் ஒன்றும் சொல்லப்படவில்லை.

Essenes 200 B.C.

ஏரோதியர் யூதேயாநாட்டுக்கு அரசனாயிருந்த ஏரோதுவின் பட்சத்தைச் சார்ந்தவர்கள். யூதர்கள் தங்களை ஆண்வந்த ரோமருக்குக் கப்பங்கட்டவும், அந்நியராகிய ரோமருக்குத் தழுவி நடக்கவும் வேண்டுமென்று சொன்ன ஏரோதுவுக்கு இவர்கள் சார்பாயிருந்தமையால், இவர்களுக்கு அந்தப் பெயர் உண்டாயிற்று. சதுசேயர் பெரும்பாலும் இவர்கள் கட்சியைச் சார்ந்தவர்கள்.

Herodians

மேற்சொன்ன மூவகுப்பாரைத்தவிர இன்னும் சில வகுப்பாரும் இருந்தார்கள்; அவர்களுக்கு வேதபாரகர் என்றும், ரபிகளாகிய யூதபோதகர் என்றும், நசரேயர் என்றும் பெயர்; அவர்களெல்லாரும் புறம்பான சடங்காசாரங்களை அதிகமாய்ப் பாராட்டி வந்தார்களேயன்றி பக்தியும் பரிசுத்தமுள்ளவர்களாயிருந்தார்களென்று சொல்ல ஏது

The whole world sunk in ignorance

யில்லை. தங்கள் மேசியாவாகிய லோகாதிபதி பூலோகத்தில் எழுச்சாதிபதியாயிருந்து, ரோமருடைய சொடுக்கோண்மையை அகற்றி, தமது செங்கோலைச் செலுத்துவார் என்று நினைத்திருந்தார்கள்; அவர்களுக்குள் தேவபக்தர்களாயிருந்த சகரியா, எலிசபெத்து, சிமியோன், அன்னாள் முதலான கொஞ்சப்பேர்தான் "இஸ்ரவேலின் ஆறுதல்" ஆகிய இயேசுகிறிஸ்துவுடைய வருகைக்குக் காத்திருந்தவர்களாயும், அவரால் தங்களுக்கு நற்பேற்றம் உண்டாகுமென்று எண்ணினவர்களாயும் இருந்தார்கள். மற்றவர்களெல்லாரும் வீண்பக்தி, அறிவினம், அஞ்ஞானமாகிய அந்தகாரத்தில் அமிழ்ந்தியிருந்தவர்களே.

இப்படி ரோம யூதருடைய நிலைமையையும், புறத்தேசத்தாருடைய ஸ்திதியையும் கவனிக்கும்போது, மூன்றோ நான்கோ தேசம் கலந்த காரிருளால் மூடப்பட்டிருந்த வண்ணம் உலகத்தார் யாவரும் அஞ்ஞான இருளால் மூடப்பட்டிருந்தார்கள் என்றே சொல்லவேண்டும். ஆத்துமகோடிகளின் சீர் இப்படியிருக்கையில், "காலம் நிறைவேறினபோது" உலகாதிகாரியாகிய இறிஸ்து இயேசுகர்த்தர் "புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும்" தோன்றினார்.

Christ appeared in fulness of time.

தேவதூதர்களையும், சகல அண்டபிண்ட புவனங்களையும் படைத்த ஆதிகாரணக்கடவுளாயும் இருந்த அவர் அவதாரபுருஷராய் உதித்ததோடு, இதுமேலுலகிய அந்திப்பத்தனின் குமாரன் மகா ஏரோது என்பவன் யூதேயாநாட்டுக்கு இராஜாவாயிருந்தான்; இவன் கொடிய துஷ்டனும் மூப்பத்தேழுவருஷம் கொடுங்கோல் அரசுபுரிந்து, இறிஸ்துநாதர் பிறக்க மூன்றுவருஷத்தில் இறந்துபோனான்; அவன் இராஜ்யத்தை அவன் மூன்றுபிள்ளைகளாகிய அர்கேலா, பிலிப்பு, ஏரோது அந்திப்பா என்பவர்கள் கட்டி ஆண்டார்கள்; அவர்கள் எல்லாரும் தங்கள் தகப்பனைப்போலவே துஷ்டரும் குணக்கேடருமாயிருந்தார்கள்.

Herod, king of Judea.

ரோமைச்சக்கரவர்த்தியாகிய அகுஸ்து இராயன் அரசாண்ட இருபத்தாறாம்வருஷத்தில் உலகாதிகாரியாகிய இறிஸ்துநாதர் எருசலேம் பட்டணத்துக்குத் தெற்கு ஆறுமைல் தூரத்திலுள்ள பெத்லகேம் ஊரில் பிறந்தார். தாவீது இராஜாவின் குடும்பத்தைச்சார்ந்த யோசேப்பு என்பவனுக்கு நியமிக்கப்

Birth of Christ.

பட்டிருந்த கன்னிகையாகிய மரியம்மான்தான் அவருடைய தாய்; அவர் கைக்குழந்தையாயிருக்கும்போது ஏரோது இராஜா அவரைக் கொலைசெய்யவேண்டுமென்று யோசித்தபடியால், அவருடைய தாய் தந்தையர் அவரை எகிப்துக்குக் கொண்டுபோய், கொஞ்சகாலம் வைத்திருந்து, அவ்விராஜன் இறந்தபிற்பாடு யூதேயாநாட்டுக்குத் திரும்பி வந்து, நாசரேத்தூரில் வாசஞ்செய்தார்கள்; அவர் பன்னிரண்டுவயதாயிருக்கும்போது எருசலேமூருக்குப் போய், யூதசாஸ்திரிகளோடே சம்பாஷணைபண்ணினார்; பின்பு நாசரேத்தூரில் முப்பதுவயதுமட்டும் தச்சவேலை செய்துவந்தார்.

John the Baptist.

மூப்பதாம் பிராயத்தில் அவர் யோவான்ஸ்நானனுலே யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றார்; இந்த யோவான், சகரியா என்னும் ஆசாரியனுடைய குமாரன். ஆசியாகண்டத்து அரசர்கள் ஒரு விஷயத்தைப்பற்றி ஓரிடத்திற்குப் போகும்போது, தங்களுக்குமுன் கட்டியக்காரரை அனுப்புவது வழக்கம்; அதுபோல் யோவான்ஸ்நானன் இறிஸ்து மகாராஜாவுக்கு முன்னோடனுக வந்து, அவரது பாதையை ஆயத்தம் பண்ணி, அவரது மகிமைகளே ஜனங்களுக்குக் கூறினான்.

Selection of Apostles.

இந்த யோவானுலே இறிஸ்துநாதர் ஞானஸ்நானம் பெற்றபின்பு, தமது உத்தியோகத்தைக் கைக்கொண்டு, பன்னிரண்டுபேரைத் தமக்குச் சேஷராகத் தெரிந்து, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்ற திறந்த பட்டத்தைத் தரிப்பித்து தாம் கூறின சத்தியங்களுக்குச் சாட்சிகளாகவும், அவைகளே மற்றவர்களுக்கு உபதேசிக்கிறவர்களாகவும், தமக்குப்பின் தமது சபையைப் பரிபாலிப்பவர்களாகவும் அவர்களே ஏற்படுத்தினார்.

Public Ministry of Christ.

சற்குருவாகிய இறிஸ்துநாதர் தமது திவ்வியஊழியத்தை இப்பூலோகத்தில் மூன்றரைவருஷம் செய்துவந்தார். பாபாத்மாக்களுக்குப் பரகதியையும் வழியையுங்குறித்து ஞானோபதேசங்கள் செய்து, தாம் உலகத்தை இரகூஷிக்கவந்த கருணாகரக்கடவுள் என்று வெளிப்படுத்தினார்; அவர்கள் சரீரவியாதிகளையும் ஆத்துமவியாதிகளையும் தீர்க்கும்படி, இந்த அற்புதமூர்த்தி அநேக அதிசய காட்சிகளைக் காட்டினார். இரக்கக் கடலாயிருந்த இவர் சமஸ்த ஜனங்களுக்கும் நன்மை செய்கிறவராய்ச் சுற்றித் திரிந்தார். தாமே வழி சென்றும், சத்தியம் என்றும், ஜீவன் என்றும், தம்மாலேயே மானிடர் யாவரும் மூர்த்திபெறவேண்டும் என்றும் திருவாய் மலர்ந்தருளினார்; அவர் தமது ஷேஷரிடத்திலும் மற்றவர்களிடத்திலும் செய்த சம்பாஷணைகளில், தமது இராஜ்யம் எத்தன்மையுள்ளதென்று எடுத்துரைத்தார்; அது ஆரம்பத்தில் புளிப்புமாவைப்போல் கண்ணுக்குத் தோன்றமாட்டாது என்றும், கடுகுவிதையைப்போல் சிறிதாயிருக்கும் என்றும், பின்பு காலாவர்த்தியில் அது வளர்ந்து உலகமெங்கும் பரவும் என்றும் உவமைகளாய் விளம்பினார்.

Death of Christ, A.D. 30. Tiberius.

இப்படி அவர் தமது அமிர்தவசனங்களினுலே பரமகாரியங்களைப்பற்றி அவர்களிடத்தில் பேசி, அவர்கள் சரீரங்களுக்கும் ஆத்துமங்களுக்கும் அநேக நன்மைகள் செய்துவந்தபோதிலும், அவைகளே அவர்கள் நிறைவேறும் மதியாமல், அந்த அருள்நாதனைப் பிடித்து, துன்பப்படுத்தி, சிலுவையிலறைந்து கொலைசெய்தார்கள். இது ரோமைச்சக்கரவர்த்தியாகிய திபேரியு இராயன் அரசாண்ட பதினேட்டாம் வருஷத்திற்குச் சரியான இறிஸ்து பிறந்த 30-ம் ஆண்டில் சம்பவித்தது. 34-ம் வரு என்று சொல்வது சரியான கணக்கல்ல.

His Resurrection and Ascension.

ஜீவகாருண்யக் கடவுளாகிய அவர் இப்படி மண்ணுயிருக்காகத் தன்னுயிரை விட்டு, மூன்றும் நாளில் மறுபடியும் உயிரோடெழுந்தருளினார்; அதற்குப் பின் அவர் இப்பூவுலகில் நாற்பதுநாளிருந்து பத்துவிசை தமது பக்தர்களுக்கு அருள்காட்சி யளித்து, பரிசுத்த ஆவியின் வரப்பிரசாதங்களைப் பெறுமட்டும் எருசலேம் பட்டணத்தில் இருக்கும்படியாகவும், அதன்பின் உலகமெங்கும் போய்ச் சர்வசிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படியாகவும் அவர்களுக்குக் கட்டளையிட்டு, பின்பு தமது சீஷர்களைப் பெத்தானியாவரைக்கும் அழைத்துக்கொண்டுபோய், அவர்களுக்கு ஆசீர்வாதங்கூறி, சேனைவானதூதராய்ப் பரலோகத்திற்கு எழுந்தருளினார்.

Outpouring of the Holy Spirit: 3,000 converted.

இப்படிக இறிஸ்துநாதர் பரலோகஞ்சென்ற பத்துநாளுக்குப்பின் பெந்தெகொஸ்தேயென்னும் மகோற்சவநாளில் ஆச்சரியமான ஒரு சம்பவம் நடந்தது. தேவன் தமது சபையை உலகத்தில் வெளியரங்கமாய் ஸ்தாபிக்கும்படி திருவுளங்கொண்டு, பரிசுத்தஆவி "அக்கினி மயமான நாவுகள்" போல் சீஷர்கள்மேல்

இரட்சிப்பை ஜோலிக்கும்படி செய்தார்; அக்காலத்தில் பெந்தெகொஸ்தே பண்டிகையை ஆசரிக்கும்படி பார்த்தியா, மேதியா, எலாமித்தியா, மெசொப்பொத்தாமியா, யூதேயா, கப்பத்தோக்கியா, பொந்து, ஆசியா, பிரிகியா, பம்பிலியா, எகிப்து, சிரேனே, லிபியா, ரோமை, கிரேத்தா, அரபியா முதலான தேசங்களிலுள்ள யூதரிலும், யூதமார்க்கத்தில் அமைந்தவர்களிலும் அநேகம்பேர் எருசலேம் பட்டணத்துக்கு வந்திருந்தார்கள். தேவன் அச்சமையத்தில் பரிசுத்தஆவியைச் சீஷர்களுக்கு அனுக்கிரகித்து, அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசவும், சுவிசேஷத்தை யாவருக்கும் பிரசங்கிக்கவும் இருபைபாவித்ததைப் பார்க்கும்போது, அந்த ஜனங்களெல்லாரும் அவ்வாச்சரிய காட்சியைக் காணவும், சத்தியமார்க்கத்தைப் பலதேசங்களில் பிரசித்தப்படுத்தவுமே அப்படிச் செய்தார் என்று நினைக்கலாம்; அந்த காளில் பேதுரு அப்போஸ்தலன் செய்த பிரசங்கத்தைக் கேட்ட ஜனங்களில் மூவாயிரம்பேர் இரிஸ்துரகூசரது திருவடிசம்பந்தராகி, ஞான்ஸ்நானம் பெற்று சபையில் சேர்ந்தார்கள். அவர்கள் எல்லாரும் "ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு, மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள்." ஆ! இரிஸ்தவர்களெல்லாரும் இப்படி இப்போதும் இருப்பார்களானில் எவ்வளவு மகிமையாயிருக்கும்!

Increase of the Church.

இந்த அற்புத காட்சியுண்டான கொஞ்சகாலைக்குப்பின் பேதுரு, யோவான் என்பவர்கள் தேவாலயத்தில் ஒரு பிறவிச் சப்பாணியைச் சுகமாக்கி, அவ்விடத்தில் கூடிவந்த ஜனங்களுக்கு இயேசுநாதரைப் பற்றிப் பிரசங்கித்தார்கள்; அநேகர் அதனாலே ஞான உணர்ச்சிகள் அடைந்து சபையைச் சேர்ந்தமையால், மூவாயிரம்பேராயிருந்தவர்கள் இலகாலைக்குள் ஐயாயிரம்பேரானார்கள்.

Persecution of the Apostles.

இப்படித் திருச்சபை நாளுக்குநாள் வளர்ந்துவருவதை யூதசங்கத்தார் பார்த்து, அதனாலே தங்கள்மார்க்கத்துக்கு அபாயம் வரும் என்று பயந்து, இரிஸ்துவின் திருத்தொண்டரைத் துன்பப்படுத்த ஆரம்பித்தார்கள்; அவர்களில் பேதுருவையும் யோவானையும் பிடித்துக் காவலில் அடைத்தார்கள். மறுநாள் அவர்கள் இருவரும் யூதருடைய மகா சபைக்குமுன் வந்தபோது, அவர்களுடைய ஒழுக்கத்தையும்

தையாதையும் பார்த்து, இரிஸ்துநாதரைப்பற்றி ஜனங்களுக்குப் பிரசங்கஞ்செய்யக்கூடாதென்று அவர்களுக்குக் கண்டிப்பான உத்தரவு கொடுத்து அனுப்பிவிட்டார்கள்.

Apostles continue their work.

இப்படிச் சங்கத்தார் அவர்களைக் கிறிஸ்துசாக்ஷிகளின் திருநாமத்தைக் கூறாதபடி தடுத்தபோதிலும், அவர்கள் அதனாலே சற்றேனும் அஞ்சாமல் மகா தைரியத்தோடும் ஊக்கத்தோடும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துவந்தார்கள்; அவர்கள் கல்வி, இடம், பொருள், வல்முதலியவை ஒன்றும் இல்லாதவர்களாயிருந்தபோதிலும், தேவ அருள் பெற்றவர்களாயும், சத்தியத்திற்குச் சாட்சிகளாயும் விளங்கினபடியால், அவர்கள் போதித்த மார்க்கம் மேன்மேலும் விர்த்தியடைந்து கொண்டே வந்தது.

Appointment of Deacons.

இப்படிச் சபையின் காரியம் அனுகூலப்பட்டு வருங்காலத்தில் அதைச்சார்ந்த கிரேக்க ஸ்திரீகளுக்குள் பொது ஆஸ்திபைப்பற்றி வாக்குவாதம் நேரிட்டதால், அப்போஸ்தலர் அப்படிப்பட்டவைகளே காரியங்களை விசாரித்துக்கொள்ளும்படி உதவிகுருமார் ஏழு பேரை ஏற்படுத்தினார்கள்.

Stephen, Proto-martyr, A.D. 35.

அவர்களில் விசுவாசத்திலும் தேவபக்தியிலும் மிகச் சிறந்து விளங்கின ஸ்தேவான் என்பவர் சுவிசேஷத்தை மகா வைராக்கியத்தோடு பிரசங்கித்ததினாலே, யூதர்கள் அவரைப் பிடித்துக் கல்லெறிந்து கொலைசெய்தார்கள். சத்தியத்தினிமித்தம் இரத்த சாட்சிகளாய் மரித்தவர்கள் எல்லாரிலும் இவரே மூத்தினவர்; இது கி. பி. 35—ல் நடந்தது.

Church founded in Samaria.

இதனாலும் சீஷர் பயப்படாமல் கிறிஸ்துமார்க்கத்தை முன்னிலும் அதிக வைராக்கியமாக எங்கும் போய்ப் பிரசங்கித்துவந்தார்கள்; இதற்குமுன் யூதஜாதியாருக்குமாத்திரம் அதை அறிவித்துவந்தவர்கள் இப்போது இயேசுரகூசர் பரமண்டலத்துக்கு எழுந்தருளும் சமையத்தில் கொடுத்த கடைசிக் கட்டளைப்பிரகாரம் உலகமெங்கும் போய், கிறிஸ்து மார்க்கத்தைப் பிரசங்கிக்கும்படி ஆரம்பித்தார்கள். எழு உதவிகுருமாரில் ஒருவனாகிய பிலிப்பு என்பவன் சமாரியாவுக்குப் போய்,

சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபோது அநேகர் சபையில் சேர்ந்தார்கள்; "அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று."

Conversion of the Ethiopian Eunuch.

எருசலேம்பட்டணத்துக்குப்போய், தேவனைத்தொழுதுகொண்டு, திரும்பிப்போகும் எத்தியோப்பிய மந்திரியைப் பிலிப்பு கண்டு, அவனுக்குக் கிறிஸ்து ரகஷகாப்பற்றிப் பிரசங்கித்தான்; அதை அவன் கேட்டு அந்த இரகஷபெருமானே விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று, சந்தோஷத்தோடே தன் ஊருக்குப் போனான்; போனபிற்பாடு அங்கே அவன் தான் அனுசரித்துக்கொண்ட சத்தியமார்க்கத்தைப்பற்றி தன் இனஜனங்களெல்லாருக்கும் அறிவித்திருப்பான் என்பதற்குச் சந்தேகமில்லை; இப்படி "பிரபுக்கள் எகிப்திலிருந்து வருவார்கள்: எத்தியோப்பியா தேவனே நோக்கிக் கைநீட்டத் தீவிரிக்கும்" என்ற தீர்க்கதரிசன வாக்கு ஒருவாறு நிறைவேறிற்று.

Conversion of Saul, A.D. 36.

பிலிப்பு என்பவன் இப்படிக் கிறிஸ்துமார்க்கத்தைச் சமாரியா நாட்டில் பிரசித்தப்படுத்திக்கொண்டு வரும்போது, மற்றச் சேதர்கள் முயற்சியேற்றிருக்கவில்லை; அவர்களும் செசரியா, பித்தோலோமாய், தமஸ்கு முதலான விசேஷித்த பட்டணங்களுக்குப் போய், பாவிகள் லோகரக்ஷகராகிய கிறிஸ்து இயேசுகலாமியின் சமாதையுஞ்சுடி அவர்களுக்குப் போதனை செய்துவந்தார்கள். ஆயினும் கிறிஸ்துநாதரின் அடியாருக்குண்டான தண்பம் இன்னும் ஒழியவில்லை; அது முன்னிலும் அதிகக் கடினமாயிருந்தபோன்றி சற்றேனும் குறையவில்லை; இப்படியிருக்கும்போது, கி. பி. 36—ம் ஆண்டில் சபை வளர்ச்சிக்கேதுவாக ஆச்சரியமான ஒரு சம்பவம் நடந்தது. கிறிஸ்துவின் திருத்தொண்டராகத் தன்பப்படுத்தினவர்களில் சவுல் என்பவன் பெயர்பெற்றவனாயிருந்தான்; இவன் சிலிசியாநாட்டிலுள்ள தர்சபட்டணத்தில் பிறந்தவன்; அவ்விடத்திலுள்ள வித்தியாசாலையில் கிரேக்குசாஸ்திரங்களையும் யூதசாஸ்திரியாகிய கமாலியேலிடத்தில் யூதசாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்து கல்வியில் பிரவீணனானான்; இவன் யூதமார்க்கத்தினிமித்தம் வைராக்கியத்திலுலே கிறிஸ்துமித்தைச் சார்ந்தாசஞ்செய்ய மனதில் நிர்ணயஞ்செய்துகொண்டு, ஸ்திரீ புருஷர் யாவரையும் பிடித்து, காவலில் அடைத்து, சபையை மிகவும் நிலைகுலைத்தான்; ஸ்தேவானைக் கொலைசெய்தவர்களில் இவனும் ஒருவன்: இப்படிப்பட்ட பிரபலதுஷ்டனை தேவன் அடக்கவும்,

அவனைத் தமது சத்தியத்துக்குச் சிறந்த சாட்சியாக நியமித்தவும் திருவுளங்கொண்டருளினார்; அவன் தமஸ்கு பட்டணத்திலுள்ள தேவபக்தர்களைத் தண்டிப்படுத்தும்படியாகப் போகுமார்க்கத்தில் இயேசுகர்த்தர் ஜகஜோதிர்மயமாய் அவனுக்குக் காட்சியாகி, அவனுடைய மனதை மாற்றி, அவன் நிர்மூலமாக்கத்தேடின கிறிஸ்துமார்க்கத்தை வெகு பக்தி வைராக்கியத்தோடும் சிரத்தையோடும் பிரசங்கிக்கும்படி நியமனம் பண்ணினார். கிறிஸ்துமார்க்கம் சத்தியம் என்பதற்கு இதையே ஒரு போந்த திருஷ்டாந்தமாகக் சொல்லலாம்; இந்தச் சிறந்த அப்போஸ்தலனுடைய கல்வி, பெருந்தன்மை, பொறுமை, பக்தினவராக்கியம், பரமசிந்தை, பரோபகாரகுணம், அரும்பிரயாசை முதலானவைகளைச் சொல்லப்போனால் விரியும்; அதைச் சொல்லவேண்டிய அவசியமும் இல்லை. ஆதித்திருச்சபையின் சரித்திரத்தை எழுதியிருக்கும் லூக்கா என்பவர் அந்தவிவரமாயும் மிகச் சிறப்பாயும் எடுத்துரைத்திருக்கிறார்.

Saul in Damascus and Arabia.

சவுல் என்பவருக்குப் பிற்காலத்தில் பவுல் என்று பெயர்; அவர் தமக்குள் பரம ஒளியையும் அருளையும் பெற்ற மாத்திரத்தில், அதைச் சமஸ்த ஜனங்களுக்கும் தெரிவிப்பது தமது முக்கிய கடமையென்று மனதில் நிர்ணயஞ்செய்து, தமஸ்குபட்டணத்தில் தானே தன் சொந்த ஜாதியாராகிய யூதர்களுக்குக் கிறிஸ்துமார்க்கத்தைப் பிரசங்கிக்கத் தொடங்கினார்; அவர்கள் அதை நிந்தித்து நிராகரித்ததினாலும், அவரை இம்சைபண்ணத்தலைப்பட்டதினாலும், அவர் அப்பட்டணத்தைவிட்டு அரபிதேசத்துக்குப் போனார்; அங்கேயும் அவர் தாம் அனுசரித்த சத்தியமார்க்கத்தைப் பிரசித்தம் செய்திருப்பாரென்பதற்குச் சந்தேகமில்லை; அதைப்பற்றி நாம் நிச்சயமாய்ச் சொல்ல ஏதுவில்லாவிட்டாலும், கிறிஸ்துமதம் ஆதிகாலத்தில்தானே அரபிதேசத்தில் பிரபலமாயிருந்ததென்பதற்குச் சந்தேகமில்லை; அத்தேசத்தில் (Edessa) எடேசா என்று சொல்லப்பட்ட ஒரு இடத்தில் இராஜாவாயிருந்த (Abgarus) அப்காரு என்பவன் கிறிஸ்தவனுயிருந்தான் என்று தோன்றுகிறது.

Cessation of persecution in the reign of Claudius, A.D. 41.

பவுல் என்பவர் அரபிதேசத்துக்குப் போயிருக்கும்போது, திபேரியு இராயன் இறந்துபோனான்; அவன் பட்டத்துக்கு வந்த (Caius Caligula) காயு கலிகுலா என்பவன் கொடிய துஷ்டனும், தேவனை நிந்திக்கிறவனுமாயிருந்தான்; தன்னையே தேவனைப் பார்த்து, யாவரும் தன்னைப் பூசிக்கவேண்டுமென்று

கற்பித்தான்; இந்த ரோமை இராஜ்யத்தாரெல்லாருக்கும் ஏகக்கழுத்தி
ருக்குமாகில் ஒரே வெட்டில் வெட்டிப்போடவேன் என்று சபதங்
கூறினான்; அவன் 41-ம் வருஷத்தில் மரித்துப்போக, இலவுதியு
என்பவன் அவன் பட்டத்தைப் பெற்றான்; இந்த இராயன்காலத்தில்
சபைக்குத் தன்பமில்லை. "அப்பொழுது யூதேயா கலிலேயா
சமாரியா நாடெனிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று, பக்தி
விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுதே பயத்தோடும், பரிசுத்த
ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின." அப். 9. 31.

Paul's return to Antioch where Disciples named Christians, A.D. 43.

பவுல் மூன்றுவருஷம் அரபிதேசத்திலிருந்த பின்பு, அதைவிட்
டுப் புறப்பட்டு தமஸ்கு பட்டணத்துக்குப் போய், அவ்விடத்திலிருந்து எருசலேம் பட்
டணத்துக்கு வந்து, அங்கே சிலகாலிருந்த பிற்பாடு, சிரியாநாட்டின் இராஜதானியாகிய
அந்தியோகியாவுக்குப் போனார்; அவ்விடத்தில் அவரும் பர்னபா என்பவரும் இரட்சிப்பு
மதத்தை பக்தியுள்ளவர்களாக்கியத்துடன் போதித்துவந்தார்கள்; சபை
வளர்ந்து வந்தது; அங்கேதான் இரட்சகருடைய திருத்தொண்டர்க
ளுக்கு முதல்முதல் கிறிஸ்தவர்கள் என்ற பெயர் உண்டாயிற்று;
இது முதலில் சத்துருக்களால்வந்த நிந்தையான பெயராயிருந்தாலும்,
பிற்காலத்தில் பக்தர்கள் கொண்டாடின மகிமையான பெயராய்
விளங்கிற்று. இது கி. பி. 43-ம் வருஷத்தில் நடந்தது.

Peter called to preach to Cornelius.

இதுவரைக்கும் இரட்சணியமார்க்கம் முக்கியமாய் யூதருக்குள் பிர
சித்தமாகி வந்தது; இப்போது அது புறத்தே
சுத்தாருக்குள்ளும் பிரபலமாகும்படி தொடங்
கிற்று. புறஜாதிகளை யூதஜாதியார் வெகு
அற்பமாய் எண்ணிவந்தார்கள்; இப்படிப்பட்ட எண்ணம் அப்போஸ்
தலருக்குள்ளும் இருந்தது; அவர்களுக்குள்ளிருந்த இந்தத் தகாத
எண்ணம் தெய்வச்செயலால் நீங்கிப்போயிற்று. ஒருவன் பேதுரு
என்பவர் ஒரு மேல்வீட்டிலிருந்து பிரார்த்தனை செய்துகொண்டிருக்
கும்போது, வானம் திறந்திருக்கிறதாகவும், அதிலிருந்து ஓர்விசித்
தமான பூமிக்கு இறக்கிவந்ததாகவும், அதில் சகலவித ஜீவஜந்துக்களும்
இருந்ததாகவும், அதை "அடித்துப் புசி" என்று ஒரு சத்தம் உண்டான
தாகவும், அதற்குப் பேதுரு என்பவர் கூடாதென்று சொல்ல,
"தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணுதே" என்று

அசரீரிவாக்குப் பிறந்ததாகவும் அவர் ஒரு தரிசனம் கண்டார்; அதைக்
குறித்து அப்போஸ்தலன் யோசித்துக்கொண்டிருக்கும்போது, செசரி
யாபட்டணத்தில் நூறு போர்ச்சேவகருக்குத் தலைவனுமிருந்த கொர்
நேலியு என்பவன் அனுப்பின மூன்று மனுஷர்கள் அவனைத் தங்கள்
வசமாக்கு வந்து சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டுமென்று கேட்
டுக்கொண்டார்கள்; அந்தக் கொர்நேலியு என்பவன் ரோமைதேசத்
தானும், யூதமார்க்கத்தை அனுசரித்தவனும், தேவபக்தியுள்ளவனு
மும் இருந்தான். பேதுரு அவன் வீட்டுக்குப் போய், அவனுக்கும்
அவன் பந்துக்கள் யாவருக்கும் இரட்சகருடைய சுவிசேஷத்தைப்பற்றிப் பிரசங்கஞ்
செய்தபோது, அவர்களெல்லாருக்கும் பரிசுத்தஆவியின் அருள் உண
டாயிற்று; அவர்கள் ஞானஸ்நானம்பெற்றுச் சபையைச் சேர்ந்தார்கள்.

Herod Agrippa.

கலிகுலா இராயன்காலத்தில் திருச்சபைக்கு விசேஷித்த தன்ப
மில்லாவிட்டாலும், சில சில இடங்களில்
கொஞ்சம் இருந்ததென்று தோன்றுகிறது.
யூதேயா தேசத்தரசனும் மகா ஏரோதுவுக்குப்
பௌத்திரனுமாயிருந்த ஏரோது அகிரிப்பா என்பவனால் கிறிஸ்தவர்
களுக்குப் பலவகையிலும் சங்கடங்கள் நேரிட்டன; இவன் இரா
ஜபட்டம் பெற்றது ஆச்சரியம். ஒருகால் இவனும் காயு கலி
குலாவும் இரதத்தில் சவாரிபோகும்போது, ஏரோது என்பவன் கலி
குலாவுடனே "திபேரியு இராயன் செத்து, அவன் பட்டத்தைக் கலி
குலா பெறும்படி கடவுள் கடாக்ஷித்தால், எனக்கு மிகப் பிரியமா
யிருக்கும்" என்று சொன்ன பேச்சை சாரதிபாகிய யூதனுக்கு என்ப
வன் கேட்டு, மனதில் அடக்கிவைத்துக்கொண்டு, கேளாதவன்
போல் இருந்து, சில நாளுக்குப்பின் ஏரோது யூதனுக்கு என்ப
வனைக் கள்ளனென்று சுமத்தி சாட்டினநிமித்தம் அவன் கடுங்
கோபக்கொண்டு, முன் கேட்டவைத்திருந்த காரியத்தைத் திபேரியு
இராயனுக்குத் தெரியப்படுத்தினான்; அவன் அதைக்கேட்டு அதிக
விசனமடைந்து, ஏரோதுவை விலங்குபோட்டுக் காவலில் அடைத்
தான். கொஞ்சகாலத்தில் திபேரியு மரித்துப்போக, கலிகுலா என்
பவன் இராஜபட்டம் பெற்று, தன் பழைய சிநேகிதனுமாகிய ஏரோது
வைக் காவலிலிருந்து விடுதலைபண்ணி, தன் அரண்மனைக்கு அழைப்
பித்து, அவனை யூதேயா தேசத்துக்கு இராஜாவாக்கினதுமன்றி, அவ
னுக்குச் சிறைச்சாலையில் போட்டிருந்த இருப்புச் சங்கிலி நிறைக்
குச் சரியாய்ப் பொற்சங்கிலியையும் கொடுத்தான்.

ஏரோது அகிரிப்பா என்பவன் இவ்விதமாய் இராஜபட்டம் பெற்ற பின்பு, கிறிஸ்துரகூகரின் திருத்தொண்டருக்குத் துன்பமுண்டாக்கினான். யூதருடைய இஷ்டத்தைக் கருதி, செபெதேயுவின் குமாரனும், அப்போஸ்தலனுமாயிருந்த யாக்கோபைக் கொலைசெய்தான்; அப்பால் பேதுருவையும் கொலைசெய்ய வேண்டுமென்று நினைத்து, அவனைப் பிடித்து காவலில் அடைத்தான்; தேவன் ஓர் தூதனைக்கொண்டு அவனை அந்த ஆபத்துக்குத் தப்புவித்தார்.

His persecution of the church, and martyrdom of James.

யாக்கோபு அப்போஸ்தலனே இவ்வளவு அநியாயமாய்க் கொலை செய்த இந்தச் சண்டாளன் உலகத்தில் வெகு காலம் வாழ்ந்திருக்கவில்லை. ஒருகால் தீரு சிதோன் பட்டணத்தார் இராஜசேவைக்கு வந்தபோது, அவன் வஸ்திராபரண அலங்கிருதனுய்க் கொலுமண்டபத்தில் வீற்றிருந்து பிரசங்கம் பண்ணினான்; அப்போது அவர்கள் முகஸ்துதியாக: இது மனுஷவாக்கல்ல, தேவனுடைய திருவாக்கு என்று புகழ்ந்து போற்றினார்கள்; அதனால் அவன் கர்வங்கொண்டு தேவமகிமையைத் தனக்குரியதென்ற பாராட்டினதினாலே, தீராத சேப்புண்டாகிப் புழுப் புழுத்துச் செத்தான்.

Herod's fearful end.

கி. பி. 44–ம் வருஷம் யூதேயாதேசத்தில் கடும்பஞ்சம் உண்டாயிருக்கையால், கிறிஸ்தவர்கள் வருத்தப்பட்டார்கள்; அப்போது அந்தியோகியா பட்டணத்துச் சபையார் சில பொருள்களைச் சேகரித்து, பர்னபா, பவுல் என்பவர்கள் வசமாய் எருசலேம் பட்டணத்துச் சபைபாருக்கு அனுப்பினார்கள்; இதனாலே பூர்வ கிறிஸ்தவர்களுக்குள் விளங்கின அன்பும் நேசமும் எத்தன்மையுள்ளனவென்று கிதானித்துணரலாம்.

Famine in Judea, and relief from Antioch, A.D. 44.

பவுலும், பர்னபாவும் மேற்சொன்ன தர்மகாரியத்தை முடித்துக் கொண்டு அந்தியோகியாவுக்குத் திரும்பிப் போனார்கள். கி. பி. 45–ம் வருஷத்தில் சபையார் அவர்களைப் பலதேசங்களுக்குப் போய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி அனுப்பினார்கள்; உடனே அவர்கள் புறப்பட்டு மெதித்தரேனியா கடலிலுள்ள சிப்பருதீவுக்கும், சின்ன ஆசியாவின் தென்பாகத்திலுள்ள

Paul's first Missionary journey, A.D. 45.

பம்பிலியா, பிசிதியா, லிக்கோனியா நாடுகளுக்கும் போய், பாப்பாத்மாக்களுக்குப் பரகதிமார்க்கத்தைத் தெரிவித்து, சபைகளை ஸ்தாபித்து, இரண்டு வருஷத்துக்குப்பின் மறுபடியும் அந்தியோகியா பட்டணம் வந்து, தேவன் புறஜாதியாருக்குள் நடப்பித்த அதிசயமான கிரியைகளை விவரமாய் எடுத்துரைத்தார்கள்.

இப்படிச் சபையின் காரியம் விர்த்தியடைந்துகொண்டு வரும்போது, பிசாசானவன் அதற்கு இடையூறுகளை யுண்டாக்கும்படி வேண்டிய முயற்சிகள் செய்தான். கிறிஸ்துமார்க்கத்தை அனுசரித்த யூதர்களில் சிலர் மானிடர் சுடோறவேண்மோஸில், கிறிஸ்துரகூகரை நம்பி, அவரது சரணமடைவதுமாத்திரம் போதாது, மோசேயின் நியாயப்பிரமாணத்தையும் அனுசரிக்கவேண்டுமென்று போதித்ததினாலே, சபைகளுக்குள் பெரிய கலக்கமும் வாக்குவாதமும் உண்டாயிற்று; அதைத் தீர்க்கும்பொருட்டு அப்போஸ்தலன்மார் 49–ம் வருஷத்தில் எருசலேம்பட்டணத்தில் சங்கங்கூடினார்; இதுதான் முதல் முதல் கூடின சங்கம்; இதற்குப் பவுலும், பர்னபாவும் போயிருந்தார்கள்; அதில் சின்ன யாக்கோபு என்பவர் அத்தியாசனாதிபதியாயிருந்தார். அதில் மானிடர் சுடாறவேறுவது மோசேயின் பிரமாணத்தினாலல்ல, கிறிஸ்துரகூகரைப்பற்றிய பக்தி விசுவாசத்தினாலே தான் ஆகுமென்று தீர்ப்புண்டாயிற்று; இந்தத் தீர்ப்பைப் புறஜாதியாரான கிறிஸ்தவர்கள் கேள்விப்பட்டுச் சந்தோஷமடைந்தார்கள்.

Council at Jerusalem, A.D. 49.

அதற்குப்பின்பு பவுல் அப்போஸ்தலன் அந்தியோகியாவுக்குத் திரும்பிவந்து, 50–ம் வருஷத்தில் தாரதேசங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி இரண்டாந்தரம் பிரயாணப்பட்டதில், மாற்கு என்று பெயருள்ள யோவான் விஷயமாய்ப் பவுலுக்கும் பர்னபாவுக்கும் தர்க்கமுண்டானதால் அவர்கள் பிரிந்து வெவ்வேறு இடங்களுக்குப் போனார்கள். பவுல் சீலாவைத் தெரிந்துகொண்டு, சிரியா, சிலிசியா, லிக்கோனியா, பிரிகியா, கலாத்தியா, மிசியா என்னும் நாடுகளில் கிறிஸ்துமார்க்கத்தை மகா வைராக்கியத்துடன் பிரசங்கித்தார். இதுவரைக்கும் இந்தச் சுத்தியமார்க்கம் காலுன்றினதேசத்திலும், சின்ன ஆசியாவிலும் பிரபலமாகிவந்ததேயன்றி, அதற்குப்பாலுஞ் செல்லவில்லை; இப்போதோ, அது ஐரோப்பா கண்டத்திலும் பரவும்படி தேவன் திருவுளங்கொண்டார். பவுலும், சீலாவும் மிசியா காட்டிலுள்ள துரோவாபட்டணத்தில் இருந்தபோது, அவர்களுக்குத் தேவசரிசனமுண்டாகி, அதில் மக்கெதோனியா மனுஷனொருவன் அவர்

Paul's second journey, A.D. 50.

களுக்குமுன் நின்றதாகவும், "எங்களுக்கு உதவிசெய்ய வேண்டும்" என்று கேட்டுக்கொண்டதாகவும் கண்டார்கள்; அப்போது தீமோத்தேயும், லூக்காவும் ஒருவேளை அவர்களோடேகூட இருந்திருப்பார்கள் என்று தோன்றுகிறது; உடனே அவர்கள் ஏஜியன் கடலைக் கடந்து, ஐரோப்பா கண்டம்போய்ச் சேர்ந்தார்கள்; அதற்கு 400-வருஷங்களுக்குமுன் மகா அலெக்சந்தர் என்னும் சக்கரவர்த்தி மூப்பதினாயிரம் பெருஞ்சேனையுடன் அந்தக் கடலைக் கடந்துவந்து, மகா விஸ்தாரமாயிருந்த பார்ஸ் இராஜ்யத்தைக் கட்டிக்கொண்டான்; இப்போதோ, உலகச்செல்வம் சேர்த்திப்பிரஸ்தாபம் சிறிதேனுமில்லாத நாலு பூதர்கள் யுத்த ஆயுதங்கள் முஸ்திப்புகள் ஒன்றுமில்லாமல் தேவனுடைய வசனமாகிய ஆவியின் கட்கத்தைக் கையில் பிடித்துக்கொண்டு, அக்கடலைக் கடந்து, மகா அலெக்சந்தருடைய தகப்பன் கட்டின பிலிப்பிபட்டணத்தில் முதல்முதல் சிலுவைக்கொடியை நாட்டினார்கள்; நாட்டவே, அப்பட்டணமும் அதுபோல் கல்விப் பொருளுக்கும் செல்வப்பொருளுக்கும் உறைவிடமாயிருந்த அம்பிபோலி, தெசலோனிக்கே, பெரோயா, அத்தேனே, கொரிந்து முதலான சிறந்த பட்டணங்களும் அக்கொடியின்கீழ் அமைந்தன.



மேற்சொன்ன பட்டணங்களிலெல்லாம் அத்தேனே பட்டணம் மிகவும் புகழ்பெற்றது; அங்கே நத்திகஞானிகளும், தர்க்கஞானிகளும், நிற்பஞானிகளும், கதாப்பிரசங்கிகளும், கவிராயர்களும் திரளாயிருந்தனர்; அங்கே கோவில்களும், மீடங்களும், ஓரூபங்களும், ஞாபகஸ்தம்பங்களும் அநேகமாயிருந்

"Paul at Athens, and return to Antioch.

தன; அவர்களுக்குள் இவ்வளவு அலங்காரமும் அரிய விஞ்ஞானமும் இருந்தும், அகிலாண்டகாரணராகிய கடவுளை அறியாமல் மிகவும் கீர்ப்பந்த நிலைமையிலிருந்தார்கள்; இதைப் பவுல் அப்போஸ்தலன் கண்டு, மிகவும் விசனப்பட்டு, அவர்களுக்கு உலகாதிகளைக் குறித்து வெகு சாதுரியமாய்ப் பிரசங்கம்பண்ணினார்; அவர் அஞ்ஞானிகளுக்குப் போனாலும், யூதர்கள் வசிக்கும் ஸ்தலங்களுக்குச் சென்றாலும், இராஜாக்கள் பிரபுக்கள் கல்விமான்களுக்கு முன்பாக நின்றாலும், கடவுளுடைய கைமாறில்லாத கடாக்ஷத்தினாலும், கிறிஸ்துநாதருக்குள்ளான பக்திவிசுவாசத்தினாலுமே மானிடர் கனாயேதவேண்டும் என்று எல்லாருக்கும் கூறிவந்தார். "இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" என்றும், "கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் கஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்" என்றும் சொல்லுகிறார்; அந்த அருள்மூர்த்தியின் உத்தரவாதபுண்ணியமும், ஒப்பில்லாத நீதியுமே பாபாத்மாக்களுக்குத் திக்கும் ஒதுக்கும் என்று சமஸ்த ஜனங்களுக்கும் மகா தைரியமாயும் தீர்க்கமாயும் கூறினார்; அவர் பிரசங்கத்தைக் கேட்ட அநேகர் கிறிஸ்துமார்க்கத்தை அனுசரித்துக்கொண்டார்கள். பிலிப்பி, தெசலோனிக்கே, அத்தேனே, கொரிந்துமுதலான பட்டணங்களில் கல்லசபைகள் உண்டாகி, பிற்காலத்தில் பெயரும் புகழும் பெற்றுவிளங்கின; இப்படிப் பவுல் அப்போஸ்தலன் கிறிஸ்துமார்க்கத்தைப் பிரசங்கித்தபினித்தம் அவருக்கு யூதர்களாலும் ரோமைத் துலுக்கராலும் அநேக உபத்திரவங்கள் வந்தபோதிலும், ஒன்றுக்கும் அஞ்சாமல் "சத்தியமே ஜெயம்" என்று நம்பி, சத்திய உபதேசங்களைக் கூறிவந்தார். ஏறக்குறைய மூன்று வருஷத்துக்குப்பின் அவர் கெங்கிரேயாவில் கப்பலேறி, எபேசுபட்டணத்தில் இறங்கி, இலகான் அங்கிருந்து செசரியாவில் கப்பலேறி, எருசலேமுக்குப் போய், அந்தியோகியா பட்டணம் வந்து சேர்ந்தார்.

His third journey, A.D. 54.

அப்பட்டணத்தில் அவர் கொஞ்சகாலம் சஞ்சரித்து, கி.பி. 54—ல் வருஷத்தில் மூன்றும் பிரயாணஞ்செய்து கலாத்தியா, பிரிகியா நாடுகளின் வழியாய்ச் சென்று, சின்ன ஆசியாவுக்குப் பிரதான நகரமாகிய எபேசுவுக்கு வந்து, அங்கே இரண்டுவருஷம் தங்கிய

ருந்தார்; அதில் (Diana) தியானுள் தேவிக்கு ஒரு பெரிய கோவி லிருந்தது; அது 425 அடி நீளமும், 220 அடி அகலமும், 127 அலங்காரமான தூண்களும் உள்ளது; அது கட்டிமுடிய 220 வருஷம் சென்றது. உலகத்திலுள்ள ஏழு அதிசயங்களில் இந்தக் கோவிலும் ஒன்று; இது நோக்கிரேத்து என்பவர் கஞ்சதின்று இறந்தநாளில் ஒருவிசையும், மகா அலெக்சந்தர் பிறந்தநாளில் ஒருவிசையும் அக்கினியினுல் அழிந்துபோயிற்று; அக்காலத்தில் எபேசுபட்டணம் விக்கிரகாராதனைக்கும், மந்திரியத்துக்கும், அவபக்திக்கும், உறை விடமாயிருந்தது; அவ்விடத்தில் பவுல் அப்போஸ்தலன் இறிஸ்து மார்க்கத்தை வெகு முயற்சியோடும் கண்ணீரோடும் பிரசங்கித்ததில் நல்ல சபையுண்டாயிற்று. தெமேத்திரியு என்பவன் பெரிய கலகத் தை மூட்டினதினுலே பவுல் அப்போஸ்தலன் அவ்விடத்தைவிட்டுத் துரோவரபட்டணத்துக்கும், அதிலிருந்து மக்கெதோனியாவுக்கும், கொரிந்துபட்டணத்துக்கும் போய், சபைகளே ஸ்திரப்படுத்தி, அப்பால் பிலிப்பி, துரோவா, ஆசோபட்டணங்களுக்கு வந்து கப்ப லேறி, மித்திலேனே, கியு, சாமுதீவுகளைக் கடந்து, துரோகில்லி யோன், மிலேத்து, கோஸ், ரோது, பத்தாரா, தீரு, பித்தொலோமாய் பட்டணங்கள் வழியாய் செசரியாவிலிறங்கி, கி. பி. 58-ம் வருஷத் தில் எருசலேம்பட்டணம் போய்ச் சேர்ந்தார்.

அவ்விடம் போனபின்பு அவருக்கு ஆசியாவிலுள்ள சில யூத ராலே துன்பம் நேரிட்டது; அவர்களுக்கு மோசேயின் நியாயப்பிரமாணத்தின்பேரில் அதிக வைராக்கியமிருந்ததினுலும், அப்போ ஸ்தலன் அந்தப்பற்றிப் பழுது கூறினதாக எண்ணினபடியினுலும், தேவாலயத்திலிருந்த அவரை அவர்கள் பிடித்துக் கொலைசெய்யும்படி பிரயத்தனஞ் செய் தார்கள்; ஆயினும் தெய்வசங்கற்பத்தினுலே அவர்கள் எண்ணின எண் ணம் சடேறமுமற்போயிற்று; அவர்கள் அவரைக் கொல்லவேண்டு மென்று தமனிசெய்துகொண்டிருக்கும்போது, ரோமைச் சேனுபதி யாகிய லீசியா என்பவன் வழிகட்டி மறித்து, அவரைப் பிடித் துக் காவலில் வைத்திருந்து, பின்பு செசரியாபட்டணத்திலிருந்த பிரதான அதிகாரியாகிய பேலிக்ஸ் என்பவனிடத்தில் அனுப்பினான். அவன் அவரை விசாரணைசெய்ததில் யாதொரு குற்றமும் துலங்

Jews seek to kill Paul. He is rescued and sent to Cæsarea, A.D. 58.

காதிருந்தும், பரிதானத்துக்கு ஆசைப்பட்டு அவரைக் காவலில்தானே வைத்துவைத்தான். கொஞ்சகாலத்துக்குப் பின் அவன் உத்தியோகத்தை பெஸ்து என்ப வன் பெற்றான்; அவனுடையவிசாரணையிலும் அப்போஸ்தலன்பேரில் குற்றம் ஒன்றும் நிகவாகவில்லை. ஆயினும் யூதரைப் பிரியப்படுத்தும்படி அவரை எருசலேமுக்கு அனுப்ப யோசித்தால் அவர் ரோமை இராயனுக்கு அபயமிட்டார். பின்பு அவரை கியாயம் விசாரித்த அகிரிப்பா இராஜாவும் அவர் குற்றமில்லாதவரென் றே கூறினான்; என்றாலும் பெஸ்து என்பவன் அப்போஸ்தலன் கோரிக்கையின்படி அவரை ரோமை இராயனிடம் அனுப்பினான்.

Paul tried before Felix and Festus.

அவன் அவரைப் பிடித்து, யூலியு என்ற சேனைத்தலைவன் வசம் ஒப்புவித்து, ரோமாபுரிக்குக் கொண்டுபோய் விடும்படி சொன்னான்; அப்படியே அவர் கள் கி. பி. 60-ம் வருஷத்தில் செசரியாவை விட்டுப் புறப்பட்டு, சீதோன் துறையைச் சேர்ந்து, சீப்புருவுக்கு வடக்குமுகமாய்ப் போய், மீறுபட்டணம் சேர்ந்து, அதிலிருந்து இனீதபட்டணத்துக்கும்சல்மோனே ஊருக்கும் கோரம்பம், கிரே த்தாவிற் சேர்ந்தார்கள்; அப்பால் காற்று மும்முரமாயிருந்ததால் இலவ தா என்னும் ஒரு சிறு தீவைக் கடந்து, இப்போது மால்ட்டா என்று சொல்லப்படுகிற மெலித்தாதீவுக்குச் சமீபத்தில் கப்பல் சேதப்பட்டும், தெய்வசெயலால் அந்த ஆபத்துக்குத் தப்பி, அத்தீவில் சேர்ந்து, மழை காலம் அவ்விடம் இருந்து, பின்பு புறப்பட்டு சேகுசாபட்டணம் சேர்ந்து, அதிலிருந்து சேரியு, புத்தேயோலி, அப்பியுபுரம், மூன் றுசத்திரம் என்னும் இடங்களுக்கு வந்து, பின்பு சேரோ இராயன் அரசாண்ட ஏழாம்வருஷம் ரோமாபுரிபோய்ச் சேர்ந்தார்கள்.

His voyage to Rome, A.D. 60.

அங்கே பவுல் அப்போஸ்தலன் இரண்டுவருஷம் காவலிலிருந்தார்; அப்படிக் கஷ்டத்திலிருந்தும் அவர் சுவிசே ஷத்தைப் பிரசங்கியாமலிருக்கவில்லை. இறி ஸ்துராஜருக்காக என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன் என்று அவர் சொன்னபடி, தம்முடைய ஜீவனே வெறுத்துக் இறிஸ்துமார்க்கத்தைக் கூறினதினுலே, இராஜ குடும்பத்தைச்சார்ந்த சில பிரபுக்களும் இறிஸ்துவின் அடியார்க ளானார்கள்; பிலி. 4. 22. இப்படி அவர் தூரதேசத்தில் கைகால் கட்டுண்டு காவற்கூடத்திலிருந்தபோதிலும், தாம் காட்டின சபை

His residence at Rome.

களைக் குறித்து நிச்சிந்தையாயிருக்கவில்லை; அவர் அங்கிருந்து எபேசியருக்கும், கொலோசெயருக்கும், பிலிப்பியருக்கும், பிலேமோனுக்கும் நிருபங்கள் எழுதி அனுப்பினார்; சபையாரும் அவரிடத்தில் வெகு பிரியமாயிருந்தார்கள். தீமொத்தேயு, தீத்து, மாற்கு, தேமா, அரிஸ்தார்க்கு, லூக்காமுதலான அநேக சீஷர்களும் அவரைப் பார்க்கப் போனார்கள்.

His martyrdom, A.D. 65.

அப்போஸ்தலனுடைய அந்திமகாலச் சரித்திரம் விவரமாய்ச் சொல்லப்படவில்லை. கி. பி. 63—ம் வருஷத்தில் அவர் விடுதலையாகி, ஸ்பெயினுக்குச் சென்று 65—ம் வருஷத்தில் ரோமாபுரிக்குப் போய், நேரோ ராயன் கட்டளையினால் சிரச்சேதம் அடைந்து இரத்தசாட்சியாக மரித்தார் என்று தோன்றுகிறது.

Reflections on Paul's Life.

கிறிஸ்தவர்களுக்கும், கிறிஸ்துமார்க்கக் குருமாருக்கும் சிறந்த மாதிரியாயிருக்கிற இந்த அப்போஸ்தலனுடைய ஜீவியவிருத்தாந்தம் இவ்விதமாய் முடிந்தது. கிறிஸ்துவின் அன்பைத் தக்கபடி உணர்ந்த மனுஷன் தேவனுடைய மகிமை விளங்கும்பொருட்டு, உலகத்தில் எவ்வளவு அரிய காரியங்களைச் செய்யக்கூடியது என்பதை இவருடைய சரித்திரத்திலுலே அறியலாம். மூப்பது வருஷகாலமாய் அவர் தமது பரமகாயகருடைய ஊழியத்தில் ஓயாமல் முயற்சித்து வந்தார். எருசலேம்துவக்கிச் சுற்றிலும் இல்லிரிக்கமட்டுமுள்ள தேசங்களிலும், பரம்பரையின்படி ஸ்பானியா, காலியா, பிரித்தானியா முதலான தேசங்களிலும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்தார்; அதனாலே அவருக்கு வந்த துன்பங்களும் பாடுகளும் கொஞ்சஞ்சமல்ல. யூதர்களால் ஒன்றுகுறையநாற்பதடியாகஐந்துதரம் அடிபட்டார்; மூன்றுதரம் பிரம்புகளால் அடிபட்டார்; ஒருதரம் கல்லெறியுண்டார்; மூன்றுதரம் கப்பல் சேதத்திலிருந்தார்; கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினார்; அநேகதரம் பிரயாணம் பண்ணினார். ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், தமது சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும், பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேக

முறை கண்விழிப்புகளிலும், பசியிலும், தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், திருவாணத்திலுமிருந்தார்; 2 கொரி. 11. 24—27. அவர் பதின்மூன்று அல்லது பதினாலு நிருபங்களை எழுதியிருக்கிறார்; அவைகள் கிறிஸ்துமார்க்க உபதேசத்திரட்டாயிருப்பதுமன்றி, எக்காலத்திலுமுள்ள தேவபக்தர்களுடைய ஆத்துமங்களுக்கு ஞானுமிர்தமாயும் இருக்கின்றன.

Clement's testimony regarding him.

ரோமாபுரிக்குக் கண்காணியாயிருந்த கிலேமெந்து என்பவர் இந்த அப்போஸ்தலனைக்குறித்து வெகுவாய்ப் புகழ்ந்து பேசுகிறார். "இம்மாயப்பிரபஞ்சத்தின் கொடுமையினால் பவுல் அப்போஸ்தலன் அநேகம் துன்பங்களையும் கஷ்டங்களையும் பட்டனுபவித்து, கடைசியில் கல்ல பதவி அடைந்தார்; இழுக்கிலும் மேற்கிலும் கிறிஸ்துமார்க்கத்தை எங்கும் பிரசித்தஞ்செய்து, நீர்த்திப் பிரஸ்தாபம் பெற்றார்; பூலோகத்தின் கடைசிபரியந்தம் தேவமகத்துவங்களைக் கூறி, உலக அரசர்களால் வேதனையடைந்து, சத்திய சாட்சியாக மரித்து, நித்திய பேரின்பலோகம் சேர்ந்தார்; சத்தியத்தினிமித்தம் துன்பப்படுகிறவர்களுக்கு அவர் சிறந்த மாதிரியாயிருந்தார்" என்று எழுதியிருக்கிறார்.

Some account of other Apostles.

இந்த ஒரு அப்போஸ்தலனுடைய ஜீவிய விருத்தாந்தத்தை மட்டும் இப்படி விரித்துப் பேசவேண்டுமென்றால், அதனால் மனதுக்கு இன்பமும் ஞானமும் உண்டாகத்தக்கதாயிருப்பதுமன்றி, இந்த நூற்றாண்டில் கிறிஸ்துமார்க்கம் பிரபலமானதற்கு அது ஒரு விசேஷித்த திருஷ்டாந்தமாயும் இருக்கிறது என்பதினாலேதான். இப்போழுது மற்ற அப்போஸ்தலன்மாருடைய சரித்திர வர்த்தமானங்களைத் தெரித்தமட்டும் சுருக்கிச் சொல்லுவோம். கிறிஸ்து இயேசுவுக்காக இரத்தசாட்சிகளாய் மரித்தவர்களில் பெலத்தேயுவின் குமாரனும், யோவானின் சகோதரனுமாயிருந்த பெரிய யாக்கோபு முந்தினவர்; சின்ன யாக்கோபு கிறிஸ்துநாதருக்கு இனமாயும், எருசலேம் சபைக்கு முதல் கண்காணியாயும், யாக்கோபின் நிருபத்தை எழுதினவராயும் இருந்தார்; இவர் தேவபக்தியிலும் உத்தம நடக்கையிலும் நெறுக்கமாயிருந்ததால், "நீதிமான்" என்ற அடைமொழி பட்டப் பெயருண்டாயிற்று. கி. பி. 62—ம் வருஷத்தில் அனனியா என்பவன் பிரதான ஆசாரியனாயிருந்தபோது, கள்ளரைடைய தண்டித்தி

னல் அடிபட்டு மரித்தார். பவுல் புறத்தேசத்தாருக்கு அப்போஸ்தலனுயிருந்ததுபோல், பேதுரு யூதர்களுக்கு அப்போஸ்தலனுயிருந்தார். "பரலோக இராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்" என்றும், "மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்றும் இயேசுநாதர் அளித்த வாப்பிரசாதத்தின்படி இவர் அவரது சத்திய மார்க்கத்தை யூதர்களுக்கும் புறத்தேசத்தாருக்கும் பிரசங்கித்து, அவர்களில் அநேகர் திருச்சபையிற் சேருவதற்கு எதுவாயிருந்தார். இவர் எரோது அகிரிப்பா இராஜாவினுடைய கைக்குத் தப்பி, பற் பல தேசங்களுக்குப் போய், விசேஷமாய் யூதர்களுக்குச் சுவிசே ஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டுவந்தார். பின்ன ஆசியாவிலுள்ள பொந்து, கலாத்தியா, கப்பதோக்கியா, ஆசியா, பித்தினியா என் னும் நாடுகளில் வசித்த அந்தியர்களுக்கு இரண்டு நிருபங்கள் எழுதினார். அவர் ரோமாபுரிக்குப் போனதாகவும், அங்கே திருச் சபையை நாட்டினதாகவும் பாப்புமார்க்கத்தார் சொல்லுகிறார்கள்; ஆயினும் இதற்குப்போந்த அத்தாட்சியில்லை. கி. பி. 63-ம் வரு ஷத்தில் நேரோ ராயன் காலத்தில் அவர் தலைகீழாய்ச் சிலுவை யில் அறையப்பட்டு பொன்னகர் வாசியானார். யோவான் அப் போஸ்தலன் ஒருவரைத்தவிர, மற்றவர்களெல்லாரும் இப்படி இரத் தசாட்சிகளாய் மரித்தார்கள். அவர்கள் உலகத்தின் காலாதிசை களுக்கும் போய், கிறிஸ்துமார்க்கத்தைப் பிரசித்தஞ்செய்தார்கள்: அந்திரேயா என்பவர் சித்தியாவுக்கும், பிலிப்பு என்பவர் பிரிகியா வுக்கும், மத்தேயு என்பவர் பெர்சியாவுக்கும், பத்திரியாவுக்கும், சீமோன் என்பவர் எகிப்து, லீபியா, மாரிற்ருனியா என்னும் தேசங் களுக்கும், யூதா என்பவர் மெசொப்பொத்தாமியா, சிரியா, இதுமேயா, அரபியா தேசங்களுக்கும், மத்தியா என்பவர் எத்தியோப்பியாவுக்கும் போனார்கள். பற்தொலொமேயு, தோமா என்னும் இரண்டு அப்போஸ் தலர்களும் இந்துதேசத்துக்கு வந்ததாகவும், சென்னபட்டணத்திலும் மலையாளத்திலும் கிறிஸ்துமார்க்கத்தைப் பிரசங்கித்ததாகவும், மலையா ளத்தில் இப்பொழுதிருக்கிற சூரியசபையை அப்போது நாட்டினதாக வும், தோமா என்பவர் சென்னபட்டணத்துக்கடுத்த மயிலாப்பூரில் இரு ண்டு பிராமணர்களால் கொலைசெய்யப்பட்டதாகவும் பாரம்பரையாய்ச் சொல்லுகிறார்கள்; ஆயினும் இதைப்பற்றி நிச்சயம் சொல்லக்கூடாது; இது விசேஷங்களையெல்லாம் கவனிக்கும்போது ஆதியில் கிறிஸ்து மார்க்கத்தைப் போதித்தவர்களுக்கு அநேகம் வருத்தங்களும் பாடுக

ளும் அபாயங்களும் நேரிட்டதென்றும், அவைகளையெல்லாம் அவர் கள் அம்மார்க்கத்தின்பேரிலுள்ள அபிமானத்தினாலே மன உற்சாக மாய்ச் சகித்துக்கொண்டார்களென்றும் சொல்வது தர்மமே. தேவனே இல்லையென்று சாதிக்கிற நாஸ்திகர் மூலமானவர்கள் இந்த ஆச்சரிய சம்பவங்களையெல்லாம் பார்த்து, எல்லாருக்கும் மேலான ஆதிகார ணக்கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும், அவர் அருளினமார்க்கம் சத்தியம் என்றும், அதை உண்மையாய்ப் பற்றினவர்களுக்கு இகபர நன்மைகள் கிடைக்கும் என்றும், மகா பக்திவினயத்துடன் சொல்லு வார்கள் என்று நம்புகிறேம்.

இதுவரைக்கும் சபைக்கு நேரிட்ட துன்பம் யூதர்களாலே கடக் கது; இப்போது ரோமைத்தராதத்தனத்தா ரால் அதற்குத் துன்பம் வந்தது. கிறிஸ்தவர் கள் தங்களுக்கு ஒரு பரம இராஜா இருக்கி றார் என்றும், அவரது இராஜ்யம் பூலோக மெங்கும் பரம்பி, அவரது செங்கோல் என்றும் செல்லுமென்றும் சொன்னபடியால், ரோமர் தங்கள் இராஜ்யத்துக்கு எங்கே மோசம் வரப்போகிறதோ என்று பயந்து கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தி னார்கள்; இப்படி அவர்களாலே சபைக்கு நேரிட்ட துன்பங்கள் சிலர் பத்து என்றும், சிலர் அதிலும் அதிகம் என்றும் சொல்லு கிறார்கள்.

Persecution of the Church by the Romans.

இதில் இந்த நூற்றாண்டில் இரண்டு துன்பங்கள் உண்டாயின. கிலவதியு இராயனுக்குப் பின்பு அரசாட்சி செய்த நேரோ என்னும் பஞ்சமாபாதகனால் முதலாம் துன்பம் நேரிட்டது; அவன் ரோமா புரியை ஒரு கண்காட்சிக்காகத் தீக்கொளுத்தி விட்டு, அதைக் கிறிஸ்தவர்கள் செய்தார்கள் என்று அபாண்டமாய் அவர்கள்மேல் குற்றஞ்சுமத்தி, அவர்களுக்குத் துன்பத்தை யுண்டு பண்ணினான். பெற்ற தாயையும், சொந்தப் பெண்சாதியையும், கற் பித்த குருவையும் கொன்ற பரமசண்டாளன் என்ன பாதகத்தைத் தான் செய்யமாட்டான்; மானிட ஜாதியை வாதிக்கிறதும் வதைக்கி றதுமே அவனுக்கு அதிகப் பிரியம். ரோமாபுரி தீப்பற்றி எரிந்த ஒன் பது நாளும் அவன் கிறிஸ்தவர்களுக்குச் செய்த கொடுமைகள் கொஞ்சமல்ல; சிலரை மிருகங்களின் தோலினால் மூடி நாய்களே விட்டுக் கடிக்கவிட்டான்; சிலரைக் கழுமரத்தில் ஏற்றிக் கொன்

First general Persecution by Nero, A.D. 64.

ரூன்; கிணாப் பிடித்துத் தெருக்களில் ஸ்தம்பங்கள்போல் நிறுத்தி, அவர்கள்மேல் மெழுகுதுணியைச் சுற்றி, தெருப்புவைத்துப் பர்தம் போல் எரித்து, இப்படிச் சித்திரவதை செய்யும்படி உத்தரவுகொ டுத்துவிட்டு; இந்தப் பாதகன் மேடைமேலிருந்து வேடிக்கை பார்க்கி றதும், சாரதிவேஷம் போட்டுக்கொண்டு ரதத்தைச் செலுத்துகிறது மாயிருந்தான்; இந்தத் தண்டனையில் அநேகர் இறந்துபோனார்கள். பேதுரு அப்போஸ்தலனும், பவுல் அப்போஸ்தலனும் இக்காலத் திலேயே இரத்தசாட்சிகளாய் மரித்தார்கள்; இந்தவன்பம் கி. பி. 64–ம் வருஷமுதல், 68–ம் வருஷமட்டும் நடந்துவந்தது.

Nero's successors.

அவ்வருஷத்தில் நேரோ ராயன் தற்கொலை செய்துகொண் டான்; அவன் மண்டையோடே சபைக்கி ருந்த தன்பமும் ஒழிந்தது; அவனுக்குப்பின் (Galba) கல்பா என்பவன் ராஜபட்டம் பெற்று ஏழுமாதம் அர சாண்டான்; அவன் இறந்த பிற்பாடு (Otho) ஓதோ என்பவன் ரா ஜாவாகி மூன்றுமாதம் ஆளுகைசெய்தான்; அப்பால் அவனைக் கொன்ற (Vitellius) வைற்றெல்லியு என்பவன் ராஜபட்டம் பெற்றான்; அவனும் ஒருவருஷத்திற்குள் கொலைசெய்யப்பட்டான்; அதன்பின் (Vespasian) வெஸ்பாஷன் என்பவன் அவன் பட்டத் திற்கு வந்தான்; இவன் புகழ்பெற்ற சனகர்த்தனுயிருந்ததினுலே, மந்திராலோசனைச் சங்கத்தாரும் சேனைகளும் ஏகமனமாய் 69–ம் வருஷத்தில் அவனே ராஜாவாக ஏற்படுத்தினர்கள்; அவன்காலத் திலேதான் எருசலேம்பட்டணத்திற்கு அழிவு சேரிட்டது.

Description of Jerusalem and Temple.

இப்பட்டணம் உலகத்திலுள்ள மற்றெல்லாப் பட்டணங்களிலும் அதிகச் சிரேஷ்டமானது. ஆபிரகாம் தன் குமாரனுகிய ஈசாக்கை மோரியாமலையில் கடவுளுடைய கற்பனைப்பிரகாரம் பலியிடும் படி போனபோது, அது மிக குடி ஒன்று மில்லாமல் காடாயிருந்தது. அதை வருஷங்களுக்குப்பின் இஸ் ரவேல் ஜனங்கள் எகிப்தை விட்டு, கானுன்தேசத்துக்குப் போனகா லத்தில் அது ஒரு சிறு ஊராயிருந்தது; பிற்பாடு எபூசியர் அதை வெகு ஸ்திரமாய்க் கட்டி, அரணுன பட்டணமாக்கினர்கள்; அதைத் தாவீது ராஜா அவர்களிடத்திலிருந்து பிடித்து வெகுமாய்ச் சிறப் பித்தார்; சாலொமோன் ராஜாகாலத்தில் அப்பட்டணம் செல்வம் பொழியும் சிங்கார மணிமாலிருந்தது; வெள்ளியும் பொன்னும்

கல்லுக்குச் சமானமாம்; ராஜாதிராமணியாயிருந்த அதிகாரன் அப்பட்டணத்தில் தேவாலயத்தைக் கட்டினதினுலே, அது மிகவும் சிறந்து விளங்கிற்று; இந்த ஆலயத்தைப் பாபிலோன் தேசத்துச் சக் கரவர்த்தியாயிய நேபுகாத்நேச்சார் என்பவன் அழித்துப்போட்டான்; பிற்பாடு பாபிலோனிலிருந்து திரும்பிவந்தவர்கள் மறுபடியும் அதைக் கட்டினர்கள்; மக்கபேயர் காலத்தில் அதற்கு இன்னுரு ஆபத்து வந்தது; சேனுக்கிரகத்தால் அது அந்த விபத்துக்குத் தப் பிற்று; பிற்பாடு மகா ஏரோது என்பவன் அநேகம் திரவியஞ் சிலவுசெய்து, நாற்பத்தாறுவருஷமாக அதைப் புறுப்பித்துச் சிறப் பித்தான்; அதனுலே "இந்தக் கல்லுகள் எப்படிப்பட்டன? இந்தக் கட்டடங்கள் எப்படிப்பட்டன?" மாற். 13. 1. என்று எல்லாரும் வியந்து பேசத்தக்கதாக அது வெகு அலங்காரம் பொருந்தினதா யிருந்தது.

இவ்வளவு சிறப்புள்ள ஆலயத்திற்கும் பட்டணத்திற்கும் நாசம் நேரிட்டது; "ஒரு கல்லின்மேல் ஒரு கல்லி ராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போ கும்" என்று இயேசுகிறிஸ்தர் தீர்க்கதரிசனம் உரைத்திருந்தார்; மத். 24. 2. யூதர்கள் அந்த அருள்மூர்த்தியின் கிரு பையை உணராமல் அவரை வன்கொலைக்கு ஒப்புக்கொடுத்தினு லும், "இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளை கள்மேலும் இருப்பதாக" என்று சொன்னபடியினுலும், அவருடைய இரத்தப்பழி அவர்கள்பேல் வந்து சாடிற்று: "அரசன் அன்று கேட் பான், தெய்வம் நின்று கேட்கும்" என்று உலகத்தார் வழக்கமாய்ச் சொல்வது யதார்த்தமே.

Christ's prophecy against the Temple.

யூதரும் சிரியரும் செசரியாபட்டணத்தைக் குறித்து வழக்காடி னதே எருசலேம்பட்டணத்தின் அழிவுக்குக் காரணமாம்; அவ்விருபட்சத்தாரும் அதைப் பற்றி நேரோ ராயனிடத்தில் பிரியாது செய்தபோது, அவன் சிரியர் பட்சமாய்த் தீர்ப் புச்செய்தபினுலே யூதர்கள் கலகத்துக்கு எற்பட்டார்கள்; அங்கு கத்தை அடக்கும்படி பலத்த ராணுவத்துடன் போகவேண்டு மென்று ராயன் சனகர்த்தனுகிய வெஸ்பாஷனுக்குக் கட்டளையிட் டான்; அப்படியே அவன் தன் குமாரனுகிய* தீத்துவைக் கூட்டிக் கொண்டு, 60,000 பெருஞ்சேனையுடன் புறப்பட்டு யூதரோடு

Destruction of Jerusalem by Titus, A.D. 70.

யுத்தஞ்செய்யப் போகுந்தருணத்தில், தான் இராஜாவாக நியமிக்கப் பட்ட சந்தோஷகரமான சமாசாரத்தைக் கேட்டு, உடனே ரோமா புரிக்குப் புறப்பட்டான்; அவன் குமாரனுகிய (Titus) தீத்து என் பவன் எருசலேம்பட்டணத்தை முற்றிக்கைபோட்டுப் பிடிக்கும்படி ஆரம்பித்தான்; அதில் கோட்டை கொத்தளங்களும் அலங்கங்களும் அரண்களும் மிகுதியாயிருந்தமையால், அதைப் பிடிக்கிறதற்கு ஆறுமாதஞ்சென்றது; அப்போது பஞ்சமும் கொள்ளைநோயும் உண் டாக, பட்டணத்தாரில் அநேகமாயிரம்பேர் இறந்துபோனார்கள்; யூதசரித்திரக்காரனுகிய (Josephus) ஜொஸெப் என்பவன் இந்த யுத்தத்தில் நடந்த கொடுமைகளைப்பற்றி சவிஸ்தாரமாய் எழுதியிருக் கிறான். அநேக ஜனங்கள் அன்ன ஆகாரமில்லாமல் எலிகளையும், பூனைகளையும், தோல்களையும், வைக்கு வந்து எட்டின எல்லாவற்றை யும் சுடுகாட்டெரி பிணத்தைப் பிடுங்கித் தின்பதுபோலப் பிடுங்கித் தின்றார்கள்; தாய்மார் தங்கள் பிள்ளைகளைக் கொன்று தின்றார்கள்; அப்போது இருந்த உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் ஒருவரை யொருவர் அடித்துக் கொலைசெய்துகொண்டார்கள்; தெருக்களெல் லாம் இரத்தப்பிரளயமாயிருந்தது; பதினேழுலட்சம் ஜனம் மாண்டி போனதாகவும், லட்சம் ஜனம் பிறைகளாகக் கொண்டுபோகப்பட்ட தாகவும் கணக்கிட்டிருக்கிறார்கள். தீத்து என்பவன் எருசலேம் பட்டணத்தையும் தேவாலயத்தையும் தரையோடுதரையாய் இடித்துப் போட்டான்; இது கி. பி. 70-ம் வருஷம் நடந்தது; இந்த அழிவுக் குத் தப்பின யூதர்கள் உலகத்தின் நாலாதிக்கிலும் சிதறி, வீடுவாசல் காடுகரம் ஒன்றுமில்லாமல் இக்காள்பரியந்தம் சர்வ ஜனங்களா லும் சங்கடத்தையும் உபத்திரவத்தையும் அடைந்துவருகிறதுமன்றி, தேவன் நீதியுள்ளவர் என்பதற்கும், அவரது வேதம் சத்தியம் என் பதற்கும் திருஷ்டாந்தங்களாயும் இருக்கிறார்கள்.

இப்படி ரோமரால் யூதருக்கு அழிவு நேரிட்டபோது, கிறிஸ்த பக்தர்கள் ஒரு விக்கினமுமின்றி க்ஷேமமாயி ருந்தனர்; பாழாக்குகிற அருவருப்பை பரி சுத்தஸ்தலத்தில் நிற்கக்காணும்போது, யூதே யாவிலிருக்கிறவர் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள் என்று தங்கள் பரமநாயகர் திருவாய்மலர்ந்திருந்தபடி, ரோமருடைய கழு குக்கொடியைக் கண்டமாத்திரத்தில் தேசத்திற்கு நாசகாலம் வந்தது என்று நிச்சயித்து, யோர்தான் நதிக்குக் கிழக்கேயிருந்த பெல்லா

Safety of the Church.

என்னும் ஒரு சிற்றூருக்கு ஓடி, அந்தப் பெரிய ஆபத்துக்குத் தப் பிக்கொண்டார்கள். சோதோம்பட்டணம் அக்கினிக்கெந்தகத்தி னால் அழிந்தபோது, தேவபக்தனுயிருந்த லோத் என்பவன் சோவார் என்னும் ஊருக்கு ஓடித் தப்பிக்கொண்டதுபோல, இறிஸ்துசபை களின் அடியார் பெல்லா ஊருக்குப் போய்ச் சகமாயிருந்தனர்; தேவஸ்ரீ தமது அடியாரை இவ்விதமாகவே சகல ஆபத்துக்கும் வில க்கி இரட்சித்தருளுகின்றார்.

இப்படி வெஸ்பாஷன் இராயன் காலத்தில் எருசலேம்பட்ட ணம் அழிந்தது; அவன் இறந்துபோனபின், அவன் குமாரனுகிய தீத்து என்பவன் இரா ஜாவாகி மூன்றுவருஷம் அரசாண்டான்; இவன் கற்புணர்சாலியாயும், தன் குடிகளுடைய க்ஷேமத்தைக் கருதி கடந்தவரையும் இருந்தான்; இவனுடைய காலத்தில் சபைக் குச் சமாதானமுண்டாயிருந்ததுமன்றி, கிறிஸ்துமார்க்கம் எங்கும் அனுகூலப்பட்டும் வந்தது; இவன் பிரதிஜனம் செய்யும் கர்மங்களை யோசித்துப்பார்த்து, அதில் தர்மஞ்செய்யாத ஒரு நாளிருந்தால், அதைப்பற்றிப் பிரலாபித்து: "ஐயோ! நான் இந்த நாளை வீணுய்க் கழித்துவிட்டேன்" என்று சொல்லுவான்; இப்படிப்பட்ட தர்ம புருஷனுயிருந்தபடியினுலே 81-ம் வருஷத்தில் இவன் இறந்தபோது இவன் பிரஜைகளில் கிறிஸ்தவர்கள் அத்தனைபேரும் பெரும் துயரமடைந்தார்கள்.

Reign of Titus, A.D. 79-81.

அவனுக்குப்பின் அவன் சகோதரனுகிய தோமிதியன் என்பவன் 81-ம் ஆண்டு சக்கரவர்த்தியானுன்; இவன் தீத்து வைக் காட்டிலும் கொன்றுபோட்டானென்று ஜனங்களுக்குள் பேசிருந்தது; இவன் சே ரோ இராயனைப்போல ஒரு துஷ்டன்; இவன்காலத்தில் சபைக்கு 95-ம் வருஷத்தில் இரண்டாம் தும்பம் கேரிட்டது; அப்போது அநேக பக்திமான்கள் தங்கள் மார்க்கத்தினிமித்தம் பிராணனை விட வேண்டியிருந்தது. அவர்களில் வின்திராஸ்மானும் பேதுருபட்டணத்து முதல் கண்காணியுமாகிய தீமோத்தேயும், ரோமாபுரிக் கண் காணியாகிய கிலேமெந்தும், தோமிதியன் இராயனுக்கு பந்துக்களா யிருந்த பேபியு கிலேமெந்தும், அவன் மனைவி தோமித்தில்லாளும் சிரேஷ்டமானவர்கள்.

Second Persecution by Domitian, A.D. 95.

இப்படித் துன்பம் அதோரமாய் கடந்துவரும்போது, தோமிஷன் இராயன் தாவீதரசன் குலத்தில் யாராவது இருக்கிறார்களோ என்று விசாரித்தான்; அந்த இராஜவம்சத்தில் பிறக்கும் ஒரு பரமபுருஷன் உலகத்துக்கெல்லாம் ஏகசக்ராதிபத்தியமாயிருப்பார் என்று அவன் சென்விப்பட்டிருந்ததினாலே பயந்துபோய் அப்படிக் கேட்டான்; அப்போது கிறிஸ்துநாதரின் சதோதரனுடைய யூதாவின் பௌத்திராயிருந்த இரண்டுபேரை இராஜசமுகத்தில் கொண்டுபோய்விட்டார்கள்; அவர்களுடைய கை அதிக வேலையினாலும் அரும்பாடுகளினாலும் மரத்துப்போயிருந்ததை அவன் பார்த்து, அவர்கள் ஏழைகள் என்றும், அவர்களால் தன் அதிகாரத்துக்கு ஒரு விக்கினமும் வராதென்றும் சொல்லி, நாயைத் துரத்துகிறதுபோல் அவர்களை இராஜசபையை விட்டுத் துரத்திவிட்டான்.

Nerva succeeds him A.D. 96. Persecution ceases.

கி. பி. 96–ம் வருஷத்தில் தோமிஷன் இரண்பன் இறந்துபோனான்; அவன் தன் இராஜபத்தினிபைக் கொல்லும்படி யோசனையாயிருந்ததை அவள் அறிந்து, அவனைக் கொன்றுபோட்டாள்; அவன் பட்டத்துக்கு நேர்வா என்னும் ஒரு கிழவனை நியமித்தார்கள்; இவன் தயைதாட்சண்யமுள்ளவனாயிருந்தான், சபை சமாதானம் பெற்றிருந்தது; புறதேசத்துக்கு அகற்றப்பட்டிருந்த கிறிஸ்தவர்களை வருத்தி, அவர்களுக்கு மற்றப் பிரஜைகளைப் போல் அதேக சலுகையிப்பங்களைக் கட்டளையிட்டான்.

Apostolic Fathers.

அப்போஸ்தலர் தங்களுடைய ஜீவியகாலத்தை இயேசுராஜனுக்கு மகிமையாகக் கழித்து, கடைசியில் ஒருவர் ஒருவராக இப்பிரபஞ்சத்தைவிட்டுப் பிரிந்து மோட்சபதவி யடைந்தனர்; யோவான் அப்போஸ்தலன் ஒருவர்மாத்திரம் இந்த நூற்றாண்டின் கடைசிவரைக்கும் இருந்தார்; அவரைப்பற்றிச் சில விசேஷங்களை இனிமேல் சொல்லுவோம். அப்போஸ்தலர்களுக்குப் பின்பு அவர்களுக்கு இஷ்டரும் சிநேகருமாயிருந்த அநேகர் சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகளாய் விளங்கினார்கள்; அவர்களில் இக்னேஷியு, போலிகார்ப், சோமாபுரி கிலேமெந்து, பர்னபா, எர்மேயு, பப்பியா என்பவர்கள் சிரேஷ்டமானவர்கள்; இவர்களுக்கு அப்போஸ்தல பிதாக்கள் என்று பெயர்; இவர்களில் இக்னேஷியு, போலிகார்ப் என்பவர்களைக்குறித்து இரண்டாம் நூற்றாண்டின் சரித்திரத்தில் விரிவாய்ச் சொல்லுவோம்;

மற்ற மூவரைக்குறித்து இவ்விடத்தில் இரண்டொரு காரியங்களைச் சொல்லுவது உத்தமமாயிருக்கும்.

Clément Bishop of Roume 91–100.

கிலேமெந்து என்பவர் சோமாபுரியில் பிறந்தவரும், அச்சபைக்குக் கண்காணியுமாயிருந்தார்; சோமசபையாராலே ஸ்தாபிக்கப்பட்டதோ நிச்சயஞ் சொல்லக்கூடாது. பெந்தெகோஸ்துநாளில் பேதுரு அப்போஸ்தலன் பிரசங்கம்பண்ணினபோது சோமாவாசிய சில அந்நியர் அங்கே இருந்ததாகச் சொல்லியிருப்பதால், அவர்கள் தங்கள் தேசத்துக்குத் திரும்பிப்போய், தாங்கள் அறிந்த சத்தியத்தைத் தங்கள் தேசஸ்தர்களுக்கு அறிவித்துச் சபையை நாட்டியிருக்தாலும் இருக்கலாம்; சிலர் இது பேதுரு அப்போஸ்தலனால் ஸ்தாபிக்கப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். இந்தச் சபைக்கு லீனு என்பவர் முதல் கண்காணி என்றும், அவருக்குப் பின்பு அனங்கிலித்து என்பவரும், கிலேமெந்து என்பவரும் முறையே அப்பட்டத்தைப் பெற்றார்கள் என்றும் சொல்லியிருக்கிறது; கிலேமெந்து என்பவராலே திருச்சபைக்கு அதிக அனுகூலமுண்டாயிருந்தது; இவர் உத்தம குருவாயும், சுவிசேஷ சத்தியத்தைப் பரிபாலித்தவராயும், திருச்சபையின் பூர்வ விருத்தாந்தத்தைக் குறித்துச் சில பிரபந்தங்கள் செய்தவராயும் இருந்தார்; அவைகளில் இவர் கொரிந்துபட்டணத்துச் சபைக்கு எழுதின முதலாம் நிருபம் தவிர, வேறொன்றும் இக்காலத்திலில்லை; இவர் நூறுவயதுவரைக்குமிருந்து பிற்பாடு இறந்துபோனார்; இவருடைய பெயர் பிலி. 4. 3–ல் வருகிறது.

Barnabas.

பர்னபா என்பவர் சிப்புருதீவில் பிறந்த ஒரு லேவியன்; இவர் கிறிஸ்துரட்சகருக்குத் திருத்தொண்டனான போது, தமது ஆஸ்திகளையெல்லாம் விற்று, அப்போஸ்தலரிடத்தில் கொண்டுவந்து பாதகாணிக்கையாகப் படைத்தார்; இவர் பவுல் அப்போஸ்தலனோடு சேர்ந்து, அந்தியோகியிலும் இன்னும் அநேக இடங்களிலும் கிறிஸ்துமார்க்கத்தை மகா பக்திவைராக்கியத்துடன் பிரசங்கித்துக்கொண்டுவந்தார்; பிற்பாடு மாற்கு என்பவரோடேகூட சிப்புருதீவுக்குப் போனபோது யூதரால் கல்லெறியுண்டு மரித்தார்; இவரும் தன் பெயரால் ஒரு நிருபத்தைச் சபைகளுக்கு எழுதினதாகச் சொல்லுகிறார்கள்.

Hermas.

எர்மேயு என்பவர் யாரோ நன்றும்த் தெரியவில்லை; சிலர் சோ. 16. 14–ம் வாக்கியத்தில் சொல்லப்படுகிற எர்மேயு இவர்தான் என்று நினைக்கிறார்கள்; இவர் பெயராலும் ஒரு பிரபந்தம் இருக்கிறது; அதற்கு (The Shepherd of

Hermas) "எர்மேக்கோன்" என்று பெயர்; ஆயினும் அதை இவர் தான் எழுதினாரோ, வேறொருவர் எழுதினாரோ நிச்சயம் சொல்லக் கூடாது.

Heretics of First Century.

இப்படி இந்த பக்திமான்கள் இப்பூலோகத்தில் சத்தியமார்க்கத்தைப் பரிபாலனஞ்செய்யும்பொருட்டு, தங்களால் இயன்ற முயற்சிகளைச் செய்துவந்தார்கள்; அப்படியிருந்தும், அப்போஸ்தலர் காலத்தில்தானே கிறிஸ்துமதத்தின் சத்தியத்துக்குப் பொருந்தாத அநேகம் உபதேசங்களைச் சிலர் போதித்துவந்தார்கள்; அவர்களுக்குப் * பாஷண்டர் அல்லது மதப்புரட்டர் என்று பெயர்; இவர்களில் சீமோன்மேகு, மினாண்டர், தோஸித்தியு, செரிந்து என்பவர்கள் சிரேஷ்டமானவர்கள்.

Simon Magus.

சீமோன்மேகு என்பவனைப்பற்றி அப்போஸ்தலர் நடபடி புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறது; அவன் சமாரியா காட்டானும், எகிப்துதேசத்திற்குப் போய் மாந்திரியவித்தைகளைக் கற்று, தன் சுயதேசத்திற்கு வந்து, தன்னை ஒரு தேவனைப்போலக் காட்டி, ஜனங்களை வஞ்சித்தவனுயும் இருந்தான்; பிலிப்பு என்பவனுடைய பிரசங்கத்தைக் கேட்டு ஞானஸ்நானம் பெற்றான்; ஆயினும் "பாலூட்டி வளர்த்தாலும் பாம்பின் விஷம் போகாது" என்பதுபோல், அவன் சத்தியமார்க்கத்திற்குரிய தீட்சை பெற்றபோதிலும் அவன் மனம் மாறவில்லை; பேதுரு அப்போஸ்தலன் அவன் மாயத்தைக் கண்டு: "நீ கசப்பான பித்தலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறாய்" என்றார்; இப்படி அப்போஸ்தலனுடைய கொடிய சாபத்தைப் பெற்று, ரோமாபுரிமுதலான இடங்களுக்குப் போய், தானே உலகரக்ஷகன் என்று சொல்லி அநேகம் பேரை வஞ்சித்து வந்தான்.

Menander.

மினாண்டர் என்பவனும் சமாரியாநாட்டில் பிறந்தவனுயும், சீமோனுக்குச் சேஷனுயும், அவனைப்போல் தன்னை ஒரு தேவனுகக் காட்டிறவனுயும் இருந்தான்; ஆயினும் இவனுடைய வஞ்சனை அவ்வளவாய்ப் பிரபலமாகவில்லை.

* பாஷண்டர், Heretics.

Dositheus.

தோஸித்தியு என்பவனைப்பற்றி அதிகம் தெரியாது; இவனும் சமாரியா காட்டானும் தன்னை மேசியாவாகிய உலகரக்ஷகன் என்று பாராட்டினவனுயும் இருந்தான்; யூதனைச்சார்ந்த ஒரு பிரதான ஆசாரியன் அவனைப் பிடிக்கும்படி பிரயத்தனஞ்செய்தபோது, அவன் ஒரு மலைக்குகையிலே போய் ஒளித்துக்கொண்டான்; அவ்விடத்திலேயே அவன் மாண்டு போனதாகவும் சொல்லுகிறார்கள்.

Cerinthus.

செரிந்து என்பவன் யூதனுயும், குளேஞ்திகருடைய கொள்கையை அனுசரித்தவனுயும் இருந்தான்; இவன் கிறிஸ்துமார்க்கத்தை அங்கீகரித்தபோதிலும், அதன் சாரத்தையும் மகாத்மியத்தையும் சற்றேனுகிலும் உணர்ந்தவனல்ல; அதனுலே இவன் அதற்கு அடாத கொள்கைகளைக் கொண்டவனுயும், அவைகளை எங்கும் பிரசித்தஞ்செய்கிறவனுயும் இருந்தான்; சொல்லவேண்டுமென்றால், இவன்தான் முதலாம் மதப்புரட்டன்; இவனே முதலாவது கிறிஸ்துமார்க்கத்தின் தூய உபதேசங்களோடே குளேஞ்திகருடைய விபரீதக் கொள்கைகளையும் கலந்து போதித்தான். இயேசுவானவர் யோசேப்புக்கும் மரியாளுக்கும் பிள்ளையென்றும், அவர் ஞானஸ்நானம் பெற்றபோது கிறிஸ்து என்னப்பட்ட ஒரு ஆவி மேலோகத்திலிருந்து புருவைப்போல அவர்பேரில் வந்ததென்றும், அவர் மரணமடையுஞ் சமயத்தில் அது திரும்பவும் பறந்துபோய்விட்டதென்றும் மேசியாவின் இராஜ்யபாரத்தின் முடிவில் அது மறுபடியும் யேசுவுடன் வந்து பொருந்தும் என்றும் சொன்னான்.

Gnosticism.

இந்தக் கொள்கைகளிலுலே முதல் மூன்று * நூற்றாண்டுகளில் திருச்சபைக்கு அநேகம் கெடுதிகள் நேரிட்டன. குளேஞ்திகர் என்றால் ஞானிகள் என்றர்த்தம்; இவர்கள் பிளேற்றோ என்பவருடைய சாஸ்திரத்தையும், யூதருடைய பாரம்பரைகளையும், பார்ஸ்தேசத்தாருக்குத் தர்மசாஸ்திரத்தைக் கற்பித்த (Zoroaster) சோராயஸ்தர் என்பவனுடைய கோட்பாடுகளையும், கிறிஸ்துமார்க்கத்தோடே கொண்டுவந்து பொருத்திப் பசுவின்பாலிலே பச்சகாவியைக் கலந்ததுபோல, சத்தியத்தை வேற்றுமையாய்க் கூறினார்கள்; இவர்கள் 1-வது: உலகத்தைச் சிருஷ்டித்தவர் பரப்பிரம வஸ்துவுமல்ல, அவர் கிறிஸ்துநாதருக்குப் பிதாவுமல்ல, நன்மைக்குக் காரணகர்த்தாவுமல்ல என்றும்,

பூலோகத்தைப் படைத்தவர் (Demiurgus) டெமியர்கு என்றும், அவர் யூதர்களுக்குத் தேவன் என்றும், மோசேயின் பிரமாணத்தைக் கொடுத்தவர் என்றும்; 2-வது: சடப்பொருளானது நித்திய காலமாய் இருக்கப்பட்டதென்றும், தீமையாகிய தன்மையைப் பொருந்தினதென்றும்; 3-வது: நித்திய பரப்பிரம வஸ்துவானவர் ஒருவரும் அணுகக்கூடாத ஒளிச்சக்கரவெளியில் வீற்றிருக்கிறாரென்றும், அதற்கப்பால் சடப்பொருள் அசைவற்றுக் கிடந்தது என்றும், அதை டெமியர்கு என்ற தேவன் கண்டு, மேலான கடவுளுக்குத் தெரியாமல் அதைக்கொண்டு உலகத்தைச் சிருஷ்டித்து, அப்பால் அவருக்கு விரோதமாய் ஒரு பெரிய கலாபத்தை மூட்டிவிட்டதென்றும், கிறிஸ்துநாதரும் பரிசுத்தஆவியானவரும் பரப்பிரம வஸ்துவிலிருந்து வைஜயாகத் தோன்றின ஆவிகளென்றும், கிறிஸ்துநாதர் டெமியர்குவினுடன்டான தீமைக்கும், சடப்பொருளினுல் கோரிட்ட கொடுமைக்கும் மானிடஜாதியானை விலக்கி இரட்சிக்கவும், அவர்களுக்கு ஞானமார்க்கத்தைத் தெரிவித்து, பரமபதவியில் சேர்க்கவும் திருஅவதார புருஷராய் எழுந்தருளினரென்றும்; 4-வது: பழைய ஏற்பாட்டின் ஆகமங்களைத் தள்ளிப்போட்டதுமன்றி, மரித்தவர்கள் உயிரோடெழும்பமாட்டார்கள் என்றும், அவர்களுக்கு மறுமையில் பலாபலன்கள் இல்லை என்றும் சாதித்துவந்தார்கள்.

Gnosticism opposed to the Atonement.

கிறிஸ்துமார்க்கத்துக்கு எள்ளளவேனும் பொருந்தாத இவ்விதமான பாசாங்களால் திருச்சபைக்கு அநேக கெடுதிகள் கோரிட்டன; தோஸித்தர் என்றும், எபியோனித்தர் என்றும், குனேஸ்திகளைச் சார்ந்த இரண்டு வகுப்பார் உண்டு; அவர்களில் தோஸித்தர், "கிறிஸ்துநாதர் மெய்யான மனுஷனல்ல" என்றும், எபியோனித்தர், "அவர் மெய்யான தேவனல்ல" என்றும் சொன்னார்கள்; இவ்விருபட்சத்தாருடைய போதனைகளும் கிறிஸ்துநாதராலுண்டான பாவநிவாரணம் என்னும் சத்தியத்துக்குப் பின்னம் உண்டாக்கத்தக்கதாயிருந்தது.

Apostle John.

இப்படிப்பட்ட விபரீதக்கொள்கைகளைக் கண்டிக்கும்படியாகவும், திருச்சபைக்கு அநேக அனுகூலங்களைச் செய்யும்படியாகவும் தேவன் யோவான் அப்போஸ்தலனை இந்த நூற்றாண்டின் முடிவுபரியந்தம் காப்பாற்றி வைத்திருந்தார்; அவர் எழுதின சுவிசேஷத்திலும் நிருபங்களிலும் இந்தத் தப்பறையான கொள்கைகளை வெகுவாய்க் கண்டித்துப் பேசி

யிருக்கிறார்; அவர் உலகத்தில் கடந்த அநேக ஆச்சரிய சம்பவங்களையெல்லாம் கண்டவர்; எருசலேம்பட்டணமும் அழிக்கதையும், யூத ஜாதியாருக்கு நேரிட்ட கொடிய துன்பங்களையும், கிறிஸ்துமார்க்கம் உலகத்தில் விஸ்தாரமாய்ப் பிரபலமாண்டையும் கண்டவர்; இவருடைய காலத்தில் கிறிஸ்துமார்க்கம், பலஸ்தீனுதேசம், சீரியா, சின்ன ஆசியா, சீப்புருஸ், கிரேத்தாஸ், மக்கேதோனியா, அற்றிக்கா, பிலேப்பலீஸ், ரோமை, ஒருவேளை ஸ்பானியா, கால், பிரித்தானியா, எகிப்து, அரபியா, பார்ஸ், இந்தியா முதலான தேசங்களில் சென்று, விர்த்தியடைந்ததை அவர் கண்ணாரக்கண்டும் காதாரக்கேட்டும் இருக்கலாம்; அவர் இரத்தசாக்ஷியாய் மரித்தாரென்று நினைக்க ஏதுவில்லை; தோமிஷன் இராயன்காலத்தில் கொதிக்கிற எண்ணெய்க் கொப்பரையில் அவர் தள்ளப்பட்டதாயும், அதில் சிறிதென்னிலும் சேதமில்லாமல் வெளியேறினதாயும், அப்பால் ஏயன்கடலிலுள்ள பத்மு தீவுக்குத் தூரத்தப்பட்டதாயும் சொல்லுகிறார்கள்; அவர் அத்தீவில் இருக்கும்போது வெளிப்படுத்தின விசேஷத்திலுள்ள பரமகாட்சிகளைக் கண்டார்.

His return from Patmos to Ephesus.

நெர்வா இராயன்காலத்தில் அவர் விடுதலையடைந்து எபேசுபட்டணத்திற்குப் போனார்; அவ்விடத்தில் சபைமுதல் முதல் பவுல் அப்போஸ்தலனுலே ஸ்தாபிக்கப்பட்டது; பிற்பாடு தீமோத்தேயு என்பவர் அதற்கு முதல் கண்காணியானார்; அவர் இறந்தபின்பு அச்சபையின் சீர் வெகு நிர்ப்பந்தமாயிருந்தது; "நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்" என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லியிருந்தபடி, அவர்களுக்குள்ளே கள்ளப்போதகர்கள் தோன்றி சத்தியத்தை வேற்றுமையாய்க் கூறினார்கள்; அதனுலே அவர்கள் ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டுவிட்டார்கள்; வெளி. 2. 4. சபை இந்த நிலைமையிலிருக்கும் போது, யோவான் அப்போஸ்தலன் எபேசுவுக்குப் போய், அது செழித்தோங்கும்படி வேண்டிய முயற்சிகளைச் சர்வ ஜாக்கிரதையுடன் செய்துவந்தார்.

His interview with Cerinthus.

ஒருகால் அவர் ஸ்நானஞ்செய்யும்பொருட்டு ஒரு குளத்திற்குப் போனபோது, அக்கே சேரிந்து என்ற மதப்புரட்டன் இருக்கிறான் என்று கேள்விப்பட்டு, ஓட்டம்பிடித்தார்; அதற்குக் காரணம் என்னவென்று அங்குள்ளவர்கள் கேட்க: "அந்தச் சண்டாளன்!

அந்தச் சத்தியதரிசி இருக்கிற இடத்திலிருந்தால், வானம் இடிந்து விழுந்துவிடும்" என்று சொன்னர்.

His reclaiming an Apostate.

இன்னொருவிசை அவர் சபைகளை விசாரித்துவரும்போது, ஒரு நல்ல வாலிபனைக் கண்டு, அவன் தேவ ஊழியத்திற்கு யோக்கியன் என்று நினைத்து, அவனை ஒரு கண்காணியாரிடத்தில் ஒப்புவித்தார்; அவன் ஞானஸ்நானம் பெற்று, சிலகாலம் நிறைவுடனே நடந்துவந்தான். பின்பு தியோழுக்கங்களுக்கு ஏற்பட்டு, சில பிரபலக் கள்ளரைச் சேர்ந்துகொண்டு அவர்களுக்குத் தலைவனானான்; கொஞ்சகாலத்திற்குப்பின் யோவான் அப்போஸ்தலன் அக்கண்காணியைக் கண்டு, அந்த வாலிபன் எங்கே? என்று விசாரிக்க: "அவன் செத்தான்; ஐயோ! தேவகாரியங்களில் செத்தவனானான்" என்றார்; அதை அவர் கேட்டு, மிகவும் இலேசப்பட்டு, உடனே ஒரு குதிரைமேலேறி, காட்டுக்குப் போய், கள்ளர் கூட்டத்தில் சேர்ந்தபோது, அவர்கள் அவரைப் பார்த்து, ஓர் வீரர் என்று நேட்க: "நீங்கள் என்னை உங்கள் தலைவனிடம் கொண்டுபோய்விடுங்கள்" என்றார்; அவர்கள் அப்படிச் செய்யவே, அந்தத் தலைவன் யோவானைக் கண்டபோது ஓட்டம்பிடித்தான்; உடனே அவரும் அவன் பின்னாலே ஓடி: "என் மகனே! என் ஓடுகிறாய்? நான் உன் தகப்பனல்லவா? விருத்தாப்பியனும் நிராயுதபாணியாயும் இருக்கிற எனக்குப் பயந்து என் ஓடுகிறாய்? இயேசுகிறிஸ்துவண்டைக்கு வா! உனக்கு இன்னும் இரக்கம் கிடைக்கும்; உனக்காக நான் ஜெபஞ் செய்வேன்; உனக்காக என் உயிரை விடவேண்டியிருந்தாலும் விடுவேன்; ஓடாதே "அப்பா" என்று அவர் சொன்ன வார்த்தை அம்பு போல் அவன் மனதில் பட்டிருவினதுபோலிருந்தது; அவன் உடனே அவர் காலில் விழுந்தழுது, தன் பாவங்களை அறிக்கையிட்டு, சன் மார்க்க நெறியில் நடந்துவந்தான்.

His dying advice to the Church.

இப்படி யோவான் அப்போஸ்தலனுடைய மகா புருஷன் தமது பாமகாயகருக்கு வெகு பத்திலவராக்கியத்துடன் ஊழியஞ்செய்து, நூறவயதுள்ளவராயிருக்கும்போது, மரித்துப் பரகதியடைந்தார். அவர் விருத்தாப்பியமாகி நடக்க ஏலாத காலத்திலும், மற்றவர்கள் அவரைத் தூக்கிச் சுமந்துகொண்டுபோய் கோவிலில் விடும்படி செய்வாராம். நெடும் பிரசங்கம் செய்ய ஏலாதலால், ஒவ்வொரு

விசையும் "பிள்ளைகளே! ஒருவரை ஒருவர் நேசியுங்கள்" என்ற இந்தச் சின்ன பிரசங்கத்தைச் செய்வாராம். என் திரும்பத் திரும்ப ஒன்றையே சொல்லுகிறீர் என்று கேட்டால், அது தேவனுடைய திருவாக்கு, அதில் எல்லாம் அடங்கிப்போயிற்று, வேறொன்றும் அவசியமில்லை என்று சொல்வாராம்; இந்த அப்போஸ்தலன் தன் ஜீவகாலத்தில் சொன்ன இந்த அரிய போதனையைப் பெரியோர் சிறியோர் யாவரும் தழுவி நடப்பார்களானால், சத்துருக்கள் அக்காலத்திலிருந்த கிறிஸ்தவர்களைப் பார்த்துச் சொன்னதுபோல, இக்காலத்துக் கிறிஸ்தவர்களையும் பார்த்து: "ஆ! இந்தக் கிறிஸ்தவர்கள் ஒருவரில் ஒருவர் எவ்வளவு நேசமாயிருக்கிறார்கள்" என்று ஆச்சரியத்துடன் சொல்லிக்கொள்வார்கள் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

QUESTIONS ON FIRST CENTURY.

முதலாம் நூற்றாண்டு சரித்திரத்தின்பேரில் கேள்விகள்.

1. உலகரட்சகராகிய கிறிஸ்துநாதர் திரு அவதாரம் செய்தபோது தூரதேசவிஷயத்திலும், கல்விவிருத்தியிலும், மார்க்கவிஷயத்திலும் உலகம் என்ன நிலைமையிலிருந்தது?
2. பிலாத்தென்பவர் இருந்த காலமும் அவருடைய பிரதான கேர்ப்பாடுகளும் எவை?
3. புறஜாதிகளார் யூதர் ஆகிய இவர்களுடைய நிலைமை யென்ன?
4. பரிசேயர், சதுசேயர், ஏனேர், ஏரோதியர் என்பவர்கள் யார்?
5. நிஜரட்சகரின் அற்புதஜனனம், திவ்யஜீவியம், மரணம், உயிர்த்தெழுதலைப்பற்றிச் சுருக்கமாய் எழுதுக?
6. பிரயாணத்தையும், விர்த்தியையும்பற்றி எழுதுக?
7. ஏழு உதவிருமாரில் முக்கியமான இரண்டுபேர் சரித்திரத்தைப்பற்றி எழுதுக?
8. சவுல் என்பவனின் குணப்பரிதாபத்தையும் அவனுடைய அழைகலத்தையும் காட்டுக?
9. ஏரோது அகிரிப்பாவினுடைய திருச்சபைக்குண்டான துன்பத்தையும் அவனுடைய முடிவையும் எழுதுக?
10. எருசலேமில் கூடின சங்கத்தைப்பற்றி என்ன தெரியும்?
11. பவுல் அப்போஸ்தலனுடைய மூன்று பிரயாணங்களைப்பற்றிச் சுருக்கமாய் எழுதுக?

12. அவர் ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டதையும் அவரது மரணத்தையும் பற்றி எழுதுக?
13. இலேமெந்த என்பவர் அவரைப்பற்றிச் சொல்லிய சாட்சி என்ன?
14. மற்ற அப்போஸ்தலனைப்பற்றித் தெரிந்ததை எழுதுக?
15. சபைக்கு எத்தனைதரம் பங்கள். முதலாம்தரம் யார்காலத்தில்கடந்தது?
16. எருசலேம் பட்டணம் அழிக்கப்பட்ட காலத்தையும், அதின் விவரங்களையும் எழுதுக?
17. இரண்டாம் தரம் யார்காலத்தில் கடந்தது. அதில் இரத்தசாக்ஷிகளாய் மரித்தவர்கள் யார்?
18. அப்போஸ்தல பிதாக்களைப்பற்றித் தெரிந்ததை எழுதுக?
19. இந்த நூற்றாண்டில் இருந்த சில பாஷண்டர் பெயர்களையும், அவர்கள் தப்பறைகளையும் பற்றி எழுதுக?
20. குளேந்திகருடைய கொள்கை வேத உபதேசங்களுக்கு முற்றும் விரோதம் என்று காட்டுக?
21. இந்த நூற்றாண்டின் கடைவரையிருந்த அப்போஸ்தலன் பெயரென்ன? அவர் ஒரு பிரபல தஷ்டனைக் குணப்படுத்தினதாகச் சொல்லியிருக்கிறதே, அதின் விவரம் என்ன?
22. அந்த அப்போஸ்தலனுடைய கடைசிப் பிரசங்கம் என்ன?

இரண்டாம் நூற்றாண்டு.

ட்ராயன் காலத்தில் உண்டான மூன்றாம் துன்பம். சிமேயோன் மரணம். இக்னேஷியு என்பவர் ட்ராயனுடன் சம்பாஷித்தல். ரோமைக்குச் செல்லுதல். நிருபங்களெழுதல். இரத்தசாக்ஷியாய் மரித்தல். பிலினி என்பவன் ட்ராயனுக்கு நிருபம் எழுதல். ட்ராயனுடைய மறுமொழி. ட்ராயன், பிலினி என்பவர்களைப்பற்றிய கவனிப்பு. ஹாதிரியான் ட்ராயன். பார்க்கோபோ என்பவனால் உண்டான கலகம். எருசலேம் சபை. குவாடிரேத்து, அரிஸ்தைடி என்பவர்கள் எழுதின அபாலஜிகுஸ்தாந்த நிருபங்கள். அலெக்சந்திரியா சபை. அன்றைகளுடைய பைபிள் என்னும் ட்ராயன் நிறைந்தவர்கள் பஷமாய்ச் செய்த தீர்ப்பு. மாற்கு அரீலியு என்பவன் காலத்தில் உண்டான கான்காம் துன்பம். கிறிஸ்தின் மார்த்தர் மெய்ப்பொருளை வாழ்த்தல். குணப்படுதல். நிருபங்களெழுதல். இரத்தசாக்ஷியாய் மரித்தல். போலிகார்ப் என்பவர் உயிர்த்தெழுதலின் உத்தரவைத் தரிசனைக்கும்பொருட்டு ரோமைக்குச் செல்லுதல். அவ்விடத்தில் அவர் செய்த முயற்சிகள். இரத்தசாக்ஷியாய மரிக்குதல். கால்

தேசத்தின் சபைக்குண்டான துன்பம். பொத்தைனு என்பவன் இரத்தசாக்ஷியாய் மரிக்குதல். பாண்டிக்கு, பிலாண்டினுஸ் என்னும் இரத்தசாக்ஷிகள். இடிமுழக்கச் சேனை. கம்மோதுராயன். துன்பம் நீங்குதல். அவனுக்குப்பின் வந்த ட்ராயர்கள். பிரித்தானியா சபை. இங்குதேசத்துச் சபை. பாஷண்டர். மொந்தானியர். திறிஸ்துமார்க்க விர்த்தி.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் ரோமராஜ்யத்தில் ட்ராயன் ட்ராயன் அரசாட்சி செய்துவந்தான்; இவன் சாந்தகுணமும், தயாளசிந்தையு முள்ளவனென்று சரித்திரக்காரர் சொல்லியிருந்தபோதிலும், திறிஸ்தவர்கள்பட்சத்தில் அந்த நற்குணம் திறிதேனும் விளங்கவில்லை; இவனுக்குமுன் அரசனுயிருந்த நெர்வா என்பவன் திறிஸ்தவர்களுக்கு அனுகூலமான ஏற்பாடுகளையும் சட்டங்களையும் செய்திருந்தும், அவைகளையெல்லாம் இவன் மாற்றி, திறிஸ்தவர்களுக்குத் துன்பமுண்டாகத்தக்க நிபந்தனைகள் செய்தான்; அதனாலே திருச்சபைக்கு மூன்றாவது துன்பம் நேரிட்டது. நேரோ ட்ராயன்காலத்தில் முதல் துன்பமும், தோமிஷன் ட்ராயன்காலத்தில் இரண்டாம் துன்பமும், முதலாம் நூற்றாண்டில்தானே கடந்ததாகச் சொன்னேனும்; இந்த நூற்றாண்டில் திராயன் ட்ராயன்காலத்திலும், மாற்கு அரீலியு ட்ராயன்காலத்திலும் இரண்டு துன்பங்கள் கடந்தன;" இவைகளில் முதல் துன்பத்தைப்பற்றி இப்போது சில விசேஷங்களைச் சொல்லுவோம்; அது 104-ம் வருஷமுதல், 117-ம் வருஷமட்டும் பதின்மூன்று வருஷகாலமாய் நடந்துவந்தது; அதில் அநேகம் திறிஸ்தவர்கள் இரத்தசாக்ஷிகளாய் மரித்தார்கள்; அவர்களில் சிமேயோன் என்பவரும், இக்னேஷியு என்பவரும் விசேஷமானவர்கள்.

Third Persecution under Trajan, A.D. 106–117.

சிமேயோன் என்பவர் யாக்கோபின் சகோதரனும், அவருக்குப்பின் எருசலேம் சபைக்குக் கண்காணியாயும் இருந்தார்; எருசலேம்பட்டணம் அழிந்து மண்மேடாய்ப்போயும், அதற்குச் சமீபமாய்த் திறிஸ்துசபை யிருந்ததென்றும், அதில் சிமேயோன் என்பவர் அந்தியகூருவாயிருந்தாரென்றும், நிகைக்கத்தக்கதாயிருக்கிறது; அவனைச் சத்துருக்கள் பிடித்து, சீரியாதேட்டிலிருந்த ரோமை அதிபதியாகிய (Atticus) அத்திக்கு என்பவனுக்கு முன்பாகத்தான் கொண்டுபோய்

Simeon's Martyrdom, A.D. 104.

விட்டார்கள்; அவன் அவனைப் பார்த்து, கிறிஸ்துமார்க்கத்தை விட்டு விடும்படிக்கு அநேக காரியங்களே நயமாயும் பயமாயும் சொல்லியும், அவர் எவ்வளவேனும் அசையாமல்: ''கிறிஸ்துமதமே சத்தியமார்க்கம்! கிறிஸ்துநாதரே பாவநாசர்! அவரது வசம்மாறில்லாத கடாக்ஷத்தினாலேயே கரையேறவேண்டும்'' என்று வெகு தைரியத்துடன் சொன்னார்; அவருக்கு அப்போது நூற்றிருபது பிராயம்; அவர் தேக பலவீனமுள்ளவராலுலும் மனதைரியம் சற்றேனும் குறையாமல் எல்லாருக்கு முன்பாகக் கிறிஸ்துரக்ஷகர்பேரிலுள்ள பக்திவிசுவாசத்தை அறிக்கைசெய்தார்; அதை அற்றிக்கு என்பவன் கண்டு கடுங்கோபங்கொண்டு அவனைச் சிலுவையில் அறைந்து கொல்லும்படி கட்டளையிட்டான்; இது 104–ம் வருஷத்தில் நடந்தது.

Ignatius.

இனி தேவபக்தியில் மிகச் சிறந்தவராயும், எல்லாச் சபைகளாலும் புகழ்பெற்றவராயும், அப்போஸ்தல பிதாக்களில் ஒருவராயும் இருந்த இக்னேஷியு என்பவருடைய சாரமான சரித்திரத்தைச் சற்றுக் கவனிப்போம்; சீரியாநாட்டின் இராஜதானியாகிய அந்தியோகியாபட்டணத்தில் அப்போஸ்தலர் காலத்தில்தானே ஒரு பெரிய சபையுண்டாயிருந்ததாக முன் சாட்டியிருந்தோமே; அதை அவர்களே நாட்டினதாகவும், அதற்கு (Evodius) ஈவோடியு என்பவரை முதல் கண்காணியாக ஏற்படுத்தி வைத்ததாகவும் சொல்லுகிறார்கள். ஈவோடியு 70–ம் வருஷத்தில் மரித்துப்போனபிற்பாடு, இக்னேஷியு என்பவர் அவர் பட்டத்துக்கு வந்தார்; அவருக்கு (Theophorus) தெயோப்போரு என்று இன்னொரு நாமதேயமும் இருந்தது; தெயோப்போரு என்றால்: ''தேவனுல் சுமக்கப்பட்டவன்'' அல்லது ''தேவனைச் சுமக்கிறவன்'' என்றர்த்தம்; இயேசுரக்ஷகர் தமது திருக்கரங்களில் எடுத்துக்கொண்டு ஆசீர்வதித்த பிள்ளைகளில் இக்னேஷியு ஒருவர் என்றும், அதனாலே அவருக்கு அந்தப்பெயர் உண்டாயிற்றென்றும் சிலர் நினைக்கிறார்கள்; யோவான் அம்போஸ்தலனுக்குப் போலிகார்ப் என்பவரும், இவரும் சீஷராயிருந்தார்கள்; இவர் சாந்தகுணமும் தயாளசிந்தையுமுள்ள பக்தியுமுள்ளவராகையால், எல்லாராலும் புகழ்பெற்றவராயிருந்தார்.

His interview with Trajan.

இப்படியிருக்குங்காலத்தில் அவர் கிறிஸ்துரக்ஷகருக்காகத் தமது பிராணனை விடவேண்டுமென்று அனவரத ஆசைகொண்டு, 107–ம் வருஷத்தில் திராயன் இராயன் பார்த்தியாதேசத்தைப் பிடிக்கும்படி பண்ட சேனையுடன் அந்தியோகியாபட்டணத்திற்கு வந்தபோது,

இவர் வலிய அவனண்டைக்குப் போய், அவன் பெரிய சக்கரவர்த்தியே என்று சற்றேனும் அஞ்சாமல் வெகு தைரியமாய் நின்றார்; இராயன் அவனைப் பார்த்து, நீ கம்முடைய சட்டத்தை மீறவும், மற்றவர்கள் அதைமீறும்படி செய்பவும் துணிந்து நிற்கிறதைப் பார்க்கும்போது, உனக்குள் பிசாசானவன் குடிகொண்டிருக்கிறான் என்று தோன்றுகிறதே என்றான்; அதற்கு அவர்: ''தெயோப்போரு வாகிய என்னை அப்படிச் சொல்லலாமா? பிசாசானவன் கிறிஸ்து சுவாமியின் அடியார்களிடத்தில் வாலுமாட்டான், வாசஞ்செய்யவும் மாட்டான்; நான் அவரது அருளால் பிசாசினுடைய கட்டுகளெல்லாம் அறுத்துக்கொண்டிருக்கும்போது, நான் அவனுக்கு அடிமை என்று எப்படிச் சொல்லலாம்'' என்றார்; அதற்கு இராயன் தெயோப்போரு என்றால் என்ன? அதைச் சொல்லு என்று கேட்க: ''கிறிஸ்து இயேசு சுவாமியைத் தன் இருதயகமலத்தில் எடுத்துப்போற்றுகிறவன் யாரோ, அவன்தான்'' என்றார். உலகமெங்கும் யுத்தஞ்செய்து, வீரசூராயிருக்கிற எங்கள் உன்னதத்தில் தேவர்கள் வாசஞ்செய்கிறதில்லையா? என்ன இராயன் கேட்டபோது, ''மூடபக்தியுள்ள ஜனங்கள் வைத்துக் கும்பிடுகிற பேய் பிசாசுகள் தேவர்களாவார்களா? சகல அண்டசராசரங்களையும் படைத்து ஆண்டு நடத்திவருகிற மேலான தேவனிருக்கிறார்; அவருக்கு வாசஸ்தலமிருக்கிற இயேசுவாகியே என் இரக்ஷகர்'' என்று அவர் சொன்னதை அரசன் கேட்டு: ''என்ன? நீ சொல்லுவது பெரிய விந்தையாயிருக்கிறது! பொந்தியுபிலாத்துவின் காலத்தில் குருசினில் வன்கொலையுண்டவனே உன் இரக்ஷகரெனுமான் என்று சொல்வது எவ்வளவு விபரீதம்?'' என்றான்; அதற்கு அவர்: ''ஆம், என் அருமைநாயகராகிய இரக்ஷண்யகடவுள் சிலுவை மரத்தில் வன்கொலையுண்டது மெய்தான்; அவர் அப்படித் தமது உயிரை விடாமலிட்டால் பாவம் தொலையவுமாட்டாது; அதற்குக் காரணமாயிருந்த பிசாசின் தலை யுடையவுமாட்டாது; அந்த அருள் நாதனை உள்ளத்தில் வைத்துத் தொழுதுவரும் அடியார்களைப் பாவமும் பிசாசும் அணுகவுமாட்டாது'' என்றார்; அப்படியானால், ''சிலுவையில் அறையுண்டவனை நீ உன் உள்ளத்தில் வைத்துத் தொழுகிறாயோ'' என்று இராயன் கேட்க, ஆமாம்: ''நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனுமிருப்பேன்; அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள்'' என்ற திருவாக்கு இருப்பதால், அவர் எனக்குள் வாசஞ்செய்வதும், நான் அவருக்குள்

தொண்டு செய்வதும் நிச்சயம் என்றார்; இதையெல்லாம் அரசன் கேட்டு, கடுங்கோபங்கொண்டு அவரை ரோமாபுரிக்குக் கொண்டுபோய், துஷ்டமிருகங்களுக்குப் பட்சணமாகப் போட்டுவிடும்படி கட்டளையிட்டான்.

His journey to Rome, Writings and Martyrdom, A.D. 117.

இத்தீர்ப்புப் பிறந்தமாத்திரத்தில் பத்துச்சேவகர் அவரைப் பிடித்துக் கட்டி, கப்பல்மார்க்கமாய் ரோமாபுரிக்குக் கொண்டுபோனார்கள்; அப்படிப் போகையில், சின்ன ஆசியாவிலுள்ள சிமிர்ன பட்டணத்தில் இறங்கி, அவர் தமக்கு உத்தம சிநேகிதனும் அப்பட்டணத்துக் கண்காணியுமாயிருந்த போலிகார்ப் என்பவரை அங்கே கண்டு, அகமகிழ்ச்சிகொண்டு, பரமகாரியங்களைப்பற்றி இருவரும் மிக இன்பமாய்ச் சம்பாஷித்தார்கள்; அவர் அங்கே யிருக்கும்போது, பல சபைகளிலுமிருந்து தூதர்கள் வந்து, அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும்படி காத்துக்கொண்டிருந்தார்கள்; அவ்விடத்திலிருந்து அவர் எபேசு, திராலியா, மாக்னிஷியா ரோமைபட்டணங்களிலுள்ள சபைகளுக்கு நிருபங்களை எழுதிவிட்டார்; அப்பால் சிமிர்னபட்டணத்தை விட்டுப் புறப்பட்டு, மீசியாநாட்டிலுள்ள துரோவாபட்டணத்துக்குப் போய், அங்கிருந்து பிலதெல்பியா சபையாருக்கும், சிமிர்ன சபையாருக்கும், போலிகார்ப் என்பவருக்கும் நிருபங்கள் அனுப்பினார்; இந்த எழு நிருபங்களிலும் நிறைந்துமார்க்கத்தின் சிறந்த உபதேசங்கள் அதிகமாயிராவிடினும், அந்த மார்க்கத்தினாலுண்டாகும் அன்பும் மனோதைரியமும் அவைகளில் கன்னருய் விளங்குகிறது; அவர் சத்தியத்துக்குச் சாட்சியாக மரிக்கவேண்டுமென்ற பேராவலினாலே தமக்கு நேரிட்டிருக்கும் ஆபத்துக்கு நீங்கும்படி ரோமாபுரி யிலிருந்தவர்கள் பிரார்த்தனை செய்யக்கூடாதென்று எழுதினார்; அவர் இப்படி எழுதினது சரியென்று சொல்லக்கூடாது; ஆயினும் நிறைந்தநேசருக்காக என்னபாடு வந்தாலும் அதைப் பட்டனுபவிக்கவேண்டுமென்கிற ஆவல் அவருக்குப் பூரணமாயிருந்ததென்று பார்க்கிறோம்; அவர் துரோவாபட்டணத்தை விட்டு நேயாப்போலி பட்டணத்துக்கும் பிலிப்பிபட்டணத்துக்கும் போய், கடைசியாக ரோமாபுரிக்கு வந்து இராயன் விதித்தபடி வேடிக்கைசாலையில் எண்ணிறந்த ஜனங்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க துஷ்டமிருகங்களுக்குப் பட்சணமானார்; அவர் கோரினபடி காட்டுமிருகங்கள்தான் அவருக்குச்



ரோமாபுரியில் இக்னேஷியு ஸ்துமிருகங்களுக்கு இரையானது.

சமாதி; அவருடைய அங்கத்தில் சில எலும்புகள் போக, மற்றதையெல்லாம் மிருகங்கள் பட்சித்துவிட்டன; அவ்வெலும்புகளைச் சில நிறைந்தவர்கள் எடுத்துவந்து அந்தியோகியாபட்டணத்தில் வைத்தார்கள்; இது 117-ம் வருஷம் நடந்தது.

Growth of the Church in Asia Minor.

திருச்சபைக்கு முக்கிய பிதாவாயிருந்த இக்னேஷியு என்பவனைக் கொன்றுபோட்டால், கிறிஸ்துமார்க்கம் முற்றிலும் அற்றுப்போகும் என்பது இராயனுடைய உத்தேசம்; திருவுளக்குறிப்போ அப்படியிராமல் அக்காலத்திலுண்டாயிருந்த துன்பத்திலுலே கிறிஸ்துசபை முன்னிலும் அதிகமாய்ச் செழித்தோங்குவதற்கு ஏதுவாயிற்று. இது சிசிலியு பிலினி என்பவன் இராயன் இராயனுக்கு எழுதின ஒரு முக்கிய நிருபத்தினால் விளங்கும்; பிலினி என்பவன் சின்ன ஆசியாவிலுள்ள பித்தினியா, பொந்துமுதலான காடுகளில் பிரதிநிதியாயிருந்து அதிகாரஞ் செலுத்தினவன்; பித்தினியாகாட்டில் கிறிஸ்துமார்க்கம் அப்போஸ்தலர் காலத்திலேயே பிரபலமாயிருந்ததென்று நினைக்கவேண்டியிருக்கிறது. 46–ம் வருஷத்தில் பவுல் அப்போஸ்தலன் இரண்டாம்விசை பிரயாணஞ்செய்யும்போது, பித்தினியா காட்டில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி யோசனையாயிருந்தார்; ஆயினும் அவர் கோரிக்கை சுடேறவில்லே; என்றாலும் அந்திரேயா என்பவர் அக்காட்டிற்கும், அதற்கு அருகிலுள்ள பொந்துகாட்டிற்கும் போய், கிறிஸ்துவின் இரகசுணமகத்துவங்களைக் கூறினரென்று சபையாருக்குள் சாதாரணமாய் ஒரு பேச்சிருக்கது; இதுவுமன்றி மற்ற காட்டாரோடே பித்தினியாநாட்டாரையுஞ் சேர்த்து அவர்களுக்கு 58–ம் வருஷத்தில் பேதுரு அப்போஸ்தலன் ஒரு நிருபத்தை எழுதியிருக்கிறதைக் கவனிக்குங்கால், கிறிஸ்துமார்க்கம் அக்காலத்தில் அத்திசைகளில் முக்கியமாயிருந்ததென்பது பிரத்தியட்சமாயிருக்கிறது; பிலினி என்பவனுடைய நிருபம் அதற்கு ஒரு போக்த அத்தாட்சி.

Pliny's letter to Trajan, A.D. 106 or 107.

அவன் தனைத்தன அதிகாரத்தைச் செலுத்திவரும் காலத்தில், பித்தினியாகாட்டில் எண்ணிறுத்த கிறிஸ்தவர்களிருந்தார்கள்; அவர்களுக்கு விரோதமாய் முன்னை இராஜாக்கள் எற்படுத்திய பிரமாணங்களெல்லாம் மிகக் குரூரமாயிருந்ததைக் கண்டு, அதைக்குறித்து 106–ம் அல்லது 107–ம் வருஷத்தில் இராயனுக்கு எழுதினன். "மகா இராஜாவே! அடியேனுக்கு மேலாயிருக்கிற விஷயத்தை உமக்குச் சொல்லாமல் பின்னுருக்குச் சொல்லுவேன்? நம்முடைய கோவில்கள் பாழடையத்தக்கதாகக் கிறிஸ்தவர்கள் பெருகிப்போனார்கள்; அவர்கள் கல்லுர்களாயும், சாந்துகுணமுள்ளவர்களாயும், அதிகாரிகளுக்கு அடங்கி நடக்கிறவர்களாயும் இருக்கிறார்கள்; ஆயினும்

அவர்கள் ஒரு கெட்ட பிரிவினைக்கேதுவான அவபக்தியை அனுசரிக்கிறவர்கள்; அதைத் தடுக்காவிட்டால் அது எங்கும் பரவிப் போகும்; அது ஒரு ஒட்டுவியாதிபோல் எல்லாரையும் தொத்திக் கொண்டது; பெரிய நகரங்களில் வசிக்கிற ஜனங்களே மாத்திரமல்ல, சிற்றூர்களிலிருக்கும் சமஸ்த ஜனங்களையும் வசமாய்ப்பிடித்துக்கொண்டது; இந்த நோய்க்கு மருந்தில்லை யென்று சொல்லக்கூடாது; இந்தக் கொடிய மார்க்கத்தை ஒழிக்கும்படியாக என்னுலியன்ற முயற்சிகளைச் செய்துவருகிறேன்; சிறிது தினங்களுக்குமுன் பாழடைந்து கிடந்த நம்முடைய கோவில்களுக்கு இப்போது ஜனங்கள் வருகிறார்கள்; நைவேத்தியம், நேர்த்திக்கடன், தீபதூப ஆராதனையெல்லாம் செய்கிறார்கள்; கிறிஸ்தவர்கள் கணக்கிலடங்காத விதமாயிருப்பதால், அவர்களே என்னசெய்கிறதென்று தெரியவில்லை; பெரியோர், சிறியோர், ஸ்திரீ, புருஷர் என்ற பேதாபேதமின்றி, அவர்கள் யாவரும் கிறிஸ்துமதத்தை அனுசரித்த குற்றத்துக் குட்பட்டிருப்பதால், அது விஷயத்தில் என்னசெய்யவேண்டுமென்ற யுக்தாயுக்தம் தெரியாது மயங்குகின்றனன்.....அவர்களுடைய வாக்குமூலங்களினுல் அவர்கள் குற்றவாளிகள் என்று நிர்க்க எதுவுமில்லே; அப்படியிருக்க, நிரபராதிகளாய் அவர்களைத் தண்டிப்பது தர்மசாஸ்திரத்திற்கு ஒவ்வாது; அவர்களில் முன் கிறிஸ்துமதத்தை அனுசரித்து, இப்போது அதைவிட்டு விட்டவர்களில் சிலரைப் பிடித்து, அம்மார்க்கம் எப்படிப்பட்டதென்று கேட்கும்போது, அது கொடிதான மூடபக்தியென்று சொல்லாமேயன்றி, மற்றப்படி அது தண்டனைக்கேதுவான பாதகமென்று நிர்க்க ஒரு எதுவும் காணேம்; அவர்கள் சொல்லுவதென்னவெனில், "நாங்கள் வாரத்தில்கொருநாள் அருணோதயத்தில் ஒரு இடத்தில் கூடி, கிறிஸ்து இயேசுகுவாமிக்கு ஸ்தோத்திரமாக ஒரு கீர்த்தனை பாடி, எங்களுக்குள் ஒரு கட்டுப்பாடு செய்வோம்; கொலே களவு முதலான எவ்வகையான பாதகங்களுக்கும் எற்படக்கூடாதென்றும், வாக்குத் தவறக்கூடாதென்றும், நம்பிக்கைத்துரோகம் செய்யக்கூடாதென்றும் பிரமாணஞ்செய்து, அவைகளைக் கிரிதேனும் மீறாதபடிக்கு நிமமாய் நடந்துவருவோம்" என்று சொல்லுகிறார்கள்; இதனுலே அவர்கள் குற்றவாளிகளென்று ஆராதனையாய்த் தீர்ப்பிடுவது தர்மமல்லவென்று எண்ணுகிறேன்; இதற்கு நீங்கள் என்ன கட்டளையிடுகிறீர்களோ, மன்னன் வாக்குக்கு மறுவாக்கின்றி அதன்படி நடக்கச் சித்தமாயிருக்கிறேன்" என்று இராயன் இராயனுக்கு எழுதினன்.

அவன் இவ்விதம் அரசனுக்கு எழுதிக்கொண்ட விண்ணப்பத்தைப் பார்க்கும்போது, கிறிஸ்தவர்கள் காரியத்தை விசாரித்துத் தீர்ப்பதற்கு அவனுக்கு வெகு பிரயாசையாயிருந்ததென்று தோன்றுகிறது; அவர்களில் அநேகம்பேர் குற்றவாளிகளென்று நியாயஸ்தலத்திற்குக் கொண்டுவரப்பட்டதினாலும், அவர்கள்மேல் சாற்றப்பட்ட குற்றங்களோ குற்றமென்று தீர்ப்பதற்கு ஏதுவில்லாததினாலும், அதற்காக அவர்களைத் தண்டிப்பதற்கு அவனுக்கு மனக்கவலையும் சந்தேகமும் அதிகமாயிருந்தது; அதை நிவர்த்தி செய்துகொள்ளும்பொருட்டே அரசனுக்கு எழுதினான்.

Inference.

அதற்கு அவ்வரசன் அந்த ஜனங்கள் எங்கேயிருக்கிறார்கள் என்று தேடிப் பிடித்துக்கொல்வது சரியல்ல, அவர்கள் பிடிபட்டுவந்து அவர்கள்மேல் நியாயமானபடி குற்றஞ்சுமருமானில், அவர்களுக்கு மரண ஆக்ஞையிடலாம்; ஆயினும் அவர்கள்முன் எவ்வளவு பெருங்குற்றங்களைச் செய்தவர்களாயிருந்தாலும், அவர்கள் தங்கள் மார்க்கத்தை விட்டுவிட்டு நம்முடைய தேவர்களை வழிபட்டு நடப்பார்களானில், அவர்களை மன்னித்துவிடுவது நீதிநூலுக்கு ஏற்றது என்று ஆக்ஞாபித்தான்; இந்தத் தீர்ப்பு 111-ம் வருஷத்தில் பிறந்ததென்று உத்தேசிக்கலாம்.

Trajan's reply, A.D. 111.

சிராயன் இராயனும், பிலினி என்பவனும் தர்மசாஸ்திரப்படி நடக்கிற தயாளகுணசீலரென்று புகழ்பெற்றிருந்தபோதிலும், யாதொரு விஷயத்திலும் குற்றஞ்செய்யாத கிறிஸ்தவர்களைத் தண்டிக்கும்படி சட்டம் பிறப்பித்ததைப் பார்க்கும்போது, "மாம்சத்துக்கேற்ற ஜென்மதேவனுக்கு விரோதமான பயோயிருக்கிறது" என்று சத்தியவேதம் சாற்றுவது யதார்த்தமே; உலகத்தைச் சார்ந்து நடக்கிற மனுஷன் உலகம் மதிக்கிறபடி நீதிநெறி வழுவாதொழுகும் தர்மபுருஷனாயிருந்தபோதிலும், கடவுள் விஷயங்களில் ஒன்றும் தெரியாத மூடனாகவேயிருக்கிறான். அவரது பிரமாணங்கள் மனுஷனுடைய பெருமையை முற்றிலும் அகற்றுகிற தன்மையுள்ளதாயிருப்பதால், அவருடைய அருள் பெறுதலை அவைகளே மதித்து நடப்பது அசாத்தியமே: "உன்னைப்போல உன் பிறனே நேசி" என்பது தேவன் விதித்த கட்டளை; அவரது கடாக்ஷத்தால் மனுஷ

Reflections on the characters of Trajan and Pliny.

னுக்கு இயற்கையாயிருக்கிற கெட்ட சுபாவம் நீங்கி குற்றமுண்டாகாவிட்டால், இந்தக் கட்டளைப்படி அவன் நடப்பதெப்படி? இதுகாரணத்தைப்பற்றியே மேற்கொன்ன இராயனும், பிலினி என்பவனும் ஒரு பாவமும் அறியாத கிறிஸ்தவர்களைத் தண்டிப்பதற்கும்படி தணிந்தார்கள். 117-ம் வருஷத்தில் சிராயன் இராயன் பார்த்தியாதேசத்தைப் பிடிக்கும்படி யுத்தத்துக்குப் போனதில் அபஜயப்பட்டு இறந்தான்.

அவனுக்குப்பின் ஹத்ரியான் என்பவன் அரசனாகி இருபது வருஷகாலமாய் அதிகாரஞ் செலுத்தினான்; இவன் கல்விசொன்திரங்களைப் பரிபாலித்திவனும், இராஜ்யத்துக்குதித்த காரியங்களைத் திறமையாய் நடத்துகிறவனுமாயிருந்தபோதிலும், மூர்க்கனும் தவிடனுமாயிருந்தான்; அதனாலே சிராயன் காலத்திலுண்டான தண்பம் சீர்காமலிருந்தது; இவன் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்த வேண்டுமென்ற கோக்கமாய் யாதொரு பிரமாணத்தை ஏற்படுத்தாவிட்டாலும், சிராயன் இர்யன் கொடுத்த சட்டங்களை மாற்றாமல் விட்டுவிட்டதினாலே பலவிடங்களில் துன்பம் நடந்துகொண்டே இருந்தது; இவருடைய கிறிஸ்தவர்களுக்குமாத்திரமல்ல, யூதர்களுக்கும் வெகு இடைசலுண்டாயிற்று.

Third Persecution continues under Hadrian.

யூதர்கள் ரோமருடைய கொடுங்கோன்மையைப் பொறுக்கமாட்டாமல், பற்பல இடங்களில் கலகஞ்செய்யத் தலைப்பட்டார்கள். பார்கோபோ என்ற பெயருடைய ஒரு யூதனிருந்தான். அந்தப் பெயருக்கு கட்சத்திரபுத்திரன் என்றர்த்தம்; அவன் தன்னை உலகரக்ஷகனுடைய மேசியா என்று சொன்னபடியினாலே, அநேகம் யூதர்கள் அவனைச் சேர்ந்து பெரிய கலகத்துக்கு எத்தபட்டார்கள்; ரோமர் அவர்களோடே யுத்தஞ்செய்து, அவர்களில் ஆயிரக்கணக்கான ஜனங்களைக் கண்டதுண்டமாய் வெட்டி, தாழ பட்டணங்களைப் பிடித்துத் தரைமட்டமாக்கி, நெருப்படைத்தார்; இதில் எருசலேம் பட்டணமும் அழிந்துபோனபடியால், அது இருந்த இடத்தில் வேறொரு பட்டணத்தைக் கட்டி, எலியு என்ற இராயனுடைய நாமத்தின்படி அதற்கு எலியுகப்பதோலினு என்று பேரிட்டார்கள்.

Rebellion of the Jews under Barchochebas, A.D. 132-135.

இத்தனை மாறுதல்கள் அங்கே நடந்தபோதிலும், அதனாலே சபைக்கு விக்கினமுண்டாகவில்லை; அவ்விடத்துச் சபைக்குக் கண்காணிகளாயிருந்த சின்ன யாக்கோபு, அவருடைய சகோதரன் சிமேயோன் என்பவர்களைப்பற்றிச் சில விசேஷங்களை இதற்குமுன் எடுத்துக் கூறியிருக்கிறோம்; சிமேயோன் என்பவர் இறந்தபிற்பாடு, யுஸ்து என்பவர் கண்காணிப்பட்டம் பெற்றுச் சபையின் காரியத்தை நடத்திவந்தார்; அவர் 111-ம் வருஷத்தில் இறந்துபோன பிற்பாடு, யூதஜாதியாரைச் சார்ந்த பன்னிரண்டு கண்காணிமார் மாறி மாறி 135-ம் வருஷம்வரையும் சபையை விசாரித்து வந்தனர். பழைய எருசலேம்பட்டணம் அழிந்து, புதிதாய் ஒரு பட்டணங் கட்டப்பட்டபின்பு, சபையைச் சார்ந்தவர்கள் விசேஷமாய்ப் புறத்தேசத்தாராயிருந்தபடியால், அவர்களில் மாற்கு என்று பெயருள்ள ஒருவர் கண்காணிப்பட்டம் பெற்றார்.

Church at Jerusalem.

யூதேயாநாட்டிலுள்ள சபையின் ஸ்திதி இப்படியிருக்கும்போது, மற்ற இடங்களிலுள்ள சபைகள் துன்பத்தினாலே குறைந்துபோகாமல் அபிவிர்த்தியடைந்துகொண்டே வந்தது. கிறிஸ்தவர்களில் கன்மூப்படித்து ஞானசித்தியம் அடைந்திருந்த சிலர் எழும்பி, கிறிஸ்துமதமே சத்தியமார்க்கம் என்பதை அதே உதாரணங்களினாலே எடுத்துரைத்து, இப்படிப்பட்ட மார்க்கத்தை அழிக்கும்படி முயல்வது அநியாயம் என்று தாங்கள் செய்த தூல்களாலே விளங்கக் காட்டினார்கள்; இவர்களில் அத்தேனே பட்டணத்தாராகிய குவேதிரேற்று, அறிஸ்டைடி என்பவர்கள் முக்கியமானவர்கள்; ஆதிரியான் ராயன் அத்தேனே பட்டணத்துக்கு வந்தபோது, மேற்சொன்ன இரண்டு கல்விமான்களும் அந்த ராயனுக்குக் கிறிஸ்துமதமே சத்தியமார்க்கம் என்று ருபிக்கும்படி இப்படிப்பட்ட ஒரு பிரபந்தத்தை எழுதியனுப்பினார்கள்; அவன் அதை வாசித்து, கிறிஸ்தவர்கள் பட்சத்தில் சற்று தயாளகுணத்தை அடைத்திருப்பான் என்று நினைக்கவேண்டியிருக்கிறது; ஆயினும் "அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்" என்பதுபோல, அவனுடைய தேசத்தாரில்சானே ஒருவன் அவன் மனதில் நன்றாய் உறைக்கத்தக்கவிதமாய் ஒரு விண்ணப்பப்பத்திரம் எழுதினான்; அவன் சின்ன ஆசியாவில் கியாதிபதியாயிருந்தவன்; அவனுக்கு கிரேனியு கிரேனியானு

Apologies of Quadratus and Aristides.

என்று பெயர்; அவன் ஒரு ரோமனாயிருந்தபோதிலும் தர்ம இருதயனாயிருந்தமையால், கிறிஸ்தவர்களுக்கு யாதொரு குற்றமும் பின்னிடமான ஆக்கினை விதிப்பது தர்மசாஸ்திரத்துக்கு முற்றும் விரோதம் என்று ராயனுக்கு எடுத்துக்காட்டினான்; அதை அந்தக் கொடுங்கோல் மன்னன் பார்த்து, கிறிஸ்தவர்களுக்கிருந்த துன்பத்தை நிறுத்திவிடும்படி கட்டளையிட்டான்.

தர்ம இதுவரையும் ஆசியாகண்டத்தில் காட்டப்பட்டிருந்த சபைகளைப்பற்றியே முக்கியமாய்ப் பேசினோம்; இப்போது கிறிஸ்துமார்க்கம் மற்றக் கண்டங்களில் சென்றதைப்படியென்றும், அதனாலே விளைந்த நன்மைகள் எவையென்றும் பார்ப்பது உத்தமமாயிருக்கும். அப்பிரிக்காகண்டத்தின் வடதிக்கில் சிர்னைகம் என்னுமொரு பிரதேசம் இருக்கிறது; அத்தேசத்துக்கு மேற்கேயில் நீலநதிக்குச் சமீபமாய் அலெக்சந்திரியா என்ற ஒரு பட்டணமுண்டு; அதை முற்காலத்தில் சக்கரவர்த்தியாயிருந்த மகா அலெக்சந்தர் என்பவன் கட்டி, எக்காலத்திலும் தன் பெயர் விளங்கும்படி அதற்கு அலெக்சந்திரியா என்று பெயரிட்டான்; அது வியாபாரத்துக்கும் செல்வத்துக்கும் உறைவிடமான பட்டணம்; மகா அலெக்சந்தர் இறந்தபின்பு, அவனுடைய தளபதிகளில் ஒருவனாகிய தோலமி என்பவன் எகிப்துதேசத்தில் ஒரு சாட்சி புரிந்துவந்தான்; கிறிஸ்துபிறந்த 1-ம் வருஷம்வரையும் அத்தேசம் அவன் குலத்தைச்சார்ந்த அரசர்கள் வசத்திலிருந்தது; அப்பால் அகுஸ்து ராயனுடைய காலத்தில் அது ரோமனைச் சார்ந்துபோயிற்று; தோலமி வம்சத்து ராஜாக்கள் எகிப்துதேசத்தை ஆண்டுவரும் காலத்தில், அலெக்சந்திரியாபட்டணம் செல்வப்பொருளில் மாத்திரமல்ல, கல்விப்பொருளிலும் பெயர்பெற்றதாயிருந்தது; நானூறுகிலுமிருந்து ஜனங்கள் அவ்விடத்துக்கு வந்து கல்விப்பயிற்சி செய்துவருவார்கள்; அப்பட்டணம் இவ்விதஸ்திதியிலிருக்கும்போது, மாற்கு சுவிசேஷகன் அவ்விடத்துக்குப் போய், கிறிஸ்துமார்க்கத்தைப் பிரசித்தஞ்செய்து ஒரு கல்ல சபை யுண்டாக்கினார். பல கல்விகளில் தேர்ந்து வித்வசிரோமணிகளாயிருந்தவர்களில் அநேகர் கிறிஸ்துமார்க்கத்தை அனுசரித்தார்கள்; அப்படி அவர்கள் திருச்சபையில் சேர்ந்தது கிறிஸ்துமார்க்கத்துக்கு அனுகூலமாயிருந்ததோ? பிரதிகூலமாயிருந்ததோ? என்பது பின்னுலே விளங்கும்; நாம் இப்போது கவ

Church at Alexandria.

னிக்கவேண்டிய தென்னவெனில், உலகஞானமும் உண்மைஞான மும் நீரும் நெய்யும்போல அதிகமாய்ப் பொருத்தமாட்டாது; "இவ் வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது;" இப்படியிருப்பதால், உலகஞானத்தை முந்தியும், தேவஞானத்தைப் பிந்தியும் வைக்கிறவர்கள் கிறிஸ்துமார்க்கத்தின் சாரத்தை ருசித்தவர்க ளல்லவென்று தீர்க்கவேண்டும்; இதனாலே கல்விமுயற்சிகள் சாஸ் திரப்பயிற்சிகள் இவைகளைப் பழுதுகூறுகிறோமென்று ஒருவரும் நினைக்கலாகாது; ஆயினும் இவைகளைத் தேவஞானத்தோடு சம ரசப்படுத்தும்படியாவது, இவைகளைக்கொண்டு அதைப் பரீட்சிக்கும் படியாவது ஞானிபுங்கால், கேடாய் முடியும் என்பதற்குச் சந்தே கமில்லை. கிறிஸ்துமார்க்கத்தில் அடங்கிய நித்தியேசுத்துவம், கிறிஸ் தவின் மனுஷாவதாரம், பாவநிவாரணம் முதலான உயர்ந்த உண்மை உபதேசங்களை உலகக் கல்விகளைக்கொண்டு நிதானித்தறியப் புகுந் தால், "எட்டாப்பழுத்துக்குக் கொட்டாவியிட்டதுபோல்" வியர்த்த மாய் முடியும்; கடவுள் கொடுத்த அருள்வேதாந்தை ஆராய்ச்சி செய் யும்போது, கல்விச்சம்பிரதாயங்களையெல்லாம் காததூரத்தில் வைத்து விட்டு, ஒன்றும் அறியாத குழந்தைகளைப்போல பக்திவினயதாதா ரும் பணிந்த சிந்தையோடும் ஆராய்ந்தால், அதில் விளங்கிய ஞானம் மனதுக்குப் புலப்படுமே யல்லாமல் மற்றப்படி அது விளங்காமே மாட்டாது; அலெக்சந்திரியாபட்டணத்திலுள்ள கிறிஸ்தவர்களோ இந்தச் சத்தியத்தை மறந்து தங்கள் கல்வியைப் பாராட்டும்படி தலைப்பட்டனர்; இவர்க்கை சாஸ்திரிகளில் பெரிய சாஸ்திரியென் றும், வித்வசிரோமணியென்றும் புகழ்பெற்றிருந்த பிலேற்றே என் பவனுடைய சாஸ்திரங்களைக் கிறிஸ்துமார்க்கத்தின் சத்தியங்களோ டே கலந்து போதிக்கும்படி ஆரம்பித்தார்கள்; அந்தப் பிலேற்றே வின் சாஸ்திரங்களல்லாமலும், அலெக்சந்திரியாபட்டணத்தில் குளோஸ்திருடைய விபரீதக் கோட்பாடுகளும் அதிகமாய்ச் சென்று, செல்லேய் புல்லுருவி கெடுப்பதுபோலச் சபையைக் கெடுத்துக் கொண்டுவந்தது. வாலந்தினு, பாசிலிது, மார்க்ஷியன், செர்டன் என்பவர்கள் மேற்சொன்ன கொள்கைகளைக் கொண்டவர்களாயும், அவைகளை எங்கும் பிரசித்தப்படுத்தினவர்களாயும் இருந்தார்கள்; இப்படிச் சபைக்கு உள்ளும் புறம்பும் அநேகம் சத்துருக்கள் இருந்த போதிலும், அது குறைத்துபோகாமல் வளர்ந்துகொண்டேவந்தது.

ஹாதிரியான் இராயன் இறந்தபிற்பாடு அந்தோனை பையஸ் என்பவன் 138-ம் வருஷத்தில் அவன் பட்டத்துக்கு வந்து, கூடியவரையில் நீதிநெறி வழுவாமல் அரசாட்சி செய்துவந்தான்; திருச் சபைக்கு உண்டாயிருந்த துன்பத்தை நிறுத் தும்படி கட்டளை பிறப்பித்தானன்றி, கிறிஸ்தவர்களுக்கு அனுகூல மான அநேகம் பிரமாணங்களையும் ஏற்படுத்தினான்; அக்காலத்தில் பூமி அடிக்கடி அதிர்ந்ததினால், "ஊருக்கெனியவன் பிள்ளையார்கோ வில் ஆண்டி" என்பதுபோல், அதெல்லாம் கிறிஸ்தவர்களாலேதான் வந்ததென்று ஜனங்கள் சொல்லிக்கொண்டார்கள். அந்தச் சமாசாரம் அரசனுக்கு எட்டினபோது, அது மகா அதர்மமென்று நினைத் தான். பிரசைகளுக்கு எழுதினதில் சொல்லுகிறான்: "இப்படிப் பட்ட விபத்துக்கள் கிறிஸ்தவர்களாலே வருமானால், தேவர்களே அவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்கலாமே; அவர்களுக்குத் தோல்வை செய்யாத ஜனங்களே அவர்கள் கிட்டிக்கவேண்டுமேயன்றி, நாம் என் கிட்டிக்கவேண்டும்? ஆயினும் நீங்கள் கிறிஸ்தவர்கள் தேவ னில்லை என்று சாதிக்கிற காஸ்திகர் என்றும், அவபக்தர் என்றும் அபாண்டமாய்ச்சொல்லி அவர்களை வாதிக்கிறீர்கள்; அக்குற்றங்களை ஸ்தாபிதப்பிக்க உங்களால் கூடாது; கடைசியில் அவர்கள் காரியம் தான் ஜெயமாகிறது; அவர்கள் தங்கள் மதாபிமானத்திலுள்ளே தங்கள் பிராணனை விட்டுவிடுகிறார்களேயன்றி, உங்களுக்குப் பயந்து சற் றேனும் பின்வாங்குகிறதில்லை; பூமி அதிரும்போது அவர்கள் தேவன் பேரில் அதிக பக்தியுள்ளவர்களாய்க் காணப்படுகிறார்கள்; நீங்கள் தெகிலேத்தண்ணீர்போல் இயங்குகிறீர்கள்: "சுத்தமுள்ள நெஞ்சு குழருதென்னும்" என்பதுபோல், இப்படிப்பட்ட காரியங்கள் சம்ப விக்கும்போது உங்கள் மனம் கலங்குகிறது; சகல ஜனங்களுக்கும் படைத்த சகோதரக்கடவுளை நீங்கள் வழிபடாமலிருப்பது மன்றி, அவருக்குக் கொண்டுசெய்கிறவர்களையும் பிடித்துக் கொல்ல வேண்டுமென்கிறீர்கள். ஹாதிரியான் இராயன் இட்டதே சட்டம்; கிறிஸ்தவர்கள் சோமருடைய அரசாட்சிக்கு விரோதமான குற்றத் தைச் செய்தாலேயன்றி, மற்றப்படி அவர்களைத் தண்டிக்கக்கூடாது" என்றான். 140-ம் வருஷத்தில் ஜஸ்டினின் மார்ட்டர் என்பவர் கிறிஸ்துமார்க்கத்துக்குச் சார்பாயெழுதிய புஸ்தகத்தை இராயன் பார் வையிட்டு, கிறிஸ்தவர்கள் குற்றமற்றவர்கள் என்று மனதில் நிர்ண யஞ்செய்து, இப்படிப்பட்ட சட்டத்தைப் பிறப்பித்தான்.

Antoninus Pius succeeds Hadrian, A.D. 138. His edict in favor of Christians.

இந்தத் தர்மராஜன் இருபத்திரண்டுவருஷம் வெகு நீதியாய் அரசாண்டு, பிற்பாடு மரித்துப்போனான்; அவனுக்குப்பின் அவன் மருமகனுமான மாற்கு அரீலியு என்பவன் 161-ம் வருஷத்தில் இராயனானான்; இவன் தன் மாமனைப்போல தயாளசீலனாயிருந்தும், கிறிஸ்தவர்களுக்குக் கொடிய பகைஞனாயிருந்தான்; இவன் காலத்தில் திருச்சபைக்கு கான்காம் துன்பம் கேரிட்டது; அது அகேக இடங்களில் வெகு கொடுமையாய் நடந்துவந்தது; அதில் அநேகம் கிறிஸ்தவர்கள் இரத்தசாக்ஷிகளாய் மரித்துப்போனார்கள்; அவர்களில் ஐஸ்டின் மார்ற்றர் என்பவரும், போலிகார்ப் என்பவரும் சிரேஷ்டமானவர்கள்; அவர்கள் சரித்திர விருத்தாந்தங்களைச் சற்று விரிவாய் எடுத்தனாப்போம்.

Fourth Persecution under Marcus Aurelius, A. D. 161-180.

ஐஸ்டின் மார்ற்றர் என்பவர் சமாரியாவிலுள்ள பழைய சிகேமாயிய நேயாப்போலிபட்டணத்தில் பிறந்தவர்; ஒருவேளை இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் பிறந்திருப்பார்; அவருடைய தாய்தந்தைகள் கிரேக்காயிருந்தினாலே அவரை அலெக்சந்திரியாவுக்கு அனுப்பி, சகல சாஸ்திரங்களிலும் கலைக்கியானங்களிலும் தேறும்படி செய்தார்கள்; அவர் சபாவத்தில் சகல காரியங்களையும் ஆராய்ச்சிசெய்யும் தன்மையுள்ளவராதனால், மானிடஜாதிபார் கண்டடையவேண்டிய மெய்ப்பொருள் எதென்பதைப்பற்றி தீர்க்க விசாரணை செய்யவேண்டும் என்று கருதி, (Stoics) ஸ்தோயிக்கர் என்று சொல்லப்பட்ட சாஸ்திரிகளை அடுத்து அவர்களிடத்தில் விசாரித்தார்; அவர்கள் உலகத்தில் இன்ப துன்பம் ஒன்றுமில்லை; இன்பம் வந்தாலும் மனுஷன் சந்தோஷமடையக்கூடாது, துன்பம் வந்தாலும் துயரடையக்கூடாது; எல்லாவிஷயத்திலும் அவன் நிராசையுள்ளவனாயிருப்பதே உத்தமம் என்று கூடின கோட்பாட்டினாலே அவர்களால் மெய்ப்பொருளைக் காண்பது அசாத்தியம் என்று நினைத்து, (Peripatetics) பெரிபற்றிற்றிக்ஸ் என்று சொல்லப்பட்ட சாஸ்திரிகளிடத்துக்குப் போனால் ஒருவேளை காரியம் சித்திக்கும் என்று அவர்களிடம் சேர்ந்தார்; ஆயினும் அவர்கள் உலகத்தில் நடக்கும் காரியங்களைக் கடவுள் கருணைநிந்தனைத்துப் பார்ப்பதேயில்லை; உலகம் எக்கேடு கெட்டுப்போனாலும் மகிழ்ச்சியில்லை என்று அவர் மனனம் சாதித்துக்கொண்டிருக்கிறதாகச் சொன்னார்

Justin Martyr: his search after the Chief Good.

கள்; இவ்விதக் கொள்கைகளைக் கற்றுக்கொடுக்க அதிக திரவியம் கேட்டதால் அவர்களிடத்திலும் காரியமில்லை என்று கண்டு, இனி (Pythagoreans) பைதகொரியர் என்று சொல்லப்பட்ட சாஸ்திரிகளை அடுத்துப் பார்ப்போம், அவர்கள் ஒருவகை என்னுடைய சரீரத்தை நிவிர்த்திசெய்து வஸ்துநிலையைக் காட்டி, மோட்ச சாம்பிராஜியத்தைப் பெறும் வழியைப் போதிக்க மாட்டுமோர்களாக்கும் என்று உத்தேசித்துப் போனார்; அவர்களாலும் அவர் மனக்கவலை மாறவில்லை; அவர்களுடைய காரியமெல்லாம் பாம இரகசியமாயிருந்தபடியால், பரமார்த்தத்தை அறியக்கூடாதிருந்தது; கணிதசாஸ்திரம் வானசாஸ்திரங்களில் அவருக்கு ஒன்றும் தெரியாதென்று அவரை விலக்கிவிட்டார்கள்; இப்படி அவர் எங்கே ஓடிப்பார்த்தாலும் சுகம் தோன்றாதால், கடைசியில் பிலேற்றோ என்பவருடைய சாஸ்திரங்களை ஆராய்ச்சிசெய்தால், அதிலே தாம் கருத்தாய் கோக்கிற்கும் பொருள் தட்டுப்படுமென்று நினைத்து அவைகளைப் பார்வையிட்டு வந்தார்; அதில் பரப்பிரம வஸ்துவினுடைய சுபாவலட்சணங்களைப் பற்றி திட்பநுட்பமாய்க் கூறியிருக்கும் காரியங்களைக் கண்டு ஆச்சரியப்பட்டபோதிலும், அவர் மனக்கவலை சற்றேனும் மாறவில்லை, அதிசேரும் மார்க்கத்தைக் காணவில்லை; அது தேவ அருளால் அடைக்கவேண்டுமேயன்றி, அதைக் கலைக்கியானத்தினாலும் கல்விச் சம்பிரதாயத்தினாலும் கண்டடையவேண்டுமென்றால், மூடன் கொம்புதேனுக்கு ஆசைப்படுவதுபோல இட்டாபமே போகும். கடைசியில் அவர் அதை உலகத்துக்குச் சற்குருவாய் உதித்தருளின இயேசுசுவாமியின் திருவடிகளில் தேடினபடியால் கண்டுகொண்டார்.

Justin's conversion.

ஒருநாள் அவர் கடலோரமாய் உலாத்தும்போது, விருத்தாப்பியமுள்ள ஒரு பெரியவர் அவரைக் கண்டு, தேவஞானத்துக்கும் கல்விப்பயிற்சியினாலுண்டாகிய உலகஞானத்துக்கும் இருக்கிற பேதாபேதங்களைப்பற்றிச் சம்பாஷித்து, மெய்ப்பொருளைக் கண்டடையவேண்டுமானால், கிறிஸ்து மார்க்கத்தை கன்முய்க் கற்றுணர்வதினாலும், கடவுளுடைய அருள் கடாக்ஷத்திற்காகப் பிரார்த்தனை செய்வதினாலுமே அறியவேண்டுமென்று கூறிவிட்டு, காற்றைப்போல மறைந்துபோனார்; அதுமுதல் அவர் இறுதிமூச்சு சத்தியங்களை ஆராயவே, கலக்கம் தெளிந்து 133-ம் வருஷத்தில் இயேசுசுவாமியின் திருநாமத்தைக் கூறுவராயினார்; என்

ருலும், அவர் பிலேத்தே என்பவருடைய சாஸ்திரங்களோ நன்முழுக் கற்றாய்ந்தவரானபடியினாலும், அவைகளை ஒருவாறு கணிசமாய் மதித்துவந்தபடியினாலும், அவர் எழுதின ஆகமங்களில் அவைகளைப் புகழ்ந்து பேசியிருக்கிறார்; இது அவரைப்பற்றிக் கூறவேண்டிய குற்றமாயிருந்தபோதிலும், அவர் கிறிஸ்துமார்க்கத்தின் சாரத்தை உணர்ந்தவராயும், அது பிரசித்தமாவதற்குவேண்டிய அனுகூலங்களைச் செய்தவராயும் இருந்தார் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

His Writings.

அவர் சத்தியமார்க்கத்துக்குச் சார்பாக இரண்டு நியாயதிருஷ்டாந்த நிருபங்களை எழுதினார்; எழுதி ஒன்றை முன்சொன்னதுபோல, 140–ம் வருஷத்தில் அத்தேனேனு பையஸ் இராயனுக்கும், மற்றொன்றை மாற்கு அத்தோனேனு என்ற இராயனுக்கும் அனுப்பினார்; அதுவுமன்றி (Trypho) திரைபோ என்னும் ஒரு யூதனுக்குக் கிறிஸ்துமார்க்கத்தைக்குறித்து இருவர் சம்பாஷிக்கிற பாவனையாய் ஒரு புஸ்தகம் எழுதினார்; இந்தப் பிரபந்தங்களிலெல்லாம் கிறிஸ்துமார்க்கத்தைப்பற்றி அஞ்ஞானிகள் சொன்ன ஆட்சேபனைகளை எடுத்துக்காட்டிக் கண்டித்து, கிறிஸ்துமதமே சத்தியமார்க்கம் என்று பிரமாணம் ஒப்புக்கொள்ளத்தக்க நியாயங்களைத் தீர்க்கமாய்க் கூறியிருக்கிறார்.

His martyrdom, A.D. 165.

இப்படி அவர் முப்பது வருஷகாலமாயும் தமது பரமகாயகராகிய இயேசுசுவாமிக்கு ஊழியஞ்செய்து, கடையில் அவர்நிமித்தம் தம்முடைய ஜீவனை விட்டுவிட்டார். 166–ம் வருஷத்தில் சாருக்கன் அவனாயும் இன்னும் ஆறு கிறிஸ்தவர்களையும் பிடித்து, பிரதிநிதியாயிருந்த (Rusticus) ரஸ்திக்கு என்பவன் முன்பாகக் கொண்டுவந்து விட்டார்கள்; அவன் அவ்வேழுபேரையும் பார்த்து, நீங்கள் உங்கள் மார்க்கத்தை விட்டுவிட்டு, எங்கள் தேவதிகளைத் தொழுதுகொள்ளவேண்டும் என்று கட்டளையிட்டபோது, அவர்கள் சற்றேனும் அஞ்சாமல் தாங்கள் கிறிஸ்தவர்கள் என்றும், தங்கள் மார்க்கத்தை விட்டே மாட்டோம் என்றும் தைரியமாய்ச் சொன்னதினாலே, அந்த தியாபாதிபதி கடுங்கோபங்கொண்டு அவர்களை வாளினால் அடித்து, சிரச்சேதனஞ்செய்யும்படி தீர்ப்புப்பண்ணினான். கல்வியிலும் ஞானவாழ்க்கையிலும் சிறந்தவராயிருந்த ஜஸ்டின் மார்ட்டர் என்பவர் இப்படிக் கிறிஸ்துவுக்காக் இரத்தசாக்ஷியாய் மரித்ததால், "இரத்தசாக்ஷி" என்று அர்த்தமுள்ள மார்ட்டர் என்ற பட்டப்பெயரும் அவருக்கு வழங்கிவந்தது.

ஜஸ்டின் மார்ட்டரைப்பற்றி இம்மட்டும் சொன்னது போதும். இனி போலிகார்ப் என்பவருடைய சரித்திர விருத்தாந்தங்களைச் சற்று விவரமாய் எடுத்தாளப்போம்; அவர் யோவான் அப்போஸ்தலனுக்குச் சீஷனும், அப்போஸ்தல பிதாக்களில் ஒருவராயும் இருந்தாரென்று இதற்கு முன் சொல்லியிருக்கிறோம். சிமிர்ணுபட்டணத்துச் சபை அத்தியக்ஷராகிய (Bucolius) புக்கொலு என்பவர் இறந்தபின் போலிகார்ப் என்பவர் அந்த உத்தியோகத்திற்கு நியமிக்கப்பட்டார். வெளிப்படுத்தின ஆகமத்தில், "சிமிர்ணு சபையின் தூதன்" என்று சொல்லப்பட்டவர் இவராயிருந்தாலும் இருக்கலாம்; அவர் தமது ஆசானாகிய யோவான் அப்போஸ்தலனைப்போல பக்தியில் சிறந்த வராயிருந்தார்; அவருடைய சரித்திர வரலாறுகளை ஆதியோடந்தமாய் எதைப்பார்த்தாலும், கிறிஸ்துநாதர்பேரிலிருந்த அவரது பக்தியும் நேசமும் கன்னல் வினங்குகிறது; அவருடைய சிநேகிதனாகிய இக்னேஷியு என்பவர் பிலிப்பப்பட்டணத்தை விட்டு ரோமாபுரிக்குப் புறப்பட்டுப் போனபின்பு அவர் பிலிப்புப்பட்டணத்துச் சபையாருக்கு ஒரு நிருபம் எழுதி, இக்னேஷியு என்பவருடைய க்ஷேமாதிகளைப்பற்றி விசாரித்தார்; இந்த ஒரு நிருபத்தைத்தான் அவர் எழுதினதாக இன்னக்கவேண்டியிருக்கிறது.

Polycarp.

Polycarp's visit to Rome on the question of Easter, A.D. 158.

போலிகார்ப் உயிர்த்தெழுந்த பண்டிகையைப்பற்றிச் சபைகளில் தர்க்கம் உண்டானபோது, அவர் அதைத் தீர்க்கும்படி கருதி 158–ம் வருஷத்தில் ரோமாபுரிக்குப் போனார்; இந்தத் தர்க்கம் எப்படி உண்டாயிற்றென்றால், இரகுதர் உயிர்த்தெழுந்தநாளாகிய ஞாயிறுதினத்தைப் பூர்வீக சபையார் திருநாளாகக் கொண்டாடிவந்தார்களாகத் தோன்றுகிறது; அக்காலத்தில் சபை இரண்டாகப் பிரிந்து, மேழச்சபையென்றும் மேலச்சபையென்றும் பெயர்பெற்றிருந்தது; இவ்விரு சபைகளும் உயிர்த்தெழுந்த பண்டிகையை அதற்கு முற்பின வாரமுதல் உபவாசமிருந்து பக்தியுடன் கொண்டாடவேண்டும் என்று ஏற்பாடு செய்துகொண்டதில், மேழச்சபையார் பஸ்காபண்டிகை நாளாகிய யூதருடைய முதல்மாதம் பதினாலாந்தேதியில் அப்பண்டிகையை ஆசரிக்கவேண்டுமென்றும், மேலச்சபையார் அதற்கடுத்த ஞாயிற்றுக்கிழமையில் அதை ஆசரிக்கவேண்டுமென்றும் சொன்னார்கள்; இப்படிக் மேழச்சபையார் ஆபிப்மாதத்தில் பதினாலாந்தேதியில் அதைக்

கொண்டாடவேண்டும் என்று தீர்மானஞ்செய்தபடியினாலே, அதை சில சந்தர்ப்பங்களில் ஞாயிற்றுக்கிழமையில் வராமல் மற்றநாட்களிலும் வருகிறதாயிருந்தது; இது ஒரு பெரிய குற்றம் என்று மேலச்சபையார் சொன்னார்கள்; இந்தத் தர்க்கத்தைத் தீர்க்கும்படி கீழச்சபையார் போலிகார்ப் என்பவரை ரோமாபுரிக்கு அனுப்பினார்கள்; அங்கே (Anicetus) அனீசிற்று என்பவர் கண்காணியாயிருந்தார்; அவர்கள் இருவரும் அதுவிஷயத்தைப்பற்றி சம்பாஷித்தபோதிலும் ஒரு முடிவு செய்து கொள்வதற்கு ஏதுவில்லாமற்போயிற்று; இப்படி அவர்கள் அவ்விஷயத்தில் பேதமான எண்ணங்கொண்டவர்களாயிருந்தும், அதனாலே அவர்களுக்குக் கிறிஸ்துமார்க்கத்தினாலுண்டான கட்பு குறைந்துபோகவில்லை. அனீசிற்று என்பவர் தாம் பேதுரு அப்போஸ்தலனுடைய ஆசனத்திலிருப்பவர்போல எண்ணி அந்தக் காரியத்தில் அதிகாரோரணியாய் ஒன்றும் சொல்லவில்லை; அப்படியிருக்க இந்த நாற்றாண்டின் கடையில் ரோமாபுரிக் கண்காணியாயிருந்த (Victor) விக்டர் என்பவர் எபேசுபட்டணத்துக் கண்காணியாகிய (Polycrates) போலிகிரேற்று என்பவரோடே இந்த விஷயத்தைப்பற்றி வெகு கடுமையாய் வாதித்ததுமன்றி, மேலச்சபையாருடைய தீர்த்தாத்தபடி கீழச்சபையார் செய்யாவிட்டால், அவர்களைச் சபைக்குப் புறம்பாக்குவோம் என்று கண்டிப்பான கட்டளையும் கொடுத்தார்; அதை ஆசியாஸ்பட்டணத்துக்குக் கண்காணியாகிய ஐரினியு கேள்விப்பட்டு, விக்டர் என்பவர் கீழச்சபையாருக்கு விரோதமாய் இவ்வளவு வீம்புபாராட்டக் கூடாதென்று கண்டித்தார். 325-ம் வருஷத்தில் நீசேயாபட்டணத்தில் முதல்விசையாக விசேஷித்த சங்கம் கூடினபோது, அச்சங்கத்தார் மேலச்சபையரர் கொண்டதே சொல்லையென்று தீர்த்தபடியால், கீழச்சபையாருடைய தீர்மானம் கானாவட்டத்தில் அற்றுப்போயிற்று.

His usefulness there.

போலிகார்ப் என்பவர் ரோமாபுரிக்குப் போனகாரியம் சித்தியாகாவிட்டாலும், அவர் அங்கே போனதினாலே அச்சபைக்கு மிகுந்த கன்மையுண்டாயிற்று; அவர் அவ்விடம்போய்ச் சேர்ந்தபோது, குளோஞ்திகருடைய விபரீதமான கோட்பாட்டினாலே சபையின் சீர் வெகுவாய்க் குலைந்திருந்தது; அந்தக் கொள்கையை மார்க்கின் என்பவன் எல்லாருக்கும் போதித்துவந்தான்; அதை அநேகம் கிறிஸ்தவர்கள் அனுசரித்துக் கொண்டார்கள்; இதையெல்லாம் அவர் பார்த்து, மனதில் இலேச

முற்று, அந்தக் குளோஞ்திகருடைய மார்க்கத்தை எவ்விதத்திலும் குலைத்து, சத்தியமார்க்கத்தின் மாட்சிமையை எல்லாருக்கும் காட்டவேண்டும் என்று எண்ணங்கொண்டு, கிறிஸ்துமத சத்தியத்தைச் சர்வஜாக்கிரதையுடன் பிரசங்கித்தபடியால், குளோஞ்திகருடைய சமயத்தைச் சார்ந்த அநேகம்பேர் தாங்கள் செய்தது தப்பென்று உணர்ந்து கிறிஸ்துசபையில் சேர்ந்தனர்; இதனாலே கிறிஸ்துவின் அடியார் எங்கேயிருந்தபோதிலும் தங்கள் பரமகாயசாரரை கிறிஸ்து தொண்டுசெய்யுமென்றும், மானிடஜாதியாருக்கு கன்மை செய்யுமென்றும் அறியலாம்.

இப்படிப் போலிகார்ப் என்பவர் ரோமாபுரிச்சபைக்குத் தம்மாலியன்ற நன்மைகளைச் செய்தபின்பு, சிமிர்ணுபட்டணத்துக்குத் திரும்பிப்போய் தேவஊழியத்தை மகாவைராக்கியத்துடன் பார்த்துவந்தார்; அதனாலே அப்பட்டணத்திலிருந்த சபை தேவபக்தியில் நிறைந்து விளங்கிற்று; வெளிப்படுத்தல் என்னும் ஆகமத்தில் காட்டியிருக்கிறபடி இன்ன ஆயிவினுள்ள ஏழு சபைகளில் ஐந்து சபைகள் சீர்கெட்டஸ்திதியிலிருந்ததாகவும், பிலதெல்பியா சபையும் சிமிர்ணு சபையும் சத்தியமார்க்கத்துக்குப் பழுதுவராதபடி நடந்துகொண்டதாகவும் பார்க்கிறோம். சத்துருக்களாலே சபைக்குத் துன்பமுண்டானபோது, போலிகார்ப் என்பவர் கிறிஸ்துகர்த்தரிலிருந்த நேசத்தினாலும் மதாபிமானத்தினாலும் தம்முடைய ஜீவனையும் விடவேண்டியிருந்தது; அவர் இக்நேஷியு என்பவரைப்போல் மகிமைக்குச் சிலாக்கியமாய் மரணம் வரவேண்டும் என்று கோரினவரல்ல; ஆயினும் தேவசங்கற்பத்தின்படி அவருக்கு மரணம் நேரிட்டபோது, அதற்குச் சிறிதேனும் அஞ்சாமல் மனோற்சாகமாய் அதைச் சகிக்கும்படி தணிந்து நின்றார்; அவரைப் பிடித்து இம்சை செய்த சத்துருக்கள் அவருடைய நிலைமையும், விருத்தாப்பியத்தையும், உத்தமகுணத்தையும் கண்டு ஆச்சரியப்பட்டு, அவருடைய உயிரைக் காப்பாற்றவேண்டும் என்று கோக்கொண்டு, அவரைப் பார்த்து: "ஓ, மகானுபாவா! உன் உயிரைக் காக்க எங்களுக்கு இஷ்டமிருக்க, உனக்கு அது இல்லாமற்போனதென்ன? நீ ஒரு சொல்லினாலே தப்பிக்கொள்ளலாமே; உங்கள் கிறிஸ்துசுவாமியை ஒரு வார்த்தை சொல்லி தூஷித்தால், உன் பிராணனுக்கு மோசம் வராமாட்டாதே; கல் அடைந்தாலும் உன் மனம் அசையாமலிருக்கிறதென்ன? நீ இப்படி உன் சுவாயிஷ்டி தூஷியாசபட்

Polycarp's martyrdom, A.D. 167.

சத்தில் உன் உயிரை வாங்கச் சித்தமாயிருக்கிறோம்; என்ன சொல்லு கிறும்" என்று நயமும் பயமுமாய்க் கேட்டார்கள்; அதற்கு அவர் தமது கண்களை உயர்த்திச் சற்றுநேரம் தியானம்பண்ணி, அவர்களைப் பார்த்து: "ஓ, துணைமக்களே! அதிகாரிகளே! நீங்கள் என்னைக் கிறிஸ் துமார்க்கத்தை விட்டுவிடும்படியாகவும், கிறிஸ்து இயேசுகுவாமியைத் தூஷிக்கும்படியாகவும் வீண்வார்த்தை கூறுவானேன்? அந்த சாக்ஷாத் கடவுளை நான் சரணடைந்து, இந்த எண்பத்தாறு வருஷகாலமாய் அவருக்கு ஊழியஞ் செய்துவருகிறேன், அவர் ஒருநாளாகிலும் எனக் குத் தீமை செய்தவரல்ல, அண்டினோரை ஆதரிக்கும் மண்டலாதிபன், அநாதரக்ஷகன், பக்தவத்சலன், சத்தியவசனராய் விளங்காநின்ற அவ னை நான் இப்பொழுது எப்படித் தூஷிப்பேன்" என்று எல்லாரு டைய உள்ளமும் கெருப்பிலிட்ட மெழுகுபோல் உருகும்படி பேசி னர்; என்றாலும் அந்தச் சண்டாளருடைய மனம் சற்றேனும் இளக வில்லை; அவனை ஒரு தூணோடே சேர்த்துக்கட்டி, சூழக் கட்டை களைப் பரப்பி, நெருப்பு வளர்த்து அவனைத் தகனித்தார்கள்; சற்றுநே ரஞ் சென்றபின்பு அக்கினி அவனைப் பட்சியாதென்று சொல்லி, அங் கே நின்ற ஒரு போர்ச்சேவகன் அவனை ஈட்டியினால் குத்தி நெருப் பில் விழத்தள்ளினான்; அவர் மரிக்குமுன் தேவனைப் பார்த்து, மலர்ந்த முகத்தோடும், மகாவிசுவாச பக்தியோடும் பிரார்த்தனை செய்து, மிக சந்தோஷமாய்த் தமது ஜீவனை விட்டுவிட்டார்; அவருடைய எலும்புகளை அவருடைய சிநேகிதர் எடுத்து அடக்கஞ் செய்தார்கள். அவர் மரிக்கும்போது அவருக்கு நூற்றிருபது பிராயம்; அவரோடே கூட பதினெழு கிறிஸ்தவர்களும் மரித்தார்கள்; இந்தத் துயரமான காரி யம் 167-ம் வருஷத்தில் நடந்தது.

ஆயினும், "இரத்தசாக்ஷிகளுடைய இரத்தம் சத்திய சபைக்கு விதை" என்று கிறிஸ்தவர்களுக்குள் ஒரு பழ மொழி சாதாரணமாய் வழங்கிவருகிறது. ஐஸ்ற்றின் மார்ட்டர், போலிகார்ப் முதலான தேவபக்தர்கள் இவ்வகை யாய் மரணமடைந்ததினாலே சபை குறைந்துபோகாமல் அபிவிர்த்தி யாகிக் கொண்டே வந்தது. கிறிஸ்துமார்க்கம் மற்ற தேசங்களில் பிரபலமானதுபோல பிரான்ஸ்தேசத்திலும் அது பிரசித்தமாயிற்று; அத்தேசத்துக்குப் பூர்வத்தில் காலியா என்று பெயர்; அதற்குத் தென் பாகத்தில் (Vienna) வியன்னை, (Lyons) லையன்ஸ் என்ற இரண்டு பட்டணங்கள் கிட்டக்கிட்ட இருக்கின. ஆசியாவிலிருந்து சில கிறிஸ்த

Church in Gaul.

வர்கள் அப்பட்டணங்களுக்குப் போய்க் கிறிஸ்துமார்க்கத்தைப் பிரசங்கித்துவந்தார்கள்; காலியாதேசத்திலிருந்து சில ஜனங்கள் போய்ச் சின்ன ஆசியாவில் ஓரிடத்தில் குடியேறி, அதற்குக் கலாத் தியா என்று பெயரிட்டார்கள்; இதுகாரணத்தைப்பற்றி அந்த இரண்டு தேசங்களுக்கும் சம்பந்தமிருந்தது; ஜனங்கள் இங்கும் அங்கும் போக்குவரத்தாயிருந்தார்கள்; கிறிஸ்துமார்க்கம் இவ்வண்ணமாய் காலியா தேசத்தில் பிரசித்தமாயிற்று; (Pothinus) பொதைனு என்பவர் லையன்ஸ்பட்டணத்தில் தூண்காணியாயிருந்தார்.

177-ம் வருஷத்தில் மாற்கு அரீலியு என்பவன் மற்றக் கிறிஸ் தவர்களைத் துன்பப்படுத்தினதுபோல, பிரான்ஸ்தேசத்துக் கிறிஸ்தவர்களையும் துன்பப்படுத்தத் தொடங்கினான்; அந்தத் துன்பம் வெகு அகோரமாயிருந்தது; அதைப்பற்றி ஐரினியு என்பவர் பிரியாவினுள்ள சபைக்கு எழுதின நிருபத்தில் அதன் கொடுமைகளை எடுத்துக் காட்டுகிறார்; அது முதல்முதல் ஜனங்களுடைய மூர்க்கத்தினாலே ஆரம்பமாயிற்று; கிறிஸ்தவர்கள் சந்தைகளுக்கும், தெருக்களுக்கும், ஸ்நானக் கட்ட டங்களுக்கும் கோயில்களுக்கும் போகப் பயப்பட்டார்கள்; சத்து ருக்கள் அவர்கள் வீடுகளில் பலவந்தகாரமாய் நுழைந்து அவர்களைக் கைகலிக்க ஆரம்பார்கள்; பஞ்சமபாதகங்களையெல்லாம் அவர்கள் மேல் பழியாய்ச் சுமத்தி, அவர்கள் ஆஸ்திகளைச் சர்வ கொள்ளையாடி னதுமன்றி, அவர்களைப் பிடித்திழுத்து, கல்லெறிந்து, அடித்து, மிதித்து, வாளால் அறுத்து இப்படிச் சித்திரவதை செய்தார்கள்; உலக ரக்ஷகர் சொன்னபடி, பிதா தன் பிள்ளையையும், பிள்ளை தன் பிதா வையும் சபாவ இரக்கமின்றி மரண ஆக்ஞைக்கு ஒப்புக்கொடுத்தார் கள்; சிலரைச் சவுக்காலடித்து, பித்தளைத் தகடுகளைக் காய்ச்சி அவர் களைச் சுட்டு, துவிடமிருகங்களுக்கு முன்விட்டு வேடிக்கை பார்த்து, இருப்புநாற்காலியைப் பழுக்கக் காய்ச்சி அதில் அவர்களை வைத்து, தோலையைப் புரட்டிவதுபோலப் புரட்டி இப்படிப் பலவகையிலும் அவர்களுக்குத் துன்பத்தை உண்பண்ணினார்கள்.

Persecution, A.D. 177.

இத்தனபகளையெல்லாம் கிறிஸ்தவர்கள் பொறுமையாய்ச் சகித் து, தங்கள் ஜீவனை மனோத்சாகமாய் விட்டு விட்டார்கள்; இப்படித் தங்கள் மார்க்கத்துக் காகப் பிராணனை விட்டவர்களில், லையன்ஸ் பட்டணத்துக் கண்காணியாயிய பொதைனு என்பவரும் ஒருவர்;

Martyrdom of Pothinus.

அவர் தொண்ணூறு வயதுள்ள விருத்தாப்பியராயிருந்தும், சத்துருக்கள் அவரைப் பிடித்துச் சிறைச்சாலையில் அடைத்து, அன்னம் ஆகாரம் ஒன்றும் கொடாமல் அவரைக் கஷ்டப்படுத்தி, நியாயாதிபதிக்கு முன் பாகக் கொண்டுவந்துவிட்டார்கள்; அவன் அவரைப் பார்த்து: 'கிறிஸ்து, தவர்களுடைய தேவன் ஆர்" என்று கேட்டபோது, அவர் அவன் சுதை அறிந்து: "நீ அதை அறிவதற்கு யோக்கியனென்றால் அறிந்து கொள்வாய்" என்றார்; உடனே சேவகர் அவரை இழுத்து, அடித்து, மிதித்து, இல்லாத இம்சையெல்லாஞ் செய்து காவலில் அடைத்தார் கள்; அவர் தன்பம் பொறுக்கமாட்டாமல் இரண்டுநாளைக்குள் இறந் துபோனார்.

இன்னொரு பாலியன் இருந்தான்; அவன் ஆசியாவில் பிறந்த வனும், பதினைந்து பிராயமுள்ளவனும் இருந்தான்; அவனுக்குப் பாண்டிக்கு என்று பெயர்; மற்றக் கிறிஸ்தவர்கள் படுகிற தன்பங் களைப் பார்த்து, பயந்து மார்க்கத்தை விட்டுவிடுவான் என்று சத்துருக்கள் நினைத்து, அவனை நாடோறும்கொண்டுபோய், அந்தத் துக்ககாட்சிகளைப் பார்க்கும்படி செய்வார்கள்; அவனை சற்றேனும் தன் தைரியத்தை விடாமல் முடிவுபரியந்தம் உறுதியாயிருந்ததினாலே, கடைசியில் அவனை வதைத்துக் கொன்றுபோட்டார்கள். இன்னொரு அடிமைப்பெண் இருந்தாள்; அவளுக்குப் பிலாண்டினுள் என்று பெயர்; அவள் தேக பலவீன முள்ளவளாயிருந்தமையால், வெகு லேசாய் மார்க்கத்தை மறுத்துவிடுவாள் என்று எல்லாரும் நினைத்திருந்தார்கள்; அவனைச் சத்துருக்கள் படுத்தினபாடு இம்மட்டென்று சொல்லக்கூடாது; அப்படியிருந்தும் அவள் எள்ளளவேனும் பயப்படவில்லை; அவனை அவர்கள் அடியோதண்டமாய் அடித்து வதைத்தபோது, "நான் கிறிஸ்தவள்; கிறிஸ்தவர்களாகிய நாங்கள் பழிபாவம் ஒன்றுக்கும் ஏற்படமாட்டோம்" என்றாள்; கடைசியில் அவனை ஒரு வலைக்குட் போட்டுக் கட்டி, காட்டுமாட்டுக்குமுன் விட்டார்கள்; அது அவனை முட்டிக் கொன்றுபோட்டது; கலியாணவீட்டுக்குப் போகிற வர்கள் ஆர்ந்த சந்தோஷத்தோடு போவதுபோல, அவள் அகமகிழ்ச்சியோடுமரணமாகியஆற்றைக்கடந்து, மோட்சவீடுபோய்ச் சேர்ந்தான்; இப்படிக் கிறிஸ்தவர்களில் பெரியோர், சிறியோர், ஸ்திரீ புருஷாளாகிய அநேகம்பேர் கிறிஸ்துராஜரூக்காகத் தங்கள் ஜீவனை மனமுற்சாகமாய் விட்டுப் போரின்பவாழ்வைப் பெற்றார்கள்.

Martyrdom of Pontius and Blandina.

மாற்கு அரீலியு இராயன் காலத்தில் இப்படிப்பட்ட கொடிய தன்பம் சபைக்கு உண்டாயிருந்தது; அவன் மரிக்கிறதற்குச் சற்றுமுன் அத்தன்பம் நின்று போனதாகத் தோன்றுகிறது; அது அப்படி நின்றுபோனதற்கு ஒரு காரணத்தையும் சொல்லுகிறார்கள். அவன் மார்கோமானி என்னும் ஒரு ஜாதியாரோடே யுத்தத்துக்குப் போன போது, அவனுடைய இராணுவத்தில் தண்ணீர் இல்லாமல் அநேகர் மடிந்துபோனார்களாம்; சத்துருக்கள் அவர்களை வெகு லேசாய் மடக்கிப் போடலாம் என்று அட்டகாசம்பண்ணிக்கொண்டு வரும்போது இராயனுடைய இராணுவத்தைச்சார்ந்த பன்னிரண்டாம் பட்டாளத் திலுள்ள சேவகர் பெரும்பாலும் கிறிஸ்தவர்களாயிருந்ததால் உடனே மூழங்கால்படியிட்டு, தேவன் அந்த ஆபத்தில் தங்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று மன்றாடினார்களாம்; உடனே மழை சோனை மாரியாய் வருவதிக்க எல்லாரும் தங்களுக்கிருந்த அகோர தாகத்தைத் தீர்த்துக்கொண்டார்களாம்; இப்படி மழை பெய்ததுமன்றி, காற்றும், மின்னலும், இடியும் பயங்கரமாயிருந்ததாம்; சத்துருக்கள் அதைக் கண்டு திடுக்கிட்டு ஓட்டம்பிடிக்க மாற்கு அரீலியு இராயன் வெற்றி விருதோடே தன் தேசத்துக்குத் திரும்பினானும்; அதுமுதல் அந்தப் பட்டாளத்துக்கு, "இடிமுழக்கப் பட்டாளம்" என்ற பெயர் வந்ததாகச் சொல்லுகிறார்கள். இது நிஜமென்று சொல்ல ஏதுவில்லை. அரிஸ்து இராயன்காலத்திலேயே இந்தப் பெயருடைய ஒரு பட்டாளம் இருந்ததினாலும், இரண்டாம் நூற்றாண்டில் இத்தனை ஆயிரம் கிறிஸ்தவர்கள் அடங்கிய பட்டாளம் இருப்பது அசாத்தியமானதினாலும் இது ஒரு கட்டுக்கதை என்றே தீர்மானிக்கவேண்டியிருக்கிறது.

The Thundering Legion.

மாற்கு அரீலியு என்பவன் மரித்தபின்பு, அவனுடைய குமாரனாகிய கம்மோடு என்பவன் 180–ம் வருஷத்தில் பட்டாபிஷேகம் பெற்றான்; அவன் அரசாட்சி செய்த பதின்மூன்று வருஷகாலமாய் திருச்சபை தன்பமில்லாமல் சமாதானமாயிருந்தது; கம்மோடு என்பவன் தன் தகப்பனைவிட யோக்கியன் என்றும், தர்ம இஷ்டன் என்றும் சொல்லக்கூடாது; அவன் சன்மார்க்க நெறிகெட்டுத் தன்மார்க்கனும் கடந்தவன்; அவனுக்கு மார்சியா என்ற ஒரு வைப்பாட்டி யிருந்தாள்; அவள் ஒரு இழிகுலத்தைச் சார்ந்தவள்; யாதுகாரணத்தினாலோ கிறிஸ்தவர்கள்பேரில் அபி

Commodus succeeds Aurelius, A.D. 180. Persecution ceases.

மானம் வைத்து, அவர்களைத் துன்பப்படுத்தக் கூடாதென்று இராயனுடைய தன் சோதரனுக்குப் போதனை செய்தாள்; அதனாலே சபைக்குத் தன்மமில்லாமலிருந்ததுமன்றி, அது எங்கும் பெருகிக் கொண்டும் வந்தது. ரோமாபுரியிலுள்ள சில பிரபுக்களும் அவர்கள் குடும்பங்களும் கிறிஸ்துமார்க்கத்தை அங்கீகரித்துக்கொண்டார்கள்.

His successors.

192—ம் வருஷத்தில் கம்மோடி என்பவன் கொலை செய்யப்பட்டான்; அவனுக்குப்பின் (Pertinax.) பெர்டினக் என்பவன் அவன் பட்டத்தைப் பெற்றான்; அவனும் அவனுக்குப்பின் இராயனான (Julianus) ஜூலியேனு என்பவனும் எதக்குறைய ஐந்துமாதத்திற்குள் இறந்து போனார்கள்; அவர்களுக்குப்பின் (Septimus Severus) செப்திமு செவீரு என்பவன் பட்டம் பெற்றான்.

Church in Britain.

இந்த நூற்றாண்டில் காலியாதேசத்தில் கிறிஸ்துமார்க்கத்தின் பேரொளி பிரகாசித்ததுபோல, அதற்கடுத்த இங்கிலாந்துதேசத்திலும், அதின் கதிர்கள் வீசும்படி தொடங்கின. அத்தேசம் பூர்வத்தில் மகா கிரமத்த ஸ்திதியிலிருந்தது; ஜனங்களெல்லாரும் அறிவீனம் அஞ்ஞானமாகிய சங்கிலிகளால் கட்டுண்டு கிடந்தார்கள்; விருகத்தின் தோலைத் தரித்து, கரியைப் பூசி, மூலபலாதிகளைப் புசித்துக்கொண்டிருந்த காட்டுச்சனங்களாய் இருந்தார்கள்; அவர்களுடைய ஆசாரியர்களுக்குத் (Druids) துருயிதர் என்று பெயர்; இத்தேசத்தில் பிராமணர் தாங்கள் தேவகுலம் என்று சொல்லி ஜனங்களை வஞ்சித்திருந்ததுபோல, அவர்கள் அந்த அறிவீனராகிய ஜனங்களை வஞ்சித்துவந்தார்கள்; அவர்கள் விக்கிரகபக்திக்காரரும், நரபலி செலுத்துகிறவர்களாயும் இருந்தார்கள். இப்போது அத்தேசம் எப்படியிருக்கிறது? இவ்வளவு மேன்மையும் மகிமையும் அதற்குக் கிறிஸ்துமார்க்கத்தினாலேதான் வந்தது; அங்கே அம்மார்க்கத்தை ஆதியில் யார் பிரசித்தஞ் செய்தார்களோ நிச்சயமாய்ச் சொல்லக்கூடாது. பவுல் அப்போஸ்தலன் அவ்விடத்துக்குப் போய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததாகப் பாரம்பரையாய்ச் சொல்லிக் கொள்ளுகிறார்கள்; இந்த நூற்றாண்டில் லூசியு என்ற ஒரு இராஜபிரபு ரோமாபுரிக்குப் பன்னிரண்டாம் கணக்காளியாயிருந்த எலியுதிரு என்பவனிடத்திற்கு ஆட்களை அனுப்பி, தன் தேசத்தில் கிறிஸ்தவர்க்கம் பிரபலமாவதற்கு ஏற்ற முயற்சிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டதாகத் திருச்சபை சரித்திரக்காரர் சொல்லுகிறார்

கள்; இதை நிச்சயமாய் வற்புறுத்திச் சொல்ல எதுவில்லாவிட்டாலும், பிரித்தானியாவில் இக்காலத்தில் கிறிஸ்துமதத்தின் சத்திய உபதேசங்கள் கூறப்பட்டுவந்ததென்று உத்தேசஞ் செய்யவேண்டியிருக்கிறது.

Church in India.

மற்றத் தேசங்களிலுள்ள சபைகளைப்பற்றிப் பேசிவரும்போது, கம்மூடைய இந்துதேசத்தைப்பற்றி ஒன்றும் சொல்லாமலிருக்கக்கூடாது. அலெக்சந்திரியாபட்டணத்தில் தெமேத்திரியு என்பவர் கண்காணியாயிருக்கும் போது, இத்தேசத்திலுள்ள ஜனங்களில் சிலர் அப்பட்டணத்துச் சபையாரிடத்தில் போய், தங்களுக்குக் கிறிஸ்துமார்க்கத்தை அறிவிக்கும்படி ஒரு போதகரை அனுப்பவேண்டும் என்று கேட்டார்களாகவும், அதன்பேரில் அவர்கள் அப்பட்டணத்திலுள்ள விஞ்ஞியாசாலைக்குத் தலைவராயிருந்த (Pantænus) பாண்டினு என்பவரை அனுப்பினார்களாகவும், அவர் இத்தேசத்துக்கு வந்து வெகுகாலமிருந்து, கிறிஸ்து மார்க்கத்தைப் பிரசங்கித்து, மறுபடியும் தமது ஜனனதேசத்துக்குத் திரும்பிப்போனதாகவும் சொல்லுகிறார்கள்; இதைப்பற்றிச் சில சந்தேகங்களுண்டு; ஆயினும் மகா அலெக்சந்தர் என்னும் சக்கரவர்த்தி இத்தேசத்துக்கு வந்து போனபின்பு, இத்தேசத்துக்கும் அலெக்சந்திரியாபட்டணத்துக்கும் வியாபாரவிஷயத்தில் சம்பந்தமிருந்தபடியினாலும், பாண்டினு என்பவர் இத்தேசத்துக்கு வந்து கிறிஸ்துமார்க்கத்தைக் கூறினபோது, சில பிராமணர்களும் அதை அனுசரித்துக் கொண்டார்கள் என்று சொல்லியிருப்பதினாலும், அவர் இங்கே வந்து கிறிஸ்துமதத்தைப் பிரசித்தம் பண்ணினது ஒருவாறு நிச்சயமென்று சொல்லலாம்.

Heretics.

இவ்விதமாய் திருச்சபையாகிய விருக்ஷம் கிளைக்கிவிட்டு செழித்தோங்கி வளர்ந்துகொண்டு வரும்போது, அதைக் கெடுக்கும்படிக்கான காரியங்களும் நடந்துகொண்டேவந்தது. குளோஸ்திருடைய மார்க்கத்தினாலே சபைக்கு மிருந்த கெடுதல் சேரிட்டதென்றும், அதனாலே கிறிஸ்துவின் தேவத்தன்மை மனுஷத்தன்மை அவராலுண்டான பாவநிவாரணம் முதலான கிறிஸ்துமார்க்கத்தின் மூலாதார உபதேசங்களுக்குப் பழுது சேரிட்டதென்றும் இதற்குமுன் எடுத்துக் காட்டினோம்; இந்த நூற்றாண்டிலுள்ள பாஷண்டர் எல்லாரும் மேற்சொன்ன குளோஸ்திருடைய கோட்பாடுகளையே மூலாதாரமாய் அனுசரித்தவர்களாயிருந்தார்கள்; சில விஷயங்களில் கொஞ்சம் பேதங்கள் இருந்தபோதிலும்

அவர்களெல்லாரும் எகேதசம் அந்தக் கொள்கைக்காரராகவே இருந்தார்கள். தியோடோற்று என்பவன் இரிஸ்துவின் தேவதன்மையை மறுக்கிறவனுமிருந்தான். பிரதிஷ்டிப்பு என்பதைச் தேவனுக்கும் இரிஸ்துவுக்கும் என்னுருக்குள் என்னெய்போல் ஒருங்கின சம்பந்தமிருந்தபடியால், இரிஸ்துநாதர் பாடுபட்டபோது தேவனும் பாடுபட்டார் என்று சொன்னான். தேவியன், மார்கியன், ஓரிகியன், பாசிலிதி, வாலன்றினு முதலானவர்கள் சகல விஷயங்களிலும் ஒன்றுபோல போதியாவிட்டாலும், எல்லாரும் குறைவற்றிருடைய விபரீதக் கொள்கைகளையே அங்கீகரித்தவர்களாயும், அவைகளையே எங்கும் ப்ரப்புகிறவர்களாயும் இருந்தார்கள்.

இவர்களுடைய கொள்கைகளினுலே சபைக்குக் கெடுதல் சேரிட்டதுபோல, மொந்தேனருடைய கோட்பாட்டினுலும் அதற்கு விக்கினமுண்டாயிற்று; அந்தச் சமயத்துக்குத் தலைவனுயிருந்த மொந்தேனு என்பவன் பின்ன ஆசியாவைச் சார்ந்த பிரியோகாட்டியுள்ள அர்தாபாளன்னும் ஊரில் தோன்றி, இயேக ரகுகர் திருவாக்கருளின "தேற்றுகிறவர்" நான்தான் என்றும், தேவன் என் நாவிலிருந்து பேகுகிறார் என்றும், நான் இனிவரும் காரியங்களை முன்னறிவிக்கத்தக்க கடாக்ஷம் பெற்றவன் என்றும் புளுகினதுமன்றி, மனுஷர் எல்லாரும் கடுந்தபம் புரியவேண்டுமென்றும், சரீரத்தை ஒடுக்கவேண்டுமென்றும், புனர்விவாகம் செய்யக்கூடாதென்றும், துன்பம் வரும்போது அதற்குப் பயந்து ஓடக்கூடாதென்றும், எஸ்பர்த்தா பட்டணத்தாருடைய (Draco) திரெக்கோ என்பவன் விதித்ததுபோல, அற்பக் குற்றங்களுக்கும் பெருந்தண்டனை அடையவேண்டுமென்றும் கூறினான்; இவனுடைய வஞ்சகவலைக்குள் அநேகர் சிக்கிக்கொண்டார்கள்; அவர்களில் பிரிஸ்கில்லாள், மக்சிமில்லான் என்று இரண்டு மோட்டுகள் தங்கள் புருஷனாயிட்டுப் பிரிந்து, அவனுடைய கட்சியைச் சேர்ந்துகொண்டார்கள்; இதினுலே இந்த நூற்றாண்டிலும், இதற்கடுத்த நூற்றாண்டுகளிலும் ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்காவிலுள்ள சபைகளுக்கு வெகு கெடுதி சேரிட்டது. மொந்தானுவின் கொள்கைக்காரர் இரிஸ்துமார்க்கத்தின் மூலாதார உபதேசங்களைப் புரட்டினதாகத் தோன்றுவிடினும், கபடுண்ணியத்தை முக்கியமாகச் சார்ந்து நடந்தார்கள் என்று சொல்லலாம்; ஆயினும் இந்த நூற்றாண்டில் பொதுவகைக் இரிஸ்தவர்கள் திரித்துவ உபதேசம், இரிஸ்துவின்

தேவத்தன்மை, மனுஷத்தன்மை, பாவப்பிராயச்சித்தம், பரிசுத்தாவியின் கிரியை முதலான இரிஸ்துமார்க்கத்தின் பிரதான உபதேசங்களைக் கூடியவரை யதார்த்தமாய்ப் போதித்துவந்தார்கள் என்று தோன்றுகிறது. பாலஸ்தாரத்தில் அமிழ்ந்தி உழல்கின்ற நாதமார்க்கர் எனையேறி இந்திய பேரின்பவாழ்வை அடைவதற்கு மேற்கொண்ட உபதேசங்களே அருந்தலைகள்; ஆகிலும் இந்த வேதசத்தியங்கள் காலுக்குநூள் பழுதுபட்டு மங்கி மறைத்துபோனதென்று இனிமேல் தெரியவரும்.

இந்த நூற்றாண்டில் இரிஸ்துமார்க்கம் அநேக தேசங்களில் பிரபலமாகி வந்தது; "இரேக்க நாதியார், மலேசிய நாதியார், காலிகளில் அலைந்து கூடாரங்களில் வசிக்கும் மூட நாதியார்முதலிய யாவருக்குள்ளும் சமஸ்த அண்டங்களையும் படைத்த சருவநாத் கடவுளுக்குச் சிலுவையில் அறையுண்ட இரிஸ்துநாதரின் மூலமாய், பிரார்த்தனைகளையும் ஸ்துதி தோத்திரங்களையும் செலுத்தாதவர்களில்லை" என்று ஜஸ்டின் மார்த்தர் எழுதியிருக்கிறார்; ஆசியாவிலுள்ள பலத்தினு, சின்ன ஆசியா, எகியன் கடலிலுள்ள அநேக தீவுகள், அரேபியா, பார்த, இந்தியா, பாக்திரியா, ஐப்பிரிக்காவிலுள்ள அலெக்சாந்திரியா, கார்தேஜ், ஐரோப்பாவிலுள்ள இத்தாலியா, ஸ்பானியா, பிரித்தானியா, திரேசியா, பெரியா, அல்மேனியா, தேசியா, சர்மேசியா முதலான நாடுகளங்களில் எல்லாம் இரிஸ்துமதம் பிரசித்தமாகி, தன் அபரத்தவத்தால் அஞ்ஞானமார்க்கத்தை அழித்துவருகையைப் பார்க்கும்போது, இந்த மார்க்கம் சாகாதக் கடவுள் அருளின சத்தியமார்க்கமே என்று சாதிக்கத் துணியலாம்.

Spread of Christianity.

QUESTIONS ON SECOND CENTURY.

இரண்டாம் நூற்றாண்டின் சரித்திரத்தின்பேரில் கேள்விகள்.

1. மூன்றும் அன்பன் யாருடைய காலத்தில் எத்தனையாம் வருஷத்தில் சுவிசேஷம் எழுதினார்?
2. மேலோன் என்பவர் யாரென்றும், அவர் எப்படி எத்தனையாம் வருஷத்தில் இரத்தசாக்ஷியாய் மரித்தாரென்றும் எழுதுக.

3. இக்னேஷியு என்பவனைப்பற்றித் தெரிந்ததை எழுதுக.
4. பிலினி என்பவன் யார்? அவன் தீராயன் இராயனுக்கு எழுதின கிறுபத்தி லும் அக்காலத்திலுண்டாயிருந்த கிறிஸ்துமார்க்கத்தின் பிரபலத்தை யும் அதை அநுசரித்தவர்களுடைய உத்தம நடக்கையையும் காட்டுக.
5. தீராயன் இராயன் அவனுக்கு எழுதின மறுமொழி என்ன?
6. மூன்றும் ஐம்பம் எந்த இராயன்காலத்திலும் நடந்ததுண்டா?
7. பார்க்கோபோ பூல்பவன் யார்? அவனுல் உண்டான கலகமென்ன?
8. எருசலேம்பட்டணத்து சபைக்கு புதுச்சேதத்தாரில் முதல் எண்ணாவி யார்?

மூன்றும் நூற்றுண்டு.

செப்டிமஸ் செவீரூசாயன்காலத்தில் உண்டான ஆறும் ஐம்பம். கேயஸ் பட்டணத்துக் கண்காணியாகிய பிரினியு, கிறிஸ்துவின் இருப்புமை, பிராயச்சித்தம், இரண்டாம்பற்றி அவர் கொண்ட மெய்க்கொள்கை. கார்தேஜ் பட்டணம், தெர்த்துல்லியன். அவர் எழுதின பாய இருந்த டாந்த நிருபம். இரத்தசாக்ஷிகளாகிய பெர்பெத்துவா, பிஸிற்றாள் என்பவர்கள். கரப்தல்முதலான தீராயர்கள். மக்ரீனு அவனுக்குப் பின்வந்த தீராயர்கள். தீரியுராயன் காலத்தில் உண்டான ஏழாம் ஐம்பம். சபையின் பரிசுத்தம் குறைதல். பவுல் என்பவன் சம்பியா மார்க்கத்தை ஏற்படுத்தின். ஒரிகேனிஸ்முதலான சம்பியர்கள். சம்பி யரைக் கோட்பாட்டின் தாரதாரணம். சபையின் தாழ்வான நிலைமை. ஒப்பிரியன் குணப்படுதல், வழிபடல், மரணம். டீனேஸ் என்பவர் செய்த தன்மன். குருப்பட்டம் பெறுதல், பிரசங்கம், வேதத்துக்கு ஏலுர்த் தம் கூறுதல், மரணம். வலேரியன் காலத்தில் உண்டான எட்டாம் ஐம்பம். உதலிக்குருவாகிய மாரல்லியு என்பவர் மரணம். டீனிஸ் என்பவன் இரத்தசாக்ஷியாய் மரிக்குதல். கொமேது, சோமையிலுள்ள பிரேத அறைகள். வலேரியன் காயுதையுடைய கொடிய மரணம். அவனுக்குப் பின்வந்த தீராயர்கள். கலியேனு. அரேலியன் தீராயருடைய டைய ஒன்பதாம் ஐம்பம். சபையின் சீர்கெட்டநிலைமை. கோவேதியர் கோட்பாடு. கொவெசியர் கோட்பாடு. மனிசேயர் கோட்பாடு. பவு லியர் கோட்பாடு. திரகிதாம்பற்று. அவர் செய்ததாகச் சொல்லிய அற்புதங்கள். அற்புதவரம். திரகி என்பவரின் பிரயாசம். மரணம். சபையின் சீர்கெட்ட நிலைமை. கலிசேதப் பிரபலம்.

சென்ற நூற்றுண்டின் துவக்கத்தில் தீராஜன் தீராயனுல் திருச் சபைக்குத் தீன்பம் உண்டாயிருந்ததுபோல, இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில் செப்டிமஸ் செவீரு என்பவனுல் தீன்பம் உண்டா யிற்று; முன்சொன்னபடி ஜூலியன் தீராயன் இறந்தபின்பு செவீரு என்பவன் தீராஜபட்டம் பெற்றான்; இவன் துவக்கத்தில் கிறிஸ்தவர்குள்மேல் அபிமானம் வைத்திருந்தபோதிலும், அவர்கள் காலுக்குநான் வெருவிவருவதைப் பார்த்து, மனம் பொறுக்க மாட்டாமல் அவர்களைத் தீன்பப்படுத்தும்படி எட்டோயிட்டான்; இதுவே ஆறும் தீன்பம்; இது 202-ம் வருஷமுதல், 211-ம் வரு ஷம் வரையும் வெகு அகோரமாய் நடந்துவந்தது. ஒருதேசம் இரண்டு தேசம் அல்ல, ரோமராஜ்யமெங்கும் அத்தீன்பமாகிய அக்கினி பற்றி யெரிந்தது; அது காலியாதேசத்திலும் மெத்தக் கடுமையாய் நடந்துவந்தது; அதில் அநேகம் பக்தர்கள் இரத்தசாக்ஷிகளாய் மரித் தார்கள்; அவர்களில் லையன்ஸ்பட்டணத்துக் கண்காணியாகிய ஐரி னியு என்பவர் விசேஷித்தவரா யிருந்தார்.

Sixth Persecution under Septimus Severus, A.D. 202—211.

அவர் ஸிமிர்னுபட்டணத்திலோ அதற்கடுத்த ஊரிலோ பிறந்த வர்; அவர் ஜிரேக்ஞாதியைச் சேர்ந்தவராயும், ஹைராப்பொலிபட்டணத்துக் கண்காணியா கிய (Papias) பேப்பையு என்பவருக்கும், ஸிமிர்ஞபட்டணத்துக் கண்காணியாகிய போலிகார்ப் என்பவருக்கும் சீஷனுயும் இருந்தவர்; அவர் தமது ஞானகுரு போலிகார்ப் என்ப வருடைய குணசீலங்களுடையவராய் விளங்கினுர். 169-ம் வருஷத் தில் லையன்ஸ்பட்டணத்துச் சபைக்கு முதற்கண்காணியாகிய பொ தைனு என்பவர் மரித்தபின் ஐரினியு என்பவர் அவர் பட்டத்தைப் பெற்றார்; அவர் ஜிரேக்க சாஸ்திரங்களில் நன்றுய்த் தேர்ந்த கல்விமா னுயிருந்தும், தேவஊழியத்தைப் பெற்றமாத்திரத்தில் காலியாதேசத்தி லுள்ள மூடஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று கருதி, முன் படித்த கல்விகளையும் ஞானிசங்களையும் ஒருபொருட்டாய் எண்ணு மல், அவர்களுடைய பாஷையையும் தேசாசாரங்களையும்முயற்சியு டன் கற்றுக்கொண்டு, மற்றவர்களுக்குப் போதித்தவண்ணம் அவரும் வெகு தாழ்மையோடும் பக்திமோடும் நடந்துவந்தார்; அவர் காலத்தில் பாஷண்டார்கள் சபைக்கு அதிகக் கெடுதி சேரிட்டமையால், அவர்க

Irenæus, Bishop of Lyons, A.D. 169.

ளுக்கு வீரோதமாய்க் கிரேக்கபாஷையில் ஐந்து பிரபந்தங்களே எழுதினார்; அவைகளில் ஒன்றில் அவர்களுடைய தப்பான கொள்கைகளையும், மற்ற நான்கில் அதற்கு நியாயங்களையும் சமாதானங்களையும் எடுத்துரைக்கிறார்; இப்படி அவர் அவர்களுடைய சமயப்புரட்டல்களைக் கண்டித்தெழுதிய இப்புஸ்தகங்களில் இப்போது அநேகம் பழுதாய்ப்போயிருந்தபோதிலும், மீதியாயிருக்கிறவைகளில் கிறிஸ்துமார்க்கத்தின் சிறந்த உபதேசங்களில் சில அடங்கியிருக்கின்றன.

His views on Christ's two Natures.

கிறிஸ்துநாதருடைய இருதன்மைகளைப்பற்றிப் பேசுவதில்: "அவரது தெய்வீகத்தோடு மனுஷீகத்தையும் சேர்த்துக்கொண்டார்; கடவுளுடைய அமைப்பின்படி மானிட ஜாதியாருக்கு மகா வீரோதியாயிருந்த துஷ்டப்பிசாசை அந்த ஜாதியைச் சேர்ந்த ஓர் புண்ணிய புருஷரே சங்காரஞ் செய்யவும், இஷ்டனைப் பரிபாலனம்பண்ணவும் வேண்டியிருந்தது; இல்லையென்றால் நரதேகிகள் கரையேற இடமிருக்கமாட்டாது; ஆகையால் தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தராய் எற்பட்ட கிறிஸ்து இயேசுசுவாமி அந்த இருபட்சத்தாரையும் சமாதானப்படித்துவதில் அவருக்கு அவ்விருதன்மைகளும் இருக்கவேண்டியது இன்றியமையாகாரியம்" என்று எழுதியிருக்கிறார்.

His views of the Atonement.

பாவநிவாரணத்தைப்பற்றி, "சாகூஷாத் கடவுளே தமது திரு உதிரப்புண்ணியத்தால் பிசாசினுடைய அருஞ் சிறையிலிருந்த கும்மை மீட்டு, மன்னுயிர்க்காகத் தம்முயிரை விட்டு கும்மை இரட்சித்திருக்கிறார்; தேவசார்த்தை என்று சொல்லப்பட்ட இயேசுகிறிஸ்துநாதர் தமது அளவற்ற அருளால் கும்மைத் தம்மைப்போலாக்கும்பொருட்டு, அவர் கும்மைப்போலானார்" என்று சொல்லுகிறார்; இவர் 202 அல்லது 203-ம் வருஷத்தில் இரத்தசாக்ஷியாக மரித்தார் என்று தோன்றுகிறது.

Carthage.

செவீரு ஆபிரிக்காகண்டத்திலுள்ள சபைகளுக்கும் விசேஷித்த கண்டத்தின் வடகில் ரோமாபுரிக்கு எதிர்முகமாய்க் கார்தேஜ் என்று ஒரு பெரிய பட்டணமுண்டு; அவ்விரு பட்டணங்களைப்பற்றி உலக இதிகாசங்களில் பிரபலமாய்ச் சொல்லியிருப்பதுபோல், திருச்சபை சரித்திரத்திலும் அப்படியே விசேஷித்துக் காட்டியிருக்கிறது; பெனிஷியாதேசத்து ஜனங்கள்

கார்தேஜ் பட்டணத்திற்கு வந்து குடியேறினார்கள்; இப்பட்டணத்தில் கிறிஸ்துமார்க்கம் ஆதியில் எப்படிப் பிரசித்தமாயிற்றோ நமக்குத் தெரியமாட்டாது; ஆயினும் இரண்டாம் நூற்றாண்டில் அவ்விடத்தில் ஒரு சபையிருந்ததென்றும், அதில் அநேகம் கிறிஸ்தவர்கள் இருந்தார்களென்றும் பிரத்தியட்சமாய் விளங்குகிறது.

Tertullian, first Latin writer of the Church, A.D. 160.

அவர்களில் தெர்த்தல்லியன் என்பவர் ஒருவர்; இவர் 160-ம் வருஷத்தில் கார்தேஜ்பட்டணத்தில் பிறந்தவராயும், நீதிநூலைப் படித்து வக்கீன்பாஷையில் மிகத் தேர்ந்தவராயும் இருந்தார்; இவர் நடுப்பிராயத்தில் ஆத்தும விசாரங்கொண்டு, கிறிஸ்துமதமே அதன் நாடேற்றத்துக்கு உபாயத்தைக்காட்டும் உத்தம வழியென்று தேளிந்து, அதை அனுசரித்துக்கொண்டார்; இப்படி அவர் அங்கிகரித்த சத்தியமார்க்கத்துக்கு அனுகூலமாகவும், அஞ்ஞானமார்க்கத்துக்கு பிரதிகூலமாகவும், வக்கீன்பாஷையில் சில நூற்களைச் செய்திருக்கிறார்; அப்பாஷையில் அலங்காரகடையாய் எழுதின தூலாசிரியரில் இவர் முந்தினவர்; இவர் தேவபக்தியுள்ளவரென்றாலும், கடுத்தபஞ் செய்கிறவராயும், நியமநிஷ்டைகளில் வைராக்கியமுள்ளவராயும் இருந்தார்; இவர் முதிர்வயதில் மொந்தேனருடைய சமயத்தை அனுசரித்தாரென்றும், பின்பு அதை விட்டுவிட்டு அவரே ஒரு சமயத்தை உண்டாக்கினாரென்றும் சொல்லுகிறார்கள்.

His Apology.

இவர் கிறிஸ்துமார்க்கத்துக்குச் சார்பாயும் மிகச் சிறப்பாயும் ஒரு நியாயதிருஷ்டாந்த நிருபமெழுதி, செவீரு இராயனுக்கு அனுப்பினார்; அதில் அவர் படிப்புத்திறமையும் புத்திக்கூர்மையும் கன்றாய் விளங்குகிறது. "மனிதர் தங்களுக்குத் தெரியாத காரியத்தை வெறுக்கிறது எவ்வளவு பெரிய அநியாயம்; நாங்கள் நீமைக்குத் நீமை செய்யக்கூடுமானால் எங்களுக்கிருக்கிற அவஸ்தைகளைப் பார்த்துச் சும்மாயிருக்கமாட்டோம்; ஆயினும் தேவனுடைய அடியாருக்குப் பழிவாங்குகிற குணமே யிருக்கமாட்டாது; அவர்கள் உண்மை விளக்கத்தக்கதாக என்ன அவஸ்தைப் படவேண்டியிருந்தாலும் அதற்கு அஞ்சமாட்டார்கள்; காடுகர் மலர் தேசமெங்கும் கிறிஸ்தவர்கள் பெருகிப்போனார்கள் என்றும், பெரியோர் சிறியோர், ஸ்திரீபுருஷர்கள் யாவரும் கிறிஸ்துமார்க்கத்தை அனுசரிக்கிறார்களென்றும் ஜனங்கள் முறையிடுகிறார்கள்; ஆயினும் அதைப்பற்றி அவர்கள் சற்றேனும் யோசிக்கிறதில்லை;

இவ்வளவு ஜனங்கள் அந்த மார்க்கத்தில் சேர்வதற்கு அதில் ஒரு மகிமை இருக்கவேண்டுமே என்று நினைக்கிறதில்லை; மற்ற விஷயங்களிலெல்லாம் அவர்களுக்கு அதிக யுக்தியுண்டு; இந்த விஷயத்தில் மாத்திரம் ஒரு யோசனையும் இல்லை; அநேக ஜனங்கள் அந்த மார்க்கத்தை அனுசரிக்கும் காரணத்தால் அது நல்ல மார்க்கமென்று தீர்த்துப்போடக்கூடாதென்று ஒரு ஆட்சேபனை பிறக்கும்; அது யதார்த்தமே; பொய்மார்க்கத்தை அநேகர் அங்கீகரித்திருக்கிறார்கள்; ஆயினும் பொய்மதத்தை அனுசரித்தவர்கள் தாங்கள் நிர் அபராதிகள் என்று உபசப்பிரதித்தமாய்ச் சொல்வார்களா? குற்றஞ்செய்தவர்களுக்கு வெட்கமும் நிகிலுமுண்டாகும்; அவர்கள் ஒளித்துக்கொள்வார்களேயன்றி வெளிக்கு வரமாட்டார்கள்; கள்ளருக்கு இருட்டித்தான் பிரீது; அவர்கள் பிடிபட்டால் அவர்களுக்குக் கலக்கமும் கஷ்கமுமுண்டாகும்; அவர்கள் குற்றம் ருசுவாகுல் தங்கள் விதியை கொந்துகொள்வார்கள்; நிறுத்தவர்கள் காரியம் அப்படியல்லவே? அவர்களுக்குக் கலக்கமும் துக்கமும் நிகிலமுண்டா? நியாயவிசாரணைக்குப் போகும்போது அகமகிழ்ச்சியோடே போகிறார்கள்; தங்கள் மதவிஷயங்களைப்பற்றி நீதிதுரைகள் விஸ்தரிக்கும்போது ஒரு அச்சமுமின்றி உத்தரவு சொல்லுகிறார்கள்; அவர்களுக்கு ஆக்கினை விதிக்கும் துரைகளே வாழ்த்துகிறார்கள்; தங்கள் ஜீவனை உற்சாகமாய் விட்டுவிடுகிறார்கள்; இது எப்படிப்பட்ட அதிசயம்! நீங்களே சிந்தித்துப் பாருங்கள்" என்று எழுதியிருக்கிறார்.

Perpetua and Felicitas Martyrs.

இப்படிப்பட்ட நியாயதிருஷ்டாந்த திருபத்தை செவேரு இராயன் பார்த்தும் அவன் மனம் சற்றேனும் இளகாமல் முன்போலவே நிறுத்தவர்களைக் கொடுமையாய் தண்டிப்பதித்திவந்தான்; இத்தண்டனத்தில் கார்தேஜ்பட்டணத்தில் மரித்தவர்களில் பெர்பெத்துவான், பிலிசித்தான் என்ற இரண்டு பக்தியுள்ள ஸ்நிரீகள் சிரேஷ்டமானவர்கள்; பெர்பெத்துவான் ஒரு உயர்குலத்தைச் சேர்ந்தவளாயும், இருபத்திரண்டு வயதுள்ள பாலிய ஸ்திரீயாயும் இருந்தாள்; அவளுக்கு அப்போதுதான் விவாகமாகி ஒரு குழந்தை பிறந்திருந்தது; அவள் தகப்பன் அஞ்ஞானமார்க்கத்தைச் சார்ந்தவனாயிருந்தபடியால், மகள் அடைபட்டிருந்த காவற்கூடத்தற்கு அடிக்கடி போய், அவள் கிறிஸ்துமார்க்கத்தை விட்டுவிடும்படி சொல்லுவான்; ஒருநாள் அவன் தன் தகப்பனைப் பார்த்து; என் அருமைப் பிதாவே! இங்கே ஒரு தண்

ணீர்க்குடம் இருக்கிறது; இதற்குக் குடம் என்று சொல்லுகிறதோ வேறு பெயர் சொல்லுகிறதோ? என்றான்: அதற்கு அவன் குடம் என்றுதான் சொல்லுகிறது என, அவள் நானும் அப்படியே நிஜத்தைச் சொல்லவேண்டும்; நான் கிறிஸ்தவளாயிருக்கும்போது அஞ்ஞானி யென்று சொல்வது எப்படி என்றாள்? அதை அவன் கேட்டு மூர்க்கமெறிகொண்டு, உன்னைக் கண்டம் வேறு முண்டம் வேறு ஆக்கிப் போடுவேன் என்று சொல்லிப் புலிபோல் அவள்மேல் பாய்ந்தான்; ஆயினும் அவன் நின்ற நிலையையும் அவள் பொறுமையையும் பார்த்து, அப்படிச் செய்ய மனந்துணியாமல் அமைதலாய்ப் போய்விட்டான். அவளுக்கு இப்படி ஒரு தன்பமல்ல, சமுத்திரத்தில் அலைமேல் அலை வருமாப்போல அவளுக்குத் தன்பத்தின்மேல் தன்பம் வந்து கொண்டே யிருந்தது; அவளுடைய குழந்தையை அவளை விட்டுப் பிரித்துப்போட்டார்கள்; அது பால்குடிக்கும் பாலகன்; தாயினுடைய எக்கம் பிடித்துக்கொண்டு அழுதவண்ணமாய் இருந்தது; தாயும் புத்திரசோகம் பொறுக்கமாட்டாமல் துக்கசாகரத்தில் அமிழ்ந்தியிருந்தாள்; அதைச் சில கிறிஸ்தவர்கள் பார்த்து மனமிரங்கி, சேவகருக்குப் பணங்கொடுத்து, அந்தப் பிள்ளையைத் தாயிடம் விடும்படி செய்தனர்; அப்போது அவளுக்கு இருந்த ஆனந்த சந்தோஷம் இவ்வளவென்று சொல்லக்கூடாது; அவளையும் அவளோடிருந்த மற்றக் கிறிஸ்தவர்களையும் விசாரணை செய்யும்படி ஒருநாள் குறிக்கப்பட்டது; அதற்குமுன் அவளுடைய தகப்பன் அவளிடத்திற்குப் போய், அவள் காலைப் பிடித்துக்கொண்டு சொல்லுகிறான்: "என் கண்ணே! என் பெண்ணே! என் அரசே! என் முகம்பார்த்து இரங்கமாட்டாயா? நான் உன்னைப் பெற்று பொன்னெழுத்திட்டு தூவொருதட்டாய் வளர்த்தேனே; நான் இப்போது நரைத்த விழவுறப் போய்விட்டேனே; இன்னும் கொஞ்சநாளில் என் பிராணன் அடங்கிப்போம்; உன்னுடைய சிறியதாயையும் உன் உடன்பிறந்தார் சுற்றத்தாரையும் நினைத்துக்கொள். என் தாயே! நீ இப்படிக் கிறிஸ்தவளாயிருந்து இறந்துபோனால் நம்முடைய குலத்துக்கெல்லாம் நாணமாக்குதே; வேண்டாம் அம்மா! இச்சப் புத்தியை விட்டுவிடு" என்று தாரைதாரையாய் அழுதுகொண்டு வெகு உருக்கமாய்ச் சொன்னான்; அவள் அதையெல்லாம் கேட்டு மிகவும் விசைமுற்றபோதிலும் அவள் உறுதி சற்றேனும் மாறுமல், "கடவுளுடைய திருச்சித்தத்தின்படி ஆகட்டும்; நான் அவருடைய அடியாள்; என் செயலால் ஒன்றும்

கடக்கிறதில்லே" என்றாள்; பிற்பாடு ஹிலெரியன் என்னும் நீதிதுரைக்கு முன்பாக அவளைக் கொண்டுபோய் விட்டார்கள்; அப்போது அவள் தகப்பன் அவளுடைய பின்னையை தூக்கிக் காட்டி, இந்தப் பின்னே முகத்தைப் பார்த்தாவது இரங்கு என்றான்; அந்த நீதிவிசாரணைத்துரையும் அப்படியே சொன்னான்; அதற்கு அவள்: "நான் கிறிஸ்தவள், மெய்த்தேவனே வழிபடுகிறவள்" என்று உறுதியாய்ச் சொன்னாள்; அதைத் தகப்பன் கேட்டு ஓவென்று அலறினான்; நியாயாதிபதி அதற்கு அவளே அடியோடண்டமாய் அடிக்கச் சொன்னான்; அவன் படுகிற அடியைப் பார்த்தாவது அவன் மனம் இளகாதா? பார்ப்போம் என்று அப்படிப்பட்ட உத்தரவு கொடுத்தான்; தகப்பன் படுகிற அடி தனக்கு வந்ததுபோலிருந்தாலும், அவள் அதனுலே தன் தைரியத்தை விடாமல் தன்னைக் கிறிஸ்தவள் என்றே அந்தப் பெரிய சபையில் சொன்னாள்; அப்போது அந்தத் துரை அவளையும் அவளைச் சேர்ந்த கிறிஸ்தவர்களையும் துஷ்டமிருகங்களுக்குமுன் போட்டுக் கொல்லும்படி தீர்ப்புப்பண்ணினான்; தகப்பன் அதைக் கேட்டு புத்தி கலங்கி, மெய்மறந்தவனாய் மயிரைப் பிய்க்கிறதும், மார் பிலடிக்கிறதுமாய் இருந்தான்; அவள் ஒன்றுக்கும் அசையவில்லே.

இந்தத் தீர்ப்புப் பிறந்து கொஞ்சநாள்வரைக்கும் அவளையும் ரிவோத்தேத்து, லாற்றர்னனு, லைக்கந்துலு என்னும் மற்றக் கிறிஸ்தவர்களையும் சிறைச்சாலேயில் அடைத்தவைத்திருந்தார்கள்; அவர்கள் பொறுமையையும் சாந்தத்தையும் பார்த்தவர்களில் சிலருக்குள் ஞான உணர்ச்சிகளுண்டாயின; சிறைச்சாலேக்காரனும் இன்னும் சிலரும் கிறிஸ்தவர்களானார்கள்; கடைசியில் அவளையும் மற்றக் கிறிஸ்தவர்களையும் வேடிக்கை ஸ்தலத்துக்குக் கொண்டுபோனார்கள்; புருஷனைச் சாகுமுன் வீட்டிக் கொன்றார்கள்; பெர்பெத்துவாள், பிலிசித்தாஸ் முதலான ஸ்திரீகளே லேகனில் போட்டுக் கட்டி, காட்டு மாட்டுக்குமுன் போட்டார்கள்; அது அவர்களே முட்டி இடுமடங்கும் உருட்டி வதைத்தது; ஜனங்கள் அதை வெகுநேரம் வேடிக்கை பார்த்து சபிற்பாடு அவர்களைக் குத்திக் கொல்லவேண்டும் என்று சொன்னார்கள்; பெர்பெத்துவாள் முகமலர்ச்சியோடும் அகமகிழ்ச்சியோடும் பிலிசித்தாஸுக்கு ஆதலான வார்த்தைகள் சொல்லி ஆகத்தோடு இறந்து பேரின்பலோகம் சேர்ந்தாள்.

Their martyrdom.

இப்படிச் செவீரு இராயன்காலத்தில் திருச்சபைக்குக் கொடிய துன்பம் உண்டாயிருந்தது; அவன் பதினெட்டுவருஷம் அரசாண்டு மரித்தபிற்பாடு, 211-ம் வருஷத்தில் அவன் பட்டணத்தை அவன் புத்திரனுயிய காக்கலா என்பவன் பெற்றான்; இவன் பிரபல துஷ்டனுயிருந்தபோதிலும் யாதுகாரணத்தினுலோ அவன் பாலியனுயிருக்கும்போது கிறிஸ்தவர்கள்பேரில் வைத்த அபிமானத்தினுலே தான் இராஜபட்டம் பெற்றமாத்திரத்தில் அவர்களுக்குண்டாயிருந்த கஷ்டத்தை நிவர்த்திசெய்தான்; அவன் ஆறுவருஷம் அரசாண்டபின்பு (Macrinus) மாக்கினு என்ற ஒரு துஷ்டனுல் கொலே செய்யப்பட்டான்; அவன் பட்டத்தை இவன் கட்டி நெடுநாள் ஆளவில்லே; பதினுலுமாதம் ஆண்டபின்: "தன்னினே தன்னைச் சுடும்" என்பதுபோல் அவன் (Elagabalus) ஹீலியோகேபுலு என்பவனுல் மரணமடைந்தான்; 218-ம் வருஷத்தில் ஹீலியோகேபுலு என்பவன் இராயனுனான்; இவன் தன்மார்க்கனுயிருந்தபோதிலும் கிறிஸ்தவர்களுக்கு விரோதியாய் எழும்பவில்லே; அவன் மூன்றுவருஷமும் ஒன்பதுமாதமும் ஆளுகைசெய்து 222-ம் வருஷத்தில் தன் சகோதரன் மகனுகிய (Alexander Severus) அலெக்சந்தர் செவீரு என்பவனுல் கொலேசெய்யப்பட்டான்; இவன் பதின்மூன்றுவருஷம் அரசாண்டான்; இவனுடையகாலத்தில் சபைக்கு சுகமுண்டாயிருந்தது; இவனுடைய தாயாகிய ஜூலியாமம்மியாள் என்பவள் கிறிஸ்தவர்களிடத்தில் வெகு பட்சமாயிருந்தாள்; இவளும் அவர்களுக்குச் சார்பாயிருந்தாள்; "மற்றவர்கள் உனக்குச் செய்ய நீ விரும்புகிறபடி நீ அவர்களுக்குச் செய்" என்ற மகா வாக்கியத்தை அவன் எப்போதும் சொன்னதுமன்றி, அதைத் தன் அரமனேயிலும் அதிகாரிகள் வீடுகள் யாவிலும் எழுதிவைக்கும்படியாயும் கட்டளேயிட்டான்.

Caracalla, A.D. 211, and his successors.

இப்படிப்பட்ட உத்தமபுருஷனும், அவன் தாயும் ஒரு இடையன் மகனுகிய மக்கிமினு என்பவனுல் வன் கொலே யடைந்தார்கள்; இவன் ஒரு கொடுங்கோல் மன்னன்; குடிகள்பட்சத்தில் சற்றேனும் தயை தாட்சண்யமில்லாமல் அவர்களே வெகுவாய் ஒடுக்கிவந்தான்; அதனுல் கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமல்ல மற்ற ஜனங்களுக்கு மிகுந்த கஷ்டம் நேரிட்டது; அலெக்சந்தர் கிறிஸ்தவர்களுக்குச் சகாயஞ்செய்ததற்காக மக்கிமு என்பவன் அவன் குடும்பத்தாரை வெகுவாய்க் குரூரப்படுத்

Maximinus, A.D. 235.

தினதுமன்றி, கிறிஸ்தவர்களையும் சபைப் போதகர்களையும் கொலை செய்யும்படியாயும் கற்பித்தான்; கப்பதோக்கியா, பொந்து என்னும் தேசங்களில் வதித்துவந்த கிறிஸ்தவர்களுக்கு இந்தப் பாதகனால் அதிகத் துன்பமுண்டாயிற்று.

His Successors. Seventh Persecution under Decius, A.D. 249. Purity of the Church declined.

இவன் 238–ம் ஆண்டில் மரித்துப்போனான்; அதற்குப்பின் (Pupienus) புபையினு, (Balbinus) பல்பையனு, (Gordianus) கார்டியேனு, (Philip) பிலிப்பு என்பவர்கள் முறையே அரசாண்டார்கள்; இவர்கள் காலத்தில் சபை சமாதானம்பெற்றிருந்தது; பிலிப்பு என்பவன் கிறிஸ்துமார்க்கத்தை அனுசரித்தவன் என்று சிலர் சொல்லுகிறார்கள், அவன் மரித்தபின் தேசியு என்பவன் 249–ம் வருஷத்தில் இராஜபட்டம் பெற்றான்; இவனால் திருச்சபைக்கு ஏழாம் துன்பம் சேரிட்டது; இது முன்னுள்ள துன்பங்களிலெல்லாம் மகா கொடிதாயிருந்தது; மக்கிமு இராயன் ஆண்டகாலத்தில் இரண்டு மூன்றுவருஷமாய் சபைக்குண்டாயிருந்த சொற்பத் துன்பமேயொழிய மற்றப்படி செப்திமஸ் செவீரு மரித்தகாலமுதல் தேசியு இராயனுடைய காலபரியந்தம் மூப்பத்தெட்டு வருஷமாய் அதற்குத் துன்பமே இல்லையென்று சொல்லலாம். காரியம் இப்படியிருந்தே திருச்சபை மிகவும் சீர்கெட்ட ஸ்திதியிலிருந்ததற்குக் காரணமாயிற்று; கிறிஸ்தவர்களில் அநேகர் தேவபக்தியும் பரிசுத்த நடக்கையுமுள்ளவர்களாய் விளங்காமல் இப்பிரபஞ்ச மாயகையில் அசப்பட்டு கிறிஸ்துமார்க்கத்துக்கு அடாதவிதமாய் நடந்துவந்தார்கள். திருச்சபைக்கும் உலகத்துக்கும் எப்போதும் ஒரு விதியாசம் இருக்கவேண்டும்; அதில்லாமல் கிறிஸ்தவர்கள் உலகத்தைச் சார்ந்து அதன் கட்டுப்பாடுகளுக்கும் ஆசாரங்களுக்கும் அமைந்து நடப்பார்களாகில், சபையில் பக்தியும் பரிசுத்தமும் குறைந்துபோகும் என்பதற்குச் சந்தேகம் இல்லை. தேசியு இராயன் காலத்திலும் மேற்படி சபையின் நிலைமை இத்தன்மையுள்ளதாகவே யிருந்தது. கிறிஸ்துநாதருடைய திருவுளத்தையைச் சொல்லும்படி ஏற்பட்டிருந்த போதகன்மார்கூட நீதிநெறியை விட்டு கிறிஸ்து சமயத்துக்கும் சன்மார்க்கத்துக்கும் அடாதவிதமாய் நடந்துவந்தார்கள்; தேவனுடைய திருநாமம் மகிமைப்பட வேண்டுமென்றும், மானிடஜாதியார் இரட்சிக்கப்படவேண்டுமென்றும் சற்றேனும் கவலைகொள்ளாமல் தங்களுடைய சுயமேன்மையை நாடி நடந்தவர்களாயிருந்தார்கள்; இப்படிக் கிறிஸ்தவர்களாலே தேவ

நாமத்துக்குக் கனவீனமும், அவரது பரிசுத்த மார்க்கத்துக்குக் குறைவும் உண்டானபடியினாலே, திருச்சபையின் நாயகர் சபையில் ஒரு கொடிய துன்பத்தை விட்டு அதைச் சுத்திகரிக்கும்படி திருவுளச் சித்தமானார். பின்னல் இடியினால் ஆகாயம் சுத்தமாகுமல்லவோ? ரோமராஜ்யமெங்கும் இருபதுமாதகாலமாய் உண்டாயிருந்த இந்தப் பலத்த துன்பத்தினாலே சபை பரிசுத்தமாயிற்று; துன்பகாலம் ஒரு வாறு நியாயத்தீர்ப்புகாலம்போல் விருக்கிறது என்று சொல்லலாம்; அந்த நாள் மணியையும் பதனையும் பிரிக்குமாப்போல் உபத்திரவம் மனிக்கொப்பான மெய்க்கிறிஸ்தவர்கள் யாரென்றும் பதருக்கொப்பான பெயர்க்கிறிஸ்தவர்கள் யாரென்றும் பிரித்துக் காட்டுகிறது. தேசியு இராயன்காலத்திலுண்டான துன்பத்தில் பெயர்க்கிறிஸ்தவர்களாயிருந்த அநேகர் சத்தியதரோகம் செய்யும்படி ஏற்பட்டு விக்கிரகங்களுக்குப் பலியிட்டனர்; இப்படிப்பட்டவர்களுக்கு (Sacrificati) பலிகாரர் என்று பெயருண்டாயிற்று. சிலர் தூப்பு வைத்தே நியங்களைச் செய்தார்கள்; அவர்களுக்கு (Thurificati) தூபிகள் என்று பெயர். சிலர் அதிகாரிகளுக்குப் பரிதானங்கொடுத்துத் தாங்கள் விக்கிரகத் தொழும்பர்போல் மாறுபாடான சீட்டுப் பெற்றார்கள்; அவர்களுக்கு (Libellatici) சீட்டுக்காரர் என்று பெயர்; இவ்விதமாய் அநேகர் சத்தியநெறியை விட்டு வழுவிப்போயினர்.

சிலர் துன்பத்துக்குத் தப்பும்பொருட்டு சந்நியாசக்கோலம் எடுத்தார்கள்; எகிப்துதேசத்திலுள்ள நீப்ஸ்பட்டணத்தானாகிய பவுல் என்பவன் இப்படி முதல்முதல் சந்நியாசியானான்; அவன் ஒரு மேற்குலத்தைச் சேர்ந்தவன்; அவன் தகப்பன் மரிக்கும்போது அவனுக்குத் திரண்ட ஆஸ்தியிருந்தது; அந்த ஆஸ்தியை அவன் மைத்துனன் அபகரிக்கும்படி பிரயத்தனஞ் செய்தபடியினாலும், அக்காலத்தில் திருச்சபைக்கு அகோரமான துன்பம் உண்டாயிருந்தபடியினாலும், அவன் உலகத்தை விட்டு ஒண்டியாய் வனசஞ்சாரஞ் செய்ய வேண்டும் என்று எற்பட்டான். அப்படி அவன் சந்நியாசவேஷம் பூண்டகாலத்தில் அவனுக்கு இருபத்தைந்து பிராயம்; இப்படி இளம்பிராயத்தில் இல்லறத்தை விட்டுத் தூரவனம் புகுந்து வனவாசியாய் 90 வருஷம் தபசுபுரிந்தான்; அவன் உயிர்த்தப்பும்படி இந்த உபாயம் செய்தது சரியல்ல என்று சொல்லுகிறதில்லை; ஆயினும் உபத்திரவம் ஒழிந்த பிற்பாடாவது அவன் வனசஞ்சாரியாயிருந்த

Paul of Egypt becomes a Monk.

தைவிட்டுத் தன் இல்லிடத்துக்கு வந்து தேவன் தனக்குக் குறித்த கடமைகளைக் கவலையாய் நடத்தவேண்டியிருந்தது; அவன் அப்படிச் செய்யாமலிருந்தது பெரிய குற்றம். நேர்நெறியை விட்டு நடப்பதே மானிட இயல்பு. ஒருவேளை இந்தப் பவுல் உலகத்தை வெறுத்து, இல்லறத்தை முற்றிலும் துறந்து, மலைக்குகையில் சஞ்சரித்து, கந்தமூல பலர்தினைத் தின்று, புலன்பொறிகளை யொடுக்கி, யோக நிலை சாதித்தால் புண்ணிய முண்டாகுமென்றும், கடவுளுடைய கடாக்ஷ முண்டாகுமென்றும் நினைத்து அப்படிச் செய்திருப்பான் என்று தோன்றுகிறது; அப்படிச் செய்வது முற்றிலும் பிசகு. மனிதன் இல்லறத்தி லிருந்தாலும் துறவறம் புகுந்தாலும் அவன் இருதயம் சுபாவத்தில் சீர்கெட்ட ஸ்திதியிலேயே இருக்கிறது; நாம் வீட்டை விட்டுக் காட்டுக்குப் போனபோதிலும் நம்முடைய நிழல் நம்மோடு வருவது போல், நம்முடைய கெட்ட இருதயமும் நம்மோடுகூடவே வருகிறது; நாம் வெளிக்கு யோக்கியராய் நடந்துகொண்டபோதிலும் சமஸ்த காரியங்களையும் அறிந்திருக்கும் சர்வஜ்ஞானக் கடவுள் நம்முடைய உள்ளத்திலிருக்கும் பெருமை, பொறாமை, பொல்லாத ஆசைகளை எல்லாம் கன்னுய் அறிவார்; உலகத்தை விட்டுப் போகிறது எளிது, உலகப் பற்றுகளை ஒழிக்கிறது அரிது. மனுஷன் எவ்வளவு தானதபஞ் செய்தாலும் அவைகள் ஒன்றும் பாவத்தை நிவர்த்திசெய்யத்தக்க புண்ணியமுள்ளதல்ல, அதெல்லாம் செய்யவேண்டிய கடமைதான்; அத்துவும் செம்பிலே களிம்பு ஒட்டியிருப்பதுபோல் பாவங்கலந்து கெட்டுப்போகிறது; அப்படியிருக்கத் தபோபலத்தினுல் புண்ணியத்தைச் சம்பாதிக்கலாம் என்று நினைப்பது மடமையேயன்றி மற்றொன்றுமில்லை; பவுல் சீன்பவன் இப்படிப்பட்ட எண்ணத்தை விட்டுத் தன்பம் நீங்கினவுடனே தன் ஊருக்குத் திரும்பிவந்து தான் செய்யவேண்டிய கடமைகளை எல்லாம் தாழ்மையாயும் ஒழுங்காயும் செய்துவருவானென்றல் கன்மையாயிருந்திருக்கும். கிறிஸ்தவன் பூமிக்கு உப்பாயும் உலகத்துக்கு ஒளியாயும், மலையின்மேல் கட்டப்பட்ட பட்டணம்போலும் இருக்கவேண்டும் என்றும், அவனுடைய நற்குணநற்செய்கைகளைப் பார்க்கிறவர்கள் பரஞபிதாவைத் துதிக்கத்தக்க விதமாய் அவன் நடக்கவேண்டுமென்றும் இயேசுகடிகர் திருவுளம் பற்றியிருக்கிறார்; ஆகையால் அவருடைய அருளைப் பெற்று அப்படி நடப்பதே உத்தமமையும், உலகத்துக்கு கன்மையாயும், தேவனுக்குப் பிரியாயும் இருக்கும்.

இந்த நூற்றாண்டில்தானே பவுல் என்பவனைப்போல் அந்தோனி என்பவனும் சுகியாசியானுன்; இவன் அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவனும் கல்லாத மூடனுமாயிருந்தான்; இவன் ஒருநாள் கோவிலுக்குப் போனபோது: "உனக்குண்டான எல்லாவற்றையும் விற்றுத் தரித்திரருக்குக் கொடு" என்றும்; "காளைக்காக் கவலைப்படாதே" என்றும் கிறிஸ்துநாதர் சொன்ன திருவசனங்களின்பேரில் ஒரு குருவானவர் பிரசங்கித்ததைக்கேட்டு, அதை ரகசுகத் தனக்கே சொன்னுசென்று நினைத்துத் தன் வீட்டுக்குப் போய், தனக்குண்டான எல்லாவற்றையும் ஏழைகளுக்குத் தானம்பண்ணி, தன் இனஜனத்தை விட்டுவிட்டு, பாழாய்க் கிடந்த கோபுரங்களிலும் சமாதிகளிலும் வாசம்பண்ணிக்கொண்டிருந்தான்; சிலகாலத்துக்குப்பின் நீல் நதிக்குக் கிழ்ப்பக்கத்திலுள்ள ஒரு வனத்தில் வசித்துவந்தான். Anthony, A.D. 270.

இவனைப்போல துறந்துவிடவேண்டுமென்ற பிரமை அநேகரைப் பிடித்ததால், அவர்களும் அவனிருந்த காட்டிலே போய் வாசஞ்செய்துவந்தார்கள்; 356-ம் வருஷத்தில் அவன் காலமுபோது அவனுக்கு நூற்றைந்து பிராயம்; அவனுடைய காலத்தொடுத்து எகிப்திலும் லிபியாவிலும் சந்நியாசிகள் பெருகிவந்தார்கள்; அலெக்சந்திரியா பட்டணத்துக்குத் தென்பக்கத்தில் அந்தோனியுடைய சேஷரால் கட்டப்பட்டுப் பாழடைந்துகிடக்கும் ஐம்பது மடங்களை இக்காலத்திலும் பார்க்கலாம். His followers.

இந்தத் தபோதனர்களெல்லாரும் உலகத்தை வெறுப்பதினுலும், காடுகளுக்கும் மலைகளுக்கும் போய் மண்டிபோட்டுத் தபஞ்செய்வதினுலும், காடியைப்போலச் சடையளர்ப்பதினுலும் புண்ணிய முண்டாகும் என்றும், பேரின்பவாழ்வு கிடைக்கும் என்றும் நினைத்தார்கள்; நம்முடைய இந்துதேசத்திலும் அப்படியே அநேகர் சந்நியாசிகளாய் வனவாசஞ்செய்து ஐம்புலன்களை அவித்தோமென்று பாராட்டுகிறார்கள். புலிக்குப் பயந்து ஓளித்துக்கொண்டு புலியை வென்றோம் என்று வெற்றி கூறுவதுபோல், புலன்களுக்குப் பயந்து ஓளித்துக்கொண்டு புலன்களை வென்றோமென்று சொல்வதால் பயனென்ன? இப்படிச் செய்கிறவர்களுக்கும் பாவப்பாசம் நீங்குவதில்லை; பரகதி கிடைப்பதுமில்லை; கிறிஸ்தேசுவாமியின் திருவடிகளை அடைந்து அவரது புண்ணியநெறி நடந்தவர்களுக்கே * Monastic views refuted.

குப் பேரின்பம் கிடைக்குமேயன்றி மற்றவர்களுக்குக் கிடைக்கவே மாட்டாது.

The low state of the Church.

மேற்சொன்ன விசேஷங்களிலுலே இந்த நூற்றாண்டில் கிறிஸ்து சபையின் சீர் மிகவும் குலைந்திருந்தென்று சொல்லவேண்டியிருக்கிறது. தியஸ்இராயனு லுண்டான துன்பத்தில் கிறிஸ்துமார்க்கத்தை அனுசரித்தவர்களில் அநேகர் துன்பத்துக்குப் பயந்து அதை விட்டு விட்டார்கள்; சிலர் அதற்கு இகழ்ச்சிவரத்தக்கதாக நடந்தார்கள்; ஆனல் இத்தன்பமாகிய காற்று வீசினபோது பதர்போன்ற பெயர்க் கிறிஸ்தவர்கள் பறந்துபோய்விட்டபோதிலும், மணிபோன்ற மெய்க் கிறிஸ்தவர்கள் தங்களுடைய உத்தம குணத்தினலும் பரிசுத்த நடக்கையினலும் மார்க்கத்துக்கு மகிமையாயிருந்தார்கள்.

Cyprian, Bishop of Carthage, 246. His conversion.

சிப்பிரியன் என்பவர் இப்படிப்பட்டவர்; அவர் இந்த நூற்றாண்டில் மேலச்சபையில் ஒரு தீபஸ்தம்பம்போல விளங்கினர்; அவர் கார்தேஜ் பட்டணத்தில் பிறந்தவருமாய், கல்வ குடும்பத்தைச் சார்ந்தவருமாய், ஸ்திதிவந்தருமாய் இருந்தார்; அவர் தர்மசாஸ்திரங்களிலும் மற்றக் கல்விகளிலும் தேர்ந்து கியாயசாஸ்திரி என்ற உத்தியோகத்தைப் பெற்றார். 264-ம் வருஷத்தில் கார்தேஜ்பட்டணத்தில் குருவாயிருந்த சிலியு என்பவரால் ஞானோபதேசம் பெற்று, கிறிஸ்து மதமேசத்தியமார்க்கம் என்று தெளிந்து கிறிஸ்துசபையைச் சேர்ந்தார்; தமக்கு நன்மை செய்த அந்தப் போதகரை எப்போதும் நினைத்துக் கொள்ளும்பொருட்டு, சிலியு சிப்பிரியன் என்ற நாமதேயத்தைத் தரித்துக்கொண்டார்; அவர் கிறிஸ்துமார்க்கத்தின் சாரத்தை நன்றாய் ருசித்தவராயும், கிறிஸ்துநாதருடைய உன்னத அன்பை உள்ளத்தில் உணர்ந்தவராயும், மானிடஜாதியார் தேறவேண்டும் என்ற அபேட்சைகொண்டவராயும் இருந்தார்; அவர்: "நான் அநேக வருஷகாலமாய் பொய் மதங்களை நம்பி மோசம்போனேன்; அவைகளை வெறுத்துத் தள்ளிவிடுவேன் என்ற நம்பிக்கை எனக்குள் சிறிதேனும் இல்லாதபடியால், பாவ உலையில் புரண்டு உழன்று மதிமயங்கிக் கிடந்தேன்; என்னுடைய கண்ணைப்போல் என் பாவங்களை நேசித்தேன். நன்மைக்கடலாகிய கடவுளானவர் என் பாவக சகிதமே எல்லாம் கழுவிச் சுத்திகரிக்கவும், தமது பரிசுத்தஆவியை என் உள்ளத்தில் அனுப்பி, அதில் மறுஜனனமாகிய மேலான நிலையை

கடத்தவும் தொடங்கினதால் என் சந்தேகங்கள் நிவிர்த்தியாகி, என்னைப் பிடித்த இருளும் மருளும் அகன்றுவிட்டது; அகவே என் மனதில் ஞானசூரியன் உதிக்க, மயக்கமாகிய அந்தகாரத்தனைகள் அற்றுப்போயின. நான் சுபாவத்தில் பாவச்சங்கிலிகளினல் கட்டுண்டு நிர்ப்பந்த ஸ்திதியிலிருந்ததையும், தேவனுடைய அருளாலும் ஆவியினலும் உண்டான மாறுதலினலே அந்த நிர்ப்பந்தத்தினின்று நீங்கிச் சுகம் அடைந்ததையும் அறிந்துகொண்டேன்" என்ற சொல்லுகிறார்.

His usefulness in his flight

தேவானுக்கிரகத்தால் இவருக்குன் இப்படி ஆச்சரியமான மாறுதல் நடந்தபினலும், தேவபக்தியினலும் பரிசுத்த குணங்களினலும் வெகு விசுவாசமாய் வளர்ந்து வந்தபினலும் இவர் கிறிஸ்துமதத்தை அனுசரித்த மூன்று வருஷங்களுக்குன் கார்தேஜ் பட்டணத்துச் சபையில் முதலாவது குருப்பட்டத்துக்கும், பிற்பாடு கண்காணிப்பட்டத்துக்கும் யோக்கியரானர். தோனேற்று என்ற கண்காணி இறந்து போனபின்பு அவருடைய பட்டத்துக்கு இவரை ஏற்படுத்தினர்கள்; அவர் தம்மை அந்த உயர்ந்த உத்தியோகத்துக்குத் தகுந்தவரல்ல வென்று நினைத்து அதைத் தடுக்கும்படி வெகுவாய்ப் பிரயாசப் பட்டபோதிலும், சபையார் அதற்கு இணங்காமல் அவரே அந்த உத்தியோகத்துக்கு யோக்கியரென்று தீர்மானித்தார்கள். "தியு இராயனுலுண்டான துன்பத்தில் சபையில் நிரேஷ்டராயிருந்தவர்களுக்கு அதிகப்பாடு நேரிட்டமையால், சிப்பிரியன் என்பவருக்கு வெகு துன்பமுண்டாயிற்று; அப்போது அவர்: "ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தும்போது இன்னெரு பட்டணத்துக்கு ஓடிப் போங்கள்" என்று இயேசுகூசர் திருவாக்குரைத்தபடி அடுத்த பட்டணத்துக்குப் போய் இரண்டு வருஷகாலம் அவ்விடத்திலிருந்தார்; ஆனல் அவர் அங்கே சும்மாயிருக்கவில்லை; தேவனுடைய அடியார் எவ்விடத்திலும் எந்தஸ்திதியிலும் கடவுளுக்கு ஊழியஞ்செய்கிறவர்களாயும், அவரை மகிமைப்படுத்துகிறவர்களாயும் இருப்பார்கள் என்பது யதார்த்தமே. மனிதசஞ்சாரம் இல்லாத காட்டில் கட்டப்பட்டிருந்த உவாட்பர்க் என்னும் கோட்டையில் (Luther) லூத்தர் என்பவர் தனிவாசஞ் செய்யும்போது சத்தியவேதாகமத்தைத் தமது சுயபாஷையாகிய அல்மானிய பாஷையில் மொழிபெயர்த்தார்; அது அவரானுண்டான மார்க்கச் சீர்திருத்தத்திற்கு வெகு அனுகூலமா

யிருந்தது; அப்படியே (John Bunyan) ஜான் பனியன் என்பவர் கைதியாகக் காவல் அறைக்குள் இருக்கும்போது, "பாதேசியின் மோக்ஷ பிரயாணம்" என்று பெயர்விளங்கிய சிறந்தநூல் செய்தார்; அது மோட்சபட்டணத்துக்குப் பிரயாணஞ்செய்து போகிற கிறிஸ்தவர்களெல்லாருக்கும் வெகு இன்பத்தைக் கொடுக்கத்தக்கதாயிருக்கிறது; அவ்வாறே சிப்பிரியன் என்பவரும் தமது சபையைவிட்டுப் பிரிந்து சற்றுக்காலம் தனிவாசஞ்செய்தபோதிலும், காலத்தை வீணுப்போக்காமல் கார்தேஜ்பட்டணத்திலுள்ள தமது சபைக்கும் ரோமாபுரியிலுள்ள போதகன்மாருக்கும் பற்பல நிருபங்களே எழுதினார்; அவைகளில் அவரது சிறந்த பக்தியும் அன்பும் விளங்குகிறது; எவ்வகையான ஸ்திதியிலிருக்கப்பட்டவர்களுக்கும் அவரவர்க்கு ஏற்ற புத்திமதிகளைச் சொல்லுகிறார்; பாவிகள் கிறிஸ்துவின் திருவடி சேர்வதற்கும், பக்தர்கள் பரலோகவாழ்வை அடைவதற்கும் ஏற்ற உபதேசங்களைச் செய்துவந்தார்; அதுவுமன்றி அவர் உபதேசித்தவாறே நடந்தும் காட்டினார்; தம்முடைய ஆஸ்திகளே எல்லாம் ஒரு பொருட்டாய் எண்ணுமல் தரித்திரருக்குத் தானஞ்செய்தார்.

Cyprian's Labours.

இப்படி அவர் திருச்சபைக்கு நன்மை செய்யும்படி கருதிநின்றபோது, பிசாசானவனும் தீமைசெய்கிற தன் தொழிலே முயற்சியாய் நடத்திவந்தான். சிப்பிரியன் என்பவர் கண்காணிப்பட்டத்தைப் பெற்றது எல்லா ஜனங்களுக்கும் சர்வசம்மதமாயிருந்தும், ஐந்து போதகன்மாருக்குமாத்திரம் அது பிரியமில்லாமலிருந்தது; அவர்கள் ஐந்துபேரும் அவர் இல்லாத சமயம் பார்த்து அவரைப் பலவாறு அவதூறு செய்யும்படி ஏற்பட்டார்கள்;* அவர்களில் (Novatus) நோவேற்று என்பவன் விசேஷித்தவனுயிருந்தான், அவனுல் சபை இரண்டாகப் பிரிந்தது; அதைப்பற்றி இனிமேல் சொல்லுவோம். சிப்பிரியன் என்பவர் கார்தேஜ்பட்டணத்துக்குத் திரும்பிவந்தபோது சபையில் நடந்திருந்த தாறுமாறுகளே எல்லாம் பார்த்துக் கிலேசமுற்று, அவைகளே நீக்கும்படி வேண்டிய முயற்சிகளைச் செய்துவந்தார்; அவர் பிரயாசை முற்றிலும் பயன்படாவிட்டாலும் அவர் சற்றும் மனந்தளராமல் கிறிஸ்துமார்க்கம் பிரபலமாவதற்கு ஏற்ற எத்தனங்களே வெகு சிரத்தையுடன் செய்துகொண்டுவந்தார்; கிறிஸ்துமார்க்கத்தின் உபதேசங்களைப் பற்றியாவது திருச்சபையின் ஒழுங்குகளைப்பற்றியாவது எதேனும் தர்க்கமுண்டாகுமாகில், உடனே அவர் அதைத் தீர்க்கும்படி முயற்சி

செய்வார். வலீரியன் இராயன்காலத்தில் குழந்தைகளுக்குக் கொடுக்கும் ஞானஸ்நானத்தைப்பற்றி ஒரு தர்க்கமுண்டாயிற்று; அதைத் தீர்க்கும்பொருட்டு சிப்பிரியன் என்பவன் அறுபத்தாறு கண்காணிமார்களை அழைப்பித்து அவர்கள் அதைப் பேசி முடிவுசெய்யும்படி ஏற்பாபெண்ணினார்; அந்தச் சங்கத்திற்கு அவரே தலைவராயிருந்தார்; அதுவிஷயத்தைப்பற்றிச் சங்கத்தார் பேசினதில், குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்துக்கூடாது என்று ஒருவரும் வாதிக்கவில்லை; அது சாதாரணமாய்ச் சபைக்குள் நடந்துவந்தபடியால், அதைப்பற்றி ஒருவரும் தர்க்கிக்கவில்லை. குழந்தைகள் பிறந்தமாத்திரத்தில் ஞானஸ்நானம் கொடுப்பது யுக்தமோ, எட்டாம்நாளில் ஞானஸ்நானம் கொடுப்பது யுக்தமோ என்பதே அவர்கள் தர்க்கித்த விஷயமாயிருந்தது. குழந்தைகள் பிறந்தவுடனே ஞானஸ்நானம் கொடுப்பதே உத்தமம் என்று அச்சங்கத்தார் தீர்த்தார்கள்; இது 258-ம் வருஷத்தில் நடந்தது.

His martyrdom, A.D. 258.

அதிஉத்தம போதகராயிருந்த சிப்பிரியன் என்பவருக்கு அதிகம் பாடுகளும்கஷ்டங்களும்நேரிட்டபோதிலும், அவர் சற்றேனும் இளைக்காமல் பன்னிரண்டு வருஷகாலமாய் தமது பிரமநாயகருக்கு பக்திவினயத்துடன் ஊழியஞ்செய்துவந்தார். வலீரியன் இராயனுல் சபைக்குத் தீங்குமுண்டாயிருந்தபோது, அவர் கார்தேஜ்பட்டணத்துக்குச் சமீபமாயுள்ள குருபிஸ் என்னும் ஊருக்குத் தூரத்தப்பட்டுப் போய், அங்கே பதினெருமாதம் வசித்து, பின்பு தமது சொந்த ஊருக்கருகான ஓர் தோட்டத்திலே வசித்துவந்தார். சில இரத்தசாட்சிகள் தங்களுக்கு மரணம் வரவேண்டும் என்று ஆவியக் கோரிக்கொண்டதுபோல் அவர் செய்யவில்லை; தேவசங்கற்பத்தினுல் அவர் கிறிஸ்துரக்ஷகருக்காகத் தமது உயிரைக் கொடுக்கும்படி அவ்வியம் நேரிட்டகாலத்தில், அதற்குச் சிறிதேனும் அஞ்சாமல் மகா உற்சாகத்தோடும் தைரியத்தோடும் அப்படிச் செய்தார்; அவரைச் சத்துருக்கள் பிடித்து கொலைக்களத்தில் கொண்டுபோய் நிறுத்தியிருக்கும்போது, அவர் சற்றுங் கலங்காமல் முழந்தாளில் நின்று பிரார்த்தனைசெய்த பின்பு, தமது சால்வையையும் மற்ற வஸ்திரங்களையும் களேந்துவிட்டுக் கைக்குட்டையினுல் தமது கண்களைக் கட்டிக்கொண்டு தைரியமாய் நின்றார்; கொலைகாரர் அவரைப் பின்கட்டாய்க் கட்டிச் சிரச்சேதம்பண்ணினார்கள்; இது 258-ம் வருஷத்தில் சம்பவித்தது. இவர்

தமது ஜீவியகாலத்தில் மூன்று முக்கிய கொள்கைகளை அனுசரித்து மற்றவர்களும் அவைகளைக் கைக்கொள்ளவேண்டுமென்று வேண்டிய பிரயத்தனஞ்செய்தார். அவையாவன (1) திருச்சபையைத் தாயாகக்கொள்ளாதவனுக்கு தேவன் பிதாவல்லவென்றும், (2) பாஷண்டரால் கொடுக்கப்பட்ட ஞானஸ்நானம், ஞானஸ்நானமல்லவென்றும், (3) கண்காணிமார் எந்தச் சபையைச் சேர்ந்தவர்களாயிருந்தபோதிலும், அவர்கள் எறக்குறைய அதிகாரத்தில் ஒன்றுதானென்பதுமே.

Origen, His learning and Works.

சிப்பிரியன் என்பவர் மேலச்சபையில் முக்கியஸ்தராயிருந்தது போல, ஓரிஜன் என்பவர் கீழ்ச்சபையில் முக்கியமானவராயிருந்தார்; இவர் 185-ம் வருஷத்தில் அலெக்சந்திரியாவில் பிறந்தார்; இவர் தகப்பனுக்கு லியானிடஸ் என்று பெயர்; இவர் இளம்பிராயமாய் இருக்குங்காலத்தில் இவருடைய பிதா கிறிஸ்துமார்க்கத்தை அனுசரித்து அதை வெகு பக்திவைராக்கியத்துடன் பிரசித்தஞ்செய்துவந்ததுபற்றி, செவேரு இராயனால் உண்டான துன்பத்தில் சத்துருக்களால் பிடிபட்டு சிலகாலம் காவலில் அடைபட்டிருந்தார்; அப்போது ஓரிஜன் என்பவருக்குப் பதினேழு பிராயம்; அவர் இப்படி பாலியனாயிருந்தபோதிலும் கிறிஸ்துமதத்தின்பேரிலுள்ள அபிமானத்தினால் காவற்கூடத்திலிருந்த தன் தகப்பனுக்கு ஒரு கடிதமெழுதி, அதில்: "நீர் மனோதைரியமாயிருக்கவேண்டும், எங்களை நினைத்துக் கிலேசப்படவும் கூடாது, தைரியத்தை விட்டுவிடவும் கூடாது" என்று சொன்னார்; அவருடைய தாய் அவர் வஸ்திரங்களை ஒளித்துக்கொண்டு அவரைத் தடுக்கவில்லையென்றால், அவர் தம்முடைய பிதாவோடே கூட மரித்தேயிருப்பார்; அவர் தகப்பனாகிய லியானிடஸ் என்பவராச் சிலச்சேதம்பண்ணினார்கள்; உடனே அவருடைய ஆஸ்திகளெல்லாம் பறிமுதலாய்ப் போய்விட்டதினாலே ஓரிஜன் என்பவர் வறுமையடைந்து வருந்தவேண்டியிருந்தது; ஆனால் திருவளச்சகாயத்தினால் அலெக்சந்திரியாவிலுள்ள ஒரு மோட்டி அவரைத் தன் வீட்டில் ஏற்றுக்கொண்டு, தான் பெற்றபிள்ளையிலும் உற்றபிள்ளையாய்ப் பராமரித்துவந்தான்; அவர் இளம்பிராயத்தில்தானே கல்விகற்கப் புகுந்து, கிரேக்குபாஷையிலும் லத்தீன்பாஷையிலுமுள்ள தூல்களையும் கலைக்கியானங்களையும் ஊன்றுய்க் கற்று வித்வசிரோமணியாய் விளங்கினார்; அவருடைய கல்விக்கு அவர் செய்த தூல்களே போக்கு வக்காடு

அவர் சிறிதும் பெரிதுமாய் 6,000 ஆகமங்களை எழுதினார் என்று சொல்லுகிறார்கள்; அவைகளில் (Hexapla) எக்சப்லா என்னும் பிரபந்தமே விசேஷமானது; எக்சப்லா என்றால் ஆறுபத்தியுள்ளது என்றர்த்தம்; அக்காலத்தில் வழங்கிவந்த சத்தியவேத மொழிபெயர்ப்புகள் எபிரேயுபாஷையிலுள்ள மூதனூலுக்கு இசைவுள்ளதல்லவென்று சிலயூதர்கள் சொன்னபடியால், இந்தப் பிரமாண்ட புஸ்தகத்தைப் பிரசாரஞ்செய்தார். லத்தீன்பாஷையிலும் கிரேக்குபாஷையிலும் இருந்த மொழிபெயர்ப்புகளை எபிரேயுபாஷையிலுள்ள மூலவாக்கியத்தோடு ஒத்துப்பார்க்கும்படி இந்தப் புஸ்தகத்தில் அவைகளை எல்லாம் ஒன்றும்மித் திரட்டி ஆறுபத்தியில் அமைத்து, முதல் பத்தியில் எபிரேயுபாஷையிலுள்ள மூதனூலையும், இரண்டாவதில் எபிரேயுபாஷை வார்த்தைகளை கிரேக்கு எழுத்துகளிலும், மூன்றுவதில் எழுபதுபேருடைய மொழிபெயர்ப்பு என்று அர்த்தங்கொள்ளும் (Septuagint) செப்தூவஜென்றுவையும், நான்காவதுபத்தியில் (Aquila) ஆக்கில்லாவின் கிரேக்கு மொழிபெயர்ப்பையும், ஐந்தாவதில் (Syrumachus) சிம்மக்கு மொழிபெயர்ப்பையும், ஆறுவதில் (Theodotion) தியோடோஷியு மொழிபெயர்ப்பையும், சேர்த்து கோர்வையாய்க் காட்டினார்; இதை முடிக்க 28 வருஷம் சென்றது. இது ஐம்பது பிரமாண்ட பிரதிகள் அடங்கியது; அவர் மரித்து ஐம்பது வருஷத்துக்குப்பின் சிலர் அதைச் செசரியாபட்டணத்தில் கண்டெடுத்து அவ்விடத்திலிருந்த புஸ்தகசாலையில் வைத்தார்கள். கி. பி. 653-ம் வருஷம் செசரியாபட்டணம் அழிந்தகாலத்தில் இந்தப் பெரிய நூலும் அழிந்து போயிற்றென்று நினைக்கவேண்டியிருக்கிறது.

அவருடைய ஆசான் கிளேமெந்து என்பவர்; அவர் கல்விகற்ற அலெக்சந்திரியாபட்டணத்து வித்தியாசாலைக்கு அவரே தலைவரானார். 230-ம் வருஷத்தில் அவர் நாற்பத்தைந்து வயதாயிருக்கும் போது, செசரியாபட்டணத்துக் கண்காணியாகிய (Theoctistus) தியோக்திஸ்து என்பவராலும், எருசலேம் பட்டணத்துக் கண்காணியாகிய அலெக்சந்தர் என்பவராலும் குருப்பட்டம் பெற்றார்; அது அலெக்சந்திரியாபட்டணத்துக் கண்காணியாகிய (Demetrius) திமித்ரியு என்பவருக்கு மனஸ்தாபமாய் இருந்தது; அதுமுதல் அவர் அவனைப் பலவாறு அவதூறு செய்யும்படி ஏற்பட்டார்.

Origen's Ordination. A.D. 230.

His Lecturers.

ஆனால் ஒரிஜன் என்பவருடைய சேர்த்திப்பிரஸ்தாபம் இப்படிப் பட்ட அவதூறுகளினுலே மங்கிப்போவது அசாத்தியம்; அவர் அலெக்சந்திரியாபட்டணத்துச் சபைக்குப் போதகருமாய் வியாக்கியானப் பிரசங்கியுமாய் இருந்தார்; அவருடைய பிரசங்கத்தைக் கேட்கும்படி தொலைதூரமான தேசங்களிலிருந்து ஜனங்கள் வருவார்கள். கப்பத்தோக்கியா நாட்டில் ஸ்திதிவந்தாகிய இரண்டு சகோதரரிருந்தார்கள்; அவர்களுக்கு தியோடொற்று அதனுடோரு என்ற பெயர்; தியோடொற்றுக்கு (Gregory Thaumaturgus) திரகரி தாமற்றர்கு என்ற ஒரு சிறப்புப்பெயரும் இருந்தது; இவ்விரு சகோதரரும் ஒரிஜனுடைய பெரும் புகழ்ச்சியைக் கேட்டு, அவருடைய பிரசங்கங்களினுல் பயன் அடையலாம் என்று அலெக்சந்திரியாவுக்குப் போனார்கள்; ஒரிஜனைப்பற்றி இப்படிப் பலவிஷயங்களைப் புகழ்ச்சியாய்ச் சொல்லிவந்தபோதிலும் அவருடைய குற்றங்களை எடுத்துக் கூறாமலிருப்பது சரியாயிருக்கமாட்டாது; அவருடைய பெருங்கல்வி அவருக்கு ஒருவகையாய்த் தீமையை உண்டாக்கினதுபோலிருந்தது; அவர் அலெக்சந்திரியாபட்டணத்திலுள்ள வித்தியாசாலையில் கல்வி கற்றவராயிருந்ததினுலும், அந்தப் பட்டணம் உலகத்திலுள்ள எல்லாச் கல்விகளுக்கும் உறைவிடமாயிருந்ததினுலும், அவ்விடத்தில் வழங்கி வந்த ஸ்விதி (Eclectic Philosophy) தத்துவ ஞானத்தைப் படித்துக் கொண்டார். கல்விமான்கள் எழுதியிருக்கும் நூல்களில் எங்கெங்கே சத்தியத்துக்குச் சற்றுப் பொருந்தின விஷயங்கள் கூறப்படுமோ, அவைகளை எல்லாம் ஒன்றுசேர்த்து எல்லாருக்கும் காட்டவேண்டும் என்பதே அந்த ஞானிகளுடைய தாற்பரியம்; அப்படி அவைகளை ஒன்றுசேர்த்து ஒரு நூல் உண்டுபண்ணினவருக்கு (Ammonias Saccas) அம்மோனியு சாக்கு என்று பெயர்.

Origen's metaphorical interpretation of Scripture.

ஒரிஜன் என்பவர் இளம்பிராயத்தில்தானே இந்தச் சாஸ்திரத்தை நன்றாய்க் கற்று தேர்ச்சியடைந்திருந்தமையால், அதைக் கிறிஸ்துமதத்தோடு கொண்டு வந்து, இணைத்து, இரண்டையும் ஒன்றாய்க் கலந்து போதித்துவந்தார். வேதவாக்கியங்களுக்கு மூன்றுவகையான அர்த்தங்கள் சொல்லலாமென்று போதித்தார். மனிதன் ஆனவன் சரீரம், ஆத்துமா, ஆவி என்னும் மூவகைத்தானதுபோல, வேதவாக்கிய மொவ்வொன்றுக்கும், பத அர்த்தம், பரமார்த்தம், ஞானுர்த்தம்

உண்டென்று கூறிவந்தார். வேதவாக்கியங்கள் உபயார்த்தமுடைய வைகளாய் இருக்கிறதென்றும், அவைகளைச் சொற்பொருளாய்க் சொள்ளாமல் ஒட்டலங்காரப்படி பொருள்கொள்ளவேண்டும் என்றும் ஒரு விபரீதப் பிரமாணத்தை காட்டி, சத்தியவேதத்துக்கு அர்த்தம்பண்ணினதினுலே அதன் திவ்விய போதனைகளை மாறுபடக் கூறும்படி நேரிட்டது; அதற்கு இரண்டொரு திருஷ்டாந்தங்கள் சொல்லுவோம். இயேசுநாதருடைய கட்டளைப்படி பேதுரு கடலில் தூண்டில்போட்டு மீன்பிடித்து அதன் வாயைத் திறந்து, அதில் பணம் எடுத்து வரிக்காரருக்குச் செலுத்தினதற்கு ஒரிஜன் செய்த அர்த்தசாரங்களைப் பார்த்தால் வெகு வித்தையாயிருக்கும்; அந்த மீன் பொருளாசையுள்ள ஒரு மனிதனைக் குறிக்கிறதென்றும், அது தூண்டிலில் அகப்பட்டதுபோல் அந்த மனிதன் சுவிசேஷமாகிய தூண்டிலில் அல்லது கயிலில் அகப்படுகிறுனென்றும், அது செத்துப் போனதுபோல் அம்மனிதன் லோகசாரியங்களுக்குச் செத்தவனைப் போலாகிறுன் என்றும், அது தன் வாயைத் திறந்து பணத்தைக் கக்கி விட்டதுபோல் அம்மனிதன் தன் ஆசைகளை ஒழித்துவிட்டு, தன் பொருளைத் தர்மவிஷயத்துக்குக் கொடுத்துவிடுகிறுன் என்றும் அர்த்தம்பண்ணினுர். நல்ல சமாரியன் உவமையைப்பற்றியும் அப்படியே ஒரு ஞானுர்த்தஞ் சொன்னுர். அந்தச் சமாரியன் கிறிஸ்துநாதர் என்றும், காயப்பட்ட மனிதன் பாபாத்துமா என்றும், அவ்வழியே போன ஆசாரியன் சன்மார்க்கப்பிரமாணம் என்றும், லேவியன் சடங்குப்பிரமாணம் என்றும், சத்திரம் சபையென்றும், சத்திரக்காரன் தேவஊழியனென்றும், அவனுக்குக் கொடுத்த இரண்டு காசுகள் ஞானஸ்நானம் இராப்போஜனம் என்றும் இப்படியெல்லாம் விபரீத அர்த்தங்கள் சொன்னுர்; அதனுலே சபைக்கு வெகு கெடுதி நேரிட்டது. "லவுகீக ஞானத்தினுலும் மாயமான சாஸ்திரத்தினுலும் ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல" என்று கொலோ. 2. 8லும், "ஓ திமோத்தேயுவே! உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும் ஞானம் என்று பொய்யாய்ப் பெயர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு" என்று 1 திமோ. 6. 20லும் சொல்லப்படுகிற சத்தியங்களை ஒரிஜன் என்பவர் மறந்து, தமது சுயத்

தோற்றத்தின்படி தேவனுடைய மகா வாக்கியங்களே வியாக்கியானஞ் செய்யப் புகுந்தமையால் இவ்வளவு தீமை விளைந்தது; வேதவாக்கியங்களெல்லாம் தேவாவியினல் எழுதப்பட்டவைகளானதால் அவைகளே வாசித்துத் தியானிக்கும்போது, ஒரு வாக்கியத்தை இன்னொரு வாக்கியத்தோடு ஒப்பிட்டுப்பார்த்து, பரிசுத்தாவியானவருடைய திருவுளச்சித்தம் இத்தன்மையுள்ளதென்று நிரூபித்துக்கொள்ளுதே உத்தம வகையாம். ஒரு வேதவசனத்தை எடுத்துப் பிரசங்கஞ்செய்யும் வழக்கம் ஓரிஜனல் முதல்முதல் உண்டாயிற்று.

His death, A.D. 254.

இவர் 254–ம் வருஷத்தில் எழுபதுவயதாயிருக்கும்போது தீருப் பட்டணத்தில் மரித்தார்; தீசியு இராயன் ஆண்டகாலத்தில் இவர் இரத்தசாட்சியாய் மரித்தாரென்று சிலர் சொல்லுகிறார்கள்.

Eighth Persecution under Valerian, A.D. 257.

தீசியு இராயன் 251–ம் ஆண்டில் இறந்துபோனன்; அவனுக்குப்பின் (Gallus) கல்லு என்பவன் இராஜபட்டம்பெற்று கொஞ்சகாலம் கிறிஸ்துசபைக்குத் தன்பஞ்செய்யாமலிருந்தும் அப்பால் அதைப் பலவிதமாய் ஒடுக்கிவந்தான்; அவன் பதினெட்டுமாதம் குரூரமாய் அரசாண்டு பின்பு இறந்துபோனன்; அவனுக்குப்பின் வலீரியன் என்பவன் இராயனனன்; இவன் இராஜபட்டம் பெற்று மூன்றுவருஷம்வரையிலும் சபை சமாதானமாயிருந்தது; இவன் துவக்கத்தில் கிறிஸ்தவர்கள்பட்சத்தில் வெகு அபிமானம் வைத்து, அவர்கள் தன் கொலுமண்டபத்திலும் நியாயஸ்தலங்களிலும் பல உத்தியோகங்கள் பெறவும், இராஜசபையில் எப்போதும் நின்று ஊழியஞ்செய்யவும் உத்தாவுபண்ணினனன்; பிற்பாடு அவர்களே வெகு கொடுமையாய்த் துன்பப்படுத்த ஏற்பட்டான்; இதுவே திருச்சபைக்குண்டான எட்டாம் துன்பம்; இந்த வலீரியன் இராயனிடத்தில் மக்ரியேனு என்று ஒரு துன்மந்திரி யிருந்தான்; அவன் கிறிஸ்தவர்களுக்குக் கொடிய சத்துருவாயிருந்தமையால், அவர்களே ஒடுக்கவேண்டுமென்று இராயனுக்குத் தீயோசனை சொன்னன்; அதை அவன் கேட்டுக் கிறிஸ்தவர்களே வெகுவாய்த் துன்பப்படுத்தினன்; மனிதன் ஒரே நிலையில் நிற்கிறவனல்ல என்பதற்கும், அவன் நிலைமை மாறுந்தன்மைபன்னதென்பதற்கும் இந்த இராயனுடைய நடக்கை நல்ல திருஷ்டாந்தமாயிருக்கிறது; இவனுலே உண்டான கொடியதுன்பம் மூன்றரை வருஷகாலும் ரோமாசாம்ராஜியமெங்கும் விஸ்தாரமாய் நடந்துவந்தது.

அதில் அநேக தேவபக்தர்கள் இரத்தசாட்சிகளாய் மரித்தார்கள்.

Laurentius a deacon of Rome. His martyrdom.

அவர்களில்கார்தேஜ்பட்டணத்துக் கன்காணியாகிய சிப்பிரியன் என்பவரைப்பற்றி மூன்சொல்லியிருக்கிறோம்; இன்னும் இரண்டொருவரைக் குறித்துச் சில விசேஷங்களே எடுத்துரைத்தால் நன்மையாயிருக்கும். ரோமாபுரிச்சபையில் ஒரு உதவிக்குரு இருந்தார்; அவருக்கு லாரன்ஷியு என்று பெயர்; அந்தச் சபையில் திரண்ட ஆஸ்தியிருக்கிறதாக ஊரெங்கும் பிரஸ்தாபமானதினுலே, அதைக் கைப்பற்றிக்கொள்ளவேண்டும் என்று ஓர் அதிகாரி நினைத்து லாரன்ஷியு என்பவரை வருத்தி, அவரைப் பார்த்து: உன் சபையில் அதிகத் திரவியம் இருக்கிறதென்று கேள்வி; அதில் ஒன்றையும் குறையாமலும் மறையாமலும் எல்லாவற்றையும் எனக்கு ஒப்புவிக்கவேண்டும் என்று சொல்ல, அந்த பக்திமான் பேராசையுள்ள அந்தத் துரையைப் பார்த்து: நீர் கொஞ்சகாள் பொறுத்தால் நான் என் பொக்கிஷங்களேயெல்லாம் உமக்குக் காட்டுவேன் என்றார்; அதற்கு அவன் அப்படியாகட்டும், மூன்றுநாள் கொடுக்கிறேன், அதற்குள்ளாக எல்லாவற்றையும் கொடுத்துவிடவேண்டும் என்றன்; அதற்கு அவர் சம்மதித்துக்கொண்டு மூன்றுநாள் சென்றபிற்பாடு தூயினிடத்தில் போய், என் பொக்கிஷங்களேயெல்லாம் வந்துபாரும் என்று சொல்லி எழைகள் நிறைந்தவர்களிருந்த ஒரு பெரிய சாலையில் அவனே அழைத்துக் கொண்டுபோய்க் காட்டினர்; அவன் பார்த்து, இலவைக் காத்த வெளிபோல ஏமாறி, என்ன நீ என்னே வஞ்சித்துப்போட்டாயே, பணங்கொடுக்கிறேன் என்று சொன்ன நீ இப்படிப் பரியாசம்பண்ணலாமா என்றன்; அப்போது அவர் துணியே! இவர்கள்தான் என் பொக்கிஷம்; இவ்வுலகப்பொருள் எல்லாம் மண்; சகல தன்மார்க்கங்களே நடத்துவதற்கும் அது காரணமாயிருக்கிறது. உலகத்திற்கு ஒளியாயிருக்கிற இயேசுசுவாமியே மெய்ப்பொருள்; இவர்களெல்லாரும் இவருடைய தாசர்; உமக்கு நான் கொடுப்பேன் என்று வாக்களித்த பொக்கிஷம், நீர் பார்க்கிற இந்தக் கன்னிமைகளும் மைம் பெண்களுந்தான்; இவர்களே திருச்சபைக்குக் கிரீடம் என்றார்; அப்போது அவனுக்குக் கோபத்தினுல் கண்கள் கொவ்வைப்பழம்போல் சிவந்து, மகா அகங்காரத்துடன் இவரைப் பார்த்து: உன் உயிர் இரவல் என்று நினைத்துக்கொள்; உன்னைப் பொரிக்கும் சட்டியிற் போட்டுப் பொரித்துப்போடுகிறேன் பார் என்று சொல்லி, அப்ப

டியே அவனை வதைத்துக் கொல்லும்படி உத்தரவுபண்ணினான்; உடனே இருப்புச்சட்டியைப் பழுக்கக் காய்ச்சி அதில் அவனைப் போட்டார்கள்; அவர் அதற்குச் சற்றேனும் அஞ்சாமல், இந்தப்பக்கம் பொரிந்துபோயிற்று; இன்னொருபக்கம் திருப்பிப்போடுங்கள் என்றார்; இப்படி அவர் தைரியமாயும் சந்தோஷமாயும் மரித்து மோட்சலோகஞ்சேர்ந்தார்.

பெரியோர்மாத்திரமல்ல பாலியரும் பிள்ளைகளுங்கூட இப்படியே இயேசுநாதருக்காகச் சந்தோஷமாய்த் தங்கள் ஜீவனை விட்டார்கள். கப்பத்தோக்கியா நாட்டிலுள்ள செசரியாபட்டணத்தில் சிரில் என்ற ஆறு பிராயமுள்ள ஒரு சிறுவன் இருந்தான்; இவன் பெற்றோர் விசுவாசபக்தர்; அவன் எப்போதும் இயேசுவே இயேசுவே என்ற சுவாமியினுடைய திருநாமத்தை உச்சரித்துக்கொண்டேயிருந்தான்; அந்தப் பேச்சை விடுவிடும்படி தகப்பனும் மற்றச் சிநேகிதரும் பயமாயும் பயமாயும் சொல்லிப்பார்த்தார்கள்; அவன் அதற்கு இணங்காதபடியால், தகப்பன் அவனை அடித்து வீட்டைவிட்டுத் துரத்திவிட்டான்; ஒருநாள் சத்துருக்கள் அவனைப் பிடித்து ரோமை அதிகாரியிடத்தில் கொண்டுபோனார்கள்; அவன் சிரில் என்பவனைப் பார்த்து: பிள்ளையே! உன் புத்தி இப்படி என் கெட்டுப்போய்விட்டது; உன் நன்மை உனக்குத் தெரியாமற்போனதென்ன? இந்தப் பிடிவாதத்தை விட்டுவிடு; நான் உன் குற்றத்தை மன்னித்துச் சுகமாய் உன் தகப்பன் வீட்டுக்கு அனுப்பிவிடுவேன்; அவன் ஆஸ்தியெல்லாம் உனக்கே கிடைக்கும் என்று வெகு பயமாய்ப் பேசினான்; அதற்கு அவன், நான் மரணத்திற்கு அஞ்சுகிறதேயில்லை; எனக்கு வீடும் ஆஸ்தியும் என்னத்திற்கு? அற்ப லோக வாழ்வை நம்பி ஆத்துமாவைப் பறிகொடுக்கலாமா? நான் மரித்தால் தேவன் தம்முடைய மோட்சவீட்டில் சேர்த்து எனக்கு நித்திய பேரின்பத்தை அருளுவார்; அதுவே எனக்குப் போதும் என்று தைரியமாய்ச் சொன்னான்; அதை அந்த நீதிதானை கேட்டு அவனைப் பயமுறுத்திப் பார்க்கவேண்டும் என்று நினைத்து, அவனைக் கட்டிக் கொலைக்களத்திற்குக் கொண்டுபோய் அவனைத் தலைவெட்டும் அதிகாரிஞ்ஞையைக் காட்டிவிட்டு மறுபடியும் தன்னிடம் கொண்டுவரும்படி சேவகருக்கு ரகசியமாய் தன் மர்மத்தைச் சொல்லியனுப்பினான்; அவர்கள் அவனை அப்படியே

Cyril and his martyrdom, A.D. 260.

கொண்டுபோய்க் காட்டினபோதிலும் அவன் எவ்வளவேனும் அஞ்சாமலிருந்தான்; மறுபடியும் அந்தத் தூர அதிகாரியிடத்தில் வெகு தாழ்மையாய்ப் பேசினான்; அதற்கு அவன் சத்தமிடுகிறதைப்போல் நின்று, உன் கத்தியும் கட்டைகளெருப்பும் எங்கே என்ன செய்யப்போகிறது? நீ செய்கிறதைச் சீக்கிரம் செய்; நான் மோட்சவீடுபோய்ச் சேரவேண்டும் என்றான்; அங்கே நின்றவர்களெல்லாரும் அவன் பேசின வார்த்தைகளைக் கேட்டு மனம்பொறுக்கமாட்டாமல் அழுதார்கள்; அவன் அதைப் பார்த்து: நீங்கள் என் அழவேண்டும், நான் போகிற அந்தப் பொன்னகர் இப்படிப்பட்டதென்று ஐயோ! நீங்கள் அறிந்தால் நீங்கள் எனக்காக அழாமல் சந்தோஷப்படுவீர்கள் என்றான்; இப்படி அவன் எல்லாரும் பிரமிக்கத்தக்கவிதமாய் மகா மகிழ்ச்சியோடு தன் பிராணனை விட்டான்; இது 260-ம் வருஷத்தில் நடந்தது. பாவஞ்செய்ய மற்றவர்கள் நம்மைத் தூண்டிவிடும் போது சிரில் என்பவனின் ஆவி நமக்கிருந்தாலோ?

அந்தியோகியாபட்டணத்தில் ரோமேனு என்று ஒரு சிறிஸ்தவன் இருந்தான்; ஒருநாள் ஒரு போர்ச்சேவகன் அவனைப் பார்த்து: உங்கள் சிறிஸ்துநாதர் மேற்றுள்ளவர்; எங்கள் தேவர்கள் அவருக்குமுன் வெகு சாலமாயிருக்கப்பட்டவர்கள் என்று கிண்டையாய்ப் பேசினான். அப்போது ரோமேனு என்பவன் சமீபத்திலிருந்த ஒரு சிறுபையனைப் பார்த்து: நீ இந்தச் சேவகனுக்கு உத்தரவு சொல் என்றான்; உடனே அந்தச் சிறுவன்: "அநேக தேவர்களில்லை, ஒரே தேவனுண்டு; அவர் மனிதருள்ளத்தில் வாசஞ்செய்கிறார்" என்று தைரியமாய்ச் சொன்னான்; அதைச் சேவகன் கேட்டு அந்தப் பையனைக் கொடுமையாய் அடிக்கச் சொன்னான். அவ்விதமாய் அந்த அடிகளைப் படும்போது அருகிலிருந்த அவன் தாய் அவனைப் பார்த்து: என் கண்ணே! பயப்படாதே, திடனாயிரு, மகிமையின் கிரீடம் அதிசீக்கிரம் உன் தலைமேல் பிரகாசித்து ஜொலிக்கும் என்றாள். அடிகளுடைய அகோரத்தினாலே அந்தப் பையன் சாகுஞ்சமயத்தில் அவனுடைய பக்கியுள்ள மாதா அழுதுகொண்டு என் அருமைப் பிள்ளையே, சுகமாய்ப் போய்வா! பரிசுத்தவான்களுடைய மரணம் தேவனுடைய பார்வையில் அருமையாயிருக்கிறது என்று சொன்னாள். இந்தச் சரித்திரங்களைப் பிள்ளைகள் வாசித்து, அவர்

Romanus.

களும். இந்த நல்ல பிள்ளைகளைப்போல் தேவபக்தியுள்ளவர்களாய் நடப்பார்கள் என்று நம்புகிறோம்.

இக்காலத்தில் சிக்ஸ்து என்று பேர்கொண்ட ரோமைக்கண்காணியார் ஒருவர் இரத்தசாட்சியாய் மரித்தார். இவரை வதைத்துக் கொல்லும்போது பக்கத்திலிருந்த லாரன்ஷியு என்னும் அவருடைய டீக்கன், அவரைப் பார்த்து உம்முடைய பின்னையாகிய என்னைவிட்டுவிட்டுச் சீக்கிரமாய்த் திரமா போகப்போகிறீர் என்று கேட்க, சிக்ஸ்து, அவனைப் பார்த்து மூன்றுநாளில் என்னைக்கூட இருப்பாயென்று சொல்லிவிட்டு சந்தோஷமாய் மரித்தார். லாரன்ஷியு என்பவர் அப்படியே கொண்டு வரப்பட்டு, தன் கோவில் ஆஸ்தியையெல்லாம் ரோமை அதிகாரிக்குத் தந்துவிட்டால், மரணதண்டனை அவருக்கு இல்லையென்று சொல்லப்பட்டது. தன் ஆஸ்தியை யெல்லாம் காண்பிக்க லாரன்ஷியு இரண்டு நாள் தவணை கேட்டார். அப்படியே இரண்டொளுக்குப்பின் குறித்த நேரத்தில் அதிகாரி அவருடைய கோவிலுக்கு வந்தபோது, தேவாலயம் நிறைய எளிய கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். ஆஸ்தி யெங்கே என்று கேட்க, இந்தக் கிறிஸ்தவர்களே என் ஜீவியகாலமெல்லாம் நான் சேர்த்துவைத்த ஆஸ்தியென்று லாரன்ஷியு சொன்னார். அதிகாரி கோபம் மூண்டு, இவரை நெருப்பில் தகனித்துவிடும்படி கட்டளையிட்டார். அப்படியே இருப்புத்தகட்டில் இவரைப் படுக்கவைத்து பலகாரம் சுடுவதுபோல் இவரை வேகவிட்டார்கள். ஒருபக்கம் வெந்துவிட்டது. மறுபக்கம் திருப்பிப்போடுங்கள் என்று இவரே சொல்ல, அப்படியே மறுபக்கமும் திருப்பிப்போட்டார்கள். இப்படி அவரைத் திருப்புகிறபோது, பிதாவே! ரோமாபுரி இயேசுவின் சுகாரமாகும்படி இருபைசெய்யுமென்று ஜெபஞ்செய்து முகமலர்ச்சியுடன் பொன்னகர் சேர்ந்தாரென்று முன்னமே சொல்லியிருக்கிறோம்.

Sixtus and Laurentius.

இப்படித் திருச்சபைக்குண்டான துன்பகாலத்தில் கிறிஸ்தவர்களில் அநேகர் அதற்குத் தப்பிக்கொள்ளும்பொருட்டு பூமிக்குள் அறைகள் செய்து அதில் வசித்துவந்தார்கள்; ரோமாபுரியில் இப்படிப்பட்ட நிலவறைகள் அநேகம் உண்டு; அவைகளுக்கு (Catacombs) காற்றக்கோம்ப்ஸ் என்று பேர்; அவைகளில் அநேகம் கிறிஸ்தவர்கள் தங்கள் தியாதனேகளையும் ஜெபதபங்களையும் 250 வருடகாலமாய் கடத்திவந்தார்கள்; அவைகள் அனேகஇடங்களில் தாரமுள்ளதாயும் எப்போதும் இருட்டாயும் இருக்கும்; அவைகளுக்கு வழியைக் கண்டுபிடித்துப்போகிறது வெகு கஷ்டம். கிறிஸ்தவர்களில் அநேகர் அவைகளில் வாசஞ்செய்து அமைதலாய்த் தங்கள் காலத்தைக் கழித்து, தேவனைப்பற்றிய நம்பிக்கையோடே இறந்துபோனார்கள்; அவர்களுடைய கல்லறைகளில் எழுதியிருந்த வேதவாக்கியங்களையும் நல்ல வசனங்களையும் கவனிக்குங்கால், அவர்கள் கிறிஸ்துரக்ஷகரிடத்தில் பக்தியுடையவர்களாய் இறந்துபோனவர்கள் என்பது பிரத்தியக்ஷமாயிருக்கிறது. பிற்காலத்தில் அந்த நிலவறைகளைத் தோண்டிப் பார்க்கும்போது அவர்கள் இருந்ததும், தேவனை ஆராதித்ததும் எல்லாம் விளங்கின; அப்படிப்பட்ட நிலவறைகளிற்கூட சில சமயங்களில் சத்துருக்கள் போய் கிறிஸ்தவர்களைக் கொலைசெய்தார்கள். ஒரு சமயத்தில் கிறிஸ்தவர்கள் இப்பேர்ப்பட்ட பூமி அறைக்குள் கட்டப்பட்டிருந்த தேவாலயம் ஒன்றில் ஆராதனை வைத்துக்கொண்டிருக்கையில், சத்துருக்கள் கதவை அடைத்து, ஒரு பக்கத்தை மெதுவாய்த் தள்ளவே, நூற்றுக்கணக்கான கிறிஸ்தவபக்தர்கள் மண்ணுக்குள் அகப்பட்டு, கொல்லப்பட்டார்கள். ஆ! இக்காலத்தில் தேவனை எங்கும் ஆராதிக்கலாம்; எங்கும் தேவாலயம் கட்டலாம்; கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்திருக்கிறவர்களுக்கு இப்பேர்ப்பட்ட துன்பம் இக்காலத்தில் இல்லாததற்காக எவ்வளவு சந்தியறிதலுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

Catacombs of Rome.

வலீரியன் இராயன் வெளிப்படுத்தின விசேஷம் 13-ம் அதிகாரம் 5-ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறபிருகமென்றும் "நாற்பத்திரண்டுமாதம் யுத்தம் பண்ண அதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டதென்று" சொல்லியிருப்பது வலீரியன் அரசாண்டபோது கிறிஸ்து சபைக்கு நடந்த துன்பகாலத்தை சரியாய் குறிக்கிறதென்றும் வேத சாஸ்திரிகளில் சிலர் நினைக்கிறார்கள். இப்படி இவன் சபையைத் துன்பப்படுத்தும்போது, தேவனுல் அவனுக்கு ஒரு தண்டனை கொடுத்தது. வடதேசத்து இராஜாக்கள் திரண்டசேனையுடன் அவன் இராஜ்யத்துக்குட் புகுந்து, அவனைப் பிடித்து, ஆயுசுபரியந்தம் காவலில் அடைத்துவைத்தார்கள்; பார்சுதேசத்து இராஜாவாகிய சேப்பர் என்பவன் அவன் பெருமையைத் தாழ்த்தும்படியாகத் தான் குதிரையின் மேல் ஏறும்போதெல்லாம் அவனைக் குதிரையின்பக்கம் குனியவைத்து ஒரு படிபோல் அவன் முதுகின்மேல் குதித்தேறுவான்; கடை

Valerian's miserable end.

யாய் அவனைத் தோல் உரித்து அதில் உப்புவைத்துவதைத்துக்கொன்றான். கடவுளுடைய திருவுளச்சித்தத்துக்கு விரோதமாய் நடக்கிற பாதகருடைய முடிவு கடைசியில் இப்படியே பயங்கரமாயிருக்கும்.

His successor, Gallienus.

அவன் இறந்தபின்பு அவன் குமாரனுகிய கலியீனு அவன் பட்டத்துக்கு வந்து கிறிஸ்தவர்கள் பட்ட கொடியதுன்பங்களை நிறுத்தும்படி கட்டளைபிறப்பித்தான்; இவன் பெரிய சோம்பேறி; அவன் அரசாண்ட எட்டுவருஷகாலமாய்த் திருச்சபைக்கு யாதொரு விக்கினமில்லாதிருந்தது; அவனுக்குப்பின் (Claudius) இளாடியு என்பவன் இராஜாவாகி இரண்டுவருஷத்துக்குள் மரித்துப்போனான். இவன் (Goths) "காத்ஸ்" ஜாதியாரை ஜெயித்ததால் இவனுக்கு "காதிக்கு" என்று பட்டப்பேர். இவன் கிறிஸ்துமார்க்கத்துக்கு அவ்வளவு அனுகூலமாயிருக்கவில்லை.

Ninth persecution under Aurelian, A.D. 272.

அவனுக்குப்பின் அரீலியன் என்பவன் இராஜபட்டம் பெற்றுக் கொஞ்சக்காலம் கிறிஸ்தவர்களுக்குச் சகாயஞ் செய்து, பின்பு மாக்கிரினு என்ற ஒரு அஞ்ஞான குருக்கன் சொன்ன துர்யோசனையின்படி அவர்களைத் துன்பப்படுத்தத் தொடங்கினான்; இதுதான் ஒன்பதாந் துன்பம். ஆயினும் அந்த எண்ணம் சரியாய் நிறைவேறுமுன் அவன் 275-ம் வருஷம் ஒருவனால் கொலையுண்டு மரித்துப்போனான்.

The low condition of the Church.

அவனுக்குப்பின் ஐந்து ஆறு இராயர்கள் அரசாட்சி செய்தனர். அவர்கள் காலத்தில் திருச்சபைக்குத் துன்பமில்லை; அதனாலே கிறிஸ்தவர்களுடைய பக்தியும் பரிசுத்தமும் மிகவும் குறைந்துபோயிற்று. இவ்வித தேசதேசங்களில் தண்ணீர் உறைந்து பளிங்குபோல் கட்டியாயிருக்கும்; அதன்மேல் சூரியன் தன் கதிர்களை வீசும்போது அது சற்று இளகும்; அப்படி வீசாமலிருக்கும்போது அது முன்போல் உறைந்து கட்டியாய்ப்போகும்; அவ்வாறே கிறிஸ்தவர்களுக்குத் துன்பமாகிய அக்கினியிருந்தபோது அவர்களுடைய உள்ளம் சேவபக்தியினலும் அன்பினலும் கனிந்துகொண்டிருந்தது; அந்தத் துன்பமில்லாதகாலத்தில் அவர்களுடைய இருதயம் கல்லைப்போல் கடினப்பட்டதால் அவர்கள் பிரபஞ்சமாயைக்கு இடங்கொடுத்து தேவனுக்கு விரோதமாய் நடந்துவந்தார்கள்; ஆகையால் கடவுள் தம்முடைய சபையைச் சுத்தமாக்கும்பொருட்டு (Dioclesian) தியோக்கிளிஷன் இராயன் காலத்தில் இன்னெரு பெரிய துன்பத்தை விட்டார்; அதைப்பற்றி இனிமேல் விபரஞ்சொல்லுவோம். திருச்சபையின் சீர் குலைந்துபோனதற்குக் கிறிஸ்தவர்களுக்குண்டான பல வகைக் கொள்கைபேதங்கள் ஒரு காரணமாயிருந்தது; அவைகளை இவ்விடத்தில் சற்று சுருக்கமாய் எடுத்துரைப்போம்.

Novatianism.

முதலாவது, நோவேஷருடைய கோட்பாடு: ரோமாபுரியில் நோவேஷன் என்று கல்விமானுயிருந்த ஒரு குருவும், கார்தேஜ்பட்டணத்தில் நோவேற்று என்று ஒரு குருவுமிருந்தார்கள்; இவ்விருவராலும் இக்கொள்கையுண்டாயிற்று. தீரியு இராயன்காலத்தில் அநேகம் கிறிஸ்தவர்கள் துன்பத்துக்குப் பயந்து சுத்த சுவிசேஷமார்க்கத்தை விட்டுவிட்டார்கள் என்று முன் சொன்னேமே; அவர்களில் அநேகர் தாங்கள் செய்தது பெரிய பாதகமென்றுணர்ந்து, துயரப்பட்டு, மறுபடியும் தங்களைத் திருச்சபையில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். நோவேஷியர் திருச்சபையை விட்டு ஒருவிசை தள்ளப்பட்டவர்கள் எவ்வளவு கடிந்தபம் புரிந்தபோதிலும் அவர்களை மறுபடியும் சேர்த்துக்கொள்வது அசாத்தியம் என்று சொன்னர்கள்; இதனலே சபைகளுக்குள் அதிகப் பிரிவினைகள் நேரிட்டன; அவைகளைத் தீர்க்கும்பொருட்டு சிப்பிரியன் என்பவரும் இன்னம் அநேகம் கண்காணிமாரும் சங்கங்கூடினர்கள்; அதில் சபையைவிட்டுத் தள்ளப்பட்ட கிறிஸ்தவர்கள் தங்கள் பாவத்தை உண்மையாய் உணர்ந்து அறிக்கை செய்வார்களானில், அவர்களை மறுபடியும் சேர்த்துக்கொள்வது நியாயம் என்று தீர்த்தார்கள்.

Sabellianism.

இரண்டாவது, செபல்லியருடைய கோட்பாடு: இது ஆப்பிரிக்காகண்டத்தில் கண்காணியாயிருந்த செபல்லிய என்பவனுலே உண்டாயிற்று; அவன் திரித்துவ உபதேசத்தைப்பற்றி விபரீதமாய்ப் போதித்தான்; எப்படியெனில் பிதாவாகிய தேவன் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்ததிலும், குமாரனுகிய தேவன் மனுடாவதாரஞ் செய்ததிலும், பரிசுத்த ஆவியாகிய தேவன் மனிதனை எவி எழுப்பிவிடுவதிலும் வித்தியாசமாகத் தோன்றுவதேயன்றி முற்றப்படி ஒரே தேவ அம்சம் மாத்திரம் இருக்கிறதென்று போதித்தான். இந்தத் திரித்துவத்தின்

தன்மை எப்படி யிருக்கிறதென்றால், பிதாவானவர் சூரியனைப்போலவும், குமாரன், அதின் காந்திப்பிரகாசம்போலவும், பரிசுத்த ஆவியோ, சூரியவெப்பம்போல் இருக்கிறதாக இதை உவமானப்படுத்திப் பேசினான். பிதாவாகிய தேவனே உலகரக்ஷகர் என்றும், பாபாத் மாக்களைப் பரிசுத்தஞ்செய்கிறவர் என்றும், அவர் செய்யும் பற்பல செய்கைகளினாலேயே அவர் குமாரன் என்றும் பரிசுத்த ஆவியென்றும் சொல்லப்படுகிறாரேயன்றி, மற்றப்படி திரித்துவத்தில் மூவர் இல்லை என்றும் சாதித்தான். சிரிஞ்ச பட்டணத்திலுள்ள (Noctus) நோயிற்று என்பவன் செபல்லியுடைய கோட்பாட்டுக்கு இசைவாகவே போதித்தான். செபல்லியு என்பவன் பிதாவாகிய தேவனில் ஒரு *அம்சம் வந்து இறிஸ்துநாதருக்குள் வாசஞ்செய்ததாய்ச் சொன்னான். நோயிற்று என்பவன் பிதாவானவரே குமாரனுக்குள் வந்து இருந்ததாகச் சொன்னான். செபல்லியு என்பவன் தெய் வத்தை மூன்றுபங்காகப் பிரித்தான். நோயிற்று என்பவன் அப் படிப் பிரியாமல் பிதாவானவரே வந்து மானிடஜாதியாருக்காகப் பாடுபட்டு ஜீவனை விட்டாரென்று கூறினான்; அதனாலே அவனுக் கும் அவன் கொள்கையைச் சார்ந்தவர்களுக்கும் (Patripassians) பேற்றிரிப்பாஷியன்ஸ் என்ற பெயர்; இதற்குப் பிதா பாடுபட்டார் எனச் சொல்லுகிறவர்கள் என்று அர்த்தம்; இந்த மதபேதம் இரண் டாம் நூற்றாண்டின் கடைகியில் பிராக்சியு என்பவனாலே உற்பத்தி யானபோதிலும் அது இந்த நூற்றாண்டில்தான் அதிக முக்கியப்பட்டு வந்தது.

மூன்றாவது, மனிக்கேயருடைய கோட்பாடு: இது 240-ம் வரு ஷத்தில் பார்சு தேசத்தில் பிறந்த (Manes) மேனிஸ் என்பவனால் உற்பத்தியாயிற்று. அவன் உலகத்திலுண்டாகிய கல்வினை ஜீவினை களில், கல்வினை தேவனால் உண்டாயிற்று என்றும், ஜீவினை சடப் பொருளினாலே உண்டாயிற்று என்றும், குமாரனும் பரிசுத்த ஆவியும் பிதாவாகிய தேவனால் உண்டாக்கப்பட்ட வஸ்துக்களென்றும், இறி ஸ்து சூரியனிலும் சந்திரனிலும் வாசம்பண்ணுவதாயும், பரிசுத்த ஆவி ஆகாயத்தில் வசிப்பதாயும், இவ்வுலகத்தை ஒரு பெரிய தேவ தூதன் தாங்கிக்கொண்டிருக்கிறானென்றும், இறிஸ்து மாயாரூபமாய்

Manicheism, A.D. 240.

* அம்சம், a part.

மனுஷாவதாரம்செய்தானென்றும், இறிஸ்து அனுப்புவதாகச் சொன்ன தேற்றரவாளன் தானே யென்றும், சூரியனும் சந்திரனும் மனிதரின் உத்தரிக்கும் ஸ்தலமென்றும், பழைய ஏற்பாடு அந்தகாரப்பிரபுவின் புஸ்தகமென்றும், புதிய ஏற்பாடு அப்போஸ்தலருக்கு வெகு காலத் திற்குப்பின் இருந்த யாராலேயோ எழுதப்பட்டதென்றும், மனிக் கேயரில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், கேட்கிறவர்கள் என இரண்டு வகுப்பாரிருக்கிறதாகவும், ஜெபம்பண்ணும்போது சூரியன் பக்கம் திரும்பி யிருக்கவேண்டுமென்றும், இன்னும் பலகாரியங்களை யும் போதித்தான்; அவனுடைய கொள்கை குளோஸ்திகருடைய கோட்பாட்டுக்கு இசைவாயிருந்தமையால், அவன் அதை அனுசரித் துக்கொண்டு இறிஸ்துரக்ஷகருக்கிருந்த சரீரம் அரூப சொரூபமே யன்றி மெய்யான தேகமல்ல என்று கூறினான்.

நான்காவது, பவுலியருடைய கோட்பாடு: சாமோசற்ரு என் னும் ஊரில் பிறந்தவனும், 260-ம் வருஷம் அந்தியோகியாபட்டணத்துக்குக் கள்காணி யாயுமிருந்த பவுல் என்பவனுலே இது எற் பாடாயிற்று. ஆற்றீரு, தியோடொற்று என்பவர்களைப்போல இவ னும் இறிஸ்துநாதர் மெய்யான தேகனல்லவென்றும், அவர் உல கத்தில் அவதாரபுருஷராய்த் தோன்றுமுன் அவர் இருக்கவில்லை என்றும் போதித்தான்; ஆயினும் இப்போது கொகினியர், இறிஸ் துநாதர் மற்ற மனுஷரைப்போல் ஒரு சாதாரண மனுஷன் என்று சொல்வதுபோல் அவன் சொல்லவில்லை; அவனுடைய விபரீதக் கொள்கையை விசாரிக்கும்பொருட்டு 265-ம் வருஷத்தில் அந்தி யோகியாபட்டணத்தில் ஒரு சங்கம் கூடிற்று; அச்சங்கத்தில் தன் னுடைய கோட்பாடுகளில் சில விஷயங்களை மாற்றிப்போடுவேன் என்று சொன்னவன் அப்படி மாற்முதினாலே 269-ம் வருஷத்தில் மேலெருரு சங்கங்கூடி அதை விசாரணைசெய்ததில் அவன் தன்னு டைய கொள்கைகளை உபயார்த்தமாய் வியாக்கியானஞ்செய்து தன் னுடைய கல்விச்சபிதாயத்தினுல் தப்பிக்கொள்ளும்படி முயன் றான்; அது காய்க்காமற்போயிற்று. அந்தியோகியாபட்டணத்தில் மல்க்கியன் என்று ஒரு உபாத்தியாயன் இருந்தான்; அவன் பவுல் என்பவனுடைய மாறுபாடுகளை எல்லாம் எடுத்துக்கூறி, அவனுடைய கொள்கை இத்தன்மையுள்ளதென்று சங்கத்தாருக்குச் சரியாய்த் தெரி யக்காட்டினான்; அப்போது அவர்கள் பவுல் என்பவனுடைய கொள்

Paulianism, A.D. 260.

கையைத் தப்பென்று தீர்த்து அவனையும் கண்காணிப்பட்டத்தை விட்டு நீக்கிப்போட்டார்கள்.

இப்படிப்பட்ட விபரீதக்கொள்கைகளினாலே திருச்சபைக்கு வெகு கெடுதல் நேரிட்டது. ஒரு பயிரைப் புழு அரித்து அழித்துவிடுகிறவண்ணமாய் இவைகள் சபையிலுள்ள பக்தியைக் கெடுத்துக்கொண்டுவந்தன. ஆயினும் கடவுளுக்குப் பயந்து அவரிடத்தில் பக்திசெலுத்தி கடந்த புண்ணியபுருஷர் பற்பல இடங்களில் சுடர்களைப்போல் பிரகாசித்துக்கொண்டிருந்தார்கள். கார்தேஜ்பட்டணத்தில் கண்காணியாகிய சிப்பிரியன் என்பவரும், அலெக்சந்திரியாபட்டணத்துக் குருவாகிய ஒரிஜன் என்பவரும் அப்படிப்பட்டவர்களாயிருந்தார்கள் என்று முன்சொன்ன விசேஷங்களினால் தெரியவரும். இன்னொரு மகாத்துமாவைப்பற்றிச் சில காரியங்களை எடுத்துரைப்போம்: கப்பத்தோக்கியா நாட்டினுள்ள நியு செசரியா பட்டணத்தில் கிரகரி தாமற்றர்கு என்று ஒரு கண்காணியாரிருந்தார். இவர் தகப்பனுடைய தியோடோரு ஒரு அஞ்ஞானி; அவர் ஒரிஜன் என்பவனுடைய சிஷ்யனிருந்தானென்றும், அவருடைய பிரசங்கங்களைக் கேட்கேட்டுப் பயன் அடைந்தானென்றும், முன் சொல்லியிருக்கிறோம்; தாமற்றர்கு என்றால் "அதிசயங்களைச் செய்பவன்" என்று அர்த்தம்; அவர் எண்ணிறந்த அற்புதங்களைச் செய்தவரென்று ஜனங்களுக்குள் சாதாரணமாய் ஒரு பேச்சிருந்தபடியினால் அவருக்கு அந்தப் பெயருண்டாயிற்று.

A specimen of the so-called miracles ascribed to Gregory.

அவ்வற்புதங்களில் ஒன்றை இங்ஙனம் எடுத்துரைத்தால் அவைகளெல்லாம் எத்தன்மையுள்ளவைகள் என்று தெரிந்துகொள்ளலாம். ஒருநாள் கிரகரி என்பவர் ஓர் காட்டுவழியாய்ப் போகும்போது காற்றும் மழையும் அதிக மும்முரமாயிருந்தமையால், அவ்விடத்திலிருந்த ஒரு விக்கிரகக் கோவிலிற் போய் ஒதுங்கினார்; அக்கோவிலிலுள்ள [illegible] பூசாரி எப்போதும் சன்னதங்கேட்டுக்கொண்டிருப்பார். கிரகரி என்பவர் அவ்விடத்திற்கு வருகிறபோது அந்தப் பிசாசானது தன்னை கண்டாலும் சிறுகையில் அவரிருக்கும் பெயரைச் சொல்லி நீயே தான்றா இங்கேவா என்று அழைத்து [illegible] கோவிலில் புகவொட்டாமல் விலக்கிவிட்டான்; சொல்லவு

டனே பூசாரி வந்து முறைப்படி சன்னதங்கேட்டதில், இனி இங்கே எங்களுக்குக் குடியிருப்பில்லை, எங்கேயாவது அலைசைதான் போக வேண்டும்; நேற்று இரவில் வந்த் மனுஷன் பண்ணின மந்திரோபாயத்தினாலே எங்களுக்கு இனி இருப்பிடம் இல்லையென்று சன்னதம் உண்டாயிற்று. பூசாரி தன்னாலான வித்தையெல்லாம் வைத்துக் கேட்டபோதிலும் நல்ல உத்தரவு பிறவாததால், அவன் கிரகரி என்பவரைத் தேடிப்போய் அவரிடத்தில் நீ என்ன மோசஞ்செய்தாய்? எங்கள் சுவாமிகளைக் கோவிலுக்கு எழுந்தருளும்படி செய்யாவிட்டால், உன்னை அதிகாரிகளிடத்திற் சொல்லி தண்டனைக்குட்படுத்துவேன் என்று கோபமாய்ப் பேசினான். அதற்கு அவர்: எனக்குப் பேய்களை ஓட்டவும் தெரியும், ஓடிப்போன பேய்களை வருத்தவும் தெரியும் என்று சொல்ல, பூசாரி அதைப்படி காட்டு பார்ப்போம் என்றான்; உடனே அவர் ஒரு சீட்டில் பிசாசே! நீ உன் யதாஸ்தானத்துக்கு வா என்று எழுதி அதை அவன் கையிற் கொடுத்தார்; அவன் அதை வாங்கிக்கொண்டு கோவிலுக்குள் போகவே பழையபடி சன்னதம் பிறந்தது; அதைப்பார்த்து அவன் மிகவும் ஆச்சரியித்து கிறிஸ்துமதமே சத்தியம் என்று நிச்சயித்து, கிரகரி என்பவரிடத்தில் தனக்கு ஞானோபதேசஞ் செய்யும்படி கேட்டுக்கொண்டான்; அவர் அதற்குச் சந்தோஷத்துடன் இணங்கி கிறிஸ்துசமயத்தின் பிரதான சத்தியங்களைப் போதித்துக்கொண்டுவருகையில், இயேசுகாதருடைய திரு அவதார உபதேசத்தை எடுத்துக் கூறினார்; அதை அவன் கேட்டபோது அவனுக்குள் சந்தேகமுண்டாகி, இது எப்படி? இதை கம்பமாட்டேன் என்றான்; அப்போது கிரகரி இது சத்தியமென்று உனக்கு விளங்கும்படி என்ன அற்புதம் வேண்டும்? அதைச் சொன்னால் செய்வேன் என்றார்; அவன் சமீபத்திற் கிடந்த ஒரு கல்லைநோக்கி: இதைத் தானான ஒரு இடத்திற்குப் போகும்படி செய்யவேண்டும் என்றான், அவர் உடனே அப்படிச் செய்தார்; அதை அந்தப் பூசாரி பார்த்து: கிறிஸ்துமதமே சத்தியம் என்று நிச்சயித்து அதை அனுசரித்துக் கொண்டான். கிரகரி என்பவர் கம்புவதற்கிடமில்லாத இத்தன்மையான அநந்தம் அற்புதங்களைச் செய்ததாக தாறுவருஷங்களுக்குப்பின் அவர் பெயர்கொண்ட (Gregory Nyssen) கிரகரி நிசா என்பவர் சொல்லுகிறார்.

திருச்சபைக்கு அற்புதங்களைச்செய்கிற வரம் அறியிலிருந்ததென்பது திருச்சபைச் சரித்திரத்தில் ஒரு முக்கியமான விஷயம். நிறுத்து

மார்க்கத்தை முதல் முதல் பூலோகத்தில் பிரசித்தஞ் செய்வதற்கு அனுகூலமாகத் தேவன் அப்போஸ்தலன்மாருக்கும் ஆதிக்கிறிஸ்தவர்களுக்கும் அற்புதங்களைச் செய்யத்தக்க அருளைக் கடாகூித்திருந்தார். அவர்கள் போதித்தமார்க்கம் சத்தியமென்றும், அதுசாஸ்திரக்கடவுளால் வந்த மெய்வேதம் என்றும், சமஸ்த ஜனங்களுக்கும் தெரியும்பொருட்டு அவர்களுக்கு அந்த வரப்பிரசாதம் அவசியம் வேண்டியிருந்தது; ஆயினும் அது திருச்சபையில் எவ்வளவுகாலமிருந்ததோ அதை நிச்சயமாய்ச் சொல்லக்கூடாது; சிலர் நான்காம் நூற்றாண்டுவரைக்கும் இருந்ததாகச் சொல்லுகிறார்கள்; அது வரவர அஸ்தமிக்கிற சூரியவெளிச்சம்போலக் குறைந்து, நான்காம் நூற்றாண்டில் முற்றிலும் மறைந்துபோயிற்றென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

Observations on the gift of miracles.

கிரகரி தாமற்றர்கு என்பவருடைய சரித்திர விருத்தாந்தத்தை நாம் எடுத்துச்சொல்லப் புருத்தபோது, பூர்வ கிறிஸ்தவர்களுக்கு அற்புதங்களைச் செய்யத்தக்க வரம் இருந்ததென்றதிருஷ்டாந்தப்படித்து வது நமது கருத்தல்ல; அவர் விசுவாசபக்தியும் வைராக்கிய தீரியமுடையவராய் விளங்கினாரென்று காட்டவே நமது அபிப்பிராயம்; அவர் தியு செசரியாவுக்குக் கண்காணியானபோது அப்பட்டணத்தில் பதினேழு கிறிஸ்தவர்கள்மாத்திரம் இருந்ததாகவும், அவர் மரிக்கும் போது அவ்விடத்தில் பதினேழு அஞ்ஞானிகள்மாத்திரம் இருந்தாகவும் சொல்லியிருக்கிறது; இது மெய்யோ பொய்யோ என்று நிச்சயிக்க எதுவில்லாவிட்டாலும், அவர் மகா உண்மையோடும் வைராக்கியத்தோடும் கிறிஸ்துமார்க்கத்தைப் பிரசங்கித்தாரென்றும், அவரை யில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவை எல்லாச் சனங்களுக்கும் மகா பக்திவிநயத்துடன் கூறினாரென்றும் நினைக்கவேண்டியிருக்கிறது. அஞ்ஞானத்தகாரம் நிறைந்த இத்தேசத்தில் இப்படிப்பட்ட உத்தமபோதகன்மார் எழும்புவார்களானால் எவ்வளவு மகிமையாயிருக்கும்.

Gregory's labours and death.

முன்சொன்ன விசேஷங்களினாலே இந்த நூற்றாண்டில் கிறிஸ்து மார்க்கத்தின் ஒளி வெகு மங்கலாய்ப் பிரகாசித்தது என்று தோன்றும். சத்தியாசமார்க்கத்தினாலும், சண்பயிதுண்டான பலவித பிரிவினைகளினாலும், கொள்கைப் பேதங்களினாலும், அநேகம் கிறிஸ்தவர்களுடைய நிய ஒழுக்கங்களினாலும், கிறிஸ்துமார்க்கப் போதகன்மாருடைய அலட்சியத்தினாலும் அந்த திவ்விய சமயத்தின் தூய்மையும் சிறப்பும் ஜொலித்துப் பிரகாசிக்க எதுவில்லாமற்போயிற்று. கிறிஸ்தவர்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே தரித்திருந்து, வீதிகள்தோறும் அப்பம்பிட்டு, மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போசனம்பண்ணித் தேவனைத் துதித்து, ஜனங்கள் எல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்ததைப் பார்த்த புறமதஸ்தருங்கூடவே! இந்தக் கிறிஸ்தவர்கள் எவ்வளவு அன்புள்ளவர்களாயிருக்கிறார்கள் என்று வியந்துபோன காலம் போய்விட்டது. இந்த நூற்றாண்டிலிருந்த கிறிஸ்தவர்கள் கனி இல்லாமல் இலையும் பூவுமுள்ள மரங்களைப் போலிருந்தார்கள்; ஆயினும் சில மகாத்துமாக்கள் சத்தியத்துக்குச் சாட்சிகளாய் உலகப்பற்றுகளைத் தள்ளிவிட்டுத் தேவனிடத்தில் பக்தி செலுத்தி அவருக்குரூகந்தவர்களாய் நடந்துவந்தனர்.

இந்த நூற்றாண்டில் கிறிஸ்துமதம் காலியா, அல்மனியா, பிரித்தானியா, இராபியா மூதலான தேசங்களிலும், ஆசியா, ஆப்பிரிக்காகண்டங்களிலுள்ள அநேக தேசங்களிலும் பிரபலமாயிற்று. இதில் இங்கிலாந்துதேசம் பூர்வீகமாய் கிறிஸ்துமதத்தை அனுசரித்துவந்ததாகத் தோன்றுகிறது. சிலர், ஸ்தேவான் இரத்தசாட்சியாய் மரித்தகாலத்தில் தூன்பத்திருஞல் சிதறுண்டுபோன கிறிஸ்தவர்கள் இங்கிலாந்துதேசத்தில் போய், சுவிசேஷத்தைப் போதித்தார்களென்றும், சிலர் அரிமத்தியா ஊராஞுடைய யோசேப்பு இத்தேசத்தின் முதல் மிஷனெரியா யிருந்தாரென்றும், வேறுசிலர் பவுல் அப்போஸ்தலன் இங்கே கிறிஸ்துமார்க்கத்தை முதலில் பிரசங்கித்தாரென்றும், இப்படி பலவாறாக வினைக்கிறார்கள். எப்படியிருந்தாலும் முதல் நூற்றாண்டிலேயே இங்கிலாந்து தேசம் கிறிஸ்துவின் நாமத்தை ஏற்றுக்கொண்டதாகத் தோன்றுகிறது. "கிறிஸ்தாகூகரின் சத்தியமார்க்கம் பூமியின் கடையாந்தரமட்டும் சென்றது" என்று ஜஸ்ற்றின் மார்ற்றர் சொல்லுகிறார். அப்படியே தெர்த்தல்லியன் என்பவரும், "நாங்கள் நேற்றுண்டானவர்கள் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள்; ஆயினும் நாங்கள் உங்களுடைய நாடுகளாகளையும், கோட்டைகொத்தளங்களையும், தீவுதீவாந்தரங்களையும், நியாயசங்கங்கள் நீதிஸ்தலங்களையும், அரமனைகள் ஆஸ்தானங்களையும் நிரப்பிக்கொண்டோம்; உங்கள் கோவில்களுமாத்திரம் உங்களுக்கு விட்டிருக்கிறோம்" என்று தமது நியாயதிருஷ்டாந்த நிருபத்திற் சொல்லுகி

Spread of the Gospel.

Declension of the Church.

ரூர். கிறிஸ்துமார்க்கம் இப்படியே உலகத்தின் நான்கு திக்குகளிலும் செல்லுமென்றும், இவ்வுலகத்தின் இராஜ்யங்களெல்லாம் நிறைந்து இயேசுசுவாமியின் இராஜ்யங்களாகுமென்றும், அவரே அதற்கு இராஜாவாயிருந்து செங்கோல் செலுத்துவாரென்றும் சத்தியவேதம் கூறுவதை நாம் நினைவில் நிறைத்து சந்தோஷப்படுவோமாக.

QUESTIONS ON THIRD CENTURY.

மூன்றும் நூற்றாண்டின் சரித்திரத்தின்பேரில் கேள்விகள்.

1. ஆறும், ஏழாம், எட்டாம் நிம்பங்கள் முறையே எந்த இராயர்காலத்தில் எந்த வருஷத்தில் நடந்தது?
2. இந்த நூற்றாண்டில் இரத்தசாட்சிகளாய் மரித்த முக்கியமானவர்களின் பேரையும், அவர்களைப்பற்றிய முக்கிய விசேஷங்களையும் எழுதுக.
3. தெர்த்தல்லியன், ஒப்பியன், கிரேசி சமயம்நாடு எழுதினவர்களைப்பற்றித் தெரிந்ததை எழுதுக.
4. ஒரிஜன் என்பவர் யார்? அவருடைய நூல்களைப்பற்றி உமக்கு என்ன தெரியும்?
5. சக்கியாசக்கோட்பாடு நிறுத்த சபையில் எப்படித் தலைக்கியது? சத்திய வேதம் சக்கியாச நிலைமையைப்பற்றி என்ன சொல்லுகிறது?
6. திருச்சபையில் கடந்ததாகச் சொல்லப்படுகிற ஏழு அற்புதங்களென்ன? அவைகளைப்பற்றி என்ன தெரியும்?
7. தோவேஷியர், செபல்லியர், மனிக்கியர் என்பவர்களின் கோட்பாடு என்ன?
8. இக்காலத்துக்கு தேசத்தில் கிறிஸ்துமார்க்கம் எப்போது யாரால் ஸ்தாபகமானது?

நான்காம் நூற்றாண்டு.

ரோமராஜ்யத்தை நான்கு அரசர் ஆளுதல். தியோக்கிளிஷன் காலத்தினுள்ளான பத்தாம் நிம்பம். சபையை அழிக்கும்படித் தீர்ப்புச்செய்தல். நிறைந்தவர்களுக்கு சேர்ட்ட தண்டனைகள். அதேசர் மார்க்கஸ் [illegible] விட்டுவிடுதல். மேலச்சபை சமாதானமாயிருக்குதல். எலிரி [illegible] புராய

னின் கொலைமைகள். கொன்ஸ்தந்தின் ராயன். இராஜ்யத்திலுண்டான விபத்துகள். கலியூ என்பவனின் கொடிய மரணம். அவன் நிறைந்தவர்கள் பகுமாய்க் கடைகியில் செய்த தீர்ப்பு. மக்சிமின், லிசினியு என்பவர்கள். மக்சிமினின் கொடிய மரணம். கொன்ஸ்தந்தின் மல்சென்வியு என்பவனே ஜெயிக்குதல். அற்புதமாய் உண்டான இந்த ஜெயத்தால் இராயன் குணப்படுதல். கொன்ஸ்தந்தீன் லிசினியு என்பவனை ஜெயித்து எகசக்கராதிபதியாகுதல். நிறிஸ்துமார்க்கத்தை ஸ்தாபித்தல். மரணம். சபையில் தீமைபத்தி வளருதல். கொன்ஸ்தந்தினோபுரி கட்டப்படுதல். கொன்ஸ்தந்தீன் ராயனின் மூன்று குமாரர் அவனுக்குப்பின் அரசாளுதல். ஜூலியன் என்பவன் அரசாகிசெய்தல். அவன் மரணம். அவனுக்குப் பின்வந்த இராயர்கள். தோனித்தியர். அவர்கள் உற்பத்தி. அவர்களாலுண்டான கலகம். ஆரியானர் கோட்பாடு. அது தீர்மானிக்கப்படுதல். அதின் அபிவிர்த்தி. நிறிஸ்துவின் இரு தன்மைகள். அதனுடைய. அவர் ஜீவியவிருத்தாந்தம், மரணம். அம்புரோஸ் என்பவர் மிலான்பட்டணத்திற்குக் கண்காணியாகுதல். அவர் ஜீவிய விருத்தாந்தம், மரணம். ஜீக்ருஸ்டியு. திருச்சபைச் சரித்திரத்தை முதல்விசை எழுதின புபியு. டம்பியு. திருச்சபையின் சருக்கம். அப்பொலோனேரியு, மாகிடோனியு என்பவர்களின் கோட்பாடுகள் நிராகரிக்கப்படுதல். சபையின் நிலைமை.

இந்த நூற்றாண்டு திருச்சபைச் சரித்திராவகளுள் மகா விசேஷமுள்ளது; இதில் சபைக்கு சேரிட்ட தண்டனைகளைப் பார்த்தாலுமோ, கடைகியில் அதற்குண்டான ஜெயத்தைப் பார்த்தாலுமோ இதைப்போல முக்கியமுள்ள வேறொரு நூற்றாண்டும் இல்லையென்று சொல்லலாம்; இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் ரோமராஜ்யம் தியோக்கிளிஷன், மக்சிமியன் ஹெர்க்குலியு, கொன்ஸ்தன்ஷியு குளோரு, மக்சிமின் கலீரியு என்ற நான்குபேருடைய ஆளுகைக்குள் இருந்தது; இவர்களில் முன்னே இரண்டுபேருக்கும் இராயர் என்ற பட்டமும், பின்னே இரண்டு பேருக்கும் சைசர் என்ற பட்டமுமிருந்தது; இந்த நான்குபேரிலும் தியோக்கிளிஷன் என்பவனே சிரேஷ்ட அதிகாரம் பெற்றிருந்தான்; இவன்காலத்தில் திருச்சபைக்குப் பத்தாம் தண்டனை சேரிட்டது; இது கடைசித் தண்டனையாயும் மற்றெல்லாவற்றிலும் அதிகக் கொடிய

The Roman Empire under four chiefs Diocleſian, Maximian Herculius, Conſtantius Chlorus and Maximin Galerius.

Tenth Perſecution under Dioclesian.

றிஸ்தவ குருவானவர் ஆல்பன் வீட்டில் போய் ஒளித்துகொண்டு ஜெபத்தபங்களே அதிகமாய்ச் செய்துகொண்டிருந்ததால், ஆல்பனும் கிறிஸ்துவின் அடியானனான். இது ரோம அதிகாரிக்குத் தெரியவரவே, அங்கே ஒளித்துச்சொண்டிருக்கும் குருவானவனை விசாரணைக்குக் கொண்டுவர உத்தரவு பிறந்தது. ஆல்பன் தன் உடுப்பை குருவானவருக்குப் போட்டுக் குருவானவர் உடுப்பை தான் உடுத்துக் கொண்டு அதிகாரிக்குமுன் போனான். அதிகாரிக்கு உண்டான கோபமோ இவ்வளவென்று சொல்லிமுடியாது. ஆதினால் ஆல்பனை சவுக்கினால் அடிக்கச்சொல்லி அன்று சாயங்காலமே தலையை வெட்டிவிட்டார்கள். இவர்தான் இங்கிலாந்து தேசத்தில் மனித முதல் இரத்த சாட்சி. கிறிஸ்தவர்களுக்குண்டாயிருந்த துன்பங்கள் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லக்கூடாது; சிலரைக் கண்டகோடரியினால் வெட்டினார்கள்; சிலரை மாறுகால் மாறுகை வாங்கிப்போட்டார்கள்; சிலரைத் தலைகீழாகக் கட்டித் தூக்கிக்கொண்டு, தாழ நெருப்பு வைத்து வாட்டி வதைத்தார்கள்; சிலரை அக்கினிவளர்த்து அதிலே போட்டு தகனித்தார்கள்; இவ்வகையாய்ப் பெரியோர், சிறியோர், ஸ்திரீ, புருஷர், விருத்தாப்பியர், இளைஞர் என்ற பேதாபேதம் பாராமல் கிறிஸ்தவர்கள் எல்லாரையும் சித்திரவதை செய்தார்கள்; இப்படி ஒரு மாகத்துக்குள் பதினேழாயிரம் கிறிஸ்தவர்கள் மாண்டுபோனார்கள்; லிங்கிலே மாத்திரம் இந்தத் துன்பத்தில் இறந்தவர்கள் 150 லட்சம் ஜனமென்றும், புறத்தேசங்களுக்குப் போய்ச் சுரங்கங்களில் வேலைசெய்யும்படி தீர்ப்புப் பெற்று, அப்படிப் போனதில் பசியினாலும், பலவிதச் சங்கடங்களினாலும் வருந்தி இறந்தவர்கள் 150 லட்சத்துப் பார்க்கிலும் இந்த மடங்கு அதிகமாயிருந்தார்கள் என்றும், கோடு என்னும் ஒருவர் கணக்கிட்டிருக்கிறார்; இந்த அகோர வேதனைகளையெல்லாம் கிறிஸ்தவர்கள் பொறுமையாய்ச் சகித்து: "அதினிமித்தம் இப்பூமியில் கீழ்மையும் லோகமும் கம்முடைய உபத்திரவம் பிரயோசனமான தித்திய கனமகிமையை உண்டாக்குகிறது" என்ற திருவாக்கை நினைத்து, தங்கள் ஜீவனை மனோத்சாகமாய் விட்டுவிட்டார்கள். திருச்சபையினுண்டான அசதி சகலகெல்லாம் அற்றுப்போகவும், அது பசும்பொன்போலப் பரிசுத்தமாகவும் தக்கதாகத் தேவன் அதை இப்படிப் புடமிட்டார்.

இத்தன்பத்தில் இப்படிப் பலர் இயேசு [illegible] தங்கள் உயிரை காணிக்கையாகக் கொடுத்தபோதிலும் அவர்களுக்கு [illegible]

விட்டுவிட்டார்கள்; தேவவசனமாகிய விதை அவர்கள் இருதயமாகிய நிலத்தில் ஏற்றபடி வேர் ஊன்றுததால், அவ்வசனத்தினிமித்தம் அவர்களுக்குத் துன்ப முண்டானபோது அவர்கள் பயந்து, தாங்கள் அனுசரித்திருந்த சத்தியமார்க்கத்துக்கு விரோதமாய் நடந்தார்கள். யுத்தபூமியில் நிற்கிற போர்சேவகன் மாற்றானுக்குப் பயந்து முன் வைத்த காலைப் பின் வைத்து ஓடுவானுகில் அவன் வீரக்கேட்டவனென்று உலகம் அவனை இகழ்வது யதார்த்தமே; அதுபோல ஆத்தும சத்துருக்களோடு போர்செய்யும்படி ஏற்பட்டிருக்கிற கிறிஸ்தவன் துன்பத்துக்குப் பயந்து ஓடுவானுகில், அவனுக்கு வெட்கமும் நிந்தையும் வருமென்பதற்குச் சந்தேகமில்லை. அக்காலத்திலிருந்த கிறிஸ்தவர்களில் அநேகர் தியோக்கிளிதன் பிறப்பித்த முதல் சட்டத்தினால் தங்களுக்கு மரணம் வருமென்று அஞ்சி, தங்களிடத்திலிருந்த சத்திய வேதாகமப் புஸ்தகங்களையெல்லாம் கொண்டுவந்து ரோமாயன் உத்தரவுப்படி சத்துருக்களிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள்; அதனாலே அவர்களுக்குத் துரோகிகள் என்ற அர்த்தங்கொண்ணும் (Traditores) "துராடிற்றர்" என்ற நிந்தையான பெயர் வந்தது. குருக்களும், கன்னாணிகளுமாய் இருந்தவர்களிலுங்கூடச் சிலர் அப்படிச் செய்தார்கள்; வேறுசிலர் சத்தியவேதத்திற்குப் பதிலாக மற்றப் புஸ்தகங்களைக் கொடுத்து அதிகாரிகளை ஏமாற்றினார்கள். இது மார்க்கத்துக்கு எவ்வளவோ இகழ்ச்சியை வருவிக்கத்தக்கதாயிருந்தது.

The apostasy of many Christians.

கிழக்கபையைச்சேர்ந்த கிறிஸ்தவர்களுக்கு இப்படிப்பட்ட கொடிய துன்பமுண்டாயிருக்குங் காலத்தில், மேல்சபையிலுள்ள கிறிஸ்தவர்கள் கூடியவரையில் கேமத்தை அடைந்திருந்தார்கள்; அத்திசையில் அரசாட்சி செய்துவந்த கொன்ஸ்தன்ஷியு குளோரு என்பவன் நல்ல குணசாலியாயும், குடிகள் கண்மையைக் கருதி நடக்கிறவனுமிருந்தான். தியோக்கிளிஷனுடைய சட்டனேப்படி கிறிஸ்தவர்களுடைய கோவில்களை இடித்துப்போட்டபோதிலும், மற்ற விஷயங்களில் அவன் அவர்களுடைய யாதொரு கஷ்டத்தையும் உண்டாக்கவில்லை; அவன் கிறிஸ்துமார்க்கத்தை அனுசரியாதவனுயிருந்த போதிலும், அதன்பேரில் அபிமானங்கொண்டவனுயும், அதினிப்பா

Comparative peace of the western Church under Constantius Chlorus. Cruelties of Galerius.

இராஜனைப்போல கொஞ்சங்குறையக் கிறிஸ்தவனைப்போல நடந்த வனும் இருந்தான்; இதுகாரணத்தைப்பற்றி காலியா, பிரித்தானியா முதலான தேசங்களிலுள்ள கிறிஸ்தவர்கள் ஒருவாறு சமாதானமாயி ருந்தார்கள். கீழ்திசையில் அரசாட்சி நடத்திவந்த தியோக்கிளிஷன் என்பவனும், மக்ஸிமின் என்பவனும், கலீரியு என்பவனுடைய யோசனைக்கு இசைந்து, இராஜ்யத்தை அவன் வசத்தில் விட்டு விட்டதிலுலே அவன் ஏகசக்கரவர்த்தியாயிருந்து, இராஜ்யத்துக்கடுத்த காரியங்களையெல்லாம் தன்னிஷ்டப்படி நடத்திக்கொண்டுவந்தான்; அவன் கிறிஸ்தவர்களுக்குச் செய்த கொடுமைக்கு ஒரு மட்டில்லே. கிறிஸ்தவர்கள் என்கிற பெயரே பூலோகத்தில் இராதபடி அதம்பண்ணிப்போடவேண்டும் என்பது அவன் கொண்ட கொள்கையாயிருந்தது; அவன் கொலைசெய்த கிறிஸ்தவர்களுக்கு ஒரு கணக்கில்லே. தமது பக்தர்களுக்கு சேரிட்ட இந்த உபத்திரவங்களையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த சாக்ஷாத் கடவுளானவர், முன் ஒருகால் எகிப்துதேசத்துக் கொடுங்கோல் அரசனுடைய உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் முறையிட்டுக்கொண்டிருந்த தமது அடியாரைச் சமயம்பார்த்து இரட்சித்தவண்ணமாய், இக்காலத்திலிருந்த கிறிஸ்தவர்களுடைய ஆபத்தைப் பார்த்து இரங்கி, அவர்களை இரட்சிக்கவும், அவர்கள் சத்துருவாகிய இந்தப் பிரபல துஷ்டனைத் தண்டிக்கவும் திருவுள்ளங்கொண்டருளினார்.

Constantine succeeds his father, A.D. 306. Troubles in the Empire.

306-ம் வருஷத்தில் கொன்ஸ்தான்ஷியு குளோரு என்பவன் பிரித்தானியாவிலுள்ள யார்க் என்னும் காட்டில் மரித்தபிற்பாடு, அவன் குமாரனுகிய மகா கொன்ஸ்தந்தீன் என்பவன் தன் தகப்பன் பட்டத்தைப் பெற்றான்; அது கலீரியு என்பவனுடைய கருத்துக்கு முற்றிலும் விரோதமாயிருந்தபோதிலும், ஜனங்கள் அதைக் கவனியாமல் கொன்ஸ்தந்தீன் என்பவனே இராயனுக ஏற்படுத்தினார்கள்; அவன் தன் பிதாவைப்போல குடிகள் விஷயத்தில் அபிமானமுள்ளவனும், கிறிஸ்தவர்களுக்கு யாதொரு இடைஞ்சலில்லாமல் அவர்களைப் பாதுகாக்கிறவனும் இருந்தான். கலீரியு என்பவன் தன் மூர்க்ககுணத்தைச் சிறிதேனும் விடாமல், கிறிஸ்தவர்களை மேன்மேலும் அதிகமதிகமாய் ஒடுக்கிவந்தான்; கொஞ்சக்காலம் சென்றபிற்பாடு அவன் செவீரு என்பவனை இராயனுக்கினான்; அதைமக்ஸிமின் என்பவனுடைய குமாரனும், கலீரியு என்

பவனுடைய மருமகனுமாயிருந்த (Maxentius) மக்சென்ஷியு என்பவன் பார்த்துக் கடுங்கோபமடைந்து, பலவந்தமாய்த் தன்னை இராஜாவாக்கிக்கொண்டதும் அல்லாமல், தன் தகப்பனையும் அரசக்குரிய காரியங்களில் தனக்கு உதவிசெய்யும்படிக்கு ஏற்பாடும் செய்துகொண்டான்.

The miserable end of Galerius. His last act in favour of Christians, A.D. 311.

இப்படியிருக்கும்போது கலீரியு என்ற பரமசண்டாளனுக்கு ஒருகொடிய வியாதிகண்டது: "அரசன் அன்று கேட்பான், தெய்வம் நின்று கேட்கும்" என்ற லோகவசனப்படி, கடவுளானவர் கடையில் இந்தக் கொடிய துஷ்டனைப் பிடித்தார். ஏரோது என்பவனுக்கு வந்த வியாதியைப்போல அவனுக்கும் நேரிட்டது; அதனுலே அவனுடைய எலும்புகளெல்லாம் உக்கி, ழுவே வறண்டு புழுக்களுக்கு இரையானன்; இந்தக் கொடிய வியாதியினுல் அவன் வருந்துகையில், அவன் மனச்சாட்சியும் அவனுக்கு வேதனையுண்பண்ணத் தொடங்கினமையால், அவன் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய்ச் செய்த குரூரத்துக்குப் பரிகாரமாக ஓர் பிரமாணத்தை எழுதிப் பிரசித்தப்படுத்தினன். அதில், "நான் இடித்த தேவாலயங்களைத் திரும்பக் கட்டி, சுற்றமற்ற கிறிஸ்தவர்களுக்குச் செய்த கொடுமைக்குத்தக்க அபராதந் கொடுப்பேன் என்றும், அவர்கள் தேசசட்டங்களையும் ஒழுங்குகளையும் மதித்து நடப்பார்களேயாகில், அவர்கள் தங்கள் மதாசாரப்படி தேவாராதனையை நடத்திக்கொள்ள இடங்கொடுப்பேன் என்றும், அவர்கள்மாத்திரம் தேவகடாக்ஷத்தைப் பெற்றவர்கள், அவர்கள் தங்கள் தேவனிடத்தில் எனக்குச் சுகமுண்டாகவும், தங்களுக்கும் மற்றவர்களுக்கும் க்ஷேமமுண்டாகவும் பிரார்த்திக்கும்படி விரும்புகிறேன்" என்றும் எழுதியிருந்தான்; இந்தப் பிரமாணம் 311-ம் வருஷம் ஏப்ரல்மாதம் பதின்மூன்றுந்தேதி நிக்கோமிதியா பட்டணத்திலே பிரசித்தமாயிற்று; ஆனுல் அந்தப் பாதகனுக்கு வியாதி சற்றேனு மடங்காமல் மும்மூரமானதினுலே சில நாளைக்குள் மரித்துப்போனன். தேவனுக்குத் தூரோகஞ்செய்து, அவரது பிரமாணத்துக்கு விரோதமாய் நடக்கிறவர்களுடைய முடிவு இப்படியேயிருக்கும். இதனுல் கிறிஸ்துசபைக்குக் கொஞ்சக்காலம் சேமம் உண்டாயிற்று.

இப்படி கலீரியு இறந்தபின்பு அவனுடைய பட்டத்தை மக்சிமின் என்பவனும், விசினியு என்பவனும் கட்டிக்கொண்டார்கள். சீரியாவும் எகிப்தும் மக்சிமின் என்பவனுடைய ஆசாட்சிக் குட்பட்டிருந்தன; அவன் கலீரியு இராயன் தன் அந்தியகாலத்தில் கிறிஸ்தவர்கள் பட்சமாய்ச் செய்த பிரமாணத்தை அங்கீகரித்து நடப்பவன்போல மாசீசம்பண்ணினபோதிலும், அஞ்ஞானக் கோவில்களைக் கட்டி, விக்கிரகாராதனையை ஏற்படுத்தி, கடைசியில் கிறிஸ்தவர்களை வெகுவாய்த் துன்பப்படுத்தும்படி ஆரம்பித்தான். தூதனமான துன்பம் கிறிஸ்துசபைக்கு இப்போது உண்டாயிற்று. பொதுவான கிறிஸ்துவின் சபைக்குச் சரியாக "அஞ்ஞான பொதுச்சபை" (Heathen Cr'holic Church) என்றதையும், அதற்கு அஞ்ஞான கண்காணிமாரையும் மக்சிமின் ஏற்படுத்தினான். இதோடு, கிறிஸ்துமார்க்கத்தைத் தூஷிக்கும்படி (Acts of Pilate) பிலாத்துவின் நடபடியென்று ஒரு புஸ்தகம் எழுதி, அதில் பிலாத்து இயேசு இரட்சகனைத் தூஷித்ததாகச் சொல்லப்பட்ட பொய்வார்த்தைகளையெல்லாம் எடுத்துக்காட்டி இந்தப் புஸ்தகத்தை ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் உபயோகிக்கும்படி உத்தரவு பிறப்பித்தான். கடைசியில் இன்னுலெவ்வாம் இயேசுவின் நாமம் அதிகமாய்ப் பிரசித்தமானதேயொழிய இறில்துமார்க்கத்திற்குக் கிஞ்சித்தும் கெடுதி புண்டாகவில்லை. கலீரியு என்பவன் மரணமடையுஞ்சமயத்தில் தனக்குப்பின் விசினியு என்பவன் ராஜ்யத்தைக் கட்டி ஆளவேண்டுமென்று திட்டஞ் செய்தான்; அது மக்சிமின் என்பவனுக்கு மனஸ்தாபமாயிருக்கையால், அவ்விருவருக்குள்ளும் சகிகளுண்டாகி, யுத்தம் நடந்தில், 311-ம் வருஷம் விசினியு என்பவன் ஜெயமடைந்தான்; இந்த யுத்தம் முடிந்தபிற்பாடு, மக்சிமின் என்பவன் தன் சேவகரை நம்பிப் பட்டணத்தேதும், இனிக் கிறிஸ்துமார்க்கத்துக்கு அனுசரணையாயிருக்கவேண்டும் என்று நிர்மானஞ்செய்தான்; இப்படி அவன் கிறிஸ்தவர்களுக்கு உபயோகமாகச் சில பிரமாணங்களை ஏற்படுத்தி, அவர்களைத் தயவாய் நடத்திவந்தபோதிலும், அவன் முன்செய்த பாதகத்துக்குத் தக்க தண்டனை அவனுக்கு வாய்க்கவில்லை; கலீரியு என்பவனுக்கு நேரிட்டதுபோல இவனுக்கும் ஒரு கொடிய வியாதி வந்தது; உள்ளுக்குள் எரிந்தருண்டாகி, அதற்கு என்ன மருந்து சாப்பிட்டபோதிலும் தணியாமல் சகிக்கக்கூடாத வேதனையாயிருந்தது; அப்

Maximin and Licinius. Maximin's miserable fate.

போது அவன் தன் பாவங்களை அறிக்கையிட்டு, கிறிஸ்தவர்களை நிந்தித்த நிந்தைக்கும், அவர்கள் அடியாருக்குச் செய்த கொடுமைக்கும் தனக்கு நேரிட்ட பாடு நியாயந்தான் என்று சொல்லி கஞ்ச தின்று மரித்தான்.

அவனுக்குப்பின் அவனுடைய குமாரனுமாகிய மக்சென்சியு என்பவன் அரசனுக்குடிகளை யிகவும் ஒடுக்கினபடியால், அவர்கள் அவனுடைய கொடுங் கோன்மையைப்பொறுக்கமாட்டாமல்கொன்ஸ்தந்தின் என்பவனிடத்தில் அபயமிட்டார்கள். அவன் மக்சென்சியு என்பவனை எவ்விதத்திலும் அடக்கவேண்டுமென்று "எண்ணஞ்சொண்டு, 312-ம் வருஷத்தில் திரண்ட சேனையுடன் இத்தாலியாவுக்குப் போய், அவனோடே பலத்த யுத்தஞ்செய்து அவனை ஜெயித்தான்; மக்சென்சியு என்பவன் போர்க்களத்தை விட்டுத் தப்பி போடி நீர்ச்சுழியில் விழுந்து இறந்துபோனான்.

Maxentius defeated by Constantine.

இப்படிக் கொன்ஸ்தந்தின் இராயன் யுத்தசத்துக்குப் போகும் வழியில் ஒரு ஆச்சரிய சம்பவம் நடந்ததாகவும், அதனாலே கிறிஸ்துமார்க்கத்துக்கு க்ஷேமமுண்டானதாகவும், அரசனுக்கு ஆத்துமலாபம் உண்டானதாகவும் யூசிபியு என்னும் சரித்திரகாரன் சொல்லுகிறார். அவன் யுத்தம் எப்படி முடியுமோ என்று சிந்தியாமற்று, கிறிஸ்தவர்களுடைய தேவனே மெய்யான தேவன்; அவராலேயே ஜெயங்கொடைக்கவேண்டும் என்று அவரை நோக்கிப் பிரார்த்தனை செய்தானும்; அன்று பகல் "இதனால் வெல்லு" என்று ஜொலிக்கிற அட்சரங்களையுடைய பிரகாசமான ஒரு சிலுவை ஆகாயத்தில் சோன்றினதைப் பார்த்து திகிலடைந்து, அன்று இரவில் தங்கும்போது கிறிஸ்துநாதர் தமது கையில் ஒரு சிலுவையை வைத்துக்கொண்டு அவனுக்குக் காட்சியாகி: "இதையே உனக்கு விருதுக் கொடியாகப் பிடித்துக்கொண்டுபோ" என்றாராம்; அவன் அப்படியே சிலுவைக்கொடியைப் பிடித்துக்கொண்டுபோனதில் எதிரிகள் கலக்கி, கொக்குத்தினில் இராஜாளி பாய்ந்தாற்போல எல்லாரும் மயங்கி விழுந்தார்களாம்; அதுமுதல் அவன் தன் இராணுவத்தில் (Laborum) "லபோரும்" என்ற சொல்லப்பட்ட சிலுவைக் கொடியை காட்டி அதை முன்னடப்பித்து வந்தானாம். மற்ற சரித்திரகாரரும் இதைப்போலவே எழுதியிருக்கிறார்கள். வேய

Constantine's victory ascribed to a miracle; leads to his conversion.

சிலர் இதைச் சந்தேகித்து மிருக்கிறார்கள். இந்த சிலுவைக்கொடியானது கி. பி. 200-ம் வருஷத்திலிருந்த தெர்த்தல்லியன் காலத்திலிருந்ததாகவும், அதின் அட்சரம், "காற்றக்கோம்" என்று சொல்லப்பட்ட நிலவறைகளில் வெட்டப்பட்டிருந்ததாகவும், கொன்ஸ்தந்தீன் சிறு பிராயமுதல் கிறிஸ்தவர்களோடு கூடமாடிவந்ததால் கிறிஸ்துவின் காமதேனுவை அறிந்திருந்ததாகவும், இவருடைய அடியார்கள் யுத்தம் செய்தபோது ஜெயமடைந்தும், அவரோப் பகைத்தவர்கள் அப்ஜெயமடைந்ததையும் கண்முய் அறிந்திருந்தாலும், இந்தச் சிலுவைக் காட்சி கொன்ஸ்தந்தீனின் வெறும் மனோபாவனையாய் இருந்திருக்க வேண்டுமென்று வேதசாஸ்திரிகள் நினைக்கிறார்கள்.

Constantine defeats Licinius and becomes sole master of the Roman Empire, A.D. 324.

இப்படி மக்சென்தியு என்பவன் மடிந்தபின் இராஜ்யம் இரண்டாகப் பிரிந்து, கொன்ஸ்தந்தீன் என்பவனும், லிசினியு என்பவனும் அதில் அரசாட்சி செய்துவந்தார்கள்; அவ்விருவரும் இனிக் கிறிஸ்தவர்கள் தங்கள் மதாசாரப்படி யாதொரு தடையின்றி சகல விஷயங்களையும் நடத்தலாமென்று உத்தரவுபண்ணினதுமன்றி, அதைப்பற்றி 313-ம் வருஷத்தில் மிலான் பட்டணத்தில் ஓர் சட்டமும் ஏற்படுத்தினார்கள்; இதின் முக்கிய சலாக்கியம் என்னவெனில், கிறிஸ்தவர்களின் ஆலயங்கள், ஜெபசபைகள் முதலியவற்றை உடனே அவர்களுக்குத் திரும்பக் கொடுத்துவிடவேண்டுமென்றும், தூன்பப்படுத்தினபோது காடுகளுக்கு ஓடிப்போன கிறிஸ்தவர்கள் திரும்பி வந்துவிடலாம் என்றும், இவர்களுடைய சொத்து சுதந்தரங்களை யாராவது அபகரித்திருந்தால் உடனே கொடுத்துவிடவேண்டும், அப்படி எடுத்தது யாரென்று தெரியாவிட்டால் ராஜாங்கத்தாரே தலைவனைத் தந்துவிடவேண்டுமென்றும், சகல மதஸ்தருக்கும் ஏக சுயாதீனமென்றும் விளம்பரமானதே. இப்படி லிசினிய என்பவன் கொன்ஸ்தந்தீன் என்பவனோடு சேர்ந்து, சிலகாலம்வரையும் கிறிஸ்தவர்களுக்கு அனுகூலமாய் நடந்துவந்தான்; ஆனால் கொன்ஸ்தந்தீன் இராயன் கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து, அவனுடைய அதிகாரம் நாளுக்குநாள் ஸ்திரப்பட்டுவந்ததை லிசினியு என்பவன் கண்டு, பொறுமைகொண்டு, கிறிஸ்தவர்களைத் தூன்பப்படுத்தவும், அஞ்ஞானமார்க்கத்தை நிலைநிறுத்தவும் ஏற்பட்டபடியால், கொன்ஸ்தந்தீன் என்பவன் 324-ம் வருஷத்தில் அவனோடு யுத்தஞ்செய்ததில் அவன் தோல்வியடைந்து எதிர்த்திசை ஓடிப்போகும் வழியில் கஞ்சுண்டி அவன் இறந்துபோனான்; அதுமுதல் மகா கொன்ஸ்தந்தீன் என்பவன் ரோமராஜ்யத்துக்கு ஏகசக்கரவர்த்தியாகினான்.

He establishes the Christian religion on the ruins of Paganism. His death, A.D. 337.

முன் ஒருகால் யூதசபைக்குத் தூன்பமுண்டாயிருந்தபோது, அதற்கு உதவும்படியாகக் கடவுள் மகா மைசாஸ் என்பவனை உயர்த்தினதுபோல, இப்போது கிறிஸ்து சபைக்கு உபத்திரவம் உண்டாயிருந்தகாலத்தில் அதைக் கைகொடுத்துக் காப்பாற்றும்பொருட்டு, மகா கொன்ஸ்தந்தீன் என்பவனை இவ்வளவு ஆச்சரியமான வகையாய் ஏற்படுத்தினார்; அவன் மேற்சொன்னபிரகாரம் இராஜ்யத்தையெல்லாம் தன் குடைக்குள் அடக்கி அரசாட்சி செய்யும்படி தொடங்கினபோது, கிறிஸ்துமார்க்கத்தின் பிரபலத்தை முக்கியமாய்க் கருதி நடந்தான்; அதன்பேரிலுள்ள அபிமானத்தினாலே விக்கிரகக்கோவில்களையெல்லாம் இடிக்கவும், விக்கிரகங்களைத் தவிடுபொடியாய்த் தகர்க்கவும், அஞ்ஞானமார்க்கத்தை அதோகதியாக அழிக்கவும் கட்டளைகொடுத்ததுமன்றி, கிறிஸ்துமார்க்க ஆலயங்களை அலங்காரமாய்க் கட்டவும், தியோக்கிளிஷன் இராயனால் உண்டான தூன்பத்தில் சுரங்கங்களில் வேலைசெய்யும்படி தீர்க்கப்பட்ட கிறிஸ்துமார்க்கப் போதகன்மார் கண்காணிமார் முதலானவர்களை வருவித்தும், இசைந்யமெய்கும் மற்ற மதங்களெல்லாம் ஒழித்து, கிறிஸ்துமார்க்கமே பரிபாலனமடைந்து வரவுந்தக்க ஏற்பாடுகளைச் செய்தான்; அவன் இப்படியெல்லாஞ் செய்தது நியாயமென்று சொல்லக்கூடாது; அவன் தான் அனுசரித்த மார்க்கத்தைப் பிரபலப்படுத்தும்படி முயற்சித்தது சரிதான்; ஆனால் மற்ற மார்க்கங்களை அழித்தது தர்மமல்ல. மதவிஷயத்தில் பிரஜைகள் தங்கள் இஷ்டப்படி நடக்கும்படி விட்டுவிடுவதே தர்ம இராஜாக்களுடைய கடமை; அங்கிலேய அரசாட்சி அத்தன்மையது. அவன் இப்படிச் செய்யாமல் கிறிஸ்துமார்க்கத்துக்குச் சார்பாயிருந்து சட்டங்கள் பிறப்பித்ததினாலே திருச்சபையில் பக்தியும் பரிசுத்தமும் மேன்மேலும் பெருகிக்கொண்டுவந்ததென்று சொல்ல ஏதுவில்லை. உலக டம்பமும், பொருளாசையும், பெருமையும் கிறிஸ்தவர்களிடத்திலும், சபையின் உத்தியோகஸ்தரிடத்திலும் அதிகப்பட்டுக்கொண்டு வந்ததேயன்றி, வேறு பயன் ஒன்றுமில்லை; கிறிஸ்தவர்களுக்குள் பெருமையும், உலக உல்லாசமும் மிருப்பது அம்மார்க்கத்துக்குச் சற்றும் பொருந்தாத காரியமே; இந்தச் சத்தியமார்க்கத்தைக் கீழ்ஜாதித்த சத்

திமூர்த்தியாகிய இயேசுகாதர் மகா சாந்தமும் மனத்தாழ்மையுமுள்ள வாய்ப் பூலோகத்தில் விளங்கினர்; அவரது சாஸ்திரி அடைந்து, அவரது மார்க்கத்தை உலகத்தில் விஸ்தாரமாய்ப் பிரசித்தஞ்செய்த பவுல் அப்போஸ்தலனும் அப்படிப்பட்டவராகவேயிருந்தார். "என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணினேன்" என்கிறார். இது வல்லோ கிறிஸ்துமார்க்கத்துக்கழகு; இதை மீறித்து உலகாசாரங்களை அனுசரித்து நடந்தால், மார்க்கத்துக்கு நிந்தையும் பக்தி வளர்ச்சிக்கு இடையூறும் உண்டாகுமென்பதற்குச் சந்தேகமில்லை. கொன்ஸ்தாந்தீன் என்பவன் கிறிஸ்துமதத்துக்குச் சார்பாயிருந்து, அது தன் இராஜ்யமெங்கும் பிரபலமாகும்படி வேண்டிய முயற்சிகள் செய்தபோதிலும், அதன் தன்மையையும் சாரத்தையும் தன் உள்ளத்தில் உணர்ந்தவனென்று சொல்ல எதுவில்லை. 337-ம் வருஷத்தில் அவன் அறுபத்தைந்து வயதாயிருக்கும்போது மரித்துப்போனான். ரோமாபுரித் தார் சொன்னைப்படி ஞானஸ்நானத்திற்றலே ஓரேமட்டாய்ப் பாவத்தைத் தொலைத்துக்கொள்ளலாம் என்றும் ஞானஸ்நானத்திற்குப்பின் பாவவிமோசனமில்லையென்றும் எண்ணி மரிக்கும்போது, நிக்கோமிதியா கண்காணியாகிய யூசிபியு என்பவனால் ஞானஸ்நானம் பெற்றான்; அவன் இராவிஷயத்தில் கடந்துகொண்டபிரகாரமே அவன் குமாரரும் இன்னும் அநேகம்பேரும் கடந்துகொண்டார்கள்.

இப்படிப் படிப்படியே சபையில் மூடபக்தியும், புறம்பான அலங்காரமும், சடங்காசார ஒழுக்கங்களும் அதிகப்பட்டுவந்தன; இராயனுடைய தாயாகிய ஹெலனுள் என்பவளும் வீண்பக்தி ஆசாரத்தை அனுஷ்டித்தவளாகிருந்தாள்; அவள் ஸ்தலயாத்திரை செய்துகொண்டு, எருசலேம் பட்டணத்திற்குப் போய், இயேசுநாதரை அடக்கஞ்செய்திருந்த கல்லறையின் பக்கத்தில் கட்டப்பட்டிருந்த காமதேவியின் கோவிலை அடியோடு இடித்து, அதன் அஸ்திபாரமண்ணையும் தோண்டி யெறிந்துகொண்டிருக்கும்போது தற்செயலாய் அங்கே மூன்று சிலுவைகள் கிடைத்ததாயும், அவைகளின் பக்கத்தில், "யூதருடைய இராஜாவாகிய நசரேயனாகிய இயேசு" என்று எழுதியிருந்த ஒரு விளாசப்பட்டம் கிடைத்ததாகவும், அந்த மூன்றில் இரட்சகர் பிராணத்தியாகஞ்செய்த சிலுவை எதுவோ? என்று அவள் சந்தேகங்கொண்டிருக்கையில்

Growth of superstition in the Church instanced by the conduct of Helena.

ஒரு வியாதிக்காரி வந்து, இரண்டு சிலுவைகளைத் தொட்டதிலும் சுகமுண்டாகாமல், மூன்றாஞ் சிலுவையைத் தொட்டபாத்திரத்தில் அவள் வியாதி இருந்தவிடம் தெரியாமல் பறந்துபோய்விட்டதாயும், அதன்பேரில் ஹெலனுள் என்பவள் அந்தச் சிலுவைக்கு அவ்விடத்தில் ஒரு பிரம்மாண்டமான கோவிலைக் கட்டி, அதில் பாதிச்சிலுவையை வைத்து ஒரு வெள்ளிப்பெட்டியிலிட்டு, அந்த அக்கோவிலில் வைத்துவிட்டு, பாதியை இராயனுக்கு அனுப்பினதாயும், இராயனும் அதை ஒரு அருட்பொருளைப்போல எண்ணிப் பாதுகாத்துவந்ததாயும், இதுபோல் கிறிஸ்து பிறந்த இடம், பரத்திற்கெழுந்தருளிய இடம், மம்ரேயின் கருவாலி மரமிருந்த இடத்தில் கோவில்கள் கட்டப்பட்டதுமன்றி யூபியு என்னும் சரித்திரகாரர் சொல்லுகிறார்; இவ்விதமாய் அக்காலத்தில் வீண்பக்தி ஆசாரங்கள் வளர்ந்துகொண்டுவந்தன. இரத்தசாட்சிகளாய் மரித்துப்போன அநேக மகாத்மாக்களுடைய எலும்புகளைத் தோண்டி எடுத்து, அவைகளை வணங்காவிட்டாலும் வெகு மதிப்பாய் எண்ணிவந்தார்கள்; அவர்களுக்குத் திருவிழா கொண்டாடினார்கள்; சத்தியமார்க்கத்துக்குச் சற்றேனும் பொருந்தாத இப்படிப்பட்ட கியவழக்கங்களும் ஒழுக்கங்களும் அக்காலத்தில் ஆரம்பமானதால், பிற்காலத்தில் அவைகளெல்லாம் பாப்பு மார்க்கத்துக்குப் பெரிய உரங்குகொல்போலிருந்தன.

கொன்ஸ்தாந்தீன் இராயன் கிறிஸ்துசபைக்கு சன்மையுண்டாகும்படி செய்த முயற்சிகளினாலே இப்படிப்பட்ட தீமைகள் கொண்டன; அவன் தன் பெயர் விளங்கும்படியாக 330-ம் வருஷத்தில் பிரான் கியம் (Byzantium) பட்டணத்திற்குச் சமீபமாய் ஒரு நகரியைக் கட்டி, அதற்குத் தன்பேர் விளங்கும்படிக் கொன்ஸ்தாந்தினோபுரி என்று பெயரிட்டு, அவ்விடத்திலிருந்து கொண்டு அரசாட்சி செய்துவந்தான்.

The building of Constantinople, A.D. 330.

அவனுக்கு மூன்று குமாரர் உண்டு; அவர்களுக்கு இரண்டாம் கொன்ஸ்தாந்தீன் என்றும், கொன்ஸ்தான்ஷியு என்றும், கொன்ஸ்தானு என்றும் பெயர்; இம் மூவரும் தங்கள் தகப்பன் பட்டத்துக்கு வந்து இராஜ்யத்தைக் கட்டி ஆண்டார்கள். இரண்டாம் கொன்ஸ்தாந்தீன் என்பவன் ஸ்பானியாவிலும், காலியாவிலும் அரசாட்சி செய்தான். கொன்ஸ்தான்ஷியு என்பவன் கீழ் இராஜ்யத்தில் ஆசியாவைச் செய்

Constantine's three sons succeed him.

தான். கொன்ஸ்தானு இத்தாலியாவிலும் ஆப்பிரிக்காவிலும் அரசு புரிந்தான். சிலகாலத்துக்குப்பின் இம்மூன்று சகோதரருக்குள்ளும் சச்சரவு உண்டாகி அதில் இரண்டுபேர் இறந்துபோக, கொன்ஸ்தான்ஷியு என்பவன் 358–ம் வருஷத்தில் இராஜ்யமுழுவதுக்கும் சக்கரவர்த்தியானான். மேற்சொன்ன மூன்றுபேரும் அரசாட்சி செய்துவருங்காலத்தில் கிறிஸ்துமார்க்கம் பிரபலமாகிக்கொண்டுவந்தது. கொன்ஸ்தான்ஷியு என்பவன் ஆரியனார் என்னும் பாஷண்டர்களுடைய கோட்பாட்டைப் பரிபாலித்துவந்தான்.

அவன் 361–ம் வருஷத்தில் மரித்துப்போக ஜூலியன் என்பவன் அரசனானான்; அப்பொழுது சபைக்கு மறுபடியும் இக்கட்டுநேரிட்டது; அவன் மகா கொன்ஸ்தந்தீன் இராயனுடைய சகோதரனுடைய ஜூலியு கொன்ஸ்தந்தீன் என்பவனுடைய குமாரன்; அவன் பல கல்விகளையும் நன்றாய்க் கற்றுத் தேர்ந்தவனாயிருந்தான்; அவன் பாலியத்தில் கிறிஸ்துமத உபதேசங்களைக் கற்று, கொன்ஸ்தாந்தினோபுரிச்சபையில் வேதியர்தொழிலைச்செய்துவந்தான்; இப்படியெல்லாம் கிறிஸ்துமதத்தில் அபிமானம் வைத்திருந்த அவன் அக்காலத்திலிருந்த கிறிஸ்தவர்கள் தாறுமாறு நடந்துவந்ததால் மனஸ்திரக்கெட்டு இம்மெய்மார்க்கத்தை விட்டுவிட்டானுமன்றி, அதற்குத் தானால் என்னென்ன இடையூறுகள் செய்யக்கூடுமோ அவைகளெல்லாம் செய்துவந்தான். இக்காலத்திலும் எத்தனையோ ஜுத்துமாக்கள் பெயர்க்கிறிஸ்தவர்களால் மோசம்போகின்றன. நியோக்கிளிஷன் முதலிய அரசர்கள் செய்ததுபோல் திருச்சபையைப் பகிரங்கமாய்த் தின்பப்படுத்துவதிலுலே பயனில்லையென்று அறிந்து, வேறு உபாயங்களைக்கொண்டு அதை அழிக்கும்படி முயன்றான். கிறிஸ்தவர்களுக்குள் கல்விப்பயிற்சிகள் அதிகமாய் நடவாதபடிக்குச் செய்ததுமன்றி, கிறிஸ்துமதத்தின் தூய உபதேசங்களைப் புரட்டித் தப்பாய்ப் போதித்துவந்தவர்களுக்குச் சார்பாயிருந்து, அவர்களுக்கு வேண்டிய அனுகூலங்களையும் செய்தான். கிறிஸ்தவர்களையும் அவர்கள் மார்க்கத்தையும் நிந்தித்துச் சில நூல்கள் உண்டாக்கினான்; கிறிஸ்தவர்களுக்குச் சாக்கார் உத்தியோகமில்லையென்று தீர்ப்புப்பண்ணி, கிறிஸ்தவர்களை கலிலேயர் என்று அழைத்து, அவர்கள் உயர்ந்ததரப் பள்ளிக்கூடங்களில் படித்துக்கொடுக்கப்படாதென்றும், தன்னுடைய படத்தை யாவரும்வணங்கவேண்டுமென்றும் சட்டமுண்டாக்கினான். கிறிஸ்

Julian, the apostate becomes Emperor, A.D. 361—363. His life and death.

தவர்களைத் துன்பப்படுத்தப் பிரியமிருந்தும், அவனால் கூடாமல் போய்விட்டது. தற்காலத்தில் இத்தருக்கள் செய்வதுபோல இவன்று மார்க்கத்திற் கிசைவாய் அஞ்ஞானமார்க்கத்தைக் கொண்டுவரப் பார்த்தான். கிறிஸ்துமதம் பொய்ம்மார்க்கமென்று உலகத்துக்கு ருபிக்கும்பொருட்டு, வேதவசனத்துக்கு விரோதமாய் எருசலேம் தேவாலயத்தை யூதஜனங்கள் கட்டும்படி உத்தரவுசெய்தான்; "ஆனால் அவன் எண்ணம் சித்திக்கவில்லை; அவர்கள் அதைக் கட்டும்போது பூமியிலிருந்து அக்கினி புறப்பட்டு வந்ததாகவும், அதனுடைய கொந்தியையும் நொனியையும் சிற்பாசாரிகள் கண்டு மடிவிழுந்து கட்டவேலையை விட்டுவிட்டதாகவும் சொல்லுகிறார்கள்; இப்படி இந்தச் சண்டாளன் செய்த பிரயத்தனங்கள் ஒன்றும் பயன்படாமல் வியர்த்தமாய்ப் போயின; அந்தியோகியா பட்டணத்திலிருந்த கிறிஸ்தவ ஆலயத்தைச் சார்த்திவிட்டு, அங்கேயிருந்த அஞ்ஞானக்கோவிலில் பூசை செய்யும்படி ஒருவன் போனான். திரளான ஜனங்கள் ஆடுமாடுகளைப் பலியிட்டுக்கொண்டிருப்பார்களென்று நினைத்துப்போனான். ஆனாலோ, ஒரே ஒரு பூசாரி, ஒரு பெரிய வாத்தை அறுத்து விக்கிரகத்துக்குப் பலியிட்டுக்கொண்டிருக்கும் துக்கக் காட்சியைக் கண்டு திரும்பினான். ஒவ்வொரு காலையிலும் ஏதாவது ஒரு விக்கிரகத்திற்குப் பலியிடுவதும், மற்றவர்களுக்கு விசேஷமாய்க் கிறிஸ்தவர்களுக்குப் பணங்கொடுத்தாவது விக்கிரகத்திற்குத் தூபதீபம் காட்டச்சொல்லுவதும் ஜூலியனுக்கு மெத்தப் பிரியம். கிறிஸ்தவர்களாயிருந்த இரண்டு போர்ச்சேவகருக்குப் பணம் தந்து இப்படி செய்யச்சொன்னதற்கு, ஆயிரம் ரூபாய் கொடுத்தாலும் பலியிடமாட்டோம் உன் பணத்தை நீயே வைத்துக்கொள்ளென்று எறிந்துவிட்டுப் போய்விட்டார்கள். அவன் பார்ஸரோடு செய்த ஒரு யுத்தத்தில் காயப்பட்டு உயிர்போருந் தருணத்தில் வடிகிற இரத்தத்தைக் கைநிறையப் பிடித்து, கெரு கோபத்தோடு ஆகாயத்துக்கு நேரே வீசி எறிந்து, ஓ! "கலிலேயனே, நீ என்னை ஜெயித்துக்கொண்டாய்" என்று சொல்லி ஜீவனை விட்டான். ஆம், கலிலேயனாகிய இயேசுசுவாமியே ஜெயமடைந்தார்; இரண்டாம் நூற்றாண்டிலுள்ள (Celsus) செல்சு என்பவனும், மூன்றாம் நூற்றாண்டிலுள்ள (Porphry) பார்பரி என்பவனும், நான்காம் நூற்றாண்டிலிருந்த ஜூலியன் என்ற இந்தப் பாதகனும், இவர்களைப்போலொத்த அநேக பரமசண்டாளரும் தங்கள் கல்வித்திறமையினாலும், சாஸ்திர சம்பிரதாயங்களினாலும் கிறிஸ்துமதத்தை அடி

யக் கூடுமென்றும், மற்றச் சபைகளோடு சேர்ந்தவர்களு
வும் ஞானஸ்நானம் கொடுக்கவேண்டுமென்றும் தீர்த்தி
சொஞ்சக்காலத்துக்குள்ளாக இருபட்சத்தாரும் மக
தர்நினிடத்தில் தங்கள் வியாச்சிய
வருஷம் கொண்டுவந்தார்கள்; அவ
மைலான் என்னும் இடத்தில்

The troubles and wars caused by the Sect.

சிலியன் பட்சத்தில் திர்ப்புச்செய்தான்; அதோடே அவர்களு
ருந்த சம்வாதம் நிமித்தமுள் ஜாயன் அவர்களுடைய கோவி
லெவற்றை இடிக்கவும், அவர்களில் சிலரைக் கொல்லவும் க
யிட்டான்; அதனாலும் அவர்களுடைய காரியம் ஒழுங்காகவி
கொன்ஸ்தந்தீன் மரித்தபின்பு அவன் குமாரனுகிய கொன்ஸ்தான்
என்பவன் அவர்கள் கலகத்தை அமர்த்தும்படி வேண்டிய பிரயத்த
கள் செய்தபோதிலும் பலிக்கவில்லை; அப்பால் ஒரு யுத்தமுண்ட
தில் தோனெற்றிஸ்தர் தோல்வியடைந்ததினாலே அவர்களுடைய
பெலவீனப்பட்டுவந்தது. 362–ம் வருஷத்தில் ஜூலியன் இரா
அவர்களுக்கு அனுகூலமான சில ஏற்பாடுகளைச் செய்தபடி
அவர்களுடைய கை சற்று மேற்பட்டதாக இருந்தது; 377–ம் வரு
தில் கிரேஷியன் ஜாயன் அவர்கள் கோவில்களை எல்லாம் இடி
அவர்கள் தேவாராதனை பண்ணக்கூடாதென்று ஏற்பாடு செய்தார்
இவ்- அளுஸ்தின் என்பவர் அவர்களுக்கு விரோதமாய்க் கலக
கோப் பிரசாரஞ்செய்ததினாலும், அவர்களுடைய காரியம் கலகம்
தான் பெலவீனப்பட்டுப்போயிற்று; இந்தக் கடி 300 வருஷகாலமா
நின்று ஆப்பிரிக்காவிலெல்லாம் பரவிச் சபைக்கு வெகு கேடுக
உண்டாக்கிற்று. தோனெற்றிஸ்தருக்குள்ளிருந்து (Circumcellion
சர்க்கம்செலியன் என்னும் சன்னியாசிகள்போலொத்த ஓர் வகுப்
சுமார் 317–ம் வருஷம்போல் எழும்பினார்கள். இவர்கள் (Nian)
களாய் ஊருக்கூராய் போய் யாகம் எடுத்து தீவனம் செய்துகொ
தப்பேர் வந்தது. இவர்கள் சாதாரணமாய் மெத்த எளியவ
வாங்கத் தெரியாது; மார்க்கதாரியங்களில் வைராக்
போல் காணப்பட்டாலும் அக்கிரமம் அநேகம். ஆண்க
ரும் விசியாசமில்லாமல் நடந்து திரிந்ததால், அக்கிர
மாயிற்று; தங்களைக் கர்த்தருடைய வீரரூரென்று சொ
கள். அல்லேலூயா! அல்லேலூயா! என்று கொல்லிக்
மார்க்கத்தாரைப் பழியாய் அடித்துக் கொல்லுவார்கள்.

மதத்தில் வெ யத்தை எடுக்கப்படாது என்று சொன்னதை நினைத்து
ஞானமார்க்க தடியைமாத்திரம் உபயோகிப்பார்கள். அவர்கள்
இப்படி ளோக்குக் கணக்கு வழக்கில்லை. இப்படிப்பட்டவர்கள்
ம் காணப்படுவதுண்டு.
லும், "க
மொழிப்பைக்கு இதைவிட ஒரு பெரிய தூண்பம் நேரிட்டது;
ருந்த செந்லெக்சந்திரியாபட்டணத்துச் சபைக்
பிரிக்கதாயிருந்த (Arius) ஆரியு என்பவன்
கஷிக்கியிருந்தான்; அவன் கல்வியில் தேர்ந்தவனும், தர்க்கசாஸ்தி
ல் வல்லவனும், தந்திரவித்தைகளில் நிபுணனுமாயிருந்தான்.
மெசந்திரியாபட்டணத்துச் சபைக்கு கண்காணியாயிருந்த
சன்சந்தர் என்பவர் திரித்துவ உபதேசத்தைப்பற்றி வியாக்
கினஞ்செய்கதில், திரித்துவம் ஏகத்துவம் என்றும், குமாரனுன
ன் பிதாவைப்போல நித்தியரென்றும், பிதாவின் சுபாவத்தையும்
அமைபையு முடையவரென்றும் சொன்னா ஆரியு என்பவன்
ஞ விஷயத்தை ஆட்சேபித்து, பிதாவும் குமாரனும் எவ்வளவும்
வர்த்தமில்லாமல் பிரத்தியேக வஸ்துக்களாயிருக்கிறார்களென்றும்,
ரனுனவர் மற்றெல்லாச் சிருஷ்டிகளுக்கும் மேன்மையும் முதன்
ஒழுமுடையவராயும், அவைகளையெல்லாம் படைத்தவராயும் இருந்த
சதிலும், அவர் தன்மையிலும் மேன்மையிலும் பிதாவுக்குக் கீழ்ப்
பென்றும், அவர் ஒரு சிருஷ்டியாயிருப்பதினாலே அவருக்குத்
வக்கமிருந்தது என்றும், அவர் இல்லாதகாலம் ஒன்று இருந்தது என்
ம், பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவினாலே சிருஷ்டிக்கப்பட்டவர்
றும் சாதித்தான்.

குறித்த விபரீதக் கோட்பாடு சபையெங்கும் பரவினதினாலே அலே
ணா அதுசரிக்கத் தலைப்பட்டனர்; அவர்
வத்தது; ர் கல்விமான்களும் மேற்குலத்தைச்
பிரிந்து, ல்வகன்களுமா யிருந்தார்கள்;
நிலும் சே ன்னும் கண்காணியார் ஆரியுவை அழைப்பித்து அவ
வனும், ரியாயங்களை எடுத்துக்காட்டி, அவனைத் திருப்பும்படி
னும், அ ராதினாலே, 320–ம் வருஷத்தில் அலெக்சந்திரியா
னுமிருந்தா று சண்காணிகள் கூடிய ஒரு சங்கத்தை வைத்து,
னும் பேரை ம் அவன் பட்சத்திலிருந்த அதேக்னாயும் சபைக்குப்
மென்று உ
பரிசுத்த சபை

Alexander excommunicates Arius, A.D. 320.

Arianism.

ஸ்துமத் பரிபாலனத்துக்காக 320–ம் வருஷத்தில் எழுதின "திவ்விய ஏற்பாடு" என்னும் ஒரு நூல்மாத்திரம் இப்போது இருக்கிறது. இது இறிஸ்துமார்க்கமேஒன்றுன சத்தியமார்க்கமென்றும், அஞ்ஞானமார்க்கங்கள் சுத்தப் பொய்யென்றும் சற்றவர்களுக் கேற்றவிதமாய் எழுதப் பட்டிருக்கிறது. இது எழுதப்பட்ட பாஷை நடை உயர்ந்தது. இவருடைய இன்னெரு நூலுக்கு "துன்பப்படுத்தப்பட்டவர்களின் மானவரலாறு" என்று பேர். இதில் நேரோஇராயன்முதல் நியோக் கினிஷன்வரையில் இரத்தசாட்சியாய் மரித்தவர்களின் சரித்திரம் சம்பவக்கன் காட்டப்பட்டிருக்கிறது. இவர் திரேவு என்னும் பட்டணத்தில் 330–ம் வருஷம் பெரிய வயதாக மரித்தார்.

Eusebius Pamphilius, the first Ecclesiastical Writer, A.D. 313.

செசரியாபட்டணத்துக் கண்காணியாயிருந்த யுசிபியு பம்பிலியு என்பவரும் பெயர்பெற்ற ஆசிரியராயிருந்தார்; அவர் 267–ம் வருஷத்தில் பலஸ்தீனுவிலே பிறந்து அவ்விடத்தில்தானே அந்தியோகியா, செசரியா என்ற பட்டணங்களில் கல்வி பயின்று 313–ம் வருஷத்தில் செசரியாவிலுள்ள சபைக்குக் கண்காணியானார். மகா கொன்ஸ்தந்தீன் இராயன் அவரை வெகு கனமாயெண்ணி அவருக்குப் பல நிருபங்களே எழுதினதுமன்றி, அடிக்கடி அவருக்கு விருந்துசெய்து வெகு சிநேகபாந்தமாய் நடத்தினான். அவ்வாசிரியர் பிரபந்தங்களே எழுதினார்; அவைகளில் இறிஸ்துநாதர் பிறந்ததுமுதல் யூசியு என்பவன் மரித்த 323–ம் வருஷமட்டுமுள்ள இறிஸ்துசபைச் சரித்திரம் விசேஷமானது; இதையன்றி கொன்ஸ்தந்தின் இராயனுடைய ஜீவிய விருத்தாந்தத்தையும் எழுதினார்; காலாகமம் என்ற ஒருதூதன் நூல் இவர் எழுதியது; இதில் இரண்டு பாகம் உண்டு; முதலாவது சிருஷ்டிப்புமுதல் கி. பி. 325–ம் வருஷம்வரை தேவன் உலகத்தை நடத்திவந்த விதத்தையும், இரண்டாவதுபாகம் உலக சரித்திரத்திலும் நாம் அறியக்கூடிய முக்கிய காரியங்களேயும், பற்பல ஜாதியாரின் வம்ச வரலாற்றையும் தெளிவாய்க் காட்டிவருகிறது. இந்த மாதிரியான நூல் இதற்கு முன்னில்லே. அவர் செய்த இன்னெரு நூலுக்கு பலஸ்தீனுவிலிருந்த இரத்தசாட்சிகளென்று பேர். 325–ம் வருஷம் கைக்கப்பட்ட நீசேயா என்னும் சங்கத்தில் கூடிய 318 கண்காணிமார்களில் இவர் ஒருவர். அவர் 338–ம் வருஷத்தில் அல்லது 340–ம் வருஷத்தில் இறந்திருப்பார்; அவர் இறந்தும் அவர் சரித்தி மறக்கப்படில்லே; சிரேக்க ஆசிரியருக்குள் அவனாப்போல் வாசித்

தவர்களில்லே; ஆகிலும் அவர் எழுதின நூல்களே ஒழுங்கர்யாவது அலங்கார நடையாயாவது எழுதினரென்று சொல்ல எதுவில்லே.

The Church of Christ has always been a little flock.

மேற்சொன்ன மகாத்துமாக்களுடைய திருஷ்டாந்தங்களினுலே அக்காலத்திலும் சத்தியத்துக்குச் சாட்சிகளாய் விளங்கினவர்கள் சிலர் இருந்தார்களென்று ஸ்பஷ்டமாய்த் தோன்றும்; சத்தியசொரூபியாயிருக்கிற சாஸ்திரத் கடவுளே வழிபட்டுவந்த உத்தம பக்தர்களுடைய தொகை எக்காலத்திலும் சிருக்கமாகவே யிருந்தது. "அழைக்கப்பட்டவர்கள் அநேகர் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் சிலர்" என்றும், ஜீவனுக்குப் போகும் நெருக்கமான பாதையில் நடக்கிறவர்கள் கொஞ்சப்பேரென்றும், திருச்சபை நித்திய ஆட்சேக்கூட்டத்துக்கு ஒப்பாயிருக்கும் என்றும் இயேசுகர்தர் திருவுளம்பற்றியிருக்கிறார், ஆகையால் நாம் அந்தச் சிறுகூட்டத்தைச் சேர்ந்தவர்களோ என்றும், நம்முடைய இரட்சிப்பைப் பயத்தோடும் நடுக்கத்தோடும் தேடுகிறோமோ என்றும் நன்றுய்ச் சோதித்தறிவது நம்முடைய கடமையாயிருக்கிறது.

The Heresies of Apollinarius and Macedonius condemned in the Second General Council. A.D. 381.

மேற்சொன்ன விசேஷங்களினுலே இந்த நூற்றாண்டில் இறிஸ்துமார்க்கம் சோமாரூபமெங்கும் பிரசித்தமாவபோதிலும், திருச்சபையில் தேவபக்தி குறைந்துபோயிற்றென்பதுஅறியத்தக்கதாயிருக்கிறது; அதற்கு ஆரியுவினுடைய கோட்பாடே முக்கியகாரணமாயிருந்தது; இதுவுமன்றி இன்னும் பல கொள்கைபேதங்களும் சபையிலுண்டாயிருந்தன. லவோதிக்கேயாபட்டணத்துச் சபைக்குக் கண்காணியாயிருந்த சின்ன அப்பொலனேரியு என்பவன் ஆரியுவினுடைய கோட்பாட்டுக்கு விரோதமாய்க் இறிஸ்துநாதர் மெய்யான மனிதனல்ல என்று சொன்னுன். ஆரியு குமாரன் பிதாவுக்கு சமமானவரல்லவென்று சாதித்தான். அப்பொலனேரியுவோ அவர் தெய்வமானவர் என்று ரூபிக்க, அவருக்கிருந்த பூரண மனித தன்மையைச் சற்று மட்டுப்படுத்திப் பேசினுன். பிலேட்டோ என்னும் கிரேக்காரியன், மனிதனுக்குள் சரீரம், மனம், ஆத்துமா என்னும் மூன்று தன்மை யிருக்கிறதென்று எழுதிவைத்திருந்தான். இதற்கிசைவாக, அப்பொலனேரியு, இறிஸ்துவுக்கு சரீரம், மனமிமாத்திரம் இருந்தது; ஆனல் ஆத்துமாவுக்குப் பதிலாக (Logos) லாகாஸ் எனினப்பட்ட ஒரு

தேவஸ்து இருந்தது; மனிதருக்கிருக்கும் ஆத்துமா இருந்தால், அதற்குச் சுயாதீனசித்தம் இருந்திருக்கும், அது இரட்சகனைப் பாவஞ்செய்ய இடங்கொடுத்திருக்கும், ஆகையால் அவருக்கு இந்த மனுஷீக ஆத்துமா இல்லையென்று சாதித்தான். ஆனால் இரட்சகரோ பாவம் ஒன்று தவிரசகலவிஷயத்திலும் சரியான மனிதனாகவே யிருந்தார். ஆதலையால் இந்தக் கொள்கை தப்பு. கொன்ஸ்தந்தினோபுரிச்சபைக்குக் கண்காணியாயிருந்த மாசிடோனியு என்பவன் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய ஒரு குணமேயன்றி வஸ்துவல்லவென்று போதித்தான்; இந்தக் கோட்பாடுகளை விசாரிக்கும்பொருட்டு, 381-ம் வருஷம் கொன்ஸ்தந்தினோபுரியில் சங்கங்கூடினார்கள்; அதற்கு மகா நியோடோஷியு என்பவன் தலைவனாயிருந்தான்; நூற்றைம்பது கண்காணிமார் வந்திருந்தார்கள்; அவர்கள் அந்தக் கோட்பாடுகளைக் கண்டித்துக் கிறிஸ்துநாதர் மெய்யான மனிதனென்றும், பரிசுத்த ஆவியானவர் ஒரு வஸ்துவென்றும் தீர்த்தார்கள்; பெரிய சங்கங்களில் இது இரண்டாம் சங்கமாம்.

Reflections on the state of the Church.

இந்த நூற்றாண்டில் சபைச்சரித்திரத்தை உற்றாராயுங்கால் முன் குறிப்பிட்டபடி அது சீர்கெட்ட ஸ்திதியிலிருந்ததென்றே சொல்லவேண்டும். கிறிஸ்து மார்க்க ஆலயங்களிலுண்டாயிருந்த உலகடம்பும், ஆசாரமும், பிரிவினைகளும், மதபேதங்களும், சக்தியாசகிலமையும், அவபக்தியும், கலக்கியான சம்பந்தமும் எல்லாம் ஒன்றுசேர்ந்து, கிறிஸ்துமார்க்கத்தின் சுத்தத்தையும் மாட்சிமையையும் கெடுக்கிறதாயிருந்தது; ஆயினும் பூலோகத்தின்கண் விளாபித்திராகின்ற இருளைச் சூரியன் தன் கிரணங்களினால் அகற்றிவிடுகிறாப்போல், கிறிஸ்துமார்க்கத்தின் ஒளி அஞ்ஞானமாகிய இருளைப் போக்கி, மெய்ஞ்ஞான வினக்கை உலகத்தில் எத்திக்கிலும் எற்றுகிறதாயிருந்தது.

QUESTIONS ON FOURTH CENTURY.

நான்காம் நூற்றாண்டின் சரித்திரத்தின்பேரில் கேள்விகள்.

1. பத்தாம் துன்பம் எந்த இராயன்காலத்தில் எத்தனை வருஷம் நடந்தது?
2. இந்தக் காலத்தில் திரினுவர்க்கத்தை அழிக்கும்படி கிறப்பித்த நான்கு சட்டங்கள் எவை?
3. இவ்விராஜ்யசோத்தை முதல் இரத்சாட்சி யார்? அவளைப்பற்றித் தெரிந்ததை எழுதுக.
4. "திராடிற்றர்" என்னும் யாருக்குப் பேர் வந்தது?
5. கனீரியு என்பவனைப்பற்றி உமக்கு என்ன தெரியும்? அவனுக்கு வந்த மூடிவென்ன?
6. கொன்ஸ்தந்தின் எப்படி கிறிஸ்தவனானான்? இவனுடைய நாயைப் பற்றி உமக்கு என்ன தெரியும்?
7. ஜூலியானின் சரித்திரத்தைச் சுருக்கமாய் எழுதுக.
8. தோனித்தியர், அரியானர் கொள்கை என்ன?
9. அம்புரோசைப்பற்றித் தெரிந்ததையெல்லாம் எழுதுக.
10. இந்த நூற்றாண்டில் இருந்த இரண்டு சரித்திராசிரியரைப்பற்றித் தெரிந்ததை எழுதுக. அவர்கள் எழுதிய நூல்கள் எவை?

ஐந்தாம் நூற்றாண்டு.

மகா தியோடோஷியுக்குப்பின் ஆர்க்கோடியு, ஹோனோரியு என்பவர்கள் அரசாளுதல். மேற்கு இராஜ்யம் அழிதல். அதனுண்டான மாறுதல்கள். யோவான் கிருசொஸ்தம். அவர் செய்த நூல்கள். அகுஸ்தின். அவர் குணப்படுவதற்கு அவர் தாயார் கொண்ட வாஞ்சை. அவர் குணப்படுதல். அவர் செய்த நூல்கள். தேவவசனம், மனித சேஷ்டை, இருசயத்திற்கு இலக்கணப்பற்றிய தியானங்கள். அவர் மனோவாஞ்சை நிற்றல். அவர் பிரயாசை, சாந்தமை, மரணம். ஜெரோம் பிறக்குதல். அவர் நூல்கள், குணகுணங்கள். தியோபோன் தபசி. சங்கியாசமார்க்க விர்த்தி. சங்கியாசிகள் நடக்கை. இந்தத் தீய ஏற்பாட்டினால் உண்டான கஷ்டம். பெலாகியர் கோட்பாடு. எபேசுவில் கூடின சங்கத்தில் அது நிராகரிக்கப்படுதல். மூன்றாம் சங்கத்தில் கெலஸ்தியர் கோட்பாடு நிராகரிக்கப்படுதல். நான்காம் சங்கத்தில் ஐத்திகியர் கொள்கை கண்டிக்கப்படுதல். குளோவு குணப்படுதல். பிரித்தானியாவில் திரிந்த மார்க்கம் பிரசித்தமாகுதல். ஸ்காத்தில் சுவிசேஷம் பிரபலமாகுதல். பத்ரிக் என்பவரின் தீவிய விருத்தாந்தம்.

இக்காலத்தின் சபைக்கரித்திரத்தை நன்று யறியவேண்மோதில், உலக இதிகாசத்தையும் ஒருவாறு கவனித்துக் கொள்ளவேண்டியது. மகா கொன்ஸ்தாந்தின் இராயன் இறந்தபிற்பாடி அவன் இராஜ்யம் மேலராஜ்யம் என்றும், கீழராஜ்யம் என்றும் இரண்டாகப் பிரிந்தது. மேலராஜ்யத்துக்கு ரோமாபுரி இராஜதானியாயும், கீழ் ராஜ்யத்துக்குக் கொன்ஸ்தாந்திநோபுரி இராஜதானியாயும் இருந்தது. மகா தியோடோஷியு இராயன் 395–ம் வருஷத்தில் மரித்திப்போக, அவனுடைய இரண்டு குமாரராயிய ஆர்க்கோடியு, ஹோனோரியு என்பவர்கள் அரசை நடத்தினார்கள்; மூத்தவன் கொன்ஸ்தாந்திநோபுரியைத் தன் இராஜதானியாக்கிக்கொண்டு கீழ் ராஜ்யத்தை ஆண்டுவந்தான்; இளையவன் ரோமாபுரியை விட்டு விட்டு, அதற்கு வடக்கே அதிரியாக்கடலுக்குச் சமீபமாயிருந்த (Ravenna) ரவன்னு என்னும் பட்டணத்தை இராஜதானியாக வைத்துக்கொண்டு, மேலராஜ்யத்தை ஆண்டுவந்தான்; இவர்களில்

Arcadius and Honorius succeed Theodosius the Great. The overthrow of the Western Empire by Odoacer, A.D. 476.

இளையவனுடைய ஹோனோரியு என்பவன் சோம்பல் குணமுள்ள வனும், அரசை நடத்த சக்தியற்றவனுமாயிருந்தான்; அந்தச் சமயம்பார்த்து ஐரோப்பாவுக்கு வடக்கிலுள்ள மிலேச்ச ஜாதியார் ஒரு பெருவெள்ளம்போல் திரண்டுவந்து ரோமராஜ்யத்தைத் தங்கள் கைவசப்படுத்தும்படி பிரயத்தனஞ்செய்தார்கள்; அவர்கள் கதர், ஹன்சர், பிராங்கர், எலன்சர், சுவீயர், வண்டலர் முதலான ஜாதியார்; அவர்கள் கல்லாதவர்களும் நாகரீகமற்றவர்களுமாயிருந்தபோதிலும், பராக்கிரமசாலிகளும் யுத்தவீரருமாயிருந்தார்கள்; இவர்களில் கதர் ஜாதியாருக்கு அரசனுயிருந்த (Alaric) அலரிக் என்பவன் 410–ம் வருஷத்தில் ரோமாபுரியைப் பிடித்து அதைத் தன் சேனைக்கு ஆறுகாள் கொள்ளைக்கு விட்டான். அந்த யுத்தத்தில் கடந்த கொடுமையைப்போல் வேறெந்த யுத்தத்திலும் நடக்கவில்லை; ஜனங்களுடைய இரத்தம் வீதிகளில் வெள்ளப்பிரவாகமாய் ஓடிற்று; வெகு அலங்காரமாய்க் கட்டியிருந்த மச்சமாளிகைகள், கூடகோபுரங்கள் எல்லாம் மண்மேடாய்ப் போயின; செல்வம் பொழியும் சிங்காரலம்போயிருந்த அப்பட்டணம் ஒரு கூளப்பொழுதில் பாலைவனம்போல் பாழாய்ப்போயிற்று; உலகத்தில் அதே இராஜ்யங்களைத் தன் கைவசப்படுத்திக்கொண்டு 619 வருஷகாலமாக மற்ற ஜாதியாரால் தொந்தரைப்படாதிருந்த அந்த மகிமையான பட்டணம் மிலேச்சரான கதருக்கு சுலபமாய்ப்போயிற்று; அக்காலந்தொடங்கி அவர்கள் மேலராஜ்யத்தைச்சேர்ந்த பலநாடுகளைக் கொள்ளையடித்து வந்தார்கள்; அதற்கு உடன்தையாயிருந்த ஸ்பானியாதேசத்தையும், பிராங்கர் கல்தேசத்தையும், சுவேனர் இங்கிலாந்துதேசத்தையும், ஹன்சர் பன்னோனியாதேசத்தையும், ஹெல்ரோக்கொத்தர் இத்தாலியாதேசத்தையும் பிடித்து ஆண்டுவந்தார்கள். 476–ம் வருஷத்தில் ஹெருளியர் என்னும் ஜாதியாருக்கு அரசனுயிருந்த (Odoacer) ஓடேசர் என்பவன் அவ்வதனு என்பவரோடு யுத்தஞ்செய்து அவனை ஜெயித்து மேலராஜ்யத்தைத் தன்வசமாக்கிக் கொண்டான்.

அவர்கள் இப்படித் தேசங்களைக் கட்டிக்கொண்டபின் ஐரோப்பாக்கண்டத்தின் ஆசார ஒழுக்கங்களெல்லாம் வெகுவாய் மாறிப்போய்விட்டன; புது அரசாட்சியும், புதுப்பிரமாணங்களும், புதுப்பாஷைகளும், புது நடையுடை பாவனைகளும் உண்டாயின; அவர்கள்

Great Changes follow.

விக்கிரகாராதனைக்காராயிருந்தும் தாங்கள் ஜெயித்த ஜாதியாருடைய மதாசாரங்களையே பெரும்பாலும் அனுசரித்துவந்தார்கள்; அவர்கள் இப்படித் தேவச்செயலால் கிறிஸ்துமார்க்கத்தை அனுசரியாதிருந்தால் அதை அவ்விராஜ்யத்தில் பரிச்சேதம் இல்லாதபடிச் செய்துபோடுவார்கள்; அவர்கள் அநேக வருஷங்களாக அந்தச் சத்தியமார்க்கத்தின் படி நடவாதிருந்தபோதிலும் கடைசியில் அதனுலேயே அவர்களுடைய ஆசார ஒழுக்கங்களெல்லாம் பூவோடுசேர்ந்த நாரும் மணப்பவதுபோல் மணம்பெற்று மேன்மையடைந்தன; அவர்களாலே கிறிஸ்துமதம் பிரபலமாவதற்குத் துவக்கத்தில் பற்பல தடைகளிருந்தும் கடைசியில் அவைகளெல்லாம் நீங்கி கிறிஸ்துமார்க்கம் எங்கும் பரவிவந்தது; அநேகம்பேர் கிறிஸ்துநாதருடைய திருவடிசம்பந்தராய் அவரது மார்க்கத்தைத் தங்கள் சிறந்த நடக்கையினுலே அலங்கரித்து வந்தார்கள்.

John Chrysostom, A.D. 398.

அவர்களில் யோவான் கிருசொஸ்தம் என்பவர் ஒருவராயிருந்தார்; அவர் 354–ம்வருஷத்தில் அந்தியோகியா பட்டணத்திலேஒரு உயர்குலத்தில் பிறந்தவர்; அவர் குழந்தையாயிருக்கும்போதே அவர் தகப்பன் இறந்துபோனர்; இவர் தாண்ட ஆஸ்திக்காரர். அவருடைய தாயாகிய அந்துசான் என்பவள் அவரை வெகு கரிசனமாய்ப் படிப்பித்து பக்தியில் வளர்த்துவந்தாள்; அவர் இளமையில்தானே கிறிஸ்து மார்க்கத்தை அனுசரித்தார்; பாலியமாயிருக்கும்போது நியாயசாஸ்திரம் படிப்பதை விட்டுவிட்டு சந்நியாசிவேஷம் பூண்டு, தபஞ்செய்ய வேண்டும் என்று தீர்மானித்துச் சமீபமாயிருந்த மலைகளுக்குப் போய், அவ்விடத்தில் ஒரு விருத்தாப்பியருடன் நாலு வருஷம் இருந்தார்; அப்பால் அதைவிடத் தனித்த ஒரு குகையிலே இரண்டுவருஷமிருந்து சரீரத்தை ஒடுக்கினதினுலும், அருந்தபம் புரிந்ததினுலும் மிகவும் பெலவீனப்பட்டு அந்தியோகியாவுக்கு வந்தார்; இந்தக் குகையிலே இவருக்கு இருக்க ஒரு நாற்காலி யில்லை; இரவுப்பாக ஒரு கட்டிலில்லை; தரை மெத்த ஈரமாயும் கேவலமாயும் இருந்தது. ஆனல் மனங்கொண்டது மாளிகையென்று சொல்வதுக் கிணங்க, இக்கே இவர் தேவ்தியானம் அதிகம் செய்தார். சத்திய வேதம் முழுவதும் ஒழுங்காயும் கவனமாயும் வாசித்து முடித்தார். அவ்விடத்தில் கொஞ்சக்காலம் குருவாயிருந்து 398–ம் வருஷத்தில் கொன்ஸ்தாந்தினுபுரிச் சபைக்குக் கண்காணியானர்; இந்த உத்தி

யோகத்தைப் பெற்றமாத்திரத்தில் மார்க்க சீர்திருத்தமுண்டாக்கும் படி கருதி, அரியானருடைய கோட்பாட்டினுலும், உலக ஆடம்பரங்களினுலும் சபை சீர்குலைந்திருப்பதைப் பார்த்து, இலேசமுற்று, இந்தக் கசகேடுகளெல்லாம் சபையைவிட் டகற்றவேண்டுமென்று தீர்மானித்து, வெகு கண்டிப்பாய்ப் பிரசங்கஞ்செய்துவந்தார்; அதனுலே இராஜாத்தியாகிய (Eudoxia) யூடோக்சியாள் என்பவளும் சில குருமாரும் இசுவரியவான்களும் பொறுமைகொண்டு இராயனுக்குத் தர்ப்போதனைசெய்ய, அவன் அவளைப் பிடித்துக் கருங்கடல் தரைமுகங்களில் ஒன்றுக்கு அனுப்பிவிட்டான்; அதனுல் கலகம் வரத்தக்கதாயிருந்தபடியால், அவளை முன்னை உத்தியோகத்தில் வைப்பதே கவலென்று ஆலோசித்து அவளைத் திரும்ப அழைப்பித்தான்; அவர் வந்து முன்போல் மார்க்கத்தின்பேரில் பத்திவைராக்கியமாயிருந்தமையால், எதிரிகள் அவனை அர்மீனியாதேசத்திலுள்ள ஒரு காட்டுக்குத் தூரத்திலிடும்படி செய்தார்கள். கொஞ்சக்காலமானபின்பு 407–ம் வருஷத்தில் கருங்கடல்வரைக்குத் தூரமாயுள்ள ஒரு இடத்துக்குப் போகும் வழியில், நடந்த இளைப்பினுலும் சேவகருடைய இம்சையினுலும் அவதிப்பட்டதினுல் சுரங்கண்டு மரிக்குஞ்சமயத்தில், "தேவனுக்கே துதி," "எல்லாவற்றிற்கும் தேவனுக்கே துதி" என்று சொல்லி ஜீவனை விட்டார்; அப்போது அவருக்கு ஐம்பத்துமூன்று பிராயமாயிருந்தது; முப்பது வருஷத்திற்குப்பின்பு அவர் அஸ்தியை எடுத்துவந்து கொன்ஸ்தாந்தினுபுரியில் கூடிவைத்தார்கள்.

His Writings.

கிருசொஸ்தம் என்பவர் கிறிஸ்துசபைக்கு அலங்காரமாயிருந்த பிரசங்கிகளுள் சிரேஷ்டமானவர்; "கிருசொஸ்தம்" என்றால் பொன்வாய் என்றர்த்தம். அவர் சொல்வளமுள்ளவராயும், சாதுரியப் பிரசங்கியாயும் இருந்தமையால், அவருக்கு அந்தப் பெயருண்டாயிற்று; அவருடைய பிரசங்கத்தைக் கேட்கும்படி நாலாதிக்கினுமிருந்து திரளான ஜனங்கள் வருவார்கள்; பல இடங்களுக்குப் போய் தேசாந்தரியாய்ப் பிரசங்கம் செய்தார். காடோ மலையோ எக்கே ஜனங்கள் கூட்டமாயிருப்பார்களோ அக்கேயே வெகு சாதுரியமாய்க் கிறிஸ்துவின் நாமத்தை அறிவிப்பார். அவர் அருமையான பிரசங்கங்களே எழுதினர்; பவுல் அப்போஸ்தலன் எழுதின நிருபங்களுக்கு ஒரு நல்ல உரை செய்தார்; நீதிமானரும் உபதேசத்தைப்பற்றிப் பேசிக்கொண்டு போவதில்: "பவுல் அப்போஸ்தலன் நாம் அவருக்குள் தேவனுடைய நீதியா

திருஸ்நானம் பிரசங்கித்தல்.

கும்படிக்கும்பாவமறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" என்று சொல்லுகிறார்; இது எவ்வளவு ஆழ்ந்த பொருளுள்ளது, இதை எந்த மனிதன் சரியானபடி கிரகித்துக்கொள்ளுவான். தேவன் பாவிகளை நீதிமான்களாக்கும்பொருட்டு நீதிமானைப் பாவியாக்கினார்; ஆயினும் அப்போஸ்தலன் கருத்து இதைவிடச் சிறந்தது. தேவன் நம்மை நீதிமான்களாக்கும்படி என்றுமாத்திரமல்ல, தேவநீதியாக்கும்படி அவரைப் பாவியாக்கினரென்று சொல்லாமல், பாவமாக்கினர் என்று சொல்லியிருக்கிறது; இது நம்முடைய மனதுக்கு எவ்வளவு இன்பத்தையும் ஆறுதலையும் கொடுக்கத்தக்கதாயிருக்கிறது என்று சொல்லுகிறார்.

Augustine, A.D. 354. His mother's anxiety for his Conversion.

மேற்சபையில் திருஸ்நானம் என்பவர் பிரேஷ்டராயிருந்தது போல், மேலச்சபையில் அகுஸ்தின் என்பவர் பெயர்பெற்றவராயிருந்தார்; சகலகுண சம்பன்னராயும் புருஷரத்னமாயும் இருந்த அவர், 354-ம் வருஷத்தில் தாகிடியாகாட்டிலுள்ள தொகஸ்தா என்னும் ஊரில் பிறந்தார்; அவருடைய தகப்பனுக்கு

(Patricius) பற்ரீஷியு என்று பெயர்; தகப்பன் மரணபரியந்தம் அஞ்ஞானமார்க்கத்திலே இருந்தார்; அகுஸ்தினுடைய தாயாகிய மோனிக்கா என்பவள் மகா பதிவிரதையாயும், பக்தியில் நிறைந்தவளாயும் இருந்தாள்; அவருடைய பிதா அவனைக் கல்வியில் தேற்றவேண்டுமென்று பள்ளிக்கு வைத்தார்; ஆனால் அவர் படிப்பின்பேரிலே மனதைச் செலுத்தாமல் சூதாட்டத்தையும் உல்லாசத்தையும் விரும்பி, அதனால் வரும் தண்டனைக்கு விலகும்படி அநேக பொய்களைச் சொல்லிவந்தார்; கொஞ்சகாலத்துக்குப்பின் அவர் கார்தேஜ்பட்டணத்துக்குப் போய், சாதுரிய சாஸ்திரத்தையும் மற்றக் கல்விகளையும் கடைபிடித்து, பின்பு அத்தேசத்துக்குத் திரும்பிவந்து சாதுரியத்தைப்பற்றிப் பிரசங்கித்தபோது, எல்லாரும் அவனைப் புகழ்ந்து கொண்டாடினார்கள்; ஆயினும் அவர் மனிதர்பேரிலுடைய கோட்பாட்டை அனுசரித்துத் தம்முடைய காலத்தைச் சிற்றின்ப உல்லாசங்களில் போக்கிவந்தார்; அப்போது அவருடைய தாயார் அவருக்காக வெகு உருக்கமாய் ஓயாமல் தேவனைப்பார்த்து பிரார்த்தித்துக்கொண்டுவந்தாள்; அவர் தமது அனுபவங்களை விளக்கும் சில நூல்களில் அதைக்குறித்து எப்படிச் சொல்லுகிறாரென்றால், தேவனே என்னைப்பற்றி என் மாதாவுக்கு நம்பிக்கையுண்டாகும்பொருட்டு ஒருகால் ஒரு சொப்பனத்தைக் கடாக்ஷித்தீர்; அதில் அவள் ஒரு பலகையின்மேல் நின்றுகொண்டிருந்ததாயும், அப்போது ஒரு மகானுபாவன் அவளிடத்துக்கு வந்து மாதுசிரோமணியே! நீ வாடினமுகத்தோடு விசேசமுற்றிருப்பானேன் என்று கேட்க, என் மகனுக்காகத்தான் நான் இப்படித் துக்கமாயிருக்கிறேன் என்று சொன்னதாயும், அதைக்கேட்டு அவர் நீ பயப்படாதே, நீ இருக்கிற இடத்திலே உன் மகனும் வந்து சேருவானே என்று உரைத்ததாயும் கண்டாள். சர்வஜீவகாருண்ய கடவுளே! நன்மைக்கடலாயிருக்கிற அருள்நாதனே! இத்தச் சொப்பனம் உம்முடைய அருளாலேயே உண்டாயிற்று; அதை என் தாயார் எனக்குச் சொன்னபோது, நான் அதைக்குறித்து அலட்சியமாய் என் தாயைப் பார்த்து: அம்மா! இதிலே ஒரு விசேஷமுமில்லை; நீ என்னைப்போலவே இருப்பாயென்று தோன்றுகிறது என்றேன்; அதற்கு என் தாய், நான் வார்த்தைசொல்லி முடியுமுன் என்னைப்பார்த்து: மகனே! சொப்பனத்தில் நீ இருக்கிற இடத்துக்கு நான் வருவேன் என்று சொல்லாமல், நானிருக்கிற இடத்துக்கு நீ வருவாயென்று இருக்கிறதே; ஆகையால் நான் உன்னைப்போலாவேன் என்ற நீ எப்படிச் சொல்லலாம் என்றாள்.

அந்தச் சொப்பனத்தினாலே எனக்குண்டான ஆச்சரியத்தைப்பார்க்கிலும், அதற்கு என் தாயார் சொன்ன அர்த்தத்தினாலுண்டான ஆச்சரியம் அதிகமாயிருந்தது; நான் ஒன்பதுவருஷகாலமாய்ப் பாவமாகிய பகுழியில் அகப்பட்டுப் பன்றியைப்போல் உழண்டு புரண்டு வருங்காலத்தில், என் தாயார் நம்பிக்கைவிடாமல் எனக்காக ஓயாமல் பிரார்த்தனை செய்துகொண்டுவருவாள். ஒருநாள் என் மாதா அம்புரோஸ் என்னும் கண்காணியாரிடத்துக்குப் போய், அவர் என்னிடத்தில் சம்பாஷிக்கவும் எனக்குச் சில யுத்திமதிகள் சொல்லவும் வேண்டுமென்று கேட்டுக்கொண்டபோது, அவர் அதற்குச் சம்மதியாமல் உன் மகன் ஒரு துஷ்டன்; அவனிடத்தில் பேசுவதினால் பயனில்லை; அவன் தான்கொண்டதே கொள்கை என்று சாதிப்பான்; நீ அவனுக்காக எப்போதும்போல் பிரார்த்தனை செய்துகொண்டுவா, கடவுள் அவனுக்கு இரங்குவார்; அவனுடைய பாவத்தை அவன் உணரும்படி கிருபை செய்வார்; நானும் ஒருவிசை இப்படித்தான் என் தாயினுடைய வஞ்சகத்தினால் மயங்கி, மனிக்கேயருடைய கோட்பாட்டை அனுசரித்து, அவர்களுடைய நூல்களை வாசித்துக் கொண்டுவந்தேன்; தேவன் கடைசியில் அதெல்லாம் தப்பிதமென்று நான் உணரும்படி அனுக்கிரகித்தார் என்றார்; அதற்கு என் தாயார் சம்மதித்துப் போய்விடாமல், தேம்பித்தேம்பி அழுது, ஐயா! என் மகனிடத்தில் நீர் எவ்விதத்தினும் இரண்டொரு வார்த்தையாவது பேசவேண்டுமென்று கேட்டாள்; இவ்விதமாய் ஒன்பதுவருஷம் அழுது ஜெபம்பண்ணிவந்த அவளுடைய பிடிவாதத்தை அவர் பார்த்து, சற்று விசனமடைந்து, நல்லதம்மா! நீ இப்போது போகலாம், இவ்வளவு கண்ணீரோடே வளர்க்கப்படுகிற பிள்ளை ஒருபோதும் கெட்டுப்போகாது என்று சொன்னார்; அவர் அப்படிச் சொன்னது என் தாய்க்கு வானலோகத்திலிருந்து அசரீரிவாக்கு உண்டானதுபோலிருந்தது என்று எழுதியிருக்கிறார். இப்படியிருக்கும்போது இவருக்குக் கண்ணுக்குக் கண்ணுபோலிருந்த அருமையான நிநேகிதன் ஒருவன் நிமசென்று மரித்துப்போனான். இது அகுஸ்தின் என்பவனைத் திடுக்கிடப் பண்ணிற்று. தேவன் ஒருவரே மாறுதலென்றும், மற்றதெல்லாம் நீர்மேல் குமிழிபோலிருக்கிறதென்றும், அவருடைய அடியாராயிருப்பவர்களுக்குத்தான் பரமானந்தமும் பேரின்ப சந்தோஷங்களு முண்டாகுமென்றும் உணர்ந்து சற்றுச் சீர்ப்படத் தொடங்கினார்.

The circumstances which led to Augustine's conversion, A.D. 384.

அவர் சுமார் முப்பதுவயதாயிருக்கும்போது உத்தியோகம் பார்க்கவேண்டுமென்று இத்தாலியா தேசத்திலிருக்கும்மிலான் பட்டணத்துக்குப்போய், அங்கே அம்புரோஸ் என்ற கண்காணியாரைக் கண்டு அவருடைய பிரசங்கங்களைக் கேட்டுவந்தார்; அவர்மதவிசாரணை செய்யவேண்டுமென்றுவது, ஆத்துமவிசாரத்தைத் தீர்க்கவேண்டுமென்றுவது அவருடைய பிரசங்கங்களைக் கேளாமல், அவர் சாதுரியப் பிரசங்கி என்று லோகப்பிரசித்தமாயிருந்தபடியால், அவர் எப்படிப் பிரசங்கிப்பாரோ, அவருடைய சாதுரியத்தை அறிய வேண்டும் என்ற ஓர் அற்ப நோக்கத்தைக்கொண்டு போனார்; இப்படி அவர் அம்புரோஸ் என்பவர் பிரசங்கங்களைக் கேட்டுவருங்காலத்தில், அவருக்கு மனதில் நல்லுணர்ச்சிகள் உண்டாகி கிறிஸ்துமார்க்கத்தை அனுசரிக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டார்; ஆயினும் அவரைச் சூழ்ந்திருந்த பாவபாசங்களை அறுத்தெறிய அவருக்கு இன்னம் மனம் வாவில்லை; அவர் இப்படி இருமனமாய் இருக்குங்காலத்தில், ஒருநாள் அவரும் அவருடைய நிநேகிதனுமாகிய அலிப்பியு என்பவனும் ஜெபத்தியானஞ்செய்யும்படி ஒரு தோட்டத்துக்குப் போய், அங்கே காத்தான்வேலைப்போல் அவர் ஒரு மரத்தின்மேல் சாஷ்டாங்கமாய் விழுந்து கண்ணீரோடே ஜெபம்பண்ணினார். "தேவனே! எவ்வளவுகாலம் என்பேரில் விசனமாயிருப்பீர்; என் பாவங்களை நினைத்துக் கொண்டிருப்பீர். ஐயோ! என் பாவங்கள் ஒரு சங்கிலிபோல் என்னை இறுகக் கட்டிக்கொண்டிருக்கிறதே; இந்தச் சங்கிலி எப்போது துண்டுதுண்டாய் அறுந்துவிழும்; என் நிறை எப்போது நீங்கிச் சுகம் உண்டாகும்; அற்புதகாரா! அநாதரட்சகா!" என்று மகா வேகனையோடு பிரார்த்தனை செய்தபோது, "எடுத்து வாசி!" "எடுத்து வாசி!" என்று ஒரு சப்தம் சிறுபிள்ளைக் குரல்போல் பிறந்தது; அது யாருடைய சப்தமாய் இருக்குமென்று அங்கும் இங்கும் சுற்றிப்பார்த்தபோது ஒருவரையும் காணவில்லை; பிற்பாடு அது அசரீரிவாக்காயிருக்கவேண்டும் என்று உத்தேசித்துத் தமது நிநேகிதனுடைய அலிப்பியு என்பவனிடத்தில் போய், அவனிடத்திலிருந்த பவுல் அப்போஸ்தலனுடைய நிருபங்கள் அடங்கிய புஸ்தகத்தை வாங்கி அதைத் திறந்து வாசித்தார். "களியாட்டும், வெறியும், வேசித்தனமும், காமவிசாரமும், வாக்குவாதமும், பொறாமையுமுள்ளவர்களாய் நடவாமல் பகலிலே நடக்கிறவர்களைப்போல் சீராய் நடக்கக்கடவோம்; துரிச்சைகளுக்கு

இடமாக உடலைப் பேணுமலிருந்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வைத் தரித்துக்கொள்ளுங்கள்." ரோமர், 13. அதி. 13, 14-ம் வாக்கியம் அவர் கண்ணுக்கு முதல்முதல் தென்பட்டது; அதை வாசித்தவுடனே அவர் மனதிலிருந்த சந்தேக மயக்கங்கள் அற்று, இனித் தேவனுக்குத் தொண்டுசெய்யவேண்டுமெனத் தீர்மானஞ்செய்துகொண்டு தாயிடத்துக்குப் போய், நடந்த அதிசயத்தையெல்லாம் சவிஸ்தாரமாய் எடுத்துச் சொன்னார்; அப்போது அவளுக்குண்டாயிருந்த ஆனந்த சந்தோஷம் இவ்வளவு என்று சொல்லக்கூடாது; அவர் இப்படி ஆச்சரியமானவிதமாய் 384-ம் வருஷத்தில் கிறிஸ்துமார்க்கத்தை மகா பக்தி விநயத்துடன் அனுசரித்து அம்புரோஸ் என்பவரால் அதியோதேத்து என்னும் தன்னுடையமகனுடன்கூடத் தானும் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்; 391-ம் ஆண்டில் குருப்பட்டம்பெற்று 395-ம் வருஷம் ஆப்பிரிக்காவிலுள்ள ஹிப்போபட்டணத்துக்குக் கண்காணியானார்; அந்தக் காலந்தொடுத்து அவர் சுடர்போல் பிரகாசித்திறவாழும், தமது நற்குண நற்செய்கைகளால் கிறிஸ்தவர்களெல்லாருக்கும் அதிசயத்தை உண்டாக்குகிறவராயும் இருந்தார்.

இவர் அதேவிஷயத்தில் மற்றவர்களுக்குச் சிறந்த மாதிரியாயிருந்தார். எப்படியெனில் தனக்குள்ள தெல்லாவற்றையும் இரட்சகர் சொல்லியிருக்கிறபடி விற்றுத் தரித்திரருக்குக் கொடுத்து தேவஊழியத்திற்கென்று தன்னை மும்மடங்கும் சமர்ப்பித்துப்போட்டார். மனிசேயர், தோனித்தியர், பெலேஜியர் என்பவர்களின் மார்க்க கோள்களைத் தன் சாதுரிய நியாய திருட்டாந்தங்களினாலும், சிறந்த நூல்களை எழுதுவதினாலும் கண்டித்துவந்தார். கண்காணியானபின் சுத்தியாசக்கோலமாய் வாசஞ்செய்தார். இவர் சபைப்பாடகரிடத்தாங்களே. ஸ்திரீகள் ஒருவரும் இவருடைய வீட்டுக்கு ஏ உள்ளே வில்லை. தன் சகோதரிமூதலாம் வீட்டிலிருக்க இடம்பெறவில்லை. இவர் எழுதிய நூல்களைப் பின்வரும் எழு வருப்புகளாகப் பிரிக்கலாம்:—

(1) சரித்திரப் பாங்கானது, (2) சாஸ்திரப் பாங்கானது, (3) வேதாகமத்திருட்டாந்தப் பாங்கானது, (4) வேதசாஸ்திரப் பாங்கானது, (5) தர்க்கப் பாங்கானது, (6) வியாக்கியானப் பாங்கானது, (7) கட்டளைத்திட்டப் பாங்கானது.

அவர்கள் எழுதின நூல்போம்மார்க்கத்தின் சகோதரனே விடுமெய்மார்க்கத்தை அனுசரித்தவர்களுக்கு வெகு அதிசயமாயி

தன; அவர் பக்தப் புஸ்தகங்களே எழுதி அவைகளுக்குப் ("Confessions") பாவசங்கீர்த்தனங்கள் என்று பெயரிட்டிருக்கிறார்; அவைகளில் தாம் முன் செய்த பாவதோஷங்களையும் துரோகங்களையும் விரிவாய் எடுத்துக் காட்டி, தேவன் கிருபாவியாகிய தமக்குச் செய்த ஆச்சரியமான நடைகளைப்பற்றிப் புகழ்ந்து பேசுகிறார்; அவைகளில் சிலவற்றை இவ்வண்ணம் எடுத்துரைப்பது கன்னையாயிருக்கும். His writings.

தேவவசனத்தைப்பற்றி, "தேவாவியால் எழுதப்பட்ட சத்திய வேத புஸ்தகத்தை கான் வெகு ஆவலோடு வாசிக்கத் தலைப்பினேன்; அதில் விசேஷமாய் பவுல் அப்போஸ்தலனுடைய நிருபங்களே வாசித்துவந்தேன்; அந்த நிருபங்களுக்கும் நியாயப்பிரமாணத்துக்கும் நிர்க்கதிசனங்களுக்கும் ஒரு பேதமிருந்ததுபோல் முதல்முதல் தோன்றிற்று; இப்போது அப்படி ஒன்றுமில்லை. வேதத்தில் ஏற்ற ஆகமத்தை எடுத்து வாசித்தாலும் எல்லாம் மிகச் சிறப்பாயும் இசைவாயும் இருக்கும். தேவனே நீதம்முடைய அருளால் எனக்குக் கிடைத்த பாக்கியம்; உம்முடைய வேதத்தின் மாட்சிமையைப் பார்த்தத்தக்க நிருபம்மாலேயே உண்டாயிற்று" என்று சொல்லுகிறார். His meditations on the Word of God.

மனிதருடைய நிர்க்கேட்டைப்பற்றி, "ஆண்டவனே! மனிதன் பாவாக்காவாகவேயிருக்கிறான்; நீர் அவனைச் சிருஷ்டித்தபோது அவனுக்குப் பாவமில்லை; அவனாய் அவன் பாவியாகினான். உம்முடைய திருச்சித்தானத்தில் குற்றமில்லாதவன் ஒருவனுமில்லை; இன்றைக்கு பிள்ளைக்குட்டப் பாவம் இருக்கிறது; அவனுடைய அற்பத்தில் அது இல்லாவிட்டாலும் அன் ஆவியில் அது ஒட்டிக்கொண்டிருக்கிறது. பொறுமையும் கோபமும் ஒட்டாரமுமில்லாத பிள்ளை யாதி கான் திர்க்குணத்திலே உருவாகி என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்திருந்த, தேவனே! கான் உமக்குமுன் குற்றமற்றவனாய்க் காணப்படுவதெப்படி?" என்று சொல்லுகிறார். Augustine's reflections on human depravity.

மனிதருடைய இருதயம் மகா வஞ்சகமுள்ளது என்று காட்டும் பொருட்டு, "கான் பாவியனபோது என் சுற்றுவினைப் காக்குபயக்குத் தேவன் என்ன அநுகூலஞ்செய்வேண்டும் என்று பிரார்த்திதேன். ஐயோ கட்சை! எனக்குள்ளிருக்கிற பாவபாசங்களை His reflections on the deceitfulness of the human heart.

எல்லாம் அறுத்துவிடும்; என் கற்புநிலை குலையாமலிருக்கும்படி கடா கஷித்தருளும் என்று பிரார்த்தனைபண்ணினேன்; ஆயினும் அப்படிப் பிரார்த்தனை செய்யும்போதே தேவன் என் ஜெபத்தை இன்னும் கொஞ்சக்காலம் கேளாமலிருக்கவேண்டும் என்றும், எனது துரிச்சை களை இன்னும் மனங்கொண்டபடி நிறைவேற்றித் தீர்க்குமளவும் கடவுள் என் பிரார்த்தனையை அங்கிகரியாமலிருக்கவேண்டும் என்றும் என் கெட்ட மனம் சொன்னது" என்று எழுதுகிறார். "எல்லாவற் றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமா யிருக்கிறது; அதை அறிபவன் யாவன்" என்ற திருவாக்கு மாறுத சத்தியமாகவேயிருக்கிறது.

His aspirations satisfied.

இன்னொரு இடத்தில் அருஸ்தின் என்பவர் நான் தேவனுடைய திருமுகதரிசனம் பெறவும், பேரின்பசாகரத் தில் தோடவும் ஆசித்தேன்; ஆயினும் அவ் வாசை எனக்குள் சற்றேனும் தீராமலிருந்தது. "என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்துக்கும் மேலான தேவனுயிருக்கிற கிறிஸ்தேசு சுவாமியே தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தராயிருக்கிறார் என்றும், தெய்வீகத்தையும் மனுஷீகத்தை யும் பொருந்தின திருஅவதார புருஷராயிருக்கிறார் என்றும், அவரே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார் என்றும் நான் நம்பி, அவ ரது திருவடிகளே அடைந்தமாத்திரத்தில் எனக்குள்ளிருந்த அந்த ஆவல் நிறைவேறிற்று" என்று சொல்லுகிறார்.

His usefulness, humility and death. A.D. 430.

இந்த நூற்றாண்டில் உண்டாயிருந்த மதபேதங்களோ அருஸ்தின் என்பவர் தம்முடைய பிரசங்கங்களினாலும் பிரபந்தங்களினாலும் வெகுவாய்க் கண்டித்து வந்தார். கடவுளுடைய கைமாறில்லாத கடா க்ஷத்தினாலேயே மானிடர் ஈடேறவேண்டுமென்ற சத்தியத்தை மிகத் தெளிவாயும் தீர்க்கமாயும் கூறிவந்தார்; இந்த நூற்றாண்டில் திருச்ச பையில் இவரைவிடப் புகழ்பெற்ற உத்தமபோதகர்கள் ஒருவருமில்லை, அப்படியிருந்தும் அவர் மகா தாழ்மையுள்ளவராயிருந்தார்; அவரு டைய தாழ்மையே அவருடைய மேன்மையைப் பிரகாசமாய்த் தூலக் காட்டிற்று; அவர் எழுபத்தாறு வயதாயிருக்கும்போது அவருக் குச் சுரங்கண்டு 430-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 28-ம் தேதியில் மரித்துப்போனார்; சற்றுவருஷகாலமாய் முற்றிப்போயிட்டணத்துச் சபைக்குப் போதகரும் கண்காணியுமாயிருந்தார். ஒரு கிறிஸ்தவன்

தான் சாகுமுன்பாயத்தம் தன் பாவத்தை நினைத்துத் துக்கப்படவேண் டும் என்று சொல்லுவார்; அவர் வியாதிப்பட்டு மரிக்குஞ்சமயத் தில் தாவீதுராஜா தன் பாவத்தை நினைத்துத் துயரமாய் எழுதியிருக் கிற (Penitential Psalms) பாவ அறிக்கை சங்கீதங்கள் என்று சொல்லப்படும் 6, 32, 38, 51, 102, 130, 143 என்னும் ஏழு சங்கீதங் களையும் அவர் படுத்திருந்த அறைவீட்டுச் சுவரில் எழுதும்படி செய் வித்து, அதை வாசித்து வாசித்துப் புலம்பி அழுதார். "துயரப்படுகி றவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் ஆறுதலடைவார்கள்" என்று தேவன் திருவுளம்பற்றியிருக்கிறபடி, அவர் இந்த மாயப்பிரபஞ்சத்தி லிருந்து தமது பாவங்களை நினைத்துத் துயரப்பட்டபோதிலும், பாவ நாசாயிருக்கிற இரிஸ்தாகூசுர்மூலமாய் அவர் பாவமன்னிப்பைப் பெற்று, துன்பமும் துயரமுமில்லாத பேரின்பலோகஞ் சேர்ந்தார்.

Jerome born, A.D. 331.

மேற்சொன்ன உத்தமபோதகர்களாகிய திருசொல்தம், அருஸ் தின் என்பவர்களேத் தவிர, இந்த நூற்றாண் டில் அநேக தூலாசிரியர்கள் இருந்தார்கள்; அவர்களில் ஜெரோம் என்பவர் பெயர்பெற்ற வர்; ஐரோநிமு என்று இவருக்கு மறுநாமம். இவர் பன்னோனியா வுக்கு அருகான (Stridon) ஸ்திரீடான் ஊரிலே 331-ம் வருஷம் பிறந்தவர்; இவருடைய தாய்தகப்பனையர் கிறிஸ்தவர்கள்; 370-ம் வரு ஷம் இவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. இவருடைய பிதா இவர் நானாவிதக் கல்வியிலும் தேறும்படி வேண்டிய முயற்சி கள் செய்துவந்தார். ஜெரோம் என்பவர் ரோமாபுரிக்குப் போயிருந் தபோது அவருக்குச் சாஸ்திரியசாஸ்திரம், எபிரெயுபாஷை, வேத சாஸ்திரமுதலிய லௌகீக வைதீக கல்விகளையெல்லாம் கற்றுக்கொ டுப்பதற்கு அங்கே கல்வியான்கள் இருந்தார்கள்; அவர்களிடத்தில் படித்துத் தேர்ந்தபின்பு கொஞ்சக்காலம் பல தேசங்களைச் சுற்றிப் பார்த்துக்கொண்டுவந்தார்; பின்பு சீரியாதேசத்துக்கு வந்து தனித்த ஓரிடத்திலிருந்துகொண்டு நாலுவருஷம் வேதத்தைத் திட்பநுட்ப மாய் ஆராய்ச்சிசெய்தார்; அவ்விடத்தில் தேகசௌக்கிய மில்லாதி ருந்தே அவர் கொன்ஸ்தாந்தினோபுரிக்குப் போய், அவ்விருந்து ரோ மாபுரிக்குப் புறப்பட்டுப் போனார்; அவ்விடத்திலிருந்துகொண்டு அநேக புஸ்தகங்களை எழுதினார்; பிற்பாடு 385-ம் வருஷத்தில் தனி வாசியா யிருக்கவேண்டுமென்று தீர்மானித்து, தம்முடனே சிலரைச் சேர்த்துக்கொண்டு இழக்குமுகமாய்ப் பிரயாணஞ்செய்து, எருசலே

மூக்கு அருகானதும் இயேசுகிறிஸ்தர் பிறந்ததுமான பெத்லகேம் ஊரில் வாசம்பண்ணி, அவ்விடத்தில் 91 வயதாயிருக்கும்போது, 420-ம் ஆண்டில் தேகவியோகமானார்.

His writings and character.

இவர் அநேக நூல்களைச் செய்திருக்கிறார்; சத்தியவேதத்தை லத்தீன்பாஷையில் மொழிபெயர்த்தார்; அதற்கு (Vulgate) வல்கத் என்று பெயர்; அந்த மூலத்தை வைத்துக்கொண்டே ரோமான் சபையார் வேதத்தை லத்தீன்பாஷையில் மொழிபெயர்த்து, அதை இந்நாள்வரைக்கும் தங்கள் சபைகளில் வழங்கிவருகிறார்கள்; இவர் கல்விமானாயிருந்தபோதிலும் முற்கோபியாயிருந்தார்; இவர் எழுதின நூல்களிலே மூடபக்தி வளர்ந்துவந்தது; ஆயினும் லத்தீன் பாஷையிலெழுதின பூர்வபிதாக்களுக்குள் இவரே பெயர்பெற்ற வேதவியாக்கியானியாயிருந்தார். அம்புரோஸ், அகுஸ்தின், ஜெரோம் என்னும் இம்மூன்று லத்தீன் கர்த்தாக்களில் இவனையே அதிகம் சிறந்தவனென்று சொல்லலாம். இவர் மேலச்சபைக்கும் கீழ்ச்சபைக்கும் சம்பிரதி தொடர்போலிருந்தாரென்று சொல்லலாம். இவருடைய நூல்களை நான்கு வகுப்பாகப் பிரிக்கலாம்:—

(1) நிருபங்கள்:—இவைகளின் மொத்தத்தொகை சுமார் 150; இது பலருக்குப் பல விஷயங்களைப்பற்றி எழுதப்பட்டது.

(2) நியாய நிருஷ்டாந்தக்கதைகளும், ஜீவிய சரித்திரங்களும்:—இதில் சிலது சந்நியாசிகளைப்பற்றிய வரலாறு; சிலது ஜீவிய சரித்திரங்கள்.

(3) வேத வியாக்கியானப் புஸ்தகங்கள்.

(4) சத்தியவேதத் திருப்புதல்.

Simeon the Stylite.

இந்த ஜெரோம் என்பவர் சந்நியாச ஒழுக்கத்தை வெகுவாய் அனுஷ்டித்து வந்தவர்; இந்த நூற்றாண்டின் மத்தியில் முன்னே நாம் சொல்லியிருக்கிறபடி சிரியாதேசத்தானாகிய சிமோன் என்ற பெயர்போன ஒரு சந்நியாசியிருந்தான்; இவன் அத்தேசத்திலுள்ள ஒரு மலையின் உச்சியில் கட்டியிருந்த ஒரு சுற்றாண்மேலிருந்து முப்பத்தாறுவருஷம் கடந்தபம் புரிந்தான்; அதனாலே அவனுக்கு "ஸ்தம்ப தபசு சிமோன்" என்ற பெயர் உண்டாயிற்று; அவன் வேறொரு தானில் ஏறுகிறதற்கேயன்றி, மற்றப்படி தானிருக்கும் தூணைவிட்டு இறங்கமாட்டான்; இப்படி

அவன் மாறிமாறி ஐந்து தூணில் வாசம்பண்ணினவன்தான்; கடைசியில் அவனிருந்த தூண், அறுபதடி உயரமும், மூன்றடி அகலமுமுள்ளது; அதில் அவன் பதினெந்து வருஷம்வரையிலுமிருந்து, வெயில், மழை, பனி, காற்று எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு அருந்தபஞ் செய்துவந்தான்; தூண் ஒடுக்கமாயிருந்தினாலே அவன் உட்காரவும் படுக்கவும் இடமில்லாமல் ஓரே நிலையில் நின்றுகொண்டு இருந்தானென்றும், அருளோசூயமுதல் சாயங்காலம் மூன்றுமணிவரைக்கும் ஜெபத்தியானஞ்செய்தானென்றும், அதுமுதல் பொழுது அஸ்தமிக்குமட்டும் தன்னைக் காணவந்த ஜனங்களுக்குப் பிரசங்கஞ்செய்துவந்தானென்றும் சொல்லுகிறார்கள். ஸ்திரீ ஜனங்கள் தன்னைப் பார்க்க வரக்கூடாதென்று தடுத்துவிட்டான்; ஒருநாள் அவளைப் பெற்ற மாதா அவனைப் பார்க்கவேண்டுமென்று வந்தபோது, கூடாதென்று தடுத்தமையால், அவள் துயரம் பொறுக்கமாட்டாமல் மூன்றுநாள் இறந்துபோனாள்.

Spread of Monkery.

இப்படி இந்த நூற்றாண்டில் சந்நியாச ஒழுக்கத்தினாலே சபையில் அவபக்தியும் அஞ்ஞானாந்தகாரமும் பெருகிக்கொண்டுவந்தது; அதை சேவபக்தியில் இறந்தவர்களாயிருந்த அதனாசியு, பேசில், ஜெரோம், அகுஸ்தின் என்பவர்களும் புகழ்ந்து பேசினார்கள்; தனவந்தர்களாயிருந்தவர்களும் இப்படி இல்லறத்தை விட்டுத் துறவறத்தை அனுசரித்தவர்களுக்கு மடங்களைக் கட்டும்படி அளவற்ற திரவியங்களைத் தானஞ்செய்தது மன்றி, கடவுளுடைய கடாக்ஷத்தைப்பெறுவதற்கு இதுவே உத்தமவழியென்று நினைத்து, தாய்களும் அந்தச் சந்நியாசிமடங்களுக்குப் போய் வசித்துவந்தார்கள்; இந்த ஒழுக்கத்தைப் புருஷர்மாத்திரமல்ல, ஸ்திரீகளும் அனுசரித்தார்கள்; இந்தச் சந்நியாசப்பெண்களுக்காக மடங்கள் கட்டப்பட்டன; அவர்கள் இல்லறத்துக்குரிய சகல ஒழுக்கங்களையும் தவிர்த்துவிட்டு, தபோபலத்தினால் பாதகியடையலாம் என்று எண்ணி மடங்களிற்போய்ச் சஞ்சரித்துவந்தார்கள்; இப்படி எங்கே பார்த்தாலும் சந்நியாசமார்க்கம் ஒரு கொள்ளைநோய்போல் பரந்து எல்லாரையும் பிடித்துக்கொண்டது; துறந்தவர்களுடைய தொகைக்குக் கணக்கில்லை. மார்டின் என்ற ஒரு சந்நியாசி இறந்துபோனபோது, அவனுடைய பாடைக்குப் பின்னால் இரண்டாயிரஞ் சந்நியாசிகள் அழுதுகொண்டு போனார்களாம்.

இப்படிப்பட்ட துறவற ஒழுக்கத்தினாலே கிறிஸ்துமார்க்கத்துக்கு வெகு கெடுதியுண்டாயிற்று. வனங்களிலும் மடங்களிலும் பற்றற்றவர்கள்போலும் பக்திமான்கள்போலும் மாரீசம்பண்ணிக்கொண்டு வசித்துவந்தவர்களில் அநேகர் உலக உல்லாசங்களுக்கும் சிற்றின்பங்களுக்கும் மனங்கொண்டபடி இடங்கொடுத்து மார்க்கத்துக்கு அனமாய் நடந்துவந்தார்கள்; அவைகளையெல்லாம் சொல்லப்போனால் விரியும்.

Remarks on the conduct of Monks.

ஆயினும் இந்தச் சந்நியாசமார்க்கத்தினால் ஒரு விசேஷித்த நன்மையுண்டாயிற்று. பாஷாணமும் பலரோகங்களுக்கு ஔஷதம் ஆவதுபோல, இந்தக் கொடிய சந்நியாச ஒழுக்கமும் ஒருவாறு சபை விர்த்திக்கு ஏதுவாயிற்று. அறியாமையும் அந்தகாரமும் வளர்ந்து வந்தகாலங்களில் வடதிசையிலிருந்து கின்மூடரான மிலேச்சஜாதியார் ஐரோப்பாக்கண்டமெங்கும் சென்று சர்வ கொள்ளையாடினதினாலே, சாஸ்திரப்புஸ்தகங்கள் எல்லாம் அற்றுப்போயின; சந்நியாசி மடங்களில்மாத்திரம் அவைகள் பரிபாலிக்கப்பட்டுவந்தன; அவ்விடங்களில் புஸ்தகசாலைகளிருந்தமையால், அவைகளில் கல்விக்குரிய புஸ்தகங்களெல்லாம் சேதமடையாமல் இருந்து, கல்விவிர்த்தியடைந்தகாலத்தில் அவைகள் சனபக்கு மிகவும் உபயோகமாயிருந்தன; இதவுமன்றி வனவாசிகளாயும் சந்நியாசிகளாயும் இருந்தவர்களில் அநேகர் நாலாதிக்கிலும் போய்க் கிறிஸ்துமதத்தைப் பிரசித்தப்படுத்திவந்தார்கள்; இவ்விதமாய்ப் பல நீமைகளுக்குக் காரணமாயிருந்த இந்தச் சந்நியாச ஒழுக்கத்தினாலே நன்மையுண்டாகும்படியாகவும் கடவுள் அனுக்கிரகஞ்செய்தார்.

Good resulting even from their evil system.

இந்த நூற்றாண்டில் சந்நியாசமார்க்கம் விருத்தியடைந்திருந்தபோல, மதபேதங்களும் விருத்தியடைந்து கொண்டுவந்தன. பிரித்தானியாத் தீவில் பிறந்த பிலேஜியுஎன்பவன் கிறிஸ்துமதத்துக்குப் பொருந்தாத ஒரு கோட்பாட்டை புண்டாக்கினான்; இவனுடைய சொந்தப்பேர் "மார்கன்," "பிலேஜியு" என்றால் கடலைச்சேர்ந்தவன் என்றர்த்தம். மனிதன் சுபாவத்தில் கிர்கெட்டவனல்ல என்றும், அவன் புத்தி தெளிவும் பக்தியாய் நடக்கவும் தேவஅருள் வேண்டியதில்லையென்றும், ஆதாம் செய்த பாவம் அவனோடே நின்றுவிட்டதே

Pelagianism appears in Rome, A.D. 404 or 405.

அல்லாமல் அவன் சந்ததியை அணுகவில்லை என்றும், அவன் பாவஞ் செய்யாததற்குமுன் நிர்விகாரணசுத்தியுடையவனு மிருந்தவண்ணம் இயற்கையாய் மனிதரெல்லாரும் அவ்விதமாகவே பிறக்கிறார்களென்றும், அவர்கள் தங்களுடைய சுயகருமங்களினாலும் சத்துவங்களினாலும் தேவபக்தியாய் நடக்கலாமென்றும், அதற்கு தேவகடாக்ஷமும் பரிசுத்தாவியின் சகாயமும் வேண்டியதில்லை என்றும் போதித்தான்; அவன் இந்த விபரீதக் கோட்பாட்டை 404-ம் அல்லது 405-ம் வருஷத்தில் முதல்முதல் ரோமாபுரியில் பிரசித்தஞ்செய்தபோது, அதற்கு அநேகர் பழுதுகூறினதினாலே அவன் ஆப்பிரிக்காவிலுள்ள கார்தேஜ் பட்டணத்துக்குப் போய், அங்கே தன் கொள்கையைப் பிரசித்தப்படுத்தினான்; அவன் யுக்திசாலியும் நன்னடக்கையு முள்ளவனுப் இருந்தமையால் அநேகர் அதை அங்கீகரித்துக்கொண்டார்கள். இதுதான் இவ்விலாந்து தேசத்தில் எழும்பிய முதல் மார்க்கபேதம். இவன் இந்தத் தேசத்தில் சந்நியாசியாயிருந்து, ஒரிஜன் என்பவருடைய கொள்கைகளை அதிகமாய் அனுசரித்துவந்தான். இவன் ரோமாபுரியிலிருந்தபோது அருஸ்தின் என்பவர் இவனைப்பற்றி என்ன சொன்னதென்றால், "இவன் வெகுகாலம் உயிரோடு இருந்தான்; உத்தமர்களோடு சகவாசஞ்செய்துவந்தான்" என்பதே. ரோமையிலிருந்தபோது பவுல் அப்போஸ்தலனின் நிருபங்களுக்கு கருக்க வியாக்கியானமும், ரோமைப்பட்டணம் "அலரிக்" என்பவனால் கொள்ளையடிக்கப்பட்டதைப்பற்றித் தான் கண்ணாரக்கண்டதைச் சவிஸ்தாரமாய் எழுதியிருக்கிறான். இவனோடுகூடச் சேர்ந்துகொண்டவர்கள் அநேகர்.

விசேஷமாய் இவ்விலாந்துதேசத்திலுள்ள செலெஸ்தியன் என்னும் ஒரு சந்நியாசி அதற்குச் சார்பாயிருந்து, அது எங்கும் பரவும்படி வேண்டிய முயற்சிகள் செய்தான்; எருசலேம்பட்டணத்துக் கண்காணியாயிய யோவானும் ரோமாபுரிக் கண்காணியாகிய சொசிமு என்பவனும் அதற்கு அனுசரணையாயிருந்தனர்; சிலகாலத்துக்குப் பின்பு சொசிமு என்பவன் அதைத் தப்பென்று தள்ளிவிட்டான்; அதை எதிர்த்து யுத்தஞ்செய்தவர்களில் தலைப்போபட்டணத்துக் கண்காணியாகிய அருஸ்தின் என்பவர் சிரேஷ்டமானவராயிருந்தார்.

Celestian propagates it.

431-ம் வருஷத்தில் எபேசுபட்டணத்தில் கூடின சங்கத்தார் இக்கோட்பாட்டைத் தப்பென்று தீர்த்தார்கள். பிற்காலத்தில் 631-ம்

அனுசரித்தார்களென்றும் முன் சொல்லுமே, அவர்களில் ஒரு ஜாதியாருக்கு பிராங்கர் என்று பெயர்; குளோவு என்பவன் அவர்களுண்டைய அரசனுயிருந்தான்; அவன் 481–ம் வருஷத்தில் திரண்டசேனையுடன் கால்தேசத்துக்குப் போய் யுத்தஞ்செய்து அதைப் பிடித்துக் கொண்டான்; இப்படி அத்தேசத்தைக் கட்டி ஆண்டுவருங்காலத்தில் அவன் பர்கண்டிதேசத்து இராஜனுகிய சில்பெரிக் என்பவனுடைய புத்திரி (Clotilda) குளோத்தில்டான் என்பவளே விவாகஞ்செய்தான்; அவன் கிறிஸ்துமார்க்கத்தில் வைராக்கியமுள்ளவளாயும் தேவபக்திபுள்ளவளாயும் இருந்தமையால்; தன் புருஷனும் தன்னைப்போல் அந்த மார்க்கத்தை அநுசரிக்கவேண்டுமென்று கருத்துகொண்டு, அவனுக்கு ஓயாமல் அதைப் போதித்துவருவாள்; ஆயினும் அவன் பிரியாசம் கெருகாலம் சித்திக்கவில்லை; 495–ம் வருஷம் அவன் அல்மனியரென்னும் ஒரு துஷ்டஜாதியாரோடே யுத்தஞ்செய்யப்போனதில் எதிரி ஜெயமடையத்தக்க சமயமாயிருக்கும்போது, அவன் தன் இராஜபத்தினி சொன்ன புத்திபோதனைகளெல்லாம் நினைத்து அழுது ஜெபம்பண்ணத்தொடங்கினான்; "ஓ, ஜகத்ரக்ஷகா! ஆபத்பாந்தவா! என்னுடைய பத்தினி சொன்னாடும் கிறிஸ்தேசுசுவாமி! நான் என் தேவர்களை என் ஆபத்துக்குவந்து உதவவேண்டுமென்று ஓயாமல் பிரார்த்தித்தேன்; அதனல் ஒரு பயனுமில்லை; நீர் இந்த விபத்தில் எனக்குச் சகாயஞ்செய்து என் சத்துருவை ஜெயிக்கும்படி கடாக்ஷியும்; நான் இதுமுதல் உம்முடைய தொண்டனுவேன்" என்று உருக்கமாய்ப் பிரார்த்தித்தான்; இப்படி ஜெபம்பண்ணி முடியுமுன் மாற்ருன் யுத்தத்தில் தோல்வியடைந்து ஓட்டம்பிடித்தான்; குளோவு என்பவன் ஜெயவீரனென்று பெயர்பெற்ருன்; அவ்வருஷத்திலேயே அவனும் அவன் சேனையில் மூவாயிரம்பேரும் தீமஸ்பட்டணத்தில் ஞானஸ்நானம்பெற்று சபையிற் சேர்ந்தனர்.

கால் என்னும் பிரான்ஸ்தேசத்தில் கிறிஸ்துமார்க்கத்தின் ஒளி இப்படிப் பிரகாசித்ததுபோல, அதற்கடுத்த பிரித்தானியாத்தீவிலும் அது பிரகாசமாயிற்று; அத்தேசத்துப் பூர்வகுடிகள் கல்வி, ஒழுக்கம், காகரீகம் ஒன்றுமில்லாமல் துஷ்டாரண்ய காடுகளிலும் மலைகளிலும் சஞ்சரித்து, மிருகங்களுடைய தோல்களை விஸ்தாரமாகத் தரித்துக் கொண்டு மிருகங்களைப்போலவே இருந்தார்கள்; அவர்களுடைய குருக்களுக்கு (Druids) தூயிதர் என்று பெயர்; அவர்களுடைய

Christianity begins to spread in Britain.

கொடுமைகளும், அநாசாரங்களும், ஆபாசங்களும் இவ்வளவென்று சொல்லுதல் அசாத்தியம்; வணார்களிலுல் விக்கிரகங்கள் செய்து அவைகளுக்குன் மனிதரைப் பிடித்து அடைத்துத் திக்கொளுத்துவார்கள்; இப்படி அவர்கள் தங்கள் துஷ்டதேவதைகளுக்கு நரபலி செலுத்திவந்தார்கள்; கி. மு. 55–ம் வருஷத்தில் ரோமர் அத்தேசத்தைப் பிடித்துத் தங்கள் கைவசமாக்கிச் சுமார் 400 வருஷம் அரசாட்சி செய்துவந்தனர்; அக்காலத்திலே அவர்களுக்குக் கல்வியும் காகரீகமும் உண்டாகத் தொடங்கிற்று; கிறிஸ்துமார்க்கமும் ஒருவாறு பிரசித்தமாகிக்கொண்டுவந்தது; ரோமர் அத்தேசத்தைவிட்டுப் போனபிற்பாடு, சக்சோனர் என்ற ஒரு ஜாதியார் அதைப் பிடித்து அம்மிடத்தில் கிறிஸ்துமார்க்கம் இல்லாதபடிக்குச் செய்துமுன்றி, 150 வருஷகாலமாய் விக்கிரகபக்தியை நிலைநிறுத்திவந்தார்கள்; அவர்கள் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்னுங் கிரகங்களைத் தெய்வங்களாகப் பாவித்துப் பூசித்துவந்தார்கள்; பிற்காலத்தில் அங்கிலேயர் இந்தப் பெயர்களை அந்த வாரங்களுக்குப் பெயராக வைத்துக்கொண்டார்கள். 430–ம் வருஷத்தில் கால்தேசத்திலுள்ள ஆக்ஸர் பட்டணத்துக் கண்காணியாகிய (Germanus) ஜர்மேனு என்பவர் பிரித்தானியாத் தீவுக்குப் போய், அங்கே கிறிஸ்துவின் இரகஸ்யமதத்துவங்களைக் கூறினர்; பிலேஜியுவுடைய கோட்பாடு அவ்விடத்தில் வெகு பிரபலமாயிருந்தபோதிலும், ஜர்மேனு என்பவருடைய உத்தம போதகத்தினுலே அது அற்றுப்போயிற்று; கொஞ்சக்காலம் அப்பேயிருந்து கிறிஸ்துமார்க்கத்தை பக்திவைராக்கியத்துடன் பிரசங்கித்தபின், அவர் தமது சொந்த தேசத்துக்குத் திரும்பினர். 448–ம் வருஷத்தில் லூபடியுவும் பிரித்தானியாத் தீவுக்குப் போய், தேவசமாதானமாகிய விதையை விதைத்து, திருச்சபையாகிய மரம் செழித்தோங்கும்படி வேண்டிய முயற்சிகள் செய்தார்; இப்படி மூப்பது வருஷகாலமாய் அவர் கிறிஸ்தேசுசுவாமிக்கு மகா பக்திவிசுவாசத்துடன் ஊழியஞ்செய்து, 448–ம் வருஷத்தில் தமது சொந்த தேசத்தில் மரித்துப்போனர்.

இந்த நூற்றண்டில் கிறிஸ்துமார்க்கம் ஐர்லாந்து தேசத்திலும் பிரபலமாயிற்று; அத்தேசத்தில் அம்மார்க்கத்தைப் பிரசங்கஞ்செய்வதற்கு ரோமாபுரிக்கண்காணியாகிய செலஸ்தின் என்பவர் (Palladius) பல வழியு என்பவனை ஏற்படுத்தி அனுப்பினர்; அவன் முயற்சிகள்

Christianity spreads in Ireland.

ஒன்றும் அங்கே சித்தியாகையால் திரும்பி வந்துவிட்டான்; பிற் பாடு அவனுக்குப் பதிலாக (Patrick) பற்றிக் என்பவரை அனுப் பினர்; இவர் 372–ம் வருஷம் ஸ்கொத்லாந்து தேசத்தில் பிறந்தவர். இவருடைய தகப்பனும் பாட்டனும் கிறிஸ்துமார்க்கத்தைப் பரி பாலனஞ்செய்த குருமாராயிருந்தும், இவர் பதினாறு பிராயமட்டும் முத்தியடையவேண்டுமென்ற சிந்தையில்லாமல் வெகு துஷ்டனும் நடந்துவந்தார்; அந்த வயதில் அவர் கடற்கள்ளர் கையில் அகப் பட்டு, ஐர்லாந்துதேசத்திலுள்ள ஒரு மிராசுதாரனுக்கு அடிமையாக விற்கப்பட்டார்; அவன் அவரைத் தன் ஆடுமாடுகளை மேய்க்கும்படி அனுப்பினான்; இப்படி மோசே தாவீது என்பவர்களைப்போல் இந்தத் தாழ்ந்த ஸ்திதியிலிருந்து கஷ்டத்தையும் துயரத்தையும் அனுபவித்துக் கொண்டிருக்கும்போது, அவருடைய உள்ளத்தில் நல்ல உணர்ச்சிகள் உண்டாகி, கடவுளைப்பார்த்துப் பிரார்த்திக்க ஆரம்பித்தார்; அருணை யத்தில் எழுந்திருந்து பனியிலும் மழையிலும் கனைந்துகொண்டு ஜெ பத்தியானஞ் செய்துவந்தார்; இப்படி ஆறுவருஷம் சென்றபிற்பாடு அவர் கப்பலேறித் தமது ஜனதேசத்துக்குப் போய் அங்கே மூன்று வருஷமிருந்து, மறுபடியும் கள்ளர் கையில் அகப்பட்டு இரண்டுமாதம் அவர்களோடிருந்தார்; பிற்பாடு அவர்கள் கையைவிட்டுக் கடத்திக் கொண்டு, இனி நாம் அடிமையாயிருந்த ஐர்லாந்துதேசத்துக்கே போய், கடவுளுடைய அருள்வேதத்தைக் கூறவேண்டுமென்று யோசித்துக் கொண்டிருக்குங்காலத்தில், ஒருநாள் ஒரு சொப்பனங் கண்டார்; அதில் ஐர்லாந்துதேசத்தான் ஒருவன் அநேகம் பத்திரிகைகளை வைத் துக்கொண்டு தம்மிடத்துக்கு வந்ததாகவும், அதில் ஒன்றில் "ஐர்லாந்து தேசத்தாரின் கூக்குரல்" என்று எழுதியிருந்ததாகவும், அதை வாசித் துக்கொண்டிருக்கும்போதே அத்தேசத்தாரில் அநேகர் வந்து நின்று, நீர் எங்களிடத்தில் மறுபடியும் வந்து வாசம்பண்ணவேண்டுமென்று கேட்டுக்கொண்டதாகவும் கண்டார்; இத்தினைதெளிந்து விழித்தபிற் பாடு எல்லாத் தடைகளையும் உதறிவிட்டு 431–ம் வருஷம் ஐர்லாந்து தேசத்துக்குப் போனார்; போய்ப்பல இடங்களிலும் சென்று மேளம் அடித்துத் திரளான ஜனங்களைக்கூட்டி அவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததுமன்றி, பல இடங்களில் பாடசாலைகளையும் ஸ்தாபித்தார்; உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் வித்தியாசம் பாராமல் கர்த்தருடைய வேலையைச் செய்வார். பின்னால் வருவது இதற்கொரு

A brief account of the life of Patrick.

திருஷ்டாந்தம். வருஷத்திற்கொருமுறை ஐர்லாந்து தேசத்து அரசனும், அவனுடைய பிரபுக்களும் "தாரா" என்னப்பட்ட ஓர் இடத்தில் கூடுவது வழக்கம். தருயிதர் என்னும் பூசாரிகள் இங்கேதான் மிச்ச மாய் இருப்பார்கள். பற்றிக் இந்த இடத்திற்குப் போய் பிரசங்கஞ் செய்துவருவார்.

பற்றிக் என்பவர் தாராவென்னும் இடத்தில் சுவிசேஷத்தைக் கூறுவது.

காட்டுமிராண்டிகள் சிலர் கூடியிருக்கும் ஓர் இடத்திற்குப் போய் வெகுநேரம் சுவிசேஷத்தைக் கூறினபின் அவ்விடத்தில் நிறுத் தியிருந்த கற்சிலையைக் கீழே விழத்தள்ளிப் பேசாமல் போய்விட்டார். இதற்காகத் துஷ்டர்களில் ஒருவன் எப்படியாவது பற்றிக் என்பவ ரைக் கொல்லவேண்டுமென்று சபதம் செய்துகொண்டான். இது அவர் வேலைக்காரனுக்கு எப்படியோ தெரியவந்து வண்டியில் போகும்போது தான் பற்றிக் இருக்கும் இடத்திலும், பற்றிக் தன் இடத்திலும் இருக்கச் சொல்லுவான். சபதம்பண்ணின முரடன் இந்த வண்டியில் ஓர் கட்டிலை ஒருநாள் எறிய அது வேலைக்காரனைக் கொன்றுபோட்டது. இப்படி அஞ்ஞானத்தாரில் அமிழ்ந்தி ருந்த அந்தக் காட்டுஜனங்கள் கல்வியிலும் நாகரீகத்திலும் சிறிஸ்து மார்க்க ஒழுக்கத்திலும் சேறும்படி வேண்டிய முயற்சிகளை வெகு சிரத்தையுடன் நடத்திவந்தார்; அதனாலே அவருக்கு "ஐர்லாந்து

தேசத்து அப்போஸ்தலன்" என்ற சிறந்த பெயருண்டாயிற்று; இப் படிக் கிறிஸ்துரக்ஷகருக்கு அவர் வெகு பக்தி வைராக்கியத்துடன் ஊழியஞ்செய்து 460–ம் வருஷத்தில் அதிக விருத்தாப்பியமாயிருக் கும்போது இறந்துபோனார்.

செவரீனு சன்னியாசிகள் கண்டிப்பது.

இச்சகாலத்தில் ஜெர்மனி தேசத்தில் செவரீனு என்பவர் சுவிசே ஷத்தைப்பிரசங்கஞ்செய்தார். அக்கேதிருடர் அதிகம். கிறிஸ்தவர்களின் சொத்து கதற்தாக்க ளோத்திருடர்கொண்டுபோய்விட்டார்கள். அதி காரிகள் திருடரைப் பிடித்துச் செவரீனுவிடம் கொண்டுவந்து இவர்க ளோத் தண்டியுமென்று சொன்னபோது, அவர் அவர்களைப் பார்த்து, இரட்சகனை நம்புங்கள், திருவெதி பாவம், அதை விட்டுவிடுங்கள் என்று சொல்லி, பால் பழம் முதலானது சாப்பிடத் தந்து அவர்களை அனுப்பிவிட்டார். இவர் மரிக்கும்போது சங்கீதத்தின் கடைசி வாக் கியத்தைத் தெளிவாய்ப் பாடிக்கொண்டிருந்தார். இந்த நூற்றாண்டில் திருச்சபையில் நடந்த சில விசேஷங்கள் மனதுக்குச் சஞ்சலத்தைத் கொடுத்தபோதிலும், அம்புரோஸ், ஜெரொஸ்தம், அகுஸ்தின், பற்றிக் முதலான உத்தம போதகர்களுடைய ஜீவிய சரித்திரங்களையும், அவர்கள் பிரயாசங்களினால் விளைந்த நன்மைகளையும் பார்க்கும் போது, ஆறுதலுடன் தேவனை மிகுத் துதிக்கவேண்டியது மதி கடமைதான்.

Severinus and Concluding Remarks.

QUESTIONS ON FIFTH CENTURY.

ஐந்தாம் நூற்றாண்டின் சரித்திரத்தின்பேரில் கேள்விகள்.

1. ஜெரோம் என்பவனைப்பற்றி என்ன தெரியும்? அவர் செய்த நூல்கள் எவை?
2. அகுஸ்தின் எப்படிக்குணப்பட்டார்? அவரால் கிறிஸ்தசபைக்கு உண்டான நன்மை யென்ன? அவர் எழுதிய புஸ்தகங்கள் எவை?
3. ஜெலேயு எந்த தேசத்தான்? இவர் ஸ்தாபித்த புதுக்கொள்கையைப் பற்றி விஸ்தாரமாய் எழுதுக.
4. இந்த நூற்றாண்டில் தலைகாட்டின வேறு இரண்டு மார்க்கதொல்லை பேதகங் கள் எவை? அவைகளைப்பற்றித் தெளிவாய் எழுதுக.
5. எபேசுவில் கூடிய சங்கம் எந்த வருஷத்தில், என்ன தோக்கத்திற்காக?
6. கால்செடன் சங்கத்தைப்பற்றித் தெரிந்ததையெல்லாம் எழுதுக.
7. அகுஸ்தினுக்கும் பிலேகுவுக்கும் மார்க்க கொள்கையில் என்ன விசியாசமிருந்தது?
8. இவ்வந்த தேசத்தில் எந்தக் காலத்தில் பாதல் கிறிஸ்துமார்க்கம் பிரபல மானது? அவைப்பற்றித் தெரிந்ததை எழுதுக.

ஆறாம் நூற்றாண்டு.

கிறிஸ்துமார்க்கத்தின் ஒடுங்குதல். ரோமச்சபை முதிர்ச்சியடைதல். ரோமா புரி, கொன்ஸ்தாந்தினோபுரிச் சபைகள் எதிரி பாவட்டல். கொன்ஸ்தாந் தினோபுரிச்சபையின் கண்காணியாயிய ஜோவான் சர்வகண்காணியென்ற பட்டத்தரித்தல். ரஷ்யாவட்டனத்துக் கண்காணியாயிய பல்ஜேடியு. அவர் செய்த நூல்கள். மூதலாம் கிரகரி. இங்கிலாந்துக்குக் கலி சேஷப் போதகர்கள் போன சங்கதி. அதன் பரிபதித்தி. கிரகரியின் குணகுணங்கள், மரணம். பொதுவான விசேஷங்கள். ஆருஞ்சபட்டனத் தில் கூடின சங்கம். மான்சன் பட்டணத்தில் கூடின சங்கம். வெளிநாட்ட சங்கியாச லதுப்பு ஸ்தாபனமாகுதல். கலிசேஷப் பிரபலம்.

இந்த நூற்றாண்டி அக்காச யுகத்திற்குத் துவக்கம் என்று சொல் லலாம்; இருக்கலாயிலிருந்த பரிதியும் பரிசுத்தமும் மங்கி, அறியா மையும் அவபக்தியுமாயிய இருள் அதை மூடிவிருக்கையால், இந்த

பதினேந்தாம் நூற்றாண்டுக்கும் மத்தியகாலத்துக்கு (Dark Ages) "அந்தகார யுகம்" என்ற பெயர்.

Christianity declines. The Roman Church becomes most prominent.

நூற்றாண்டுக்கும் பதினேழாம் நூற்றாண்டுக்கும் மத்தியகாலத்துக்கு (Dark Ages) "அந்தகார யுகம்" என்ற பெயர். சபை, மேலச்சபை என்றும் கீழச்சபை என்றும் இரண்டு பிரிவாயிருந்ததாக முன் சொல்லியிருந்தோமே; மேலச்சபைக்கு ரோமச்சபை அல்லது லத்தின்சபை என்றும், கீழச்சபைக்கு கிரேக்கச்சபை என்றும் பெயர்; அந்தகார யுகத்தில் ரோமச்சபையின் காரியமே மேன்மேலும் முக்கியப்பட்டுவந்தது; அதன் கண்காணிகளுக்குப் பிதா என்று அர்த்தங்கொள்ளும் பாப்பு என்ற பேயர் வழங்கிற்று; அவர்களுக்கு ஞானிகளாரியங்களிலும் லௌகிகவிஷயங்களிலும் மேன்மையும் அதிகாரமும் உண்டாகத் தொடங்கிற்று. வடக்கிலிருந்துவந்த மிலேச்ச ஜாதியாராலே கல்விமுயற்சிகளுக்கும் சாந்திரப்பயிற்சிகளுக்கும் பின்னம் வந்ததென்று முன் கூறினேம்; இதுகாரணத்தினாலே சாதாரண ஜனங்கள் எல்லாரும் படியாத மூடர்களாயிருந்தார்கள்; கண்காணிகளும் சந்நியாசிகளுமாயிருந்தவர்கள்மாத்திரம் ஒருவாறு கல்வியில் தேர்ந்தவர்களாயிருந்தார்கள்; அதனாலே அவர்கள் அறிவீனமுள்ள ஜனங்களுக்குத் தங்கள் இஷ்டப்படியே போதனைசெய்து அவர்களைத் தங்கள் வசப்படுத்திக்கொண்டார்கள்; அவர்கள் இட்டதே சட்டமாயும், அவர்கள் சொன்னதே பிரமாணமாயும் இருந்தது; உலகத்தரசர்களுக்கில்லாத அதிகாரமும் வல்லமையும் அவர்களுக்கு இருந்தது. கிறிஸ்துசபையில் சுமார் ஐம்பது வருஷமாக இந்த நூற்றாண்டில் ஒரு நூதன சொல்கை தலைகாட்டிற்று. அதற்குப் பேர் ஏகதத்துவக் கொள்கை. இதற்கு கிறிஸ்துவினிடத்தில் மனிததன்மை அவருடைய தேவதன்மையுடனே ஏகமாய்க் கலந்துவிட்டது என்று சாதித்ததாக முன்னமே பார்த்தோமே. ஏகதத்துவக் கொள்கைக்காரரோ (Monophysites) இரட்சகருக்கு தேவதத்துவம் மனிததத்துவமென்று இரு தத்துவமில்லை, அவருக்குத் தத்துவம் ஒன்றே, அது தேவதத்துவமே என்றும், தேவனே மனுஷ்யாவதாரமெடுத்தார் என்றும் சாதித்தார்கள். இது 451-ம் வருஷமுதல் 553-ம் வருஷம்வரை கீழச்சபையை சேர்ந்துகொண்டிருந்தது. இந்தக் கொள்கையிலிருந்து வரும் பிரிவார் எழும்பினார்கள். அவர்கள் யாரென்றால், (1) ஆபிரிக்காவில் சிரியக் கிறிஸ்தவர்கள், (2) ஆர்மீனியக் கிறிஸ்தவர்கள், (3) ஐப்பிரிக்காவில் காப்திகீர் (Copts), (4) அபிசீனியக் கிறிஸ்தவர்கள். இவர்களுடைய சரித்திரம் பல இடங்களில் காணப்படுகின்றது.

ரோமச்சபை, அந்தியோகியாச்சபை, அலெக்சந்திரியாச்சபை, கொன்ஸ்தாந்தினோபுரிச்சபை என்ற நான்கையும் ஆதிமுதல் மற்றச் சபைகளைப்பார்க்கிலும் சிரேஷ்டமாய் எண்ணிவந்தார்கள்; சில காலத்துக்குப்பின் அந்தியோகியாச் சபையும் அலெக்சந்திரியாச் சபையும் யாதகாரணத்தினாலே மங்கிப்போயின; கொன்ஸ்தாந்தினோபுரிச்சபையும் ரோமச்சபையும் ஒன்றுக்கொன்று என்னேப்பார் உன்னேப்பாரென்று எதிர்த்துக்கொண்டு நின்றன. அச்சபைபதவிக்குக் கண்காணிகளாயிருந்தவர்கள் நான் என்ற அகங்காரத்தினாலே மற்றெல்லாக் கண்காணிகளுக்கும் தாங்கள் மேலானவர்களென்று சொல்லத் துணிந்தார்கள்; கொன்ஸ்தாந்தினோபுரிச்சபைக்குக் கண்காணியாயிருந்தவன் கீழ்சபைகளுக்குத் தானே தலைவனென்றுகொண்டானுமன்றி, ரோமச்சபைக்குத் தன் சபை கிஞ்சித்தும் தாழ்ந்தல்லவென்றும் சாதித்தான். 589-ம் வருஷத்தில் கொன்ஸ்தாந்தினோபுரியில் கண்காணியாயிருந்த யோவான் என்பவன் தனக்கு "சர்வ கண்காணி" என்ற பட்டமிருக்கிறதாகப் பாராட்டினான்; அதை ரோமாபுரிக் கண்காணியாகிய முதலாம் கிரகரி என்பவர் கேட்டுக் கடிந்துரைத்துக்கொண்டு அந்தப் பட்டம் வைதிக உத்தியோகஸ்தருக்கு அடாதென்று வெகு கண்டிப்பாய்ப் பேசினார்; இது காரியங்களைப் பார்க்கும்போது சபையின் சீர் மிகவும் குலைந்திருந்ததென்றும், அதன் மாட்சிமை மங்கியிருந்ததென்றும் சொல்லவேண்டியிருக்கிறது. அந்தகாரம் நிறைந்த இக்காலத்திலும் சில தேவபக்தர்கள் இங்கும் அங்கும் இருண்ட இராத்திரியில் பிரகாசிக்கும் நட்சத்திரங்கள்போல் பிரகாசித்துக்கொண்டிருந்தனர்.

The rival Churches of Rome and Constantinople. John, bishop of the latter, assumed the title of Universal Bishop, A.D. 589.

இப்படிப்பட்டவர்களில் பல்ஜென்ஷியு என்பவர் ஒருவராயிருந்தார்; அவர் 468-ம் வருஷத்தில் கார்தேஜ் பட்டணத்தில் பிறந்தவர்; அவருடைய தாய்தந்தைகள் ஓர் மேற்குலத்தைச் சேர்ந்தவர்கள்; அவர் இளவராயமாயிருக்கும்போது அவருடைய தகப்பனுமை இலாடியு என்பவர் இறந்துபோனார்; அவருடைய தாய்க்கு மரியன்னு என்ற பெயர்; அவள் தன் பிள்ளை, பெயரும் கீர்த்தியும் பெறவேண்டுமென்று கருதி, சாஸ்திரக்கல்விகளிலும் சேறும்படி வேண்டிய முயற்சிகள் செய்தாள்; அவர் ஹொமரையிருக்கும்போதே (Homer) தோ

Fulgentius, bishop of Ruspe in Africa, A.D. 468.

மர் என்னும் கிரேக்கதேசத்து மகா புலவர் செய்த பாடல்களோ எல்லாம் பாராமல் சொல்லுவார்; கிரேக்கபாஷையை தாயபாஷைபோல வெகு சாதுரியமாய்ப் பேசுவார்; அவர் இளம்பிராயத்தில் தானே கார்தேஜ்பட்டணத்தில் ஒரு உயர்ந்த உத்தியோகத்தைப் பெற்றார்; வரிவாங்குகிறவர்களின் தலைவனாக நியமிக்கப்பட்ட இவர், தனக்குக் கீழேயிருப்பவர்கள் செய்யும் கொடுமையைப் பார்க்க மனமற்றவராய், அப்போஸ்தலனுடைய முற்சேயுவைப்போல, ஐசுவரியத்தைப் பிரசங்கிக்க மனங்கொண்டார். அப்போது அவருக்கு வயது சுமார் இருபத்திரண்டுதான். தேவஞானியத்தின் அருமையும், பெருமையும், இயேசுகிறிஸ்துவைத் தரிசித்த அவரது போன்மை குறித்தவர்களுக்குத் தான் தெரியும். கொஞ்சகாலமானபின்பு மேலே சொன்ன உலக வேலையை விட்டுவிட்டுத் தபசு செய்யவேண்டுமென்று சுக்கியாசி மடத்துக்குப் போனார்; அப்பால் அதையும் விட்டுவிட்டுக் கிரிஸ்தமார்க்கத்தை எங்கும் பிரசித்தஞ் செய்துகொண்டேயும்போது, அரியாஸாலே அவருக்கு வெகுமாதே சேர்ட்டது; அதற்குத் தப்பும்படி முன்பு சேர்ந்த பட்டணத்துக்கும், கி.பி. 590-ம் வருஷத்தில் ரோமாபுரிக்கும் போனார்; இதுகாலம் அங்கேயிருந்து பின்பு ஆப்பிரிக்காவுக்குத் திரும்பிவந்து 597-ம் வருஷத்தில் எங்கேபட்டணத்துச் சபைக்குச் சுன்காணியானார்; அவர் வெகு காலம் இதிஸ்துசபைகளுக்கு மகா உண்மையோடே ஊழியஞ் செய்துவந்தார்; கடையில் அவருக்கு ஒரு கிலேசியாதி வந்தது; எழுபதுசொல்லாக்கும் அவர் அதினுலேபட்ட உபத்திரவம் கொஞ்சமல்ல; ஆயினும் அவர் தேவசித்தத்துக்கு அமைந்து, ஆண்டவரே! எனக்கு இவ்வுலகத்தில் பொறுமையும் மறுலோகத்தில் சகலமும் உண்டாகும்படி கடாக்ஷித்தருளும் என்று ஜெபஞ்செய்து, 553-ம் வருஷத்தில் மிகுந்த மனச்சந்தோஷத்துடன் தமது ஜீவநாட்டத்தை முடித்தார்.

Vulgentius Dies, A.D. 553.

His Writings.

இவர் பல நூல்களைச் செய்திருக்கிறார்; அவைகளை வாசித்துப் பார்க்கும்போது, திரித்துவமார்க்கத்தின் உயர்ந்த உபதேசங்களைப்பற்றிக் கூடிய அளவில் அவருக்குச் சரியான அறிவு இருந்ததென்று தோன்றுகிறது. பரிசுத்த ஆவியானவரைப்பற்றி, அவர்: "பரிசுத்த ஆவியானவர் தேவனுமாயிருக்கிறார்; அவர் பிதாவினிடத்தில் எப்படி பக்திசிரேஷ்டமான இருசயனாலக்ஷணங்களோடே வாசஞ்செய்கிறாரோ, அவர் தேவனுமாயிருக்கிறார்; அவர் பிதாவினிடத்தில் எப்படி ஜீவாத்மகோடிகளுக்கு

அருள் அளிப்பாரோ? இவைகளெல்லாம் கடவுளுடைய செயலால் நடக்கவேண்டியிருப்பதால், பரிசுத்த ஆவியானவர் தேவனல்ல என்று எப்படிச் சொல்லலாம்" என்று எழுதியிருக்கிறார்; அவர் ஒரு விதை தியோடோரு என்னும் தம் சிநேகிதனெருவனுக்கு எழுதின நிருபத்தில், "நீ சுத்திய வேதாகமத்தை வாசிக்கும்போது உனக்குள் குழந்தையைப்போல் தாழ்ந்த சிந்தையும் பணிந்த எண்ணமும் இருக்கவேண்டும்; இப்படிப்பட்ட மற்குணத்தோடே நீ அதை வாசித்துவரு வாயானால் உனக்குத் தேவதோஷமுண்டாகாது; அது உனக்கு எக்காலத்துக்கும் உதவும்; உனக்கு ஒரு ஆபத்து வரும்போது அது வந்து கைகொடுக்கும்; நீ பரலோகமார்க்கத்தில் நடக்கும்படி அது வேண்டிய சகாயத்தை அளிக்கும்; நீ பேரின்பலோகத்தில் சேர்வதற்கு அது உபயோகமாயிருக்கும்" என்று எழுதினார்.

பல்ஜென்ஷியு என்பவனைப்பற்றி இவ்வளவு சொன்னதுபோதும், இனி முதலாம் கிரகரி என்பவருடைய சரித்திரத்தைச் சற்று விஸ்தாரமாக எடுத்துரைப்போம்;

Gregory the First, A.D. 544–604.

இவர் இந்நூற்றாண்டில் சபையில் கிரேஷ்ட மானவராயிருந்தார்; இளம்பிராயத்தில் சக்கியாசிமடத்துக்குப் போய்த் தபஞ்செய்துவந்தார்; தன் தகப்பன் இறந்துபோனபின் தன் வீட்டையே சக்கியாச மடமாக்கிக்கொண்டார். சத்தியவேதத்தைக் கருத்தாய் வாசித்தும், சரியானபடி எற்ற வேளையில் ஒன்றும் சாப்பிடாமலும் கடிந்தவம் புரிந்துவந்தார். தான் பரம்புவானபின்பு, மற்றவர்களையும் வேதபுத்தகத்தைக் கருத்தாய் வாசிக்கச் சொல்வாராம். இக்காலத்திலிருக்கும் பாப்புகள் இப்படிச் செய்தாலோ! 590-ம் வருஷத்தில் ரோமாபுரிச் சபைக்குக் கண்காணியாயிருந்த பிலேஜியு என்பவன் இறந்துபோனபிற்பாடு, இவரை அந்தப் பட்டத்துக்கு ஏற்பிக்கவேண்டும் என்று தீர்மானம் உண்டாயிற்று; அதை அவர் கேள்விப்பட்டு, தாம் அதற்கு எவ்வளவேனும் தகுந்தவரல்ல என்று நினைத்து அதை வேண்டாம் என்று தடுத்தார்; ஆனால் இராயனும் ஜனங்களும் சர்வ சம்மதமாய் அவரே அதற்குத் தகுந்தவர் என்று சொன்னபடியால் அவர் அதை ஒப்புக்கொண்டு, பதின்மூன்றரை வருஷகாலமாய்த் தமது ஊழியபாரத்தை உண்மையோடே நடத்திவந்தார்; தாழ்ந்த ஸ்திதியிலிருந்து உயர்ந்த அந்தஸ்துக்கு வரும்போது தன்னை மறந்து நடப்பது மனிதசுபாவத்துக்கு இயற்கைதான்; ஆயினும் கிரகரி என்பவர் அப்படி தவறாமல் நடவாமல் தேவகிருபைப் பெற்று நடத்தினார்.

தாழ்மையோடும் நடந்துவந்தார்; தர்மிஷ்தையும் பரோபகாரகுணமும் அவருக்குள் அதிகமாய் விளங்கின. "ஐயமிட்டுண்" என்ற ஔவை மொழிப்படி அவர் ஒருநாளாவது ஏழை தரித்திரருக்கு அன்னங்கொடாமல் சாப்பிடமாட்டார்.

ரோமி அங்லேய அடிமைப்பின்னேனைச் சந்தையில் கண்டது.

The Circumstances which led to his Mission into England.

இவர் அறியாமையிலும் மூடபக்தியிலும் அமிழ்ந்திருந்த ஜனங்களுக்குச் சத்தியமார்க்கத்தைக் கூறவேண்டுமென்ற அபேட்சைகொண்டிருந்தார்; ஒருநாள் ரோமாபுரித் தெருக்கள்வழியாய் நடந்துபோகையில், சௌந்தரியமுள்ள ஏழு பாலியர்களை அடைமைகளாக விற்கும்படி கொண்டுவந்திருந்ததைச் சந்தையிற் கண்டார்; கண்டு, அவர்கள் எந்தத் தேசத்தார் என்று கேட்க, பிரிதானியா தீவார் என்

றார்கள்; அத்தீவார் இறிஸ்தவர்களோ அஞ்ஞானிகளோ என்று, அஞ்ஞானிகள் என்றார்கள்; அதைக்கேட்டுப் பெருமூச்சுவிட்டு, ஐயோ! அத்தகாரப் பிரபுவாகிய பிசாசு இவ்வளவு சௌந்தரியமுடையவர்களைத் தன் அருஞ்சிறையில் அடைத்துவைத்திருப்பதும், இவ்வளவு சுந்தாவடிவுள்ளவர்கள் தேவஅருள் பெறுமலிருப்பதும் எவ்வளவு நிர்ப்பந்தம் என்று சொல்லி, இவர்கள் என்ன ஜாதியார் என்று விசாரித்தார்; அதற்கு "அங்கிலேயர்" என்றார்கள்; "அங்கிலி" என்ற லத்தின் வார்த்தைக்கு தேவதூதர் என்று அர்த்தமானதினாலே அவர் உடனே இவர்கள் பார்வைக்கு தேவதூதர்கள்போலவே இருக்கிறார்கள்; அந்தத் தேவஅங்கிலேயருடைய ஆனந்தத்தை இவர்கள் அடையாமலிருப்பது எவ்வளவு துக்கம் என்றுசொல்லி, அவர்கள் நாடென்ன என்று வினவினார்; அதற்கு டேயிரா என்றார்கள்; (நார்த்தம்பர்லாந்துக்கு அக்காலத்தில் டேயிரா என்று பெயர்.) டே, ஐா என்றால், லத்தின் பாஷையில் தேவகோபம் என்றர்த்தம்; அதனாலே அவர் ஐயோ! இவர்கள் தேவகோபம் வினைக்குறிற காட்டிலுள்ளவர்களா? அப்படியானால் இவர்கள் அந்தக் கோபாக்கினைக்குச் சப்பவும், இறிஸ்துநாதரின் அருளாப பெறவும்வேண்டும் என்றார்; பின்பு இவர்கள் இராஜன் பெயரென்ன என்று கேட்க, "எல்லா" என்றார்கள்; அப்போது அவரான் அல்லேலூயா! கடவுளுக்கே துதி என்று துவாப் புகழ்ந்து கொண்டாடும் காலம் சமீபமாய் வரக்கடதது என்று மிருந்த வினோதமே சொன்னார். தொண்டை யாவர்க்கும் எளிது, சொல்லியவண்ணம் செய்தலோ அரிது என்பதை அவர் மனதில் உணர்ந்து, சமயம் அதிவேகத்துப் போய்க் கிறிஸ்துவின் இரட்சணியத்துக்கான அறிவிக்கச் சித்தமாயிருந்தேன்; என்னை அனுப்பும் என்று அக்காலத்தில் ரோமாபுரிக்குக் கண்காணியாயிருந்தவரிடத்தில் போய்க் கேட்டார்; அதற்கு அவர் போக்கூடாதென்று தடுத்துவிட்டார்; அதனாலே அவருடைய எண்ணம் மாறிப்போகாமல் எப்போது சமயம் வருமென்று பார்த்துக்கொண்டேயிருந்தார்; பின்பு அவர் தாமே கண்காணிப்பட்டத்தைப் பெற்றபோது, தாம்கொண்ட கோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இதுவே சமயம் என்று நினைத்து ஏற்பாடு சக்கியாகினைத் தெரிந்து, அவர்கள் பிரித்தானியாத் தீவுக்குப் போய்க் கிறிஸ்துமார்க்கத்தைக் கூறவேண்டுமென்று ஏற்பாடு செய்தார்; அந்த காற்பதுபேரில் போனோன அகுஸ்தின் என்பவர் பிரேத்தாமானவர்; அவர்கள் அவ்விடத்திற்குப் போகச் சற்றுப் பின்வாங்கினை

போதிலும், கடைசியில் எல்லாரும் கிரகரி என்பவருடைய யோசனைப்படி புறப்பட்டுப் போனார்கள்.

The success which attended the Mission.

அவர்கள் போனகாரியம் தேவசெயலால் சித்திபெற்றது; அவர்கள் போனபோது கென்ற் காட்டுக்கு (Ethelbert) எதல்பர்ட் என்பவர் இராஜாவாயிருந்தார்; அவர் சக்கோனியராசசேர்ந்த இராஜாக்களிலெல்லாம் மகா விவேகமுள்ளவர்; அவருடைய பத்தினிக்கு (Bertha) பெர்த்தாள் என்று பெயர்; அவள் பிரான்ஸ்தேசத்து இராஜாவாகிய காரிபர்ட் என்பவருடைய புத்திரியாயும், ஞானவு என்னும் இராஜவம்சத்தைச் சேர்ந்தவளாயிருந்தாள்; இவ்விலாந்துக்கு வருமுன்னே அவள் கிறிஸ்தவளாயிருந்தாள். கண்காணியார் ஒருவர் எப்போதும் இவளுடன் இருப்பார்; அவள் கல்ல பதிவிரதையாயும் பக்தியுள்ளவளாயும் இருந்தால், சோமாபுரியிலிருந்து தூதனமாய் வந்த கிறிஸ்துமார்க்கம் குருமார் எற்றுக்கொள்ளவேண்டும் என்றும், அவர்களுக்கு வேண்டிய அனுகூலங்கள் செய்யவேண்டும் என்றும் தன் புருஷனுக்குச் சொல்லிவருவாள்; அதை அரசன் கேட்டு அவர்களுக்கு வேண்டிய உபசாரங்கள் செய்து, அவர்களுடைய பிரசங்கத்தைக் கேட்டுவந்தார்; அகுஸ்தினும் அவருடன் கூட வந்தவர்களும் 597-ம் வருஷம் (Isle of Thanet) "தேனெட்" பக்கம் இங்கிலாந்து தேசத்தின் கரை வந்து சேர்ந்தார்கள்; முதலாவது கான்டர்பரிநகரம் இவர்களுக்கு முக்கியஸ்தலமானது. இதுவே தற்காலத்தில் இங்கிலாந்துசபையின் பிரதான கண்காணியாகிய (Archbishop) கிரேஷ்ட அத்தியகூர் இருக்கும் ஸ்தானம். கொஞ்சக்காலத்துக்குப்பின் எதல்பர்ட் என்னும் அல்சாசனும் அவருடைய பிரஜைகளும் கிறிஸ்துமதத்தை அனுசரித்தார்கள்; இப்படி இந்த நாற்றாண்டில் கிறிஸ்துமார்க்கம் இங்கிலாந்துதேசத்தில் ஒருவாறு பிரபலமாயிற்று.

Gregory's Character and death, A.D. 604.

கிரகரி என்பவர் வெகுகாலம் இப்படிச் சத்தருக்கு ஊழியஞ்செய்து 604-ம் வருஷத்தில் தேகவியோகமானார்; இவர் அநேக நல்லகாரியங்கள் செய்திருக்கிறார்; அதனாலே அவருக்குப் பெயரும் புகழும் உண்டானபோதிலும், அதனாலே அவருக்குச் சிறிதேனும் சர்வமுண்டாகவில்லை; அவர் அடக்கமாயும் மனத்தாழ்மையாயும் நடந்துவந்தார்; அவர் ஒரு அலுவல் செய்து முடித்தபிற்

பாடு அதைப்பற்றி, "நான் எழுதின புத்தகம் முற்றுப்பெற்றது; மற்றவர்களுக்குப் பிரசங்கித்த நான் இப்போது என்னையே உற்று நோக்கவேண்டியிருக்கிறது; நான் எழுதினவைகளினாலே நன்மை வருத்தக்காயிருக்கிறதா? நிமை விசாரத்தக்காயிருக்கிறதா? கண்மைக்கடலாயிருக்கிற தேவனது மகிமையை விரும்பிச்செய்யும் காரியமே நன்மை; மற்றதெல்லாம் நிமையே. நான் மனதாரத் நிமையான காரியங்களே எழுதினதாக எனக்குத் தோன்றவில்லை; ஆயினும் நான் இது விஷயத்தில் குற்றமில்லாதவனென்று சொல்லத் துணியேன். நான் எதாவது கல்லகாரியத்தைப் பேசியிருப்பேனாகில், அது அருள் நாதனுடைய தேவனிடத்திலிருந்து எனக்குத் தயவாய்க் கிடைத்த பாக்கியம்; அவரால் அடைந்த அந்த நன்மையும் எனக்குள் குடிகொண்டிருக்கிற பாவத்தால் பஞ்சாபிர்த்தில் பாலுடனே கலந்தபோல் கெட்டுப்போகிறது; நான் பேசும் இனிய சொற்கள் கொப்புளிப்பையும்போலிருக்கிறது; என்னுள்ளத்தின் நோக்கம் கோபாலிருக்கிறது; ஒரு மாத்துக்கு வேர் நன்றாயிருக்குமென்றால், கிளைகள் இலைகளெல்லாம் நன்றாயிருக்கும்; அதில் பழுதிருக்குமென்றால், மரத்திலும் பழுதிருக்கும்; ஆசையால் என்னுள்ளத்தின் அந்தரங்க நோக்கம் எப்படி? நான் கடவுளுடைய மகிமையைத் தருதி கடக்கவேண்டுமென்று பார்த்தாலும், என்னுக்குள் எண்ணெய் இருப்பதுபோல் மனிதர் புகழ்ச்சியை நாடும் குணமும் என்னுள்ளத்தில் ஒட்டி இருக்கிறது; அதனாலே தர்மசிந்தை கெட்டுப்போகிறது; ஐயோ! கடவுள் தமது திருக்கண்கொண்டு இந்த நீசப்பாவியை நோக்காராகில் எனக்குள் என்ன நன்மைதானிருக்கும்? நான் செய்கிற நிமையெல்லாம் எனக்குச் சொந்தம்; தேவ அருளைப் பெற்று நான் செய்கிற நன்மை என் பாவதோஷத்தால் கெட்டுப்போகிறது; என்னுள்ளத்தைத் திறந்து சொன்னேன்; இதை வாசிக்கிற இவ்விடமெல்லாரும் எனக்காகப் பிரார்த்தனை செய்யவேண்டும்; அப்படிச் செய்தால் நான் என்னுடைய நூல்களாலே அவர்களுக்குச் செய்த நன்மையைப்பார்க்கிலும், அவர்கள் தங்கள் ஜெபங்களாலே எனக்குச் செய்யும் நன்மை அதிகப்படும்" என்று எழுதினார்.

General Reflections.

இது யாவெல்லாரும் நன்றாய்க் கவனிக்கவேண்டிய விஷயமாயிருக்கிறது; நாம் செய்யும் எக்காரியத்தையும் தேவமகிமையை நாடிச் செய்யவேண்டுமேயன்றி, மனிதர் புகழ்ச்சியைக் கருதிச் செய்யலாகாது; அதை என்ன

ளவேனும் விரும்பி ஒரு காரியத்தைச் செய்வோமாகில், தேவனது கருணைகடாக்ஷம் சற்றென்றேனும் இருக்கமாட்டாது; தனக்குவமை யில்லாத சாட்சாத் கடவுள் ஜீவாத்மகோடிகளுக்குச் சகல நன்மைகளை யும் கடாக்ஷித்து வருகிறார்; அவர்களே ஈடேற்றும்பொருட்டு தமது சொர்க்க குமாரனையும் கொடுத்தார்; இப்படி எல்லாவற்றையும் அனுக் கிரகித்த அந்தக் கிருபாகாயர் தமது மகிமை ஒன்றையே ஒருவருக் கும் கொடுக்கவில்லை. "நம்முடைய மகிமையை வேறொருவருக் கும், நமது துதியை விக்கிரகங்களுக்கும் கொடோம்" என்று திரு வாய்மலர்ந்தருளினார்; அந்த மகிமையை மனுஷன் தூணித்து எப் பிரமாணமாவது அபகரிக்கப் பார்ப்பானுகில் அவனுக்கு ரோசம் வரும் என்பதற்குச் சந்தேகமில்லை. ஏரோது என்னும் இராஜன் அந்த மகிமையைச் சற்று விரும்பப்போய்ப் புழுக்களுக்கு இரை யானான்; ஆகையால் நாம் எந்த வேலையைச் செய்யும்படி ஏற்பட்ட போதிலும், "எங்களுக்கல்ல, கர்த்தாவே! எங்களுக்கல்ல, உம்மு டைய நாமத்துக்கே தேவரீர் உமது கிருபையினிமித்தமும் உமது சத்தியத்தினிமித்தமும் மகிமை வரப்பண்ணும்" என்று பக்தி வினை யத்துடன் சொல்லவேண்டும்.

அகுஸ்தின் காலத்திற்கு முன்னே இங்கிலாந்தில் கிறிஸ்துமார்க் கம் பரம்பியிருந்தது என்று முன்னமே காட்டியிருக்கிறோம். பிரித்தா னியா சபை ஆதிகாலச் சபை. இந்தச் சபையைச்சார்ந்த கண்காணி மார் லண்டன், யார்க், ஆர்மா, கிலாஸ்கோ என்ற பட்டணங்களில் சுமார் கி. பி. 178-ம் வருஷமுதல் இருந்துவந்ததாக, பில்தாஸ், பிட்முத லிய பூர்வ சரித்திரக்காரர் சொல்லுகிறார்கள். ஆனல் (Canterbury) காண்டர்பரியின் முதல் கண்காணி அகுஸ்தின் என்பவரே.

இவைகளெல்லாம் பார்க்கும்போது இந்த நூற்றாண்டிலும் இயேசுகலாமியின் அடியார்கள் இகுமங்கும் இருந்தார்கள் என்று தோன்றுகிறது. 529-ம் வருஷத்தில் பிரான்ஸ்தேசத்திலுள்ள ஆரஞ்ச பட்டணத்தில் ஒரு சங்கம் கூடிற்று; அதற்குப் பதினேழுபேர் கண்கா ணிகள் வந்திருந்தார்கள்; அதில் பிலேஜியசின் கோட்பாட்டுக்கு விரோதமாக, அவர்கள் ஆதரம் செய்த பாவம் அவனுடைய பின்தூபோ காமல் அவன் சந்ததியையும் தொடர்ந்து பிடித்தது; அதனுலே சரீ ரத்துக்கும் ஆத்துமத்துக்கும் கெடுதி கேரிட்டது; மனிதர் தேவனைப் பார்த்து வேண்டிக்கொள்ளுகிறதினுலே அவர்களுக்குத் தேவ அருள் கிடைக்கிறதில்லை; தேவ அருள் கிடைப்பதினுலேயே அவர்கள் கட வுளைப் பார்த்துப் பிரார்த்திக்கவும், அவர்களுக்குப் பாவ அழுக்கு நீக்கவும், விசுவாசபக்தி யுண்டாகவும் எதுவிருக்கிறது. அவர் கள் முத்திபெறுவதற்கு வேண்டிய பிரயத்தனங்களைச் செய்ய சக்தி பற்றவர்கள். ஆபேல், நோவா, ஆபிரகாம் முதலான முற்பிதாக கள் விசுவாசத்தினுலே இரட்சிக்கப்பட்டார்கள் என்று பவுல் அப் போஸ்தலன் சொல்லுகிறார்; அது அவர்களுக்கு இயல்லையாய் உண் டாகாமல் தேவஅருளாலே உண்டாயிற்று என்று சங்கத்தார் கோள் ளுர்கள்.

Council at Mascon, A.D. 585.

585-ம் வருஷத்தில் மாஸ்கன்பட்டணத்தில் ஒரு சங்கம் கூடி சது; அதில் ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆச ரிக்கவேண்டும் என்பதைப்பற்றிக் கண்டிப் பான சட்டம் ஏற்படுத்தினுர்கள். ஓய்வுநாளா கிய ஞாயிற்றுக்கிழமையில் ஒருவரும் வேலை செய்யக்கூடாது; மதச் சின் ஓட்டக்கூடாது; பிரியாதகாரியங்களே நடத்தக் கூடாது; உலகத் திலுள்ள மனுமக்களெல்லாம் கர்த்தரைப் புகழ்ந்து கொண்டாட வேண்டும் என்று சொன்னர்கள்; இதை மீறி அந்த நாளைச் சரியான படி ஆசரியாதவர்களுக்குச் சில தண்டனைகளையும் விதித்தார்கள்.

Rise of the Benedictine Order of Monks, A.D. 529.

மேற்சொன்ன விசேஷங்களைக் கவனிக்குங்கால், தேவபக்தர் கள் சிலர் இந்த நூற்றாண்டிலும் இருந்தார்கள் என்பது பிரத்தியட்சம்; ஆயினும் மூடபக்தி யும் அறியாமையும் அதிகப்பட்டுக்கொண்டே வந்தது; மேற்சபையிலும் சங்கியாச ஒழுக்கம் விர்த்தியடைந்துகொண்டுவந்தது. 529-ம் வருஷத்தில் கஸைனே என்னும் மலையில் புதிதாய் ஒரு சங்கியாசமடம் கட்டப்பட்டது; அதிலே உண்டான சங்கியாச ஒழுக்கத்துக்குப் பெனடிக்ட் ஒழுக்கம் என்று பெயர்; இதை இத்தாலிதேசத்தில் காசியாபட்டணத்தில் பிறந்த பெனடிக்ட் என்பவர் ஸ்தாபித்ததினுல் அதிகப் பெயருண்டா யிற்று. இவர் 480-ம் வருஷம் பிறந்தார். படிப்பு விஷயத்திற்காக ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டார். ஆனல் அக்கே நடந்த அக்கி ரமங்களைப் பார்க்க மனமற்றவராய், காட்டுக்கு ஓடிப்போனர். அங்கே ஒரு சங்கியாசியைக் கண்டு, குகையில் அவருடன் தபம் செய்து வந்தார். பதினைந்து பிராயத்தில் காட்டுக்கு ஓடி, மூன்றுவருஷம் கடினதபம் புரிந்து கடைசியில் இந்தச் சங்கியாசக்கொள்கையே உத்தம

துப்போன்பின் அலியென்பவன் பட்டத்திற்கு வரவேண்டியதாயிருந்தும், மகமதுவின் மாமனுகிய அபுபக்கர் என்பவன் (Khalif) காலிப் என்ற பட்டம் பெற்று மகமதுவின் ஆனேத்திற்கு வந்தான். ஆனல் அபுபக்கர் வெருசிக்கிரம் கொலேசெய்யப்பட்டான். இதன்பின் ஒத்மா பட்டத்திற்கு வந்து அவனும் இப்படியே கொல்லப்பட்டான். கடைசியில் அலி பட்டத்திற்கு வந்து கொஞ்சக்காலத்தில் இவனும் மஜீதிலே கொல்லப்பட்டான். அவனுடைய குமாரர் அசேன், உசேன் என்பவர்களுக்கும் இப்படியே நடந்தது. "சையி" என்பவர்கள் அலியைச் சேர்ந்தவர்கள். "சுன்னி" என்பவர்கள் அபுபக்கர் முதலியவர்களைச் சேர்ந்தவர்கள். இதை நினைவுகூருவது மொகாம்மதியர் பண்டிகை. பார்சுக்காரர் அலியைச் சேர்ந்தவர்கள்; துருக்கர் அபுபக்கரைச் சேர்ந்தவர்கள்.

மகமது இறந்துபோனபின் அவனைச் சேர்ந்தவர்கள் சிலகாலம் தாய்முகம்மாதபின்னேபோலும், மறைமுகம் பாராத பின்பேனும் வாடியிருந்தபோதிலும், பிற்பாடு அவர்கள் தைரியமடைந்து, சிரிய, பார்சு, எகிப்துமுதலான தேசங்களுக்கும் படையெடுத்துப்போய் அவைகளைத் தங்கள் வசமாக்கிக்கொண்டார்கள். 637-ம் வருடத்தில் அவர்கள் எருசலேம்பட்டணத்துக்குப் போய் யுத்தஞ்செய்து அதையும் பிடித்துக்கொண்டார்கள்; இப்படி அவர்கள் போனபோன இடங்களிலெல்லாம் அவர்களுக்கு ஜெயங்கிடைத்தமையால், தாமரு வத்துக்குள்ளாக அவர்கள் இந்துதேசம், எத்தியோப்பியா, பிரான்ஸ் தேசம், துர்க்கைதேசம், இங்காங்கு எல்லைக்குட்பட்ட ஒரு பெரிய இராஜ்யத்தை ஸ்தாபித்துக்கொண்டார்கள்; அவர்கள் ஜெயித்த ஜனங்கள் ஒன்றும் மகமதுமார்க்கத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும், அல்லது கப்பங்கட்டவேண்டும்; அவர்கள் தங்கள் மார்க்கத்தை அனுசரித்துக் கொள்வார்களானில் அவர்களோக் கூடியஅளவில் மேன்மையாய் நடத்துவார்கள்; அது வேண்டாமென்று கப்பங்கட்டுவிப்பதே நிர்மூலஞ் செய்கிற ஜனங்களை மிகவும் ஒடுக்கி அடிமைகளைப்போல் நடத்துவார்கள். மகமதுவுக்குப்பின் அவனுடைய அதிகாரத்தைச் செலுத்திக் கொண்டவர்களுக்கு (Khuliphs) காலிபன் என்று பெயர்; அவர்கள் மகமதுமரித்துப் பன்னிரண்டு வருஷங்களுக்குள் மூப்பத்தாறுயிரம் பட்டணங்களையும் கோட்டைகளையும் பிடித்து, இன்னவர்களுடைய காலமிரம் தேசங்களை இதற்குட்படுத்தினார்கள்; வெளி. 9, 1–11.

Conquests of Mahomed's followers.

வாயும் சொல்லியிருக்கிற வெட்டுக்கிளிகளைப்போல் இவர்கள் உலகமெங்கும் பறந்து சர்வநாசஞ்செய்தார்கள். கிறிஸ்தவர்கள் கடவுளை மறந்து அவரது திருமார்க்கத்துக்கு விரோதமான துன்மார்க்கங்களைச் செய்துவந்தபடியால், அவர்களுக்கு அவர் இந்தத் தண்டனையை வரவிட்டார்.

இப்படிக் கிறிஸ்துசபை மிகவும் சீர்கெட்ட ஸ்திதியிலிருந்தபோதிலும், பாழாய்க்கிடக்கும் பாலவனத்தில் இங்குமங்கும் கண்ணுக்கு இன்பத்தைக்கொடுக்கும் பசும்புல் நிலக்களும் சீர்சுனைகளும் இருப்பதுபோல் அத்தகாரம் நிறைந்த இந்த நூற்றாண்டிலும் தேவபக்தர்கள் விளிருந்தார்கள். ஹெராக்கிலியு என்னும் ராயன் கீழரோ மத்தில் அரசாட்சி செய்துவரும்போது, பார்ஸர் படையெடுத்து வந்து எருசலேமைப் பிடித்து ஜனங்களை மிகவும் ஒடுக்கிவந்தார்கள்; அக்காலத்தில் அலெக்சந்திரியாபட்டணத்துக்கு யோவான் என்பவர் கண்காணியாயிருந்தார்; அவர் தர்மசிந்தையிலும் பரோபகாரகுணத்திலும் மிகவும் சிறந்து விளங்கினவர்; அதனாலே அவருக்குக் கொடையாளன் என்ற பெயருண்டாயிற்று. பார்சருடைய கொடுங்கோல் அரசைப் பொறுக்கமாட்டாமல் அநேகர் அலெக்சந்திரியாபட்டணத்துக்கு யோவான் என்பவருடைய சகாயத்தைத் தேடிப்போனார்கள்; அவர் அவர்களுக்கு வேண்டிய சகாயங்களைச் செய்து அன்னவஸ்திரம் முதலானதுகளைத் தட்டில்லாமல் கொடுத்துவந்ததுமன்றி, எருசலேம்பட்டணத்திலே கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ஜனங்களுக்கும் வேண்டிய தர்மசகாயஞ்செய்தார். ஒருகால் உலகிலுள்ள ஜனங்களெல்லாரும் அலெக்சந்திரியாபட்டணத்துக்கு வந்தாலும், கடவுளுடைய கன்மைகளுக்கு மெம். குறைபடாது என்று சொன்னார்; இன்னெருகாலத்தில் பஞ்சமுண்டாகி அவனைத் தாழ்வாயிருந்தபோது நிரளான ஜனங்கள் அலெக்சந்திரியாவுக்குப் போனார்கள்; யோவான் என்பவர் அவர்களெல்லாருக்கும் தாராளமாய்க் கொடுத்தபடியால் அவருக்கே குறைவு சேரிட்டது; அப்போது அவர் கடவுளைப்பார்த்துப் பிரார்த்தித்தவர்தார்; இப்படி அவர் சமீட்டப்பட்டு மெகொண்டிருக்குங்காலத்தில் ஒருகால் ஒருவன் அவரிடத்துக்கு வந்து, நீர் எனக்குக் குருப்பட்டம் கொடுத்தால் நான் உமக்கு வேண்டிய திரவியம் கொடுப்பேனென்று சொன்னன்; அதற்கு அவர் அவன்மேல் கடுங்கோபமாகி, நீ கொடுக்கிற பணத்தினுலேயா என்

John, Bishop of Alexandria.

கள் கஷ்டம் நீங்கப்போகிறது? என் கேச சகோதரருக்கு தேவன் கொடுப்பார்; நீயும் நானும் பிறவாததற்குமுன் அவர்களுக்குப் போ ஜனம் கொடுத்தவர் இப்போது கொடுக்கமாட்டாரா? மரம் வைத்தவன் தண்ணீர் வார்க்கமாட்டானோ? நாங்கள் அவர் கற்பனைப்படி நடந்தால் எங்களுக்கு ஒரு குறைவும் வராது என்று சொன்னார்; சொல்லித் சொஞ்சகேரத்துக்குள்ளாக தானியம் பிடிக்கும்படி சிலிஸ்திவுக்குப் போயிருந்த இரண்டு பெரிய கப்பல்கள் திரும்பிவந்ததைக் கேட்டு ஆச்சரியமாகி, தேவனே! நான் உமது சபைப் பணத்துக்கு விரோதமாய் என்னைக் காத்து இரட்சித்தினிமித்தம் உமக்குத் தோத்திரம் என்று சொன்னார்; அவர் கண்காணியான நாள்முதல் பிரதினம் வழாயிரத்தைந்நூறு வழைகளுக்குச் சாப்பாடு கொடுத்துக்கொண்டு வந்தார்; அவர் அதைத் தர்ம இஷ்டன் என்று ஜனங்கள் புகழவேண்டுமென்ற நோக்கமாய்ச் செய்யாமல், தேவனிடத்திலிருந்த பக்தியினாலும் பிறர்மேலிருந்த பட்சத்தினாலுமே அப்படிச் செய்தார்; தேவவசனத்தை ஞானபோஜனமாக எண்ணி அதை ஓயாமல் வாசித்துத் தியானஞ்செய்வார்; அவருடைய சம்பாஷணை உப்பினால் சாரமேற்றுகிறதுபோல் கேட்கிறவர்களுக்கு இன்பத்தையும் ஞானத்தையும் கொடுக்கத்தக்கதாயிருந்தது; அவதூறான பேச்சைச் சற்றும் பொறுக்கமாட்டார்; எவனாவது வந்து ஒருவனைப்பற்றி அபகீர்த்தியான சொல்லைச் சொல்வானானால், அது தமக்குப் பிரியமில்லை என்பதுபோலக் காட்டி வேறுகாரியத்தை எடுத்துப் பேசுவார்; அக்குறிப்பை அவன் அறிந்து அந்தப் பேச்சை நிறுத்தாமலிருந்தால், மறுவிசை அவன் தம்மிடத்துக்கு வராதபடிக்குத் தடுத்துப்போடுவார்; இந்தக் குணம் கிறிஸ்தவர்களுக்கு இருக்கவேண்டியது அவசியம்; மற்றவர்கள்மேல் கோட்சொல்லுகிறதும், அதைக் கேட்கிறதும் நல்லதல்ல; இந்த அவதூறு என்கிற நியூலூண்டாகிற புண் சீக்கிரம் ஆறமாட்டாது. "நியூலூற் சுட்டபுண் உள்ளாறும் ஆறுதே, நாவினூற் சுட்ட வடு" என்று திருவள்ளுவர் சொன்னது யதார்த்தமே.

இவையல்லாமல் இன்னும் அநேகம் பத்தர்களிருந்தார்கள்; இதற்குமுன் நாம் மனுஷத்தலிபருடைய மதபேதத்தைப்பற்றிப் பேசினபோது, அதை விரோதித்துச் சத்தியமார்க்கத்தின் சுத்த உபதேசங்களைப் பரிபாலித்தவர்கள் ஏலர் இருந்தார்களென்று சொன்னோம்; அவர்களில் ரோமாபுரிக் கண்காணியாகிய மார்ட்டின் என்பவரும், அவருடைய சிநேகிதனுமாகிய மக்சிமு என்பவரும் அதுவிஷயத்தைப்பற்றி வாதாடினதில் தங்கள் உயிரை இழந்தார்களென்று தெரிந்திருக்கலாம்; இவர்கள் இருவரைத்தவிர எருசலேம்பட்டணத்துக் கண்காணியாகிய சொப்ரோனியு என்பவரும் அந்த மதபேதத்தை விரோதித்ததாகச் சொல்லியிருக்கிறோம்; அவர் கொடைக்குக் கன்னைப்போலிருந்த யோவான் என்பவருடைய சீஷன்; அவர் கண்காணிப்பட்டம் பெற்ற பிற்பாடு மனுஷத்தலிபருடைய கோட்பாட்டை நாசம்பண்ணவேண்டும் என்று எண்ணங்கொண்டு வேண்டிய முயற்சிகள் செய்துவந்தார்; அவர் அதைப்பற்றிக் கிறிஸ்தவர்களுடைய தமது திருவுள போசனையின்படி தமது மனுஷீசத்தில் செய்யவேண்டிய காரியங்களையும் பாடவேண்டிய காரியங்களையுஞ் செய்து உத்தரித்தார்; அவர் திருவுளதாரபுருஷராய் எழுந்தருளி வந்தார் என்பது கட்டுக்கதையல்ல; அவர் எப்போதும் தமது இஷ்டத்தின்படியே சகலத்தையுஞ் செய்தார்; அவர் சகோதரத் தகவுனாயிருந்தும் மனுஷ்சாகாய் மனுவடிவெடுத்து, மன்னுயிர்க்காகத் தன்னுயிரை விட்டு, தமது புண்ணியத்தினால் அவர்கள் தண்பங்களை நிவர்த்தி செய்திருக்கிறார்; பாவத்தினையும் துன்பதையிர, மனிதனுக்குரிய மற்றப் பாடுகளெல்லாம் அவர் மனுஷீகத்திற்பட்டு உத்தரித்தார்; அவர் உயிரோடு எழுந்தருளினபிற்பாடு மானிடனாதியாருக்குரிய துன்ப துயரங்கள் யாவையும் தொலைக்கும்படியாக, அவர் அவைகளுக்கு முற்றும் நீங்கலானார் என்று எழுதினார்.

Sophronius, Bishop of Jerusalem.

மற்றச் சபைகளைப்பற்றிச் சொல்லவேண்டிய விசேஷங்கள் அதிகமில்லாவிடினும், இங்கிலாந்துதேசத்திலுண்டாயிருந்த சபையின் ஸ்திதி விசேஷமும் சந்தோஷத்தைக் கொடுக்கத்தக்கதாயிருக்கிறது. இந்தநூற்றாண்டின் துவக்கத்தில் இங்கிலாந்து சபையில் இரண்டு பிரிவு இருந்ததாக தெரியவருகிறது.

History of the English Church. Baptism of King Eadbald, A.D. 616.

ஒன்று அங்கிலேய சாக்சன் சபை, இதைச் சேர்ந்தவர்கள் அருள்தினை தங்கள் விசேஷ்ட கண்காணியாக ஏற்றுக்கொண்டார்கள், இரண்டாவது வகுப்பார் புராதன பிரிந்தானிய சபையார். இவர்கள் மார்க்க சுயாதினமுள்ளவர்கள். பின்னும் ரோமைப்பாப்பு அல்லது அருள்தினை தங்களுக்கு விசேஷ்ட கண்காணியாக ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் ஆதிகாலமுதற்கொண்டு இங்கிலாந்து திருச்சபை சுயாதீன சபையாயும், ரோமைச்சபையின் காரியங்களுக்கு இணக்கமில்லாததாயிருந்ததாகத் தோன்றுகிறது. சென்ற நூற்றாண்டின் இடையில்

அகுஸ்தீன் என்பவரும் அவரைச்சேர்ந்த குருமாரும் இங்கிலாந்து தேசத்துக்குப் போய்க் கிறிஸ்துமார்க்கத்தைப் பிரசித்தஞ் செய்தார்க ளென்றும், கென்ற் காட்டின் இராஜாவாகிய எதல்பர்ட் என்பவரும் அவருடைய குடிகளில் அநேகரும் அதை அனுசரித்தார்களென்றும் சொல்லியிருந்தோம்; எதல்பர்ட் என்னும் இராஜன் இறந்தபிற்பாடு அவருடைய குமாரனுகிய எட்பால்ட் என்பவர் அவர் பட்டத்தைப் பெற்று கென்ற் நாட்டணத்தில் அரசாட்சி செலுத்துவருங்காலத்தில் முறைகேடான பாவத்துக்குட்பட்டுச் சத்தியதெறி தப்பி நடந்தார். அகுஸ்தீன் என்பவருக்குப்பின் காண்டர்புரிபட்டணத்துக்குச் சிரே ஷ்ட கண்காணியாயிருந்த லாரன்ஸியு என்பவர் அதைக்கேட்டு, அந்த இராஜாவைச் சீர்ப்படுத்தும்படி வேண்டிய பிரயத்தனங்கள் செய்தார்; ஒன்றும் சித்திக்கவில்லை. அதனுலே அவர் இங்கிலாந்துதேசத்தை விட்டுவிடும்படி யோசித்துக்கொண்டிருக்கும்போது இராஜாவை உபாயத்தினுல் வெல்லவேண்டுமென்று கருதி, ஒருநாள் இரவில் கோவிலில் படுத்துக்கொள்ளத் தீர்மானஞ்செய்தார்; மறுநாள் அவருக்கு உடம்பெல்லாம் காயமாயிருந்தது; அதோடே எட்பால்ட் என்னும் இராஜனுக்கு முன்பாகப் போனபோது அவர் அதைப்பார்த்து ஆச்சரியப்பட்டு, இத்தக் காயமுண்டாகும்படி உம்மை அடித்தவன் யாரென்று கேட்க, அவர்: நான் நேற்றுக் கோவிலில் படுத்துக்கொண் டிருக்கும்போது நடுச்சாமத்தில் பேரொரு அப்போஸ்தலன் காணியாகி, நான் என் சபையை விட்டு ஓடிப்போகவேண்டுமென்று சினந்த தது பெரிய பாதகமென்று சொல்லி, என்னை இப்படித் தண்டித்தார் என்றார்; இது முற்றிலும் சித்தமென்று நம்புவதற்கு இடமில்லை. அந் தக்காலத்திலிருந்தே சன்னியாசிகள் அபாண்டமான கட்டுப்பாடுகள் செய்து அவைகளெல்லாம் அற்புதமென்று சாதிப்பார்கள். எப்படி யிருந்தாலும் அந்த வஞ்சனையை அரசன் நம்பி தமக்கும் இப்படிப் பட்ட பாடு வந்தாலும் வருமென்று நினைத்து, முன் செய்துகொண்டு வந்த துன்மார்க்கத்தை விட்டு ஞானஸ்நானம்பெற்றுக் கிறிஸ்துமார்க் கம் பிரபலமாவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்தாரென்று சொல் லுகிறார்கள். அரசன் லாரன்ஸியு என்பவரை இங்கிலாந்திலேயே இருக்கும்படி செய்து இந்தத் தேசத்தார் அநேகர் கிறிஸ்தவர்களாகிற தற்குக் காரணமாயிருந்தார்.

இவ்வாறும் கிறிஸ்துமார்க்கம் கென்ற் இராஜ்யத்தில்மாத் திரம் பிரசித்தமாகிக்கொண்டுவந்தது; இந்த நூற்றாண்டில் அது

இங்கிலாந்துதேசத்தின் வடமாகாணங்களிலும் சென்றது; இதுவும் ஒரு ஸ்திரீயினுடைய நன் முயற்சியினுலேயே நடந்தது. நார்த்தம்பிரியா நாட்டுக்கு அரசனு யிருந்த எட்வின் என்பவர் எட்பால்ட் இரா ஜாவின் சகோதரியாகிய எதல்பர்க் என்ப வளே மணம்புரியும்படிக் கருதி, எட்பால்ட் என்னும் அரசனிடத்தில் கேட்டபோது, அவர் அந்நாளான இராஜாவுக்குத் தன் சகோதரியை விவாகஞ்செய்து கொடுப்பது தகாது என்று சொன்னர்; அதற்கு எட்வின் என்பவர் எதல்பர்க் என்பவளை நான் மணம்புரிந்தாலும் அவள் தன் நாட்டில் படி கிறிஸ்து சமயாசாரங்களை அனுசரித்துவரலாம்; மதவிஷயத்தில் அவளுக்கு எவ்வளவேனும் இடைஞ்ச லிருக்கமாட்டாது; நான் மத விசாரணை செய்யும்போது கிறிஸ்துமார்க்கம் கடவுளாலுண்டான அருள்வேதமென்று நிச்சயப்பட்டால், நானும் அதை அங்கீகரிப்ப தற்கு ஒரு தடையுமில்லை என்று சொன்னதின்பேரில் விவாகம் நடந்தது. எதல்பர்க் என்பவள் தன் புருஷன் வீட்டுக்குப் போகும் போது, எட்பால்ட் என்பவர் தன் சகோதரியினுடைய மனம் மருள் கொண்டுபோகாமல் அடிக்கு எப்போதும் ஞாபகோபதேசஞ் செய் யும்படி, பௌலு என்னும் ஒரு குருவைக் கூட அனுப்பினுர்; அவர் 625-ம் வருஷத்தில் இங்கிலாந்துதேசத்தின் வடமாகாணங்களுக்கு யார்க்குப்பட்டணத்தில் கண்காணியானுர்; அவர் கிறிஸ்துமார்க்கத் தின் சாரத்தை நன்று யுணர்ந்தவராயிருந்தமையால், அதை யாவருக் கும் தெரிவிக்கவேண்டுமென்ற அபேட்சை அவருக்கு அதிகமாயிருந் தது; எவ்வளவுதான் பிரசங்கம்பண்ணியும் காரியமொன்றும் ஆக வில்லை. 628-ம் வருஷம், மேற்கு சாக்சனி மாகாணத்தின் அர சனுகிய எட்வினைக் கொல்லும்படி ஒரு சேவகனை நஞ்சிட்ட கட்டி யுடன் அனுப்பினுன். குத்துகிற சமயத்தில் எட்வினின் மனுஷன் ஒருவன் குறுக்கே விழுந்தால், அரசனின் உயிர்தப்பியது. அதே நாளில் அரசனின் மனைவியும் பெண்குழந்தை ஒன்றைப் பிரசவித் தாள். இந்த இரண்டு நன்மைகளுக்காகவும், அரசன் விக்கிரகங்களுக்கு பிரசு பலியையும், பௌலுவோ ஜீவனுள்ள தேவனுக்கு ஸ்தோத்திர பலியையும், செலுத்தினுன்.

அரசன் பௌலுவைக் கூப்பிட்டு, என்னைக் கொல்ல வகைபார்த்த என் பகைருனே ஜெயிக்கப்போகிறேன். இதில் ஜெயம் கிடைத்

தால் இறில்துவை என் ரட்சகராக ஏற்றுக்கொள்வேன் என்று சொன்னான். அப்படியே உடனே அவன் முதலில் அந்தாங்க இறில்தவனானான். தன் குடிகள் இறில்துமார்க்கத்தை ஏற்றுக்கொள்ளும்படி எட்வின் என்னும் இராஜன் அதைப்பற்றி நன்றும் ஆலோசிக்கும்படி ஒரு சங்கம் ஏற்படுத்தினான்; அதில் காய்பி என்னும் ஒரு அஞ்ஞான குரு எழுந்தின்று, விக்கிரகங்களை வைத்துக் கும்பிடுவதினாலே மா தொரு பயனுமில்லையென்று வற்புறுத்திப் பேசினான்; அவன் பேசி முடித்தபின், கனவானுமிருந்த ஒரு பிரபு எழுந்து பேசத்தொடங்கினார். "ஓ, இராஜாவே! வெளியே காற்றும் மழையும் அகோரமாயடிக்கும்காலில், நீர் உமது அமைச்சர்கள் இராஜசபையோடிருந்து கணப்புப்போட்டுக் குளிர்காய்ந்துகொண்டிருக்கும்போது, ஒரு அடைக்கலான்குருவியானது ஒரு வாசல்வழியாய் உள்ளேவந்து மறுவாசல் வழியாய் வெளியே பறந்துபோவதைக் கண்டிருப்பதில்லையா? அது வீட்டுக்குள்ளிருக்கும்போது வெளியிலிருக்கிற குளிர்ச்சி அதற் கொன்றும் தோன்றவில்லை; ஆயினும் ஒரு கொடுக்குள் அது வெளியே போய்விடுகிறது; அது வந்த இடம் எதுவென்றும் போன இடம் எதுவென்றும் எவனாலேனும் தெரியவேயில்லை; மனுஷனுடைய ஜீவனும் இத்தன்மையுள்ளதாகவேயிருக்கிறது. நேற்றிருந்தான் இன்றைக்குக் காணோம், இன்றிருப்பான் நாளைக்குக் காணோம்; மனுஷனுடைய காயம் நீர்மேல் குமிழிபோல் நிலையற்றதாயிருக்கின்றது; அவன் எங்கேயிருந்து வந்தானென்றும், எங்கே போகிறானென்றும் ஒன்றும் தெரியவில்லை; இதுவிஷயத்தில் இறில்துமார்க்கத்தினாலே கண்டுக் தெளிவும் நிச்சயமும் பிறக்கத் தக்கதாயிருக்குமானில்; அதை அங்கீகரிப்பதற்கு நான் முந்திச் சொல்வேன்" என்றார்; இந்தச் சமயத்தில் பவுலு சாதாரியப் பிரசங்கம் செய்தார். அதை அந்தச் சபையாரெல்லாரும் கேட்டுச் சந்தோஷப்பட்டு, அருகிலிருந்த ஒரு விக்கிரகக்கோவிலை அகோரமே இடித்துப்போட்டு, அஞ்ஞானமார்க்கத்தை ஒறுத்து, இறில்துமதத்தை அனுசரித்துக்கொண்டார்கள். 627-ம் ருவதும் வீட்டின் சென்பசர் இராஜபட்டம் பெற்ற பதினாறாம் ஆண்டில் அரசும் அவருடைய குடிகளில் அநேகரும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

சர்சேனர் இவ்விலாந்தேசத்துக்கு வந்த 108-ம் ருவதத்தில் இது நடந்தது; ஆபத்துக்கு உதவும்படியாய் வந்த அவர்கள், அது

பவுலு எட்வின் அரசனுக்கும் அவனுடைய பிரபுக்களுக்கு முன்னின்று பிரசங்கம் செய்வது.

தீர்க்கபின்பு தகுந்த தேசத்தைப்பார்க்கிலும் இத்தேசம் செழிப்பும் செல்வமுமுள்ளதாயிருந்ததைப் பார்த்து: Synod of the Gospel, "ஆசைக்கோர் அளவில்லை" என்பதுபோலப் பேராசைகொண்டு, ஜனங்களையெல்லாம் ஜெயித்துத் தங்கள் குடைக்குள் ஆண்டு கடத்தினார்கள்; அவர்களாலே ஏழு ராஜ்யங்களுண்டாயின: அவைகளுக்கு, "சத்தரசர் செங்கோல்" என அர்த்தங்கொள்ளும் "ஹெப்ற்றார்க்கி" என்று பெயர்; அவைகளில் நார்த்தம்பிரியா என்பது வடராஜ்யமாயும், கென்ற் என்பது தென்ராஜ்யமாயும் இருந்தது; கென்ற் மாகாணத்தில் கான்தர்புரியும், நார்த்தம்பிரியாவில் யார்க்கும், தற்காலத்திலிருப்பதுபோலவே இரண்டு ஸ்ரேஷ்ட கன்காணிகளின் (Archbishops) முக்கியஸ்தானங்களாயிருந்தது. இப்படி வடக்கிலும் தெற்கிலுமுள்ள ராஜ்யங்கள் இறில்துமார்க்கத்தை அனுசரித்துக்கொண்டதை மற்ற ஐந்து ராஜ்யங்களிலுள்ள ஜனங்கள் கண்டு அவர்களும் அதை அங்கீகரித்துக்கொள்ளும்படி தொடங்கினார்கள்; இப்படிக் இறில்துமார்க்கம் இங்கிலாந்து தேசத்தில் பிரபல்யமாவதற்கு இராஜாக்களும் இராஜபத்தினிகளும் வேண்டிய முயற்சிகள் செய்துவந்தார்கள். "இராஜாக்கள் உன்னை

வளர்கிறவர்களும், அவர்கள் நாயகன் உன் தாதிகளுமாயிருப்பார்கள்" என்ற திருவாக்கு ஒருவாறு நிறைவேறிற்று. இந்த நூற்றாண்டின்பிற்பாகத்தில் இங்கிலாந்துதேசத்தில் (Theodore) தியோடோர், (Wilfrid) உவில்பிரிட் என்ற இரண்டு பெரியவர்கள் இருந்தார்கள்.

இதில் தியோடோர் தரிசுப்பட்டணத்தில் பிறந்தவனும் பக்திசாலியும் புத்திசாலியுமாயிருந்தார். இவர் காண்டர்புரி பிரேஷ்ட கன்காணியாக 670-ம் வருஷம் பிரமகுமாகி, பிரிஸ்து சபையை கட்டுவதற்கென்று கல்ல ஏற்பாடு பலது செய்தார். கோவிலில் பாடுகிற வழக்கும் இவரால் ஆரம்பமானது.

வடபாகத்திலுள்ள யார்க்குப்பட்டணத்தில் உவில்பிரிட் கன்காணியானார். இவர் ரோமைச்சபைக்கு மெத்த அனுகூலமாயிருந்தார். பிரிஸ்துமார்க்கத்தின் ஒளி இவ்விதமாய் இங்கிலாந்துதேசத்தில் அதிகமாய்ப் பிரகாசித்தபிறகு, அச்சபையைச் சேர்ந்த அநேகர் பல தேசங்களுக்கும் போய் பிரிஸ்துவின் இரகசியமகத்துவங்களைக் கூறி, சபைகளை கட்டினார்கள்; பிரான்ஸ்தேசத்துச் சபையைச் சேர்ந்தவர்களிலும் சிலர் அப்படியே செய்தார்கள். தெஸ்தோனிய பிரிஸ்தவர்கள், பார்சு, சீரியா, இந்தியா, சீனமுதலான தேசங்களுக்குப் போய், மூடாந்தகாரத்தில் அகப்பட்டுக்கிடந்த அநேக ஜனங்களுக்கு உபதேசஞ்செய்து, பிரிஸ்துமார்க்கத்தின் ஒளி அந்த இருண்முடின தேசங்களிலும் வீசும்படியாக கூடிய முயற்சிகளை வைராக்கியத்துடன் செய்துகொண்டிருந்தார்கள்.

QUESTIONS ON SEVENTH CENTURY.

ஏழாம் நூற்றாண்டின் சரித்திரத்தின்மேல்
கேள்விகள்.

1. மனுஷ்தனியருடைய சோப்பாட்டின் விபரமென்ன?
2. பெரிய சக்கரின் ஆறையும் வரிசையாய் எழுதி, எந்த வருஷத்தில் என்ன கோக்கத்திற்காக ஒவ்வொன்றும் கூடினதென்று காட்டும்.
3. மகமதுவின் சரித்திரத்தை விபரமாய்ச் சொல்லும்.
4. மகமதுமார்க்கத்தில் மூல உபதேசங்களைத் தெரிஸ்துமார்க்க உபதேசங்களோடு ஒப்பிட்டுக் காட்டும்.

5. யோவாசம் பண்டிசையின் ஆரம்பமென்ன?
6. யோவான் கன்காணியாரைப்பற்றி என்ன தெரியும்?
7. இங்கிலாந்துத் திருச்சபை ரோமைச்சபையினிருந்து பிரிந்ததல்ல, பூர்விகமாயும் சுயாதினமாயும் இருந்துவந்த சபையென்று ருபித்துக் காட்டும்.
8. எட்வின், தியோடோர் என்பவர்களைப்பற்றித் தெரிந்ததை விபரமாய் எழுதும்.

எட்டாம் நூற்றாண்டு.

சபையின் ஸ்திரி. விக்கிரக வணக்கத்தைப்பற்றிய சம்வாதம். அதைத் தடுக்கும்படி லியோராயன் செய்த முயற்சி. இரண்டாம் நிசாரி லியாயம் பேசுதல். இவனே முதலாம் பாப்பு. மூன்றும் நிசாரி லியோவுக்கு எழுதின நிருபம். விக்கிரக வணக்கத்தைப்பற்றிய தர்க்கம் உண்டாகுதல். கொன்ஸ்தாந்திநோபுரியில் கூடின சங்கம். அதற்கு விரோதமாய்ச் செய்யப்பட்ட தீர்ப்பு. ஐரினி என்பவன் அதை ஸ்தாபிக்கும்படி செய்த முயற்சி. பிராங்போர்ட் பட்டணத்தில் கூடின சங்கத்தார் அதைக் கண்டித்தல். சரசேனரின் லெத்தி. பாப்புமார்க்கத்தைப்பற்றிய தர்க்கதரிசனங்கள். பெப்பின் என்பவன் பிரான்ஸ் ராஜ்யத்தை அபகரித்தல். பாப்புவுக்கு லொகே அதிகாரம் உண்டாகுதல். பீட் என்பவர் பிரசங்கித்தல். பானிபோரானம், விசுவாசிகளின் போராட்டம் இவைகளைப்பற்றி அவர் சொல்லும் விபரங்கள். வின்பிரட் என்பவரின் ஜீவிய விருத்தாந்தம். வில்லிபட் என்பவரின் பிரயாசம்.

சென்ற நூற்றாண்டிலாராய்ச்சமான அந்தகாரம் இந்த நூற்றாண்டில் அதிகப்பட்டது. இதின்முதலில் தேவ பக்தியாகிய வெளிச்சம் மங்கிப்போயிருந்தது. Opening remarks.

ரோமைச்சபையின் கன்காணிகள் அடைந்த மட்டில்லாத அதிகாரமும், சபையில் சொரூப வணக்கத்தைப்பற்றி உண்டான தர்க்கமும், ஜனங்களுக்குள்ளிருந்த அறியாமையும் இந்த நூற்றாண்டில் காம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயங்களாயிருக்கின்றன.

727-ம் ஆண்டில் கிரேக்க இராயனுக்கும் ரோமாபுரிக் கன்காணிக்கும் சொரூபவணக்கத்தைப்பற்றிப் பெரிய தர்க்கமுண்டாயிற்று; ரோமாபுரிக் கன்காணி காகிய பாப்புவன் சொரூப வணக்கமென்று பெயர் வினைய இந்த உபதேசத்தையும், ரோமைச்சபையில் அனேக Dispute concerning Image Worship, A.D. 727.

பாய்ப் பேசுவாயானில், அதில் வாசிக்கிற பிரகாரம் எல்லாரும் கோபமாய்த் தங்கள் புஸ்தகங்களை உன் தலைமேல் வீசி எறிவார்கள். ஓ, கொடுங்கோல் அரசனே! அதாவதற்றவர்களையும் நியாயபாணிகளையும் இருக்கிற எங்களை நீ உன்னுடைய ஆங்கிலராச்சரத்திருலே மடக்கவேண்டும் என்று பார்க்கிறாய்; நாங்கள் இதற்கு என்னசெய்யப்போகிறோம்; பக்தவத்சலராயிருக்கிற இயேசுகிறிஸ்துவுக்கே எங்களுக்குத் தஞ்சம்; உன்னுடைய சரீரத்தை அழிக்கவும், ஆத்துமத்தை இரட்சிக்கவும் தக்கதாக உன்னிடத்தில் ஒரு பிசாசை அனுப்பும்படி அவரை நோக்கிப் பிரார்த்திப்போம்; நீ பரிசுத்த பேதுருவின் சொரூபங்களை உடைக்கவும், என்னைச் சாவல்வசஞ் செய்யவும் கட்டளை கொடுப்பேனென்று பெருமையாய்ச் சொல்லுகிறாய்; உன்னுலே என்ன ஆகும்? நாங்கள் கொஞ்சத்தூரம் பிரயாணஞ்செய்து நம் பக்கத்து ஜாதியார் இருக்கிற சோட்டைக்குப் போகுமென்றால், நீ யாரோடே சண்டைசெய்வாய்? சோமாபுரிக் கண்டனின் கீழ்நாட்டையும் மேலாதிபத்தையும் இழைத்துக்கட்டுகிற ஒரு கயிறு போலிருக்கிறார்களென்ற உனக்குத் தெரியாதா? இவர்களெல்லாரும் எங்கள் தாழ்மையைப் பார்த்து மெச்சிக்கொள்ளுகிறதை நீ கேட்டிருப்பாயே? நீ உடைத்துப்போடுவேனென்று சொல்லுகிற பரிசுத்த பேதுருவின் சொரூபத்தை எல்லாரும் பக்தியாய் வணங்குகிறார்கள் என்று நீ அறியாயா? மேலாதிபத்தினுள்ள அரசாட்சியெல்லாம் நிறைவுள்ளதாயும் அவர் ஸ்தலத்திலிருக்கிற அத்தியக்ஷனாயும் நமக்காஞ்செய்கிறார்கள்; அவர்களில் மகிமைபொருந்திய ஒரு மன்னனுக்கு இப்போது கம்முடைய கையால் ஞானஸ்நானங் கொடுக்கப்போகிறோம்; கல்வியற்ற மிலேச்சஜாதியாரும் இறிஞ்துமார்க்கத்தை அங்கீகரித்துக்கொண்டார்கள்; கேவலம் நீ ஒருவன் மூடபோதனஞ் செய்கிறாய்; இந்த ஜனங்களெல்லாரும் எழும்பிவந்து உனக்கு மோசம் வரும்; நீ உன்னுடைய பெருமையை விட்டுவிடு; உன் கோரிக்கை நிறைவேறமாட்டாது; நீ எங்களுடைய யோசனையைக் கேளாமல் எதிர்ப்பாயானில் பழி உன் தலைமேல்தான் வரும்" என்று எழுதினார்; இப்படிப்பட்டபெருமையானவார்த்தைகளை இரண்டாம் கிரகரி என்பவர் எழுதினபடியினாலும், அவர் சொரூப வணக்கத்தை ஸ்தாபிக்கும்பொருட்டுப் பெரிய முயற்சிகள் செய்தினாலும், அவரை முதலாம் பாப்பு எனச் சொல்லலாமென்று மில்னர் என்பவர் எழுதியிருக்கிறார்.

Gregory II may be styled the First Pope.

இந்தத் தர்க்கம் நடந்துவருங்காலத்தில் இரண்டாம் கிரகரி என்பவர் இறந்துபோக, 731-ம் வருஷம் மூன்றாம் கிரகரி என்பவர் அவர் பட்டத்துக்கு வந்தார்; சொரூபவணக்கத்தைப்பற்றி இரண்டாம் கிரகரி எழுதிய வைராக்கியத்தைப்பார்க்கிலும் மூன்றாம் கிரகரி அதிகமாயிருந்தது; இவர் அரசனுக்கு எழுதின நிருபத்தில், "நீ படிக்காத பிள்ளைபோலிருப்பதினாலே உனக்குச் சாத்தம் உதவாது; நீ உன்னுடைய கர்வத்தை விட்டு நாங்கள் சொல்லும் புத்தியை வணக்கமாய்க் கேள்; நாங்கள் கல்லையும் மண்ணையும் மரத்தையும் வணங்குகிறோமென்று சொல்லுகிறாய்; மகாப்பிரபுவே! அப்படிச் சொல்லாதேயும்; இவைகளெல்லாம் ஒரு அடையாளமாயும், எங்கள் மனதைப் பரவசமாக்குவதற்கு உபயோகமாயும் இருக்கிறது; இவைகள் தேவர்களல்ல; இயேசுகாதையைப்போல ஒரு சொரூபம் இருக்குமானில் அதைப் பார்த்து, கர்த்தாவே! இரட்சியுமென்று சொல்லுகிறோம்; கன்னிமரியாள் சொரூபத்தைப் பார்க்கும்போது, மாதாவே! எங்களை ஈடேற்றும்படி உன் குமாரனிடத்தில் விண்ணப்பஞ் செய்யென்று சொல்லுகிறோம்; ஒரு அர்ச்சியசிஷ்டருடைய சொரூபத்தைக் கண்டால், பரிசுத்த ஸ்தேவானே! எங்களுக்காக வேண்டிக் கொள்ளும் என்று சொல்லுகிறோம்; பரிசுத்த பேதுருவின் அதிகாரத்தைப் பெற்றிருக்கிற நாங்கள் உன்னை ஒரு கொடியில் சபித்துவிடலாம்; ஆனால் அந்தச் சாபத்தை நீயே உன் தலைமேல் வருவித்துக் கொண்டதால், அது எப்போதும் உன்னிடத்தில் நிலைத்திருக்கட்டும்; நீ ஒரு பெரிய சங்கம் வைத்து இதுவிஷயத்தைக்குறித்துப் பேச வேண்டுமென்று சொல்லுகிறாய், அது அவசியமில்லை; நீ சொரூபங்களைத் தள்ளப்பண்ணத்தவறை விட்டுவிட்டால் எல்லாம் சீராய் நடக்கும்; நாங்கள் உனக்குப் பயப்படுகிறதில்லை" என்று சொன்னார்.

Letter of Gregory III to Leo.

இந்தத் தர்க்கம் சோதரதற்குமுன் 741-ம் வருஷத்தில் லியோ என்னும் ராயனும், மூன்றாம் கிரகரி என்னும் பாப்புவும் இறந்துபோனார்கள்; லியோ ராயன் தாமாதாயனையும் கொன்ஸ்தந்தீன் என்பவர் தமது தகப்பன் பட்டத்துக்கு வந்தார்; (Zachary) சக்கரி என்பவர் ரோமாபுரிக்கு பாப்புவானார்; இவர்கள் இரண்டுபேரும் சொரூப வணக்கவிஷயத்தைப்பற்றி, வெகு வைராக்கியமாய் வாதித்துவந்தார்கள். 754-ம் வருஷத்தில் கொன்ஸ்

Iconoclastic controversy continues. A council at Constantinople, A.D. 754, condemned Image worship.

தர்நிஜெபுரியில் ஒரு சங்கம் கூடினது; அதற்கு 338 கண்காணிகள் வந்திருந்தனர்; அவர்களெல்லாரும் சொரூப வணக்கத்துக்கு விரோதமாய்த் தீர்ப்புச்செய்தார்கள்: "கிறிஸ்துரக்ஷகர் நம்மை விக்கிரக ஆராதனையாகிய பாவத்துக்கு விலக்கி, சத்தியதேவனும் உண்மையினும் தெரிந்துகொள்ளும்படி போதித்திருக்கிறார்; ஆயினும் பிசாசானவன் சபையின் மகிமையைப் பார்த்து மனம் பொறுக்கமாட்டாமல் கிறிஸ்துமார்க்கத்தின் பெயரை வைத்துக்கொண்டு, விக்கிரக பக்தியைச் சபைக்குள் நுழைத்திருக்கிறான்; சகலத்தையும் சிருஷ்டித்த கர்த்தாவை விட்டுவிட்டு, சிருஷ்டிக்கப்பட்ட ஒரு வஸ்துவுக்கு இயேசு என்ற நாமத்தைச் சூட்டி அதை வணங்கும்படி செய்திருக்கிறான்" என்று எழுதினார்கள்.

Irene establishes it by assembling a Council at Nicea, A.D. 787.

ஆயினும் இத்தத் தீர்ப்போடே அது நின்றுபோகவில்லை; 775–ம் வருஷத்தில் கொன்ஸ்தந்தின் இராயன் பட்டத்தைப்பெற்ற அவன் குமாரனுடைய நான்காம் லியோ என்பவன் சொரூபவணக்கம் பரிசேதம் பிறிஸ்தவர்களுக்குள் இருக்கக்கூடாதென்று சொன்னதினிமித்தம், அவன் பெண்சாதியாகிய ஐரேனி என்பவள் 780–ம் வருஷத்தில் அவனுக்கு நஞ்சூட்டிக் கொன்றுபோட்டாள்; சொரூப வணக்கத்தைக்குறித்து அவளுக்கிருந்த வைராக்கியத்தைப்போலப் பாப்புவுக்கும் இல்லையென்று சொல்லலாம்; அக்காலத்தில் பாப்புவாயிருந்த முதலாம் அதிரியான் என்பவனுடைய அனுமதியினாலே அவன் இராஜபட்டத்தைப் பெற்றுக்கொண்டதுமன்றி, சொரூப வணக்கத்தைப்பற்றிய தர்க்கத்தைத் தீர்க்கும்பொருட்டு, 787–ம் வருஷத்தில் நீசேயா பட்டணத்தில் ஒரு சங்கம் கூடும்படியாகக் கட்டளையிட்டாள்; அதற்கு 350 கண்காணிமார் வந்திருந்தார்கள்; அவர்கள் கொன்ஸ்தந்தினெபுரியில் கூடின சங்கத்தாருடைய தீர்ப்பை மாற்றி, கோவில்களில் சொரூபங்களையும் சிலுவைகளையும் படங்களையும், பரிசுத்த பண்டங்களையும் வைத்து மகிமைக்கலாமென்றும், அப்படிச் செய்யாதவர்களுக்குத் தண்டனை வருமென்றும் தீர்ப்புச் செய்தார்கள்; அந்தத் தீர்ப்பை இராஜாத்தியாகிய ஐரேனி என்பவளும் அவன் குமாரனும் அங்கீகரித்துச் சொரூப வணக்கத்தை எங்கும் ஸ்தாபித்தார்கள்.

அதைப் பிரான்ஸ்தேசத்துச் சக்கரவர்த்தியாகிய சார்லமென் என்பவர் கேட்டு, 794–ம் வருஷத்தில் அது விஷயத்தைப்பற்றிப் பேசும்

பொருட்டு, பிராங்க்போர்ட் பட்டணத்தில் ஒரு சங்கம் வைக்கும்படி கட்டளை கொடுத்தார்; அதற்கு 300 கண்காணிமார் வந்திருந்தார்கள்; அவர்கள் அதைப்பற்றி வாதித்தில் சொரூப வணக்கம் செய்வது பாவம்; சொரூபங்களை ஜனங்கள் பார்க்கும்படியாகவும் சித்திக்கும்படியாகவும் கோவில்களிலே அவைகளை வைத்தபோதிலும் அவைகளைக் கும்பிடுவது கொடிய தோஷமென்று தீர்த்தார்கள்; இங்கிலாந்து, ஜர்மனி, பிரான்ஸ்தேசங்களிலுள்ள சபைகள் இத்தத் தீர்ப்பை அங்கீகரித்துக்கொண்டன.

The Council at Frankfort, A.D. 794, condemns Image worship.

இங்கிலாந்துதேசத்தில் 747–ம் வருஷம் குளோவ்சோ என்னும் இடத்தில் சங்கம் ஒன்று கூடி சில காரியங்களைத் திட்டப்படுத்தினார்கள். இதில் விசேஷித்தது எவையென்றால்,

(1) ஒவ்வொருவரும் விசுவாசப்பிரமாணம், கர்த்தருடைய ஜெபம் முதலியவற்றைத் தங்கள் சுயபாஷையில் படிக்கவேண்டும்.

(2) கண்காணிமார் தங்கள் விசாரணைக்குட்பட்ட இடங்களை வருஷத்துக்கொருதரம் பார்வையிட்டு வரவேண்டும்.

(3) ஞானஸ்நானம், கர்த்தருடைய ராப்போஜனம் என்பவைகளைக் குருமார் ஜனங்களின் சுயபாஷையில் விளக்கிக் காட்டவேண்டும்.

இதில் பாப்புவானவருக்குச் சேர்ப்படியவேண்டுமென்பதைப்பற்றி ஒரு வார்த்தையாவது இல்லை. இந்தக் காலத்தில், சொரூப வணக்கம் பாவம் என்று ஆல்குவீன் என்பவர் ஒரு பிரபந்தம் எழுதினார். இவர் 735–ம் வருஷம் பிறந்து தமது கல்வி, பக்தி, புத்தி தீட்சண்யத்தால் அரசர்களால் கனம் பண்ணப்பட்டார். சத்தியவேதாகமத்தைத் தன் கையால் எழுதி 804–ம் வருஷம் மரணமானார்.

Conquests of the Saracens.

இப்படி இராஜ்யமெங்கும் அறிவாலமையும் அவபக்தியும் வளர்ந்து கிறிஸ்தவர்களுக்குள் சண்டை சச்சரவுகள் உண்டாயிருந்ததைச் சாதகமாக்கி, கிறிஸ்தவர்கள் ராஜ்யத்தைக் கட்டிக்கொள்வதற்கு இதுவே சமயமென்று நினைத்து யுத்தத்துக்குப் புறப்பட்டார்கள். இவர்கள் அரபிதேசத்தின் வடமாகாணத்திலுள்ள ஒரு ஜாதியாராயும், மகமதுமார்க்கத்தைக் கைக்கொண்டவர்களாயும் இருந்தார்கள்; இவர்கள் ஆசியாவிலும் ஐரோப்பாவிலுமுள்ள அநேக தேசங்களைப் பிடித்து, 713–ம் வருஷத்தில் ஆப்பிரிக்காவை விட்டு ஸ்பானியா தேசத்துக்குப் போய், 300 வருஷகாலமாய் நிலைத்திருந்த விசிகொத்தருடைய இரா

ஜாங்கத்தைக் கட்டிக்கொண்டார்கள்; அதற்குப்பின் ஐரோப்பா கண்டத்திலுள்ள எல்லாத் தேசங்களையும் பிடிக்கவேண்டுமென்றும், கிறிஸ்துமார்க்கத்தைப் பூமியிலிராமல் கத்தி முனையாக்கிப் போடவேண்டுமென்றும் எண்ணங்கொண்டு ஸ்பானியாவிலிருந்து பிரான்ஸ்தேசத்துக்குப் போகப் புறப்பட்டு, நாவிர்ஸ் பட்டணத்துக்கும் பாய்க்டியர்ஸ் பட்டணத்துக்கும் இடையிலே வரும்போது, வீரமானுயெல் (Charles Martel) சார்ல்ஸ் மாற்றல் என்பவன் திரண்ட சேனையுடன் வந்து அவர்களோடு கடும் யுத்தஞ்செய்து அவர்களை ஜெயித்தான்; அவர்களுக்கு அதனால் அதிகப் பொருள் சந்தடியும் பிராணசேதமும் மூண்டாயிருந்தபோதிலும் அவர்கள் தூரவிலே மனம் தளர்ச்சியடையாமல் பல தேசங்களுக்கும் போய் யுத்தஞ்செய்து, சிசிலி, சார்டினியா, கார்ச்சிக்கா என்னும் காதேனையும் கால்தேசத்துக் கரையோரமாயிருந்த பட்டணங்களையும் பிடித்துக்கொண்டார்கள்; அப்பால் ரோமாபுரிமட்டும் போய் அங்கேயும் ஜனங்கள் நெடிசலங்கும்படி சண்டமாருதஞ் செய்தார்கள்.

Prophecies respecting the rise of Popery.

இந்த சாசேனர் உலகத்தையெல்லாம் கட்டி ஆளவேண்டுமென்று கர்மமான எண்ணங்கொண்டதுபோல, ரோமாபுரிப் பாப்புகளும் கிறிஸ்துசபையிலும் ஐரோப்பா கண்டத்திலும் தங்கள் அதிகாரஞ் செல்லவேண்டுமென்று மிகவும் பிரயாசப்பட்டார்கள். போன நூற்றாண்டில் பானிபேல் என்னும் ரோமாபுரிக் கண்காணிக்கு சர்வ கண்காணி என்ற பட்டம் வந்ததென்று சொல்லியிருந்தோம்; அது முதல் ரோமாபுரிக் கண்காணிகளுக்கு லௌகிக காரியங்களிலும் லௌகிக விஷயங்களிலும் அதிக மேன்மையும் கிரேக்கடமும் உண்டாகிக்கொண்டே வந்தது; இந்த நூற்றாண்டில் அது அதிக விர்த்தியடைந்தது. கி. மு. 606-ம் வருஷத்திலிருந்த தானியேல் தீர்க்கதரிசி ரோமராஜ்யம் அழிந்து பத்து ராஜ்யங்களாகப் பிரிந்துபோகுமென்று கூறியிருந்தபடியே, கி. பி. 476-ம் வருஷத்தில் நடந்தது; அந்தப் பத்து ராஜ்யங்களைக் குறிக்கும் பத்துக் கொம்புகளுக்குப் பிற்பாடு வேறொரு சிறுகொம்பு எழும்புமென்று சொல்லியிருப்பது பாப்புவின் அதிகாரத்தைக் குறிப்பார்ப்பு காட்டிற்று; அவன் உன்னதமானவருக்கு எதிராக வார்த்தைகளைப் பேசி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களைப் பொழுக்கி, தூவல்களையும் நியாயப்பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான் என்று தானியேல் 6-ல் சொல்லியிருக்

கிறது; பாலமனிதன் என்றும், அக்கிரமமுள்ள இரகசியமென்றும், தேவன் என்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ அவை யெல்லாவற்றிற்கும் விரோதமாய்த் தன்னை உயர்த்துகிறவனுயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல் உட்கார்ந்து தன்னைத் தான் தேவனென்று காண்பிக்கிறவனுயும் இருக்கும் கேட்டின் மகன் என்றும் பவுல் அப்போஸ்தலன் சொல்வது ஒருவாறு பாப்புவைக் குறிக்கிறதாயிருக்கும்; இப்படியே யோவான் அப்போஸ்தலனும் வெளிப்படுத்தின விசேஷத்தில் அவன் அதிகாரத்தை ஒரு மிருகத்துக் கொப்பிட்டுப் பேசியிருக்கிறார்.

Pepin usurps the French throne with the cognizance of Pope Zachary.

கைதேர்ந்த காரியங்களில் ரோமாபுரிப் பாப்புகளுக்கு நிரேஷ்ட அதிகாரமுண்டாயிருந்ததுபோல், லௌகிக விஷயங்களிலும் அவர்களுக்கு மேன்மையுண்டாயிற்று; சொரூப வணக்கத்தைப்பற்றி தர்க்க மூண்டாயிருந்த காலத்தில் பாப்புவானவர் கிரேக்கதேசத்து அரசனை விரோதித்ததாக மூன் சொன்னோம்; இப்படியிருக்கும்போது பாப்புவுக்கு லௌகிக அதிகாரமுண்டாக்கத்தக்க சில அனுகூலங்கள் நேரிட்டன. பிரான்ஸ்தேசத்தில் மூன்றாம் கில்டரிக் என்பவன் இராஜ்ய பரிபாலனஞ் செய்துவந்தான்; அவனுக்குச் சாசேனரை வென்ற சார்ல்ஸ் மாற்றல் என்பவனுடைய குமாரனுயெ பெப்பின் என்பவன் நிரேஷ்ட மந்திரியாயிருந்தான்; அவன் இராஜ்யத்தைத் தான் கட்டிக்கொள்ளவேண்டும் என்ற பேராசையினாலே சக்கேரி என்ற பாப்புவுக்கு எழுதி இராஜயோக்கியதையும் கௌரவமும் கிறிதேனுமில்லாத ஒரு அரசனைத் தள்ளி இராஜாங்கத்துக்கு வெகு அனுகூலங்களைச் செய்த இன்னுருவனே அந்தப் பட்டத்துக்கு ஏற்படுத்துவது தேவப்பிரமாணத்துக்கு விரோதமோவென்று கேட்டான். அக்காலத்தில் சக்கேரி என்னும் பாப்புவுக்குக் கொன்ஸ்தந்திநோபுரி இராயனுமல்லாம்பர்டியருடைய அரசனும் விரோதிகளாயிருந்தமையால், பெப்பின் என்பவனுடைய உதவியைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்ற கோக்கத்தோடே அவன் அபிப்பிராயத்துக்குச் சார்பாய் எழுதியனுப்பினான்; பெப்பின் என்பவன் அதைக் கேட்டமாத்திரத்தில் இராஜாவைத் தள்ளித் தன்னை இராஜாவாக்கிக்கொண்டான்; சக்கேரி என்பவனுக்குப் பின்வந்த இரண்டாம் ஸ்தேவான் என்னும் பாப்பு பிரான்ஸ்தேசத்துக்குப் போய், பெப்பின் என்பவனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்தான்.

The Pope obtains temporal power, A.D. 755.

இப்படியிருக்குங்காலத்தில் லாம்பர்டியருடைய அரசனுகிய ஐஸ்டால்பு என்பவன் ரோமாபுரிப் பாப்புவுக்கு விரோதமாய்த் திரண்ட சேனையுடன் யுத்தஞ் செய்யப் போனுன்; அதற்குமுன் ஸ்தேவான் என்பவன் பெப்பின் என்பவனுடைய உதவியைக் கேட்டுக்கொண்டபடியால், பெப்பின் என்பவன் பெரிய சேனையுடன் இத்தாலி தேசத்துக்கு வந்துயுத்தஞ்செய்து அநேக நாடுகளைக் கட்டிக்கொண்டு, பாப்பு தனக்குச் செய்த உபகாரத்துக்கு ஈடியாகப் பென்ற்றுபொலிஸ் என்னும் நாட்டையும், இருபத்திரண்டு பட்டணங்கள் அடங்கிய ராவன்னு என்னும் நாட்டையும் தத்தம்பண்ணினுன்; இது 755-ம் வருஷத்தில் நடந்தது. பெப்பின் என்பவன் 768-ம் வருஷத்தில் மரித்துப்போக, அவன் குமாரனுகிய சார்லமென் என்பவன் அவன் பட்டத்துக்கு வந்தான்; அப்போது ரோமாபுரியில் முதலாம் ஆதிரியான் என்பவன் பாப்புவாயிருந்தான்; அவன் காலத்தில் லாம்பர்டியர் மறுபடியும் யுத்தத்துக்கு வந்தார்கள்; அதைச் சார்லமென் என்பவன் கேட்டுத் திரண்ட சேனையுடன் இத்தாலிதேசத்துக்குப் போய் அவர்களை ஜெயித்து, 774-ம் வருஷத்தில் ரோமாபுரியில் லாம்பர்டியருக்கு அரசனென்ற பெயரைப் பெற்றுக்கொண்டான்; அவன் தன் தகப்பன் பாப்புவுக்குத் தத்தம்பண்ணின நாடுகளை விட்டதோடு கூட இன்னும் அநேக நாடுகளையும் தானஞ்செய்தான்; இவ்விதமாய் இந்த நூற்றாண்டில் பாப்பானவன் ஆசாரிய பட்டத்துக்கு அடையாளமாயிருந்த திறவுகோலை வைத்திருந்ததுமன்றி, இராஜபட்டத்துக்கு அடையாளமாயிருந்த செங்கோலையும் பிடித்திருந்தான். கிறிஸ்துராஜர், "என் இராஜ்யம் இவ்வுலகத்தின் தன்மையுள்ள தல்ல" வென்று சொல்லியிருக்க, தங்களை அவர் தலத்தில் அவருக்குப் பதிலாய் இருக்கிறவர்கள் என்று பாராட்டின பாப்புகள் ஒரு இராஜ்யத்தை ஸ்தாபித்து அதில் தங்களுடைய அதிகாரத்தைச் செலுத்தி வருகிறார்கள். இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் இங்கிலாந்து தேசத்தில் இருந்த ஏழு சிற்றரசர் பாப்புவின் அதிகாரத்தை அங்கிகரித்து வந்ததாகத் தோன்றுகிறது. (Wessex) வெஸ்லக்ஸ் என்னப்பட்ட மேற்கு மகாணத்தில் (Ina) ஐனு என்ற ஓர் சிற்றரசன் இருந்தான். இவன் ரோமாபுரியைத் தரிசித்து அந்த இடத்தில் சாக்சனியர் பின்னோகளுக்காக ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபித்து அதன் செலவுக்காக, தன் அரசாட்சித் குட்பட்டவர்கள் தலையொன்றுக்கு ஒரு பென்னி வரி

வதாவரி கொடுக்கவேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தான். இதுதான் கடைசியில் (Peter's pence) பேதுரு வரியாய் முடிந்தது. ஆனல் ஆங்கிலிகரித்தானிய சபையைச் சேர்ந்தவர்களோ எருசலேமைத் தரிசித்துவந்தார்கள்.

The venerable Bede born, A.D. 672.

இவைகளையெல்லாம் பார்க்கும்போது நாம் அதிகமாய்த் துக்கப்படவேண்டியிருந்தபோதிலும், கிறிஸ்தாசுருடைய அடியார் இக்காலத்திலும் இருந்தார்களென்பதைக் கண்டு சந்தோஷப்படவேண்டியதாயுமிருக்கிறது; அவர்களில் சங்கைபொருந்திய பீட் என்பவர் விசேஷ்டமானவராயிருந்தார்; இவர் 672-ம் வருஷத்தில் நார்த்தம்பர்லாந்து நாட்டிலுள்ள வெரிமத் என்னும் ஒரு கிராமத்தில் பிறந்தார்; அவர் இளம்பிராயமாயிருக்கும்போது சங்கியாசி மடத்துக்குப் போய், பலவகையான கல்விகளையுங் கற்றுத் தேர்ந்தவராயிருந்தார்; பத்தொன்பதாம் பிராயத்தில் உதவிக் குருப்பட்டமும், முப்பதாம் பிராயத்தில் குருப்பட்டமும் பெற்றார்; அவர் கல்வியில் தேர்ந்தவராயிருந்ததுமன்றி, தேவபக்தியிலும் சிறந்தவராயிருந்தார்; அவர் அநேக நூல்களைச் செய்தார்; அவைகளில் அவர் எழுதின திருச்சபை சரித்திரம் விசேஷமானது; இதில் அகுஸ்தின் காலமுதல் பீட் என்பவர் காலமட்டுமுள்ள முக்கிய விசேஷங்களை, பூர்வீக சங்கதிகள் எழுதப்பட்டிருந்த நூறு புஸ்தகங்களிலிருந்தும், பாரம்பரை சங்கதிகளைக்கொண்டும், தானே அறிந்திருந்த காரியங்களைக்கொண்டும் எழுதிய சங்கதிகள் அடங்கியிருக்கிறது. அவர் ஐம்பத்தொன்பது வயதாயிருக்கும்போது அதைப் பிரசுரஞ்செய்தார்; இதுவுமன்றி வேதாகமத்தில் சில பங்குகளைத் தமது சுயபாஷையாகிய சக்ஸன்பாஷையில் மொழிபெயர்த்தார்; அதில் விசேஷித்தது யோவான் சுவிசேஷம். தமது கடைசி மூச்சொடுங்கும் சில நிமிஷங்களுக்கு முன்னேதான் அதை எழுதி முடித்தார். அவர் பாப்புவுக்கும் பாப்பு மார்க்கத்துக்கும் சற்றுச் சார்பாயிருந்தபோதிலும் தேவனிடத்தில் பக்திசெலுத்தினவராயும், அவருடைய ஊழியத்தில் வைராக்கிய சித்தியுள்ளவராயுமிருந்தார்; அவர் அந்தியகாலத்தில் வியாதிப்பட்டபோது உலகப்பற்றுகள் அற்றவராயும் பரம சிந்தையுள்ளவராயும் விளங்கினர்; "தமது காலத்தைச் ஜெபத்திலும் தியானத்திலும் அதிகமாய்ப் பின்னிட்டுவந்தார்; "கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் சண்டித்திருர்" என்று வேதவாக்கி

யத்தை அடிக்கடி சொல்லுவார்; அவர் மரணமடையும் சமயத்தில் என்னைப் படைத்த தேவனுக்குச் சித்தமானால் இக்கத் தேகத்தைவிட்டு அவருடைய திருச்சந்நிதானம் போய்ச் சேருவேன்; என் ஆத்துமா கிறிஸ்து மகாராஜாவைத் தரிசிக்க ஆவலாய்க் காத்துக்கொண்டிருக்கிறது; பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும் மகிமையுண்டாவதாக என்று சொல்லி, அகமகிழ்ச்சியோடே 735-ம் வருஷத்தில் இறந்துபோனார்.

Bede's observations on the Atonement.

இவர் எழுதிய நூல்களில் கிறிஸ்துசமயத்தின் கிறந்த உபதேசக்களை விளக்கிக் காட்டுகிற சில கல்லாக்கியங்கள் அடங்கியிருக்கின்றன; அவைகளில் இக்கணம் இரண்டொன்றை எடுத்துச் சொல்லுவோம்; கிறிஸ்துகாதருடைய திருஅவதாரத்தைப்பற்றியும், அவர் உண்டாக்கின பாவநிவாரணத்தைப்பற்றியும் என்ன சொல்லுகிறோன்றால், மானிடனை ஈடேற்றும்பொருட்டு வரம்பில்லா ஞானமுடைய மகாதேவன் ஒருவழி உண்டுபண்ணியிருக்கிறார். அவரது தெய்வீகத்துக்கு என்னவேலையும் பங்கமில்லாமல் அதோடே மனுஷீகத்தைச் சேர்த்து, அதனாலே ஆத்துமதேகிகளுக்கு மோட்சாகாத்தைச் சம்பாதித்திருக்கிறார். அவர்களுக்கு வரவேண்டிய நித்திய மரணத்தைக் அவர்களைத் தப்புவிக்கும்பொருட்டு, இவர் மனுஷ்சரூபமாய் அநித்திய மரணத்தை அடைந்தார். பிசாசானவன் பாவத்தை அறியாத அவருக்கு இந்த மரணத்தை உண்டுபண்ணினபோதிலும், அவனடைந்த மரணத்தினாலும் அவர் சிந்தின இரத்தத்தின் புண்ணியத்தினாலும் அவரது அடியார்களுக்கு நித்திய மரணம் வருகிறதில்லை; அவர்கள் செய்த பாவத்துக்கு நியாயமாய் அவர்களுக்கு அது வரவேண்டியதாயிருந்தபோதிலும், பாவாசாரமிருக்கிற இரட்சகசுவாமியின் புண்ணியத்தினால் அவர்கள் அதற்குத் தப்பி, பேரின்ப வாழ்வை அடைவார்கள் என்று சொல்லுகிறார்.

His remarks on the believers' spiritual conflict.

ரோமர் 7-ம் அதிகாரத்தில் விசுவாசிகளுக்குள் உடக்கும் போராட்டத்தைப்பற்றி: சிலர் இப்படிப் போராட்டஞ்செய்யாமல் பாவபாசங்களால் கட்டுண்டு நாசமாய்ப் போகிறார்கள். சிலர் பக்தி விசுவாசம் ஒன்றுமில்லாமல் தங்கள்சுபலத்தைச் சார்ந்து போராடுவதால் அபஜெயப்பட்டுப் போகிறார்கள். சிலர் பவுல் அப்போஸ்தலனைப்போலும் மற்ற பக்தர்களைப்போலும் தேவ

கடாக்ஷத்தைப் பெற்று, இவ்வுலகத்தில் போராடிக்கொண்டே போகிறார்கள். சிலர் இந்தப் போரை முடித்துப் பொன்னகர் சென்று பேரின்பத்தை அனுபவிக்கிறார்கள் என்று சொல்லுகிறார். இவருடைய முடிவு மெத்தப் பாக்கியமானது. எப்படியென்றால், கடைசிக்காலத்தில் தேகத்தில் பெலவீனமும் வியாதியின் உபத்திரவமும் மிருந்தாலும் முகமலர்ச்சியுள்ளவராய் எப்போதும் வேதவாக்கியங்களைச் சொல்லிக்கொண்டும், ஞானப்பாட்டுகளைப் பாடிக்கொண்டிருப்பார். கடைசியாய் இவர் செய்த தேவஸ்தியம் யோவான் சுவிசேஷத்தை இங்கிலிஷ் பாஷையில் திருப்பினது. கடைசிக்காலத்தில் இவரால் எழுதக்கூடாதபோது, தம்முடைய சிநேகிதர்களைக்கொண்டு எழுதச்சொல்லுவார். அவருடைய கடைசிவருஷத்தில் ஒரு சிநேகிதன் வந்து ஐயா! இன்னும் ஒரே ஒரு அதிகாரம் பாக்கியாயிருக்கிறதே



பீட் என்பவரின் அந்தியகாலம்.

என்று சொன்னான். அதற்கு பீட் மிகவாய் மூர்க்கு, என் ஆண்டவர் சீக்கிரம் வரச்சொல்லுகிறார் என்றார். அவருடைய கடைசி மணிநேரம் வந்துவிடவே, சுவிசேஷத்தை எழுதிய ஒரு வைபையன் ஓரே ஒரு வாக்கியம் பாக்கியாயிருக்கிறது என்றான். அதையும் சொல்லிமுடித்தார், எல்லாம் முடிந்தது என்று பையன் சொல்ல, ஆம் எனக்கும் எல்லாம் முடிந்தது என்று கையைக்குவித்து தோத்திரப் பாட்டைப் பாடி ஜீவனை விட்டார்.

இந்த நூற்றாண்டில் பீட் என்பவர் தேவபக்தியில் சிறந்தவராயிருந்ததுபோல, வின்பிரட் என்பவரும் ஒரு வான ஜோதிபோலப் பிரகாசிக்கிறவராயிருந்தார்; இவர் 680-ம் வருஷத்தில் இங்கிலாந்துதேசத்திலுள்ள கிரிடிற்றன் என்னும் ஒரு ஊரில் பிறந்தவர்; இவருடைய தாய்தந்தையர்கள் உயர்குலத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தார்கள்; இவர் எழுபதாம் வயதில்தானே சந்நியாசிமடத்துக்குப் போய்த் தபஞ்செய்துவந்தார்; இவர் முப்பது வயதாயிருக்கும்போது குருப்பட்டம் பெற்று, கிறிஸ்துவின் இரகஸ்யமதத்துவங்களை மூடாந்தகாரத்தில் அகப்பட்டுக்கிடந்த ஜனங்களுக்குக் கூறவேண்டுமென்று அபேட்சைகொண்டு, 715-ம் வருஷத்தில் அவர் இரண்டு சந்நியாசிகளை அழைத்துக்கொண்டு ஜர்மனிதேசத்துக்குப் போய், பிரிஸ்லாந்து, ஹெசி, துரிங்கியா முதலான இடங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்; அங்கே அவர் பட்ட பிரயாசங்கள் சித்தியாகாமையால், இங்கிலாந்துதேசத்துக்குத் திரும்பிப்போனார்; ஆயினும், "ஊக்கமது கைவிடேல்" என்ற முதுமொழிப்படி, அவர் தைரியத்தை விடாமல் இன்னும் பாலவனம்போலிருந்த அந்த காடனுக்குப் போய், கிறிஸ்துவின் சபையாகிய நந்தவனங்களை காட்டிப் பரிபாலனஞ் செய்யவேண்டும் என்ற தீரா ஆவலினால், 719-ம் வருஷம் மறுபடியும் அத்திசையை நோக்கிப் போனார். அக்காலத்தில் ரோமாபுரிக்குப் பாப்புவாயிருந்த இரண்டாம் கிரகரி என்பவர், அவர் ஜர்மனி தேசமென்கும் போய்க் கிறிஸ்துமார்க்கத்தின் சத்திய உபதேசங்களைக் கூறலாமென்று கட்டளை கொடுத்தபடி, அவர் பல காடுகளுக்குஞ் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்துவந்தார்; அதை அநேக ஜனங்கள் கேட்டு, கிறிஸ்துமதமே தேவனுண்டான அருள்வேதம் என்று தெளிந்து சபையைச் சேர்ந்தார்கள்; அதைப் பாப்பானவர் கேட்டு 723-ம் வருஷம் பரோபகாரி என்று அர்த்தங்கொள்ளும் பானிபேஸ் என்ற நாமதேயத்தை அவருக்கிட்டு, அவருக்குக் கண்காணிப்பட்டத்தைக் கொடுத்தனுப்பினார், 738-ம் வருஷத்தில் சிரேஷ்ட அத்தியக்ஷர் என்னும் சிறந்த உத்தியோகத்திலும் அவரை ஏற்படுத்தினார்; அவர் கண்காணிப்பட்டம் பெற்ற 723-ம் வருஷத்தில் அவர் இங்கிலாந்துதேசத்திலுள்ள தானியேல் என்னும் ஒரு கண்காணியாருக்கு எழுதின திருபத்திரத்தில் அவரது சிறந்தபக்தியும், அஞ்ஞானிகளுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டும் என்று அவருக்கிருந்த வைராக்கிய சிக்தையும் கன்றாய் விளங்குகிறது; அதில்: அஞ்ஞானிகள் தங்கள் தேவதைகள் பூர்வீகமாயிருக்கப்பட்டதென்று சொல்லும்போது, அப்படியல்லவென்று கோபிக்கொல்லாமல் அதை ஒருவாறு ஒப்புக்கொண்டு, அந்த தேவதைகள் மனிதரைப்போல, உண்டாகி வந்திருக்கவேண்டும்; அப்படியானால், அவர்களில்லாத காலம் ஒன்றிருக்கவேண்டுமே? அந்தக் காலத்தில் உலகத்தை ஆண்டதார்? மேலும் அநேக தேவர்கள் உண்டென்று சொல்லும்போது, ஒரு தேவனே வழிபட்டால், இன்னொரு தேவனுக்கு மனஸ்தாபமாயிருக்குமே என்று அவர்களிடத்தில் சாந்தமாய்ப் பேசவேண்டும்; இப்படி அவர்களுடைய மார்க்கத்திலுள்ள விபரீதங்களையும் குசமசருகளையும் எடுத்துக் காட்டினதோடு, கிறிஸ்துமதத்தின் சிறந்த உபதேசங்களையும் அவர்களுக்குத் தெரியக் காட்டவேண்டும்; அவர்கள் சொல்லுகிறபடி விக்கிரகமார்க்கம் பூர்வீகமுள்ளதாயும் உலகமெங்கும் செல்லுகிறதாயும் இருந்தபோதிலும், கிறிஸ்துமார்க்கம் அதை அழிக்கும்படியாகவும், மானிடஜாதியானை தேவனுடைய திருவடி சம்பந்தாக்கும்படியாகவும், சற்குருவாய் இவ்வுலகத்தின்கண் உதித்து வந்தாரென்று அவர்களுக்குத் தெரியக்காட்டவேண்டும் என்று எழுதினார். இவர் இப்படி காற்பது வருஷகாலமாய்த் தமது போரசத்தினாலும், உத்தம நடக்கையினாலும், மார்க்கத்துக்கு அலங்காரமாயும், ஜனங்களுக்குப் பரோபகாரியாயும் நடந்துவந்தமையால், அவருக்கு "ஜர்மனியின் அப்போஸ்தலன்" என்ற சிறந்த நாமம் கிடைத்தது; இவரால் பதினாறு வருஷத்தில் கொஞ்சக்குறைய ஒரு லட்சம் பேருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. இவருடைய பிரயாசத்தால் இரண்டு பிரபுக்கள் கிறிஸ்தவர்களானார்கள். இவரால் சில அற்புதங்கள் நடத்தினதாகவும் சொல்லப்படுகிறது. ரோமாபுரியில் கைஸ்மார் என்ற இடத்திற்குச் சமீபமாய் ஒரு பெரிய கருவாலிமரம் நின்றது. இது பழையகாலத்து மரமானபடியால் அநேகர் இதை வணங்கிவந்தார்கள். இதை வெட்டிப்போட பானிபேஸ் எத்தனித்தார். அஞ்ஞானிகள், இவரைக் கொல்லவந்தார்கள். அப்போது புசல்காற்று வந்து மரத்தை அடியோடு சன்னித் தவிடுபொடியாக்கி விட்டதென்று சரித்திரக்காரர் சொல்லுகிறார்கள். கடைகியில் அவர் இரத்தசாட்சியாக மரிக்கும்படி நேரிட்டது. ஒருசான் அவர்தம்மால் ஞானஸ்நானம்பெற்ற சில ஜனங்களைத் திடப்படுத்தல் என்னும் ஸ்திரீ

* திடணமை, Confirmation.

காணஞ்செய்யும்படி போனவிடத்தில், கள்ளர் வந்து விழுந்தார்கள்; அப்போது அவருடைய வேலைக்காரர் அவர்களைப் பிடிக்கும்படிப் பிரயத்தனஞ்செய்தார்கள்; அவர் அதைக் கண்டு, மகா சாந்தமாய்ப் பிள்ளைகளே! நீங்கள் சண்டை செய்யக்கூடாது; நிமைக்குத் நீமை செய்யக்கூடாது என்று நமது சத்தியவேதம் கூறுகிறது. நான் வெகு காலமாய் ஆசித்திருந்த நேரம் வந்தது; நான் இப்போது தேவனிடத்திற்குப் போகிறேன்; நீங்கள் அவனை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருந்தால், உங்களையும் அவர் கரையேற்றி மோட்சபதவியில் சேர்த்துக் கொள்வார் என்று சொன்னார். இந்த வார்த்தைகளை அந்தக் கள்ளர் கேட்டுச், சற்றேனும் மனம் இளகாமல் புலிபோல அவர்கள்மேற் பாய்ந்து, பானிபேஸ் என்பவனையும் அவனைச்சேர்ந்த ஐம்பத்திரண்டு பேரையும் கொன்றுபோட்டார்கள்; இது 755-ம் வருஷத்தில் நடந்தது. அப்போது அவருக்கு எழுபத்தைந்து பிராயம்.

Labours of Villehad in Saxony.

இந்த நூற்றாண்டில் கிறிஸ்துமார்க்கம் இவ்வகையாய்ப் பிரபல மானதுமன்றி, இராஜாக்களுடைய முயற்சியினாலும் அது அதிகமாய்ப் பிரசித்தமாயிற்று; அப்படிச் செய்ததில் சார்லமென் என்னும் இராயனே விசேஷித்தவராயிருந்தார். 772-ம் வருஷத்தில் அவர் சக்சேனர் என்னும் ஜாதியாருக்கு விரோதமாய்ப் படையெடுத்துப் போய், பலமுறை யுத்தஞ்செய்து அவர்களை ஜெயித்து, அவர்களெல்லாரும் கிறிஸ்துமார்க்கத்தை அனுசரிக்கவேண்டும் என்று கட்டாயஞ் செய்தார்; அவர் இப்படிச் செய்தது சரியல்ல. மதவிஷயத்தில் எல்லாரும் பல காரியங்களை யோசித்துச் சத்தியம் எதுவென்று தெளிந்து, அதை அவர்கள் மனஸ்சாகமாய்த் தழுவி கடப்பதே உத்தம வகையாம். சார்லமென் என்பவர் அப்படிச் செய்யாமல், தாம் யுத்தத்தில் ஜெயித்த அந்த ஜனங்களை மார்க்கவிஷயத்திலும் ஜெயித்துப்போடவேண்டும் என்று அப்படிச் செய்தார்; அவர்கள் கிறிஸ்துமார்க்கத்தை ஏற்றுக்கொண்டபின்பு, இங்கிலாந்தேசத்திலுள்ள வில்பிறாட் என்னும் ஒரு போதகரை அந்தத் திசைகளில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி அனுப்பினார்; அவரும் அரசனுடைய உத்தரவுப்படி அந்த ஜனங்களிடத்திற் போய், அநேகம் பாகேன்பட்டுக் கிறிஸ்துமதத்தை பத்திரைாக்கியத்துடன் பிரசங்கஞ்செய்தார்; இவரைச் சத்துருக்கள் அநேகவிசை கொல்லும்படி பார்த்தார்கள். ஒரு சமயத்தில் கொல்லப் பிரயத்தனம் செய்த

முகலில் சீட்டுப்போட்டார்கள். அந்தச் சீட்டு கொல்லப்படாதென்று விழுந்தது. இன்னொருவிசை மூர்க்கன் ஒருவன் பட்டயத்தைக் கொண்டு கழுத்தைப்பார்த்து வெட்டினான். பட்டயமோ அவர் கழுத்தில் கட்டியிருந்த கபிற்றில் மாட்டிக்கொண்டு அவருடைய பிராணனைத் தப்புவித்தது; தியிமானின் மரணம் கர்த்தருடைய பார்வையில் அருமையாயிருக்கிறது என்பது சத்தியமே. அவர் முதல்விசையாக எல்ப் என்னும் நதியைக் கடந்து, சக்சோன் காட்டுக்குப் போய்ச் சத்தியமார்க்கத்தைக் கூறினதால், அவருக்குச் "சக்சோனரின் அப்போஸ்தலன்" என்று பெயருண்டாயிற்று; அவர் முப்பத்தைந்து வருஷகாலமாய்க் கிறிஸ்துராஜருக்கு ஊழியஞ்செய்த பிற்பாடு, பிரிஸ்லாந்து என்னும் தேசத்தில் தேகவியோகமானார்; அவர் மரணமடையுஞ் சமயத்தில், அவருடைய ஒரேநித்தரில் அநேகர் வந்து அவரைச் சுற்றி நின்று கொண்டு, நீர் எங்களைவிட்டுப் போகவாயிருக்கிறீர்? ஐயோ! இனி உமது முகத்தை என்று காணப்போகிறோம் என்று சொல்லி அழும்போது, அவர் அவர்களைப் பார்த்து: நீங்கள் அழவேண்டாம்; தேவனிடத்திற்குப் போகிற என்னை நீங்கள் தடுக்கவேண்டாம்; அவர் எனக்குக் கொடுத்த இந்த ஆடுகளை அவரிடத்திலேயே விட்டுப்போகிறேன்; அவர் அவைகளைக் காக்கவும் இரக்கிக்கவும் வல்லவராயிருக்கிறார் என்று சொல்லி ஜீவனைவிட்டார்.

Concluding remarks.

இவ்விதமாய் இருள் நிறைந்த இக்காலத்திலும் இவ்விலாத்து பிராண்ஸ்தேசங்களிலுள்ள அநேக உத்தம போதகர்கள், பத்மெல்லாந்தீர பாஞ்சோஜியாய் உதித்துவந்த கிறிஸ்தேசுவின் இரகஸ்ய மகத்துவங்களை எங்கும் போய்க் கூறிவந்தார்கள்; அதினாலே அவர்களுக்குத் துன்பமும் பிராணமோசமும் வந்தபோதிலும், அதையெல்லாம் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டு, அந்த இரகஸ்யஞானத்தியுடைய கட்டளைப்பிரகாரம் உலகமெங்கும் போய்ச் சுவிசேஷத்தை அறிவித்துச் சபையை காட்டினார்கள். தேவன் அவர்களுக்குக் கனித்த காலத்தை அவர்கள் பூமியிலே போட்டுப் புரைத்தினையாமல், அதை அருளினவருக்கு மகிமையாகவும், அநேக ஆத்துமாக்களுக்கு நன்மையாகவும் உபயோகித்துவந்தார்கள். கிறிஸ்தவர்களெல்லோரும் இப்படிச் செய்வதே உத்தமம்.

QUESTIONS ON EIGHTH CENTURY.

எட்டாம் நூற்றாண்டின் சரித்திரத்தின்பேரில் கேள்விகள்.

1. சொரூப வணக்கம் நிலைநாட்டபையில் எப்படி, எத்தச் காலத்தில் ஆரம்பமானது?
2. விக்கிரகவணக்கத்திற்குச் சார்பாயிருந்த பாப்புகள் யார்? எத்தச் சங்கம் இது தல்லதென்றும், வேறெந்தச் சங்கம் இது பாவம் என்றும் தீர்த்தது?
3. குரோவீஸோ என்னும் சங்கம் எத்தனாருடைய கூடிற்று? இதின் தீர்மானங்கள் என்ன?
4. சரசேனரைப்பற்றித் தெரிந்ததை எழுதும்.
5. ஜோ, பீட், வின்பிரட், சார்லமென், வில்லிபிரார்ட் என்பவர்கள் முறையே எத்தச் காலத்திலிருந்தார்கள் என்றும், அவர்கள் சரித்திரத்தில் தெரிந்ததை விபரமாயும் எழுதுக.
6. பாப்புவின் அதிகாரம் எப்படி வளர்ந்துவந்தது?
7. 754, 787, 755, 735, 680, 755-ம் வருஷங்களைப்பற்றி என்ன தெரியும்?

ஒன்பதாம் நூற்றாண்டு.

திருச்சபையின் நிலைமை. சரசேனர் கல்விவிர்த்திக்காகச் செய்த முயற்சி. நவ வணிகம். இருவனத்தின் ஆராய்ந்த தீர்மான உபதேசம். கிரேக்கு சபைக்கும் லத்தின் சபைக்கும் நேரிட்ட பிரிவினை. கிரேக்கு சபையின் பிரதான கோட்பாடுகள். தூரின்பட்டணத்துக் கண்காணியாயிய வொடியு. இத்திய ஞானத்தைப்பற்றி அவர் சொல்லும் நியாயங்கள். மகா அல்பிரட் பிறந்தகல். அவர் மரிக்குஞ்சமயத்தில் தமது குமாரனுக்குச் சொன்ன புத்தி. பல்கேரியாநாட்டில் நிஸ்தமார்க்கம் ஆரம்பித்த விருத்தாந்தம். தென்மார்க், சுவீடன், ருஷியாதேசங்களில் நிஸ்தமார்க்கம் பிரபலமாகுதல். அன்க்கேரியு என்பவனின் பிரயாசம், மரணம்.

State of the Church at the commencement of this Century.

இந்த நூற்றாண்டில் சபையின் சரித்திரத்தைக் கவனிக்குங்கால், அறியாமையும் அந்தகாரமும் அலைத்தியும் பெருகிக்கொண்டேவந்தது என்று சொல்ல வேண்டியிருக்கிறது. தேவன் அருளின சத்திய வேதத்தைப்பார்க்கிலும் மனிதருடைய கோட்பாடுகளே அதிக முக்கியப்படுத்திவந்ததினாலும், பாப்புகளுடைய அதிகாரம் வளர்ந்துவந்ததினாலும், சடங்காசாரங்களும் நியமனிஷ்டைகளும் பெருகிவந்ததினாலும், பக்தர்களுக்குப் பலவிதத்திலும் பாதகமுண்டாயிருந்ததினாலும், இந்த நூற்றாண்டில் சபையின் சீர் மிகவும் குலைந்திருந்தது. தேவவசனம் கமது கால்களுக்குத் தீபமும், கமது பாதைக்கு வெளிச்சமுமாயிருக்க அதை விட்டுவிட்டு, அதற்கு ஒவ்வாத மனிதருடைய கோட்பாடுகளே முக்கியப்படுத்தும்போது ஜனங்களுக்குள் அறியாமையும் அந்தகாரமும் பெருகுமென்பதற்குச் சந்தேகமில்லை.

The Saracens though hostile to Christianity encourage learning.

இந்த நூற்றாண்டில் சரசேனர் வெகு சண்டமாருதஞ் செய்தார்கள்; அவர்கள் ஆஸியா கண்டத்திலுள்ள அநேக தேசங்களேயும், ஆப்பிரிக்காவிலுள்ள வடமாகாணங்களேயும், ஸ்பானியா சார்டினியா முதலான தேசங்களேயும் கட்டிக்கொண்டு தங்கள் ராசாட்சியை ஸ்தாபித்தார்கள்; அவர்கள் போன இடங்களிலெல்லாம் கிறிஸ்துமார்க்கத்தை அழித்து, மகமதுமார்க்கத்தை நாட்டினார்கள்; இதைப்பற்றி அவர்களேபேரில் பழுது கூறவேண்டியதாயினும், ஒருவிஷயத்தில் அவர்களைப் புகழவும் வேண்டியிருக்கிறது. அக்காலத்தில் ரோப்பாகண்டத்திலுள்ள ஜனங்களுக்குள் கல்விப்பயிற்சிகள் ஒன்றுமில்லாமல் அறியாமையாயிய இருள் அவர்களே மூடிக்கொண்டிருந்தபோது, சரசேனர் பலவகைக் கல்விகளேயும் சாஸ்திரங்களேயும் முயற்சித்துவந்தார்கள். இந்த நூற்றாண்டின் துவக்கத்திலிருந்த சார்லமென் என்னும் ராஜாவும், கடைசியிலிருந்த மகா ஆல்பிரட் என்னும் ராஜாவும் ஜனங்களுக்குள்ளிருந்த அறியாமை நீங்கவும் கல்வி பெருகவும் வேண்டிய முயற்சி செய்தார்கள். பலதேசங்களிலிருந்து கல்விமான்களே அழைப்பித்து, அவர்கள்மூலமாய்த் தங்கள் பிரஜைகளுக்கு வித்தைகளேக் கற்றுக்கொடுத்தார்கள்; இப்படி அவர்கள் ஜனங்களுக்குள் கல்வியும் காசீகரும் மூண்டாகும்படி பிரயாசப்பட்டும், அறியாமையாயிய இருள் விஸ்தாரமாய்ப் பரம்பியிருந்தமையால், அவர்கள் செய்த பிரயத்தனங்கள் அத்தனே பயன்படாமல் போயிற்று. இவ்விலாந்துதேசத்திலும் இந்த இருள் அதிகமாய்ப் பரவத் தொடங்கிற்று. 816-ம் வருஷத்தில் (Calcuith) கால்குவித் என்ற இடத்தில் ஒரு சங்கம் கூடி, பரிசுத்த வஸ்துகளேத் தேவாலயங்களில் புதைத்துவைக்கலாமென்றும், பரிசுத்தவான்களின் படங்களே தேவாலயச் சுவர்களில் வரைந்துவைக்கலாமென்றும், ஞானஸ்நானம் சண்

ணீரில் முழுகவைத்துக் கொடுக்கவேண்டுமேயொழிய தண்ணீரைத் தெளித்துத் தரப்படாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

Transubstantiation first broached by Paschasius Radbert, and opposed by Bertram and Scotus.

அரியானர், மனிக்கேயர், நெஸ்தோரியர் முதலானவர்களுடைய கோட்பாடுகள் தேச்சபையில் வெகு விஸ்தாரமாய்ச் சென்று அதிகம் தீமைகளை விளைவித்தன; இதுவுமன்றி சொரூப வணக்கம், அர்ச்சியசிஷ்டர்வணக்கம், பரலோகஜெபம், குருமார் விவாகம் முதலிய ரோமான்சபை விபரீதக் கோட்பாடுகளும் பெருகிக்கொண்டேவந்தன.

இதெல்லாம் போதாதென்று இந்த நூற்றாண்டில் சார்ளுடைய இராப்போஜனத்தில் பிரதிஷ்டை செய்யப்படும் அப்பமும் இரசமும், இறில்ஸ்துநாதருடைய சரியான திருமேனியாகவும் திருரத்தமாகவும் மாறிப்போகிறதென்ற விபரீதக் கோட்பாடும் தலைகாட்டத் தொடங்கிற்று. இரட்சகர் அற்புதமாய் மரியாளின் கற்பத்தில் உருவானதுபோல, அப்பமும் ரசமும் ஆசீர்வதித்தவுடனே அற்புதமாய் அவரது நிசச்சரீரமும் நிசரத்தமுமாகி விடுகிறதென்பது இதன் கொள்கை. இதை முதல்முதல் சார்ப்பிப் பட்டணத்தில் மடாதிபதியாயிருந்த பாஸ்கேஷியு ராத்பர்ட் என்பவன் போதித்தான்; அப்பட்டணத்திலுள்ள ஒரு சன்னியாசியாகிய பெர்ட்ராம் என்பவனும் யோவான் ஸ்காற்று என்பவனும் அந்தக் கோட்பாட்டை நிராகரித்து, நற்கருணையில் பரிமாறும் அப்பமும் இரசமும் நிறில்துநாதருடைய திருச்சரீரமும் இரத்தமுமாக மாறுமல், அவைகளே ஞாபகப்படுத்துகிற அறிகுறிகளாயிருக்கின்றனவென்று கூறினார்கள்.

Predestination as taught by Gotteschalchus.

கடவுளின் முன்னியமம் என்னும் உபதேசத்தைப்பற்றியும் சபையில் தர்க்கமுண்டாயிருந்தது; இது காற்றஸ் கால்க்கு என்னும் ஒரு சன்னியாசியினால் ஆரம்பமாயிற்று; இவன் ஜர்மனிதேசத்திலுள்ள சக்சோன்நாட்டில் பிறந்தவனும், அருஸ்தின் என்பவர் செய்த தால்களை நன்றாய் வாசித்தவனுமிருந்தான்; இவன் அகுஸ்தின் என்பவைப்போல் தேவன் சிலரை மோட்சத்துக்கென்றும், சிலரை நரகத்துக்கென்றும் முன் நியமித்திருக்கிறார்; இதில் முத்தியடைவதற்கு முன் நியமிக்கப்பட்டவர்களுக்குத்தான் நிறில்துநாதர் திரு அவதாரபுருஷராயிப் பூலோகத்துக்கு வந்து பாடுபட்டார் என்று உபதேசித்தான்; அதை விசாரிக்கும்பொருட்டு 848-ம் வருஷத்தில் மெயின்ஸ்

பட்டணத்தில் ஒரு சங்கம் வைத்து, அதில் அவனுடைய உபதேசம் தப்பென்று தீர்த்தார்கள்; பிற்பாடு றீம்ஸ்பட்டணத்துக் கண்காணியாகிய ஹிங்மார் என்பவர் 849-ம் வருஷத்தில் வேறொரு சங்கம் வைத்து, அதில் இந்த உபதேசத்தைப்பற்றி வாதித்து, அதைத் தப்பென்று தீர்த்து காற்றஸ்கால்க்கு என்பவனைக் குருப்பட்டத்தைவிட்டுத் தள்ளிக் காவல்வசஞ்செய்தார்; அவனுக்கு இப்படியெல்லாம் உபத்திரவங்கள் நேரிட்டும் தான்கொண்ட கொள்கையைச் சற்றேனும் மாற்றவில்லை; அவன் பரிசுத்தனும் பலவித சங்கடங்களினுலும் வருந்தி, 868-ம் வருஷத்தில் சிறைச்சாலையில் இறந்துபோனான்.

Circumstances which led to the schism between the Greek and Latin Churches.

இந்த நூற்றாண்டில் உண்டாயிருந்த எல்லாத் தர்க்கங்களிலும் கிரேக்கசபையையும், லத்தின்சபையையும் இரண்டாகப் பிரித்துவிட்ட தர்க்கம் விசேஷமுள்ளது. ரோமாபுரிப் பாப்புகளுக்குள்ளும் கொன்ஸ்தாந்தினேபுரிக் கண்காணிகளுக்குள்ளும் வெகுகாலமாய்ப் பொறுமையும் விரோதமும் இருந்தென்று இற்குமுன் சொன்ன விசேஷங்களினுலே தெரிந்திருக்கலாம், சென்ற நூற்றாண்டில் சொரூப வணக்கத்தைப் பற்றி உண்டான வாக்குவாதத்தில் அந்த விரோதம் அதிகப்பட்டது; இவ்விருசபைகளுக்குள்ளும் அதிக மனஸ்தாபமுண்டாவதற்கு வேறொரு முகாந்தரமும் இருந்தது. நீசேயாபட்டணத்தில் கூடின சங்கத்தார் எழுதின விசுவாசப்பிரமாணத்தில் பரிசுத்தஆவியானவர் பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவரென்று காட்டியிருந்தது; அதில் கொன்ஸ்தாந்தினேபுரியில் கூடின சங்கத்தார் அவர் குமாரனிடத்திலிருந்தும் புறப்படுகிறவர் என்பதைக் கூட்டி எழுதினார்கள்; அதை லத்தின்சபையார் அங்கீகரித்தபோதிலும் கிரேக்கசபையார் தப்பென்று தள்ளிவிட்டார்கள்; இப்யாதி காரணங்களால் அவ்விரு சபையாருக்கும் விரோதமுண்டாயிருந்தது; "நீராக்கோபம் போராய் முடியும்" என்பதுபோல, அதனுலே அவர்களுக்கு அதிகத் தீமை நேரிட்டது; அக்காலத்தில் மிகேல் என்பவர் அரசனுயிருந்தார்; அவர் கொன்ஸ்தாந்தினேபுரிக் கண்காணியாயிய இக்னேஷியு என்பவனைத் தள்ளி, அவருக்குப் பதிலாக மகா வித்வானுயிருந்த (Photius) போஷியு என்பவனை ஏற்படுத்தினர். இக்னேஷியு என்பவர் அரசன் தமது விஷயத்தில் அநீதி செய்திருக்கிறரென்று நினைத்து, அக்காலத்தில் ரோமாபுரியில் பாப்பவராயிருந்த முதலாம் நிக்கலஸ் என்பவருக்கு

அதுகாரியத்தைத் தெரியப்படுத்தினர்; அவர் இதுதான் சமயமென்று சொல்லி 862-ம் வருஷத்தில் ரோமாபுரியில் ஒரு சங்கம் ஏற்படுத்தி, போஷியு என்பவர் கண்காணிப்பட்டத்துக்கு அயோக்கியரென்று தீர்த்தார்; அதை போஷியு என்பவர் கேள்வியுற்று, மோக்கடைக்கு எதிர்க்கடையாக 866-ம் வருஷத்தில் கொன்ஸ்தந்தினோபுரியில் ஒரு சங்கம் வைத்து, நிக்கலஸ் என்பவர் பாப்புப்பட்டத்துக்குத் தகுந்தவரல்லவென்று தீர்மானித்தார்; இப்படியிருக்கையில், மிகேல் என்பவருக்குப் பின்வந்த பாசிலியு என்னும் அரசன் இக்னேஷியு என்பவரை முன்னிருந்த உத்தியோகத்தில் நியமித்தார்; அதை 869-ம் வருஷத்தில் கொன்ஸ்தந்தினோபுரியில் கூடின சங்கத்தார் ஒப்புக்கொண்டார்கள். 875-ம் வருஷத்தில் இக்னேஷியு என்பவர் மரித்துப்போன பிற்பாடு, அரசன் போஷியு என்பவரை அவருக்குப் பதிலாக நியமித்தார்; அதை ரோமாபுரிப் பாப்புவாகிய எட்டாம் யோவான் என்பவர் சரியென்று அங்கீகரித்துக்கொண்டார்; ஆயினும், போஷியு என்பவருடைய கஷ்டகாலம் நீங்கவில்லே. பாசிலியு என்னும் இராஜனுக்குப்பின் பட்டத்துக்குவந்த அவன் குமாரனாகிய லியோ என்பவர் போஷியு என்பவரைப் பிடித்து ஒரு சன்னியாசிமடத்துக்கு அனுப்பிவிட்டார்; அவர் அங்கே போய்ப் பல துன்பங்களைப் பட்டு 891-ம் வருஷம் மரித்துப்போனார்; அதோடே சோமைச்சபையாருக்கும் கிரேக்கசபையாருக்குமிருந்த விரோதம் நீங்கிப்போகவேண்டியதாயிருக்க, அது அப்படி நீங்காமல் அதிகமாய் வளர்ந்தது. ரோமாபுரிப் பாப்புகள் போஷியு என்பவர்மேலிருந்த விரோதத்தை அவர் இறந்தபிற்பாடும் காட்டினார்கள்; அவர் நியமித்த கண்காணிகளையும் குருமாரையும் தள்ளிப்போடாவிட்டால் நிசேகதில்லையென்று சொன்னார்கள்; அதைக் கிரேக்கசபையார் கேட்டு வெறுப்படைந்து பாப்புகள் சொல்வதின்படி காண்ஸ் ரூபி சந்திராள் இருக்குமட்டும் செய்யப்போகிறதில்லையென்று மறுத்துத்திப் பேசினார்கள்; அதுமுதல் இருசபைகளுக்குமுண்டான பிரிவினை இக்காலம்வரைவும் விருக்கிறது.

Principal tenets of the Greek Church.

கிரேக்கசபையார் இப்படிப் பிரிந்துபோனபோதிலும், அவர்களும் ரோமான்சபையாரைப்போலவே சத்தியமார்க்கத்துக்குப் பொருந்தாத அநேக உபதேசங்களைப் போதித்துவருகிறார்கள்; அவைகளை இவ்வண்ணம் தொகுத்துக் காட்டுகிறோம். முதலாவது: ரோமான்

சபை சத்தியசபையுமல்ல; பாப்பானவர் அச்சபைக்குத் தலைவருமல்ல. இரண்டாவது: பிள்ளைகள் மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, அல்லது பத்துவயதாயிருக்கும்போது ஞானஸ்நானம் பெறுகிறார்கள்; சில சமயங்களில் பதினெட்டுப் பிராயம்வரையும் ஞானஸ்நானமில்லாமலிருக்கிறார்கள். மூன்றாவது: சர்த்தருடைய இராப்போஜனத்தில் சேருகிற எல்லாருக்கும் அப்பமும் சராட்சரசமும் கொடுக்கவேண்டியது; பிள்ளைகள் ஞானஸ்நானப் பெற்றமாத்திரத்தில் கர்த்தருடைய இராப்போஜனத்தில் சேரலாம். நான்காவது: உத்தரிக்கும் ஸ்தலம் இல்லையென்று சொன்னபோதிலும், நியாயத்தீர்ப்புநாளில் தேவனுடைய அருள் மரித்தவர்களுக்குக் கிடைக்கும்பொருட்டு அவர்களுக்காக ஜெபம் பண்ணுகிறார்கள். ஐந்தாவது: ரோமான் மார்க்கத்தார் சொல்லும் ஏழு சாக்கிரமெந்துகளில் ஸ்திரகரணம், அவஸ்தைபூசுதல், விவாகம் இவைகள் சாக்கிரமெந்துகளல்லவென்று மறுத்திருக்கிறார்கள். ஆறாவது: பாவசங்கீர்த்தனஞ் செய்வது சபைப்பிரமாணமேயல்லாது தேவப்பிரமாணமல்ல. ஏழாவது: ரத்தருசே ஆராதனையில் அப்பத்தையும் இரசத்தையும் தொழுதுகொள்வதில்லே. எட்டாவது: குருமாருக்கு அப்பத்தையும் இரசத்தையும் கொடுப்பதுபோல, சாதாரண ஜனங்களுக்கும் கொடுக்கவேண்டியது அவசியம்; பக்திவிசுவாசம் யாருக்கு இருக்கிறதோ அவர்களுக்கு அதனால் பயனுண்டாகும். ஒன்பதாவது: பரிசுத்தஆவியானவர் குமாரனிடத்திலிருந்தல்ல, பிதாவினிடத்திலிருந்தே புறப்படுகிறார். பத்தாவது: அவர்கள் கோவில்களில் சொரூபங்களில்லாவிட்டாலும் படங்களிருக்கின்றன. பதினோராவது: ஒருவன் மைதீகவேலே செய்யும்படி குருப்பட்டம் பெறுவதற்குமுன் விவாகஞ்செய்திருந்தால், அவன் இல்லற வொழுங்கைத் தலைமையின்றி நடத்திவரலாம். பன்னிரண்டாவது: ஒருவனும் நான்காம்வீசை விவாகஞ்செய்யக்கூடாது. பதின்மூன்றாவது: அவர்களுக்கு அநேக திருநாட்களுண்டு. அவர்களுடைய இந்த முக்கிய உபதேசங்களையும் நியமவிஷ்டசனையும் பார்க்கும்போது, அவர்களுக்குள்ளும் அறியாமையும் மூடபக்தியும் அதிகமாயிருந்ததென்றும், சத்தியமார்க்கத்தின் சுத்தமும் சிறப்பும் மங்கியெரியும் நிரியைப்போலக் கொஞ்சமாயிருந்ததென்றும் சொல்லவேண்டும்.

இந்த நூற்றாண்டிலும் தேவ திருவசனத்துக்கேற்ற பக்திர்சன் இல்லாமற்போகவில்லே; அவர்களில் ஜொடியு என்பவர், கிரேஷ்டமா

னவராயிருந்தார்; இவர் ஸ்பானியாதேசத்தில் பிறந்தவராயும், பாலியத்தில்தானே சார்லமேன் என்னும் இராஜனுடைய குமாரனுகிய லூயி என்னும் பிரான்ஸ்தேசத்து இராஜாவுக்கு அரமனைக்குரு வாயுமிருந்தார்; அவ்வரசன் ஜனங்களுக்குள்ளிருந்த அறியாமையையும் அவபக்தியையும் பார்த்துப் பிரலாபித்து, அவர்களுக்குக் திவ்விதுமார்க்கத்தின் சத்திய உபதேசங்களைத் தெரியப்படுத்த ஒரு வரை ஏற்படுத்தவேண்டுமென்று நினைத்து, 817-ம் வருஷத்தில் இனாடியு என்பவரை தூரின்பட்டணத்துக் கண்காணியாக நியமித்தார்; அவர் அந்த உயர்ந்த உத்தியோகத்தைப் பெற்றமாத்திரத்தில் ரோமைச்சபையின் தவறுகளை நீக்கவும், சத்தசுவிசேஷத்தின் சத்திபங்களைக் கூறவும் தொடங்கினார்; அக்காலத்தில் சொரூப வணக்கம் எங்கும் கடந்துவந்ததைப் பார்த்துக் கிலேசமுற்று, கோவில்களிலிருந்த சொரூபங்களை உடைத்து நீக்கிவிட்டதுமன்றி, நிறிஸ்துமதத்தின் சத்திய உபதேசங்களை ஜனங்கள் என்றும் அறிந்துகொள்ளும்படி போதித்தும்வந்தார். திருச்சபைக்குத் நிறிஸ்து ஸ்தாபே தலைவர் என்றும், மானிடர் சுட்டேறவருக்குத் தானதர்மம் அல்ல, நிறிஸ்துநாதருக்குபிறகுள்ள பரிசுத்தவான்களே உதவுமென்றும்; மனிதருடைய கோட்பாடுகள் ஒன்றும் தேவ வெளிப்படுத்த அருள்வேதத்துக்குச் சமமல்லவென்றும், சர்த்தருடைய இராப்போஜனத்தில் பரிமாறப்படும் அப்பமும் இரசமும் நிறிஸ்துநாதருடைய சரீரமாகவும் இரத்தமாகவும் மாறுகிறதில்லையென்றும், மரித்தோருக்காக ஜெபஞ்செய்வது விபரீதமென்றும், சபை தவறுமையுள்ளதென்று சொல்வது அநியாயமென்றும், இன்னும் இப்படிப்பட்ட சத்திய உபதேசங்களை அவர் தெளிவைராக்கியத்துடன் கூறிவந்தார்.

Claudius, bishop of Turin, A.D. 817.

அவருடைய உத்தமநடக்கையைக் கண்ட சத்துருக்கள் அவர் பேரில் பொறாமைகொண்டே அவரைப் பலவகையாய் அவதூறு செய்தார்கள். அரசனுடைய அரமனை உத்தியோகஸ்தரில் சிலர் அவர் சொரூப வணக்கத்தைப்பற்றி அம்மளவு கண்டிப்பாய்ப் பேசக்கூடாதென்பதுபோல சொன்னபோது, அவர் அவர்களுக்கு அதைப்பற்றி ஒரு நிருபம் எழுதி அனுப்பினார்; அதில் அவர் தான் தூரின் பட்டணத்துக்குக் கண்காணியாக வந்தபோது கோவில்களெல்லாம் சொரூபங்களால் நிறைந்திருக்கக் கண்டேன்; எல்லாரும் தெய்வம்

An extract from his Writings.

போல வைத்துக் கும்பிட்ட அவைகளை நான் தனிப்பொடியாய் நடைத்துச் சத்தருன்மயமாக்கிப்போட்டபடியால் எல்லாரும் என்னை விரோதிக்கிறார்கள்; அதைப்பற்றி அவர்களிடத்தில் பேசும்போது, அவர்கள் நாங்கள் இவைகளைப் பூசிக்கிறதில்லை; எங்கள் மனதில் தேவபக்தி உதிப்பதற்கு அனுகூலமாக இவைகளை வைத்திருக்கிறோமேயல்லாமல் வேறொன்றுக்குமில்லையென்று சொல்லுகிறார்கள்; அதற்கு நான் பேய்பிசாசுகளே நமஸ்கரித்த நீங்கள் அவைகளை விட்டுவிட்டு இப்போது செத்துப்போன மகாத்துமாக்களைப் பூசிப்பதிலும் முன்போல விக்கிரகாராதனை செய்கிறீர்களேயன்றி மற்றப்படி ஒன்றுமில்லை; பேர் ஒன்றில் விசுவாசமிருக்கிறதேயொழிய பொருளில் விசுவாசமில்லை. முன் நீங்கள் கும்பிட்ட தெய்வங்களுக்கு, புதன், வியாழன், வெள்ளி, சனி என்று பெயர்; இப்போது நீங்கள் வணங்குகிறவர்களுக்கு, இராயப்பர், பெண்ணப்பர், அருளப்பர் என்று பெயர்; நிறிஸ்துநாதர் சிலுவையில் அறையப்பட்டதைப்பற்றிச் சிலுவையை நமஸ்கரிக்கவேண்டும் என்றால், அவர் மாட்டுத்தொழுவத்தில் பிறந்ததினாலே அதையும் வணங்கவேண்டிவருமே; அவனைக் கழுதைத் தூணியில் கற்றியிருந்ததினாலே அதையும் கும்பிடலாமே. நாம் கடவுளுடைய சிருஷ்டிகளை வணங்கக்கூடாதிருக்க, மனிதருடைய கைவேலைகளை எப்படி வணங்கலாம்? நாம் சிலுவையை வணங்கவேண்டுமென்ற சொல்லாமல் அதை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும், நம்மை நாமே வெறுக்கவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறது. ரோமாபுரிக்குப் போய்த் தபஞ்செய்யக்கூடாதென்று நான் போதனைசெய்ததாகச் சொல்லுகிறார்கள்; நான் அப்படிச் சொல்லவில்லை. ரோமாபுரிக்குப் போனாலும் போகாவிட்டாலும் என்ன? இயேசுகிறிஸ்து பேதுருவைப் பார்த்து: நீ பேதுருவாயிருக்கிறபடி, இந்தக் கன்மலையின்மேல் என் சபையைக் கட்டுவேன் என்று திருவாக்குரைத்தினாலே, ரோமாபுரிக்கு யாத்திரை போனால் பாவந்தீரும் பரகதி கிடைக்குமென்று நினைப்பது வீண்; அப்போஸ்தலருடைய ஆசனத்திலிருப்பவர்கள் அப்போஸ்தலருக்குரிய கடமைகளைச் செய்யவேண்டும்; இதெல்லாவற்றையும் பார்க்கும்போது வேறு தூக்கப்படவேண்டியிருக்கிறது. சகல அண்டசராசரங்களையும் படைத்துக் காத்திவருகின்ற சகஸ்ரத் கடவுளை வணங்காமல், சொரூபங்களை வைத்து வணங்குவது தேவதூஷணமும் பாபாதகமுமல்லவோ? ரோமாபுரிக்கு யாத்திரைசெய்கிற நின்முடனே!

உங்களுக்கு எப்போது புத்திவரும்? உங்களுடைய உள்ளத்தில் பரம ஞானம் எப்போது உதயமாகும் என்று சொல்லுகிறேன் என்று எழுதினார்.

இவர் சில நூல்களைச் செய்திருக்கிறார்; அவைகளில் ஒன்றில்: மாட்சிமைபொருந்திய தேவஞானம் தன்னிடத்திற்கு வருகிற தீசப்பாலிகளைத் தள்ளுகிறதில்லை; அதைத் தேடுகிற யாவருக்கும் அது சமீபமாயிருக்கிறது; அதை அலட்சியஞ்செய்தவர்களுக்குச் சகமுண்டாகும்; அதை ஒருவனும் ஆராய்ந்தறிய முடியாது; அதில்லாமல் ஒருவனும் ஒன்றையும் சரியாய் தீர்மானிக்கக் கூடாது; நாம் ஒரு கிருஷ்டியனிடத்துக்குப் போகவேண்டுமென்று அது சொல்லாமல், கிருஷ்டகனிடத்திற்குப் போகவேண்டுமென்று சொல்லுகிறது; அதைத் தியானஞ்செய்தவர்களுக்கு ஞானம் கிடைக்கும்; அவனாயன்றி பாகனியனாயினும் யூதனாயினும் மனப்பற்றுதல் முற்றிலும் வியர்த்தமாய் முடியும் என்று எழுதினார்; இந்த உத்தமபோதகர் இவ்விதமாய்க் கிறிஸ்து நாதருக்கு பக்திவினயத்துடன் வழிபாடுசெய்து, 839-ம் வருஷத்தில் இறந்துபோனார்.

Claudius' remarks on Eternal Wisdom.

இப்படி கைசே உத்தியோகஸ்தரில் தேவபக்தியில் நிறைந்தவர்களிருந்ததுபோல, வெளிசே உத்தியோகஸ்தரிலும் கிறிஸ்தேசுவாமியின் அடியார்கள் சிலரிருந்தனர் அப்படிப்பட்டவர்களில் மகா ஆல்பிரட் என்னும் இராஜா இங்கிலாந்துதேசத்தில் சேஷ்டமானவராயிருந்தார்; இவர் 849-ம் வருஷத்தில் பிறந்தவர்; இவர் தந்தைக்கு தெல்வுல்ப் என்று பெயர்; இவர் அதி உத்தம பிரபுவும் பக்திமானுமாயிருந்தார்; இவர் பாலியருயிருக்கும்போதே அர்த்தராத்திரியில் எழுந்திருந்து கோவிலுக்குப் போய், தேவன் தம்மை எல்லாவகையான பாவதோஷங்களுக்கும் விலக்கியருளவேண்டுமென்று பிரார்த்தித்துவருவார்; இவர் இராஜபட்டம் பெற்றகாலத்தில் இங்கிலாந்தில் சென்மார்க் தேசத்தார் வந்து சர்வகொள்ளையாடினார்கள்; அவர் ஒரு விசை அவர்களுக்குத் தப்பி ஓடி, ஒரு இடையன்வீட்டில் போய் சிறிதுகாலம் ஒளித்திருக்கவேண்டியிருந்தது; பிற்பாடு அவர்களோடெ வெகு வீரமாய் யுத்தஞ்செய்து அவர்களை தெரிந்தார்; இவர் தமது குடிகள்விஷயத்தில் வெகு அபிமானமுள்ளவராய், அவர்கள் கல்வியிலும் ஞானீகத்திலும் தேறவேண்டுமென்று வேண்டிய முயற்சி

Alfred the Great born, A.D. 849.

கள் செய்தார்; அவர்களுக்கு மதவிஷயங்களிலும் தேவபக்தியிலும் தேர்ச்சியுண்டாக, சபைகளில் உத்தம குருமாரை ஏற்படுத்தினார்; அங்கிலபாஷையிலுள்ள உயர்ந்த நூல்களை இங்கிலீஷ்பாஷையில் மொழிபெயர்க்கப் பிரதிதினம் பத்துகாழிகையைக் கழித்துவந்தார்; பீட் என்பவர் செய்த திருச்சபைச் சரித்திரத்தையும், தாவீதரசன் சங்கீதங்களையும், இன்னும் சில நூல்களையும் ஜனங்களுக்கு உபயோகமாக மொழிபெயர்த்துப் பிரசுரஞ்செய்தார்; இவர் சபையை நடத்துவதற்கேற்ற சில நியமனங்களை உண்டுபண்ணினார். அதன் முகப்பில், பத்து கற்பனையை எழுதிவைத்தார். இதில் இரண்டாம் கற்பனை யில்லை; ஆனால் பத்தாம் கற்பனையென்னவென்றால், பொன்னினாலும், வெள்ளியினாலும் விக்கிரகத்தை உண்டுபண்ணுதே யென்பதே. இவர் இந்துதேசத்திற்கு ஒரு கண்காணியாரை அனுப்பி, அச்சர்வத்தில் வருத்தப்பட்ட சிரியக் கிறிஸ்தவர்களுக்கு பணஉதவி செய்தார். பரப்புவுக்கு இவர் பிழைமைந்து இருந்ததாகத் தோன்றவில்லை. ஆனால் ரோமச்சபையின் தப்பான கொள்கைகளில் சிலதை இவர் அனுசரித்துவந்ததாகத் தோன்றுகிறது. அவர் கல்விப்பிரியராயும், பிரஜைகள் விதையில் தேறவேண்டுமென்ற அபேட்சையுள்ளவராயும் இருந்தமையால், ஆக்ஸ்போர்ட் பட்டணத்தில் சர்வகலாசாலையை ஸ்தாபித்தார்; படிப்பில் அவர் ஜேஷ்டமாயிருந்ததுபோல, பக்தியிலும், தர்ம கிரியையிலும், பரோபகாரகுணத்திலும் சிறந்து விளங்கினார்; இவ்விதமாய் அவர் தர்மராஜன் என்று எல்லாரும் கொண்டாடும்படி பதினெட்டாவது ஐசுவரியகாலமாய்ச் செங்கோல் கோணுமல் அரசபுரிந்து, 900-ம் ஆண்டில் இறந்துபோனார்.

அவர் மரிக்குங்காலத்தில் தம்முடைய புத்திரனாகிய எட்வர்ட் என்பவனைப் பார்த்து: மகனே! என் காலம் கிட்டிவிட்டது; நான் இப்போது உன்னை விட்டுப் பிரிந்துபோகவேண்டும்; நான் பரலோகத்துக்குப் போகிறேன்; நீ இவ்வுலகத்திலிருந்து என் ராஜ்யத்தை ஆளப்போகிறாய்; என் அருமை மைந்தனே! நீ குடிகளுக்கு ஒரு தகப்பனைப்போலிரு; அரசபின்னைகளுக்கும் ஆசை வற்ற கைம்பெண்களுக்கும் சிநேகிதனாயிரு; ஏழைகளுக்கும் பலவீனருக்கும் தாசகமாயிரு; "சன்மை கடைப்பிடி" என்ற நீதிமொழிப்படி நீமையை யகற்றி எப்போதும் நன்மை செய்யப்பார்; எக்காலத்திலும் தர்மசஞ்சரிப்பாய் நடந்துகொள்; அப்போது தேவன்

His dying advice to his son Edward.

உன்னோத் தமது கருணை திருஷ்டியைத்துப் பார்த்து, உனக்கு வேண்டிய சுகானுபாக்கியங்களையும் பேரின்பவாழ்வையும் அருளுவார்; உனக்கு ஒரு ஆபத்து நேரிடுங்காலத்தில் அவரை நோக்கி வேண்டிக் கொள்; அவர் உனக்கு வேண்டிய சகாயத்தையும் ஞானத்தையும் கடாக்ஷிப்பார் என்று சொல்லி ஜீவனை விட்டார்.

Introduction of Christianity into Bulgaria by Cyril and Methodius.

இந்த நூற்றாண்டில் இப்படிப்பட்ட மகாத்துமாக்கள் இருந்தது மன்றி, கிறிஸ்துமார்க்கமும் பலதேசங்களில் பிரசித்தமாகிவந்தது; ஐரோப்பாகண்டத்துக்கு வடக்கே பல்கேரியர் என்று ஒரு துஷ்ட ஜாதியார் இருந்தார்கள்; அவர்களுக்குப் பாகோரிஸ் என்பவன் ராஜனாயிருந்தான்; ஒரு யுத்தத்தில் அவனுடைய சகோதரியை எதிரிகள் பிடித்து கொன்ஸ்தாந்தினோபுரிக்குக் கொண்டுபோனார்கள்; அங்கே அவள் கிறிஸ்துமதத்தைக் கேட்டு, அது கடவுளுடைய அருள்வேதமெனத் தெளிந்து அதை அங்கீகரித்துக்கொண்டாள்; கொஞ்சகாலத்திற்குப் பிற்பாடு அவள் தன் தேசத்துக்குத் திரும்பிவந்தபோது, தன் சகோதரனுடைய அறியாமையையும் அஞ்ஞானத்தையும் பார்த்து மிகவும் இலேசமுற்று, அவனுக்கு எப்போதும் கிறிஸ்துவினுடைய ராஜிப்பின் விசேஷங்களைக் கூறிவந்தாள்; அவன் தன் சகோதரியினுடைய பக்தி வைராக்கியத்தையும் உத்தம நடக்கையையும் கண்டு கிறிஸ்துமதமே சத்தியமார்க்கமென்று நிச்சயித்துக்கொண்டானும், இன்னும் அவனுக்கு உலகபாசங்களை அறுத்துத்தள்ள மனமுண்டாகவில்லை; இப்படி இருக்குங்காலத்தில் அத்தேசத்தில் கடும்பஞ்சமும் கொள்ளை நோயும் உண்டாயிற்று; அப்போது அவனுடைய சகோதரி தீ கிறிஸ்தவர்களுடைய தேவனை நோக்கிப் பிரார்த்தனை செய்தால் உன் தேசத்திலுண்டாயிருக்கும் இந்தப் பிடைகள் நீங்கிப்போகும் என்றாள்; அவன் தன் சகோதரியினுடைய புத்திமைக்கேட்டு அப்படியே செய்யப் பஞ்சமும் வியாதியும் பறந்துவிட்டன; அப்பால் அவன் கொன்ஸ்தாந்தினோபுரியிலிருந்து கிறிஸ்துமார்க்க குருமார் தன் தேசத்துக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டதின்பேரில் சந்நியாசிகளாயிருந்த இரண்டு, மெதோடியு என்னும் இரண்டு சகோதரர் பல்கேரியா தேசத்துக்குப் போய், கிறிஸ்துமார்க்கத்தை பக்திவைராக்கியத்துடன் கூறினார்கள்; அதை அவ்வரசனும் அவன் குடிகளும் அனுசரித்துக் கொண்டு 861-ம் வருஷத்தில் சபையிற் சேர்ந்தார்கள். இந்த அரசன் தானும் தன் பிரபுக்களும் கேட்டையாவதுபோல் ஒரு சித்திரம் வரையும்படி மெதோடியுவுக்குக் கட்டளையிட்டார். சந்நியாசியோ அரசன் சொன்னதை வரையாமல் கடைசி நியாயத்தீர்ப்புநாளில் மனிதர் யாவரும் கிறிஸ்து மகாராஜாவாகிய நியாயாதிபதிமுன் கை கட்டி நிற்கும் பாவனையாய் வரைந்து சாதுரியமாய் அதின்பேரில் பிரசங்கமும் செய்தார். அரசன் இக்காட்சியை இதற்குமுன் பார்த்ததேயில்லை; இப்படிப்பட்ட பிரசங்கம் கேட்டதுமில்லை. உடனே பயந்து மிகமிகவி, தனக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டான்.

இப்படி இந்த நூற்றாண்டில் கிறிஸ்துமார்க்கம் பல்கேரியாதேசத்தில் பிரசித்தமானதுமன்றி, தென்மார்க், சுவீடன், ருஷ்யா முதலான தேசங்களிலும் அது அதிகமாய்ப் பரவிவந்தது. சார்லமென் என்னும் ராஜனுடைய குமாரனாகிய லூயி என்பவர் அரசாளி செய்துவருங்காலத்தில், தென்மார்க்தேசத்தின் சிற்றரசர்களில் ஒருவனாகிய ஹாரல்ட் என்பவன் தன் ராஜ்யத்தைப் பறிகொடுத்துவிட்டு, லூயி என்னும் ராஜனிடத்தில் வந்து தனக்கு அபயாஸ்தம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டான்; அதற்கு அவர் நீ கிறிஸ்துமார்க்கத்தை ஏற்றுக்கொள்வதுமன்றி, அது உன்னுடைய ராஜ்பத்தில் பிரபலமாவதற்கு வேண்டிய அநுகூலங்களையும் செய்வாயேயானால் உனக்கு நான் உதவி செய்வேன் என்று சொன்னதின்பேரில், ஹாரல்ட் என்பவன் மெயின்ஸ்பட்டணத்தில் ஞானஸ்நானம்பெற்றுச் சபையைச் சேர்ந்தான்; இது 826-ம் வருஷத்தில் நடந்தது. பிற்பாடு அவன் தன் தேசத்துக்குத் திரும்பிப் போகும்போது, அன்ஸ்காரியு, அத்பர்ட் என்னும் இரண்டு சந்நியாசிகளைத் தன்னோடேகூட அழைத்துக் கொண்டு போனான்; அவர்கள் தென்மார்க்தேசத்தில் கிறிஸ்துவின் இரக்ஷணமதத்துவங்களைப் பக்திவைராக்கியத்துடன் கூறினமையால் அநேகர் கிறிஸ்துமார்க்கத்தை ஏற்றுக்கொண்டார்கள்; 829-ம் வருஷத்தில் சுவீடன்தேசத்திலுள்ள ஜனங்களில் அநேகர் தங்களுக்குக்

Spread of the Gospel in Denmark, Sweden and Russia.

இறிஸ்துமார்க்கத்தை அறிவிக்கும்பொருட்டு ஒரு போதகர் வேண்டுமென்று கேட்டுக்கொண்டபடியினாலே, அன்ஸ்காரியு என்பவர் அத்தேசத்துக்குப் போகும்படி புறப்பட்டார்; இவர் 800-ம் வருஷம் பிறந்தார். இவர் தாய் நேர்த்த உத்தமி. இவள் கர்த்தருக்குத் தன் மகன் ஊழியஞ்செய்யத்தீர்மானித்து, பக்தியின் பாதையில் அவனை வளர்த்து வந்தாள். பின்னே இத்துவஜதாயிருக்கையில் தாய் மரித்துப்போக அன்ஸ்காரியு ஒரு பன்னிக்கூடத்தில் வளர்ந்துவந்தார். இவர் கண்ட இரண்டு சொப்பனம் இவர் ருஷப்படுவதற்குக் காரணமாயிருந்தது. ஒன்றில் இவர் தன் தாயைக் கண்டு, என்னிடம் வரவேண்டியானால் கர்த்தருடைய வழியில் நடவென்றும், இன்னொன்றில் தேவதூதன் வந்து, இப்போது போகலாம், இனிமேல் என்னைப் பார்க்கும்போது ஜீவகிரீடத்தைப் பெற்று நிற்பாய் என்றும் கண்டார். கடைசியில் ருஷப்பட்டு, ஞானஸ்நாட் சேட்டுக்கொள்ளுதலின்படி போகும் வழியில் அவருக்கு அநேக விக்கினங்களும் ஆபத்துகளும் சோரிட்டபோதிலும், தேவகடாக்ஷத்தால் அவைகளுக்கெல்லாம் அவர் தப்பி சுவிடன்தேசம் போய்ச் சுகத்தோடே சேர்ந்தார்; அத்தேசத்து அரசன் அவருக்குச் செய்யவேண்டிய உபசாரங்களைச் செய்து, தன் இராஜியத்தில் இறிஸ்துமார்க்கத்தைத் தடையின்றித் தன் குடிகளுக்குப் போதிக்கலாமென்று உத்தரவு கொடுத்தான்; அப்படியே அவர் சுவிசேஷத்தை ஜனங்களுக்கு அல்லும்பகலும் விடாமுயற்சியாய்ப் பிரசங்கித்து, அத்தேசத்தில் ஒரு பெரிய சபையை காட்டினார்; இப்படி அவர் கூடாத சுகத்தையும் ஜீவனையும் பாராமல் அறியாமையில் அமிழ்ந்தியிருந்த ஜனங்களுக்கு கண்மை செய்யவேண்டுமென்பதையே கருதி, அவர்களுக்கு மோட்சமார்க்கத்தைக் காட்டிக் கிறிஸ்துவின் திருவடிச் சம்பந்தராகும்படிச் செய்தபடியால், அவர் ஏறப்பார்க்கப்பட்டணத்துச் சபைக்குக் கிரேஷ்ட அத்தியக்ஷராகுநர்; 849-ம் வருஷத்தில் அவருக்கொரு பெரிய ஆபத்து சோரிட்டது. நார்மனர் என்னும் அஞ்ஞான ஜனங்கள் ஏறப்பார்க்கப்பட்டணத்தில் புகுந்து கொள்ளையடித்து, அவருடைய பொருளையெல்லாம் தட்டிப் பறித்துக்கொண்டு போய்விட்டார்கள்; அப்போது அவர் கடவுளைப்பார்த்து சோர்ந்துகொள்ளாமல், பலிபாய்க் கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார் என்றுரைத்து தேவனைப்பார்த்துப் பிரார்த்தனைசெய்யாமல் ஒரு காரியத்தையும் தொடங்கமாட்டார்; இப்படி அநேககாலமாய்க் கிறிஸ்தராகி

Labours of Anscarius. He dies, A.D. 800—865.

கருக்கு வைராக்கியத்துடன் ஊழியஞ்செய்து, 865-ம் வருஷத்தில் தமது ஜீவஓட்டத்தைச் சமாதானத்துடன் முடித்துப் பரிபூரண லோகஞ் சேர்ந்தார்; இவைகளே எல்லாம் கவனிக்குங்கால், அரியமையுள்ள இந்த நூற்றாண்டிலும் இறிஸ்துசகோதரின் அடியார்கள் அநேகர் இருந்தார்கள் என்றும், அவர்கள் தங்களுடைய அரிய பிரயாசங்களினாலும், பெரிய முயற்சிகளினாலும், உத்தம கடத்தைகளினாலும் இந்த இருள் சூழ்ந்த பூமியில் பெருஞ் சுடர்களைப்போல் பிரகாசித்தார்களென்றும் அறிந்து, தேவனை அதிபக்தி வினயத்துடன் ஸ்தோத்திரஞ்செய்வோமாக.

QUESTIONS ON NINTH CENTURY.

ஒன்பதாம் நூற்றாண்டின் சரித்திரத்தின்பேரில் கேள்விகள்.

1. இந்த நூற்றாண்டில் இறிஸ்தசபையின் நிலைமை என்ன?
2. கிரேக்சபை லத்தின்சபையிலிருந்து பிரிந்ததற்குக் காரணமென்ன?
3. கிரேக்சபையின் முன்னிய உபதேசங்களில் குறைந்தது பன்னிரண்டு எழுதவும்.
4. ஸொடியு என்பவனைப்பற்றித் தெரிந்ததையெல்லாம் விபரமாய் எழுதுக.
5. இந்த நூற்றாண்டில் இங்கிலாந்துதேசத்தில் இராஜாவாயிருந்த பெரியவர் ஒருவனைப்பற்றிச் சுருக்கமாய் எழுதும்.
6. பல்கேரியா, தென்மார்க்தேசத்தில் இறிஸ்துமார்க்கம் ஆரம்பித்த விதமென்ன?
7. அன்ஸ்காரியு என்பவனைப்பற்றி என்ன தெரியும்.
8. 816, 866, 817, 849, 861, 865-ம் வருஷங்களில் என்ன விசேஷம்?

பத்தாம் நூற்றாண்டு.

திருச்சபையின் நிலைமை. கருக்குடைய கொடூரம். போமை, கிரேக்குசபைகளின் வித்தி. போமன்சபையைச் சீர்ப்படுத்த மகா ஒதோஷியன் செய்த முயற்சி. கால இயற்கையைப்பற்றி அரிஸ்டாட்டில் என்பவர் சொல்லியது. கிரேக்குபட்டணத்துக் கிரேஷ்ட அத்தியக்ஷராகிய அதல்பர்ட் போ.

லாந்து, ஜெர்மார்க், ஸவீடன் தேசங்களில் ஸுவிசேஷம் பிரபலமாகுதல். ஜெர்மார்க்தேசத்தில் உண்டான ஸபையின் ஸ்திதி. ரோமாபுரி சத்தில் திரிஸ்துமார்க்கம் பிரபலமாகுதல். ரோமா என்பதன் திரிஸ்துமதத்தை அனுசரித்தல். ஹங்கேரியர் குளப்படுதல். ருஷியாதேசம் திரிஸ்தமான ஜாக்யமாகுதல். இந்த நூற்றாண்டில் விசேஷமாய் ஸ்திரீகளால் திரிஸ்துமார்க்கம் பிரபலமாகுதல். பொல்லாத ஸ்திரீகளால் உலகத்திற்குண்டான தீமை. உத்தமஸ்திரீகளாலுண்டான நன்மை. இந்த ஸ்திரீகளுக்குக் கூறப்படும் புத்திமதிகள்.

இந்த நூற்றாண்டிலிருந்த அந்தகாரத்தைப்போல, வேறெந்தக்காலத்திலும் இல்லை. கடல் கொந்தளித்தாலே ஆகோரமாய் எழும்பிப் படவை மூடும் சமயத்தில், திரிஸ்துநாதர் நித்திரைசெய்கிறவர்போலிருந்தார் என்றும், அவருடைய சேஷர்கள் எல்லாரும் தூங்கிக்கொண்டிருந்தமையால் அவரை எழுப்புவார் ஒருவரும் இல்லையென்றும் ரோமச்சபையின் சரித்திரத்தை எழுதின பரோனியு என்பவர் அக்காலத்தின் கொடுமையைப்பற்றி உபமானமாய்ச் சொல்லுகிறார்; இந்த நூற்றாண்டிலிருந்த பாப்புகள் ஒரு சிட்ட ஜாட்சதசேயன்றி மனிதர்களில்லவென்றும், மகத்தான பாதகங்களோப் புரிந்த கண்டனர் என்றும் மோஷிம் என்பவர் எழுதியிருக்கிறார்.

Remarks of Baronius on the state of the Church.

மேற்கே சார்மனர் என்னும் ஜாதியாராலும், கிழக்கே துருக்கர் என்னும் ஜாதியாராலும், சபைக்குண்டான சகல கடம் கொஞ்சமல்ல; துருக்கர் எனப் பெயர் பெற்றவர்கள் கஸ்பியன் கடலோரமாய் வாசஞ் செய்த ஒரு துஷ்ட ஜாதியார்; அவர்கள் மகமதுமார்க்கத்தை அனுசரித்தவர்களாயும், சரசேனருடைய அரசாட்சிக்குள்ளிருந்த தேசங்களைக் கட்டிக்கொண்டு திரிஸ்தவர்களுக்கு வெகு இம்சை செய்தவர்களாயுமிருந்தார்கள். இங்கிலாந்துதேசத்திலும் பிரான்ஸ்தேசத்திலுமிருந்த திரிஸ்தவர்களின் ஸ்திதி நிற்பத்தமாயிருந்தது. கொஞ்சகாலத்துக்குமுன் திரிஸ்துமதத்தின் சிறப்பும் மேன்மையும் விளங்கின. அத்தேசங்களே இந்த நூற்றாண்டில் அறியாமையும் அந்தகாரமும் மூடியிருந்தன. "நம்மைக் கனம்பண்ணுகிறவர்களைக் கனம்பண்ணுவோம்; ஆனால், நம்மை அசட்டைபண்ணுகிறவர்கள் கனவீனமாவார்கள்" என்று தேவன் அருளின வசனம் மாறாத சத்தியமே. இந்த நூற்றாண்டிலுள்ள திரிஸ்தவர்கள் தேவனைக் கனஞ்செய்யாமலும், அவர் அளித்த அருள்வேதத்தை மதியாமலும் நடத்தலையால், அவர்களை இவ்வளவு இருளும் மருளும் பிடித்திருந்தது.

Cruelties of the Turks.

ரோமாபுரிப் பாப்புகளுடைய வேடிக்கையைச் சொல்லிமுடியாது; அவர்கள் செய்துவந்த துன்மார்க்கங்களுக்குக் கணக்கில்லை; அவர்களில் சிலர் வே[illegible] சிக்கள்ளராயிருந்தார்கள்; சிலர் வேசிகளுக்குப் பிறந்த பிள்ளைகளாயிருந்தார்கள்; அவர்களுக்கிருந்த பெருமையும் அகங்காரமும் இவ்வளவென்று சொல்லிமுடியாது; உலகத்தில் தங்களுக்குச் சமானமானவர்கள் ஒருவருமில்லையென்று நினைத்தார்கள். ஐயோ! திரிஸ்துவின் அடியார்கள் என்று பெயர்பெற்றவர்கள் இப்படியெல்லாம் நடக்கும்போது எப்படியிருக்கும்? சபையிலே சத்தியம் எவ்வாறு பரிமளிக்கும்? சத்தியமூர்த்தியாகிய கடவுள் இப்படிப்பட்டவர்களுக்குத் தமது அருளை எப்படிக் கடாக்ஷிப்பார். ரோமச்சபைதான் இப்படி, இரேக்கசபை கூடியளவில் கல்லஸ்திதியிலிருந்ததல்லவோ என்றால், அதுவும் அப்படியே தாழ்வானஸ்திதியிலேயே இருந்தது. "ஒரு பானைச்சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பதுபோல், இதற்குத் திருஷ்டாந்தமாக கொன்ஸ்தந்தினோபுரிக் கன்காணியாகிய தியோபிலாற்று என்பவருடைய நடக்கையைச் சொல்லலாம்; இவர் கோவில் மாணியங்களை விற்று இரண்டாயிரம் வேட்டைக்குதிரைகளை வாங்கி அவைகளை லாபங்களில் கட்டிக்கொண்டு, அவைகளுக்கு வேர்க்கடலை பேரீச்சம்பழம் முந்திரிகைப்பழம் முதலான சுவையுள்ள பதார்த்தங்களை அதிக சேர்த்தியான திராட்சரசத்தில் ஊறவைத்து வாசம் கட்டி, பிரதிதினம் அக்குதிரைகளுக்கு ஊட்டிவராம். ஒருநாள் அவர் கோவிலிலிருந்து ஆராதனைசெய்யும்போது, ஒரு குதிரை குட்டிபோட்டதாக ஆள் வந்து சொல்ல, அவர் ஆநந்தபரவசமடைந்து ஆராதனையை விட்டுப் போட்டலாயத்துக்கு ஓடிக் குதிரைக்குட்டியைப் பார்த்துப் பெருஞ்சந்தோஷமடைந்து மறுபடியும் கோவிலுக்குப்போய் ஆராதனையை முடித்தாராம்; இது நிஜமென்றால் இதைப்போலொத்த அக்கிரமத்தை உலகத்தில் எங்கே பார்க்கலாம்.

State of the Roman and Greek Churches.

இவ்விதமாய் இரேக்கசபையிலும் ரோமச்சபையிலும் உண்டாயிருந்த அந்தகாரமும் அவபக்தியும் அதிகமாயிருந்தது; ரோமாபுரிப் பாப்புகளுடைய பெருமையைத் தாழ்த்தும்படி சில ஆசார்கள் பிரயத்தனஞ்செய்தார்கள். சார்லமென் என்னும் சக்கரவர்த்தி காலஞ்சென்றபிற்பாடி அவருடைய ஜாஞ்யம் இரண்

Efforts of Otho the Great to reform the Roman Church, A.D. 952.

டாகப் பிரித்தது. பிரான்ஸ்தேசத்தில் ஒரு இராயனும், ஜர்மனி தேசத்தில் ஒரு இராயனுமிருந்து அவ்விராஜ்யங்களை ஆண்டுவந்தார்கள். ஜர்மனிதேசத்து அரசர்களில் மகா ஓதோ என்பவர் பெயர் பெற்றவராயிருந்தார்; இவர் வித்தையில் தேர்ந்தவராயும், ஜனங்களுக்குள் கல்வி விர்த்தியாகவேண்டுமென்ற ஆவேட்சையுள்ளவராயுமிருந்தார்; இவர் ரோமாபுரிப் பாப்புகளுடைய துன்மார்க்கத்தையெல்லாம் பார்த்துக் கிலேசித்து, அவர்களை எவ்விதத்திலும் அடக்கவேண்டுமென்று நினைத்து, 952–ம் வருஷத்தில் ரோமாபுரிக்குப் போய் அங்குள்ள ஜனங்கள் ஒழுங்காய் நடக்கும்படி கண்டிதமான ஏற்பாடுகளைச் செய்து, பாப்புபட்டத்தைப் பணத்துக்கு விற்கிற கொடிதான வழக்கத்தை நிறுத்தி, இனிமேல் அரசர்களுடைய அனுமதியில்லாமல் அப்பட்டத்தை ஒருவருக்கும் கொடுக்கக்கூடாதென்று ஆக்ஞாபித்தார். ஓதோ என்னும் அரசனுலே இப்படிப்பட்ட சட்டங்கள் ஏற்பாடாயிருந்தமையால், ரோமச்சபையில் புறம்பான விஷயங்களில் ஒருவாறு ஈரும் ஒழுங்கு முண்டாயிருந்தது; ஆயினும், 973–ம் வருஷத்தில் ஓதோ என்பவர் மரித்துப்போக அதில் தன்னரசு நாடுபோல் பழையபடி ஒழுங்கீனமும் துன்மார்க்கமும் பெருகிற்று.

Observations of Arnulph on the degeneracy of the times.

ரோமச்சபைக்குள்ளிருந்த சீர்கேட்டைப் பார்த்து, ஆர்லியன்ஸ் பட்டணத்துக் கண்காணியாகிய அர்னல்ப்என்பவர் மூறையிடுகிறார்; அவர் றீமஸ்பட்டணத்தில்கூடினதொருசங்கத்துக்குஅதிராசனுதிபதியாயிருந்தார்; அச்சபையில் அவர் பண்ணின பிரசங்கத்தில், "ஐயோ, ரோமாபுரியே! முன் எங்கள் பிதாக்கள் காலத்தில் உனக்குள் எரிந்த பிரகாசிக்கிற தீபங்களை விளக்குகளிருந்தன; இப்போதோ அந்தகாரமும் அக்கிரமமுமன்றி உன்னிடத்தில் வேறொன்றையும் காணுமே; நாங்கள் உன் காரியத்தை என்ன வென்று சொல்லப்போகிறோம்; கனிகொடாத அத்திமரமிருந்ததாகவும், அது கனிகொடுக்குமென்று கடவுள் அதைப் போற்றி வளர்த்ததாகவும், பொறுமையாய்க் காத்திருந்ததாகவும் அருள்வேதத்தில் கூறியிருக்கிறது; அதுபோல் நாங்களும் உன் கண்காணிகளிடத்தில் பொறுமையாயிருக்கிறோம்; எங்களுக்கு வேண்டிய ஞானபோஜனத்தை உன்னிடத்தில் அல்ல, மற்ற இடங்களில் தேடவேண்டியிருக்கிறது; எங்களுக்குச் சமீபமாயிருக்கிற பெல்ஜியம்தேசத்திலும், ஜர்மனிதேசத்திலும் அநேக உத்தம போதகர்கள் இருக்கிறார்கள்; அரசர்களுடைய தயை ஒன்றில்லாவிட்டால், நாங்கள் இப்படிப்பட்ட பக்தர்களிடத்துக்கு எங்கள் வழக்குகளைக் கொண்டுபோவோமேயன்றி, உன்னிடத்துக்கு வரமாட்டோம். உன் கண்காணிகள், "பணமெல்லாம் பிணமும் வாய்திறக்கும்" என்பதுபோல், பணத்தை வாங்கிக்கொண்டு ஒரு விவகாரத்தைத் தீர்க்கிறதேயன்றி, மற்றப்படி அதற்கு எற்படுகிறதில்லை; இச்சபையிலிருக்கிற பெரியோரே! வஸ்திராபரண வலங்கிருதராய் ஆசனத்திலிருக்கும் பாப்புவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவருக்குள் இயேசுகிறிஸ்துகாரிடத்தில் விளங்கின சேஷமும் தயாளிக்கையு மில்லாமல், அவர் என்னைவிடக் கெட்டிக்காரன் உலகத்தில் இல்லையென்று பெருமை பாராட்டுவாராகில், அவர் தேவனுடைய ஆலயத்தில் வீற்றிருக்கும் அந்திகிறிஸ்து என்று நிச்சயமாய்த்தானே" என்று சொன்னார்.

State of the Church in England.

இங்கிலாந்து தேசத்திலும் சனங்களின் சீர் அவ்வளவு திருப்திகரமாயில்லை. காண்டர்பரி அத்தியட்சர் (Dunstan) டன்ஸ்டன் சந்நியாசக் கொள்கையை அதிகம் நிலைநாட்டப் பார்த்ததால் அவருக்குச் சந்நியாசிகளின் பிதாவென்று பேர்வந்தது. இந்த நூற்றாண்டில் 48 சந்நியாச மடங்கள் ஏற்பட்டது. டன்ஸ்டன் 925–ம் வருஷம் பிறந்து, 988–ம் வருஷம் காண்டர்பரியின் பிரேஷ்ட அத்தியட்சர் ஆனார். இவரால் உண்டான ஏற்பாடுகள் பாப்புமார்க்கத்துக் நிகரானது. இதில் விசேஷித்த எவையென்றால், ஒரு குழந்தை பிறந்த ஏழாம் மாதத்திற்குள் ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும். விசுவாசப்பிரமாணம், கர்த்தருடைய ஜெபம் சொல்லத்தெரியாத வன் கர்த்தருடைய போஜனத்திற்கு வரவுபடாது; தெரிந்தவன் தட்டாமலும் இல்லை. பாவஅறிக்கை, பாவவிமோசனம் கட்டாயமாய் யாவரும் செய்யவேண்டும் என்பதே.

General Reflections.

இவைகளெல்லாம் உற்றாராய்ந்தால், சபையில் தேவபக்தியும் உத்சாகமனமும் மிகவும் குறைவாயிருந்ததென்று சொல்லவேண்டியிருக்கிறது; ஆயினும் உலகத்தின் முடிவுபரியந்தம் சதாகாலங்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்ற திருவாக்கருளின சத்திய மூர்த்தியாகிய இயேசுநாதர், இந்த நூற்றாண்டிலும் தமது சபைக்கு வேண்டிய அருளைக் கடாக்ஷியாமலிருக்கவில்லை; அவரது அடியார் இந்த நூற்

றுண்டிலும் அநேகர் இருந்தார்கள்; களையும் முளையும் விஸ்தாரமாய்ப் படர்ந்திருக்கும் தோட்டத்தில் இங்குமங்கும் சில புஷ்பங்கள் கண்ணுக்கு இன்பமாயிருப்பதுபோல், காரிருள் மூடியிருந்த இந்த நூற்றாண்டிலும் கிறிஸ்துநாதருடைய அடியார் இங்குமங்கும் சிதறியிருந்தார்கள்.

Adalbert, Archbishop of Prague, A.D. 956.

இந்த நூற்றாண்டிலும் கிறிஸ்துமதத்தை பத்திவைராக்கியத்துடன் ஊடாந்தகாரம் நிறைந்த ஜனங்களுக்குக் கூறிவந்த உத்தம போதகர்கள் அநேகர் இருந்தார்கள்; அவர்களில் அடால்பற்று என்பவர் சிரேஷ்டமானவர்; இவர் 956-ம் வருஷத்தில் பிறந்தவர்; பிரேக் பட்டணத்துச் சபைக்குப் பிரதான கண்காணியாயிருந்த டயத்மார் என்பவர் இறந்துபோன பிற்பாடு, இவருக்கு அந்தப் பட்டம் வந்தது; டயத்மார் என்பவர் மரிக்கும் சமயத்தில் இவர் கூட இருந்தார்; அவர் தமது கடமைகளை உண்மையோடும் ஜாக்கிரதையோடும் நிறைவேற்றுகிறவரானதால், சாகும்போது அதைப்பற்றி நினைத்துத் துக்கமாய் அழுது, ஐயோ! என் காலத்தை வீணுக்குக் கழித்துவிட்டேனே என்று புலம்பிக்கொண்டு ஜீவனை விட்டார்; அடால்பற்று என்பவர் அதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தார்; அன்றுமுதல் அவர் முகத்திலே சந்தோஷமிருந்ததில்லை; என்ன நடந்தாலும் சிரிக்கவேமாட்டார்; ஏன் அவரைப் பார்த்து நீர் எப்போதும் துக்கமாயிருக்கிறீரென்றி சந்தோஷமாயிருக்கவில்லையே; அதற்குக் காரணம் என்னவென்று கேட்க: அவர் கண்காணி உத்தியோகத்தையும் மேன்மையையும் பெற்றுக்கொள்வது எளிது; ஆயினும் கடைசியில் சர்வலோக நியாயாதிபதிக்கு முன்னின்று அதற்குக் கணக்கொப்புவிப்பது அரிது; அதை நினைக்கும்போது நடுக்கமுண்டாகிறது என்றார். அவர் பொஹீமியா தேசத்துக்குப் போய், அஞ்ஞான இருள் மூடின அந்த ஜனங்களுக்குக் கிறிஸ்துவின் இரட்சிப்பின் அதிசயங்களைக் கூறினார்; ஆயினும் அங்கே அவருடைய முயற்சிகள் தித்தியாகாமலிருந்தமையால், அவர் அதை விட்டுப் புறப்பட்டுப் போலாந்துதேசத்துக்குப் போய், அங்கே சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்; அநேக ஜனங்கள் அதைக் கேட்டு, கிறிஸ்துமதமே சத்தியமார்க்கமெனத் தெளிந்து அதை அனுசரித்துக்கொண்டார்கள்; இப்படி அவர் காற்பது வருஷகாலமாய்க் கிறிஸ்துநாதருக்குப் பக்திவைராக்கியத்துடன் ஊழியஞ்செய்து, 997-ம் வருஷத்தில் சில துஷ்ட ஜனங்களாலே

கொலையுண்டு பொன்னகர் வாசியானார்; அவருக்கு "புருஷ்யா தேசத்து அப்போஸ்தலன்" என்ற சிறந்த நாமமுண்டாயிற்று. இவருடைய சொந்தப்பெயர் (Woztiech) வீத்தேக் மாக்டபர்க் அத்தியட்சராகிய அடால்பற்று என்பவர் இவருக்கு உவாத்தியாயராயிருந்ததால் மாணுக்கனுக்கும் இந்தப் பேர் கொடுக்கப்பட்டது. இவருடைய சரீரத்தை 1039-ம் வருஷம், பிரேக் நகரத்துக்குக் கொண்டுபோய் நல்லடக்கம் செய்தும், கோவிலும் கட்டப்பட்டது.

அறியாமையும் அஞ்ஞானமுமாயை இருள் மூடியிருந்த போலாந்துதேசத்தில், இவ்விதமாய்க் கிறிஸ்துமார்க்கத்தின் ஒளி பிரகாசிக்கத் தொடங்கிற்று; அத் தேசத்து ஜனங்களில் சிலர் டொஹீமியா மோரேவியா என்னும் தேசங்களுக்குப் போய், கிறிஸ்துமார்க்கத்தைக் கேட்டு, அதன் மேன்மையையும் நிறப்பையும் பார்த்து மிகவும் வியந்து, தங்கள் தேசத்துக்குத் திரும்பிவந்து அதை மற்றவர்களுக்குக் கூறினார்கள்; அத்தேசத்துக்கு மிஸ்லேவ என்பவன் அரசனாயிருந்தான்; அவன் பொஹீமியாதேசத்து இராஜபிரபுவாகிய பாலிஸ்லேயு என்பவனுடைய புத்திரியாகிய (Dambrowka) டம்பிரவக்கா என்பவளை மணம்புரிந்தான். அவன் கல்வி பதிவிரதையாயும், கிறிஸ்துமதத்தில் அபிமானங் கொண்டவளாயு மிருந்தமையால், தன் புருஷனுக்குக் கிறிஸ்து சகலரைப்பற்றியும், அவர் அருளும் போன்ப வாழ்வைப்பற்றியும் தயாபல் பேசிவருவாள். அதை அரசன் கேட்டு அவள் சொன்னதே சத்தியமெனத் தெளிந்து, ஏழு பெண்சாதிகளுக்குப் புருஷனாயிருந்த அவன், தான் செய்த துன்மார்க்கங்களையெல்லாம் விட்டுவிட்டு, 965-ம் வருஷத்தில் கிறிஸ்துமார்க்கத்தை அனுசரித்து ஞானஸ்நானம் பெற்றான். அதுமுதல் அவனும் அவன் பத்தினியாகிய டம்பிரவக்கா என்பவளும் அத்தேசத்துக் குடிகளெல்லாரும் கிறிஸ்துமார்க்கத்தின் சத்தியக்களை அறியும்பொருட்டு கேண்டிய முயற்சிகள் செய்தனர்; அவர்களெல்லாரும் அதைக் கேட்டுக் கிறிஸ்துமதத்தை எற்றுக்கொண்டார்கள்; அதுமுதல் போலாந்துதேசம் கிறிஸ்துமார்க்க இராஜ்யமென்ற பெயர்பெற்றது.

Spread of the Gospel in Poland.

இந்த நூற்றாண்டின் கடைசியில் இங்கிலாந்துதேசத்தில் (Elfric) நல்பிரிக் என்னும் வித்துவானிருந்தார். இவர் சத்தியவேதப் பங்குகளைக் கயபாஷையில் திருப்பி, பிரசங்கங்கள், சபை கூட்டதிட்டங்கள் முதலியதன்ற உண்டாக்கி, குருமார் விவாகம் செய்யப்படாதென்றும்,

பரிசுத்தவான்களை நோக்கி ஜெபம் செய்வது கல்லதென்றும் போதித்தார். பாப்புவின் அதிகாரத்தைப்பற்றி அவர் எழுதிய ஒரு சங்கதியாகதை கார்பாயில்லை. இவர் உண்டாக்கிய சட்டங்களில் சபை உத்தியோகஸ்தர் ஏழுவருப்பைச் சேர்த்தவர்களென்று சொல்லுகிறார்; எப்படியென்றால், (1) வாசல் காக்கிறவர்கள், (2) பிசாசு துரத்துகிறவர்கள், (3) வேதபாடம் சாஸ்திரிகள், (4) விளக்குத் காட்டுகிறவர்கள், (5) உதவிக் குருமாருக்கு உதவிசெய்கிறவர்கள், (6) உதவிக் குருமார், (7) குருமார், கண்மாணிமார், பிரேஷ்ட கண்காணிமார் என்பவர்களே.

Propagation of Christianity in Denmark.

போன நூற்றாண்டில் தென்மார்க்தேசத்திலும் சுவீடன்தேசத்திலும் அன்ஸ்காரியு என்னும் உத்தமபோதகரால் கிறிஸ்துமார்க்கம் பிரசித்தமாயிற்றென்று சொல்லியிருக்கோம்; அதற்குப் பிற்பாடி அத்தேசத்துக்கு இராஜாவாயிருந்த மூன்றாம் கார்போ என்பவன் கிறிஸ்துமார்க்கமென்ற பெயர்முதலாய் தன் இராஜ்யத்தில் இருக்கக்கூடாதென்று நிர்மானம்பண்ணி அதற்சேற்ற முயற்சிகளைச் செய்துவந்தான்; அவனுடைய பத்தினியாகிய தைரான் என்பவள் அவனைத் தடுக்கும்படி பிரயாசப்பட்டபோதிலும் பலிக்கவில்லை; அதை நார்மனிதேசத்து அரசனுடைய ஹென்றி என்பவன் கேட்டுத் தன் சேனையுடன் தென்மார்க்தேசத்துக்குப் போய், ஜனங்களெல்லாரும் கிறிஸ்து சமயத்தை அங்கீகரிக்கவேண்டுமென்றும், இராஜன் அதற்கு யாதொரு வகையிலும் தடைசெய்யக்கூடாதென்றும் கண்டிதமான ஏற்பாடுகள் செய்தான்; இப்படியிருக்கும் காலத்தில் ஹாம்பர்க்பட்டணத்துப் பிரேஷ்ட அத்தியக்ஷராகிய அன்னி என்பவர் தென்மார்க்தேசத்துக்குப் போய், கிறிஸ்துவின் இரகஸ்யமதத்துவங்களைக் கூறி, அந்தே ஒரு பெரிய சபையை நாட்டினார்.

Spread of the Gospel in Sweden.

பின்பு அன்னி என்பவர் சுவீடன்தேசத்துக்குப் போய், அவ்விடத்திலும் கிறிஸ்துமார்க்கத்தை உண்மையோடும் பக்திவைராக்கியத்தோடும் பிரசங்கித்து, அநேகருக்கு ஞானஸ்நானத்தைக் காட்டி, 936-ம் வருஷத்தில் சேவியோமரணர்; கொஞ்சக்காலத்துக்குப்பின் அத்தேசத்துப் பிரபுக்களில் சிலர் கிறிஸ்துமதத்தை அழித்துப்போடவேண்டுமென்று நிர்மானித்து, கிறிஸ்துமார்க்கப் போதகர்களையாவரை அத்தேசத்திலிருக்கக்கூடாதென்று தடைசெய்துவிட்டு, அச்சமயத்துக்குச் சார்பாயிருந்த இராஜனையும் கொன்று, இப்படி வெகு கொடுமைகளைச் செய்தார்கள்; ஆயினும் அந்த இராஜாவின் குமாரனுகிய இரண்டாம் ஓலால் என்பவர் பட்டாபிஷேகம் பெற்றமாத்திரத்தில், கிறிஸ்துமார்க்கத்தைப் பிரசித்தஞ்செய்யவேண்டுமென்று வைராக்கியங்கொண்டு, அதைத் தம்முடைய இராஜ்யமெங்கும் பிரசங்கிக்கும்படி வேண்டிய பிரயத்தனங்கள் செய்துவந்தார்; அநேகர் அதைக் கேட்டுக் கிறிஸ்தவர்களானார்கள்.

223 பத்தர்ம் நூற்றாண்டு.

State of religion in Denmark.

இப்படி இந்த நூற்றாண்டில் தென்மார்க் தேசத்திலும் சுவீடன் தேசத்திலும் கிறிஸ்துமார்க்கம் வெகுவாய்ப் பரம்பிவந்தது; தென்மார்க்தேசத்தில் அம்மார்க்கத்தை அழிக்கவேண்டுமென்றிருந்த கார்போ என்னும் இராஜன் இறந்துபோனபிற்பாடி, அவன் பட்டத்துக்கு வந்த ஹாரால்ட் என்னும் அரசன் கிறிஸ்துமதத்தில் அபிமானங்கொண்டு, அது தன் இராஜ்யமெங்கும் பிரசித்தமாகவும், தன் குடிகளுக்குள் நல்லொழுக்கமும், தேவபக்தியும் உண்டாகவுந்தக்க முயற்சிகள் செய்தான்; ஆயினும் அவனுடைய குமாரனுகிய (Suen Otho) சுவன் ஓதோ என்பவன் அத்தேசத்துப் பிரபுக்களோடே சேர்ந்துகொண்டு, கிறிஸ்துமார்க்கம் பிரபலமாகாதபடிக்கு இடையூறு செய்தான்; என்றாலும் அவர்கள் பிரயத்தனங்கள் ஒன்றும் சித்தியாகாமலிருந்தமையால் அவர்கள் அரசனைக் கொன்றுபோட்டு, அவன் குமாரனுகிய சுவன் ஓதோ, என்பவனை அவன் பட்டத்துக்கு ஏற்படுத்தினார்கள்; இவன் கிறிஸ்துமார்க்கத்தை சர்வாசஞ் செய்யும்படியாயும், அஞ்ஞானமார்க்கத்தை ஸ்தாபிக்கும்படியாயும் வெகுவாய்ப் பிரயாசப்பட்டான்; கொஞ்சக்காலம் சென்றபிற்பாடி அவன் தன் காட்டையும் பதியையும் இழந்து, ஸ்தொத்லாந்து தேசத்தில் ஒரு அரசியைப்போல் நிர்ப்பந்தஸ்திதியிலிருந்தான்; அப்போது அவன் மனசே இராஜாவைப்போல் தான் செய்த தன்மார்க்கத்தை நினைத்து, தேவனுக்கு முன்பாகத் தன்னை வெகுவாய்த் தாழ்த்தித் தக்கப்பட்டதினாலே, மறுபடியும் அவனுக்கு முன்போல் இராஜபட்டமும் அதிகாரமும் கிடைத்தது; அப்போது அவன் தன் தகப்பனுடைய நற்குண நற்செய்கைகளைச் சிந்தித்து, அவனைப்போல் தன் இராஜ்யமெங்கும் கிறிஸ்துமார்க்கம் பிரபலமாகும்படி வேண்டிய முயற்சிகள் செய்தான்.

இந்த நூற்றாண்டில் கிறிஸ்துமார்க்கத்தின் ஒளி தென்மார்க் தேசத்துக்கு வடக்கேயுள்ள நார்வே தேசத்திலும் பிரகாசித்தது; இவ்விலாது

தேசத்திலுள்ள பொன்ஸ்ட் என்னும் ஒரு போதகர் 912-ம் வருஷத்தில் கார்வே தேசத்துக்குப் போய், சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். ஆயினும் அவருடைய பிரயாசங்கள் ஒன்றும் பலியாகவில்லை; 933-ம் வருஷத்தில் அத்தேசத்து ராஜாவாகிய ஹாகென் என்பவர் இங்கிலாந்து தேசத்திலுள்ள சில போதகன்மாரை அழைப்பித்து, அவர்கள் தன் குடிகளுக்குக் கிறிஸ்துமார்க்கத்தைத் தெரியப்படுத்த வேண்டுமென்று உத்தரவுகொடுத்தார்; அவர்கள் அப்படியே அம்மார்க்கத்தை மகாகீர்த்தியுடன் பிரசங்கித்தபோது, சில ஜனங்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள்; கொஞ்சக்காலத்துக்குப்பின் அத்தேசத்தில் அரசனாயிருந்த ஹாக்கோ என்பவன் தன் இராஜ்யத்தை இழந்ததினால், தென்மார்க் தேசத்து இராஜாவாகிய ஹரால்ட் என்பவனுடைய உதவி தனக்கு வேண்டுமென்று கேட்டான்; அவர் பக்திமானாயிருந்தமையால் கிறிஸ்துமார்க்கத்தின் தன்மையை அவனுக்கு கண்முன் விளக்கிக்காட்டி, அதை அவன் குடிகளுக்குத் தெரியப்படுத்தவேண்டுமென்று சொன்னார். "உப்பிட்டாரை உள்ளளவும் நினை" என்ற பழமொழிப்படி அவர் சொன்ன ஆலோசனையைக் கேட்டு, ஹாக்கோ என்னும் அரசன் தன் தேசத்துக்கு வந்தபிற்பாடு, 945-ம் வருஷத்தில் ஜனங்களையெல்லாம் வருவித்து அவர்களுக்குக் கிறிஸ்துமார்க்கத்தை அறிவித்தான்; ஆயினும் அந்த ஜனங்கள் அறியாமையினும் மூடபக்தியிலும் அமிழ்ந்திருந்தபடியால், தேவன் கடாக்ஷித்த அருள்வேதத்தை அங்கீகரிக்க மனமில்லாதவர்களாயிருந்தார்கள்; இப்படியிருக்கும்போது தென்மார்க் தேசத்து இராஜனுடைய சுவேன் என்பவன் படையெடுத்துப்போய், கார்வே தேசத்தைப் பிடித்து, அந்த ஜனங்களெல்லாரும் கிறிஸ்துமார்க்கத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கட்டாயஞ்செய்தான்; அவர்கள் பூர்வமுதல் வைத்துக் கும்பிட்டுவந்த தார் என்னும் விக்கிரகத்தைக் கோயிலைவிட்டு வெளியே கொண்டுவந்து, அதில் நெருப்புவைத்து தீற்றிவிட்டார்கள்; இப்படியெல்லாம் அவ்வரசன் செய்தது கிறிஸ்துமார்க்கத்துக்கு என்னாளும் பொருந்தாத பெரும்பாதகமாயிருக்கிறது; இந்த நூற்றாண்டில் சுவிசேஷத்தின் ஒளி டென்மார்க், ஸுவீடன், நார்வே என்னும் தேசங்களில் பிரகாசித்தபோல், அதற்கு வடக்கேயுள்ள ஐர்லாண்டு, ஐஸ்லாந்து முதலான தீவுகளிலும் பிரகாசித்தது.

Diffusion of Christianity in Norway.

போன நூற்றாண்டில் நார்வே தேசத்தில் உயர்குலத்தைச் சேர்ந்த ஒரு மனுஷனிருந்தான்; அவனுக்கு ரோலோ என்று பெயர்; அவன் தன் தேசத்தைவிட்டுத் தூரத்தப்பட்டபோது, அநேகஜனங்களைக்கூட்டிக்கொண்டுபோய் பிரான்ஸ்தேசத்துக்குப்போய், கடற்கரையோரமாயுள்ள அநேகம் நாடுகளைக் கொள்ளையடிஞன்; அத்தேசத்து இராஜாவாகிய சார்ல்ஸ் என்பவன் அவனை அடக்கச் சக்தியற்றவனாயிருந்தமையால் 912-ம் வருஷத்தில் அவனை வருவித்து, அவன் கலகஞ்செய்யாமல் கிறிஸ்துமார்க்கத்தை அங்கீகரித்துக்கொண்டால் நார்மண்டி என்னும் நாட்டை தானமாய்க் கொடுப்பதாயும், தன் குமாரத்தியாகிய கைசிலான் என்பவளை விவாகஞ்செய்து கொடுப்பதாயும் வாக்குக்கொடுத்தான்; ரோலோ என்பவன் அதைப் பழம் கழுவிப் பாலில் விழுந்தது போல் எண்ணி, உடனே அதற்கு இணங்கி அவனும் அவன் சேனைபரிவாரங்களைச்சேர்ந்த எல்லாரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள்.

Rollo professes the Christian religion, A.D. 912.

இந்த நூற்றாண்டின் மத்தியில் கிறிஸ்துமார்க்கம் அஞ்ஞானிகளாயிருந்த ஹங்கேரி தேசத்தில் பிரசித்தமாயிற்று; அத்தேசத்துக்கு ஐசா என்பவன் அரசனாயிருந்தான்; அவன் கிறிஸ்தவனாயிருந்த சாமான்றூன் என்பவனை விவாகஞ்செய்ததின்பேரில், அவளுடைய நல்லுபதேசங்களையும் உத்தமநடக்கையையும் பார்த்துக் கிறிஸ்துமார்க்கத்தை அனுசரித்துக்கொண்டதுமன்றி, அம்மார்க்கம் தன் இராஜ்யமெங்கும் பிரபலமாவதற்கு எத்த முயற்சிகளையும் செய்துவந்தான்; அவனுக்குப் பின்னிருந்த ஸ்தேவான் என்னும் இராஜன் அரசாட்சிசெய்துவருங்காலத்தில், அத்தேசமெங்கும் கிறிஸ்துமார்க்கம் முக்கியமாய்ச் சென்றுவந்தது.

Conversion of the Hungarians.

இந்த நூற்றாண்டில் ருஷ்யா தேசமும் கிறிஸ்து சமயத்தை அனுசரித்த இராஜ்யமாயிற்று; 955-ம் வருஷத்தில் அத்தேசத்துக்கு அரசியாயிருந்த அழகாள் என்பவள் கான்ஸ்தாந்தினோபுரிக்குப் போய், சத்தியமார்க்கத்தைக் கேட்டு அதை அங்கீகரித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு ருஷ்யா தேசத்துக்கு வந்து, கிறிஸ்துமார்க்கத்தைப் பிரபலப்படுத்தும்படி வேண்டிய முயற்சிகள் செய்துவந்தாள்; அவளுடைய போஞ்சிய உலோடிமர் என்பவன் ராஜபட்டம் பெற்றபோது அஞ்ஞான அந்தகாரத்தில் அமிழ்ந்தினவனாயிருந்

Russia received a Christian establishment, A.D. 957.

தான்; அவன் கிரேக்க தேசத்து அரசனுடைய சகோதரியாகிய அன்ஞள் என்பவளே மணம்புரிந்தபிற்பாடு அவன் போதனைபைக்கேட்டு, கிறிஸ்துமதமே சத்தியமார்க்கமெனத் தெளிந்து 987-ம் வருஷத்தில் பகியீயு என்ற பெயரால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான்; அதை அவனுடைய குடிகளெல்லாரும் பார்த்து அவர்களும் கிறிஸ்துமார்க்கத்தை அனுசரித்துக்கொண்டார்கள்; அவ்வருஷமுதல் ருஷியா தேசத்துச் சபை கிரேக்கசபையைச் சேர்ந்துபோனதாய் எண்ணலாம்.

The propagation of the Gospel in this Century chiefly attributable to Females.

இந்த நூற்றாண்டில் இப்படிப் பலதேசங்களில் கிறிஸ்துமார்க்கம் பிரசித்தமான வகையை நோக்குங்கால், அது முக்கியமாய் ஸ்திரீகளுடைய பிரயத்தனங்களினாலேயே நடந்துவந்ததென்று அறியலாம். ஸ்திரீகளால் உலகத்துக்கு அநேகம் நன்மைகள் வந்திருக்கின்றன; ஆதியிலே பாபிஷ்டி ஏவாளாலே எல்லாருக்கும் அதிகப் பாடும் துன்பமும் வந்தது யதார்த்தமே; அவள் கடவுளுடைய கற்பனையை மறந்து கனியைத் தின்னப்போய் நந்தவனம்போலிருந்த பூலோகம் பாலைவனம்போல் பாழாய்ப்போயிற்று; அவளாலே சமஸ்த ஜனங்களுக்கும் பாடும் பிணியும் மரணமும் வந்தது; இப்படி அவளாலே அவள் பின்னோகளாயிருக்கிற எல்லா மனிதருக்கும் கஷ்டம் நேரிட்டபோதிலும், அவளாலே அவர்களுக்கு நன்மையும் உண்டாயிற்று; அவளுடைய விதில் உதித்த ஜகத்ரக்ஷகன் பாம்பு சாபம் பசாசு மரகம் என்ற துஷ்ட சத்துருக்களைச் சங்காரஞ்செய்து, அவருடைய திருவடிகளையடைந்த சிஷ்டர்களைப் பரிபாலனம்பண்ணி யருளுகின்றார்; இதைப் பார்க்கும்போது ஸ்திரீயினால் உலகத்தாருக்கு அதிகத் தீமை வந்ததென்றுலும், அவளாலே அவர்களுக்கு நன்மையும் பாக்கியமும் வந்ததென்றும் சொல்லவேண்டியது.

Evil influence of wicked women illustrate.

அநேக ஸ்திரீகளாலே உலகத்திற்குக் கேடுவந்திருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை; ஏசபேல் என்ற ஒரு பெண்பிள்ளையால் அவன் புருஷனுக்கும், இன்னும் அநேகஜனங்களுக்கும் எவ்வளவு பாடு உண்டாயிருந்தது; அவளைப்போல் எத்தனையோ பொல்லாத ஸ்திரீகள் உலகத்தில் உண்டு; ஏரோதியாள், ஐரேனியாள், இரத்த மரியாள் முதலானதுஷ்ட ஸ்திரீகளுடைய திருஷ்டாந்தங்களைச் சொல்லப்போனால் விரியும்.

Benefits arising from the influence of pious women.

இப்படிப் பெண்களால் அதிகத் தீமை வருகிறதுபோல், அவர்களால் அதிக நன்மையும் வரவதுவுண்டு; அவர்கள் தீமைசெய்யப் புகுந்தால் இப்படிப்பட்ட படுகேடுகளும் உலகத்தில் உண்டோ என்ற அபகீர்த்தி அடையத்தக்கவிதமாய் நடப்பார்கள்; அப்படியே அவர்கள் நன்னெறியில் நடந்து புண்ணியகருமங்களைப் புரிய எற்படுவார்களானால், புருஷர்களாப்பார்க்கிலும் அவர்கள் அவைகளில் அதிகசுவாராகியமுடைய உத்தமிகளென்ற கீர்த்தியடைவார்கள். இப்படி உலகத்திற்கு நன்மைசெய்த பெண்ணரசிகள் எக்காலத்திலும் இருந்து வந்திருக்கிறார்கள்; அவர்களில் அநேகருடைய பெயர்கள் நம்முடைய சத்தியவேதத்தில் வருகின்றன: சாராள், ரெபெக்காள், மரியாம்; தெபொராள், அன்ஞள், எலிசபேத்து, கன்னிமரியாள், மகதலேனூர் மரியாள், மார்த்தாள் மரியாள், தொற்காள், பெபேயாள், பிரிஸ்கில்லாள், லோவிசாள், ஜனிக்கேயாள் இன்னும் இப்படிப்பட்ட உத்தம பத்தினிகளுடைய சரித்திரங்கள் அநேகமிருக்கின்றன; இவர்களாலே உலகத்திற்கும் திருச்சபைக்கும் உண்டாயிருந்த நன்மை இவ்வளவென்று மதிப்பிடக்கூடாது; திருச்சபைச் சரித்திரத்திலும் அக்குவாள், மோனிக்கான், குளோட்டில்டான், பெற்றாள், டம்புருவுக்கான், அழகான், அன்ஞள் முதலிய மாதரசிரோமணிகளுடைய புண்ணிய கருமங்களைப்பற்றி நாம் வாசித்திருக்கிறோம்; இவர்கள், தங்கள் சிறந்த பக்தியினாலும் உத்தம நடக்கையினாலும் உலகத்தில் சுடர்களைப்போலப் பிரகாசித்தவர்களாயும், எல்லாருக்கும் நன்மை செய்தவர்களாயும் விளங்கினார்கள்.

Address to Hindu Females.

ஆகையால் சுதேச ஸ்திரீகளாகிய சகோதரிகளே! நீங்களும் மேற்சொன்ன மாதரசிரோமணிகளைப்போல் நடந்துகொள்ளுங்கள். நீங்கள் அடைந்த அறிவையும் வெளிச்சத்தையும் மரக்காலின்கீழ் மூடிவையாமல், யாவரும் அதைப்பார்த்து உங்கள் பரமபிதாவை மகிமைப்படுத்தும்படி மலைமேல் எற்றிய தீபம்போல் பிரகாசியுங்கள்; உங்கள் பின்னோகளுக்கும் உற்றார் உறவின்முறையார் ஊரார் உலகத்தார் யாவருக்கும் நன்மை செய்கிறவர்களாயும், கிறிஸ்துவின் இரக்ஷண மகத்துவங்களைக் கூறுகிறவர்களாயும், அவரது இராஜ்யம் தழைத்தோங்கும்படி முயற்சி செய்கிறவர்களாயும் இருப்பீர்களாக.

QUESTIONS ON TENTH CENTURY.

பத்தாம் நூற்றாண்டின் சரித்திரத்தின்பேரில் கேள்விகள்.

1. பரோனியு, அர்கல் என்பவர்கள் சபையின் நிலைமையை எப்படி விளக்கிக் காட்டினார்கள்?
2. இந்த நூற்றாண்டில் ரோமை கிரேக்கசபையின் நிலைமையென்ன?
3. மகா ஒதோ யார்? இவர் சபைக்கு செய்த கன்மமென்ன?
4. இந்த நூற்றாண்டில் இங்கிலாந்து சபையின் பேர் என்ன?
5. டன்ஸ்டன் என்பவரைப்பற்றித் தெரிந்தவரையில் எழுதுக.
6. கிரகோரியு என்பவருக்குப் பட்டப்பெயர் என்ன? எந்த இடத்தில் இவர் கன்காணியாயிருந்தார்? இவர் செய்த வேலையைப்பற்றிச் சுருக்கமாய் எழுதும்.
7. போலாந்து, டென்மார்க், சுவீடன், நார்வே, ஹங்கேரி, ருஷியா என்னும் தேசங்களில் இறிஸ்துமார்க்கம் பிரபலமான வகையைத் தெளிவாய் எழுதுக.
8. சத்தியவேதத்திலும், திருச்சபை சரித்திரத்திலும் உத்தமிகளாயிருந்த ஸ்திரீகள் யார்?

பதினோராம் நூற்றாண்டு.

கீழ்ச்சபை மேல்ச்சபைகளின் நிலைமை. ஏழாம் கிரகரி, எனாம் ஹென்ரியாயனுக்கும் உண்டான வாக்குவாதம். அவர்களுக்குள் கேரிட்ட யுத்தம். கிரகரியின் மரணம். இரண்டாம் அர்பன் என்னும் பாப்பு ஹென்ரியாயன் மகனைக் கலகத்துக்கு எழுப்பிவிடுதல். சிலுவை யுத்தங்களின் ஆரம்பம். பேதுரு என்னும் சந்நியாசி அதைக்குறித்த இலட்சிஷ்ருக்குப் பிரசங்கித்தல். கிரமென்டில் கூடின சங்கத்தார் யுத்தஞ்செய்யும்படி தீர்மானித்தல். யுத்தத்திற்குப் போனவர்கள் கொள்ளையடல். கல்தான் சுல்தானால் தோல்வியடைதல். காட்பிரி, ரபர்ட் என்பவர்கள் கொண்டுபோன சேனை ஜெயமடைதல். இந்த யுத்தங்களால் உண்டான பலாபலன்கள். பெரிக்கேரியு, ஸ்கொல்லாந்து தேசத்து அரசியாகிய மார்கரட் என்பவள். சான்ற்பூரியின் ரேஷ்ட அதிபட்சபாதியு ஆன்செலம் என்பவர். ஏவியாதிசாரனைச் சந்தித்ததைப்பற்றி அவர் சொல்லும் யோசனை. இறிஞ்சலின் திருஅவராரம், மனந்தாழ்மை இவைகளைப்பற்றி அவர் சொல்லிய நியாயங்கள். அவருடைய நிரூபங்கள், ஜூரிஸ்டிக்கள், மரணம். கலிசேஷப் பிரபலம்.

State of the Eastern and Western Churches.

கார்மேகத்துக்கு ஊடுருவித்தோன்றும் கதிர்போல, இந்த நூற்றாண்டில் அவபக்தி என்னும் அந்தகாரத்தினூடும் சத்தியத்தின் ஒளி சற்றுப் பிரகாசித்தது; மேற்கிலிருந்த கிரேக்கசபை தருக்கராலும் சரசேனராலும் மிகவும் ஒடுங்கி பெலட்சயமடைத்ததுமன்றி, அச்சபையாருக்குள் அறியாமையும் அவபக்தியும் பிரிவினைகளும் உண்டாயிருந்தமையால், அவர்கள் வெகு சீர்கேடான நிலைமையிலிருந்தார்கள்; மேற்கிலுள்ள லத்தின் சபையாருக்குள்ளும் சிறிதளவும் ஒழுக்கமும் உண்டாயிருந்தது; குருமார்களிலும் சந்நியாசிகளிலும் அநேகர் ஒருவாறு சாஸ்திரங்களையும் நானுவகையான நூல்களையும் படித்திருந்தார்கள்.

A brief account of Gregory VII.

ரோமாபுரிப் பாப்புகள் லௌகிகாரியங்களிலும், வைதிகவிஷயங்களிலும் அளவற்ற அதிகாரஞ் செலுத்திவந்தார்கள்; சக்கரவர்த்திகளும் அரசர்களுமாயிருந்தவர்களுடைய அதிகாரத்தைப்பார்க்கிலும் இவர்கள் அதிகாரம் அதிகமாயிருந்தது; இவர்கள் தங்கள் சட்டத்துக்கு அவர்கள் அடங்கவேண்டுமென்று சொன்னதுமன்றி, அவர்களில் அநேகரை அப்படி அடக்கி ஆண்டுவந்தார்கள். பாப்புகளுக்கு இப்படி மட்டுமீறிய அதிகாரம் இருந்தமையால், அப்பட்டத்தைப் பெறவேண்டுமென்று அநேகருக்குள் அபேட்சை யுண்டாயிருந்தது; அதைப் பெற்றுக்கொள்ளும்பொருட்டு எவ்வளவு பொருள் செலவிடவேண்டுமோ அவ்வளவு செலவு செய்வார்கள்; அதிலும் கிடையாவிட்டால் யுத்தஞ்செய்வார்கள்; இந்த நூற்றாண்டிலிருந்த எல்லாப் பாப்புகளிலும் ஏழாம் கிரகரி என்பவர் பெயர்பெற்றவராயிருந்தார்; அவருக்கு (Hildebrand) ஹில்டிபிராண்ட் என்று பழைய பெயர் இருந்தது. 1073-ம் வருஷத்தில் அலெக்சந்தரென்னும் பாப்பு இறந்துபோக, இவர் அவர் பட்டத்துக்கு வந்தார்; இவர் தஸ்கனி தேசத்தில் பிறந்தவராயும் தாழ்ந்தகுலத்தைச் சார்ந்தவராயுமிருந்தார்; ஆதியில் ஒரு சந்நியாசியாயிருந்த இவர், வரவர உத்தியோகத்திலும் அந்தஸ்திலும் உயர்ந்து, கடைசியில் பாப்பு என்னும் மேன்மையான பட்டத்தையும் பெற்றார்; இவரிலே வைதிக உத்தியோகஸ்தருக்கும், வைதிக உத்தியோகஸ்தருக்கும் உண்டான பாரம் தண்டமும் கொஞ்சமல்ல. குருக்கள் விவாகஞ்செய்யக்கூடாதென்று கண்டிதமான ஏற்பாடுகள் செய்தார்; இராஜாக்கள் பெரியோர்கள் மாவரும்

தன் சொல்லுக்கு அடங்கி நடக்கவேண்டுமென்று கட்டளை கொடுத்தார். இங்கிலாந்து தேசத்திலும் இவருடைய அதிகாரம் கொஞ்சம் தலைகாட்டிற்று. பெரிய உவில்லியம் இக்கக் காலத்தில் அரசாட்சி செய்தான். இவன் இங்கிலாந்து தேசத்தைப் பிடிக்குமுன்னமே, அதை ஜெயித்துக்கொண்டால் பாப்புவுக்கு வருஷவரி செலுத்துவதாக வாக்குப்பண்ணியிருந்தான். கிரகரி பட்டத்துக்கு வந்தவுடன் உவில்லியம் தனக்கு முதல் மரியாதை செலுத்திவரவேண்டுமென்று கட்டளைகொடுத்தான். உவில்லியமோ கோபமூண்டு, தான் அப்படி செய்வதில்லையென்றும், தன்னுடைய உத்தரவின்றி பாப்புவின் காகிதமாவது, உத்தியோகஸ்தராவது இங்கிலாந்துக்கு வரப்படாதென்றும் கட்டளையிட்டான். தன் தேசத்தில் கண்காணிகளார்குவது தனக்கே யுரியதென்று, இப்படியாகப் பாப்புவின் அதிகாரத்தைச் சற்று மட்டுப்படுத்தினான்.

Dispute between Gregory VII and Henry IV Emperor of Germany.

கிரகரி ஜர்மனிதேசத்து ராயனுகிய கான்காம் ஹென்ரி என்பவரோடு ஒரு வழக்குத் தொடுத்தார். லௌகிக உத்தியோகஸ்தர் வைதிக உத்தியோகஸ்தரை நியமிக்கக்கூடாதென்று இவர் கொடுத்த சட்டத்துக்கு ஹென்ரியென்னும் ராயன் விரோதமாய் நடந்தமையால், அவனைச் சபைக்குப் புறம்பாக்கவும் ராஜபட்டத்தை விட்டு விலக்கவும் உத்தரவுசெய்தார்; அதை ராயன் கேட்டுக் கடுங்கோபமாகி, உவர்மஸ்பட்டணத்தில் ஒரு சங்கம் வைத்து, அதில் கிரகரி என்னும் பாப்புவின்மேல் அநேக குற்றக்களை வற்படுத்தி, அவர் அந்த உத்தியோகத்துக்கு அயோக்கியரென்றும், அவருக்குப் பதிலாக இன்னொருவரை வற்படுத்துவது யுக்தம் என்றும் தீர்த்தார்; கிரகரி என்பவர் அதைக் கேள்விப்பட்டு அவரை சனைச் சபைக்குப் புறம்பாக்கினதுமன்றி, ராஜபட்டத்துக்கும் எவ்வளவேனும் தகுந்தவரல்ல என்று உலகம் அறியும்படி விளம்பரஞ்செய்தார்; உடனே ஜர்மனிதேசத்திலுள்ள அநேகம் கண்காணிகளும் பிரபுக்களும் பாப்புவின் பட்சத்தில் நின்று, ராயனுக்கு விரோதமாய்க் கலகஞ்செய்ய ஏற்பட்டார்கள்; அப்போது ராயனுடைய இஸ்டரில் சிலர் அவர் ரோமாபுரிக்குப் போய், பாப்புவைக் கண்டு அவரிடத்தில் தன் குற்றத்தைப் பரிகரிக்கும்படி கேட்டுக்கொள்ளவேண்டுமென்று யோசனை சொன்னார்கள்; அதை அவ்வரசன் கேட்டு, 1077–ம் வருஷத்தில் மழை என்றும் குளிர்

என்றும் பாராமல் வெகு கஷ்டத்தோடு ஆல்ப்ஸ்மலைப்பை கடந்து, இத்தாலியா தேசத்துக்குப் போய்ப் பாப்புவுடைய தரிசனத்துக்காகத் தலையில் பாகையில்லாமலும், காலில் ஜோடி இல்லாமலும், உடலில் கம்பள வஸ்திரமில்லாமலும், அரசனுயிருந்த அவர் ஒரு ஆண்டியைப் போல் மூன்றுநாள் பாப்புவினுடைய வீட்டுவாசலில் காத்திருந்தார். நாலாம்நாள் பாப்புவுக்கு மனம் இரங்கி அவரை உள்ளே வரச் சொல்லி, அவர் இனி தமது அதிகாரத்துக்கு விரோதமாய் ஒன்றும் செய்வதில்லை என்பதாக அவரிடத்தில் சத்தியமீ வாங்கிக்கொண்டு அவருடைய குற்றத்தை மன்னித்தார்.

War between the Pope and Emperor. Death of Gregory, A.D. 1085.

இதை இத்தாலியா தேசத்திலுள்ள அநேக ராஜபிரபுக்களும் கண்காணிகளும் கேள்விப்பட்டு, அரசனுயிருந்த ஹென்ரி என்பவர் ஒரு அடிமையைப் போல் நடந்துகொண்டது தகாது என்று சொல்லி, அரசன் பட்சமாய் அநேகர் சேர்ந்தார்கள். பாப்புவானவர் அதைப் பார்த்து ஜர்மனி தேசத்திலுள்ள ஜனங்களையெல்லாம் எழுப்பிவிட்டு, ஹென்ரி என்பவரைத் தள்ளி, ரடால்வ் என்னும் ஒரு பிரபுவை அவர் பட்டத்துக்கு ஏற்படுத்தும்படி வேண்டிய பிரயத்தனங்கள் செய்தார்; அதனால் உண்டான யுத்தத்தில் ஹென்ரி என்பவர் அபஜெயமடைந்தமையால், பாப்புவானவர் அவரைச் சபைக்குப் புறம்பாக்கி அவர்மேலே ஒரு கொடிய சபதங்கூறினார்; ஆயினும் அரசன் தைரியத்தை விடாமல் ஒரு பெரிய சேனையைச் சேர்த்து, பாப்புவின் கக்ஷிக்காரரோடே பலமுறை யுத்தஞ்செய்து அவர்களை ஜெயித்ததுமன்றி, கிரகரி என்னும் பாப்புவுக்குப் பதிலாக மூன்றாம் கிளெமெந்து என்னும் பாப்புவையும் ஏற்படுத்தினார்; அப்பால் ரோமாபுரிக்குப் போய் இரண்டுவருஷம் அங்கே பரிபரிபோட்டு அதைப் பிடித்துக்கொண்டார்; பாப்புவானவர் ஓட்டம்பிடித்தார். அவர் சலர்னே என்னும் பட்டணத்துக்குத் தப்பியோடி, 1085–ம் வருஷத்தில் அரசனைச் சபித்துவிட்டு இறந்து போனார்.

Urban II seduces Henry's son to rebel against his father.

அவருக்குப் பின்வந்த பாப்புகளாவது இனி ராஜன் பேச்சுக்குப் போகக்கூடாதென்று ராமல், அவன் பேரில் பாணம் தொடுத்துக்கொண்டே இருந்தார்கள். இரண்டாம் அர்பன் என்னும் பாப்புவானவர் அரசனை மடக்கும்படி அவருடைய புத்திரனுகிய கான்ராட் என்பவனை எழுப்பிவிட்டார்; அரசன் அதைப்

பார்த்து காரியம் மிஞ்சிப்போகிறதென்று நினைத்து, தமதுடைய இளையகுமாரனாகிய ஹென்ரி என்பவனே ரோமருக்கு இராஜாவாகத் தெரிந்தெடுத்தினான்; சிறிதுகாலத்துக்குப்பின் பாப்புவானவரும் கான்ராட் என்பவரும் இறந்துபோனார்கள். புதிதாய்ப் பாப்புப்பட்டம் பெற்ற இரண்டாம் பாஸ்கல் என்பவர் ஹென்ரி என்பவனே எடுத்துவிட்டு, தன் தகப்பனுக்கு விரோதமாய்க் கலகஞ்செய்யும்படி சொன்னார்; அதனாலே ஹென்ரி என்னும் இராயனுடைய கஷ்டகாலத்துக்குகான் பெலவீனப்பட்டுப்போயிற்று.

Forged Decretals.

பாப்புகளின் அதிகாரம் இப்படி பலம்கொள்வதற்கு அவர்கள் சில கள்ளப்பத்திரங்கள் வைத்திருந்தார்கள். சுமார் 510–ம் வருஷத்தில் தியோனிசியு என்பவன் சபைச்சங்கங்கள் காலாகாலங்களில் கூடித் தீர்மானித்த சட்டங்களை ஒன்றுசேர்த்து ஒரு திரட்டினான். 686–ம் வருஷம் இசிடோர் என்னும் இரேஷ்ட கண்காணி வேறு அநேக சட்டங்களையும் ஒன்றுசேர்த்து அதற்கு இசிடோர் திரட்டு என்று பேரிட்டான். இதில் ஒருபாகத்தில் முதல் மூன்று நூற்றாண்டில் பாப்புகள் எழுதினைத்திருந்த நிருபங்கள் 61 இருந்தனவும், இரண்டாவதில் பெரிய சங்கங்களின் தீர்மானங்களும், மூன்றாவதில் காலம் நூற்றாண்டுமுதல் இசகிவரையிலிருந்த பாப்புகளின் நிருபங்க ளிருந்தனவும் கட்டுப்பாடு. இதனுடைய முக்கிய கோட்பாடு என்னவென்றால் பேதுரு அப்போஸ்தலனுக்கிருந்த இரேஷ்ட அதிகாரத்தை வைத்துக்கொண்டு, மகா கொன்ஸ்தந்தீன் சில்வஸ்டர் என்னும் பாப்புவுக்கும், அவர் பின்னடியாருக்கும், மேற்கு ராஜ்யத்தைக் கையளித்துவிட்டதாகவும், உலகமுழுவதும் ரோமைச்சபைக்குக் கீழ்ப்பட்டிருக்கவேண்டுமென்பது இயேசு இரட்சகரின் கருத்தென்றும், சகல கண்காணிமாரும் உரோமைப்பட்டணத்திலிருந்து போகவேண்டுமென்றும், பாப்புவின் அதிகாரத்தை அரசாவது, அவர்களின் உத்தியோகத்தராவது எதிர்த்து மறுக்கப்படாதென்றும், அரசர் பட்டஞ் சூட்டப்படுவதும் பாப்புவானவராலேயென்றும் இந்தப் பத்திரங்களில் காட்டியிருந்தது. இதில் எவ்வளவு உண்மை, எவ்வளவு கட்டுப்பாடு என்று நாம் விளக்கிக் காட்டவேண்டியதில்லை.

இவ்விதமாய்ப் பாப்புகளுடைய அதிகாரம் வரவர ஸ்திரப்பட்டுக்கொண்டு வந்தபோதிலும் சற்றேனும் குறைவில்லை; இந்த நூற்றாண்டில் ஆரம்பித்த குருசேட்ஸ் என்னப்பட்ட சிலுவை யுத்தங்களால் அவர்களுடைய வல்லமையும் அதிகாரமும் முக்கியப்பட்டது; ஆகையால் அந்தக் குருசு யுத்தவர்த்தமானங்களைச் சற்று விவரமாய் எடுத்துரைப்பது அவசியமாயிருக்கிறது.

The Crusades.

Their Origin.

637–ம் ஆண்டில் சாசேனர் என்னப்பட்ட மகமதுமார்க்கத்தைச் சேர்ந்த ஒரு ஜாதியார் எருசலேம் நகரத்தைப் பிடித்துக்கொண்டதாக முன் சொல்லியிருந்தோம்; அப்பட்டணம் புண்ணியஸ்தலமென்று அக்காலத்துக் கிறிஸ்தவர்கள் எண்ணிவந்தார்கள்; பெரியோர் பிறந்த இடங்களையும், ஆச்சரியங்கள் சம்பவித்த இடங்களையும் புண்ணியஸ்தலங்களாக எண்ணுவது மானிட இயல்பாம்; அந்தப்படி மகமதியர் மகமது பிறந்த மெக்காபட்டணத்தையும், ஜெந்தக்கள் இராமர் தங்கின இடமாகிய இராமேஸ்வரத்தையும் புண்ணியஸ்தலங்களென்று எண்ணி யாத்திரை செய்துவருகிறார்கள். மானிடர்கள் ஈடேற மானிலத்தின்கண் சாஞன் தேசத்தில் உதித்து, உலக சற்குருவாய் இருபாராய்த் தமது அற்புதக் கிரியைகளை அவ்விடத்தில் காட்டி, மன்னுயிர்க்கிரங்கித் தன்னுயிரை விட்டு, மூன்றாம் கல்லறையிலிருந்து மகா வெற்றிவேந்தராய் மகிமைச் சரீரசொரூபராய் எழுந்து, பூலோகத்தில் ஓர் மண்டலம் வசித்து, மேகவாகனருடராய் வான லோகஞ் சென்றமையால், அக்காலத்திலுள்ள கிறிஸ்தவர்கள் எருசலேம்பட்டணத்தைப் புண்ணியஸ்தலமாகப் பாவித்து, அங்கிருந்த கிறிஸ்துகாதாரி கல்லறையைப் பார்க்கும்பொருட்டு அவ்விடத்துக்கு யாத்திரை செய்துவந்தார்கள்; இப்படி ஆயிரக்கணக்காய் யாத்திரைபோகும் கிறிஸ்தவர்களை சாசேனர் தடைசெய்யாமல் வருமானத்தையே முக்கியமாய்க் கருதி அவர்களிடத்தில் வரிப்பணம் வாங்கிவந்தார்கள்; இவ்விதமாய்ப் புண்ணியயாத்திரை செய்தவர்களுடைய தொகை பெருகுவதற்கு கேரெரு முகாந்தரமுமுண்டு; வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லிய ஆயிரம் வருஷங்கள் கழிந்து உலகமுடிவு சமீபமாய் வந்துவிட்டதென்றும், கிறிஸ்துகர் எருசலேம்பட்டணத்தில் அதிசீக்கிரம் பிரசன்னமாவாரென்றும், ஐரோப்பியருக்குள் உண்டான ஒரு எண்ணம் போல நூற்றாண்டின் முடிவிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் அதிகமாய்ப் பரவிவந்தினால், அநேக ஜனங்கள் தங்கள் வேலை, தோட்டம், உற்றார் உறவினர்முறையார், காணியாட்சிகள் எல்லாவற்றையும் விட்டு

விட்டு ஜகத்ரக்ஷகனாக் கண்ணுலே கண்டுகொள்ளவேண்டுமென்ற பிரமையினுலே ஓடினுர்கள்.

Their Projection by Peter the Hermit.

இப்படி இந்த நூற்றாண்டில் போன தபசிகளுக்கு வெகு சஞ்சலமுண்டாயிற்று; எருசலேம்பட்டணம் சரசேனர் கையாட்சியிலிருந்தவரைக்கும் அவர்களுக்கு யாதொரு விக்கினமுமில்லை; ஆயினும் 1065-ம் ஆண்டில் அப்பட்டணம் துருக்கர் வசமாயிற்று; அதன் பிறகு கிறிஸ்தவ யாத்திரிகளுக்கு இடுக்கணுண்டாயிற்று; துருக்கர் அவர்களைத் தாவித்து அவர்களுடைய பொருட்களைக் கொள்ளையிட்டார்கள்; இந்த நூற்றாண்டில் எருசலேம்பட்டணத்துக்கு யாத்திரை செய்தவர்களில் பேதுரு என்ற பெயருள்ள ஒருவனிருந்தான்; இவன் பிரான்ஸ் தேசத்திலுள்ள அமியன் நகரத்தில் பிறந்தவன்; இவன் துருக்கரால் நிகழ்ந்தவர்கள் படும் துயரங்களையெல்லாம் பார்த்துச் சொல்லமுடியாத துக்கமடைந்து, ஐரோப்பாவுக்குத் திருப்பிவந்து அவ்வுள்ள பிரபுக்களும் ஜனங்களும் எகோபித்துத் துருக்கரோடே யுத்தஞ்செய்து, அவர்கள் வசத்திலிருந்த பலஸ்தீன தேசத்தைப் பறித்துக்கொள்ளவேண்டுமென்று எல்லாருக்கும் பிரசங்கம்பண்ணத் தலைப்பட்டான்; அவன் நோக்கம் நிறையாகும்படி அவன் ஊரூருக்குப் போய், ஆசாரியனையும் பிரபுக்களையும் அந்தப் புண்ணிய கருமத்திற்கு உடன்படும்படி எழுப்பிக்கொண்டுவந்தான்; அவன் பகியினுலும் பட்டினியினுலும் உருக்குலைந்து ஒரு சந்நியாசியைப்போல் காலிலன்றிச் சஞ்சரித்து, தலையிலும் காலிலும் ஒன்றுமில்லாமல் கையிலே உலகரக்ஷகர் பாடுபட்ட பாவனையாக ஒரு சொரு பத்தைப் பிடித்து அதை யாவரும் பார்க்கும்படி உயர்த்தி காட்டிக்கொண்டு திரிந்தான். யாத்திரைக்காரருடைய பாதகேவையும் தூயசுகளையும் அவன் எத்தனாக்குப்போது, கேட்டவர்களுடைய நெஞ்சு நெருப்பிலிட்ட மெழுகுபோல் உருகிப்போகும்; போர்வீரனைப் பார்த்து நீங்கள் உங்கள் இரக்ஷகனையும், உங்கள் சகோதரரான பாதேகளையும் கைகொடுத்துக் காப்பாற்றும்படிப் புறப்படுங்கள் என்று பிரசங்கிக்கும்போது, எல்லாருடைய மனமும் இளகிப்போகுமென்று பிற்பின் என்பவர் எழுதியிருக்கிறார்.

அக்காலத்தில் பாப்புவாயிருந்த இரண்டாம் அர்பன் என்பவர் பேதுருவினுடைய கோரிக்கை ஈடேறுமென்றால், பாப்புதருடைய அதிகாரம் பலப்படுமென்று எண்ணி அதற்கு வேண்டிய அனுகூலங்

களைச் செய்தார்; அதைக்குறித்துத் தீர்க்காலோசனை செய்யும்பொருட்டு, 1095-ம் வருஷத்தில் பிளெசென்ஷியா என்னும் ஊரில் ஒரு சங்கம் வைக்கப்பட்டது; அச்சங்கத்துக்கு நாலாயிரம் குருமாரும் முப்பதினுயிரம் ஜனங்களும் வந்திருந்தார்கள்; அவர்களெல்லாரும் துருக்கரோடே யுத்தஞ்செய்யவேண்டுமென்று சொன்னபோதிலும், அதற்குத் தணிந்து எற்பட அதேருக்கு இஷ்டமில்லை; அதனுலே அவ்வருஷத்தில் இளெர்மெந்து என்னும் ஊரில் இன்னுெரு சங்கம் வைத்தார்கள்; அதற்குப்பாப்புவானவர் அக்கிராசனுதிபதியாயிருந்து, அந்தச் சபையாருக்கு நீண்ட பிரசங்கஞ்செய்தார்; அது முடிந்தமாத்திரத்தில் ஜனங்களெல்லாரும் யுத்தத்துக்குப் போவதே யுக்தம்; இதுவே தேவசித்தம், இதுவே தேவனித்தமென்று முழக்கமிட்டார்கள். கர்த்தருக்காக யுத்தஞ்செய்கிற எல்லாருக்கும் பேரின்பம் கிடைக்குமென்று பாப்புவானவர் சொன்னதினுலே ஜனங்களுக்குள் மதாபிமானம்பூண்டு, பெரியோரும் சிறியோரும், புருஷரும் ஸ்திரீகளும் தங்கள் உயிரை வெறுத்து யுத்தத்துக்குப் புறப்பட்டார்கள்; கொலை, களவு, கள், காமம், குருதோகம் என்னும் பஞ்சமா பாதகங்களைச் செய்தவர்களும், தங்கள் பாவத்தைத் தொலைக்கவும் பாதகியடையவும் இதுவே உபாயமென்று நினைத்து யுத்தமுஸ்திப்புடன் புறப்பட்டார்கள்; இப்படி யுத்தத்துக்குப் புறப்பட்டவர்கள் தங்கள் கைகளிலும் மார்புகளிலும் சிலுவை அடையாளத்தைத் தரித்திருந்தபடியால், அவர்கள் செய்த யுத்தங்களுக்குச் சிலுவை யுத்தங்களென்று பெயர்.

The Council at Clermont under Urban II decides on war, A.D. 1095.

இப்படி யுத்தத்துக்குப் புறப்பட்டவர்கள் மூன்றலட்சம்பேர்; அவர்களுக்குப் பேதுரு என்பவனே தலைவனுயிருந்தான்; 1096-ம் ஆண்டில் அவர்கள் புறப்பட்டு எருசலேமை நோக்கி நடந்தார்கள்; முன்சொன்னதுபோல் அவர்களில் அதேகர் திருடரும் கண்டாளருமாய் இருந்தபடியால், போகிறமார்க்கத்தில் அதேக ஜனங்களைக் கொன்று அவர்கள் பொருட்களைச் சூறையாடினுர்கள்; இந்தப் பாதகர் செய்த செய்கைக்குத் தக்க தண்டனை அவர்களுக்கு வந்தது; அவர்கள் கொன்ஸ்தாந்தினேபுரி சேருமுன் அவர்களில் இரண்டலட்சம்பேர் இறந்துபோனுர்கள்; மற்றவர்கள் துருக்களுடைய அரசனுகிய சாலிமான் சுல்தானுடனே

The atrocities committed by the army, and their defeat by Sultan Solyman.

நீசேயாபட்டணத்தில் செய்த யுத்தத்தில் அபஜெயப்பட்டு அழிந்து போனார்கள்.

Another army under Godfrey and Robert more successful.

பின்னும் அந்த யுத்தம் அதோடே முடிந்துபோகவில்லை; பூதகாரில் அநேகர் அட்டகாசஞ்செய்துகொண்டு வெகு ஆரவாரத்தோடு புறப்பட்டார்கள்; பெயர்பெற்ற சூரனும், புயிலன் ஊராணுமாகிய காட்பிரி என்பவரும், பால்ட்வின் என்பவரும், அவருடைய சகோதரனுகிய ரபார்டி என்பவரும் ஆயுதவித்தையில் பழகின இன்னும் சில பிரபுக்களும் ஒரு பெரிய சேனையைச் சேர்த்துக்கொண்டு பேதுரு என்பவனுக்குப் பின்னுலே போனார்கள்; அவர்கள் நீசேயாபட்டணத்தைச் சேர்ந்தவுடனே காட்பிரி என்பவர் சேனைகளைத் தொகையிட்டதில், அவர்கள் ஒருலட்சம் ரவுத்திரரும், ஆறுலட்சம் காலாள்படைகளும் இருந்ததாகக் கண்டார்; அவர்கள் வெகு சீக்கிரத்தில் நீசேயாபட்டணத்தையும், எமீசா, அந்தியோகு என்னும் பட்டணங்களையும் பிடித்து, 1099-ம் வருஷத்தில் வெற்றிக்கொடியோடே எருசலேம்பட்டணத்திற்குச் சமீபம் வந்துவிட்டார்கள். பட்டணத்தைப் பார்க்கவேண்டுமென்றிருந்த ஆசை இவ்வளவு அவ்வளவென்றில்லை. கண்ணைட்டும் தூரத்திற்கு வருமுன்னே சூரியன் அஸ்தமித்துவிட்டது. பொழுது எப்பொழுது விடியுமோ என்று ஆசையாய்க் காத்துக்கொண்டிருந்தார்கள். காலை வெளுத்தவுடன் பரிசுத்தபட்டணம் அவர்கள் கண்ணுக்குத் தென்பட்டது. எல்லாரும் ஏகமாய் எருசலேம்! எருசலேம்! என்று கத்தினார்கள். சிலர் குதிரையில் சவாரிசெய்தவர்கள் குதிரையை விட்டிறங்கி கால்நடையாய் நடந்துபோனார்கள். சிலர் முழங்கால்படியிட்டு நின்றார்கள். வேறுசிலர் தரையைட்டும் குனிந்து பூமியை முத்தஞ்செய்தார்கள். கடைசியில் மூப்பத்தைந்து வள்வளாக்கும் அங்கே கொத்தளங்கட்டி பட்டணத்தைப் பிடித்து, ஜனங்களையெல்லாம் கண்டதுண்டங்களாய் வெட்டிப்போட்டு, காட்பிரி என்பவரை எருசலேம்பட்டணத்துக்கு அரசனுக ஏற்படுத்தினார்கள்; அவனும் அவர் ஒரு வருஷத்துக்குள்ளாக இறந்துபோனார்; அப்பால் அவ்விராச்சியம் நாளுக்கு நாள் பெலவீனப்பட்டு முன்போல் அருக்கருடைய கையாட்சிக்குள் வாயிற்று; அதைப்பற்றி இனிமேல் விவரம் சொல்லுவோம்.

இந்தச் சிலுவையுத்தங்களால் ஐரோப்பாகண்டத்தாருக்குப் பொருள் நஷ்டமும் பிராண நஷ்டமும் அதிகமாயிருந்தாலும் அவைகளினுலே அவர்களுக்கு ஒருவாறு நன்மையுண்டாயிற்று; ஐயாகண்டத்திலுள்ள ஜனங்களுடைய கல்வியையும் நாகரீகத்தையும் அவர்கள் பார்த்து சற்றுத் தேர்ச்சியடைந்தார்கள்; கல்வி, கைத்தொழில், துணாத்தனம், வியாபாரமுதலான விஷயங்களில் அவர்கள் விர்த்தியடைவதற்கு ஏதுவாயிருந்தது; வைதிகாரியங்களிலோ முன்னேவிட அதிக அபிவாமையேயன்றி தேர்ச்சி ஒன்றுமில்லை; ரோமாபுரிப் பாப்புகளுக்கு மேற்சொன்ன யுத்தங்களினுலே அளவற்ற அதிகாரமும் திரவியமும் உண்டானதே உள்ளங்கை நெல்லியங்கனிபோல் கைகண்ட பலனுயிருந்தது.

Consequences of these expeditions.

இப்படிப் பாப்புகளுடைய வல்லமை நாளுக்குநாள் அதிகப்பட்டுக்கொண்டுவந்தாலும், அவர்கள் மார்க்கத்திலிருந்த தவறுகளையும் வழுக்களையும் எடுத்துக் காட்டி, சத்தியம் தழைத்தோங்கும்படி பிரயாசப்பட்டவர்கள் எக்காலத்திலும் இருந்துவந்ததுபோல இந்த நூற்றாண்டிலும் சிலர் இருந்தார்கள்; இதன் மத்தியில் பிரங்கோபு என்று ஒருவர் இருந்தார்; இவர் பிரான்ஸ் தேசத்திலுள்ள துவர்ஸ்பட்டணத்தில் ஸ்கோலஸ்டர உதவிக்குருவாயிருந்தவர்; இவர் கல்வியில் தேர்ந்தவராயும், சத்தியமார்க்க உபதேசங்களை நன்முய்க் கற்றறிந்தவராயும் இருந்தார்: இவர் 1050-ம் வருஷத்தில் பாப்புமார்க்கத்தார் அனுசரித்துவந்த தேவசிகரம் என்ற உபதேசத்தை மறுக்கத்தலைப்பட்டார்; அப்போதுரோமாபுரியிலும் பாரிஸ் பட்டணத்திலுமுள்ள அநேகர் அவரை விரோதித்து அவரைக் குற்றவாளியென்று தீர்த்தார்கள்; உடனே அவருடைய சிநேகிதர்கள் அவரைக் கடிதமிட்டபடியினுலே அவர் பயந்து சத்தியத்துக்குச் சார்பாயிருந்த தம்முடைய கொள்கையைக் கைகோவிட்டு எதிரிகள் பக்கமாய்ச் சேர்ந்தார்; பிற்பாடு தாம் அப்படிச் செய்தது பெரிய குற்றமென்றுணர்ந்து தாம் ஆதியில் கொண்டிருந்த உபதேசத்தை எல்லாரும் அறியவேண்டுமென்று அதை ஒரு தாளில் எழுதிப் பிரசித்தஞ் செய்தார்; இவர் செய்த நூல்களில் அக்காலத்திலிருந்த சில தப்பான உபதேசங்கள் அடங்கியிருந்தபோதிலும், அவைகள் பாப்புமார்க்கத் தவறுகளைக் கண்டிக்கிறவைகளாயும் அதிகாரிகளிருந்த மனவிருத்தி நீக்கத்தக்கதாயும் இருந்தன; இவர் 1088-ம் ஆண்டில் இறந்துபோனார். இங்கிலாந்து தேசத்தில் முதலாம் உவில்லியம் அரசாட்சி செய்தகாலத்

Berengarius.

* டிரான்சுபுஸ்டான்சியேஷன், Transubstantiation.

தில் பாப்புவின் அதிகாரம் கவதிகைகளில் சம்பந்தப்பட்டு வரத் துவங்கிற்று. மற்ற விஷயங்களில் அரசனே சுலே. ஆராஜனான் லத்தின்பாஷையில் நடத்தப்பட்டது. குருமாருக்கு விவாகம் செய்ய உத்தரவில்லை. சேவகசேகரம் என்ற உபதேசம் சரியென்று கான்டர்புரி அத்தியட்சர் சாதித்தார். பாப்புவுக்கு இவர் அதிகம் சார்பாயிருந்தார். இவருடைய பேர் (Lanfranc) லான்பிரான்க் இவரால் இங்கிலாந்து தேசத்திற்கு நன்மை பலனுண்டாயிற்று. கல்வியை அதிகம் அபிவிர்த்தி செய்தார். சபைபக்ஷத்தின் பலமு மேற்படுத்தினார். இவரால் இங்கிலாந்து தேசம் முழுவதும் முதல் முதலாகப் பாப்புவுக்குக் கீழடங்கியிருக்க நேரிட்டது. இவர் செய்த சீர்மைகளில் இதுவே பெரிய சீர்மையென்று சொல்லலாம்.

Margaret queen of Scotland.

இந்த நூற்றாண்டில் இங்கிலாந்தரசருடைய குடும்பமாயிருந்தவர்களில் மார்கரேத்து என்ற பெயருடைய ஸ்கொத்லாந்து தேசத்து ராணி விசேஷமானவளாயிருந்தாள்; இவள் இங்கிலாந்து தேசத்து ராஜகுமாரனாகிய எட்கார் ஆத்லின் என்பவருக்குச் சகோதரியாயும், ஸ்கொத்லாந்து தேசத்து ராஜருடைய மாப்பிள்ளை என்பவருக்குப் பட்டப் ராணியாயிருந்தாள்; ஸ்கொத்லாந்து தேசத்தில் நிலைநின்றுவரும் பிரபல மாகவும், சர்த்தருடைய சொற் பரிசுத்தமாய் ஆசரிக்கப்படுவதற்கும் வேண்டிய முயற்சிகள் செய்தாள். 1093-ம் வருஷத்தில் அவளுடைய புருஷன் இறந்துபோனார்; மிகுதியாயிருந்த அவள் அந்தத் துக்கசமாசாரத்தைக் கேட்டுப் பரசமயலட்சு: "பக்தியுள்ளவளாயிருக்கிற பாமண்டலாதிபனே! நீர் என்னைப் புடமிடும்படிக்கும், என் பாவபாசங்களை இறுத்துத் தன்னும்படிக்குமே இப்படி பெருந்துன்பத்தை விட்டிருக்கிறீர்; ஆ, இயேசுகதா! அடித்தோனை ஆதரிக்கும் அற்புதமூர்த்தி! மன்னுயிர்க்காகத் தன்னுயிரைவிட்ட திருபாயகா! என்னுடைய பாவ அழுக்குகளையும் அசுகிகளையும் சுரியனைக்கண்ட பனிபோல் என்னை விட்டகற்றிவிடும், சுவாமி" என்று மெத்த பக்தி வினயத்துடன் பிரார்த்தனைசெய்தாள். கொஞ்சகாலைக்குப்பின் இந்த மாதுசிரோமணியானவள் தன் பாடுகளெல்லாம் முடித்துக் கொண்டு பேரின்பலோகஞ் சேர்ந்தாள்.

இந்த நூற்றாண்டிலிருந்த தேவபக்தர்களில் ஆன்ஸல்ம் என்பவர் விசேஷடமானவர்; இவர் சார்டினியாதேசத்தில் 1033-ம் வருஷம்பிறந்தவர்; இவர் இளம்பிராயமாயிருக்கும்போது உலக உல்லாசத்துக்கும்

சிற்றின்பத்துக்கும் இடங்கொடுத்து அதே காலத்தை வீணுப்போக் கிவிட்டதினாலே, அதை அவர் சாகும்வரை பரியந்தம் நினைத்துத் துக்கப்படுவார்; 1063-ம் வருஷம் இவர் (Bec) பெக் என்னப்பட்ட சந்நியாசமடத்தில் சேர்ந்து, பின்பு அம்மடத்திலேயே மடாதிபதியாயிருந்தார். இவர் 1092-ம் வருஷத்தில் இங்கிலாந்து தேசத்துக்குப் போய் அங்கே கான்டர்புரி பட்டணத்துக்குச் சிரேஷ்ட அத்தியக்ஷ குருவானார்; அக்காலத்தில் இங்கிலாந்து தேசத்து ஜனங்களுக்குள் கல்விவிஷயத்தில் தேர்ச்சியுண்டாயிருந்தது; சக்சோன் இராஜாக்களுக்குள்ளிருந்த அராசாட்சி கார்மன் இராஜாக்கள் வசமாயிற்று. சென்ற நூற்றாண்டின் சரித்திரத்தில் சொல்லியபடி, நார்வே தேசத்திலிருந்துவந்து பிரான்ஸ் தேசத்தில் குடியேறின ரோலோ என்பவனுடைய குமாரனாகிய உவில்லியம் என்னும் வீரன் 1066-ம் வருஷத்தில் இங்கிலாந்து தேசத்திற்குப் போய், அவ்விடத்து அரசனாகிய ஹாரால்ட் என்பவனோடு யுத்தஞ் செய்து அத்தேசத்தைக் கட்டிக்கொண்டார்; அவர் தம்முடைய குடிகளுக்குள்ளிருக்கிற அறியாமை நீக்கவும்; கல்வி விர்த்தியடையவுந்தக்கதாக பிரதேசங்களிலேயிருந்து வித்துவான்களை அழைப்பித்து அவர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்களைக் கொடுத்தார்; அப்படி வந்தவர்களில் (Lanfranc) லான் பிரான்க் என்பவரும், ஆன்ஸல்ம் என்பவரும் விசேஷமானவர்கள்; லான்பிரான்க் என்பவர் மரித்துப்போனபிற்பாடு இவர் முன் சொன்னதுபோல அவருடைய உத்தியோகத்தைப் பெற்று கான்டர்புரி சகரிக்குச் சிரேஷ்ட அத்தியட்சரானார்; இவர் அந்த உத்தியோகத்தைப் பெற்றபோது ஜெயவீரன் என்று பெயர்பெற்ற உவில்லியம் என்பவருடைய குமாரனாகிய உவில்லியம் ரூபல் என்பவர் இராஜாவாயிருந்தார்; அரசனுக்கும் ஆன்ஸல்ம் என்பவருக்கும் அடிக்கடி பல சச்சரவுகள் நேரிட்டது. ஆன்ஸல்ம் உரோமைப் பாப்புவுக்கு அனுசாரி; அரசனே பாப்புவுக்கு விரோதமாயிருந்தார். ஆன்ஸல்ம் கான்டர்புரி சிரேஷ்ட அத்தியக்ஷ குருவாகப் பாப்புவினுல் அபிஷேகம் பெறும்படி ஆசைப்பட்டார். அரசனே கூடாதென்று சாதித்தார். கடையில் உரோமாபுரியிலிருந்து அபிஷேக அங்கியை வரவழைத்து, அதைத் தேவாலயப்பீடத்தில் வைத்து, ஆன்ஸல்ம் அதைத் தரித்துக்கொள்ள உத்தரவானது; இப்படியாக இவ்வரசனுலே அவருக்குத் துன்பமும் இன்னலும் பலது உண்டாயி

ருந்தபடியால் அவர் சிறிதுகாலம் தாமான ஒரு தேசத்துக்குப் போயிருந்தார்; 1100-ம் வருஷத்தில் அந்த இராயன் மரித்துப்போக அவர் ரோமாபுரியை விட்டு இங்கிலாந்து தேசத்துக்குத் திரும்பிப்போய், தமது உத்தியோகத்தை ஜாக்கிரதையுடன் பார்த்துவந்தார்; அக்காலத்தில் எக்கும் பரவியிருந்த குருட்டுப்பக்தி அவருக்குள்ளும் இருந்தது; இதொன்றே அவர்பேரில் கூறவேண்டிய குற்றமாயிருக்கிறது; மற்ற விஷயங்களில் அவரை மிகவும் புகழ்ந்துபேசுவது நியாயந்தான்; அக்காலத்தில் இருந்த மற்றக் கல்விமான்களிலும் அவர் மிகானக் கருத்துள்ளவரும், அருஸ்தின் என்பவருடைய கொள்கையை அனுசரித்து வரும், தேவபக்தியில் சிறந்தவருமாய் விளங்கினார்; அவர் சில நூல்களே எழுதியிருக்கிறார்; அவைகளைப் பார்க்கும்போது அவருடைய கல்வித்திறமையும், போதனாசக்தியும், இறந்தபக்தியும் விளங்குகிறது. அருஸ்தின் என்பவருடைய காலத்திற்குப்பின் இவரே மேலைச் சபையில் பெயர்போன வேதசாஸ்திரி. (Natural Theology) தத்துவ வேத சாஸ்திரத்தை முதன்முதல் உண்டாக்கித் தத்துவநூல், சாஸ்திர நூல் முதலியவை வேத உபதேசத்திற்கு அனுசாரணையாயும், சார்பாகவுமிருக்கிறதென்று ருபித்துக் காட்டினவர் இவரே.

அவர் வியாதியஸ்தனைப் போய்ப் பார்க்கும் போதகன்மாருக்கு உபயோகமாக ஒரு நூல் செய்திருக்கிறார்; அதில் அவர், குருவானவர் ஒரு வியாதிக்காரனைப் போய்ப் பார்க்கும்போது அவனிடத்தில் இரண்டு கேள்வி கேட்கவேண்டும். முதலாவது: பாபாத்மாவாயிய நீ நித்தியதண்டனை அடைவதற்குப் பாத்திரனென்று நினைக்கிறாயா? இரண்டாவது: நீ இனி உன் பாவத்தை வெறுத்துவிட்டு கன்னெறியில் நடக்கும்படி விரும்புகிறாயா? என்று அந்த வியாதியஸ்தனைக் கேட்க, அவன் இந்த இரண்டு கேள்விகளுக்கும் ஆம் என்று சொல்வானில், அவனிடத்தில் இயேசுகூகருடைய மரண புண்ணியத்தினாலேயன்றி வேறுவிதமாய் நீ கரையேறக்கூடாதென்று நினைக்கிறாயா? என்று இன்னொரு கேள்வி கேட்கவேண்டும்; இதற்கும் அவன் ஆம் என்று சொல்வானென்றால், அப்போது குருவானவர் அவனைப் பார்த்துக் கூறவேண்டியதாவது "ஓ சிநேகிதா! உன் ஆயுள் உள்ளமட்டும் இயேசுகூகரே உனக்குத் தாரகமாயிருக்கவேண்டும்; ஜகதாரகூகனுமிருக்கிற அவர் பாபாத்மாக்களுக்காக அடைந்த மரணமே உன் நம்பிக்கையாயிருக்கவேண்டும்; அது உனக்கு உண்டிற உணவுபோலும்

Anselm's directions for the visitation of the sick.

உடுக்கிற வஸ்திரம்போலும் இருக்கவேண்டும். தேவன் உன்னைப் பார்த்து: நான் உன்னை நியாயம் விசாரிக்கப்போகிறேன் என்று திருவாக்குரைப்பாரில், நீ அவரை நோக்கி: ஆண்டவரே! இயேசுகூகர் அடைந்த மரணம் எனக்கும் உமது நியாயத்தீர்ப்புக்கும் மத்தியிலிருப்பதால், நீர் என்னை நியாயம் விசாரிக்கக் கூடாதென்று சொல்லு. அவர் உன்னைப்பார்த்து: நீ அதிகம் துன்மார்க்கங்களைச் செய்த பாபிஷ்டியாயிருக்கிறாய் என்று சொன்னால், தேவனே! நான் தீசப்பாவிதான்; என் அருமை ரகூகருடைய மரணம் எனக்கும் என் அதிக பாவங்களுக்கும் மத்தியிலிருக்கட்டும் என்று சொல்லு. அவர் உன்னைப்பார்த்து: நீ பாபாத்மாவாயிருக்கிறாய்; உனக்கு நித்தியதண்டனை வரவேண்டியது நியாயந்தான் என்று திருவுளம்பற்றினால், நீ அவரை நோக்கி: அருள்நாதா! அநாதரகூகா! நான் நித்தியதண்டனைக்குப் பாத்திரமுள்ள பஞ்சமபாதகன்தான்; ஆயினும் மானிடஜாதியாரை ஈடேற்றும்பொருட்டு வந்த பரமகுருவினுடைய அந்தப் புண்ணிய மரணமே எனக்குத் தஞ்சம்; அதையே எனக்கும் எனக்கு வரவேண்டிய நித்தியதண்டனைக்கும் இடையில் வைக்கிறேன்; அந்த அருமைநாதனுடைய புண்ணியமன்றி அடியேனிடத்தில் யாதொரு புண்ணியமுமில்லை; அவரது புண்ணியமே என் புண்ணியம் என்று சொல்லு. அவர் உன்னைப்பார்த்து: நான் உன்பேரில் கோபமாயிருக்கிறேன் என்று சொன்னால், நீ அதற்கு, மகாதேவனே! நான் உமது கோபத்துக்குப் பாத்திரவான்தான்; என்றாலும் எனது அருமை ரகூகருடைய மரணம் எனக்கும் தேவரீருடைய கோபத்துக்கும் மத்தியிலிருக்கட்டும்; அவருடைய மரணம் எனக்குத் திக்கும் ஒதுக்குமேயன்றி, இந்த விஸ்தாரமான வையகத்தில் வேறு தாரகமில்லையென்று சொல்வாயாக. இப்படி அந்தக் குருவானவர் வியாதிக்காரனுக்குப் பிரசங்கஞ் செய்யவேண்டும்" என்று எழுதியிருக்கிறார்.

தேவன் திருஅவதாரபுருஷராய் உலகத்தின்கண் எழுந்தருளவேண்டிய முகாந்தரத்தைப்பற்றிப் பேசுகையில், "மானிட ஜாதியாரை ஈடேற்றும்பொருட்டு மத்தியஸ்தராய் உதித்த பரமபுருஷர் சர்வசக்தியுள்ள சாட்சாத் கடவுளாயிருக்கவேண்டியதால், அவர் அகியமாய் மரிக்கவேண்டுமென்ற பிரமாணமுமில்லை; ஆகிர் நிஷ்களங்கராயும் நிர்மலராயும் இருக்கப்பட்ட பரமாத்மாவானதால், அவர் மரிக்கவேண்டிய

His thoughts on the Incarnation.

பாத்தியமுமில்லை; ஆயினும் அவர் தேவனுக்கும் மனுஷனுக்கும் மத்தியஸ்தராய் எழுந்தருளிவந்தமையால், அவர் மனோற்சாகமாய் மரிப்பது அவசியமே; மனுஷன் செய்த பாவத்தை மனுஷனே நிவாரணஞ் செய்யவேண்டியதால், ஆதிமனுஷனுடைய ஆதாமாவது அவன் சந்ததியில் தோன்றின வேறொரு மனுஷனாவது அதைத் தொலைக்கும்படி எற்படுவது நியாயந்தான்; ஆதாமிலுள்ள பாவத்தை அவன்தானே போக்கடிக்கச் சக்தியற்றவன்; ஓ, பரமஞானமே! பரஞ்சோதியே! மனுக்குலத்தோலா வெறித்துக்கொண்டிருந்த நித்தியமரணம், ஒரு புண்ணிய புருஷர் இலவையில் பிராணத்தியாகஞ் செய்தமையால் நின்றுப்போயிற்று; அவர் சிலுவையில் ஆணிகளால் அறையப்பட்டதிலுல் உலகம் ஜெயிக்கப்பட்டது; துஷ்ட ஆவிகள் நித்தியதண்டனையை அடைந்தன. கள்ளர் நடுவில் ஓர் கள்ளனைப்போல் தூக்கப்பட்ட அவரால், பிரசாதங்களோடே நித்தியதண்டனையை அடைய வேண்டிய மனுஷருக்கு நித்திய இரகஷிப்புண்டாயிற்று; அவர் சரீர மரணத்தை அடைந்ததிலுல் ஆத்துமமரணமும் நித்தியமரணமும் நாசமாய்ப்போயிற்று. ஆ, இதென்ன ஞானம்! இதை யாரால் அளவிடக்கூடும்" என்று ஆன்ஸல்ம் என்பவர் எழுதியிருக்கிறார்.

இவ்வுத்தமருடைய தாழ்மையைப்பற்றி: "அவர் தரித்திரமுள்ளவராய் எழுந்தருளினபோதிலும் அவர் ஐசுவரியம் போகவில்லை; உள்ளே ஐசுவரியமுள்ளவராயும் வெளியே தரித்திரமுள்ளவராயும் தோன்றினார்; உள்ளே தேவ சம்பூரண சம்பத்துள்ளவர், வெளியே தரித்திரத்தை அடைந்து அநாதிபோல் காணப்பட்டவர்; அவரது திரு உதிரத்தால் நம்முடைய பாவமாகிய சுவை போய், நமக்கு இரகஷிப்பாகிய வெண்வஸ்திரம் கிடைக்கிறது; சகல கல்யாணகுண சம்பன்னராய் விளங்கின்ற சாட்சாத் கடவுளிடத்தில் நாம் நம்முடைய தரித்திரத்தோடே போகாதபடிக்கு, அவர் மனுவுருவெடுத்துத் தரித்திராய் வெளிப்பட்டார்; நாம் ஆத்தும ஐசுவரியம் அடையும்படி அவர் தமது திருச்சரீரத்தில் தரித்திரமுள்ளவர்போல் காணப்பட்டார். இப்படி நம்மைப்போல் அவர் வறுமையுள்ளவராய் வாசமிடில், அவர் நமதுமேல் வைத்த உன்னத அன்பு அத்தனை பிரசாசமாய்த் தோன்றமாட்டாது" என்று சொல்லுகிறார்.

Anselm's observations on the Humility of Christ.

அவர் எழுதிய நூல்களில் இன்னும் இப்படிப்பட்ட அநேக நல்ல வாக்கியங்கள் இருக்கின்றன; அவருடைய சிறந்த தேவபக்தியை

விளக்குவிக்கிற வாக்கியங்களில் இன்னும் ஒன்றைச் சொல்லுகிறோம். சகல அண்டசராசரங்களையும் ஆக்கினைத்து ஆண்டுவரும் சர்வவல்லபமுள்ள தேவனைத் துதிப்பதில், "கர்த்தாவே! உமது போன்பாகிய காந்தத்தால் என்னை உம்மிடத்தில் இழுத்துக்கொள்ளும்; நான் உமது சிருஷ்டியாயிருப்பதால் உமக்கே சொந்தமாயிருக்கிறேன்; உமது அன்பின் பாசத்தால் கட்டப்பட்டு உமதடிமையாயிருக்கும்படி அருள் புரியும். நசனே! உமக்குமுன்பாக இருக்கிற என் இருதயத்தை நீர் பார்க்கிறீர்; அதற்குள் பெரிய யுத்தம் நடக்கிறபோதிலும், அது தன்னுலே ஒரு நன்மையுஞ்செய்யச் சக்தியற்றதென்று நீர் அறிவீர். நன்மைக்கடலாயிருக்கிற தேவரே! நான் நன்மைசெய்யும்படியாகக் கடாக்ஷிக்கவேண்டும்; உமது அன்பின் ஆழத்தை நான் பார்க்கும்படி கிருபைசெய்யும்; நான் கேட்கிறேன், தேடுகிறேன், தட்டுகிறேன்; ஒரு பிசைக்காரனைப்போல் நான் கேட்கும்படி கிருபைபாலித்த தேவரீர், நான் பெற்றுக்கொள்ளும்படி அனுக்கிரகஞ்செய்யும்; உமது அருளைத் தேடும்படிசெய்த நீர், அதை நான் கண்டுகொள்ளும்படி கடாக்ஷித்தருளும்; உமது கிருபையின் கதவைத் தட்டும்படிசெய்த நீர், அதை எனக்குத் திறந்தருளவேண்டும்; உம்மை நோக்கிக் கெஞ்சுகிற உமதடியானுக்கு நீர் உமது அருளைக் கொடாவிட்டால், பின்னை யாருக்குக் கொடுக்கப்போகிறீர்? உமது கிருபையைத் தேடுகிற நான் அதைக் கண்டுகொள்ளாவிட்டால், பின்னை யார்தான் அதைக் காணப்போகிறார்கள்? உமது இரக்கவாசலைத் தட்டுகிற எனக்கு நீர் அதைத் திறவாவிடில், யாருக்குத் திறக்கப்போகிறீர்? ஓ, அருள் வள்ளலே! அற்புதமூர்த்தி! ஆதித ஸ்வரூபனே! உம்மை நோக்கிப் பிரார்த்திக்கிறேனுக்கு உமது கருணைகடாக்ஷ வீட்சணயத்தை மிகுதிபடுத்தி வீடாய்தீர்த்து இரகஷிக்கவில்லையென்றால், அப்படிப் பிரார்த்தியாதவர்களுக்கு என்ன பாக்கியம் கிடைக்கப்போகிறது? என் உள்ளத்தில் இப்படிப்பட்ட எக்கத்தையும் ஆவலையும் ஜெனிப்பித்தவர் தேவரீர்தான்; அந்த ஆவலைத் தீர்த்து அருளாநந்தத்தை அளிப்பவரும் தேவரீர்தான். என் மனமே! நீ ஆகாயத்தைக் கடந்தவராய், ஆகியந்தமில்லாதவராய், அருளாநந்த ஸ்வரூபியாய் விளங்காநின்ற இயேசுகுகையே சார்ந்திரு. கொடியானது செடியோடே ஒட்டிக்கொண்டிருக்கும்வண்ணமாய், நீ அவனை

விட்டுப் பிரியாமல் அவர் பாதாரவிந்தத்தைப் பற்றிக்கொண்டிரு" என்று சொல்லுகிறார்.

His character and death.

இப்படிப்பட்ட அபிசுவசனக்களை ஆன்ஸல்ம் என்பவர் எழுதியதுல்களில் வாசித்துப் பார்த்தால், அவருக்குள்ளிருந்த தேவபக்தியும் உத்தமகுணமும் நன்றாய் விளங்குகிறது. இவர் காண்டர்புரி சிரேஷ்ட கன்காணியாயிருக்கையில் ஒரு பெரிய காரியம் செய்தார். இதுவரையில் இங்கிலாந்து தேசத்தில் அடிமை வியாபாரம் நடந்து வந்தது. மனிதரைப் பிடித்து ஆடுமாடுகளைப்போல் விற்றுவந்தார்கள். இது ஆன்ஸல்ம் என்பவருடைய மனதுக்கு அதிக வருத்தத்தை உண்டாக்கி, ஒரு பெரிய சங்கக்கூட்டம் கூடும்படி செய்து அதில், மனிதரை இனிமேல் ஒருவரும் இங்கிலாந்து தேசத்தில் அடிமைகளாக விற்கவேபடாதென்று நிர்மானமாயிற்று. ரோமாபுரிப் பாப்புவுக்குக் கீழடங்கி நடந்ததும், அக்காலத்தில் எப்பக்கமும் பரவியிருந்த மூடபக்திக்குச் சார்பாயிருந்ததுமே அவர்பேரில் நாம் கூறவேண்டிய குற்றமாயிருக்கிறது; ஆயினும் "குப்பையிலிருந்தாலும் குன்மெணி மங்காது" என்பதுபோல் அவர் எழுதிய நூல்களில் வீண்பக்தியாகிய குப்பையிருந்தாலும், அசல பக்திக்குரிய சத்தியங்கள் குன்மெணிபோல் அவரது பக்தியைச் சிறப்பித்திருக்கின்றனவாயிருக்கின்றன; அவர் இப்படிப் பதினாறு வருஷகாலம் சிரேஷ்ட அதிபராயிருந்து திறம்பாமல் நடந்து வந்து, எழுபத்தாறும் பிராயத்தில் மரித்துப்போனார்.

Spread of the Gospel.

சென்ற நூற்றாண்டில் நடந்ததுபோல் இந்த நூற்றாண்டிலும் கிறிஸ்துமார்க்கம் ஹங்கேரி, டென்மார்க், நார்வே, சுவீடன்முதலான மிசோப்பாகண்டத்து நாடதேசங்களில் பிரசித்தமாகிவந்தது. இராஜாக்களிலும் மேன்மக்களிலும் அநேகர் மதாபிமானத்திலும் எவப்பட்டு, சத்தியமார்க்கம் அநேக ஜனங்களுக்குள் செல்லும்படி வேண்டிய முயற்சிகள் செய்தனர். ஹங்கேரி தேசத்தில் ஸ்தேவான் என்ற பெயருள்ள ஒரு இராஜனிருந்தார்; அவர் தேவபக்தியில் மிகவும் சிறந்தவராயிருந்தபடியால், அவரும் கிறிஸ்துமார்க்க குருமாரோடு சேர்ந்துகொண்டு ஜனங்களுக்குக் கிறிஸ்துவின் இரகசியமுறைகளை எனக் கூறிவந்தார்; இப்படிப்பட்ட அரசர்களும் இந்த நூற்றாண்டில் இருந்ததைப் பார்க்கும்போது, "தேவன் தமது அருள்வாக்கின்படி தமது சபையோடு சதாகாலமுமிருந்து அதை ஆண்டு நடத்திவந்தார் என்பது பிரத்தியக்ஷமாயிருக்கிறது."

QUESTIONS ON ELEVENTH CENTURY.

பதினோராம் நூற்றாண்டின் சரித்திரத்தின்பேரில் கேள்விகள்.

1. இந்த நூற்றாண்டில் கிறிஸ்தசபையின் நிலைமை யென்ன?
2. ஏழாம் கிரகரிக்கு பழைய பெயர் என்ன? இவரைப்பற்றி உமக்கு என்ன தெரியும்?
3. பாப்புவுக்கும் இங்கிலாந்து தேசத்து சக்கரவர்த்திக்கும் நடந்த சச்சரவென்ன?
4. சிலுவையுத்தம் ஏன் பிரசித்த மிதம் பாத?
5. குருசேட்ஸ் என்னும் முதல் யுத்தத்தைப்பற்றித் தெரிந்ததை எழுதும்.
6. ஆன்ஸல்ம் என்பவரைப்பற்றிச்சுருக்கமாய்எழுதுக. இவர் எழுதியதுகளில் எது? இங்கிலாந்து தேசத்திற்கு இவரால் விளைந்த நலமை யென்ன?
7. 1077, 1085, 1095, 1099, 1092—ம் வருஷங்களில் நடந்த விசேஷங்கள் எவை?
8. கினோல்ஸ்ஹ ஊரில் கூடிய சங்கத்தின் நோக்கமென்ன?

பன்னிரண்டாம் நூற்றாண்டு.

இரண்டாம் பாஸ்கல் என்னும் பாப்பு, ஏழாம் ஹென்ரியின் மரணம், பாப்புகளுக்கும் இராயர்களுக்கும் நேரிட்ட சச்சரவுகள். இங்கிலாந்து ராஜ்ய அரசனுடைய இரண்டாம் ஹென்ரி, தோமஸ் பெக்கற் என்பவர்கள், இரண்டாம் சிலுவையுத்தத்தில் உண்டான அபயம். பிலிப்பு, ரிச்சர்ட் என்பவர்கள் மூன்றாம் யுத்தத்தை நடப்பித்தல். ரிச்சர்ட் என்பவன் சலடின் என்பவனோடு சமாதான உடன்படிக்கை செய்தல். இந்த யுத்தங்களால் நேரிட்ட நஷ்டங்கள். ரிச்சப்புன்னியம். பாவமன்னிப்புச் சீட்டு. கல்விவிர்த்தி. ஸ்பெயின்பட்டணத்துப் பேரரு வால்டோ. கிறிஸ்துமார்க்கப் பிரபலத்துக்காக அவர் செய்த முயற்சிகள். அவருடைய மரணம். சலிசேஷப் பிரபலம்.

Pontificate of Pascal II. Deposition and death of Henry IV.

போன நூற்றாண்டில் இருந்ததுபோல் இந்த நூற்றாண்டிலும் அதிகாரமையும் அவபக்தியும் அதிகமாய்ப் பெருகிவந்தது. பாப்புகள் தங்களை சுயமேன்மையையும் அதிகாரத்தையும் பிரதானமாய் நாடி நடந்துவந்தார்கள். சென்ற நூற்றாண்டின் கடையில் பாப்புப்பட்டம் பெற்ற இரண்டாம் பாஸ்கல் என்பவர் 1102—ம்

வருஷத்தில் ரோமாபுரியில் ஒரு சங்கம் வைத்து, அதற்கு ஐன்காம் ஹென்ரி என்னும் இராயன் வரவேண்டுமென்று கட்டளையிட்டார்; அவர் அப்படி வராமலிருந்ததைக் கண்டு பாப்பு என்பவர் அவரைச் சபைக்கு விலக்கி, அவருடைய குமாரன் தன் தகப்பனுடனே யுத்தஞ் செய்யும்படி அவனே எழுப்பிவிட்டார்; ஹென்ரி என்னும் அரசன் தன் குமாரனுடைய உத்தரவின்படி காவலிலிருந்தார். "வளர்த்த கடாய் மார்பிலே பாய்ந்தது" போல் தன் பின்னே தனக்குச் செய்த துரோகத்தையும் கன்னிகேட்டையும் அரசன் நினைத்து, துயரம் பொறுக்கமாட்டாமல் 1106-ம் வருஷத்தில் இறந்துபோனார்.

Renewal of the contests between Popes and Emperors.

அப்பால் அவருடைய குமாரனுடைய ஐந்தாம் ஹென்ரி என்பவனுக்கும் பாப்புவுக்கும், பாப்புவை ஏற்படுத்த வேண்டிய அதிகாரம் யாருக்குரியது என்ற விஷயத்தைப்பற்றிப் பெரிய வாக்குவாதம் சேரிட்டது; அது வெகுகாலம் தீராமல் அநேக யுத்தங்களுக்கும் கலகங்களுக்கும் காரணமாயிருந்தது; கடைசியில் இராஜாக்களுடைய கதி தாழ்ந்தும், பாப்புகளுடைய கதி உயர்ந்தும்போயிற்று.

இப்படிப் பாப்புகளுடைய அதிகாரம் மேன்மேலும் வளர்ந்து வந்தபடியால், அதைக் குறைக்கும்படி அநேக இராஜாக்கள் பிரயாசப்பட்டனர்; அப்படியே இங்கிலாந்து தேசத்தில் இராஜாவாயிருந்த இரண்டாம் ஹென்ரி என்பவர் தமக்குச் சிறுவயதுக்கு முன்னுக்கு கண்ணுயிருந்த தோமாஸ் பெக்கற் என்பவரை காந்தர்புரி பட்டணத்துக்குப் பிரேஷ்ட அத்தியக்ஷராக்கினால், பாப்புவினுடைய வல்லமை அடங்குவதற்கு ஏதுவாயிருக்கும் என்று நினைத்து அவரை அந்த உத்தியோகத்தில் ஏற்படுத்தினார்; பெக்கற் என்பவர் 1118-ம் வருஷம் லண்டன் நகரில் பிறந்தவர்; முதலாவது அவ்விடத்திலும், பிற்பாடு இத்தாலியா தேசத்திலுமுள்ள சர்வகலா வித்தியாசாலைகளில் படித்துக் கல்வியில் நிபுணராயிருந்தமையால், 1158-ம் வருஷம் இரண்டாம் ஹென்ரி என்னும் இராஜா இவரைத் தமக்குப் பிரதான மந்திரியாக வைத்துக்கொண்டார்; இவர் அக்காலத்துக்குத் தக்கபடி அரமனை உத்தியோகஸ்தரைப்போல் வெகு டம்பமுள்ளவராயிருந்தார்; ஒரு சமயத்தில் இவர் இராஜாவோடே பவனிவரும்போது, தம்மோடேகூட 700 பட்டவர்த்தனரும் இன்னும் சில மேன்மக்களோடுமல்

லாமல், 1200 குதிரை வீரரையும் கொண்டுபோனார்; இதற்குச் சொற்ப காலத்துக்குப்பின் ஹென்ரி என்னும் இராஜா இவர்பேரில் இருந்த இகேஷ வாஞ்சையினாலே முன் சொன்னதுபோல் 1162-ம் வரு இவருக்குக் காந்தர்புரி பட்டணத்தின் பிரேஷ்ட அத்தியக்ஷ உத்தியோகம் கொடுத்தார்; ஆயினும் அவர் அந்தப் பெரிய உத்தியோகத்தைப் பெற்றமாத்திரத்தில், "அன்னமிட்ட வீட்டைக் கன்னமிட்டதுபோல" பாப்புவின் பட்சத்தில் நின்று அரசனை விரோதிக்கத் தலைப்பட்டார். அரசனுடைய உத்தியோகஸ்தர் தன்னுடைய அதிகாரத்திற்கு அடங்கவேண்டுமென்று பிரயாசப்பட்டார்; பிரேஷ்ட கண்காணியோ பாப்புவே கிறிஸ்துசபை முழுமைக்கும் தலை, ஆகையால் எவரிலும் உத்தியோகஸ்தர் அரசனுக்குச் சிறப்பட்டவர்களல்லவென்று சாதித்தார். அரசன் 1164-ம் வருஷம் கிளாரண்டன் என்னும் இடத்தில் மகா சபையொன்று கூடும்படிசெய்து, அதில் (1) குருமாரின் சகல வியாச்சியங்களும் அரசனின் அதிகாரிகளால் தீர்க்கப்படவேண்டுமென்றும், (2) அரசன் உத்தரவின்றி ஒருவரும் பாப்புவுக்கு அபயமிடப்படாதென்றும், (3) தனிப்பட உத்தியோகஸ்தர் ஒருவரும் அரசன் உத்தரவில்லாமல் தன் தேசத்திற்று வெளியே போகப்படாதென்றும் இன்னும் பல விதிகளையும் பாப்புவினுடைய அதிகாரத்தைக் குறைக்கத்தக்க சில சட்டங்களையும் அரசன் கொடுத்தபோது, பெக்கற் என்பவர் அதற்குச் சம்மதிக்கக் கூடாதென்று புறப்பட்டுப் பிரான்ஸ் தேசத்துக்குப் போய்விட்டார்; பிற்பாடு அரசன் அவருக்குச் சற்றுத் தாழ்ந்து கொடுத்து மறுபடியும் இங்கிலாந்து தேசத்தில் வந்து தமது உத்தியோகத்தைப் பார்க்கும்படி கேட்டுக்கொண்டார்; இப்போதாவது அரசன் மனங்கோணுமல் நடக்கவேண்டுமென்று பெக்கற் என்பவர் பாராமல், முன்னைவிட அதிக கர்வமாயும் பெருமையாயும் நடந்தார்; அதை அவ்வரசன் கண்டு மனந்தாளாமல் ஒரு சமயத்தில் அவர்பேரில் தனக்கு மனஸ்தாபமாயிருக்கிறதுபோல் இந்தப்பெக்கற்றைத் தொலைக்கஒருவராலும் ஆகாதா வென்று பேசினார்; அதை அவருடைய உத்தியோகஸ்தரில் சிலர் கேட்டு, பெக்கற் என்பவரைக் கொல்லும்படி அரசன் சொன்னாரென்று நினைத்து ஒருவரும் அறியாமற்போய், காந்தர்புரி கோவிலில் ஆராதனை செய்துகொண்டிருந்த அவரை மூளைசிதற அடித்துக் கொன்றுபோட்டார்கள்; இது 1171-ம் வருஷத்தில் நடந்தது. அதை அரசன் கேட்டு, ஐயோ! நாம் நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்றுமாயிருக்கிறதே

என்று சொல்லித் தூக்கப்பட்டார்; இந்தச் செய்தி ரோமாபுரிப் பாப்புகாகிய மூன்றாம் அலெக்சந்தர் என்பவருக்கு வந்தெட்டினபோது, ரென்னி என்பவனே முலகிலே விடப்போகிறதை என்று சபதங் கூறினவர்போல் கடந்தார்; அதை அவ்வளவில் கேட்டு, பூகோளைக் கண்ட எலி பதுங்குவதுபோல் பாப்புவுக்குப் பயந்து, தாம் அது விஷயத்தில் எவ்வளவும் சம்பந்தப்பட்டவரல்ல என்றும், தமது கருத்தை அறியாத சில தூர்த்தர் அப்படிச் செய்தார்களென்றும் சொல்லி, பாப்புவினுடைய கோபம் ஆறத்தக்கதாக அநேக நிலியங்களை அனுப்பினதுமன்றி, பெக்கற் என்பவருடைய சமாதியில் ஒரு இரவெல்லாந் திருந்து சபம்புரிந்த சக்கிபாகேன்னையால் வார் அடிகளும் பட்டுக்கொண்டார். 1173-ம் இவ முதல் பெக்கற் என்பவர் அற்பியசிஷ்டர்களில் ஒருவராக எண்ணப்பட்டேருகிறார். காந்தர்பரி அத்தியக்ஷர் ஆலயத்திலிருக்கும், அவருடைய சமாதியில் அநேக அற்புதங்கள் நடந்ததாகக் கதை சொல்லுவார்கள்.

The Second Crusade preached by St. Bernard and its failure.

இப்படிப் பாப்புவுடைய காரியமே மேன்மேலும் ஸ்திரமடைந்து வந்தது; அவர்களுடைய பிரயத்தனங்களால்போன நூற்றாண்டின் கடைசியில் ஒரு இலையுத்தம்நடந்ததுபோல் இந்நூற்றாண்டிலும் இரண்டு யுத்தங்கள் நடந்தன; மேற் சொன்ன யுத்தமோ ஜருசலேமைப் பிடித்து அதற்குக் காட்பிரி என்பவனை இராஜாவாக ஏற்படுத்தினதாக மூன்று சொல்லியிருக்கிறோமே; அவர் இறந்துபோன பிற்பாடு ஜருக்கருடைய சை பெலப்பட்டு ஜருசலேமைப் பிடிக்க ஆரம்பித்தார்கள்; அச்சமயத்தில் அங்குள்ள கிறிஸ்தவர்கள் தோமாபுரிப் பாப்புவுக்கும், ஐரோப்பாகண்டத்து அரசர்களுக்கும் தங்களுடைய ஆபத்தைத் தெரியப்படுத்தி, இன்னொரு விசை திருச்சேடே யுத்தஞ்செய்ய வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்; அக்காலத்தில் பாப்புவாயிருந்த மூன்றாம் யூஜினியஸ் என்பவர் அதைக் கேட்டு, ஜனங்களை யுத்தத்துக்கு எழுப்பும்படி பெர்னார்ட் என்னும் ஒரு சந்நியாசியை அனுப்பினார்; இவர் பிரான்ஸ் தேசத்திலிருந்த பேரரசைப்பார்க்கிலும் அதிகச் சமர்த்தர்; [illegible] இருபத்தைந்து வயதில் இல்லாதபடியால் பிரான்ஸ் ராஜாவினிடத்திலுள்ள செல்வாக்கால் என்னும் வரியில் ஒரு [illegible] அதற்குத் தலைவராயிருந்தவர், இவர் பாப்பு [illegible] அதிக வைராக்கியசாலி. என்னுமரியாளை வணங்

குவது சரியென்றும், உத்தரிக்கும் ஸ்தலம் உண்டென்றும் சாதித்தார். சபைப் பிதாக்களில் இவர் கடைசியென்று எண்ணப்படுகிறார். இவரால் சுமார் 160 கன்னியாசமடங்கள் ஏற்பட்டதாகச் சொல்லுகிறார்கள். அநேக அற்புதங்கள் இவரால் நடந்ததாக ரோமைசபை சரித்திரக்காரர் கூறுகிறார்கள். இவர் கல்விமானும், வேதசாஸ்திரத்தில் தேர்ந்தவரும், சமயவாதத்தை அரிய சமர்த்துடன் நடத்தினவரும், அருந்தபம் புரிந்தவரும், வாக்கு வல்லவராயும் இருந்தமையால், ஐரோப்பாகண்டத்தில் பெரியோர் சிறியோர் யாவரும் அவரைப் போற்றி, தங்களுக்குண்டான வியாசியங்களிலும் தர்க்கங்களிலும் அவரை மத்தியஸ்தம் வைத்து, அவர் சொல்வதை உண்மையாய்க் கேட்டு நடப்பார்கள்; இப்படிச் சகல விஷயங்களிலும் தேர்ந்தவராயும் எல்லாராலும் புகழ்பெற்றவராயுமிருந்த இவரை, பாப்புவானவர் இந்தக் காரியத்துக்கு ஏற்படுத்தினபடியால் அவர் வேர்ன்தேசமும், போய், ஜனங்களெல்லாருக்கும் வெகு சாதுரியமாய்ப் பிரசங்கம்பண்ணினார்; அவருடைய பிரசங்கத்தைக்கேட்ட பிரான்ஸ் தேசத்து அரசனுடைய ஏழாம் லூயி என்பவரும், ஜர்மனி தேசத்து இராயனுடைய மூன்றாம் கான்ராட் என்பவரும் யுத்தத்துக்கு ஏற்பட்டு மூன்றுலட்சம் ஜனம் திரைந்த ஒரு பெரிய சேனையைச் சேர்த்துக்கொண்டு ஜருசலேமுக்குப் புறப்பட்டுப் போய், படியினாலும், பஞ்சத்தினாலும், கப்பல் சேதத்தினாலும், இன்னும் பலவகையான சங்கடங்களினாலும் மிகவும் வருந்தி, ஜருக்கியோடே யுத்தஞ் செய்ததில் அபஜெயப்பட்டு வெட்கத்தோடு தங்கள் தங்கள் தேசங்களுக்குத் திரும்பினார்கள்.

Third Crusade undertaken by Frederic, Philip, and Richard.

இப்படி இந்த இரண்டாம் இலுவை யுத்தம் அனுகூலப்படாதபடியினாலே பலஸ்தீன தேசத்திலுள்ள கிறிஸ்தவர்களின் ஸ்திதி மிகவும் பிரயாசமாயிருந்தது. ஜருக்கருடைய சக்கரவர்த்தியாகிய சலடின் என்பவன் 1187-ம் வருஷத்தில் கிறிஸ்தவர்களோடே யுத்தஞ்செய்து, அவர்கள் வசத்திலிருந்த எல்லா பாகங்களையும் பிடுங்கிக்கொண்டான்; ஜெருசலேமாசாரத்தை ஐரோப்பியர் தெல்லியுற்று தக்காசாரத்தில் அமிழ்ந்திருந்தார்கள்; அக்காலத்தில் பாப்புவாயிருந்த மூன்றாம் இனசெந்து என்பவர் மறுபடியும் யுத்தத்துக்கு ஆரம்பஞ் செய்யவேண்டுமென்று கட்டளையிட்டார்; இது மூன்றாம் இலுவை யுத்தம்; இதற்கு அறுபத்தேழு வயதாயிருந்த ஜர்

மனி தேசத்து இராயனுடைய பிரதானி பார்பரோசோ என்பவரும், பிரான்ஸ் தேசத்து அரசனுடைய பிலிப்பு அகுஸ்து என்பவரும் இங்கிலாந்து தேசத்து அரசனுடைய முதலாம் ரிச்சர்ட் என்பவரும் காண்டர்புரி பிரேஷ்ட கண்காணியாயிய பால்ட்வின் என்பவரும் உடன்பட்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்களுடன் புறப்பட்டுப் போனார்கள்; பிரதானி பார்பரோசோ என்பவர் அநேக யுத்தங்களில் ஜெயித்துக்கீர்த்திப் பிரஸ்தாபமடைந்தும், தற்செயலாய் ஒரு ஆற்றில் விழுந்து இறந்துபோனார். பால்ட்வின் அத்தியட்சர் பலஸ்தீனதேசத்தில் இறந்துபோனார். பிலிப்பு அகுஸ்து என்பவர் கிறிதாளன் யுத்தஞ்செய்து பார்த்தும் ஜெயங் கிடையாமையினால் தமது தேசத்துக்குத் திரும்பிப் போய்விட்டார். இங்கிலாந்து தேசத்து அரசனுடைய ரிச்சர்ட் என்பவர் மாத்திரம் துருக்கனாவிடேன் தொடேன் என்று அவர்களோடே யுத்தஞ்செய்தார்; அதிலெல்லாம் அவர்கள் மடங்காதசைப் பார்த்து மனக்தளர்ந்து மூன்றவருஷம், மூன்றுமாதம், மூன்றுநாள், மூன்று மணிநேரம்வரையிலும் யுத்தம் நடவாதபடிக்கு நிறுத்திவைக்கவேண்டி மென்று அவர்களோடே ஒப்பந்தம் பண்ணினார்; இப்படி அவர் 1192–ம் வருஷத்தில் உடன்படிக்கை செய்தபிற்பாடு தம்முடைய தேசத்துக்குத் திரும்பினார்; இந்தமதப்பைத்தியத்தைப்பற்றியகதையை இனி நாம் விவரிக்கவேண்டியதில்லை; இதற்குப் பிற்பாடு பலமுறை யுத்தங்கள் நடந்தும் அவைகளாலே காரியம் சித்திக்கவில்லை; இருநூறு வருஷகாலமாய் நடந்த இந்த யுத்தங்களிலுள் ஐரோப்பாகண்டமெல்லாம் கலங்கியிருந்தது; குடிகளுக்கு மிருந்த கஷ்டங்கள் கொஞ்சமன; எறக்குறைய இருபதுலட்சம் ஜனங்கள் மாண்டுபோனார்கள்; பொருள் சஷ்டம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லக்கூடாது.

Richard concludes a truce with Saladin, A.D. 1192.

இந்த யுத்தங்களினாலே திருச்சபைக்கும் பல தீமைகள் கொஞ்சமன. ரோமாபுரிப் பாப்புகள் பணஞ் சம்பாதிக்கவென்று பாவமன்னிப்புச் சீட்டுகளை ஜனங்களுக்கு விற்கும்படியாக ஒரு உபாயஞ் செய்தார்கள். கிறிஸ்துநாதருடைய புண்ணியமும், கன்னிமரியாள் முதலான அர்ச்சிஷ்டர்களுடைய புண்ணியமும் ஒரு களஞ்சியம்போல் சபையிலிருக்கிறதென்றும், அதைத் திறக்கும் திறவுகோல் பாப்புகள் வசத்திலிருக்கிறதென்றும், அதை அவர்கள் தங்கள் இஷ்டப்படி எல்லாருக்கும் தானஞ் செய்யலாமென்றும், அதனாலே ஜனங்கள் செய்த திரிகாலப் பழிபாவங்களும் விலகிப்போகுமென்றும், அதன் பலன் ஒருவாறு மரித்தவர்களுக்கும் செல்லுமென்றும், இன்னும் இப்படிப்பட்ட அகேகம் விபரீதங்களைச் சொன்னார்கள். மானிட ஜாதியாயெல்லாரும் இயேசு ரக்ஷகருடைய புண்ணியத்தினால்மாத்திரம் கடைத்தேறுகிறார்களென்பது நிச்சயம்; அப்படியிருக்க மற்றவர்களுக்குப் புண்ணியமிருப்பதெப்படி? அந்தப் புண்ணியம் அவர்களுக்கும் போய் மிஞ்சிப்போகிறது என்று சொல்வது எவ்வளவு விபரீதம்; ஆயினும் அவர்களுக்கு இப்படிப்பட்ட மிஞ்சின புண்ணியம் உண்டென்ற கொள்கையை நாட்டி, பாப்புகள் பாவமன்னிப்புச் சீட்டுகளை ஜனங்களுக்குக் கோடித்துப் பணம்பறித்தார்கள்; இதனாலே அவர்களுக்கு அதிக திரவியமுண்டாயிற்று; பணம் வேண்டிய சமயங்களிலெல்லாம் இந்தச் சீட்டுகள் அவர்களுக்கு வெகு உதவியாயிருந்தன.

Evils produced by these wars. Works of Supererogation. Indulgences.

மதவிஷயத்தில் இவ்வளவு சீர்கேடிருந்தபோதிலும் கல்விவிஷயத்தில் தேர்ச்சியுண்டாயிருந்தது; இந்த நாற்றாண்டில் கொன்ஸ்தாந்தினோபுரியில் கண்காணியாயிருந்த பிசாவேல் அங்கியோனு என்பவர் கல்விவிர்த்திக்கேற்ற பல விசேஷ முயற்சிகள் செய்தார்; இவர் கிரேக்கதேசத்து சான்றோரியாகிய அரிஸ்டாட்டில் என்பவர் செய்த நூல்களை நன்றாய் ஆராய்ச்சி செய்தவராயிருந்தார். கிறிஸ்தசபை உண்டான தவக்காலத்தில் பிளேற்றோ என்பவருடைய சான்றாண்மைகளை கிறிஸ்தவர்களுக்கு அதிகமாய் வழங்கிவந்தன; அந்தகார யுகங்களில் கிறிஸ்தவர்கள் அரிஸ்டாட்டில் என்பவர் செய்த நூல்களை முழுமையாய்ப் படித்து வந்தார்கள்; இவ்விருவகை நூல்களும் ஒருவாறு கிறிஸ்துமார்க்கத்தின் சுத்தத்தையும் சிறப்பையும் கெடுத்தக்காதாயும், கிறிஸ்தவர்களுடைய பக்தியைக் குறைத்துக்தாயுமிருந்தது. இந்த நாற்றாண்டில் வட்சணம், வாக்கலக்காரம், தியாசாஸ்திரம், அற்தணிதம், சங்கீதம், கேத்திரகணிதம், வானசாஸ்திரம் என இவ்வேழுவகை சாஸ்திரங்களைக் கிறிஸ்தவர்கள் அதிகமாய்ப் பயின்றுவந்தார்கள்; இவைகளைத் தவிர வேதசாஸ்திரத்தையும் படித்தார்களாயினும் அது சாதாரண லாத சக்கையைபோலிருந்தது; ஐரோப்பாகண்டத்தில் கல்வி விர்த்தியடைந்ததுபோல் இங்கிலாந்து தேசத்திலும் அது அதிக விர்த்தியடைந்துகொண்டுவந்தது; ஆக்ஸ்போர்ட்பட்டணத்திலும், கேம்பிரிட்ஜ்

Revival of learning.

பட்டணத்திலும், ஸ்தாபிக்கப்பட்டிருந்த சர்வகலாசாலைகள் இந்த நூற்றாண்டில் கல்வியிலையத்தில் கீர்த்திபெற்றிருந்தது.

இவ்விதமாய் அநேகம் நிஜ்ஞானவர்கள் கல்வியில் சேர்ந்தவர்களாயிருந்தமன்றி, சிலர் தேவபக்தியிலும் நிறைந்தவர்களாயிருந்தனர்; மிக்காட்டில் சொன்னமனாபூத்தது போல், இந்த அந்தகாரயுகத்திலும் பக்தர் சிலர் இருந்தார்கள்; அவர்களில் பேதுரு வால்டோ என்பவர் பிரசித்தமானவர்; வால்டென்சு என்பது இவருக்கு மறுபெயர். இவர் பிரான்ஸ் தேசத்திலுள்ள லீயோன் பட்டணத்தில் பிறந்தவர்; 1160-ம் வருஷத்தில் மேற்சொன்ன பட்டணத்தில் வர்த்தகஞ்செய்து அநேக திரவியங்களைச் சம்பாதித்து அவ்விடத்தில் ஆஸ்திவந்தர் என்று பெயர் பெற்றவராயிருந்தார்; ஒருநாள் இரவில் இவரும் இவருடைய சிநேகிதரும் விருந்து சாப்பிட்டபிற்பாடு, அவர்களெல்லாரும் ஆல்லாசபையில் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருக்கும்போது அவர்களில் ஒருவன் சடிதியாய் மூர்ச்சித்துக் கீழேவிழுந்து பிரேதமாய்ப் போனான்; அவர் அதைக் கண்டு மனுஷருடைய ஜீவன் இப்படித்தான் நீர்மேல் குமிழிபோல் நிலையற்றதென்று உணர்ந்து, பரமசிந்தையடைந்து, நிறைந்தாகருடைய திருவடி சேர்ந்தார்; இப்படித் தேவன் தமக்கு ஆச்சரியமானவிதமாய் அருளின பரிசுத்த பாக்கியத்தை மற்றவர்களும் அடையவேண்டுமென்று இவர் அபேட்சைகொண்டு 1150-ம் வருஷம் தன்னுடைய வர்த்தக முயற்சிகளை ஒழித்துவிட்டுத் தன் திரவியங்களையெல்லாம் தரித்திரருக்குத் தானம்பண்ணினபிற்பாடு, நிறைந்தவின் இரகசியமகத்துவங்களை யாவருக்கும் கூறவேண்டுமென்று எம்பட்டார்; அக்காலத்தில் வல்கத் என்னும் லத்தின்பாஷை தேசகமேயன்றி வேறு தேசகமப் பிரதிகள் இல்லாதிருந்தும், அவைகளும் சங்கியாமெடல்களில் அகப்பட்டுச் சாதாரண ஜனங்களுக்குத் தெரியாமலிருந்தபடியினாலும், இவர் அநேகம் பொருட்களைச் செலவிட்டு ஒரு தேசகமத்தை வாங்கி ஜனங்களுக்கு உபயோகமாக நாலு சுவிசேஷங்களையும் பிரான்ஸ்பாஷையில் மொழிபெயர்த்துப் பிரசுரஞ்செய்தார்; இவர் சத்தியதேசகமத்தை வெகு ஆவலோடும் கரிசனத்தோடும் படித்து, பரிசுத்தமதத்தின் தவறுகளைக் கண்டுபிடித்து, எல்லாருக்கும் சத்தியமார்க்கத்தைக்குறித்து ஞாலேபதேசஞ்செய்து, நிறைந்தாகளையே பரமதுரு, அவரது புண்ணியத்தினாலேயே பரதியடையவேண்டுமென்று பிரசங்கித்துவந்தார். இதுமன்றிச் சில

Peter Waldo of Lyons in France.

ஜனங்களிடத்தில் அநேகம் வேதாகமப் பிரதிகளைக் கொடுத்து, அவர்கள் வாழுருக்குப் போய் அவைகளை ஜனங்களுக்குள் பிரசித்தப்படுத்தும்படி நிட்டஞ்செய்தார்; அதினாலே அநேகர் சத்தியமார்க்கத்தை அறிந்து முத்திவழியில் நடக்க வழுவாயிற்று.

இதையெல்லாம் ரோமாபுரிப் பாப்புவாகிய முன்றாம் அலெக்சந்தர் என்பவர் கேள்விப்பட்டுக் கடுக்கோபமாகி, பேதுரு வால்டோ என்பவனையும் அவனைச்சார்ந்த நிறைந்தவர்களையும் சபைக்குப் புறம்பாக்கவேண்டுமென்றும், பலவிதத்திலும் இடைசெய்யவேண்டுமென்றும் கட்டளையிட்டார்; அதன்படி லீயோன் பட்டணத்துப் பிரேஷ்டை அதியகுமானவர் நடக்கத் தவறிப்பட்டார்; அவருடைய தண்பத்தைப் பொறுக்கமாட்டாமல் பேதுரு வால்டோ என்பவர் 1163-ம் வருஷத்தில் லீயோன் நகரத்தை விட்டுப் போகவேண்டியதாயிருந்தது; அவர் எவ்வெக்கே போனாலும் தேவசனமாகிய விதையை விதைத்துக்கொண்டேபோனார்; அநேகம் பாடுகளும் தண்பங்களும் சோரிட்டும் அதனாலே அவர் சோர்ந்துபோகாமல், தான் பிடித்த சத்தியத்தை உறுதியாகக் கைக்கொண்டு சத்தியமூர்த்தியாகிய நிறைந்தவே பாடுகாசர் என்று கூறியவந்தார்; அதை அநேகம் ஜனங்கள் கேட்டுத் தங்கள் அந்நானமார்க்கத்தை விட்டுவிட்டு, நிறைந்தாகளின் திருவடி சேர்ந்தார்கள்;" இப்படி அவர் இருபது வருஷகாலமாய் தேவனுக்கு ஊழியஞ்செய்து, 117கூம் வருஷத்தில் பொஹீமியா காட்டில் தேவியோகமானார்.

His efforts to propagate the Gospel and his death, a.d. 1179.

இவரைப்போல் இன்னும் அநேக பக்தர்களும் பல தேசங்களுக்கும்போய்க் கர்வேசுதரைப் பிரசங்கித்துவந்தார்கள்; ஐரோப்பாகண்டத்துக்கு வடக்கே புன்ன பாலெஸ்தீனா முதலான தேசங்களில் நிறைந்தமார்க்கம் முக்கியமாய் பிரசித்தமாகவேத்தது; அப்படியே கெல்தோனிய நிறைந்தவர்களும் ஐரோகண்டத்திலுள்ள இந்தியா முதலான தேசங்களுக்குப் போய்க் நிறைந்தமார்க்கத்தைக் கூறினார்கள்; இப்படிச் சில நெருப்புத்தைலப்பிரவாகம் சபை காலுக்கால் தூண்டி வளர்ந்து பெரிய விருட்சமாகி அநேக ஜனங்கள் வந்து தங்குவதற்கேற்ற சாயலாயிற்று.

Spread of Christianity.

QUESTIONS ON TWELFTH CENTURY.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் சரித்திரத்தின்பேரில் கேள்விகள்.

1. பாப்புவின் அதிகாரத்தைக் குறைக்கும்படி பிரயத்தனம் செய்த அதிகாரிகள் யார்?
2. தோமால் பெக்கற் என்பவர் யார்? இவருக்கும் இரண்டாவது ஹென்ரிக்கும் கடந்த சச்சரவு என்ன? அது எப்படி முடிந்தது?
3. ஸொரென்டம் சங்கம் நிர்மாணித்ததென்ன?
4. இரண்டாம் ஜெலை யுத்தம் எப்போது நடந்தது? அதைப்பற்றி யென்ன தெரியும்?
5. மூன்றாம் ஜெலை யுத்தத்திற்குப் போனவர்கள் யார்? இதைப்பற்றி விபரமாய் எழுதுக.
6. இந்த யுத்தங்களினால் கோரிட்டை நிலைமை நிலவுறுதியாய்த் தடைபட்டது.
7. பேதுரு வால்டோ குணப்பட்டவிதமென்ன? அவரைப் பற்றித் தெரிந்ததைத் தெளிவாய்ச் சொல்லும்.
8. இந்த நூற்றாண்டில் கல்வி விஷயமாய் உண்டான தேர்ச்சி யென்ன?

பதின்மூன்றும் நூற்றாண்டு.

மூன்றாம் இன்னோசென்ற் என்னும் பாப்புவின் பெருமை. ஐரோப்பாக்கண்டத்து அரசருடன் அவர் வாதாடுதல். இங்கிலாந்து தேசம் சபையின் சாபத்துக்குள்ளாகுதல். போலான் ராயனுடைய இற்பிறப்பால் மூடபக்தி அதிகரித்தல். பாப்புவால் முடிபின்படிகை நாமிக்கப்படல். அதன சக்கியாச வருப்புகள். ஐந்தாவது யுத்தம். நிந்த யுத்தவீரரால் கொள்ளுத்தேறுபுரி கொள்ளோதல். இரண்டாம் பிரடரிக் என்பவன் பலஸ்தீனுக்கு ஒரு சேனைபைக் கொண்டுபோய் சுல்தானோடு உடன் படிக்கை செய்தல். ஒன்பதாம் ஹூயி செய்த யுத்த முயற்சியின் விபரித்த மாகுதல். தோமால் அக்குவைனாஸ், வால்டென்சியர் உற்பத்தி, ஏவி கள் வசித்த இடம், அவர்கள் கோட்பாடுகள், அவர்கள் குணாகுணங்கள், கடைசியுடை பாவனைகள், பதினாலாவதாரிக்கும் சங்கம் மூன்றும் இன்னோசென்ற் என்பவரால் ஸ்தாபிதப்பதிதல். அதனால் கடந்த கொடுமைகள். வால்டென்சியருக்கு கோரிட்ட பாடுகள்.

இந்த நூற்றாண்டில் இயேசுகலாமியின் அடியார்களுக்கு அதிகத் துன்பமும் பாடும் உண்டாயிருந்தது; ரோமாபுரிப் பாப்புகளுக்கு

இருந்த உலக செல்வமும், டம்பமும், அதிகாரமும் கொஞ்சமல்ல; இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் பாப்புவாயிருந்த மூன்றாம் இன்னோசென்ற் என்பவர் உலகத்திலுள்ள சக்கரவர்த்திகளி லெல்லாம் மேலான சக்கரவர்த்தி என்று சொல்லவேண்டும்; இவர் சபைக்கு முதன்மையாயிருந்ததுபோல உலகத்துக்கெல்லாம் தாமே முதன்மையாயிருந்து, தமது ஆக்கினைசக்கரம் எங்கும் ஓடவேண்டுமென்ற பேராசையுள்ளவராயிருந்தார்; இவர் 1198-ம் வருஷமுதல் 1216-ம் வருஷம்வரையும் தம்முடைய அதிகாரத்தைச் செலுத்தினார்; இவருடைய கொடுமைக்கும், பொருளாசைக்கும், பேராசைக்கும் மட்டில்லை; இராஜாக்களே ஏற்படுத்துவதும் தள்ளுவதுமான அதிகாரம் இவருடைய கையிலிருந்தது. Despotic pontificate of Innocent III.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் நான்காம் ஒதோ என்னும் இராயனுக்கும், பிலிப்பு என்னும் ஜர்மனி தேசத்தைச் சேர்ந்த ஒரு குறுநில மன்னனுக்கும் பலத்த வழக்கு கோரிட்டது; அப்போது பாப்பு வானவர் இராயன்பட்சத்தில் நின்று பிலிப்பு என்பவனைச் சபைக்குப் புறம்பாக்கிப் போட்டதுமன்றி, அவனுடைய குடிகள் ஒருவரும் அவனுக்கு உதவிசெய்யக் கூடாதென்றும் கட்டளையிட்டார்; பிரான்ஸ் தேசத்து அரசன் அதைக் கேள்விப்பட்டுப் பாப்புவானவர் இப்படிச் செய்தது அநியாயமென்று முறையிட்டபோது, அவர் பிலிப்பு என்பவன் தன் தேசத்தை இழக்கவேண்டும் அல்லது தான் என் பட்டத்தை இழக்கவேண்டுமென்று சபதங்கூறினார்; 1209-ம் வருஷத்தில் பிலிப்பு என்பவன் மரித்தப்போதுபோது பாப்புவானவர் அவன் இராஜ்யத்தை ஒதோ என்பவருக்குத் தத்தம்பண்ணினார்; பிற்பாடு ஒதோ என்பவரும் சில காரியங்களில் பாப்புவினுடைய இஷ்டத்துக்கு இசைவாய் நடவாமல் இருந்ததைப்பார்த்து, 1213-ம் வருஷத்தில் அவரைத் தள்ளிப்போட்டு அவருக்குப் பதிலாக இரண்டாம் பிரடரிக் என்பவரை ஏற்படுத்தினார். His contest with the sovereigns of Europe.

இப்படி இவரால் ஐரோப்பாகண்டத்து அரசர்களுக்கெல்லாம் கஷ்டமுண்டாயிருந்தது; ஆயினும் அவர்களெல்லாரிலும் இங்கிலாந்து தேசத்து இராஜாவியோவான் என்பவருக்கே அதிகத் தண்டனை கோரிட்டது; காண்டர்புரி பட்டணத்துச் சேவகப்பட்ட அத்தியை England laid under an Interdict.

உத்தியோகத்திற்கு ஸ்டீபன் ஹரே என்று பெயருள்ள ஒருவர் நியமிக்கப் பட்டிருக்க, பாப்புவானவர் அவனைத் தள்ளிப்போட்டு ஸ்தேவான் லாங்ற்றன் என்ற ஒருவனை ஏற்படுத்தும்படி உத்தரவு செய்ததை அரசன் கேள்விப்பட்டுக் கடுங்கோபமாகி பாப்புவை விரோதிக்கும்படி தூண்டப்பட்டார்; அதைப் பாப்புவானவர் அறிந்து துவக்கத்தில் சற்று பயந்து பேசினபோதிலும், அரசன் அதெல்லாம் மாயமென்று நினைத்து, இங்கிலாந்து தேசத்தில் பாப்புவினுடைய அதிகாரம் குறையும்படிக்கேற்ற முயற்சிகள் செய்தார்; இதைப் பாப்புவானவர் கேள்விப்பட்டு யோவானே விடவேறு ஆள் பார் என்று சபதம் கூறிக்கொண்டு, 1208-ம் வருஷத்தில் லண்டன், உச்ஸ்டர், ஈலிமுதலான பட்டணங்களிலுள்ள கண்காணிமாருக்கு உத்தரவு அனுப்பி, அரசன் மடங்காவிட்டால் அவனுடைய இராஜ்யம் சபையின் சாபத்துக்குள்ளாகவேண்டுமென்று கட்டளையிட்டார்; அதை அவ்வரசன் கேட்டு கடுகெடுத்து தம்முடைய அதிகாரத்துக்கு யாதொரு பின்னம் வராமலிருக்குமாகில், பாப்புவானவருக்கு அடங்கி நடப்பதற்கு ஆட்சேபனை இல்லையென்று சொன்னார்; அதற்குப் பாப்புவானவர் சம்மதிபாதரினாலே இங்கிலாந்து தேசம் சபையின் சாபத்துக்குள்ளாயிற்று; ஐயோ! அப்போது ஜனங்களுக்குண்டாயிருந்த துயரமும் துன்பமும் இவ்வளவென்று சொல்லக்கூடாது; கோவில்களெல்லாம் அடைபட்டுப்போயின; தேவாராதனைகள் நிறுத்தப்பட்டன; கர்த்தருடைய இராப்போஜனமில்லை; செத்தவர்களைப் புதைக்கிறதில்லை; இப்படிப்பட்ட கொடுமையான ஏற்பாடுகள் உண்டாயிருந்தினாலே ஜனங்களுக்கு ஒரு கஷ்டமாயிருந்தது. இது 1208-ம் வருஷம் நடந்தது.

Abject submission of king John.

இதுவெல்லாம் போதாதென்று சொல்லி, பாப்புவானவர் இங்கிலாந்து தேசத்து அரசனைச் சபைக்குப் புறம்பாக்கினதும், அவருடைய குடிகள் தங்களுடைய இராஜபக்தியை விட்டுவிடவும், பிரான்ஸ் தேசத்து அரசனுடைய பிலிப்பு அகஸ்து என்பவன் யோவானுடைய இராஜ்யத்தைப் பிடித்துக்கொள்ளவும், அதற்கு மற்ற அரசர்கள் தங்களால் கூடிய அனுகூலங்களைச் செய்யவும் வேண்டுமென்று கட்டளையிட்டார்; அதைப் பிரான்ஸ்தேசத்து அரசன் கேட்டு, இதுவும் நம்முடைய பாக்கியகாலமென்று நினைத்து யுத்தத்துக்குப் பிரயத்தனஞ்செய்தார். யோவான் என்பவரும் துவக்கத்தில் சற்று மனோதை

தியமாயிருந்தபோதிலும், பிற்பாடு தன்னுடைய அரசாட்சிக்குட்பட்ட குருமார், மற்ற உத்தியோகஸ்தர் அரசன் செய்த இம்சையைப் பொறுக்கமாட்டாமல் பாப்புவானவரின் உதவியைத் தேடினதால் யோவான் தம்முடைய இராஜயோக்கியதையையும் கௌரவத்தையும் சற்றேனும் பாராமல் இனிப் பாப்புவானவரே எனக்குத் தஞ்சம்; நான் அவருக்கு அடிமை; அவர் எனக்குப் பட்டாபிஷேகஞ் செய்தாலொழிய நான் இராஜனல்ல என்று வெகு சபலசித்தமாய்ப் பேசினார். பாப்புவானவர் இப்போது நம்முடைய கோரிக்கை நிறைவேறிற்று என்று நினைத்து, ஒரு ஸ்தானுபதியை ஏற்படுத்தி யோவான் என்பவருக்குப் பட்டாபிஷேகஞ் செய்யும்படி திட்டஞ்செய்தார்; அந்த நான் கிறிஸ்துரட்சகர் பரலோகம் ஏறுந்தருளின திருவாயிருந்தது; அச்சமயத்தில் அந்த விசேஷத்தைப் பார்க்கும்படி திரளான ஜனங்கள் கூடிவந்திருந்தார்கள். யோவான் என்பவர் தாம் பாப்புவுக்குக் கீழ்ப்பட்டவரென்றும், அவருடைய உத்தரவுக்குக் காத்திருக்கிறவர் என்றும் காட்டும்படிக்கு வெகு பிரயத்தனத்தைக் கொடுத்தார்; அதைப் பாப்புவின் ஸ்தானுபதி வாங்கிக் காலில்போட்டு மிதித்தான்; அதுவுமன்றி ஐந்நூறு வள்ளைக்கும் அரசனுடைய முடியையும் செங்கோலையும் கொடாமல் வைத்திருந்தான். ஐந்தாம் காளில் இது ரோமாபுரிப் பாப்புவானவர் தமது அளவற்ற காருண்ணியத்தால் கொடுக்கிறதாக என்று சொல்லி அவர் தலையில் வைத்தான். இக்காலம் இங்கிலாந்து தேசத்துக்குப் பீடைக்காலமென்றே சொல்லவேண்டும். அரசன் ஜனங்களுக்கு விதித்திய இம்சைக்குக் கணக்கு வழக்கில்லை. பாப்புவின் அதிகாரம் இந்தக் காலத்தில் இங்கிலாந்து தேசத்தில் மேற்சொன்னதுபோல ஒருகாலத்திலும் ஓங்கவில்லை.

Increase of error and superstition.

இப்படி வெளிதே காரியங்களில் மூன்றாம் இன்னோசெந்த் என்னும் பாப்புவானவர் இட்டதே சட்டமாயிருந்ததுபோல், வெளிசவிஷயங்களிலும் தமது இஷ்டப்படி பிரமாணங்கள் ஏற்படுத்தினார்.

1215-ம் வருஷத்தில் லாத்தரான் என்னும் இடத்தில் கூடின கான்சாம் சங்கத்தில் பாப்புவானவர் செய்த எழுபது சட்டங்கள் வாசிக்கப்பட்டன: அவைகளில் ஒன்று கர்த்தருடைய இராப்போஜனத்தைப்பற்றிய பிரமாணம். மூன்றாவது ஆதாமேயில் குருவானவர் பிரதிஷ்டை யெய்துசெய்தவுடன், அப்பமும் திராட்சரசமும் இரண்டு தாகாதது திருச்சரீரமும் இரத்தமுமாக மாறிப்போகிறது என்ற உப

தேசத்தைப்பற்றிய பிரமாணத்தான் இது. அப்பொழுதுதான் பொருள் மாறுதல் என்று அர்த்தங்கொள்ளும் (Transubstantiation) டிரான்ஸப்ஸ்ருன்ஷியேஷன் என்ற சொல் முதல்விசையாக வழங்கத் துவக்கிற்று; மேலும் பாவசங்கீர்த்தனம் செய்யவேண்டியதற்குரிய பிரமாணமும் ஏற்பட்டது; இதுவுமன்றி தேவற்கருணைத் திருவிழா என்று சொல்லி வருஷந்தோறும் ஒரு காலாக் கொண்டாடும்படி ஆரம்பித்தார்கள்; இது ஜூலியஸ்ஸின் என்ற ஒரு ஸ்திரீயினுல் ஏற்பாடாயிற்று. 1264–ம் வருஷத்தில் தேவன் தனக்குப் பிரசன்னமாகித் தமது திருவுளத்தில் வெகுகாலமாய்க் கொண்டிருந்த ஆலோசனையை வெளியிட்டதாகவும், அதன்படியே மேற்சொன்ன திருநாளை ஆசரிப்பது அவசியம் என்றும் சொன்னுள்; அதை நான்காம் அர்பன் என்னும் பாப்புவானவர் ஒரு பிரமாணமாக ஏற்படுத்தினர். கர்த்தருடைய இராப்போஜனத்தில் பரிமாறும் அப்பத்தையும் திராட்சரசத்தையும் ஜனங்கள் வேடிக்கை பார்க்கும்படியாகத் தூக்கிக்காட்டவும், பட்டணப் பிரவேசஞ்செய்யவும் வேண்டுமென்ற வழக்கமும் இந்த நூற்றாண்டில் உண்டாயிற்று.

Institution of the Papal Jubilee.

இந்த நூற்றாண்டின் கடைசியில் பாப்புவாயிருந்த எட்டாம் பானிபேஸ் என்பவர் யூதருக்குள் இருந்த முறைப்படியோ, ரோமருக்குள் இருந்த வழக்கப்படியோ தெரியாது, ஒரு ஜூபிலிப்பண்டிகையை ஏற்படுத்தினர்; இது நூறு வருஷத்துக்கு ஒருதரம் கடந்துவந்தது. தூரதேசத்திலுள்ள ஜனங்களெல்லாரும் ரோமாபுரிக்கு வரவும், அவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கைசெய்யவும், பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளவும் வேண்டுமென்ற எண்ணத்தோடே பாப்புவானவர் அதை ஏற்படுத்தினர்; அவருக்குப் பின்வந்த பாப்புகள் நூறு வருஷத்துக்கு ஒருதரம் கடந்துவந்த அந்தத் திருநாளை ஐம்பது வருஷத்துக்கு ஒருதரம் கடத்தவேண்டுமென்றும், கடைசியில் இருபத்தைந்து வருஷத்துக்கு ஒருதரம் கடத்தவேண்டுமென்றும் பிரமாணம் விதித்தார்கள்; இவ்வகையிலும் பாப்புகளுக்கு அதிகப்பணம் வரத்தக்கதாயிருந்தது.

Creation of new Orders of Monks.

இதற்குமுன் சன்யாசிகளில் பல வகுப்புகள் ஏற்பட்டிருந்தாகச் சொல்லியிருக்கிறோமே; அவைகளெல்லாம் போதாதென்று இந்நூற்றாண்டில் தொமினிக்கானர், பிரான்சிஸ்கானர் என்று பெயருள்ள இரண்டு வகுப்புகள் உண்டாயின; ஸ்பானியா தேசத்தானுமிக்கத் தொமினிக் என்பவன் தொமினிக்கானருக்குத் தலைவனும், இத்தாலியா தேசத்தானுமிய பிரான்சிஸ் என்பவன் பிரான்சிஸ்கானருக்குத் தலைவனும் இருந்தனர். இந்தக் கூட்டத்தை ஸ்தாபித்தவன் போனன் பெர்நாடோனி. இவன் தகப்பன் ஸ்திரிவந்தனை ஒரு வியாபாரி. பிரான்க பாஷையில் பான்டித்தியமுள்ளவனுக இவன் இருந்த படியால் பிரான்சிஸ் என்ற மறுபெயர் இவனுக்குக் கொடுக்கப்பட்டது. இயேசாகைகளுக்கு இருந்த 24ந்த தமும்புளுக்குச் சரியாய் இவன் தேசத்தில் 24ந்த தமும்புஸ் இருந்தாகவும், கிறிஸ்துவின் வழியில்காரனுக இருக்கிற அதிகாரம்பெற்றவனென்று இவனுடைய பின்னடியார் நினைத்தார்கள். இந்தக் கூட்டத்தார் 1224–ம் இவ் இங்கிலாந்தேசத்தில் தலைகாட்டினர்கள். 1207–ம் வருஷத்தில் உண்டான பிரான்சிஸ்கானர் துவக்கத்தில் மகா தரித்திரராயும், உலகப் பற்றுகளே விட்டவர்களாயும், ஜனங்களிடத்தில் யாசகம் வாங்கிப் புசிக்கிறவர்களாயும் இருந்தார்கள். 1213–ம் வருஷத்தில் மேற்சொன்ன இருகூட்டத்தாருக்கும் தங்களுக்குள்ளார் பெரியவர்கள் என்ற விஷயத்தைப்பற்றி வாக்குவாதம் கேரிட்டது. துவக்கத்தில் அண்டிகள்போலிருந்த அவர்கள் பிற்காலத்தில் அரசர்களைப்போல் இருந்தார்கள். அவர்களுடைய மடங்களைப் போய்ப்பார்த்தால் ராஜ அரமனைகளைப் போல் வெகு அலங்காரமாயும் சிறப்பாயும் இருக்கும். தனவான்களாயும் கனவான்களாயும் இருக்கிறவர்கள் மரிக்குறபோது, இவர்களை அவர்களிடத்துக்குப் போய் அவர்கள் ஆஸ்திகளைத் தங்கள் மடங்களுக்கு மானியமாக விடவேண்டுமென்று கேட்டு இப்படி அநேக பொருட்களைச் சேர்த்தார்கள்; இவர்களாலே பாப்புவின் அதிகாரமும் முடபத்திரும் அதிகமாய் வளர்ந்துபோயிற்று.

A new Crusade against the Turks. Constantinople planted by the Crusaders.

மூன்றும் இன்னசென்ற் என்ற பாப்புவானவர் இந்த நூற்றாண்டில் சிலுவை அல்லது குருசு யுத்தம் கடத்தும்படியாகவும் முயற்சிசெய்தார். பிரான்டர்ஸ் தேசத்து பால்ட்வின் என்னும் ஒரு பிரபு பாப்புவானவருடைய ஏற்பாட்டின்படி ஒரு பெரிய சேனையைச் சேர்த்துக்கொண்டு யுத்தத்துக்குப் புறப்பட்டார்; ஆயினும் அவர்கள் பலஸ்தீனதேசத்துக்குப் போகாமல் கான்ஸ்தாந்தினேபுரி பட்டணத்தைப் பிடித்துக் சுவாகாரம் பண்ணிக்கொண்டார்கள்; இது 1205–ம் வருஷம் நடந்தது. இதினால் சென்ற பிற்பாடி பால்ட்வின் என்பவர் கிரேக்குடைய இராயன்

என்ற பெயரால் பட்டாபிஷேகம் பெற்றார்; வெற்றியும் இவர்கள் அவர் தங்களுக்கு இராஜ்யமிருப்பது யுக்தமல்லவென்று நினைத்து, 1301–ம் வருஷத்தில் இவரோடொரு யாண்காரு என்பவனை அரசனாக்கினார்கள்; அதுமுதல் 1261–ம் வருஷம்வரையும் இவர்களுக்கு இரண்டு இராயர்கள் இருந்தார்; அவர்களில் ஒருவர் கொன்ஸ்தாந்தி நோபுரியிலும், இன்னொருவர் நிசேயாபட்டணத்திலும் அரசாண்டு வந்தார்கள்; மேற்சொன்ன வருஷத்தில் மிகேல் இரண்டாம் பால்டவின் என்னும் அரசனை கொன்ஸ்தாந்தினோபுரியைவிட்டுத் துரத்திப்போட்டதோடு பிரான்சுதேசருடைய அதிகாரம் ஒழிந்து போயிற்று.

இரண்டாம் பிரடரிக் என்னும் இராயன் பட்டாபிஷேகம் பெற்ற போது தாம் நினைவை யுத்தத்தை கடாதலிற தான வாக்குத் தொல்லியும்வெகுகாலமாக [illegible] ஏற்பமுதறினார். [illegible]

Frederic II leads his army to Palestine, where concludes a truce with the Sultan, A.D. 1222.

[illegible] பிரமாணமாக [illegible] என்றும் சொன்னான், [illegible] [illegible] [illegible]

சிரோமணி என்று கீர்த்திபெற்றார்; இராஜாக்களும் பாப்புகளும் இவருடைய கல்வித்திறமையையும் நீட்சண்ணிய புத்தியையும் பார்த்து மெச்சிக்கொள்ளுவார்கள்; இவர் ரோமாபுரிக்குப் போயிருந்த போது ஒருநாள் இவர் கான்கம் இன்னுஞ்சென்ற் என்னும் பாப்பு வோடே பேசிக்கொண்டிருந்தார்; அச்சமயத்தில் ஒரு உத்தியோகஸ் தன் பாவமன்னிப்புச் சீட்டுகளே வீற்றுச் சம்பாதித்த பெருந்திரவி யத்தைக் கொண்டுவந்து பாப்புவுக்குமுன் பாதகாணிக்கையாக வைத் தான்; அப்போது பாப்புவானவர் அக்காணுலைப் பார்த்து: "பாலிய னே! இவள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை என்று திருச் சபை சொன்னகாலம் போய்விட்டதல்லவா" என்றார்; அதற்கு அவர்: "திருச்சபையானது பிறவிச்சப்பாணியைப்பார்த்து: எழுந்துபடஎன்று சொன்னகாலமும்போயிற்றே" என்றார். ஒன்றுக்கொன்று விரோதமா யிருந்த இரேக்க சபையையும் லத்தின்சபையையும் சமாதானப்படுத்தும் படி 1274–ம் வருஷத்தில் லியோன்பட்டணத்திலே ஒரு சங்கம் வைக் கப்பட்டது; சபையின் ஐக்கியத்தைப்பற்றி தாம் உண்மென்னின ஒரு நூலே அச்சங்கத்தில் அரங்கேற்றும்படி அவர் போரும் வழியில், திர சீனு என்னும் ஊரில் ஜுரம் கண்டு மரணமடைந்தார்; இவர் பதி னேழு பெரிய புஸ்தகங்களே எழுதியிருக்கிறார்; அனைகளேப் பார்க் கும்போது இவருடைய கல்வித்திறமையும், மதிநுட்பத்தியும், அறிவின் பெருக்கமும் வன்மை விளங்குகிறது; இவர்இல்லிய பண்டிதர் என்றும், வித்தியாலய தூதன் என்றும், வேதசாஸ்திரிகளில் நிபுணன் என்றும், திருச்சபையில் தோன்றிய ஐந்தாம் வேதசாஸ்திரி என்றும் பெருமானம் கூறப் பெற்றார்; இவருடைய உபதேசங்களே அனுசரித்தவர்களுக்குத் தோமிஸ்தர் என்று பெயருண்டாயிற்று; இவர் எழுதிய நூல்கள் மூல கைப்பட்டது.

1. வியாக்கியானம்: — சத்தியவேதத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு, சுத்தபாஷைகளில் தானே கேட்டு அறிந்த வேத உபதே சங்களே வன்மை கலிசேஷங்களோடும் இணைத்துக்காட்டும் பொற்சங் கியென்ற வேத விளக்கமாய் எழுதியிருக்கிறார். ஒரிறன், இரி சொஸ்தம், அருளின், பிரபு, ஆண்குலின் என்பவர்களின் கருத்து இதில் அதிகம் அமைத்திருக்கிறது.

2. தத்துவஞானம்:—இது அரிஸ்ரோட்டல் என்பவரின் கோட்பா டத்தைச் சார்ந்தது.

3. சாஸ்திரநூல்:—இந்த நூல் சாதாரண அறிவுள்ளவர்களுக்குச் சற்று ஆழ்ந்த கருத்துள்ளதாகக் காணப்படும். வேதசாஸ்திரம் சத்திய சாஸ்திரத்திற்குச் சற்றுத் தாழ்ந்ததுபோல இதிலுள் தோன்றும். பேக் கன் என்னும் தத்துவசாஸ்திரி இது தப்பென்று ருபித்துக் காட்டி னார். இவர் செய்த நூல்களில் வேதசாஸ்திரத் திரட்டு என்ன பேர் வழங்கிய நூல் விசேஷமானது; இதை ரோமான் சபையார் முக்கியமாய் வழங்கிவருகிறார்கள்; இவர் எழுதிய புஸ்தகங்களில் ஆகுஸ்தின் என்பவருடைய சில்ல ஏழுப்பும் கருத்துகளும் அதிக மாயிருப்பதால், இவர் அவருடைய உபதேசங்களே அனுசரித்து நடந் தவரென்று ஐயங்கள் சாதாரணமாய் எண்ணிவந்தார்கள்; தொமினிக் சபையைச்சேர்ந்த சந்தியாகின் இருபத்திரண்டாம் யோவான் என் னும் பாப்புவைக் கேட்டுக்கொண்டபடி, அவர் அக்கிரூஸ் என்பவரை அர்த்தபரிஷ்டராக்கினார்; இவருடைய சமாதியில் அநேகம் புதுமைகள் நடந்ததாகக் கதை சொல்லுவார்கள்.

இந்தக் காலத்தில் சபையில் அதிக தப்பான போதனைகள் பரவத் தலைவகியது. கன்னிமரியாளே ரக்ஷகரில்லாத The Waldenses. Their origin. மென்றும், பரிசுத்த சற்கருணையில் அப்பம் மாத்திரம் பரிமாறினுல் போதுமென்றும், ஸ்த லமாத்தினர செய்வது பாவத்தைத் தொலைக்குமென்றும், இப்படிப் பல கொள்கைகள் பல இடங்களில் தலைகாட்டித்து. அந்தகாலமும் அவசரத்தும் கிறைந்திருந்த இந்த நூற்றண்டிலும் சத்தியத்துக்குச் சாட்சிகளாய் விளங்கின அநேக பக்தர் இருந்தார்கள்; இவர்களுக்கு வால்டென்சியர் என்று பெயர். முன் நூற்றால் இஸ்ரவேல் இனத் யத்தில் விக்கிரகபக்தியும் துன்மார்க்கமும் பெருகியிருந்தபோது பாண லுக்கு முழங்காற்படியிடாத எழாயிரம் ஜனங்கள் இருந்ததுபோல, அந்தகார யுகங்களில் அறியாமையும் மூடபக்தியும் அதிக விஸ்தா ரமாய்ப் பரம்பியிருந்தபோது வால்டென்சியர் என்ற சொல்லப் பட்ட கிறிஸ்துவின் அடியார் தங்கள் இறந்த பக்தியினலும் உத்தம நடக்கையினலும் சத்தியத்துக்குச் சாட்சிகளாய் விளங்கினார்கள்; இவர்களுடைய ஆதிசரித்திரம் வன்மையாய்த் தெரியவில்லை. சிலர் இவர் கள் அப்போஸ்தலர் காலமுதல் இருந்திரவர்களென்றும், சிலர் இவர் கள் ரோமாபுரிக் கன்கானியாயிய சில்வெஸ்தர் என்பவருடைய காலத்தில் தோன்றினவர்களென்றும், சிலர் இவர்கள் தாபிபட்ட னத்தர் கன்கானியாயிய கொட் என்பவர்காலத்தில் தோன்றி

வர்களென்றும், சிலர் இவர் பேதுரு வால்டோ என்பவருடைய கொள்கையை அனுசரித்தவர்களென்றும் பலவாறுய்ச் சொல்லுகிறார்கள்; இதனுலே அவர்கள் தோன்றிய காலத்தைப்பற்றி நிச்சயஞ் சொல்ல வதுவில்லே.

The place of their residence.

இவர்கள் வதித்த மாகாணத்துக்கு பீட்மண்ட் என்ற பெயர்; இதற்கு மலையடிவாரம் என்று அர்த்தம்; இது ஆல்ப்ஸ் மலையின் அடிவாரத்தில் இருந்தமையால் இதற்கு அந்தப் பெயருண்டாயிற்று; முற்காலத்தில். இது லாம்பர்டியனரசேர்ந்த ஒரு காடாயிருந்தது; பிற்காலத்தில் சார்டினியாதேசத்து அரசனுடைய கைவசமாயிற்று; இரன்தாவும், குசாவும், ஸ்தாருவும், ஹாசேனுவட், அங்கிற்களுவம் இக்காட்டிற்கு வாழும் செழிப்புமுள்ள பன்னத்தாக்குகளாயும், சுத்த வனம்போல் காணப்பட்ட இடங்களாயும் இருந்தன; இந்தச் சிவகாரப் பன்னத்தாக்குகளில் மேற்சொல்லிய வால்டென்சியர் என்பவர்கள் வதித்தவந்தார்கள்.

Their tenets.

இவர்கள், 1-வது: கடவுள் அருளின சத்தியவேதமே மனுஷருடைய பக்திவிசுவாசத்துக்கும் நடக்கைக்கும் ஏற்ற ஒரே பிரமாணமென்றும், 2-வது: தேவனுக்கும் மனிதருக்கும் ஒரே மத்தியஸ்தர் இருக்க அவரை விட்டு புனிதப்பேயான பரிசுத்தவான்களை நோக்கிப் பிரார்த்தனை செய்யக்கூடாதென்றும், 3-வது: உத்தரிக்கும ஸ்தலம் உண்டென்று சொல்லுவது கட்டுக்கதையென்றும், 4-வது: ஞானஸ்நானமும் கர்த்தருடைய இராப்போஜனமுமாகிய நித்திய நியமங்கள் இரண்டேயுள்ளன என்றும், 5-வது: இராப்போஜனத்தில் பரிமாறும் அப்பத்துக்கும், மரித்தப்போன பரிசுத்தவான்களுக்கும் செய்யப்படும் பூசையைத் தள்ளவேண்டுமென்றும், 6-வது: மனித கற்பனையாயுண்டான உபவாசங்கள், திருவிழாக்கள், யாத்திரைகள் முதலிய சடங்குகளெல்லாம் ஒழிக்கவேண்டுமென்றும், 7-வது: கன்னாகியாருக்கும் ஞானாத்தனத்தாருக்கும் மேற்பட்ட அதிகாரம் பாப்புவுக்கு இல்லாதிருந்தாலும், கன்னாகியாரும், குருக்களும், உதவிருருக்களுமாகிய மூவகையான உத்தியோகஸ்தர் சபையில் உண்டென்றும், 8-வது: இராப்போஜனத்தில் மனுஷருக்கு அப்பத்தைக் கொடுப்பதுபோல் "இரசத்தையும் கொடுப்பது சத்தியவேதத்துக்கு ஏற்றது என்றும், 9-வது: ரோமன் சபையானது வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிற பாபிலோன் என்றும், அதற்குத் தலைவராயிருக்கப்பட்ட பாப்புவானவர் அந்திக்கிறிஸ்து என்றும், 10-வது: பாவமன்னிப்புச் சீட்டுகளைப் பணத்துக்கு விற்கிற அக்கிரம வியாபாரமும், குருக்கள் விவாகத்தை விலக்கும் சட்டமும் கொலையேயென்றும், 11-வது: சத்தியவேதத்தில் அடங்கிய மகாவாக்கியங்களை பக்திவிசுவாசத்துடன் கேட்டு அதன் சாரத்தை உணர்ந்து நடக்கிறவர்கள் கர்த்தருடைய சபையென்றும், அந்தச் சபைக்குப் பிறகிற துன்பங்களைப் போன்ற பொதகன்மாரைத் தன்னிடத்தமருருக்கினை எப்படித்துவதற்கு அதிகாரம் உண்டென்றும் பிரமாணங்கள் விதித்தார்கள்.

Their character and mode of life.

அவர்கள் நிஷ்டைமார்க்கத்தை வெகு ஜாக்கியோடும் ஜெபருணத்தோடும் காத்துவந்தமையால், அதன் சத்தியங்களை இவ்வளவு திட்டமாய் அறிந்து கொண்டார்கள்; அவர்கள் வேலைசெய்யும்போதும் வேதபுஸ்தகம் அவர்களுக்கு முன்னிருக்கும்; தேவசனம் அவர்களுக்கு நாளோபோனமாயிருந்தது; லெர் பதிய வம்பாகி முழுவதையும் பாரமல் படித்திருந்தார்கள்; அவர்கள் எல்லாருக்கும் வாசிக்கவும் எழுதவும் தெரியும்; அவர்களுடைய உத்தம நடக்கையைக்குறித்து அவர்களுடைய சத்துருக்களே புகழ்ந்து பேசியிருக்கிறார்கள்; அவர்கள் அடக்கமும், கற்பும், நாழ்மையும், அன்பும், கறைதப்பாமுள்ளவர்களாயும் வியாபாரஞ்செய்தால் பொய்க்கும் மாறுபாட்டுக்கும் இடமுண்டாகும் என்று நினைத்து, அவர்கள் அதைச் செய்யாமல் விட்டிவிட்டார்கள்; அவர்கள் தங்கள் கைகளிருலேவேலைசெய்துஜீவனம்பண்ணினார்கள்; அவர்களுடைய குருமாரில் அநேகர் சேவகத்தொழிலையும் தையல்வேலையும் செய்தவர்கள்; அவர்கள் உலகசெல்வத்தையும் கனத்தையும் குப்பையைப்போல் எண்ணி, அன்றுடகம் சேவன் கொடுக்கும் ஆகாரம் போதுமென்று மனரம்பியமாய் இருந்தார்கள்; அவர்களுடைய ஸ்திரீகளும் பதிவிரதைகளாயும், பெருமை, பொழுலை, பரியாசம், பொய்ச்சத்தியம் முதலான தூர்குணங்களோ வெறுத்தவர்களாயும், தங்கள் பின்னோருக்கு ஞானகாரியங்களே அழகுபூட்டும் வண்ணம் புசிப்பிறவர்களாயும் இருந்தனர்; அவர்கள் எல்லாரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்போல சகோதர பட்சமுடையவர்களாய் நடந்தார்கள்; இதலுமன்றி, "எந்த மனிதனும் வேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்" என்றும் சத்தியவேதம்

கூறுவதுபோல், அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து அமரிக்கையாய் ஜீவனம்பண்ணிவந்தார்கள்.

Inquisition established by Innocent III. A.D. 1204.

இப்படிப்பட்ட சத்திய சாட்சிகளைத் தண்டிப்பதற்கும்படியாக முன்றாம் இன்னசென்ற் என்னும் பாப்பு வானவர் வேண்டிய முயற்சிகள் செய்தார்; அவர்கள் பாப்புமார்க்க கோட்பாடுகளுக்கு இணங்காமல் இருந்தமையால் தூயர்களை சீர் மூலமர்க்கவேண்டுமென்று நினைத்து, இன்குவிசிஷன் என்று சொல்லப்பட்ட கொடிய சங்கத்தை ஏற்படுத்தினார்; இன்குவிசிஷன் என்பது விசாரணை என்று அர்த்தமாம். வால்டென்சியரைப் பிடித்துக் குற்றம் விசாரித்துக் கொலைசெய்யும்பொருட்டு இந்தச் சங்கத்தை ஸ்தாபிக்கும்படியாகத் தொமினிக்கானர் என்றும் சக்கியான வருப்புக்குத் தலைவனுயிருந்த தொமினிக் என்பவன் பாப்புவுக்கு ஆலோசனை சொன்னான்; இவன் பிறக்கிறதற்குச் சிறிது காலுக்குமுன் இவனுடைய தாய் ஒரு சொப்பனம் கண்டாளாம்; அதில் தன் கர்ப்பத்தில் ஒரு நாய்க்குட்டி உருவெடுத்திருந்ததாகவும், அதன் வாயில் ஒரு பந்தத்தைக் கொளுவிக்கொண்டிருந்ததாகவும், அந்தப் பந்தத்தினுல் உலகத்தை நெருப்புவைத்து நீற்றிவிட்டதாகவும் கண்டாள்; இப்படி இவள் கண்ட சொப்பனம் மெய்யோ பொய்யோ என்று சுத்தபுத்தியாய் சொல்லுதல் கூடாது; ஆயினும் தொமினிக் என்பவனுடைய செய்கை இச்சொப்பனத்துக்கு இசைவாகவே இருந்தது; அவனுலே எண்ணிறந்த யூதர்கள் அழிந்துபோனார்கள்; இந்தப் பாவகண்டாளனுடைய யோசனையைக் கேட்டுப் பாப்புவானவர் இந்தச் சங்கத்தை 1204-ம் வருஷத்தில் ஏற்படுத்தினார்; ஒவ்வொரு பட்டணத்திலும் இப்படிப்பட்ட ஒரு சங்கமிருந்தது; அதன் காரியத்தை நடத்தும்படியாக ஒரு வைதீக உத்தியோகஸ்தனும், மூன்று லௌகீக உத்தியோகஸ்தரும் நியமிக்கப்பட்டனர்; இந்தச் சங்கமுண்டான காலத்தில் யாதொரு வியாபாரத்தையும் நடக்கவிடவில்லை; அதைச் சேர்ந்தவர்கள் சமயபேதிகள் எத்தனைபேர்? அவர்களுடைய ஸ்திதி என்ன? பலம் என்ன? என்னுமாதிரிம் விசாரித்துவந்தபிறகே, நிச்சயத்திற்கு விசாரணை என்ற அர்த்தமுள்ள இந்தப் பெருமாடையிற்று; ஆயினும் சில சமயங்களில் சென்றபிற்பாடு இந்தச் சங்கத்தினுலுண்டான கொடுமைகளும் எளவும் இம்மட்டென்று சொல்லக்கூடாது.

இந்தச் சங்கத்தார் எகம்போல் இருண்டிருக்கும் ஒரு அறையில் கூடிக்கொண்டு அத்தகைமையாய் நடப்பித்த குரூரச்செய்கைகளை விவரிக்கப் புகுந்தால் பயங்கரமாயிருக்கும்; அவைகளில் ஒன்றை மாத்திரம் சொல்லுவோம்: குற்றவாளி என்று தீர்க்கப்பட்டவனை அந்த இருட்டறைக்குக் கொண்டுவந்து ஒரு உத்திரத்தில் தலைகீழாகக் கட்டித் தொங்கப்போடுவார்கள்; பின்பு அச்சங்கத்துக் தலைவனிருந்த சொமினிக்கானன் ஒருவன் அவனைப் பார்த்து: "என் மகனே! உன் குற்றத்தை அறிக்கைசெய், அறிக்கைசெய்" என்பான்; அவன் அப்படி அறிக்கையிடாயற்போனால் அவனைத் தூக்கி அவன் கால்களில் ஒரு பெரிய கல்லைக் கட்டுவார்கள்; அவன் சோவு பொறுக்கமாட்டாமல் கதறும்போது அங்கே நிற்பவர்கள் அவனைப் பரிபாசம்பண்ணி, அவன் பாதகன் என்றும் பதிதன் என்றும் பலவகையாய்த் தூஷிப்பார்கள்; பின்பு அவனுடைய சரீரக்கட்டுகளனைத்தும் முழுதும் விட்டிற்போகுமளவும் அவனை வீட்டின் கூரைக்கும் தரைக்கும் மேலுங்கீழுமாய் இழுப்பார்கள்; அவன் அசைந்தும் அசையாமல் இருந்தால், ஆணிகள் அடித்த ஒரு தொட்டியிலே அவனைக் கிடத்தி, அவன் முகத்தைச் சேலையினுலே மூடி, அது அவன் தொண்டையில் நனையும்படியாக அதன்மேல் தண்ணீரை வாரி அடிப்பார்கள்; அவன் இத்தச் சித்திரவதையினுல் அவஸ்தைப்படும்போது அவன் தொண்டையிலிருக்கும் நரம்பை இழுத்த இரத்தம் ஓடிவரும்படி அடிப்பார்கள்; அதற்கும் அவன் மனம் இசகவில்லையென்றால், அவன் கால்களில் கொழுப்பைத் தடவி இருப்புச்சட்டியை நெருப்பில் பொன்போல் காய்ச்சி, அதிலே அவனைப் போட்டுத் தோசையைப் புரட்டுவதுபோல் புரட்டி அவனை வதைத்துக் கொல்வார்கள்; வால்டென்சியரில் அநேகம்பேர் இப்படிப்பட்ட மரணத்தை அடைந்தார்கள்; காலத்துக்கு ஒப்பான இந்தச் சங்கத்தினுல் கொலைசெய்யப்பட்டவர்களுக்குக் கணக்கில்லை. ஜர்மனி, பிரான்ஸ்டர்ன், போலாந்து என்னும் தேசங்களிலுள்ள வால்டென்சியர் சொல்லமுடியாத துன்பங்களை அடைந்தார்கள்; பாப்புவின் ஆட்கள் அவர்களைக் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் பிடித்து, ஆண் பெண் பிள்ளைகள் என்ற பேதாபேதம் ஒன்றும் பாராமல் குரூரமாய்க் கொலைசெய்தார்கள்; அவைகளையெல்லாம் சொல்லப்போனால் விரியும்.

Its horrors instanced.

ஆயினும் "இரத்தச்சாக்ஷிகளுடைய இரத்தம் சத்தியசபைக்கு விதை" என்று சொல்வதுபோல், வால்டென்சியருக்கு உண்டான கொடிய உபத்திரவங்களினாலும் தண்டனைகளினாலும் அவர்கள் தொகை குறைந்துபோகாமல் பெருகிக்கொண்டேவந்தது. 1230-ம் வருஷத்தில் அவர்கள் கொள்கையை அனுசரித்தவர்கள் எட்டிலட்சம் ஜனங்களுக்கு அதிகமாயிருந்தனர். பாப்புமார்க்கத்தார் கும்மைப் பார்த்து: லுத்தர் என்பவருடைய காலத்துக்குமுன் உங்கள் மார்க்கம் எங்கேயிருந்தது? என்று பெருமையாய்க் கேட்கும்போது, நாம் அதற்கு: எங்கள் மார்க்கம் சாட்சாத் தேவன் அருளின சத்தியவேதத்தி லிருந்தது என்று சொல்வதுமன்றி, பீட்மண்ட் காட்டின் பள்ளத்தாக்குகளிலும் அது இருந்ததென்றும் தைரியமாய்ச் சொல்லலாம்.

Effects of the dreadful suffering of the Waldenses.

முன்னை நூற்றாண்டுகளைப்போல் இந்த நூற்றாண்டிலும் பிதாமார்க்கப் போதகர்மார் பல தேசங்களுக்குப் போய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களென்று சொல்ல இடமில்லை; ஆயினும் கெல்தோனிய கிறிஸ்தவர்கள் இந்தியாவிலும், சீனாவிலும், ஆபிரிக்கா கண்டத்துக்கு வடக்கேயுள்ள மற்றத் தேசங்களிலும் போய்த் தேவவசனத்தைக் கற்பித்தனர். ஸ்பானியா தேசத்தில் அரசாட்சிசெய்த பெர்டினண்ட் என்னும் இராஜனும், இன்னும் சில இராஜாக்களும் சரசேனருடைய இராஜ்யபாரத்தை அழித்துப்போட்டு, விசாரணை அதிகாரத்தில் கிறிஸ்துமார்க்கம் பிரபலமாவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்துவந்தார்கள்; இப்படி சிலருடைய கிறிஸ்துராஜாவின் இராப்பகல் விருத்தியடைந்துகொண்டே வந்தது; அவர்கள் அடியார்கள் "அநேகம் உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும்" என்ற சத்தியத்தை தங்கள் மனதில் கொண்டு காட்டிலவத்துக்கொண்டு, தங்களுக்கு வந்த எல்லாத் துன்பங்களையும் இனிமேல் வரப்போகிற பேரின்பத்தை நினைத்துப் பொறுமையாய்ச் சகித்து, தேவனை மகிமைப்படுத்திவந்தார்கள்.

Concluding remarks.

QUESTIONS ON THIRTEENTH CENTURY.

பதின்மூன்றும் நூற்றாண்டின் சரித்திரத்தின்மேல் கேள்விகள்.

1. இந்தக் காலத்திலிருந்த பாப்பு யார்? இவரும் உண்டான தெடிதியென்ன?
2. போவான் என்பவரின் குணாகுணங்களென்ன?
3. இவர் காலத்தில் இங்கிலாந்தை நோதல சிலையென்ன?
4. இந்த நூற்றாண்டில் சபையில் உண்டான குருட்டுப்பக்திகளை எடுத்துக் காட்டுக.
5. சக்கிரச வருப்பாரில் நான்கு பிரிவார் இந்தக் காலத்தில் தோன்றினர்கள். அவர்கள் யார்? அவர்களின் குறிப்பென்ன?
6. இந்த நூற்றாண்டில் கடந்த குருசு யுத்தங்களைப்பற்றி தெரிந்தவை யெழுதுக.
7. தோமான் அக்வினஸ் எந்த இடத்தில் பிறந்து எங்கே யிருந்தார்? இவரைப் பற்றித் தெரிந்தவைச் சுருக்கமாய் எழுதுக.
8. வால்டென்பர் எப்படி எழும்பினார்கள்? இவர்கள் மார்க்கம் கொள்கை யென்ன?
9. இரிஸ்தமார்க்கம் எவ்விதத்த இடங்களில் இந்த நூற்றாண்டில் பிரபலமானது?

பதினான்காம் நூற்றாண்டு.

ஸபையின் நிலைமை. எட்டாம் பானிபேஸ் என்னும் பாப்புவுக்கும் பிரெஞ்சு எத்தனும் பிரான்ஸ் தேசத்து அரசருக்கும் கொண்ட சச்சரவு. பானிபேஸ் மரித்தது. பாப்புவானவர் பிரான்ஸ் தேசத்திலுள்ள அவிஞ்ஞன் பட்டணத்தில் வசிப்பது. பேர்த்தரம் பிரிட்டோ. பாதிரிப் பணம் பண்ணுவதைப்பற்றிய தகராறு. எலியேசர் என்பவரின் பக்தி. தோமாஸ் பிரேட்வார்டின் என்பவர் வொலியரில் பொன்மொழியைக் கண்டித்தல். நேபோலியோனிஸ்பற்றியும், அவனுடைய குறிப்பற்றியும் சில சொல்லும் விபரங்கள். அவருடைய இரண்டு நிருபங்கள். போவோன் உலிக்லிப் என்பவர் பிறந்தது. பாதை சத்தியவிசுவாசிகளுக்குள் வந்தது. அவர்கள் என்னும் ஒரேஷ்ட அறிக்கைகளைக்குறித்துப் பாப்புவுக்கு முறையிடுதல். உலிக்லிப் என்பவர் கல்வாலியருக்குமுன் விசாரணைக்கு அழைக்கப்படுதல். ராஜ அபிமானத்தால் தப்புதல். வேதாகமத்தை மொழிபெ

யர்த்துப் பிரதிஷ்டைசெய்தல். யோவான் 10ம் என்பதருக்கு விருபம் எழுதுதல். உலிஸ்லிப் என்பவரின் குருகுலாதிபதியாகை. உலிஸ்லிப் விர்த்தியடைதல்.

இந்த நூற்றாண்டில் கீழ்ச்சபைக்குத் துருக்கராலும் தார்த்தாரிகளாலும் வெகு நஷ்டம் சேரிட்டது. ஆசியில் தார்த்தாரிகளில் அநேகர் கிறிஸ்துமதத்தை அனுசரித்திருந்தார்கள்; பிற்பாடு அவர்கள் மகமதுமார்க்கத்தை அங்கீகரித்துக்கொண்டு மற்றச் சமயங்களையெல்லாம் நிர்மூலப்படுத்தி வந்தார்கள்; அவர்களுக்குச் சக்கரவர்த்தியாயிருந்த தாமர்லேன் என்பவன் ஆபிரகாம்டத்திலுள்ள அநேக தேசங்களை ஜெயித்து அவைகளை வெகு குரூரமாய் நடத்தினதுமன்றி, கிறிஸ்துமார்க்கத்தைச் சர்வநாசம்பண்ணும்படி வேண்டிய முயற்சிகளையுஞ் செய்தான்; இப்படிக் கீழ்ச்சபைக்குத் துருக்காரும் தார்த்தாரிகளாலும் துன்பமுண்டாயிருந்ததுபோல், மேலச் சபைக்கும் பாப்புகளாலே துன்பமுண்டாயிருந்தது. கிறிஸ்தவர்களின் திருத்தொண்டர்களுக்குச் சொல்லமுடியாத பாடும் இம்மையும் சேரிட்டது.

State of the Church in the beginning of this Century.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் ரோமாபுரியில் பாப்புவாயிருந்தவருக்கு பட்டம் பானிபேஸ் என்று பெயர்; இவர் அந்தப் பட்டத்தைப் பெற்றவுடனே பூச்சக்கரமெல்லாம் என்னுடையது என்று சொல்லத் தலைப்பட்டார்; தமக்கு வையத்திலுள்ள சமஸ்த அரசர்களிலும் அளவற்ற அதிகாரமுண்டென்று சொல்லி, இராஜ்யங்களையும் தேசங்களையும் தம்முடைய அதிகாரப் பத்திரங்களால் கெடிகலக்கப்பண்ணி, இராஜாக்களையும் பிரபுக்களையும் தமக்குமுன் கிறுத்தி, அவர்கள் வியாச்சியங்களைத் தீர்த்தே வராயிருந்தார்; இவர் பிரான்ஸ் தேசத்து அரசனுடைய பிலிப்பு என்பவருக்குச் சில திருபங்களை எழுதி, அவைகளில் அவரும் மற்ற மற்ற மன்னரும் முடிமன்னரும் அரசியல்விஷயத்திலும் மற்ற லௌகீக காரியங்களிலும் பாப்புவுடைய அதிகாரத்துக்கு அடங்கி நடக்க வேண்டுமென்ற தேவகட்டளை இருக்கிறதென்கர்வத்தோடே பேசினார்; இதனால் பிலிப்பு என்னும் அரசன் மிகவும் வெறுப்படைந்து, பாப்புவினுடைய ஸ்தானத்தை அடக்கவேண்டுமென்று நிர்மானஞ் செய்து, அவர்மேல் ஒரு வியாச்சியம் தொடுக்கும்படி ஆரம்பித்தார்

Contest between Boniface VIII and Philip king of France.

இந்த கோக்கம் சித்தியாகும்பொருட்டு நியாயசாஸ்திர நிபுணரிருந்த உலில்லியம் நாகரெற் என்பவரை நியமித்தார்; இவர் பாப்புவானவர் மகாபாதகமுதலான மகத்தான பாதகங்களைச் செய்தவரென்று குற்றம் எற்படுத்தினார்; அதைப் பாப்புவானவர் கேட்டு, அரசன் பேரிலும் அவனாச்சார்த்த கனிக்காரர்பேரிலும் கொடிய சபதம் போட்டு அவர்களைச் சபைக்குப் புறம்பாக்கிவிட்டார்.

பிலிப்பு என்னும் அரசன் இதற்குச் சற்றேனும் அஞ்சாமல் லியோன்பட்டணத்தில் ஒரு பெரிய சங்கம் வைத்து, அதில் பாப்புவானவருடைய பட்டத்தை வாங்கிப்போடவேண்டுமென்று நிர்மானித்து, உலில்லியம் நாகரெற் என்பவர் இத்தாலியா தேசத்துக்குப் போய், பாப்புவைப் பிடித்துக் கட்டிக்கொண்டுவரும்படியாக உத்தரவுசெய்தார். சத்தவீரருமிருந்த நாகரெற் என்பவரும் அரசன் கட்டளைப்படி இத்தாலியாவுக்குப் போய், பரிசுத்த பாப்புவைப் பிடித்துக் கட்டி மண்டையில் காயம்பட அடித்தார்; அப்போது பாப்புவின் சிநேகிதரில் சிலர் அநேகம் பிரயத்தனங்கள் செய்து அவரை விடுதலைபண்ணிவிட்டார்கள்; ஆயினும் பாப்புவானவர் தமக்கு நடந்த அவமானத்தினாலே மனம்நொந்து, அதனாலே வியாதிப்பட்டு 1303-ம் வருடத்தில் இறந்துபோனார்.

Boniface dies, A.D. 1303.

பானிபேஸ் என்னும் பாப்பு மரித்தபின், பிலிப்பு என்னும் பிரான்ஸ் தேசத்து அரசன் தனது உபாயத்தினாலே பெர்ட்ரண்ட் என்ற பெயருள்ள ஒரு பிரான்ஸ் குருவுக்கு 1305-ம் வருடத்தில் பாப்புப்பட்டத்தைக் கொடுத்து, பிரான்ஸ் தேசத்திலுள்ள அவிஞ்ஞன் கரியில் வாசஞ்செய்யும்படி ஏற்பாடு செய்தார்; அதுமுதல் எழுபது வருடகாலமாய் அப்பட்டணம் பாப்புகள் வசிக்கிற இடமாயிருந்தது; அக்காலத்தை இத்தாலியா தேசத்தார் "பாபிலோன் சிறைவிருப்பு" என்று சொல்வார்கள்.

Papal residence removed to Avignon in France, A.D. 1305.

1378-ம் வருடத்தில் கிலெச்சபையில் ஒரு பிரிவினை புண்டாயிற்று; அதற்கு மேற்கத்திப் பிரிவினை என்று பெயர்; இதனால் இரண்டு பாப்புகள் எற்பட்டு, ஒருவர் ரோமாபுரியிலும், ஒருவர் அவிஞ்ஞன் பட்டணத்திலும் தங்கள் ஆளுகையைச் செலுத்திவந்தார்கள். 1414-ம் வருடம்வரைக்கும் சபையில் இரண்டு பாப்புகளிருந்த

Great Western Schism, A.D. 1378.

ஒருவனை ஒருவர் சபித்துக்கொண்டும், ஒருவனை ஒருவர் கெடுக்கும் படி அநேக பிரயத்தனங்கள் செய்துகொண்டும் வந்தனர்; இப்படிப் பட்ட தாறுமாறுகளினாலே பாப்புகளுடைய அதிகாரம் வரவர பெல வீனப்பட்டுப்போயிற்று; ஐரோப்பாகண்டத்து அரசர்களும் ஜனங்களும் அவர்களுடைய அடிமைத்தனத்தை விட்டு நீங்கி, சகலும் சமானமுமடைந்தார்கள்.

Strange fictions concerning relics.

இந்த நூற்றாண்டில் கல்வி விர்த்தியடைந்துவந்ததுபோல், வீண் பக்தியும் அதிகப்பட்டு வந்தது; அதற்கு இணங்க ஒரு திருவிடாக்கம் எத்தனாப்போம் பூதாஸ்காரியோத்தென்பவன் இயேசாகுகளை காட்டிக்கொடுக்கும்படிக்குச் சத்துருக்களிடத்தில் வாங்கின முப்பது வெள்ளிக்காசைப்பற்றி, விந்தையான ஒரு கதை சொன்னார்கள். அந்த முப்பது வெள்ளிக்காசையும் பொன்காசுகளாக வைத்துக் கொண்டார்கள்; இந்தக் காசுகளோ நிம்ரோத்து என்னும் அரசனுடைய விசாரணைக்குள் கம்பியவேலியில் பெயர்பெற்றவனுயிருந்த தேராக் என்பவன் செய்து, தன் குமாரனுடைய ஆபிரகாமுக்குக் கொடுத்த தாயும், அவர் அதனாலே எத்தியனான எப்பெரோனுடைய வயலைக் கொண்டதாயும், அப்பால் அந்தப் பணம் அவனுடைய மனைவைக் கடந்த இஸ்மவேலரிடத்தில் போனதாயும், அவர்கள் அதைக்கொடுத்து யோசேப்பை வாங்கினதாயும், யோசேப்பின் சகோதரர் தானியங்கொள்ள எகிப்து தேசத்துக்குப் போனபோது, அந்தப் பணத்தை யோசேப்புக்குக் கொடுத்தனுப்பினதாயும், அவ்வையாய் அது பார்வோனைச் சேர்ந்தாயும், அப்பால் அவ்வரசன் மோசே என்பவனை எகிப்தேசத்தைப் பிடிக்கும்படியாக அனுப்பினபோது, அந்தப் பணத்தை அவர் கையில் கொடுத்ததாயும், மோசே என்பவர் அதை சேபா தேசத்து இராஜஸ்திரீயினில் ஒருத்திக்குத் தானம் பண்ணினதாயும், அவருடைய வம்சத்தில் தோன்றின ஒரு இராஜஸ்திரீ அந்தப் பணத்தைச் சாலொமோன் இராஜாவுக்குக் கொடுத்ததாயும், அவர் அதை வாங்கிப் பொக்கிஷத்தில் வைத்திருந்ததாயும், பேதுரு அப்போஸ்தலர் என்பவன் எருசலேமைப் பிடித்துக் கொண்டுபோனபோது, அந்தப் பணத்தைத் தமக்கு யுத்தத்தில் உதவிசெய்த ஒரு அபிசேனிய அரசனுக்குக் கொடுத்ததாயும், அந்த அரசன் வம்சத்தில் தோன்றின சான்றிரின் அந்தப் பணத்தைக் கொண்டுவந்து இயேசாகுகளுக்குப் பாதகாணிக்கையாக வைத்ததாயும், அதை மரியான் எடுத்து இயேசுநாதர் விருத்தசேதன

மடைந்தபோது காணிக்கையாகச் செலுத்தினதாயும், அந்தப் பணத்தை யூதர்கள் எடுத்து இயேசாகுகளைக் காட்டிக்கொடுத்த தரோகிக்குக் கொடுத்ததாயும், அது இந்நாள்வரையும் சோமாபுரியிலுள்ள பேதுருவின் ஆலயத்தில் இருப்பதாயும் சொன்னார்கள். அக்காலத்திலிருந்த மூடபக்திக்கு இதைவிட வேறென்ன திருஷ்டாந்தம் வேண்டும்.

Exemplary piety of Eleazar.

இப்படி இந்த நூற்றாண்டில் அறியாமையும் அந்தகாரமும் பெருகியிருந்தபோதிலும், இறிஸ்துநாதருடைய அடியார்களும் அநேகர் இருந்தார்கள். 1236-ம் வருஷத்தில் பிறந்த ரேமன்ட் லல்லி என்பவர் ஒருவர். மஜார்க்காத்தீவில் இவர் பிறந்து, பட்டாளத்தில் அமர்ந்து, இளவயதில் தம்மார்க்கமாய் நடந்தார். ஒரு இரவில் நித்திரை செய்யும்போது இயேசாகுநாதர் சிலுவையில் தொங்கும் காட்சியைக் கண்டு குணப்பட்டு, சரசேனருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க முயற்சிசெய்தார். தன் திரவியத்தை யெல்லாம் விற்று, அதினால் சரசேனர் வாசிக்கும்படி ஒரு புஸ்தகத்தை எழுத யோசித்து, அவர்கள் பாஷையைக் கற்றுக்கொள்வதற்கு சரசேன அடிமை யொருவனை விலைக்கு வாங்கி, பாஷையையும் கற்றுக்கொண்டு, ஆபிரிக்காவில் போய் வெகு வைராக்கியமாய் தேவஊழியம் நடத்திவந்தார். 1314-ம் வருஷம் வெளியரங்கமாய்த் தான் என்ன காரியமாய் அங்கே வந்தேனென்ற சொல்லிப் பிரசங்கம் செய்கையில், முரடான ஜனங்கள் அவரைக் கல்லால் எறிந்து கொன்றார்கள். மேலும் இத்தாலியா தேசத்தைச் சேர்ந்த நேப்பிள்ஸ்காட்டில் எலியேசர் என்ற பெயருள்ள ஒரு [illegible] இருந்தார்; அவர் இளம்பிராயமுள்ளவராயிருந்தும் கன்னடக்கையும் தேவபக்தியுமுள்ளவராயிருந்தார்; அவர் தமது குடும்பத்தார் அனுசரித்து நடப்பதற்குச் சில கல்லி விதிகளைச் செய்தார். 1-வது: என் வீட்டில் தேவதூஷணமும் சல்லாழுக்கத்துக்கு இணங்காத எவ்வகையான பேச்சும் கடக்கையும் பிருக்கக்கூடாது. 2-வது: அக்கப்புரத்து வீதிகள் காலையில் தேவசனத்தை வாசித்துப் பிரசங்கஞ் செய்ப வேண்டும்; மத்தியானத்தில் அவரவருக்குரிய வேலைகளைச் செய்ய வேண்டும். 3-வது: சொக்கட்டான்முதலிய சூதாட்டங்கள் இருக்கவே கூடாது. 4-வது: என் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் விசுவாசி கிறதற்கும் சற்றேதமான சம்பாஷணைகளைச் செய்வதற்கும் யாதொரு தடையுமில்லை; என்றாலும் இணமார்க்கத்துக்கு வீணாய் ஒன்றும் கடக்கக்கூடாது. 5-வது: என் வீட்டில் சன்மை சச்சரவுகள் ஒன்றுமில்

வாமல் எப்போதும் சமாதானமாயிருக்கவேண்டும். 6–வது: என் வீட்டாருக்குள் எப்போதாவது மனஸ்தாபங்கள் சேரிடமானால், சூரியன் அஸ்தமிக்குமுன் அதெல்லாம் நீங்கிப்போகவேண்டும். 7–வது: எவ்வகையான விபத்துகள் சேர்ந்தபோதிலும் பொறுமையாயிருக்கவேண்டும். 8–வது: இப்படிப் பொறுமையுள்ளவர்களாயும், மன்னிக்கிற குணமுள்ளவர்களாயும், சத்துருக்களை நேசிக்கிற குணமுள்ளவர்களாயும் தேவசிநேகமுள்ளவர்களாயுமிருப்பதே கர்த்தருடைய பின்னடைவுக்கு இலட்சணம். 9–வது: மாலையில் என் குடும்பத்தைச் சேர்ந்த யாவரும் கூடிவந்து, தேவனைப்பற்றியும் மோட்சத்தைப்பற்றியும் நல்ல சம்பாஷணை செய்யவேண்டும்; என் வேலையைச் சாக்கிட்டுக்கொண்டு ஒருவரும் அந்தக் கூட்டத்திற்கு வராமலிருக்கலாகாது; என் வீட்டாருடைய ஆத்தும ரட்சிப்பைப்பார்க்கிலும் பெரிய வேலை எனக்கு ஒன்றுமில்லை. 10–வது: என் பெயரைச்சொல்லி ஒரு பொய்யத்தத்துக்கு எப்படியாகாது. 11–வது: எனக்கு வரும் சோதனைகளிலுலே என் பொறுமை கெட்டுப்போகத்தக்க சமயத்தில் என் இரட்சகரைப் பார்க்கிறேன்; அவருக்கு வாதபாடி எனக்கு வாய்போதிறதா? அவர் பட்ட கன்பத்துக்கு என் துன்பம் எம்மாத்திரம் என்று எழுதினார். இந்தப் பக்திமான் இருபத்தெட்டுப் பிராயமாயிருக்கும்போது, 1393–ம் வருஷம் தன்பதினான்கு இந்த உலகத்தை விட்டுப் பரலோகத்தை சேர்ந்தார்; அவர் மிகுதியாயிருக்கும் போது மடோனும் இரட்சகருடைய பாடுகளைப்பற்றி வாசிக்கக் கேட்டுப் பரவசமடைந்தார்.

இந்த நூற்றாண்டிலிருந்த கிறிஸ்துவுடனே அடியார்களில் தோமஸ் [illegible] மஸ்பிரான்வோன்என்பவர் இரேத்தடமான [illegible] கர்; இவர் இவ்வுலகத்தை நேசித்து இராஜனுடைய முதலாம் எட்வர்ட் என்பவர் காலத்தில் பிறந்து, [illegible] ஆக்ஸ்போர்ட்பட்டணத்துச் சர்வகலாசாலையில் படித்து, [illegible] வேதசாஸ்திரத்திலும் நல்ருப்தி தேர்ந்தவர். இவர் மூன்றாம் எட்வர்ட் என்னும் அரசனுக்கு உற்ற இரகசியதாரும் அரசனைக் குருமாதிரியாயிருந்தார்; கடைசியில் கான்டர்புரிபட்டணத்து பிரதான அத்தியட்சனானார்; இவர் அநேக நல்லனைச் செய்கையும், கிறிஸ்துவின் மகிமைக்கு [illegible] வைத்திருந்தது; பெலேஜியு என்பவனுடைய கொள்கைகளைப் பார்க்கும்போது, இவர் அவைகளை எவ்விதமாய் வெறுத்தார் என்பதை நன்றாய் விளங்கப்பண்ணுகிறது.

கிறந்ததாயிருக்கிறது; அதில்: அவர் கிறிஸ்துவுடனின் திருத்தொண்டனைப் பார்க்கும்போது எனக்குச் சந்தோஷமாயிருப்பதுபோல, பெலேஜியு என்பவனுடைய கொள்கைக்காரனைப் பார்க்கும்போது துக்கமுண்டாகிறது; ஐயோ! அவனுடைய கொள்கைக்காரர் அதிகமாயிருக்கிறார்கள். முன் ஓர்கால் ஒரு நிர்க்கதரிடிக்கு விரோதமாக என்னுற்று ஐம்பது நிர்க்கதரிகள் கூடியிருந்ததுபோல, இப்போது தேவனே உமது கைமாறில்லாத கடாக்ஷத்தையும் அதை முக்கியப் படுத்திப் பேசும் பவுல் அப்போஸ்தலனையும் விரோதிக்கிறவர்கள் அநேகர் இருக்கிறார்கள்; அவர்கள் தங்கள் ஆத்தும விடேற்றத்துக்கு உம்முடைய அருள் வேண்டியதில்லை என்றும், தங்கள் சுயாதீன நித்தமே அதற்குப் போதுமென்றும் சொல்லுகிறார்கள்; உம்முண்டைய இரு பையைப்பற்றி அவர்கள் பேசும்போது, அது அவர்களுடைய புண்ணியத்துக்குக் கைமாறாக வரவேண்டியதென்று பாராட்டுகிறார்கள்; அவர்கள் சொல்லுதைப் பார்க்கும்போது தேவகிருபை பரலோகத்திலிருந்து, "செய்யாமற் செய்த உதவி" யாகத் தங்களுக்குக் கொடுக்கிறதென்று நினையாமல், அவர்கள் அதை விலைக்கு வாங்குகிறதுபோல் எண்ணுகிறார்கள்; இப்படி அவர்களில் அநேகர் தங்களுடைய சுயாதீன சித்தத்தையே பாராட்டி, உம்முடைய அருளையும் ஆவியின் வரப் பிரசாதங்களையும் தோமதப்போகிறார்கள்; அவர்களில் யாராவது பெயருக்கு உம்முடைய இருபை வேண்டுமென்று சொல்வார்களானால், அவர்கள் கர்வத்தால் கெட்ட பிரசங்கிப்போல் நீர் அவர்களுக்கு அரசனுயிருந்து ஆளுகை செய்யக்கூடாதென்று சொல்லுகிறார்கள்; இப்படி உமக்குச் சமமாய் இருக்கவேண்டுமென்று எண்ணுகிற பிரசங்கிப்பார்களிலும், அதிக பேராசை பேராசையுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்ற பெருமையும் அகங்காரமும் முள்ளவர்களாயிருக்கிறார்கள்; அதனாலே அவர்கள் தங்களுடைய புண்ணியம் ஒரு ஜெமாளிப்போல் முத்திரிப்போகிறதென்றும், உமது இருபை ஒரு கேலிக்காரனைப்போல் பிச்சிவருகிறதென்றும், அவர்கள் இராஜாக்களைப்போல் ஆளுகைசெய்கிறவர்களென்றால், நீர் ஒரு கழுதியைக்காக்கிறதுபோல் அவர்கள் சொல்லுக்கு அடங்கி நடக்கவேண்டுமென்றும் நினைக்கிறார்கள். எத்தனையோபேர் இப்படிப்பட்ட விபரீதமான சோம்பாதனை அனுசரித்து நடக்கிறார்கள். ஐயோ! உலகமெல்லாம் பெலேஜியு என்னும் சண்டாளனுடைய தப்போனை ஒத்துக்கொண்டு நடக்கிறதே. சத்தியசொரூபியான தேவனே! நீர் உம்முடைய எதிரியை விளங்கச்

செய்யும். அதை நிலைநிறுத்தும்படி எற்பட்டிருக்கும் உமது அடியானுக்கு உமது திருமுக தரிசனம் அருளி ஆற்றித் தேற்றியருளும். அற்பப் பூச்சியாகிய நான் என் சுபாவத்தைச் சாராமல் உம்முடைய இரட்சிப்பே தாரகமென்று நம்பி, இந்த விஷயத்தைப்பற்றி எழுதத் துணிந்தேன் என்று சொல்லியிருக்கிறார்.

His thoughts on Free Grace.

கடவுளுடைய கைம்மாறில்லாத கடாக்ஷத்தைப்பற்றி: மனுக்குலத்தில் பிறந்த ஒவ்வொருவனுக்கு மிருக்கும் பல விதமான வரங்கள் தேவ அருளால் உண்டானதேயன்றி வேறல்ல. எல்லாருக்கும் சாதாரணமாயிருக்கும் இந்த வரங்களையும்விட மெலுக்கு விசேஷ வரங்களும் உண்டு; அதனாலே அவர்கள் தேவனுக்கு இஷ்டராயும் கிஷ்டராயுமிருக்கிறார்கள். இம்மையில் அவர்கள் கடவுளுக்குப் பிரியமென்ற சலாக்கியமும், மறுமையில் சித்திய பாக்கியமும் அடைவார்கள்; இப்படியிருக்கப் பெலேஜியுவின் கொள்கைக்காரர் இந்த வரங்களையும் தங்கள் சுயபுண்ணியத்தினாலே பெறலாமென்று மேன்மை பாராட்டுகிறார்கள். ஐயோ! இப்பிரபஞ்சத்துக் சங்கீர்ணத்தின் போதுள்ள பிரமை என்னைப் பிடித்திருந்தபோது நானும் இப்படியே நினைத்தேன்; பெலேஜிய என்பவனுடைய கொள்கையே சத்தியம் என்பதுபோல் எண்ணியிருந்தேன்; சாஸ்திரிகள் வாயிலிருந்து கடவுளுடைய கைம்மாறில்லாத கருணை என்ற வாசகம் பிறக்கவேமாட்டாது; நாம் நம்முடைய செய்காரியங்களுக்கு ஸஹாயர்களாயிருக்கிறோம்; நன்மைசெய்யவும், நினைசெய்யவும், புண்ணியத்தைச் செய்யவும், பாவத்தைச் செய்யாதிருக்க சக்தி நமக்கு இயற்கையாய் உண்டு என்ற இப்படிப்பட்ட விபரீதமான சொற்களை உன் காதில் ஓயாமல் வீழுந்துகொண்டேயிருக்கலாம். நான் தேவலயத்துக்குப் போய் இருக்கும்போது: "விரும்புகிறவனாலும் அல்ல, தூடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாம்" என்ற இதமுதலான வேதவாக்கியங்களைத் தேவிருவைனைப் புகழ்ந்தும், மனுஷனுடைய இரட்சணியத்துக்கும் பேவனைக் கேட்டிதுண்டு; அப்போது அவைகள் என் மனதுக்கு வெறுப்பாயிருக்கும். பிற்பாடு நான் தேவலட்சணங்களைக் குறித்துத் தியானஞ்செய்யும்போது, ஒருவன் புண்ணியநெறியில்செல்வதற்குத் தேவனுடைய அருள் அவசியமாய் வேண்டியதென்று அறிந்துகொண்டேன்; இப்படி என் மனதிருப்பம் போக்கி எனக்குள் மென்மேலும் உதிக்கும்படி இருபைபாவித்த தேவனுக்கு நான் எவ்

வளவு கன்றியறிந்தவனும் இருக்கவேண்டியது; அருள்தின் என்பவரும் ஒருவிதை என்னைப்போலவே யிருந்தார்; அவர் தம்மைப்பற்றி நான் ஒருகாலத்தில் பெலேஜியு என்பவனுடைய கொள்கையை அனுசரித்து மதிமயங்கிக்கிடந்தேன்; தேவன்மேலிருக்கவேண்டிய பக்திவிசுவாசம் தேவனுடைய கைமாறில்லாத கருணையென்று நினையாமல், என்னுடைய சுயமுயற்சியிலுல் கிடைத்ததென்று நினைத்தேன். பவுல் அப்போஸ்தலன்: "உன்னை விசேஷித்தவனுரும்படி செய்கிறவன் யார்? உனக்கு உண்டாயிருக்கிறதெல்லாம் நீ பெற்றுக் கொள்ளாததது யாது? நீ பெற்றுக்கொண்டவனுரல் பெற்றுக்கொள்ளாதவன்போல் என் மேன்மை பாராட்டுகிறாய்" என்று சொல்லுகிறதிருவசனங்களை வாசித்தபோது என் மனம் தெளிவடைந்து; தேவ இருபையைப்பற்றி நான் சரியானபடி அறிந்துகொண்டேன்; இப்படி அருள்தின் என்பவருக்குக் கிடைத்த அருள் எனக்கும் கிடைத்தது என்று எழுதியிருக்கிறார்.

His remarks on the love of God.

தேவநேசத்தைப்பற்றி அவர்: "நமக்குள் அந்த நேசம் வாசமாயிருக்குமானால், நம்முடைய சரீரசத்துவங்களையும் மனோசத்துவங்களையும் அவரது மகிமை விளங்கும்படி உபயோகிப்போம்; அதனாலே நமக்கு நஷ்டமும் துன்பமும் சேர்ந்தபோதிலும், அதை நினையாமல் அவருடைய பிரியத்தையே நாடி நடப்போம். கருணைக்கடலாய் விளங்காநின்ற தேவனே! நான் இப்படி என் வாயினாலே சொன்னதுபோல் முடிவுபரியந்தம் நடந்துவரும்படி அருள்புரியும்; உமது திருவைனாலே நான் செய்யும் அற்ப ஊழியத்தை அங்கிகரித்துக்கொள்ளும்; இதைவிட நான் ஒன்றையும் செய்யக்கூடாது; உமது திருவுளச்சித்தத்தின்படி நான் எப்போதும் நடக்கக் கடாக்ஷித்தருளும்; நான் ஒரு கீச நிற்பத்தப் பாவிதான்; இந்த நன்மைகளையெல்லாம் இருபா சமுத்திரம்போல் விளங்காநின்ற தேவனே! நீர் உமது அன்பின் பெருக்கத்தினால் எனக்கு அருளவேண்டும்; நான் பெற்ற நன்மைகளுக்காக எப்போதும் கன்றியறிதலுடையவனும், அதற்குத் தக்கதாய் நடக்கிறவனுமிருக்கும்படி இருபைபுரியும்" என்று எழுதினார்.

இன்னெரு இடத்தில் அவர் தேவனைப்பற்றித் தியானிக்கும் சமயத்தில்: ஜகஜ்ஜோதியாய் விளங்காநின்ற மகா தேவனே! உமது அடியானுகிய நானும், உலகிலுள்ள சமஸ்த ஜனங்களும், உமது ஆச்சரியச்செயல்களைக் கண்ணோக்கும்படி எங்கள் மனக்கண்களைத் திறந்

தருளும்; அவைகளே நாங்கள் கவனிக்கும்போது எங்கள் உள்ளத்தில் தேவபக்தியாகிய திருவிளக்குக் கொழுந்து விட்டெரியும்படி அருள்புரியும்; உலக இருட்டிப்பில் விளங்கிய உமது சர்வவல்லமையையும் சர்வஞானத்தையும் கவனிக்குங்கால், யார்தான் உம்மைத் தியானியாமல் இருக்கக்கூடும்; ஆக்கிறவரும், அழிக்கிறவரும், உயர்த்துகிறவரும், தாழ்த்துகிறவரும் தேவரீர்தான்; ஓ, தேவனே! உமது அன்பு வரம்பில்லா சமுத்திரம்போல் எவ்வளவு பெருக்கமாயிருக்கிறது; ஐயோ! என் அன்பு எவ்வளவு சருக்கமாயும் குறைவாயுமிருக்கிறது; ஆயினும் உமது அன்பு என் அன்பைப்போல் இருக்கிறதில்லை; சகல அண்டசராசரங்களையும் படைத்து எங்கும் வியாபித்து நிற்கின்ற சாட்சாத் கடவுளே! என்சாண் உடம்பிலுள்ள என் நெஞ்சில் நீர் குடிகொண்டிராமல் இருப்பதெப்படி? பாவத்தினால் கறைப்பட்டுப் பாழடைந்த நெஞ்சே! உனக்குள் கண்மைக்கடலாய் விளங்கும் தேவன் வந்து தமது கருணாகிரணங்களால் உன் இருளைப் போக்காவிடில், நீ உன் கதவுகளையெல்லாம் திறந்துவிட்டு, உன் மனச்சத்துருக்களையெல்லாம் முயற்சித்து, உன் ஆவலையெல்லாம் வெளியிட்டு, சர்வவல்லபனும் தயாசமூராணுமாகிய அப்பனே! நீர் எனக்குள் வந்து வாசஞ்செய்து நான் உமது பேரன்பைக் கண்டு ஆநந்தசமுத்திரத்தில் மூழ்கும்படி கிருபைசெய்யுமென்று என் கேட்கிறதில்லை; நீ நினைத்திருந்தாலும் இந்த மகா தேவனுடைய அன்பு ஒன்றே உன்னைத் திர்ப்திசெய்யக் கூடுமேயன்றி, வேறெதனாலும் முடியாது; ஓ, அன்புள்ள யேசுவே! அடியேன் உமது திருவனத்துக்கிசைந்த நன்னெறியில் செல்லும்படி கடாக்ஷித்தருளும்; நீர் ஒரு வார்த்தை சொல்லினால் என் கவி தீக்கிப்போகும்; நீர் உமது கடைக்கண்ணால் நோக்கிப் பார்ப்பீரானில் கடைத்தேறிப்போவேன்; நீசப்பாவியும் சாமத் துரோகியுமாயிருந்த என்னை நீர் உமது அன்பின் காதால் அணைத்துக் கொண்டீர்; ஓ, அற்புதமூர்த்தி! ஆபத்காலா! உமது அருள்விளக்கே யன்றி வேறெதுவே எதென்றறியேன்; இப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் எழுதுவதும் சொல்வதும் எளிது; சொல்லியவண்ணம் செய்வது மன அரிது; ஆகையால் தீனதயாளனே! என் வாயினால் சொல்லுகிற இவைகளை என் இருதயத்தினால் உணர்ந்து நடக்கும்படி கிருபைசெய்யுந் தேவே சம்யம்; ஜோட்சித்தருளும் சுவாமி என்று எழுதினார்.

An extract from his devout meditations.

இந்த மகாத்துமா இப்படிக் கிறிஸ்துநாதருக்கு மிகுந்த உண்மையோடும் பக்திவைராக்கியத்தோடும் வாழ்ந்து செய்து, கடையில் லாம்பார்ட் என்னும் பட்டணத்தில் இறந்துபோனார்.

His death.

இந்த நூற்றாண்டிலிருந்த தேவபக்தர்களில் யோவான் உவிக்லிவ் என்பவர் சிரேஷ்டமானவர்; இவர் சபை சீர்திருத்தத்திற்கு "விடிவெள்ளி நட்சத்திரம்" போலிருந்தவரென்று பெயர்பெற்றவர்; இவர் 1324-ம் வருஷத்தில் யார்க்ஷைர் மாகாணத்தில் பிறந்து, ஆக்ஸ்போர்ட் பட்டணத்திலுள்ள சர்வகலாசாலையில் கல்வியபின்று மிகவும் சேர்ந்து, பேலியல் என்ற வித்தியாசாலைக்குச் சிரேஷ்ட பண்டிதராளுர்; அக்காலத்தில் அவ்விலேய தேசமுழுவதும் ரோமாபுரிப் பாப்புவின் ஆளுகைக் குட்பட்டிருந்தமையால், பாசகச் சன்னியாசிகள் தேசமெங்கும் சுக்கோப்போல் மொய்த்துக்கொண்டிருந்தார்கள்; அவர்கள் அங்கேயுள்ள வித்தியாசாலைகளுக்குப் போய்க் கல்விகற்று வந்தவர்கள் தங்கள் கட்சியைச் சேரும்படி அவர்களுக்கு வஞ்சனையாய்ப் போதகம்பண்ணிவந்தார்கள்; உவிக்லிவ் என்பவர் அவர்கள் சூதுசூழ்ச்சியறிந்து மிகவும் வெறுப்படைந்து பாசக சன்னியாசிகளுக்கும், பாப்புவின் கொடுங்கோன்மைக்கும், அக்காலத்தில் இருந்த வின்பத்திக்கும் விரோதமாகச் சில நூல்களைச் செய்து பிரசித்தப்படுத்தினார்; அதனாலே அவர் காண்டர்புரி வித்தியாசாலைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

Birth of John Wickliff, A.D. 1324 Opposes Mendicant Friars.

இவர் பாசக சன்னியாசிகளுக்கு விரோதமாய்ச் செய்த நூல்களைக் காண்டர்புரிபட்டணத்தின் சிரேஷ்ட அதிபராகிய சீமோன் லாங்காம் என்பவர் பார்த்துக் கோபங்கொண்டு, அவரை 1366-ம் வருஷத்தில் உத்தியோகத்தினின்று தள்ளிவிட்டார்; அதைக்குறித்து உவிக்லிவ் என்பவர் ரோமாபுரிப் பாப்புவாகிய இத்தாம் அர்பன் என்பவரிடத்தில் முறையிட்டும், அவர் மூன்று வருஷகாலமாய் யாதொரு விசாரணையுஞ்செய்யாமல் ஏறேறாறே என்று இருந்தார்; பிற்பாடு உவிக்லிவ் என்பவர் பாப்புவினுடைய கொடுமைகளைக் கண்டித்துப் பேசினபடியால், 1370-ம் வருஷத்தில் அவர் அவரைச் சபைக்குப் புறம்பாக்கினார்; ஆயினும் இங்கிலாந்து தேசத்து அரசனுடைய மூன்றாம் எட்வர்ட் என்பவரும், லான்கஸ்தர்

Appeals in vain to Rome against Archbishop Langham.

பிரபுவும் அவர்பேரில் அபிமானம் வைத்து, 1374–ம் வருஷத்தில் அவர் ரோமாபுரிக்குப் போய், பாப்புவினுடைய உத்தியோகஸ்தரால் இங்கிலாந்து தேசத்து ஜனங்களுக்கு வந்த கஷ்டங்களைத் தெரிவிக்கும் படி எற்பாடுசெய்து அனுப்பினார்கள்; அவர் போய்ப் பாப்புமார்க்கத்தின் தவறுகளையும், அதனால் உண்டான தீமைகளையும் நன்றாய் அறிந்து கொண்டு தமது ஜனதேசம் வந்து சேர்ந்தார்; அரசன் அவர் செய்த உபகாரத்தை நினைத்து அவரை லந்தர்வொர்த் என்ற இடத்திலுள்ள ஒரு சபையை விசாரிக்கும்படியாக நியமித்தார்.

Is cited to appear before the Bishops.

அதற்குப்பின் இவர் பாப்புவின் அதிகாரம், சொரூப ஆராதனை, அர்ச்சியசிஷ்ட வணக்கம், *தேவசிசரம், பாவமன்னிப்புச்சீட்டு முதலிய பாப்புமார்க்க வழுக்களுக்கு விரோதமாய்ப் பிரசங்கம்பண்ணவும், புஸ்தகம் எழுதிப் பிரசாரஞ்செய்யவும் ஆரம்பித்தார். பாப்புவானவர் இதைக்கேட்டு இங்கிலாந்து தேசத்திலுள்ள வைதீக லௌகீக உத்தியோகஸ்தர் எல்லாருக்கும் இந்த அதிகாரப்பத்திரங்களை அனுப்பி, உவிக்லிவ் என்பவரை விசாரித்துத் தண்டிக்கும்படி கட்டளையிட்டார்; அவைகளை ஆக்ஸ்போர்ட்பட்டணத்துச் சர்வகலாசாலையில் படித்துவந்தவர்கள் சற்றேனும் மதியாமல் தலைவரைச் சுற்றி நின்றுவிட்டார்கள்; ஆயினும் காண்டர்புரிபட்டணத்துச் சிரேஷ்ட அத்தியக்ஷரும், லண்டன்பட்டணத்துக் கண்காணியும் அவரை வரவழைத்து விசாரணைசெய்தார்கள்; அப்போது அவருடைய இஷ்டர்களாகிய லான்கஸ்டர் பிரபுவும், பெர்சி என்னும் பிரபுவுங்கூட இருந்தார்கள்; அச்சமயத்தில் கடந்த தர்க்கத்தில் லான்கஸ்டர் என்னும் பிரபுவுக்கும், லண்டன்பட்டணத்துக் கண்காணியாருக்கும் பெரிய சம்வாதம் கடந்ததால், உவிக்லிவ் என்பவர் அத்தனிசை தப்பிக்கொண்டார்.

Wicklif acquitted through the interest of the king.

1378–ம் வருஷத்தில் மேற்சொல்லிய கண்காணிகள் உவிக்லிவ் என்பவரை மறுபடியும் விசாரணைக்கு வரவழைத்தார்கள்; ஆயினும் அரசனும் ஜனங்களும் அவர்பட்சமாயிருந்ததினாலும், பாப்புவானவர் இவ்விரண்டு மரித்துப்போனபடியினாலும் அவருடைய சத்துருக்களாலே அவருக்கு யாதொரு துன்பமும் கேடுவில்லை; என்றாலும் விசாரணை

* Transubstantiation.

உவிக்லிவ் சிரேஷ்ட அத்தியக்ஷர்முன் விசாரிக்கப்படுவது.

நடக்குங்காலத்தில் அவருடைய மனஸ்திரம் கன்றாய் வினங்கவில்லை; சத்துருக்களுக்குச் சற்றுச் சாய்ந்துகொடுத்தவர்போல் காணப்பட்டார்; ஆயினும் பாப்புமார்க்கத் தவறுகளைப்பற்றி அவருக்கிருந்த வெறுப்பு சிறிதேனும் குறையவில்லை. பாப்புவானவர் சபைக்கு தலையல்ல, குருமார் ராஜாங்கத்தாருக்குக் கீழ்ப்பட்டவரென்றும், குருமார் விவாகம் செய்யாமலிருப்பது நல்லதல்லவென்றும், பாவமன்னிப்புச் சீட்டுக்கொடுப்பதில் எந்தப் பிரயோசனமும் இல்லையென்றும், மூன்று சாக்கிரமெந்துகள் உண்டென்றும், அத்திபகூர் இருப்பது அவசியமில்லையென்றும், உச்சரிக்கும் ஸ்தலம் இருக்கிறதென்றும், மரித்தவர்களுக்காக ஜெபஞ்செய்வது நல்லதென்றும் தனக்குச் சரியாகத் தோன்றியவற்றை வைராக்கியமாய்ச் சாதித்துவந்தார்.

Translates and publishes the Bible, A.D. 1380.

அவர் இப்படி சோமான்மார்க்கத்திலுள்ள வழுக்களை எடுத்துக்காட்டி, ஜனங்களுக்குச் சத்தியமார்க்கத்தைப் போதித்துவந்ததுமன்றி, லத்தின் பாஷையிலிருந்த வேதம் முழுவதையும் இங்கிலிஷ் பாஷையில் மொழிபெயர்த்து, 1380–ம் வருஷத்தில் பிரசித்தஞ்செய்தார். இது பாப்புமார்க்கமாகிய மரத்தை அடியோடே வெட்டிச்சாய்க்கிற

கோடரிபோல் இருந்தது; அதனுலே பாப்புமார்க்கத்தாரில் அநேகர் அவனை விரோதிக்கவும் துன்பப்படுத்தவும் தலைப்பட்டனர்; ஆயினும் அவர் இப்படி வேதாகமத்தை இங்கிலிஷ் பாஷையில் மொழிபெயர்த்தது ஜனங்களுக்குள் சத்தியமார்க்கம் தழைத்தோங்குவதற்கும், அவமார்க்கமும் அஞ்ஞானமும் நீங்குவதற்கும் மிகவும் அனுகூலமாயிருந்தது; அநேக ஜனங்கள் இதை வாசித்து உவிக்ளிவ் என்பவனைச் சேர்ந்துகொண்டார்கள்; வழிமார்க்கமாய் நடந்துபோரும் இரண்டுபேரில் ஒருவன் உவிக்ளிவ் என்பவருடைய சொல்லையை அனுசரித்தவனுய் இருப்பான் என்று ஒருவர் எழுதியிருக்கிறார்.

His influence extends to Bohemia.

இதற்குப்பின் அவர் தேவதிசகாம் என்னும் பாப்புமார்க்கக் கோட்பாட்டை நிராகரிக்கும்படி துணிந்தமையால், அநேகர் அவனை விரோதிக்கத் தொடங்கினர்கள்; அவருக்குப் பிராண சிநேகிதராயிருந்த லான்கஸ்டர் பிரபுவும் அவனைக் கைவிட்டுவிட்டார்; இன்னும் அவருடைய ஜாதிகளில் அநேகர் பாப்புவுக்குப் பயந்து அவருடைய கூலியைச் சோதரர்களைப்போல் நடந்துகொண்டார்கள்; அதனுலே ஆக்ஸ்போர்ட்டிலிருந்த அவருக்கு இருந்த உயர்ந்த அர்த்தம் போய்விட, அவர் லற்றர்வோர்த் என்னும் இடத்தில் தனிமையாய் வாசஞ்செய்யவேண்டியிருந்தது; ஆயினும் அவருடைய உபதேசத்தினுலும், பிரயத்தனங்களினுலும் சத்தியமார்க்கம் இங்கிலாந்து தேசத்திலும் அதற்கு வெகுதூரமாயுள்ள பொஹிமியா தேசத்திலும் பிரபலமாகிவந்தது; இங்கிலாந்து தேசத்து ராஜனுடைய இரண்டாம் நிச்சர்ட் என்பவர் பொஹிமியா தேசத்திலுள்ள ஒரு இராஜஸ்திரீயை மணம்புரிந்திருந்தமையால், அவ்விரண்டு தேசத்தாருக்கும் அதிக சம்பந்தமுண்டாயிருந்தது; மேற்சொன்ன இராஜபத்தினியுடைய தேசத்தாரில் ஒருவன் ஆக்ஸ்போர்ட்பட்டணத்துச் சர்வகலாசாலையில் படித்திருந்து, உவிக்ளிவ் என்பவருடைய உபதேசங்களையும் அறிந்துகொண்டு தன் ஜனதேசத்தில் இருந்தவர்களுக்குத் தெரியப்படுத்தினுன்.

His letters to John Huss.

உவிக்ளிவ் என்பவர் மரித்தபின்பான வருஷத்தில் பொஹிமியாவிலுள்ள ஜோவான் ஹஸ் என்பவருக்கு ஒரு நிருபம் எழுதியனுப்பினர்; அது மிகவும் விசேஷமும் சாரமுமுள்ளதாயிருப்பதால் அதை இங்ஙனம் எடுத்தெழுதுவது உத்தமமாயிருக்கும். "சர்த்தாத ருளை

பிரியமுள்ள சகோதரரே! நானும், சத்தியத்தை அறிந்திருக்கும் யாவரும் உங்களிடத்தில் வெகு நேசபாத்தமாய் இருப்பது கடமையே; தேவனது கிருபாகடாக்ஷத்தால் நாம் அடைந்த சத்தியம் எப்போதும் நமக்கு உற்றதுணையாயிருக்கும்; நீங்கள் சத்தியத்தை அனுசரித்து அதற்குத் தக்கதாய் நடக்கிறீர்கள் என்பதை உங்களிடத்திலிருந்துவந்த சகோதரர் சொல்லக்கேட்டு ஆத்ம சந்தோஷமடைந்தேன்; அந்திக்கிறிஸ்துவினும் கிறிஸ்துவின் சேஷ்டாசுபாவமே உங்களுக்குள் உண்டாயிருக்கும் உபத்திரவங்களேயெல்லாம் சென்விப்பட்டேன்; இப்படி நடப்பது ஆச்சரியமல்ல, கிறிஸ்தாக்ஷரின் பிரமாணத்தை அனுசரித்து நடப்பவர்கள் அவ்வுபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்துக்கொள்ளுவார்கள்; யோவான் என்பவர் வெளிப்படுத்தின விசேஷத்தில் வல்லசர்ப்பம் ஒரு ஸ்திரீயை வாதித்ததாகச் சொன்னபடியே எல்லாம் நடக்கிறது; ஆயினும் சத்திய சொரூபியோடு சாட்சாத் கடவுள் தமது பக்தர்களுக்கு சேமம் உபத்திரவத்தினின்று அவர்களே விலக்கி இரட்சிப்பார்; ஆகையால் நாம் தேவனுக்குள் அதிக ஸ்திரமடைந்து நமது இருதயமனத்தில் அவரை வைத்துப் பூசித்துவருவோமானுல், அவரது அருள்வாக்கின்படி நமக்குப் பேரின்பம் கிடைக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை; அவர் நேசிக்கிற எந்த மனுஷரும் இப்படியே நடப்பது அவரது செயலாயிருப்பதால் நமக்கு மேரிடும் துன்பம் சோதனைகளைப்பற்றி நாம் சோர்ந்துபோகாமல் தைரியமாயிருக்கவேண்டும். தட்டான் பொன்னைப் புடமிடுவதுபோல் தேவன் நம்மைப் புடமிடுவார்; நாம் அதனுலே அதிகச் சுத்தமடையவும் பரலோகத்துக்குப் பரிபக்குவமடையவும் ஏதுவாயிருக்கும்.

"இவ்வுலக வாழ்வு நீர்மேல் குமிழிபோல் நிலையற்றது, பரம வாழ்வோ என்றென்றைக்கும் சாஸ்வதமாயிருக்கப்பட்டது; நாம் இம்மையில் இயேசுகர்த்தருக்கு ஊழியஞ் செய்கிறவர்களாயிருப்போமானுல், மறுமையில் நித்திய பேரின்பத்தை அடைவோம்; இவ்வுலகத்தில் பாடும் துன்பமும் துக்கமுமேயன்றி வேறொன்றுமில்லை; ஆகையால் பரலோகத்தின் பாக்கியத்தை நாடி நடப்பது உத்தமம்; நமக்கு முன்னிருந்த பக்தர்களுடைய காரியத்தைப் பார்க்கும்போது எப்படியிருந்தது; அவர்களுக்கும் துன்பமும், சஞ்சலமும், சாவதும், மரணமும் உண்டாயிருந்தே; எபிரெயர் நிருபத்தில் சொல்லியபடி, அவர்கள் அதையெல்லாம் பொறுமையோடே சகித்துக்கொண்டு

இறிஸ்துவின் திருவடிகளைச் சேர்ந்து, அவர் கற்பனைப்படி நடந்து போனார்கள்; மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான பாவத்தையும் நம்மை மெருக்கிடித்திற பாவத்தையும் நாம் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் தவறாதிற வரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி மெத்த பொறுமையோடே ஓடுகிறவர்களாயும், அவரது கொடியின் நிழலைக்கு அந்திக்கிறிஸ்துவோடு போராடுகிறவர்களாயும் இருப்போமாக.

"ஆகையால் நின்று இயேசுவினது கருணாபிரபுவான கோதாளுடைய ஊழ்ப என்பதோ! உம்மை நான் கண்டு பழகாவிட்டாலும், இறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்திலுறும் நேசத்திலுறும் உம்மோடே நான் பெருங்கின சிநேசம்பற்றும் உடையவனாயிருக்கிறேன்; தேவன் உமக்கு அருளின கிருபையில் நீர் நிலைத்து, இறிஸ்து இயேசுவின் சுத்தசேவகனாயிருந்து, அவரது சத்துருக்களினோடு போராடி அநேகர் சத்தியமார்க்கத்தில் சொண்டெத்து சேர்க்கும்படி பிரயாசப்படுவீராக; அவமார்க்கங்களினுறும், அந்திக்கிறிஸ்துவின் அபத்த உபதேசங்களினுறும் தேவனுடைய சத்தியமார்க்கம் தடைப்படமாட்டாது; அந்திக்கிறிஸ்துவினுடைய முடிவுகாலம் கிட்டிக்கொண்டது; ஆகையால் நீர் ஊக்கத்தோடு இறிஸ்துவின் அடியாக்களைச் சேர்ப்பதற்கும்படி பிரயாசப்படும்; உம்முடைய தேசத்திலேமாத்திரமல்ல, இன்னும் அநேக தேசங்களிலும் இறிஸ்துவின் திருத்தொண்டர்கள் பாடுகளையும் உபத்திரவங்களையும் மரணத்தையும் அவர்நிமித்தம் பொறுமையாய்ப் பட்டனுபவிக்கிறார்களென்று அறிந்து ஆச்சரியசமடைந்தேன்; இப்போது நான் அதிகம் ஒன்றும் எழுதவேண்டியதில்லை. பிரிய சகோதரரே! நீங்களெல்லாரும் தேவனுக்கு உகந்தவர்களாய் நடந்துகொள்ளுங்கள்; எனக்காகவும் எல்லாச் சபைகளுக்காகவும் பிரார்த்தனைசெய்யுங்கள்; சமாதானத்தின் கர்த்தர் நீங்கள் எப்போதும் இறிஸ்தாக்ஷருக்கு உகந்தவர்களாய் நடந்துகொள்ளும்படி உங்களுக்கு வேண்டிய திருபையை அருளுவாராக; அவருக்கே கனமும் மகிமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக: ஆமென்" என்று எழுதினார்.

உவிக்ளிவ் என்பவனை லண்டன்பட்டணத்தில் கூடின சங்கத்தார் குற்றமுள்ளவர் என்று தீர்த்தார்கள்; இவர்பேரில் சாட்டப்பட்ட குறைகள் எவையெனில்:—

1. நற்கருணைப் பதார்த்தங்களில் இறிஸ்து நிசமாய் இருக்கிறதில்லை.

2. மரணத்திற்கேதுவான பாவஞ்செய்த குருவானவர் தேவபணிவிடை செய்யப்படாது.

3. தேவன் பிசாசுக்குக் கீழ்ப்படியவுண்டு.

4. தர்மம் கொடுப்பது மனிதரின் இஷ்டம். துன்மார்க்கரான குருமாருக்கு தருமம் கொடுக்கப்படாது.

5. சன்னியாசமடங்களில் சேருவது இறிஸ்துமார்க்கத்துக்கு அடுத்ததல்ல.

6. குருமார், உதவிக்குருமார், தேவபுத்திரர் போன்ற பாப்புமார்க்கத்துராதனசபை உத்தியோகஸ்தர் அந்திக்கிறிஸ்துவுக்கு வேலைக்காரர்.

7. பிரஜைகள் அரசர்களுக்குக் கீழ்ப்படியவேண்டியது அவசியமில்லை.

8. சருபத்தையாவது, சிலுவையையாவது வணங்கப்படாது. அவைகளின் முன்னே மெழுகுவர்த்தி யெரிக்கப்படாதென்று சொன்னவராமே. அதனாலே அவர் லற்றர்வொர்த் என்ற இடத்துக்குப் போய் அவ்விடத்தில் 1384-ம் வருஷத்தில் மனச்சமாதானத்துடன் அறுபதாம் வயதில் மோட்சபதவி அடைந்தார்; அவர் இறந்து பத்தொன்பது வருஷத்துக்குப்பின் 1406-ம் வருஷத்தில் ஹூஸ் போர்ப்பட்டணத்துச் சர்வகலாசாலையைச் சேர்ந்தவர்கள் அவருடைய உத்தமகுணத்தைப்பற்றியும் கன்னடக்கையைப்பற்றியும் புகழ்ந்துபேசினார்கள். "அவர் ஜீவகாலமெல்லாம் ஒரு உத்தமகுணமுள்ளவராயிருந்தார்; அவர் இளம்பிராயமுதல் மரணகாலபரியந்தம் அவரது நடக்கை ஒரு உத்தமமானதாயிருந்தது; அவரைக்குறித்து எப்பிரமாணமாவது நீதிசொல்ல இடமில்லை; தர்க்கசாஸ்திரம், நற்றுவசாஸ்திரம், தர்மசாஸ்திரம், வேதசாஸ்திரம் முதலிய நூல்களில் அவர் செய்ததுபோல் வேறொருவரும் செய்யவில்லை; இப்படிப்பட்டவனை வேதப்புரட்டன் என்று எவன் குற்றம் சொல்லலாம்" என்று புகழ்ச்சியாய் எழுதினார்கள்; அப்படியிருந்தும் அவருடைய சத்துராதிகள் அவர் எழுதிய புஸ்தகங்களையெல்லாம் அக்கினிப்பிரவேசம் செய்தபின்றி, பதினேழாம் நூற்றாண்டின் துவக்கத்தில் கொன்ஸ்தான்ஸ் என்னும் பட்டணத்தில் கூடின பாப்புவின் சங்கத்தார் அவருடைய அங்கத்தை எடுத்துச் சுட்டுச் சாம்பலை ஆற்றிலே எறிந்துவிட

Wickliff's death in 1387 and character.

வேண்டுமென்று தீர்ப்புச்செய்தார்கள்; இந்தத் தீர்ப்புப்பிறகு பதின் மூன்று வருஷங்களுக்குப்பின் அப்படியே நடந்தது. உவிக்ளிவ் 32 பிராயமாயிருக்கும்போது உரோமையின் பேராசையைக் கண்டித்து "சபையின் அந்தியகாலம்" என்று பேர்கொண்ட புஸ்தகம் ஒழுதினர் இது 1356-ம் வருஷம் எழுதப்பட்டது. பேதுரு வரியைப் பார் குத்தரப்படாதென்று போதித்தார். இப்படியாக அந்தக் காலத்தில் அநேகத் தப்பறைகளைத் தவிர்க்கப் பலபிரயத்தனம் செய்தபோதிலும் இவர் காலத்தில் மார்க்க சீர்திருத்தம் நடவாதபடி தடுத்துவைத் நாம் தேவனைத் துதிக்கவேண்டும். ஆத்தர் என்பவனைப்போ லிவ் சபைச் சீர்திருத்தம் செய்திருந்தால், மேலே நாம் பார்த்த அநேகர் களைப்போதனைகளைச் சுத்தபோதனைகளோடு கலந்துவிட்டிருப்பார்.

Increase of the Wicklifites or Lollards.

உவிக்ளிவ் என்பவர் காலத்தில் அவருடைய கொள்கையை அநே சரித்தவர்கள் கொஞ்சப்பேராயிருந்தார்கள்; அவர் இறந்தபின்போ இங்கிலாந்து தேசத்தி லும், மற்றத் தேசங்களிலும் அவர்கள் அதி மாய்ப் பெருகினர்கள்; அவர்களுக்கு உவிக்ளிவியர் என்றும், லொல் டர் என்றும் பெயருண்டாயிற்று; லொலர்ட் என்னும் பெயரைக்குறி தைக் கொஞ்சம் சந்தேகமிருக்கிறது; சிலர் இந்தப் பெயர் இந்த நூ றாண்டில் மதபேதத்தினிமித்தம் கட்டெரிக்கப்பட்ட ஹொலாந்து தே சத்தவரான உவால்ற்றர் லொலர்ட் என்பவரைப்பற்றி வந்தது என்று சொல்லுகிறார்கள்; சிலர் அப்படியல்ல, ஜர்மனி தேசத்தில் கொள்ளை நோயினால் இறந்துபோனவர்களை எடுத்து அடக்கஞ்செய்தவர்கள் சவத்தைக் கல்லறைக்குக் கொண்டுபோகும்போது ஒரு புலம்பலைப் பாடிவந்ததினாலே, பாடுகிறது என்று அர்த்தங்கொள்ளும் "லல்லன்" என்னும் ஜர்மன்பாஷையின் சொல்லைக்கொண்டு இந்தப் பெயர் உவிக்ளிவ் என்பவருடைய கொள்கைக்காரருக்கு நிந்தையாக வந்த தென்று நினைக்கிறார்கள்; லண்டன்பாகாரியிலிருந்த ஜனங்களில் அநேகரும், மேற்சொல்லத்தைச் சேர்ந்தவர்களில் அநேகரும் உவிக்ளிவ் என்பவருடைய கொள்கைகளை ஏறுசரித்து சத்தியமார்க்கத்தின்படி நடந்துவந்தார்கள்; அவர்களுக்குச் சத்துருக்களால் அநேக துன் பங்கள் சேரிட்டபோதிலும், அவர்கள் அதிதில்லாவற்றையும் பொறு மையோடே சகித்துக்கொண்டு, நிஜ்துவின் இரண்டாமத்தாவ் னோ யாவருக்கும் கூறி, அவரது இராஜ்யம் விர்த்தியடையும்படிக்கு வேண்டிய முயற்சிகள் செய்துவந்தார்கள்.

QUESTIONS ON FOURTEENTH CENTURY.

பதினான்காம் நூற்றாண்டின் சரித்திரத்தின்பேரில் கேள்விகள்.

1. மேலச்சபையில் என்ன பிரிவினை யுண்டாயிற்று?
2. லல்லி, எலியேசர் என்பவர்களைப்பற்றி என்ன தெரியும்?
3. எலியேசர் குடும்பத்தில் அனுசரிக்கும்படி செய்த ஒழுங்குகளென்ன?
4. பிராட்வார்டின் என்பவனின் குணகுணமென்ன? பெலேஜியு என்பவனின் கொள்கையை எப்படிக் கண்டிக்கிறார்?
5. உவிக்ளிவ் என்பவனைப்பற்றித் தெரிந்ததைச் சுருக்கமா யெழுதும்.
6. இவர்பேரில் சாட்டப்பட்ட குற்றங்களென்ன?
7. மார்க்கசீர்திருத்தங்களில் காணப்படவேண்டிய என்ன லட்சணம் இவரில் காணப்பட்டன? எதில் குறைந்தவராய்க் காணப்பட்டார்?

பதினான்காம் நூற்றாண்டு.

கொன்ஸ்தந்தினோபுரியை மகமதன் என்பவன் பிடித்தல். கல்விவிர்த்தியாதல். அச்சியற்கம் கண்டுபிடிக்கப்படுதல். சபையின் நிலைமை. அமெரிக்கா கண்டம் கண்டுபிடிக்கப்படுதல். மூன்று பாப்புமார் வாதாடுதல். ஏழாம் அலெக்சந்தரின் கற்பித்தியங்கள். பீசா; கொன்ஸ்தான்ஸ் பட்டணங்களில் கூடின சங்கங்கள். அவர்கள் செய்த தீர்ப்புகள். போவான் ஹஸ் பிறக்குதல். உவிக்ளிவ் என்பவர்கொள்கைகளை அனு சரித்தல். அநேக துன்பங்களைச் சகித்தல். மரணமடைதல். பொதுமியா தேசத்துப் பிரபுக்கள். அலனார்குறித்தல் சாகும் பகருதல். பிரேக்பட்ட னைச்ச ஜெரோம் என்பவர் சத்திய நெறியைவிட்டுத் தவறுதல். பின்பு மனஸ்தாபப்பட்டுச் சத்தியத்தைக்குறித்துச் சாகும் பகருதல். மரண மடைதல். போவே என்பவன் அவனைக்குறித்துச் சாகும் பகருதல். ஹுஸியர் உற்பத்தி. அவர்கள் குருடர்செய்கைகள். இவ்விய சகோதரர் உற்பத்தி. அவர்களுக்கு கேரிட்ட பகிஷ்கரிப்பு. காபம்ஸ் என்பவருக்கு கேரிட்ட தண்டனை. அரண்டல் முதலான அதிபர்களுக்குமுன் விசாரிக்கப்பட்டுக் குற்றந் தீர்க்கப்படுதல். மரணம். கலிசேஷ்டு பிரபலம். போமான்மார்க்கம் விர்த்தியடைதல்.

அஞ்ஞான இருள் அகலவும், சத்தியமார்க்கம் தழைத்தோங்கவுந்தக்க சில முக்கிய சம்பவங்கள் இந்த நூற்றாண்டில் நடந்தமையால், இதைச் சற்று விசேஷதமுள்ளதென்று சொல்லலாம். 1453-ம் வருஷத்தில் துருக்கருக்கு அரசனுமிருந்த இரண்டாம் மகமது என்பவன் கொன்ஸ்தாந்தினோபுரியைப் பிடித்துக்கொண்டதோடு கிரேக்க இராஜ்யம் அற்றுப்போயிற்று; அதனாலே கிறிஸ்துமார்க்கம் பிரபலமாவதற்கு ஒரு வகையில் கடையாயிருந்தபோதிலும் கல்வி விர்த்தியடைவதற்கு அனுகூலமாயிருந்தது. கொன்ஸ்தாந்தினோபுரியிலிருந்த கல்விமான்களும் சாஸ்திரிகளும் இத்தாலியாழுதலான தேசங்களுக்குப் போய், அவ்விடங்களில் கல்வியும் அதைச்சார்ந்த காகீகமும் அபிவிர்த்தியாகும்படிக்கு வேண்டிய முயற்சிகள் செய்தனர்; இதுவுமன்றி இந்த நூற்றாண்டில் அச்சடிக்கிற வித்தையும் ஆரம்பமாயிற்று; ஹாயர்லம்பட்டணத்திலுள்ள காஸ்டர் என்பவன் அச்சியற்றிரத்தை முதலாவது கண்டுபிடித்ததாகச் சிலர் நினைக்கிறார்கள்; வேறு சிலர் மென்ஸ்பட்டணத்திலுள்ள யோகான் கட்டன்பர்க் என்பவன் அதை 1449-ம் வருஷத்தில் முதல்முதல் கண்டுபிடித்ததாக உத்தேசஞ் செய்கிறார்கள்; இந்த முக்கிய சருவியினாலே அநேக வருஷங்களாய் மறைத்து மங்கிக்கிடந்த சாஸ்திரங்கள் பிரபந்தங்கள் எல்லாம் ஜனங்களுடைய பார்வைக்கு வரவும், இவ்விதமாய்க் கல்வி பெருகவும், சபையில் சீர்திருத்தம் உண்டாகவும் ஏதுவாயிற்று.

Constantinople taken by Mahomed II, A.D. 1453. Revival of learning. Invention of printing.

மதவிஷயத்தில் சபையினுடைய நிலைமையைப் பார்த்தாலோ வெறும் பரிதாபம்; அந்த சாரமில்லாத சக்கைபோலும், ருசையில்லாத சக்குபோலும், ஒளியில்லாத மணிபோலும் இருந்தது; கிறிஸ்தவர்களென்ற நிறைந்த நாமத்தைப் பெற்றிருந்தவர்களில் அநேகர் சாஸ்வத பேரின்பவாழ்வை மறந்து, நீர்மேல் குமிழிபோல் நிலையற்ற இப்பிரபஞ்சவாழ்வை நாடி நடந்தவர்களாயிருந்தார்கள்; இந்நூற்றாண்டில் இத்தாலியா தேசத்தானுடைய (Christopher Columbus) கிறிஸ்தவர் கோலம்பஸ் என்பவர் அமெரிக்கா கண்டத்தைக் கண்டுபிடித்ததினாலே, கிறிஸ்தவர்களில் அநேகர் அக்கண்டத்தில் பொன் வெட்டி வீசித்து திரவியம் சம்பாதிக்கலாமென்ற பேராசையினால் அவ்விடத்திற்கு ஓடினார்கள்; சாதாரண கிறிஸ்தவர்களுடைய சீர்

Remarks on the State of the Church. Discovery of America.

இப்படியிருந்தது; கிறிஸ்துமார்க்கத்தின் சத்திய உபதேசங்களைப் போதிக்கும்படி ஏற்பட்டிருந்த குருமாருடைய ஸ்திதியோ இதைவிட கிர்ப்பந்தமாயிருந்ததென்று சொல்லலாம்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் லத்தின்சபை இருகக்ஷிப்பட்டுக் கிடந்தது; ரோமாபுரியில் ஒருபாப்புவும், அவிக்னன் பட்டணத்தில் ஒரு பாப்புவும் இருந்துகொண்டு அமளிபண்ணினார்கள்; ரோமாபுரியிலிருந்தவருக்கு ஒன்பதாம் பானிபேஸ் என்று பெயர்; அவிக்னன் பட்டணத்திலிருந்தவருக்குப் பதின்மூன்றும் பெனிடிக்ற் என்று பெயர். இவர்களாலே கிறிஸ்துமார்க்கத்துக்கும் திருச்சபைக்கும் அதிகக் கெடுதியும் அபகீர்த்தியும் நேரிட்டன; அரிச்சந்திரன் வாக்கைப்போலத் தங்கள் வாக்குத் தவறாது என்று தேன்மை பாராட்டின இவர்களுக்குள் மூன்றுபேர் ஒருமிக்கத் தாங்கள் பாப்புப்பட்டத்துக்குப் பாத்தியஸ்தரென்று வாதாடினார்கள்; அந்தத் திரிமூர்த்திகளையும் கொன்ஸ்தான்ஸ்பட்டணத்தில் கூடின சங்கத்தார் தள்ளிப்போட்டு, ஐந்தாம் மார்ட்டின் என்னும் ஒருவனைப் பாப்புப் பட்டத்துக்கு ஏற்படுத்தினார்கள்; ஆயினும் பாப்புகள் எல்லாரிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்த ஆறாம் அலெக்சாந்தர் என்பவர் மகா புகழ்பெற்றவராயிருந்தார். ரோமாபுரியில் வேறே இராயனுக்கு எவ்வளவு புகழ்ச்சி கிருந்தாலும், அவ்வளவு புகழ்ச்சி பாப்புகளில் இந்த அலெக்சாந்தர் என்பவருக்கு இருந்தது; நியோமுகத்திலும் துண்மார்க்கத்திலும் இவனைவிடச் சமர்த்தர் ஒருவரை உலகத்தில் காண்பது அரிதானாம்; இவர் லீலாவினோத பிரியராய் வைப்பாட்டியோடு வைத்துக்கொண்டு வைபோகமாய்த் தம்முடைய காலத்தைக் கழித்துவந்தார்; இப்படி வேசிமார்க்கத்திலே அவருக்கு மூன்று குமாரரும் ஒரு குமாரத்தியும் பிறந்தார்கள்; இவர் அநேகம்பேரை வஞ்சித்துக் கொன்றுபோட்டார்; ஆயினும் "தன்னிலை தன்னோர்க்கெய்" என்ற பழமொழிப்படி, இவர் செய்தவினை கடைசியில் இவனையே வந்து பிடித்தது. தமக்கு இரண்டாவனான குருமார்களில் ஒருவருக்காக ஆயத்தப்பண்ணி வைத்திருந்த விஷத்தைத் தாமே தெரியாமல் நின்று இறைத்தார்; இது 1503-ம் வருஷத்தில் நடந்தது. தேவகிருபை பெறுதலுடைய முடிவு எப்படி இருக்குமென்று இச்சரித்திரத்தில் அறிந்து கொள்ளலாம்.

Three contending Popes. Infamous conduct of Alexander VI.

சபையின் ஸ்திதி இப்படிச் சிக்கெட்டதா யிருந்தமையால் அதைச் சீர்திருத்துவது அவசியமென்று அனேகர் நினைத்தார்கள்; அதற்கென்று 1409-ம் வருஷம் மார்ச்சுமாதம் இருபத்தைந்தாந்தேதி பீசா பட்டணத்தில் ஒரு பெரிய சங்கம் வைத்தார்கள்; அப்போது இருந்த இரண்டு பாப்புகளுடைய குற்றத்தை அச்சங்கத்தார் விசாரித்து, அவர்கள் அந்த உயர்ந்த உத்தியோகத்திற்கு அயோக்கியரென்று தள்ளிப்போட்டார்கள்; அப்படியிருந்தும் அந்தப் பாப்புகள் சங்கத்தாருடைய தீர்ப்பைச் சற்றேனும் மதியாமல் தங்களுடைய உத்தியோகத்தைப் பார்த்துக்கொண்டதுமன்றி, முன்போல் தங்கள் துர்மார்க்கங்களையும் நடப்பித்துக் கொண்டேவந்தார்கள்; அதனாலே 1414-ம் வருஷத்தில் சுவிற்சர்லாந்து தேசத்திலுள்ள கொன்ஸ்தான்ஸ் பட்டணத்தில் மேற்றிராசன சங்கம் வைத்து, அதில் ஐரோப்பாவிலுள்ள பல இராஜ பிரபுக்களும், சில தாஞ்சபதிகளும், இருபது பிரேஷ்ட அத்தியக்ஷர்களும், நூற்று ஐம்பது அத்தியக்ஷர்களும், நூற்று ஐம்பது சபைத்தலைவர்களும், இருநூறுபேருக்கு மேற்பட்ட தேசாதிபதிகளும், அவர்களுக்குத் தலைமையாக ஜர்மனிதேசத்து இராயனுடைய (Sigismund) சிறிய பூண்ட் என்பவரும், பாப்புவாகிய இருபத்துமூன்றாம் யோவான் என்பவரும் கூடிவந்தார்கள்; இந்தச் சங்கம் முடிய மூன்றரைவருஷம் சென்றது; இதனாலே திருச்சபைக்கு அதிகத் தீமை கேரிட்டதேயன்றி நன்மையுண்டாகவில்லை; முன்சொன்னதுபோல் இந்தச் சங்கத்தார் பாப்புவின் உத்தியோகத்திற்குப் பாத்தியப்தனென்று சொல்லிச் சச்சரிப்பட்டுக்கொண்டிருந்த மூன்றுபேரைத் தள்ளிவிட்டு, மார்ட்டின் என்பவனை அந்த உத்தியோகத்திற்கு நியமித்தார்கள்; மேலும் அவர்கள் ஏற்கனவே சாதாரண ஜனங்களுக்கு அப்பம் கொடுத்தால் போதும், இரசம் கொடுக்கவேண்டியதில்லையென்று தீர்ப்புச்செய்தார்கள்; இதுவெல்லாம் போதாதென்று சொல்லி மத்தேய பக்தர்களாயிருந்த யோவான் ஹுஸ் என்பவனையும், அவனுடைய பிரசங்கியேரோமியு பெதோம் என்பவனையும் உயிரோடே நெருப்பில் போட்டுத் தகனித்துவிடும்படி உத்தரவிட்டார்கள். 1434-ம் வருஷம் பேஸில் என்ற இடத்தில் இன்னொரு சங்கம் கூடி அதில் பிரேக்ஷையாய வத்திரைபோற் சமாதான

Councils at Pisa, A.D. 1409, and at Constance, A.D. 1414. Their doings.

படுத்த யோசித்து, பாப்பு பொதச்சங்கங்களுக்குக் கீழ்ப்பட்டவனென்று தீர்த்துவிட்டார்கள்.

யோவான் ஹுஸ் என்பவர் பொஹீமியாராட்டினுள்ள ஹுசினெஸ் என்னும் ஊரில் 1369-ம் வருஷத்தில் பிறந்தார்; அவர் பிறந்தவூரிலிருந்து அவருக்குஹுஸ் என்னும்பேர் உண்டானது. அவர் ஒரு ஏழிய குடும்பத்தைச் சேர்ந்தவராயிருந்தும், அவரது கல்வித்திறமையினாலும், வாக்குவல்லபத்தினாலும், உத்தம நடக்கையினாலும் மிகவும் சிறந்த வினைஞனாயிருந்தார்; இப்படி இவர் கல்விவிஷயத்தில் தேர்ந்தவராயிருந்தமையால் பிரேக்பட்டணத்திலுள்ள சர்வகலாசாலைக்கு 1403-ம் வருஷம் போதகராஞர்; இங்கிலாந்து தேசத்திலுள்ள யோவான் உவிக்ளிவ் என்பவருடைய நூல்களை வாசித்து, மனதில் தெளிவடைந்து, பாப்புமதத் தவறுகளையும் சத்தியமார்க்கத்தின் உத்தம உபதேசங்களின் தன்மையையும் கண்டு அறிந்துகொண்டதுமன்றி, பாப்புமார்க்கக் குருக்கள் சத்தியாசிகள் முதலானவர்களுடைய துர்மார்க்கங்களோடும், தப்பான கோட்பாடுகளோடும் கண்டித்து, பொஹீமியா நாட்டினுள்ள அனேக ஜனங்களும் விசேஷமாய் பிரேக்பட்டணத்து வித்தியாசாலையிலுள்ளவர்களும் உவிக்ளிவ் என்பவருடைய கொள்கைகளை அனுசரித்து நடப்பதற்கு வேண்டிய முயற்சிகள் செய்தார். அவர் தமது பிரசங்கங்களே எழுதி வாசித்தும் பின்பு அதைப் பிரசாரமும் செய்வார். 1401-ம் வருஷம் தமது முதலாம் பிரபந்தத்தை லத்தின்பாஷையில் எழுதினார். அவர் அதிகமாய் வாசித்துவருவது அருஸ்தின், பிராட்வார்டின், உவிக்ளிவ் என்பவர்கள் எழுதிய நூல்களே. தேவதிகாரம் என்னும் உபதேசத்திலோ உவிக்ளிவ் என்பவருக்கு எதிரிடையாயிருந்தார்.

இப்படி உவிக்ளிவ் என்பவருடைய பிரபந்தங்களை மேற்சொன்ன வித்தியாசாலையிலுள்ளவர்கள் அதிகமாய் வாசித்துவருகிறார்களென்று பிரேக்பட்டணத்துப் பிரேஷ்ட அத்தியக்ஷராகிய சூபிங்கோ என்பவர் கேள்விப்பட்டு ஹுஸ் என்பவனை விசாரிக்கும்படி ஆரம்பித்தார்; ஹுஸ் என்பவனைப்பற்றி அவர் இருபத்துமூன்றும் யோவான் என்னும் பாப்புவானவருக்கு இல்லாததும் பொல்லாததும் எழுதியனுப்பினதினாலே, பாப்புவானவர் ஹுஸ் என்பவர் ரோமாபுரிக்கு வந்து தமக்குமுன் உத்தரவு சொல்லிக்கொள்ளவேண்டுமென்று கட்

John Huss born, A.D. 1373.

Wickliff's opinions espoused by Huss.

டனேயனுப்பினர்; அவர் அதன்படி உடனதிலுலே பாப்புவானவர் அவனைச் சபைக்குப் புறம்பாக்கிப்போட்டார்; அப்படியிருந்தும் ஹஸ் என்பவர் ஊக்கத்தைக் கைவிடாமல் தம்முடைய ருத்தனைப் பிரசங்கங்களினுலும் பிரபந்தங்களினுலும் வெளிப்படுத்திவந்தார்; உவிக்லிவ் என்பவருடைய நூல்களும் அவருடைய கொள்கைகளும் அதிகமாய்ப் பிரசித்தமாகாமல் அடக்கிப்போடவேண்டுமென்று பிரசங்கப்பட்டனத்துக் கிரேக்ட அதிபதிகள் நினைத்து, ஜனங்களிடத் திலுள்ள புஸ்தகங்களையெல்லாம் தம்மிடத்தில் கொண்டுவரவேண்டு மென்று உத்தரவுசெய்தார்; அதனுலே வெகு கோத்தியாய் எழுதி விசித்திரமாய்ப் பொன்முலாம்பூசி பார்வைக்கு மிகவும் அழகா யிருந்த இருநூறு புஸ்தகங்கள் அக்கினிப்பிரவேசமாயின; இப்படி யெல்லாமிருந்தும் உவிக்லிவ் என்பவருடைய நூல்கள் மேன்மேலும் பிரபலமானதுமன்றி ஹஸ் என்பவருடைய கொள்கைகளை அனு சரித்துவந்த ஹஸியர் என்ற வகுப்பார் ராஜாமையப் பெருகிவந்தார் கள்.



ஹஸ் என்பவர் எரிக்கப்பார் முன்னிலை உத்தரவு சொல்வது.

இப்படி அவருடைய கொள்கைகள் அதிகமாய்ப் பிரபலமாகிக் கொண்டேவந்தினுலே சொன்னதண்டிப்பட்டனத்தில் கூடின சங்கத் தார் அவனைத் தங்களுக்கு முன்னின்று தமது விசுவாசங்களை அறி

வித்துக்கொள்ளும்படியாக அவருக்குச் சிட்டனே அனுப்பினர்கள்; ஜெரிம்மண்ட் என்னும் இராயனும் அவருக்கு யாதொரு விசாரத்திலும் விக்கினம் நேரிடாமட் டாதென்று வாக்குறுதிப்பத்திரம் கொடுத்தார்;

Constancy of Huss under dreadful sufferings.

அப்படியிருந்தும் அவருடைய சத்துருக்கள் அவனைப் பிடித்து ஏழு மாசம்வரையும் காவலில் வைத்து வெகுவாய் இம்சைசெய்தார்கள்; இராயனும் பாப்புவினுடைய யோசனைக்கு இணங்கி, தாம் செய்த வாக்குறுதிக்கு மாருக அவனைக் கொன்றுபோடலாமென்று உத்தரவு பண்ணினர்; அவனைக் குற்றம் விசாரித்தவர்கள் அவருக்கு விலங்கு போட்டு அவனைத் தன்பப்படுத்தினதுமன்றி, அவருடைய மனஉறுதி மாறும்படிக்கு வேண்டிய பிரயத்தனங்களையும் செய்தனர்; இப்படி யெல்லாமிருந்தும் அவர் சற்றென்னிலும் தைரியத்தை விடாமல் என் பிராணன்போனுலும் நான் பிடித்த சத்தியத்தை விடமாட்டேனென்று உறுதியாய்ச் சொன்னர்; அவருடைய சிநேகிதரில் அநேகர் அவனைத் தப்புவிக்கும்படியாக வெகுவாய்ப் பிரயாசப்பட்டும் சித்திக்கவில்லை; அவர்களுக்கு அவனைப்பற்றிப் பயமிருந்தபோதிலும் அவருக்குத் தம் மைப்பற்றிச் சிறிதேனும் பயமில்லை; அவர் சிறைச்சாலையிலிருந்த போது தம்முடைய சபையாருக்கும் சிநேகிதருக்கும் அவர் எழுதின சில கடிதங்களைப் பார்க்கும்போது அவருக்கிருந்த மனஸ்திரமும் ஆத்திவசுவாசமும் கன்ரும் விளங்குகிறது. "சர்வவல்லபமுள்ள தேவன் அநாதிகாலமாய்த் தெரிந்துகொண்ட தமது ஜனங்கள் நித்திய பேரின் பத்தைப் பெறும்பொருட்டு அவர்களை ஆற்றித் தேற்றுகிறார். மனிதர் கள் உங்களைப் பகைத்து உங்களைத் தங்கள் சபைக்குப் புறம்பாக்கி னுல், நீங்கள் பாக்கியசாலிகளா யிருப்பீர்களென்று நமது அருமை ரகூகர் திருவுளம்பற்றின வாக்கியம் என் மனதுக்கு இன்பத்தைக் கொடுக்கிறது; இதன்படி துன்பகாலத்தில் நடப்பது வருத்தமாயிருந் தபோதிலும், அப்படி நடப்பவர்களுக்கு அது எவ்வளவோ சந்தோ ஷத்தை உண்டுபண்ணும்; உபத்திரவகாலத்தில் பொறுமையாயிருப் பதே உத்தமம்; பொறுமையாய் இருக்கவேண்டுமென்று சொல்வது எளிது, சொல்லியவண்ணம் செய்வது அரிதுதான்; நமது ரகூகர்கூட மரணம் சிட்டியிருந்த காலத்தில் மனக்கலக்கமுள்ளவரா யிருந்தா ரென்று பார்க்கிறோம்; அப்படியிருந்தும் அவர் தம்முடைய சிஷர் களைப் பார்த்து: நீங்கள் கலங்காமலிருங்களென்று சொன்னர்; அவர் உங்களுக்கும் எனக்கும் அவரது பக்தர்கள் யாவருக்கும் ஜீவகிரீடத்

இன்னொரு குருவைக் குற்றமில்லாமல் இருக்கும்போது குற்றவாளி யென்று தீர்ப்பது மகா அதர்மம்; அப்படியிருக்க, அநேகம் குருமார் கூடியிருக்கிற இந்தச் சங்கம் என்னைக் குற்றவாளியென்று தீர்ப்பது பெரிய பாதகமே. நான் குற்றவாளியென்றால் வலிய இந்தச் சங்கத்துக்கு வருவேனா? என்னை அறிந்தவர்கள் நான் துன்மார்க்கத்துக்கு ஏற்பட்டவனல்லவென்றும், சன்மார்க்கமாய் நடக்கப்பட்டவன் என்றும் சாட்சிகராமல் போகமாட்டார்கள். மதவிஷயத்தில் பலபேர் பலவித அபிப்பிராயங்களைக்கொள்வது பரார்த்தமே; அருவ்தின் என்பவரும், அவர் காலத்திலிருந்த ஜெரோம் என்பவரும் சமயவிஷயத்தில் ஏக அபிப்பிராயமுடையவர்களல்ல; அப்படியிருந்தும் அவர்கள் பாதகன்டர் என்று ஒருவரும் அவர்மேல் குற்றஞ்சுமத்தத் துணியார்கள். நான் சத்தியத்துக்கு ஒவ்வாத கொள்கைகளை அனுசரித்திருப்பேனில் அவைகளைத் தள்ளிவிடுவேன்; அப்படி இல்லாமலிருக்கச் சத்துருக்களுக்குப் பயந்து அவைகளை விட்டுவிடுவேனென்றால் அதனாலே நான் குற்றவாளியாவேன். நான் யோவான் ஹுஸ் என்பவருக்கு வாக்குக்கொடுத்தபிரகாரம் அவர் ஆபத்துக்கு உதவும் படிக்குக்கொண்டதான்பட்டனைத்துக்குமேலே; ஆயினும் ஐயோ! நான் இவ்விடம் வந்தபிற்பாடு மரணத்துக்குப் பயந்து, என் மனம் பேதலித்து, உவிக்லிவ் என்பவரும் ஹுஸ் என்பவரும் போதித்த உபதேசங்கள் சரியல்லவென்று சொல்லத் தலைப்பட்டேன்; அந்தக் குற்றத்துக்காகச் சஞ்சலப்படுகிறேன்; அவர்கள் போதித்தே சத்தியமென்று அறிக்கைசெய்கிறேன்" என்றார்.

His execution, A.D. 1416.

அவர் இப்படி அந்தப் பெரிய சங்கத்துக்கு முன்பாக வெகு தைரியமாயும் சாதுரியமாயும் பண்ணின பிரசங்கத்தை அவர்களெல்லாரும் கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். மறுபடியும் அவரைப் பார்த்து: உன்னுடைய கொள்கைகளை மறுத்துத் தள்ளிவிடு என்று கேட்டார்கள்; அதற்கு அவர் சற்றேறுக்க சம்மதியாதிருந்தபடியால் அவருக்கு மரணஶிக்ஷை விதித்தார்கள்; அவர் கொலைக்களத்துக்குப் போனபோது தமது பேச்சுவன்மையைக் காட்டி தூரஎறிந்துவிட்டு, அங்கே நிறுத்தியிருந்த கம்புக்குச் சமீபமாய்ப்போய் தன் சருக்கை ஜெபஞ்செய்தார்; அது முடியவே, அவர்கள் அவரைப் பிடித்துக் கயிறுகளாலும், இரும்புச் சங்கிலிகளாலும் இறுகக்கட்டி, அவருடைய மார்பளவுக்கு விறகுக்கட்டைகளைச் சுற்றிலும் அடுக்கி, அவர் பின்

பக்கத்தில் நெருப்பு வைக்கப்போனார்கள்; அப்போது அவர் பின்னாலே என் நெருப்பு வைக்கவேண்டும்; எனக்கு முன்னாலே வந்து வைக்கலாமே; நான் மரணத்துக்குப் பயப்படுகிறவனென்றால் அதற்குத் தப்பிக்கொள்வேனே என்றார். தீப்பற்றி எல்லும் சுவாலித்து எரியும்போது அவர் ஒரு ஞானப்பாட்டைப் பாடி வெகு சமாதானமாய்த் தம்முடைய ஜீவனைவிட்டு மோட்சபதவி சேர்ந்தார். இது 1416-ம் வருஷம் மே மாசம் இருபதாந்தேதி நடந்தது.

Testimony of Poggius to the character of Jerome.

இவனைப்பற்றி பாகியு என்னும் ஒருவர் வெகு புகழ்ச்சியாய் எழுதியிருக்கிறார்; அவர் இருபத்தைமூன்றும் யோவான் என்னும் பாப்புவினிடத்தில் உத்தியோகஞ்செய்தவராயும் வெகு கீர்த்திபெற்றவராயும் இருந்தார்; அவர் ஜெரோம் என்பவருடைய விசாரணைக்காலத்தில் கட்டி இருந்தவர்; அவர் ஜெரோமைப்பற்றி: "சாதுரிய வித்தையில் அவரை ஒருவரும் மிஞ்சக்கூடாது; அவருடைய சொன்னயமும், நியாய ஒழுங்கும், மனஸ்திரமும், அலங்காரநடையும் மிகவும் ஆச்சரியமுள்ளது; இப்படிப்பட்ட மகாத்துமா இவ்வளவு பெரிய குற்றவாளியென்று தீர்க்கப்பட்டது எப்படியோ எனக்கு விளக்கவில்லை; அவர்மேல் சாற்றப்பட்ட குற்றம் நியாயமானதோ அநியாயமானதோ சர்வசாக்ஷியாயிருக்கப்பட்ட கடவுளுக்கே தெரியும்; அதைக்குறித்து நான் இப்போது ஒன்றும் சொல்லமாட்டேன்; ஆயினும் அவரைக் குற்றம் விசாரித்த சங்கத்தார் ஒழுங்காய் நடக்கவில்லை; அப்படியிருந்தும் அவர்கள் சொன்ன குற்றங்களையெல்லாம் அவர் நியாயசம்பிரதாயத்தினாலும் வாக்கு வல்லபத்தினாலும் சோதரித்துப் போட்டார்; சாட்சிகளுடைய வாக்குமூலம் ஒன்றுக்கும் உதவாதென்று காட்டினதுமன்றி, அவர்கள் பெருமையினாலும் பகையினாலும் இந்த அநியாயத்துக்கு ஏற்பட்டார்களென்று சங்கத்தார் உணரும்படியாகவும் பேசினார்; தேவபக்தனுயிருந்த யோவான் ஹுஸ் என்பவருக்கு சேரிட்ட வன்கொலையைப்பற்றித் தக்கப்பட்டதுமன்றி, அவரைப்போல் தாமும் மரணமடைய அஞ்சாதவர்போல் துணிந்தவராயிருந்தபோதிலும், அவர்கள் மனம் நெருப்பிலிட்ட மெழுகுபோல் உருகாமல் போகமாட்டாது; அவருக்கு இருந்த தூபகேஷ்டியை என்னசொல்லப்போகிறேன்; அவர் ஒரு வருஷமாய்க் காவலில் அடைபட்டுக் கஷ்டமடைந்திருந்ததைப்பற்றி பெருந்தன்

மையாய் முறையிட்டார்; அப்படிக் காவலிலிருக்கும்போது அவருக்கு வாசிக்கத்தக்க புஸ்தகங்கள் ஒன்றுமில்லாமல் மகா மனச்சஞ்சலமுடையவராயிருந்தும், அவர் பிரசங்கம் பண்ணினபோது எல்லாவற்றையும் நேற்றையதினம் நன்றாய்ப் படித்தவர்போல் வெகு தைரியமோடு பேசினார்; அவருடைய ஒசை இன்பமாயும், அவருடைய பாவனை அவர் இஷ்டப்படி சோபற்சையாவது துயரத்தையாவது உண்டுபண்ணத்தக்கதாயும் இருந்தது; மரணத்துக்குச் சற்றேனும் அஞ்சாத மகா வீரனைப்போல் அந்தப் பெரிய சபையில் நின்றார்; முற்காலத்திலிருந்த சாஸ்திரிகள் வித்துவான்கள் ஒருவரும் இவரை மிஞ்சமாட்டார்கள்; இவரை எல்லாச் சத்தியரும் பெரியவர் என்று புகழவேண்டியது நியாயமே; இதெல்லாம் என் கண்கண்ட காட்சி; இன்னும் இதை விவரித்து எழுதவேண்டுமென்றால் விஸ்தாரமாய் எழுதலாம்" என்று சொல்லியிருக்கிறார்.

Rise of the Hussites under Ziska. Their sanguinary proceedings.

இப்படிக் கொன்ஸ்தான்ஸ்பட்டணத்தில் கூடின சங்கத்தினாலே சபைக்கு அதிகத் தீமை விளைந்ததேயன்றி நல்லமை ஒன்றுமில்லை; மேற்சொன்ன நிஷ்டூரமான மரணசங்கதிகளைப் பொஹிமியா நாட்டார் கேட்டபோது, தேசமெங்கும் அமளிதுமளியாயிற்று; இரத்தசாக்ஷிகளாய் மரித்தவர்களினிமித்தம் புரட்சிசெய்ய ஆரம்பித்தார்கள்; அவர்கள் தங்களுக்குத் தலைவராக யோவான் ஸிஸ்கா என்னப்பட்ட ஒரு பிரபுவை ஏற்படுத்தினார்கள்; அவர் அரண்மனையிலிருந்து வளர்ந்தவராயும், காருசாரியங்களையும் கண்ணும் அறிந்தவராயும், தேசாபிமானி என்றும் தேவபக்தன் என்றும் பெயர்பெற்றவராயும் இருந்தார்; ஜனங்கள் பலவிடங்களிலுமிருந்து அவரிடத்தில் வந்து சேர்ந்தினாலே அவர்கள் தொகை ஏறத்தாழ முப்பதினாயிரமாயிருந்தது; ஸிஸ்கா என்பவர் அவர்களையெல்லாம் சேர்த்துக்கொண்டு பிரேக்பட்டணத்துக்குக் காதவழி தூரத்திலுள்ள ஒரு மலைக்குப் போய்ப் பாளையமிறங்கி அதற்குத் தாபோர் மலையென்று பெயரிட்டார்; அதனாலே அவருடைய சகாக்களாருக்கும் தாபோரியர் என்று பெயருண்டாயிற்று; ஸிஸ்கா என்பவர் தமது தளத்துடன் புறப்பட்டுக் கோவில்களிலுள்ள விக்கிரகங்களையெல்லாம் வெளுபின்னமாய் அடித்துத் தகர்த்து, சக்கியாஸ்திரி மடங்களிலிருந்து தாசந்தி, அவர்களைச் சிறைகளாக்கி, அநேகம் சண்டைகளில் ஜெயிஸ்மண்ட் என்னும் இராயனுடைய சேனைகளை யடித்து, குத்ரு என்னும் கோட்டை

யைப் பிடித்து, பொஹிமியா தேசத்துக்கு ஒரு இராஜாவைப்போலிருந்து ஆண்டுவந்தார்; இவர் 1424-ம் வருஷம் இறந்துபோனார்; அவர் சாகும்தருவாயில் சொல்லியிருந்தபடி அவருடைய சிஷ்யர்கள் அவர் இறந்தவுடனே அவருடைய தோலை உரித்து, அதற்குச் செய்யவேண்டிய பக்குவங்கள் செய்து, அதனாலே ஒரு பேரிகையை உண்டாக்கி, அதை வெற்றிவிருதாக வெகுகாலம் வைத்துக் கொண்டிருந்தார்கள்.

Origin of the United Brethren and their sufferings.

ஸிஸ்கா என்பவர் இறந்துபோனபிற்பாடு அவருடைய சிஷ்யர்களுக்குள் இரண்டு கக்ஷிகளுண்டாயின; ஒரு கக்ஷிக்கு (Calixtines) கலிக்ஸ்தீனர் என்றும், இன்னொருகக்ஷிக்கு (Taborites) தாபோரியர் என்றும் பெயர். கலிக்ஸ்தீனர் நற்கருணையில் ஜனங்களுக்கு அப்பமும் இரசமும் கொடுக்கும்படி தீர்மானித்தால் போதும், மற்ற விஷயங்களில் ரோமாலே சபைக்கு ஏற்றதாய் நடக்கலாம் என்று சொன்னார்கள்; தாபோரியர் அப்படியல்ல, எல்லாவிஷயத்திலும் சபையில் சீர்திருத்தம் உண்டாகவேண்டுமென்று சாதித்தார்கள்; 1456-ம் வருஷத்தில் மேற்சொன்ன கக்ஷிகாரரில் [illegible]ர் விந்நிஸ் நகரியில் ஒரு சங்கங்கூடி, சபையானுகை பூர்வ நிலைவர்களுக்குள்ளிருந்த பிரகாரம் இருக்கவேண்டுமென்று சில சட்டங்களை ஏற்படுத்தினார்கள்; இவர்களுக்குத்தான் பிற்காலத்தில் ஐக்கிய சகோதரர் என்ற பெயர் வந்தது. பொஹிமியா நாட்டினுள்ள பக்திமான்களும் மலைப்புறங்களில் வசித்துவந்த வால்டென்ஷியரில் அநேகரும் அவர்களைச் சேர்ந்துகொண்டதினாலே அவர்கள் தொகை லக்ஷ அதிகப்பட்டது; அவர்கள் தேவாலயங்கள் பொஹிமியா, மொரேவியா நாடுகளெங்கும் அநேகமாய்ப் பெருகின; தேவபக்தர்களாயிருந்த இவர்களுக்குப் பாப்புமார்க்கத்தாராலே பலத்த துன்பங்கள் கேரிட்டன; அவர்கள் மாரிகாலத்தில் ஐக்கிய சகோதரர் இருந்த ரொடங்களுக்குப் போய் அவர்கள் வலைசவாகும்படி செய்ததுமன்றி, அவர்களில் வியாதியஸ்தர்களாயிருந்தவர்களையும் தூக்கிக்கொண்டுபோய் சாட்டிலே போட்டுவிட்டார்கள்; இப்படிப்பட்ட துன்பத்துக்கெல்லாம் தப்பிப் பிழைத்தவர்கள் சாகிசனுக்கும் குகைகளுக்கும் போய், மேலிறு கூட்டங்களாய்ச் சேர்ந்து, குருக்களை வைத்துக்கொண்டு தேவோபதேசங்களைக் கேட்டுவந்தார்கள்; பிற்காலத்தில் போலீஷ்தேசத்து இராஜாவாகிய (Uladislaus) உலாடிஸ்லாஸ் என்பவர் அவர்களின்மேல் அபி

மானம் வைத்ததினாலே, அவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிவந்து அவரவர் தங்கள் தொழிலே நடப்பித்துக்கொண்டிருந்தார்கள்; 1500-ம் வருஷத்தில் பொஹிமியா, மொரேவியா என்னும் சீமைகளில் ஐக்கிய சகோதரர் சேர்ந்த இருநூறு சபைகளிருந்தன; ஹுத்தர் என்பவராலே சபையில் சேர்திருத்தம் ஆரம்பித்தகாலத்தில் அவர்களுடைய சபைகள் மெத்த சீர்கேடான ஸ்திதியிலிருந்தன; பிற்பாடி அவர்கள் ஹுத்தரு டைய கொள்கையை அனுசரித்துக்கொண்டார்கள்.

Proceedings of Arundel against Lord Cobham in England.

இப்படி யோவான் ஹுஸ் என்பவருடைய கொள்கைக்காரருக்கு ரோமான் கத்தோலிக்கராலே துன்பமுண்டாயிருந்ததுபோல், இங்கிலாந்தேசத்தில் உலிக்லிவ் என்பவருடைய கொள்கையைச் சார்ந்திருந்தவர்களுக்கும் துன்பம் சேரிட்டது; அவர்களில் அநேகர் சத்தியத்துக்காகத் தங்கள் ஜீவனை விட்டார்கள்; அப்படியிருந்தும் அவர்கள் கதி நாளுக்குநாள் பலப்பட்டுவந்ததேயன்றி சற்றேனும் குறையவில்லை; பிரபுக்களில் அநேகர் அந்தக் கொள்கையை அனுசரித்தார்கள்; அவர்களுள் ஒருவருக்குக் காபம் என்று பெயர்; இவர் தனத்திலும் தனத்திலும் கல்வியிலும் மிகவும் தேர்ந்தவர்; இராஜாவாலும் ஜனங்களாலும் மெத்த கௌரவம் பெற்றவர்; இவர் அநேக பணங்களைச் செலவுசெய்து உலிக்லிவ் என்பவருடைய நூல்களை அச்சடித்து ஜனங்களுக்குள் பிரசித்தஞ்செய்ததுமன்றி, அநேகம் போத கன்மாரை ஏற்படுத்தி, சத்தியமார்க்கம் ஜனங்களுக்குள் பிரபலமாரும் படி வேண்டிய முயற்சிகள் செய்துவந்தார்; சத்துருக்களுடைய கண் எப்போதும் இவர்பேரிலே இருந்தது; இவருக்கு தானது ஒரு அபாயஞ்செய்தால் உலிக்லிவ் என்பவருடைய கொள்கை ஒழிந்துபோகும் என்று நினைத்தார்கள்; அக்காலத்தில் அரண்டல் என்பவர் பிரதான அத்தியக்ஷராயிருந்தார்; இவர் காபம் என்னும் பிரபுவைக் கொன்றுபோடவேண்டுமென்று நிர்மானஞ்செய்து அதற்கு வேண்டிய உபாயம் தேடினார். ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் படித்துவந்த மாணாக்கருக்குள் உலிக்லிவ் என்பவருடைய கொள்கை பிரசித்தமாவதற்குக் காபம் என்னும் பிரபு முக்கியகாரணமென்று குற்றம் எற்படுத்தினார்; ஆயினும் ஹென்றி என்னும் இராஜன் அவர் பட்சத்திலிருக்கையைப் பார்த்து அரண்டல் என்பவர் அந்தச் சிநேகத்தைக் கெடுப்பதற்கேற்ற யுக்திபரிமான எண்ணங்கொண்டு அவர்பேரில் இல்லாத குற்றங்களையெல்லாம் இராஜனிடத்தில் சொன்னார்; அரசன் அதைக்கேட்டு அவரை வரவழைத்து வெகு நயமாய்ப் பேசினார்; அதற்கு அவர் தீர்மானமாய்ப் பாப்புவானவர் அந்திக்கிறிஸ்து என்றும் தேவதூஷி என்றும் சொன்னபடியினாலே, அரசன் விசனமடைந்து அவரைச் சத்துருக்கள் தங்கள் இஷ்டப்படி நடத்திக்கொள்ளலாமென்று விட்டுவிட்டார்; அரண்டல் என்பவர் இதுதான் சமயமென்றுசொல்லி அவரைச் சபைக்குப் புறம்பாக்கி அரசனுடைய கட்டளைப்படி அவரைப் பிடித்துக் காவலில் வைத்தார்.

His trial before Arundel and a number of Bishops.

அவரை அநேகம் கண்காணிகள் கூடி குற்றம் விசாரிக்கும்காலில், அரண்டல் என்னும் பிரதான அத்தியக்ஷர் குருவானவர் அவரிடத்தில் வெகு சிநேகம்போல் காட்டி, நீர் உம்முடைய குற்றத்தை அறிக்கைசெய்தால் மன்னிப்புக் கிடைக்குமென்று சாந்தமாய்ச் சொன்னார். அதற்கு அவர்: நான் உமக்கு விரோதமாய் ஒரு குற்றமும் செய்யாதலினபடியினாலே உம்முடைய மன்னிப்பு எனக்கு வேண்டுகிறில்லையென்று சொல்லி, மூழ்கால்படியிட்டு தேவனைப்பார்த்துப் பிரார்த்தித்தார். ஓ மகாதேவா! மண்டலாதிபா! நான் பெரும் பாவி; என் பாவியத்தில் எனது பெருமையினாலும் பொருளாசையினாலும் போகாசையினாலும் எத்தனையோதரம் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்திருக்கிறேன்; கோபத்தினாலும் மற்றும் கொடிய குணதோஷங்களாலும் என் பிறருக்கு விரோதமாய் எத்தனையோ விசை குற்றஞ்செய்திருக்கிறேன்; அருள்காதா! எனக்கு உமது இரங்கவேண்டும்; என் பாவத்தை நீர் பொறுத்தருளவேண்டும் என்று உருக்கத்தோடே ஜெபஞ்செய்தார்; அப்பால் எழுந்துநின்று கண்ணீர் தாரைதாரையாய் ஓட, அவர் சுற்றிநின்ற ஜனங்களைப் பார்த்து: இவ்விடமே! இவர்கள்தான் உங்களுக்கு எண்மானிர் காட்டுகிறவர்கள்; இவர்கள் என்னையும் மற்ற அநேக மனுஷரையும் வெகு நிஷ்டூரமாய் நடத்துகிறார்கள்; இயேகாதர் பரிசேயருக்கு விரோதமாய்ச் சொன்ன கொடிய சாபங்களெல்லாம் இவர்களுக்கு வராமலிருக்க மாட்டாது என்றார். அவர் சின்ன நிலையும் பேனை வார்த்தைகளும் சங்கத்தாருக்குக் கலக்கத்தை உண்டாக்கிற்று; சற்றுநேரத்துக்குப் பின்பு அரண்டல் என்பவர் காபம் என்னும் பெருமானைப் பார்த்து: கற்கருணையில் அப்பமும் இரசமும் பிரதிஷ்டையானபின்பு அது முன்போல் அப்பமும் இரசமுமாயிருக்குமென்று நீர் நினைக்கிறீரா

என்று கேட்க; அவர் நற்கருணையில் இயேசுவின் சரீரமும் அப்பமுமிருக்கிறது; அப்பத்தை நமது கண்ணால் பார்க்கிறோம்; இயேசுவின் சரீரம் மறைவாயிருப்பதினால் அதை விசுவாசக்கண்ணினால்மாத்திரம் பார்க்கலாம் என்றார்; இதைக் கேட்டவுடனே எல்லாரும் எகிப்தாய் இது மதப்புரட்டு என்றார்கள்; அவர்களில் ஒருவர் அதை அப்பமென்று சொல்வது கொடிய பாவமென்று வெகு கண்டிப்பாய்ப் பேசினார். அதற்கு அவர்: பவுல் அப்போஸ்தலன் உம்மைப்போல் கல்விமானும் பக்திமானும் இருந்தார்; அவரும் அதை அப்பமென்றே சொல்லுகிறார்; இந்தக் காரியத்தை என் வளர்க்கவேண்டும்? சத்தியமார்க்கம் சொல்வதையெல்லாம் நான் அத்தியந்த பக்தியுடன் ஒப்புக்கொள்ளுகிறேன்; பெரியோர்களாகிய உங்களுடைய பிரமாணங்களையோ அப்படி ஒப்புக்கொள்ளமாட்டேன்; உங்களுடைய கிரியைகளினாலே நீங்கள் இயேசுவின் சபையைச் சார்ந்தவர்களல்லவென்று காட்டுகிறீர்கள் என்றார்; அப்போது அவர்களில் ஒருவன் உலிக்லிவ் என்பவருடைய சபையைச்சேர்ந்த இவர்கள் எவ்வளவு பிடிவாதமும் வைராக்கியமும் சாதிக்கிறார்கள் என்ன, காபம் என்பவர்: நீங்கள் இவ்வளவு இழிவாய்ப் பேசுகிற உலிக்லிவ் என்பவரை நான் அறியாததற்குமுன், என் பாவத்தைச் சற்றேனும் வெறுத்துத் தள்ளவில்லை என்று தேவனுக்கு முன்பாகச் சத்தியமாகச் சொல்லுகிறேன்; அவருடைய உபதேசங்களை நான் கற்றுக்கொண்டபின்புதான் என் பாவத்தையெல்லாம் தேவனது அருளால் கட்டோடே விட்டுவிட்டேன்; உங்களுடைய உபதேசங்களினால் அப்படிப்பட்ட கன்மை ஒருக்காலும் வராது என்றார். அதற்கு அவர்களில் ஒருவர்: பிசாசு பிரசங்கித்ததைக் கேட்டதற்குமுன் பாவத்தை விடவில்லை என்பது ஆச்சரியம்; இக்காலத்தில் எத்தனையோ கல்விமான்களிருக்கிறார்கள்; அவர்கள் உபதேசத்துக்கு வருமா என்று சொல்ல, காபம் என்பவர்: உங்கள் பிதாக்களாகிய பரிசேயர் இப்படித்தான் இயேசுநாதர் செய்த அற்புதங்களைப் பிசாசினால் செய்ததாகச் சொன்னார்கள்; நீங்கள் இப்போது எனக்கு விரோதமாய் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யலாமென்று வேதம் சொல்லுகிறதா? மனுஷனைக் குற்றம் விசாரித்து பிராணசங்கடம் செய்யலாமென்று வேதத்தில் எங்கே சொல்லியிருக்கிறது? ஒருவேளை நீங்கள் அப்போஸ்தலனைக் குற்றம் விசாரித்த அன்னு காய்பா என்பவர்களுடைய திருஷ்டாந்தத்தைச் சொல்ல வருவீர்களாக்கும் என்

னார். அதற்கு ஒருவர்: அவர்களைமாத்திரமல்ல, இயேசுநாதரையும் திருஷ்டாந்தமாகச் சொல்லுவோம்; அவர் யூதாசைக் குற்றவாளி என்று தீர்க்கவில்லையா என்ன கேட்க, அவர்: அப்படி நான் சொல்லவில்லை; யூதாஸ் தன்னைத்தானே குற்றவாளி என்று தீர்த்துக்கொண்டு வெளியே போய் தான்னுகொண்டு செத்தான்; இயேசுநாதர் அவனுடைய பொருளாசையைப் பார்த்து அவனுக்கு வேதனை வருமென்று சாபம் கூறினார்; அப்படியே அவன் வழிகளில் நடக்கிற உங்களுக்கு விரோதமாகவும் அவர் சாபம் கூறுகிறார் என்றார். அப்பால் அவர்களில் ஒருவர் இயேசுநாதர் மரணமடைந்த சிலுவையைக் கும்பிடுவாயா என்று கேட்டபோது, அது எங்கேயிருக்கிறது என்றார்; அது இப்போது இங்கே இருந்தால் அதைக் கும்பிடுவாயா என்று கேட்க, நீ அந்தமட்டுக்கும் கெட்டிக்காரன்தான்; அது இருக்கிற இடம் உனக்கே தெரியாமலிருக்க இப்படிப்பட்ட கேள்வியைக் கேட்பது ஆச்சரியந்தான்; அதை எவ்விதமாய் நாம் கும்பிடவேண்டுமென்று கேட்க, அவர்களில் ஒருவன்: பவுல் அப்போஸ்தலன் சொல்லியபடி அதை வணங்கவேண்டும்; "நாமெல்லாம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல், வேறொன்றைக்குறித்தும் மேன்மைபாராட்டாதிருப்போமாக" என்று சொன்னபடி செய்யவேண்டும் என்றான்; அதற்கு அவர்: சரிதான், நீ சொன்ன மரச்சிலுவையல்ல, அப்போஸ்தலன் சொல்லுகிற மெய்ச்சிலுவை என்றார். அதற்கு அவன்: இயேசுநாதர் மரச்சிலுவையில் உயிரை விடவில்லையா என்று கேட்க, ஆம், அவர் விட்டார்; ஆயினும் அதனாலே நமக்கு இரட்சிப்பு வராமல் அதிலே ஜீவனை விட்டவராலேயே இரட்சிப்பு வருகிறது. பவுல் அப்போஸ்தலன் அந்த மரச்சிலுவையைக் குறித்துச் சந்தோஷியாமல் அதில் பிராணத்தியாகஞ்செய்த இயேசுகர்த்தருடைய பாடுகளையும் மரணத்தையும் நினைத்துச் சந்தோஷப்பட்டார் என்றார்.

His condemnation.

அன்றுமுழுதும் இப்படி விசாரணை நடந்தபொழுது அஸ்தமிக்கிற சமயத்தில், அரண்டல் என்பவர் காபம் என்னும் பிரபுவைப் பார்த்து: நீர் இப்படிக் காலத்தைக் கடத்துகிறது கல்லாதல்ல; சபைச்சட்டத்துக்கு அடங்கி நடப்பீரோ? மாட்டீரோ? சொல்லும் என்று கேட்க, காபம் என்பவர்: என் தீர்மானம் ஸ்திரமாயிருக்கிறது; நீங்கள் உங்கள் இஷ்டப்படி என்னசெய்யவேண்டுமோ அதைச் செய்துகொள்ளலாமென்

ரூர். உடனே அரண்டல் என்பவர்: இவன் வேற்புரட்டன், சண்டாளன், இவனைத் தூசித்தனத்தார் தங்கள் இஷ்டப்படி செட்செக்கலாம் என்று சொன்னார்; அதைக் காபம் என்பவர் கேட்டு மலர்ந்த முகத்தோடும், குளிர்ந்த வார்த்தையோடும், கிங்கள் என் சரீரத்தைக் கொன்றாலும் என் ஆத்துமத்துக்கு ஒன்றுஞ் செய்யக் கூடாது; சாத்தான் போலுடைய சரீரத்தை வதைத்தாலும் அவனுடைய ஆத்துமத்தைத் தொட அவனுக்கு உத்தாவில்லை; என் ஆத்துமத்தைப் பலட்டத்தவர் அதை இரட்சிப்பார்; என் பிராணன் போனாலும் தேவிருபையினாலே நான் பிடித்த சத்தியத்தை விட மாட்டேன் என்று சொன்னபின்பு, ஜங்கூஸ்பர்த்து: சேரே! நீங்கள் இவர்களுக்குநித்த எப்போதும் நாத்திரதையாயிருங்கள்; இல்லாவிட்டால் உங்களை அவர்கள் வஞ்சித்துத் தங்களோடே உங்களையும் நரகத்துக்கு இழுத்துக்கொண்டு போவார்கள் என்று உருக்கத்தோடே சொல்லி, பின்பு முழங்கால் படியிட்டு, தமது கண்களையும் கரங்களையும் வானத்துக்கு நோக்க உயர்த்தி, கீத்திய ராய் நின்மலராய் வினங்காநின்ற மகாதேவனே! உமக்குச் சித்தமானால் என்னைத் துன்பப்படுத்துகிற இவர்களுடைய குற்றத்தை மன்னித்தருளும் என்று ஜெபம்பண்ணினார்.

His death, A.D. 1417.

இப்படி அவர் அச்சங்கத்தாரால் குற்றவாளி என்று தீர்ப்புப் பெற்றபோதிலும், பாது காரணத்தினாலோ அவர்கள் கையினின்று தப்பி ஏறுவருஷகாலமாய் உலேல்ஸ்காட்டில் மறைந்துகொண்டிருந்தார்; அப்பால் அவர்கள் முயலைப் பிடித்து 1417-ம் வருஷத்தில் உயிரோடே தகனித்தார்கள்.

Spread of Christianity, and Romanism.

இந்த நூற்றாண்டில் ஐரோப்பா கண்டத்தில் மொரேவியர் என்ற ஒரு கூட்டத்தார் எழும்பினார்கள். 1450-ம் வருஷம் இவர்கள் ஆரம்பமாகி, 1457-ம் வருஷம் திருச்சபையைவிட்டு விலகிக்கொண்டார்கள். சத்தியவேதமே தங்களுக்குச் சட்டமாகவும், அன்பே தங்கள் பிரமாணமாகவும் வைத்துக்கொண்டார்கள். நற்கருணை நிஜத்தின் பாடுகளையும் மரணத்தையும் நினைப்பூட்டும் வேறும் சடங்கென்று சாதிப்பார்கள். ஆதிகாலத்தார் இக்கூட்டத்தாரை மதப்பரட்டர் என்றும், இவர்களில் சிலர் தாத்தோலிக்கர் பிரிவினைக்காலத்தில் அவர்களைப் பற்றிச் சற்று இதமாய்ப் பேசியிருக்கிறார். ஸ்பானியாதேசத்தை ஜாஜ

வாலிய பெர்டினண்ட் என்பவர் கூர்ல் என்னப்பட்ட துருக்கனை ஜெயித்து, அவர்களையும் பூதர்களில் அநேகரையும் ரோமான் மார்க்கத்தில் சேர்க்கும்படி வேண்டிய முயற்சிகள் செய்தார்; ஆயினும் காரியம் வாய்க்கவில்லை. போர்த்துகீசுகாரர் தாங்கள் அதுகளித்துவந்த கடல் சேஷத்தை ஆப்பிரிக்காவிலுள்ள காங்கோ இராஜ்யத்திலும் இந்து தேசத்திலும் பிரபலப்படுத்தினார்கள். ஜரும் அலெக்சந்தர் என்னும் பாப்புவானவர் தொமினிக் வகுப்பைச்சார்ந்த சன்னியாசிகளில் அநேகரை மேல் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் அனுப்பி, ரோமான்மார்க்கம் அவ்விடங்களில் பிரசித்தமாகும்படி முயற்சி செய்தார்.

மேற்சொன்ன விசேஷங்களையெல்லாம் கவனிக்குங்கால், சபை சீர்திருத்தமடையவேண்டியது அவசியமென்று யாவருக்கும் தோன்றும்; அநேக வருஷகாலமாய் உலகம் அறியாமை மூடபக்தி என்னும் அந்தகாரத்தில் அமிழ்ந்தியிருந்தது; போபாபுரிப் பாப்புவால் மானிடருக்குக் கேடும் மார்க்கத்துக்குப் பழுதும் உண்டாயிற்று; இப்படி உலகமெல்லாம் பாலைவனம்போலப் பாழாய்க் கிடந்தபோது, காருண்ய கடவுள் தமது அருள்மாரியைப் பொழிந்து, திருச்சபையானது ஓல்போல் தழைத்து அழகுபோல் வேருன்றும்படி திருவுளமிரங்கினார்.

Concluding remarks.

QUESTIONS ON FIFTEENTH CENTURY.

பதினேந்தாம் நூற்றாண்டின் சரித்திரத்தின்பேரில் கேள்விகள்.

1. திருச்சபை தழைத்தோங்க கேரிட்ட நிலம் தூபாணக்கலைவி?
2. பாப்புவின் நிலைமை இந்த நூற்றாண்டில் எப்படியிருந்தது?
3. கொன்ஸ்தான்ஸ், பேஸில் என்ற இடங்களில் கூடிய சங்கங்களின் நிர்மாணமென்ன?
4. ஹுஸ் என்பவர் செய்த முயற்சி யென்ன? அவரின் சரித்திரத்தைச் சுருக்கமாய் எழுதுக.
5. ஜெரோம் என்பவரைப்பற்றி உமக்கு என்ன தெரியும்?

6. இந்தக் காலத்தில் இருந்த இரத்தக்சாட்சிகள் யார்?
7. மொரேவியாைப்பற்றித் தெளிவாய் எழுதுக.
8. காபம் என்பவரின்பேரில் சாட்டிய குற்றங்கள் எவை? அவர் தந்த மறு மொழியென்ன?

பதினேழும் நூற்றாண்டு.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் திருச்சபையின் நிலைமை, பாப்புகள் அதிகாரம் குறைந்தது, மார்க்கச் சீர்திருத்தத்துக்கு அனுகூலம், குருக்களுடைய விபரீத நடக்கை, கல்வி விர்த்தி, பலமண்டலிப்புச் சீர்திருத்தம், மார்க்கச் சீர்திருத்தத்துக்கு நேர் எதிரானவை, தெட்சல் என்பவன் பாவமன்னிப்புச் சீட்டுகளைக்குறித்துப் பிரசங்கித்தல், மார்ட்டின் லூத்தர் பிரசங்கித்தல், கல்வி பயிலுதல், கிறிஸ்துமார்க்கத்தை அறிதல், பாதிரியாராயமர்தல், உயர்ந்தப்பர்ப் பட்டனத்து கல்லசலாலையில் விரிவுரை கற்பித்தல், ரோமாபுரிக்குப் போகுதல், பிரடரிக் என்பவர் அவரைச் சேகரித்தல், லூத்தர் கொண்ணூற்றைந்து நியாயங்களைப் பிரசித்தஞ்செய்தல், தெட்சலுக்கு எதிர்த்தல், லூத்தர் ஆர்ச்பர்ச் பட்டனத்தில் விசாரிக்கப் என்பவனுக்குமுன் நியாயம் பேசுதல், சார்ல்ஸ் பிரெடரிக் என்பவன் லூத்தரோடு நியாயம் பேசுதல், அதன் முடிவு, எரேபு என்பவனும், சார்ல்ஸருட் என்பவனும் லெய்ப்சிக்பட்டனத்தில் வாதாடல், எரேபுகம் லூத்தரும் தர்க்கித்தல், பிலிப்பு மிலாங்டன் லூத்தர் உயிர்நம்பர்ப் பட்டனத்தில் பாப்புவின் அதிகாரப்பதிரத்தை அக்கினிதானம் செய்தல், ஐக்தாம் சார்ல்ஸ்ராயன் உவார்ம்ஸ் பட்டனத்தில் கூடிய சங்கத்திற்கு லூத்தரை வருவித்தல், லூத்தரைப்பற்றி கனங்கள் கொண்ட அபிப்பிராயங்கள், சங்கத்தாருக்குமுன் லூத்தர் நியாயம்பேசுதல், உவார்ட்பர்ட் கோட்டையில் அடைபடுதல், புதிய ஏற்பாட்டை ஜர்மன்பாஷையில் மொழி பெயர்த்தல், உவார்ட்பர்ட் கோட்டையை விட்டுப் புறப்படுதல், ஜரம்பர்க் பட்டனத்தில் கடந்த சங்கம்.

முற்பாகம்.

திருச்சபைச் சரித்திரத்தில் இந்த நூற்றாண்டின் சரித்திரம் மகா விசேஷமானது; இந்த நூற்றாண்டில் மார்க்கச் சீர்திருத்தம் ஆரம்பமானதால், ஐரோப்பா கண்டத்திலும் மற்றக் கண்டங்களிலும் அதனுண்டான மிதமான நன்மைகள் தோன்றின; அறியாமை அந்தகாரமாயிருள் மூடியிருந்த தேசங்களில், மெய்ஞ்ஞானமாயி ஒளி பிரகாசமாயிற்று; இப்படிப்பட்ட முக்கிய சம்பவத்தைப் பற்றி நாம் கவனமாய்ப் பார்க்கவேண்டும்.

Introductory remarks.

மார்க்கச் சீர்திருத்தம் ஆரம்பித்த இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் மதாசாரத்தைப்பற்றி ஜனங்களுடைய நிலைமையை நோக்கும்கால், மிகவும் கேடாய் இருந்தென்றே சொல்லவேண்டும். கிறிஸ்தவர்கள் என்று பெயர்பெற்றிருந்தவர்கள் பாப்புகளுடைய கொடுங்கோன்மைக்கும் அடிமைத்தனத்துக்கும் உட்பட்டுத் தவித்துக்கொண்டிருந்தார்கள்; மதவிஷயத்திலும் ஆசார ஒழுக்கங்களிலும் ஜனங்களுக்குள் ஆபாசமான அநேக கேடுகள் எங்கும் பரம்பி இருந்தன. சத்தியமார்க்கத்தின் சுத்த உபதேசங்களைக் கேட்பதும், ஜனங்களிடத்தில் அதற்கேற்ற ஒழுக்கங்களைப் பார்ப்பதும் மிகவும் அபூர்வம்; சபையின் சீர் இப்படி மிகவும் குலைந்திருந்தகாலத்தில், சபாகாயகராயும் சத்தியபூர்த்தியாயும் விளங்கினவர் இரிஸ்தரட்சகர் அதைத் தம்முடைய அருட்கண்ணால் கோக்கிப்பார்த்து, அதிலிருந்த இருள் முடியும் ஒளி பரம்பவும் திருவுளங்கொண்டருளினார்.

State of religion at the beginning of this Century.

மார்க்கச் சீர்திருத்தம் உண்டாவதற்கு ரோமாபுரிப் பாப்புவின் அதிகாரம் குறைவுபட்டதே முதற்காரணம்; பாப்புவானவர் வெகு அதிகாரமோடியாய் ஆளாளுஞ் செய்துகொண்டிருந்தாலும், அவருடைய வல்லமை நாளடைவில் குறைந்துவந்தது. கொன்பாதகனுடைய எட்டாம் பானிபேஸ் என்பவர் பாப்புவாயிருந்தபோதுதான் அவருடைய அதிகாரம் சற்றுப் பிரபலமாயிருந்தது; பிற்பாடு முன்சொன்னதுபோல் அவருக்கும் பிரான்ஸ் தேசத்து அரசனுடைய பிலிப்புவுக்கும் உண்டாயிருந்த சம்வாதமும், பாப்புவின் இராஜாங்கம் ரோமாபுரியைவிட்டு அவிஞ்ஞன் பட்டனத்துக்குப் போய்த்தபோனதும், ஒரேகாலத்தில் இரண்டு பாப்புகள் இருக்கும்படி நேரிட்ட பிரிவினையும், கொன்ஸ்தான்ஸ் பட்டனத்தில் கூடின சங்கத்தார் தங்கள் தீர்ப்பு மேலானதென்று சொல்லிப் பாப்புவைத் தள்ளிவிட்போட்டதும் ஆகிய இத்தியாதி வர்த்தமானங்களினால் புத்திமான்களுடைய மனம் தெளிந்து, அவர்கள் பாப்புவின் அதிகாரத்தைச் சிறிதேனும் இலட்சியம்பண்ணுமல் சுயாதீனமாய் நடக்கும்படி தலைப்பட்டார்கள்.

Decline of the Pope's influence the first thing favourable to the Reformation.

குருமாருடைய அசங்கியமான நடக்கைகள், சங்கியாசிகளுடைய நியமுக்கங்களைப்பற்றி ஜனங்களுக்குண்டான வெறுப்பு, மார்க்கச் சீர்திருத்தத்துக்கு அனுகூலமாயிருந்த இரண்டாம் காரணம் என்று

சொல்லலாம்; அவர்கள் மகா டம்பமாயும் உல்லாசமாயும் இருந்தது மன்றி, தர்மவிஷயத்திற்குச் சேர்ந்திருந்த திரவியங்களைத் தங்கள் இஷ்டப்படி செலவிட்டும் வந்தார்கள்; தாங்கள் விசாரித்துவந்த சபையார்களைத் தங்களைப்போலொத்த சிருஷ்டிகளென்று மதியாமல், அடிமைகளைப்போல் எண்ணி வெகு கொடுமையாய் நடத்திவந்தார்கள்; அவர்களுடைய அயோக்கியமான நடத்தையையும் துஷ்பாவனையான அதிகார தோரணையையும் சபையார் பார்த்து: அவர்களை இந்துக்கள் பிராமணரைத் தேவகுலம் என்று வணங்குவதுபோல் வணங்காமல் அலட்சியமாய் எண்ணும்படி ஆரம்பித்தனர்; சங்கியாசிகளைப் பூமிக்குப் பாரமாயிருக்கிறவர்கள் என்று சொன்னதுமன்றி, அவர்கள்மேல் அநேகம் குற்றங்களையும் ஏற்படுத்தி அவர்கள் துன்மார்க்கத்தை உலகத்துக்கு வெளியிட்டுவந்தார்கள்; உலகப்பற்றுகளையெல்லாம் விட்டவர்கள் என்றும், துறவறம் பூண்டு அதன் ஒழுக்கங்களை வழுவாது நடத்திவருகிறவர்களென்றும் பாராட்டிவந்த சங்கியாசிகள் தியொழுக்கங்களிலேயே தங்கள் காலத்தைப் போக்கிவந்தபடியால், ஜனங்களுக்கு அவர்கள்மேலிருந்த எண்ணமும் பற்றும் காலடைவில் அற்றுப்போயிற்று.

Scandalous lives of the clergy.

அக்காலத்தில் உண்டான கல்விவிர்த்தியும் மார்க்கச் சீர்திருத்தத்துக்கு அநுகூலமாயிருந்தது; முன்சொன்னபடி துருக்கர் கொன்ஸ்தாந்தினோபுரியைப் பிடித்துக்கொண்டபிற்பாடு, அவ்விடத்திலுள்ள கல்விமான்களெல்லாரும் இத்தாலி தேசத்துக்கும் ஐரோப்பா கண்டத்தைச்சேர்ந்த மற்றத் தேசங்களுக்கும் போய், அவர்களுக்கு ஏனுவித சாஸ்திரங்களைக் கற்றுக்கொடுத்து அநேக கல்விச்சாலைகளை ஸ்தாபித்ததுமன்றி, தாங்கள் செய்த நூல்களையும் கிரேக்கு, லத்தின் பாஷைகளிலுள்ள அநேக இலக்கியங்களையும் அச்சடித்துப் பிரசித்தப்படுத்தியும் வந்தார்கள்; அச்சியற்றும் மார்க்கச் சீர்திருத்தத்துக்கு வெகு அநுகூலமாயிருந்தது என்ற சொல்லலாம்; அதனாலே அந்த புஸ்தகங்களனைத்தும் பிரபந்தங்களும் ஜனங்களுக்குள் அதிசீக்கிரமாகவும் அதிபிரபலமாகவும் பரவினதுமன்றி, அநேக புஸ்தகசாலைகளும் உண்டாயின. இவைகளினால் அநேகர்: "தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக், கற்றனைத் தூறும் அறிவு" என்பதுபோல், கல்வியை ஆராய்ந்து அறியவேண்டுமென்ற ஆவேட்சையினும் மேற்கொண்ட புஸ்தகசாலைகளினுள்ள பலபல சாஸ்திரங்களை வெகு முயற்சியாய்க் கற்று மேன்மேலும் தேர்ச்சியடைந்தார்கள்; அதனாலே அவர்கள் தானுகாரியங்களை ஆராய்ந்து நிதானிக்கவும், மார்க்கச் சீர்திருத்தத்தை உண்டாக்கினவர்களுடைய நியாயங்களை யோசிக்கவும், பாப்புமார்க்கத்தின் வழுக்களைச் சீர்தூக்கிப் பார்க்கவும் ஏதுவாயிற்று; இத்தியாதி காரணங்களினால் பாப்புவின் அதிகாரம் காளுக்குகாள் குறைந்துபோயிற்று. இங்கிலாந்து தேசத்தைப் பார்த்தாலோ பாப்புவின் வாசனையென்கிலும் படாத தேசம் படிப்படியாய் பலவிதமான கண்ணிகளுக்குள் அகப்பட்டுக்கொண்டது. 11–ம் நூற்றாண்டில் உவில்லியம் அரசன் பாப்புவின் ஸ்தானபதியை இங்கிலாந்துக்கு வர இடங்கொடுத்தான்.

Revival of learning.

12–ம் நூற்றாண்டில், ஹென்றியென்னும் ராஜன், அத்தியக்ஷரை ஏற்படுத்துவதைப் பாப்புவுக்கு ஒப்புக்கொடுத்தான்.

13–ம் நூற்றாண்டில் யோவான் என்னும் அரசன் இங்கிலாந்து தேசத்தைப் பாப்புவுக்கே சொந்தமென்று கொடுத்துவிட்டான். ஆனால் 14–ம் நூற்றாண்டுமுதல் அரசாண்ட அரசர்களாயெ மூன்றும் எட்வர்ட், இரண்டாம் ரிச்சர்ட், காலாம் ஹென்றி என்பவர்கள் கண் திறக்கப்பட்டவர்களாய், பாப்புவினிடத்தில் விஷம் இருக்கிறதென்று கண்டு, மெதுவாயும் படிப்படியாயும் விலகிவந்தார்கள்.

அக்காலத்தில் சபையிலிருந்த அனுசாரங்களையும் தாறுமாறுகளையும் கண்ட ஜனங்கள் அவையெல்லாம் ஒழிந்துபோகவேண்டுமென்று ஆசைப்பட்டது, மார்க்கச் சீர்திருத்தத்துக்கு அநுகூலமாயிருந்ததென்று சொல்லலாம். சபையிலிருந்த எல்லா அனுசாரங்களிலும் பாப்புகன் பாவமன்னிப்புச் சீட்டை விற்பனை செய்துவந்ததே முக்கிய அனுசாரம்; அக்காலத்தில் பாப்புவாயிருந்த பத்தாம் லியோ என்பவர் சபையின் திரவியங்களைத் தம்முடைய இஷ்டப்படி ஆராதூரியாய்ச் செலவிட்டு வந்ததினால் பணம் சேர்க்கும்படிக்கு இவ்விதச் சீட்டுகளை விற்பனைசெய்யவேண்டியதாயிற்று; இந்தச் சீட்டுகள் பலவகையாயிருந்தன; இவைகளில் பாப்புவானவர் எவ்விதப் பஞ்சமபாதகங்களையும் மன்னித்து நித்தியமண்டலனையை விலக்கிவிட்டு மோட்சாநந்தத்தைக் கொடுத்தற்கு அதிகாரி என்றும், இந்த அதிகாரம் பிதா குமாரன் பரிசுத்தாவியாகிய திரியேக தேவனால் அவருக்கு அளிக்கப்பட்டதென்றும் கண்டிருந்தது; இது ஆம்

Sale of Indulgences the immediate occasion of the Reformation.

பித்த விதத்தைச் சற்றுச் சருக்கமாய்ச் சொல்லுவோம். எமது அருமையான இரட்சகர் கெத்செமனேதோட்டத்திலும், கொல்கதாமலையிலும் பட்ட சரீர ஆத்தும வேதனையாலும், சிலுவையில் அவர் மரித்து உண்டு பண்ணிய ரட்சிப்பின் புண்ணியமானது உலகமுழுவதும் இருக்கிற பாவத்திற்குச் சரிக்கட்டக்கூடியதும், அதற்கு மேற்பட்ட புண்ணியமும் கணக்கு வழக்கில்லாத பிரகாரமாயிருக்கிறதென்றும், அவருக்குப் பின்வந்த இரத்தசாட்சிகள் பரிசுத்தவான்களின் புண்ணியமும் ஒரு பெரிய சமுத்திரம்போலிருக்கிறதென்றும், இந்தச் சமுத்திரம் பாப்புவின் கையில் இருக்கிறதாகவும் இவருடைய இஷ்டப்படி இதைக் கிரயம் செய்யலாமென்றும் போதித்தார்கள். இதினால் ஏற்பட்ட இந்தச் சிட்டகளே அவரவர் தாரதம்மியப்படிக்கும், அவரவர் செய்த குற்றங்களுக்குத் தக்கதாகவும் விலையேற்பித்து விற்றுவந்தனர். ஒரு கொலைச்சங்கதியில் ஒருவன் பொய்ச்சத்தியஞ் செய்திருந்தால், அந்தப் பாவம் தீரும்படி 4½–ரூபாய் கொடுத்துச் சிட்டை வாங்க வேண்டும்; களவுக்கும் வீட்டைத் தீக்கொளுத்துவதற்கும் 6–ரூபாய்; ஒரு சபையானைக் கொலைசெய்த பாவத்துக்கு 3½–ரூபாய்; ஒரு குருவைக் கொன்றதற்கு 5¼–ரூபாய்; இன்னும் சில பாவங்களுக்கு 50, 60, 100, 150–ரூபாயும் கொடுக்கவேண்டிவரும். மார்க்கச் சீர்திருத்தம் உண்டான காலத்திற்கு முன்னும் பின்னும் இப்படிப்பட்ட பாவமன்னிப்புச் சிட்டகள் நாலா இடங்களிலும் ஏராளமாய் விற்பனையாயின. 1709–ம் வருஷத்தில் ஒரு யுத்தக்கப்பல் ஒரு தோணியைப் பிடித்தபோது, அதில் பாவமன்னிப்புச் சிட்டகள் கட்டியிருந்த 500 பெரிய மூட்டைகளிருந்ததென்றும், அவைகளை எண்ணிப்பார்த்தபோது முப்பத்தெட்டு லட்சத்து எர்பதினாயிரம் சிட்டகளிருந்ததென்றும், அவைகள் 7–ஆயிரம் முதல் 110–ரூபாய் வரையிலும் விலையுள்ளவைகளாயிருந்தனவென்றும் வில்னர் என்னும் சரித்திரியார் சொல்லுகிறார்.

மார்க்கச் சீர்திருத்தம் உண்டானகாலத்தில் யோவான் தெட்ஸல் என்பவன் இப்படிப்பட்ட சிட்டகளை விற்பனைசெய்துவந்தான். மென்ஸ்பட்டணத்துச் சிரேஷ்ட அத்தியட்சராகிய அல்பெட் என்பவர் பத்தாம் லியோ என்னும் பாப்புவானவர் அனுப்பின பாவமன்னிப்புச் சிட்டகளை விற்கும்படி தெட்ஸல் என்பவனை ஏற்படுத்தியிருந்தார்; இவன் மேற்படி சிட்டகளின் பெருமையைக்

John Tetzel, Indulgences, preaching.

குறித்தும், அவைகளாலுண்டாகும் மகத்தான புண்ணியங்களைக் குறித்தும் கெருவாய்ப் புகழ்ந்து, இறந்தாருக்காகுமுடைய புண்ணியமும் அதற்கு மிஞ்சினதல்ல என்று வற்புறுத்திப் பேசிவந்தான். பேதுரு அப்போஸ்தலன் தமது பிரசங்கத்தினுலே மோட்சபாதையில் நடந்தின பக்தர்களைப் பார்த்திலும், பாவமன்னிப்புச் சீட்டகளால் நரகத்தினின்று இரட்சிக்கப்பட்டவர்கள் அதிகமென்று வீம்பு பாராட்டினான்; மேலும் பெற்றோரை இழந்த பிள்ளைகளைப் பார்த்து: உத்தரிக்கும் ஸ்தலத்தில் அவஸ்தைப்படுகிற உங்கள் தாய்தகப்பனையர் ஆத்துமாக்கள் நீங்கள் பாவமன்னிப்புக்குக் கொடுக்கும் பணம் இருப்புப் பெட்டிக்குள் கணீரென்று விழுந்தமாத்திரத்தில் பரலோகப்பிராப்தி அடையுமென்று வாய்கூசாமல் துணிகரமாய்ச் சொல்லுவான். அவன் ஒருவிசை லிப்சிக்பட்டணத்தில் பாவமன்னிப்புச் சீட்டகளை அதிகமாய் விற்று, பெட்டிநிறைய பணம் வைத்துக்கொண்டிருந்ததாயும்; அவன் சூதையெல்லாம் அறிந்த ஒரு பிரபு அவனிடத்தில் போய், ஒருவன் இனிமேற் செய்யும் பாவத்தை மன்னிக்கிற சீட்டு ஒன்றை எனக்குக் கொடுக்கக்கூடுமோ என்று கேட்க, அவன் பணம் கொடுத்தால் என் னிடையாது என்று சொன்னதாயும்; உடனே அந்தப் பிரபு அவன் கேட்ட கொகையைக் கொடுத்துச் சீட்டை வாங்கிக்கொண்டு போய்விட்டதாயும் சில காலுக்குப்பின் தெட்ஸல் என்பவன் பணப்பெட்டியை எடுத்துக்கொண்டு பயணம் போகிறதை அப்பிரபு கேள்விப்பட்டு, அவன் போகும் வழியில் ஒரு பக்கம் ஒளித்துக்கொண்டிருந்து அவன் அந்த இடத்துக்கு வந்தவுடனே அவன்மேல் விழுந்து அடியோடண்டமாய் அடித்து அவனிடத்திலிருந்த பணப்பெட்டியையும் பறித்துக்கொண்டு, நான் செய்த இந்தப் பெரிய பாவத்துக்கு நீ கொடுத்த இந்தச் சீட்டே பரிகாரம் என்று சொல்லி, அதை அவன் கையில் கொடுத்துவிட்டுப் போய்விட்டதாயும் ஒரு கதை சொல்லியிருக்கிறது. பாவமன்னிப்புச் சீட்டகளாலே இப்படிப்பட்ட விபரீதங்கள் நடந்துவந்தன; மார்ட்டின் லூத்தர் என்பவராலே மார்க்கச் சீர்திருத்தம் உண்டாவதற்கு இதுவே விசேஷித்த காரணம்.

இவர் 1483–ம் வருஷம் நொவம்பர்மாசம் 10–ம் தேதியில் அப்பர் சக்சோன் நாட்டிலுள்ள ஐஸ்லெபன் என்னும் ஊரில் பிறந்தவர்; மார்ட்டின் என்னும் பரிசுத்தவானின் திருநாளில் இவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டபடியால் இவருக்கு மார்ட்டின் லூத்தர் என்னும் பேர்

வந்தது. இவருடைய தகப்பனுடைய யோவான் லுத்தர் என்பவர் மன்ஸ்பீல்ட் மாகாணத்தின் சுரங்கங்களில் வேலைபார்த்துவந்தவருயோக்கியர்; மார்ட்டின் லுத்தர் என்பவர் பதினாலு பிராயமாயிருக்கும் போது அவருடைய தகப்பனார் மாக்டிபர்க் என்னும் ஊரிலுள்ள ஒரு பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினார்; கல்வியின்பேரிலுள்ள அபேட்சையினாலே அவர் வீகேன்தோறும் போய் யாசகம் வாங்கி ஜீவனுர்த்தம் செய்துகொண்டு தமது படிப்புகளை முயற்சித்துவந்தார்; கொஞ்சநாளைக்குப் பிற்பாடு அவர் ஐஸ்னாக் என்னும் ஊரிலுள்ள பாடசாலைக்குப் போனார்; அவ்விடத்திலும் அவ்வாறே வெகு கஷ்டத்தோடே கல்விபைக் கற்றுப் பதினெட்டுப் பிராயமாயிருக்கும்போது, அர்ப்பர்ட் பட்டணத்திலுள்ள சர்வகலா வித்தியாசாலைக்குப் போய் உயர்ந்த கல்விகளைக் கற்று இருபதாம் பிராயத்தில் சாஸ்திரி என்ற பட்டம் பெற்றார்; அக்காலத்தில் அவர் தர்மசாஸ்திரத்தைக் கற்று நியாயவாதியாகவேண்டுமென்ற அபேட்சையிருந்தும், திருவுளச்செயலால் கடந்த ஒரு காரியத்தினால் அவர் கோரிக்கை ஈடேறமற்போயிற்று; ஒருநாள் அவரும் அவருடைய சிநேகிதரில் ஒருவனும் ஒரு ஊருக்குப் பிரயாணமாய்ப் போகும்போது, அவர் சிநேகிதன்மேல் இடி விழுந்து ஒரு கணப்பொழுதில் மாண்டுபோனான்; லுத்தர் என்பவர் அதைப் பார்த்துத் திடுக்கிட்டு மனம் பதைத்து உலகசம்பந்தமான பெயரும் பெருமையும் தமக்கு வேண்டாமென்று வெறுத்து, அர்ப்பர்ட் பட்டணத்திலுள்ள அகுஸ்தின் சங்கியாச வருப்பைச்சேர்ந்த ஒரு மடத்தில் போய் யோகநிஷ்டையில் தமது காலத்தைப் போக்க வேண்டுமென்று நிர்ணயஞ்செய்துகொண்டார்; அவருடைய தகப்பனார் இதேதர் முதலானவர்கள் அப்படிச் செய்யக்கூடாதென்று வெகுவாய்த் தடுத்துச்சொல்லியும் அவர் கோபமடைந்து, 1505-ம் வருஷத்தில் அந்தச் சங்கியாசிமடம்போய்ச் சேர்ந்தார். இந்த மடத்தில் லுத்தர் என்பவர் மிகவும் இழிவான வேலைசெய்ய கேரிட்டது. மலசலம் நிறைந்ததை சாத்துகிறதும், வெடியாடி சாலி கொடுக்கிறதும், ஆலயத்தை சுத்தம் செய்கிறதும், தலைப்பாய்கொண்டு பெருக்குகிறதும், வீடுவீடாய் யாசகம் கேட்பதும் இவருடைய வேலை. பார்வைக்கு எல்லாம் நன்றாயிருப்பதுபோல் தோன்றினாலும், அவர் மனதிலோ சமாதானமில்லை. சங்கியாசியின் நியமங்களையெல்லாம் மெத்த ஒழுங்காயும் நிஷ்டையாயும் கடைபிடித்தாலும் மனதிலிருந்த பாவப்பாரம் இன்

Birth and education of Martin Luther.

னம் தொலைபவேயில்லை. மடத்தில் கடந்த அனுபவத்திற்கும், கேவி சக்கரத்திற்கும் கணக்குவழக்கில்லை.

அவர் அவ்விடத்திற்குப் போன வருஷத்தில் அவ்விடத்திலுள்ள புஸ்தகசாலையில் லத்தின பாஷையில் வீழ்ந்தியிருந்த சத்தியவேதாகமத்தைக் கண்டு, அதை நாடோறும் வெகுஜாக்கிரதையோடு வாசித்துவந்தார்; இதுவரையில் இந்தப் புஸ்தகத்தைப் பார்த்ததேயில்லை. அதனாலே தாம் ஒரு பாவி என்று உணர்ந்து, என் பாவம் எப்படித் தொலையும்? ஐயோ, என் பாவமே! பாவமே! என்று பிலாபித்துக்கொண்டிருப்பார். சங்கியாசி மடங்களுக்கு விசாரணைக்கர்த்தன் ஒருவர் இருந்தார்; அவருக்கு யோவான் ஸ்டுப்பிட்ஸ் என்ற பேர்; அவர் ஒருநாள் லுத்தருடைய துயரத்தையும், பாவத்துக்காகப் படுகிற வியாகுலத்தையும் பார்த்து அவருக்குச் சந்தோஷம் வரத்தக்கதாக கல்ல ஆறுதலான வசனங்களைச் சொன்னார். "நீர் சத்தியவேதத்தைத் தப்பாமல் வாசித்துவாரும்; இயேசுகிறிஸ்துவுடைய பாடுகளையும் காயங்களையும் தியானித்துப்பாரும்; பாவிகள்பேரிலே தேவன் வைத்திருக்கிற பேரன்பு அதனுல் விளங்கும்; நீர் உம்முடைய பாவத்தைத் தானே எப்போதும் நினைத்துக்கொண்டிருக்கிறது சரியல்ல; அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணத்தில் "பாவமன்னிப்பு உண்டென்று விசுவாசிக்கிறேன்" என்று சொல்லியிருக்கிறதே; மற்றவர்களுடைய பாவங்கள் மாத்திரமல்ல, நம்முடைய சொந்தப் பாவங்களே மன்னிக்கப்படும் என்று விசுவாசிக்கவேண்டியதல்லவா அதன் கருத்து" என்று சொல்லி, நிறைவாகிறவருடைய அருளைப்பற்றியும் அதனால் வரும் பாவநிவர்த்தியைப்பற்றியும் வெகு உருக்கமாய்ப் பேசினார்; அதை லுத்தர் என்பவர் கேட்டு ஆச்சரியமடைந்து, இனி இயேசுகிறிஸ்துவே எனக்குத் தாரகம்; அவரது பாதாரவிந்தமே எனக்கு ஆதாரம் என்று சொல்லி அவருக்குத் தொண்டனுனார்.

His knowledge of Christianity and convictions of sin.

1507-ம் வருஷத்தில் அவர் குருப்பட்டம் பெற்ற மறு வருஷத்தில் உவித்தம்பர்க் பட்டணத்துச் சர்வகலாசாலைக்கு உபாத்தியாயனார்; அவர் குருப்பட்டம் பெற்றபோது, "உமக்குள்ளோருக்காகவும் மனித்தோருக்காகவும் இயேசுவைப் பலியிடும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்" என்று சொல்லப்பட்ட வார்த்தையைக் கேட்டபோது அவருக்குண்டான

Luther becomes a Professor in the University of Wittemberg, A.D. 1507.

மனவருத்தமும் வெறுப்பும் இவ்வளவென்று சொல்லிமுடியாது. சமீபத்திலிருந்த ஒருவர் லுத்தர் கையைப் பலமாய்ப் பிடித்திராவிட்டால் அப்போதே தேவாலயத்திலிருந்து ஓடிப்போயிருப்பார். லூத்தர் என்பவர் அந்த உத்தியோகத்திற்கு எற்பட்ட காள்முதல் அந்த வித்தியாசாலே சேர்ந்தடைந்து ஜர்மன்தேசத்திலுள்ள பாலியர் வித்தை கற்றுக்கொள்ளும்பொருட்டே அதற்குத் திரள்திராளாய் வருவார்கள்; லுத்தர் என்பவர் அவர்களுக்கு விசேஷமாய்த் தேவசனத்தையும் வேதசாஸ்திரத்தையும் கன்றாய்ப் புகட்டிவந்தார்; அவர் ஒருகால் ரோமர் திருபம் முதலாம் அதிகாரத்தை வாசிக்கும்போது, "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்ற வாக்கியத்தை வாசித்து அதன் சாரத்தை மனதிலே கன்றாய் உணர்ந்துகொண்டார்; அந்த வாக்கியம் கல்லின்மேல் எழுதியெழுத்தப்போல் அவர் மனதில் கன்றாய்ப் பதிந்து, பிற்காலத்தில் அவருக்கு கேரிட்ட எல்லாத் துன்பங்களிலும் தக்கங்களிலும் அது அவரை ஆற்றித்தேற்றுகிறதாயிருந்தது; அலேக்கியான வல்லபத்திலும் பிரசங்க சாதுரியத்திலும் இவரை ஒருவரும் மிஞ்சமாட்டார்கள்; இவர் மனுஷ சுபாவம் ஒப்பொன்றிலும் கன்றாய் ஊடாடி பழினவர்போல், அவாவருடைய மனதைத் தமது கருத்துக்கு இசைய இழுத்துக்கொள்ளச் சமர்த்தர்; இவர் சாரியங்களே எதித்துப் பிரசண்டவேகமாய்ப் பேசும்போது, ஊடே கடுஞ்சொற்களும் பிறந்தமைபால், சில சமயங்களில் இவருக்குத் தொந்தவும் கேரிட்டது; ஆயினும் இவர் வைராக்கியமாயும் நியாயவிரோதமாய் கேரிடும் எந்த யோசங்களுக்கும் அஞ்சாத நிடச்சித்தமுடையவராயும் இருந்தார்.

He visits Rome, A.D. 1510.

1510–ம் வருஷத்தில் தாம் இருந்த சங்கியாசிமடத்து வேலையாக ரோமாபுரிக்குப் போனார்; அகுஸ்தின் சங்கியாசினருக்கும் தான் இருந்த சர்வகலாசாலேக்கும் உண்டான ஒரு வழக்குச் சம்பந்தமாய் அனுப்பப்பட்டார். போதிரவழியில் வைலான் என்ற இடத்தில் ஒரு மடத்தில் தங்கி, அங்கேயிருந்த சங்கியாசினின் குடிப்பழியும் புலிப்பாலும் தங்கள் சோத்தையெல்லாம் செலவிலேதைக் கண்டு மெத்தத் துக்கப்பட்டார். அங்கிருந்தவர்கள் சங்கியாசினேபோலல்ல, ராஜாக்களேபோ விருந்தார்கள். அவர் வெகு கஷ்டத்தோடே பிரயாணஞ் செய்து ரோமாபுரிக்குச் சுத்து, அந்தப் பரிசுத்த பட்டணத்தைத் தம்முடைய கண்ணுக்கண்டுகொண்டதினிமித்தம் உள்ளம் பொங்கி முழங்

கால்படியிட்டு: "பரிசுத்த ரோமாபுரியே! நீ என்றும் வாழ்வாயாக" என்று அதை வாழ்த்தினார்; இதனாலே பாப்புமார்க்கத்தின் மருள் இன்னும் அவர் மனதைவிட்டு முற்றிலும் ஒழியவில்லே என்று அறியலாம்; ஆயினும் ரோமாபுரிக்குப் போனது அவர் மனஇருள் நீங்குவதற்கு வதுவாயிற்று; அங்கே பாப்புமார்க்கத்தின் கேபொகளோபும் பாப்புவினுடைய அனுசாரங்களேயும், குருமாருடைய துன்மார்க்கங்களேயும் பார்த்து மனதில் மிகவேமுற்றும் பாப்புமார்க்கத் தவறுகளே உலகத்துக்குப் பிரசித்தப்படுத்தத் தணிந்தார். பரிசுத்த பேதுருவின் நிறப்பான ஆலயம் அப்போதுதான் கட்டப்பட்டது. அதற்குள் லெரோனிக்கா என்னும் ஸ்திரீ தமது ரட்சகர் கொல்கதாவேலுக்கு நிலவை சமந்து போகும்போது முகத்தைத் துடைத்த அவர் இரத்த வேர்வையால் முகருபம்பட்டதாகச் சொல்லுகிற கைலேஞ்சியேனவை தைப் பார்த்துத் திடுக்கிட்டார். ரோமை நகரில் இன்னொரு அதிசயம் வைக்கப்பட்டிருந்தது. எருசலேம் பட்டணத்தில் பிலாத்து என்பவன் உட்கார்ந்துகொண்டு இரட்சகரை விசாரித்ததாக சொல்லப்படும் படிக்கட்டு ஒன்று இருக்கும். அங்கே போகிறவர்கள் முழங்காலில் அந்தப் படிகளில் எறினால் பாவம் தோலுமென்பது பாப்புவின் கட்டுப்பாடு. இதற்கும் அப்படியே வெகு கஷ்டத்துடன் அதில் எறிப்போகையில் "நீதிமான் விசுவாசத்தினால் பிழைப்பான்" என்ற வேதவாக்கியம் இவர் மனதில் உண்டாக, பாப்புவைப்பற்றித் தான் நினைத்திருந்த பெரும் எண்ணமுழுவதும் மாறத்துவங்கினது. நரக மென்பது ஒன்று பூமியிலிருக்குமானால் அதின்மேலில் ரோமைநகரம் கட்டப்பட்டிருந்ததென்று நினைத்தார்.

இப்படி ரோமாபுரியைப் பார்த்த பிற்பாடு, உவித்தம்பர்க் பட்டணத்துக்குத் திரும்பிவந்து 1513–ம் வருஷத்தில் வேதசாஸ்திரி என்ற பட்டம் பெற்றார்; தேவவசனமே அவருக்கு ஞானபோஜனமாயிருந்தது; அதை ஜனங்களுக்கு வெகு ஊக்கத்தோடும் ஜாக்கிரதையோடும் பிரசங்கித்துவந்தார்; அதனாலே அதேகர் அவரிடத்தில் அபிமானம் வைத்தார்கள்; சக்சோன் நாட்டிற்கு அதிபதியாயிருந்த ஞான பிரேமணி என்ற பெயர்பெற்ற பிரீட்ரிக் என்பவர் அவரைத் தம்முடைய நேசனைப்போல் பாவித்துத் தயவாய் நடத்திக்கொண்டுவந்தார்; இந்த இனவரசுக்கு ஆண்மனைக் குருவாயிருந்த ஸ்பாலெற்றின் என்பவரும் அவரிடத்தில் நிசமாகி அவருடைய காரியங்களைப்

Frederic the Wise patronizes him.

பற்றி அரசனுக்குப் புகழ்ச்சியாகவே பேசிவருவார்; லுத்தருக்கு இப்படிப்பட்ட இஷ்டர் இருந்தபோதிலும், "பிரபுக்களே நம்புவதைப்பார்க்கிலும் தேவன்மீதில் பற்றுதலாய் இருப்பதே கலம்" என்ற திருவாசகப்படி, மனுஷரை அதிகமாய்ச் சாராமல் தேவனது பாதகமலத்தையே முக்கியமாய்ச் சார்ந்துகொண்டு மார்க்கச் சீர்திருத்தத்தை ஆரம்பித்தார்.

Luther publishes 95 Theses.

1517–ம் வருஷத்தில் முன் சொன்ன போவான் தெட்ஸல் என்பவன் உவித்தம்பர்க் பட்டணத்துக்குச் சமீபமாய் வந்து பாவமன்னிப்புச் சீட்டுகளை விற்பனைசெய்ததன்றி, அவைகளைப்பற்றி முன் சொன்னதுபோல் ஜனங்களுக்குப் பிரசங்கித்தும் வந்தான்; அதை லுத்தர் என்பவர் கேட்டு மனவெறுப்படைந்து, அதற்கு விரோதமாய்த்தொண்ணூற்றைந்து விதிகளை எழுதி, 1517–ம் வருஷம் செப்டம்பர் மாசம் 30–ம் தேதியில் உவித்தம்பர்க் பட்டணத்தின் ஆலயக் கதவில் ஒட்டிப் பிரசித்தஞ்செய்தார்; அவைகளில் எழு விதிகளை இங்ஙனம் எடுத்துரைப்போம்.

1. நமது சர்த்தாவாகிய இயேசுகாதர்: "மனந்திரும்புங்கள்" என்று திருவுளம்பற்றினபோது, நமது பக்தர்கள் முழுவுபரியந்தம் தங்கள் பாவங்களோக்குறித்துத் துயரப்பட்டுப் பரிசுத்தமாய் நடக்கவேண்டுமென்பதைப்பற்றியே பேசுகிறார்.

21. பாப்புவானவர் கொடுக்கும் பாவமன்னிப்புச் சீட்டுகளால் மனுஷருக்குப் பாவம் தொலையுமென்றும் பரகதி கிடைக்குமென்றும் சொல்வது பெரிய பொய்.

27. இருப்புப்பெட்டியில் வீசென்று பணம் விழுமாத்திரத்தில், ஆத்தும்மாக்கள் பரலோகத்தில் அடைகிறார்களென்று சொல்லுகிறவர்கள், மனுஷருடைய கட்டுக்கதைகளைச் சாதிக்கிறவர்களாயிருக்கிறார்கள்.

51. பாவமன்னிப்புச் சீட்டுகளைப் பெறுகிறதால் போப்பானது சேலாட் என்ற தேவாலயத்தையும், அப்படிப் பிரசங்கிக்கிறவர்களும் பிசாசான் வாசஞ்செய்யும் நரகத்துக்கே போவார்கள்.

62. தேவரிருவையைச் சூழும் சுவிசேஷமே சபைக்கு ஓர் ஒப்பற்ற பொக்கிஷமாயிருக்கிறது.

94. இயேசுகர்த்தருக்கு எவ்வளவு உபத்திரவம் கேரிட்டாலும் அவர்கள் தங்கள் இலையை எதிர்பார்த்துக்கொண்டு, தங்கள் ஆண்

டவராயிருக்கிற இயேசுகாதரின் திருவடிகளில் நடக்கும்படி அவர்களுக்குப் போதிக்கவேண்டும்.

95. மோட்சம் இலேசுக்குமென்று விருதா எண்ணிக்கொள்ளுகிறதைப்பார்க்கிலும், அநேக உபத்திரவங்களின் வழியாய் அதில் பிரவேசிப்பதே உத்தமம்.

இவ்வகையான தொண்ணூற்றைந்து விதிகளை எழுதிப் பிரசுரஞ் செய்தார்; அவைகள் பதினைந்து நாளைக்குள் ஜர்மன் தேசமெங்கும் காற்றைப்போல் பரந்து விட்டன; பெரியோரும் சிறியோரும், கற்றவர்களும் மற்றவர்களும் அவைகளை வாசித்து லுத்தர் என்பவர் சொன்னதே சத்தியம் என்று உணர்ந்துகொண்டனர்; அப்போது தெட்ஸல் என்பவன் அதிகமாய்க் கெடிகலங்கி லுத்தருடைய விரோதங்களையெல்லாம் நிராகரிக்கும்பொருட்டு நூற்று ஆறு பதிற் பிழைகளை எழுதிப் பிரசித்தஞ்செய்தான்; அம்மட்டிலாவது அவன் நின்றுவிடாமல் லுத்தருண்டப் பிரபந்தங்களெல்லாம் சுட்டெரித்துப் போடும்படி கட்டளையிட்டான்.

Tetzel burns Luther.

லுத்தருக்கும் தெட்ஸலுக்கும் கொலையாய் இப்படித் தர்க்கம் நடந்துகொண்டிருந்தது; பாப்புவாகிய பத்தாம் லீயோ என்பவர் அதை அவ்வளவு முக்கியமென்று எண்ணாமல் ஏதோதோ என்று இருந்துவிட்டார்; பிற்பாடு லுத்தர் என்பவரால் ஜனங்களுக்கு பல கஷ்டங்களுண்டாயிருக்கிறது என்று கண்டு, அவர் இரண்டாயிரத்தஞ்சாறாம் வருஷத்தில் ரோமாபுரிக்குவந்து தம்முடைய சமாயங்களைப் பற்றி உத்தரவு சொல்லிக்கொள்ளவேண்டுமென்று கட்டளையிட்டார்; லுத்தர் தாம் ரோமாபுரிக்குப் போனால் அதாவது தம் அபாயம் சேரிடும் என்று அறிந்து, சக்சோன் நாட்டின் அதிபதியான பிரடரிக் என்பவரிடத்தில் முறையிட்டுக்கொண்டார்; அவர் லுத்தரை ரோமாபுரியில் போய்ப் பேச அவசியமில்லை; ஜர்மன் தேசத்திலுள்ள ஆக்ஸ்பர்க் பட்டணத்தில் கர்டினல் கஜிற்றன் என்பவருக்கு முன்பாகப் பேசினால் போதாதா என்பதாகப் பாப்புவானவருக்குத் தெரியப்படுத்தினார்; அவர் அதற்குச் சம்மதித்தபடியே, 1518–ம் வருஷம் அக்டோபர் மாசத்தில் லுத்தர் என்பவர் முதலாம் மக்கிஸ்மிலியன் என்னும் சக்கரவர்த்தியினிடத்தில் தங்கு பாதெரு அபாயமும் சேரிடாதபடிக்கு,

Luther appears before Cajetan, at Augsburg, A.D. 1518.

வாக்குறுதிப்பத்திரம் பெற்றுக்கொண்டு ஆக்ஸ்பர்க் பட்டணத்துக்குப் போய்க் கஜிற்றன் என்பவருக்கு முன்பாக நின்று மார்க்க சம்வாதம் செய்தார்; இதுகாரியத்தை விசாரிக்கும்பொருட்டு ஏற்பட்ட கஜிற்றன் என்பவர் இதற்குத் தகுந்தவரென்று சொல்லக்கூடாது; அவர் தொமினிக் சங்கியாசி வகுப்பைச் சேர்ந்தவரும், செட்ஸல் என்பவனுக்குப் பிராணசிநேகிதரும், வழக்கோரம் பேசுகிறவருமாயிருந்தார்; அவருக்குமுன்பாக லுத்தர் நின்று சமயவாதஞ்செய்த மூன்று சமயங்களிலும் அவருடைய கொள்கையை விட்டுவிட்டு, திருச்சபையில் வந்து சேர்ந்துகொள்ளும்படி சொல்லியும், லுத்தர் சம்மதியாததினாலே அவர் கடுங்கோபமாகி, திருச்சபைக்கு நீ கீழ்ப்படங்கி கடக்கும்பரியந்தம் என் முகத்துக்குமுன் வரக்கூடாதென்று கண்டிப்பாய்ச் சொன்னார்; பிற்பாடு அவனைப் பிடிக்கும்படியாகப் பாப்புவினுடைய கட்டளை வந்திருக்கிறதென்று ஜனங்களுக்குள் பெரும் பேச்சு உண்டாயிருந்ததால் லுத்தர் என்பவர் ஒருவருக்கும் தெரியாமல் ஒரு குதிரையின்மேல் ஏறிக்கொண்டு தப்பி ஓடிப்போய் விட்டார்; ஆக்ஸ்பர்க் பட்டணத்தில் கடந்த சமயவாதத்தின் விருத்தாந்தம் இவ்விதமாய் முடிந்தது.

Charles Miltitz appointed to confer with Luther.

பாப்புவானவர் இதுவிஷயத்தைப் பேதித்திலும்படி குருமுள்ள கஜிற்றன் என்பவருக்கு உத்தரவுகொடுத்தது தமதுபேரில் குற்றம் என்று கண்டு, அவரை நீக்கிவிட்டு, சக்சோன் நாட்டுப் பிரபுவாகிய சார்ல்ஸ் மில்ற்றிட்ஸ் என்பவனை ஏற்படுத்தினார்; இவர் புத்தியிலும், விவேகத்திலும், திறமையிலும் பெயர்பெற்றவராயிருந்ததுமன்றி, தயைதாட்சண்ணியமுள்ளவரும், பாரபட்சமில்லாதவருமாயிருந்தார்; இவர் பிரடரிக் என்பவர் லுத்தருக்கு அனுசாரியாயிருந்ததைப் பார்த்து, முதல் அவனைப் போய்க் கண்டுபேசி, அவர் அபிமானத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று நினைத்து, தங்கத்தினால் ஒரு ரோசாபுஷ்பஞ் செய்துகொண்டுவந்து, இதைப் பாப்புவானவர் தங்களுக்கு ஆசீர்வாதம் உண்டாக வாழ்த்தித் கொடுக்கச்சொன்னார் என்று கொடுத்தார்; இவ்விதக் கபடப் புஷ்பங்களோ முடிமன்னருடைய இருதயத்துக்கும் மனோவிதத்துக்கும் அடையாளமாகப் பாப்புகள் அனுப்புவது வழக்கம்; இந்தப் பொன்மலரைப் பிரடரிக் என்பவர் வேண்டாவெறுப்பாய் வாங்கிக்கொண்டு லுத்தர் பட்சமாகவே இருந்தார்.

மில்ற்றிட்ஸ் என்பவர் லுத்தரைச் சமாதானப்படுத்தத்தக்கவிதமாய்த் தர்க்கத்தை கடத்திக்கொண்டுபோயினும், அது தோதிலுலே ஜர்மன்தேசத்தில் பெரிய ஆலோசனைச் சங்கங்கூடி அதுகாரியத்தைத் தீர்க்கவேண்டுமென்றும், அதற்கு மத்தியில் பாப்புவானவருக்குச் சமாதானம் உண்டாகும்படி லுத்தர் என்பவர் ஒடிந்து வணக்கமாய் ஒரு நிருபம் எழுதிக்கொள்ளவேண்டுமென்றும் நிர்மானம் பிறந்தது; அக்காலத்தில் மார்க்கச் சீர்திருத்தத்தைப்பற்றி லுத்தர் என்பவருக்குள்ளதான அபிப்பிராயம் உண்டாகவில்லை; அவர் ரோமச்சபையை விட்டுப் பிரிந்துபோகவேண்டுமென்ற சோக்கமும் அப்போது அவருக்கில்லை. பாப்புவானவர் ஒருயுத்தியைவிட்டு, லுத்தர் சேம்பிரியன் பிரசாரம் அவருடைய எதிரிகள் பேசவொட்டாமல் அடக்கி, பல மன்னிப்புச் சீட்டுகளை விற்பனைசெய்யாதபடி கட்டளைப் பிறப்பித்திருந்தாராகில், லுத்தர் அச்சபையை விட்டுப் பிரிந்துபோகமாட்டார்; மார்க்கச் சீர்திருத்தமும் உண்டாயிராது.

Result of the conference.

Disputation between Eckius and Carolstadt at Leipsic.

ஆயினும் பாப்புவும் பாப்புமார்க்கத்தை அனுசரித்தவர்களும் லுத்தர் போதித்த சுத்தியமார்க்க உபதேசங்களை வேண்டுமென்று விரோதித்ததால், லுத்தருடைய கட்சி நாளுக்குநாள் பெலப்பட்டுப் போயிற்று. ரோமான் சபையைச்சேர்ந்த கல்விமான்களில் சிலர் லுத்தருடைய கட்சிக்காரரோடே தர்க்கஞ்செய்ய ஆரம்பித்தனர். எக்கியு என்ற ஒரு சான்றோர் பாப்புவின் பட்சமாய் நின்று, லுத்தரின் சிநேகிதனுமிருந்த கர்ல்ஸ்ருட் என்பவரோடே அநேக விஷயங்களைக்குறித்துத் தர்க்கமாடினார்; இந்தத் தர்க்கம் லிப்சிக் பட்டணத்திலே நடந்தது. எக்கியு என்பவர் இதற்குமுன் லுத்தருக்குச் சிநேகமாயிருந்தும், சீர்திருப்பிராபத்தையும் லௌகிக பிரயோஜனத்தையும் அபேக்ஷித்ததினால் சத்தியதுரோகத்துக்கு ஏற்பட்டு, தம்முடைய வித்தையின் ஆண்மையையும், வேதசாஸ்திரத்தில் தமக்கிருந்த சாமர்த்தியத்தையும் யாவரும் அறியும்பொருட்டு கர்ல்ஸ்ருட் என்பவரோடே வாதாடினார். கர்ல்ஸ்ருட் என்பவர் வேதசாஸ்திரியும், லித்தன்பர்க் பட்டணத்தில் சிநேகிதனுமாயிருந்தும், லுத்தருடைய கொள்கையை அனுசரித்தவர்களில் மூதன்மையானவருமாயிருந்தார்; இச்சந்தர்ப்பங்களில் அந்நியமான செய்யும் தர்க்கங்களைக் கேட்கும்படி அநேக ஜனங்கள் கூடிவந்தி

He pleads his cause before the Council.

இராஜ்யத்திலுள்ள பட்டவர்த்தனரும், பிரபுக்களும், குருமாரும், மடாதிபதிகளும் அநேகமாய் வந்து கூடியிருந்தனர்; அவர்கள் வெளிகே வைதீக விஷயங்களைச் சார்ந்த முக்கியமான காரியங்களெல்லாம் ஆலோசித்தார்கள்; லுத்தர் சங்கத்துக்குமுன் வந்தபோது தமது காரியத்தைக்குறித்து தியாயஞ்சொல்லும்படி உத்தரவானதின் பேரில் அவர் இருதாழிகைமட்டும் நின்றுமுதல் ஜர்மன் பாஷையிலும், பின்பு லத்தின் பாஷையிலும் யாவரும் பிரதிசத்தக்கதாக அரிய சமர்த்தோடு சமாதி பொழிந்தாற்போல் பிரசங்கம் செய்தார்; பாப்புவின் பிரதிநிதியாகிய அலெக்சந்தர் என்பவரும், இன்னும் சங்கத்தாரில் அநேகம்பேரும் அவர் தமது கொள்கைகளை விட்டுவிட்டுச் சபையில் திரும்பச் சேர்ந்துகொள்ளும்படி அவர்களால் கூடமட்டும் அநேகம் பிரயத்தனங்கள் செய்துபார்த்தார்கள்; ஆயினும் அவர் மன உறுதியும் வைராக்கியமு முள்ளவராயிருப்பதைக் கண்டு, சார்ல்ஸ் என்னும் சக்கரவர்த்தி அவர் உயிர்மீது பட்டணத்தை விட்டுப் போகும்படி கட்டளையிட்டார்; பிற்பாடு சங்கத்தார் அவர் மதப்பிரஷ்டன் என்றும், இராஜ சவாட்சணையை இழந்தவனென்றும் தீர்ப்புச் செய்தனர்.

Luther's confinement at the castle of Wartburg.

லுத்தருக்கு மோசம் நேரிடப்போகிறதைச் சந்தோஷ ராட்டின் அறிந்து பயந்து, அவரைச் சீக்ரமாகவும்வண்ணமாயில் உயர்ட்பர்க் கோட்டையில் வைத்து பாதுகாக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டு மூன்று மாதமுமட்டும் இவருக் என்னும் இடத்துக்குச் சமீபமாயுள்ள தாரிஞ்சான் என்னும் அரண்யத்தில் வேஷமாறி ஒளித்துக்கொண்டிருக்கவும், லுத்தர் அந்த மார்க்கமாய் வரும்போது அவரைப் பிடித்துப் பலாத்காரமாய் உயர்ட்பர்க் என்னும் கோட்டையில் கொண்டுபோய்ச் சவாட்சணைபண்ணவும் ரகசியமாய் உத்தரவு செய்தார்.

His Translation of the New Testament into German.

அந்தக் கோட்டை அவருக்கு யோவான் அப்போஸ்தலன் இருந்த பத்மோஸ் தீவுபோலிருந்தது; அங்கே அவர் பெயரை மாற்றி ஜியார்ஜ் என்னும் பெயரை வைத்துக்கொண்டு பத்துமாசமளவாக்கு மிருந்து; ஆயினும் அந்தக்காலத்தை அவர் வீணும் வழிபாடில் புதிய ஏற்பாட்டை ஜர்மன்பாஷையில் மொழிபெயர்த்தமன்றி இன்னும் பல



லுத்தர் உயர்ட்பர்க் கோட்டைக்குக் கொண்டுபோய்ப்பிடிபட.

நூல்களையும் எழுதினார்; அவைகளெல்லாம் மார்க்கசீர்திருத்தத்துக்கு வெகு ஆதாலமாயிருந்தன; விசேஷமாய் அவர் ஜர்மன் பாஷையில் மொழிபெயர்த்த பரிசுத்த வேதபுஸ்தகமும் பாப்புமார்க்கத்தின் இருள் நீங்கவும், சத்தியமார்க்கத்தின் ஒளி எங்கும் வீசவும் ஏதுவாயிற்று; லுத்தர் என்பவர் இந்தக் கோட்டையிலிருந்தது அவருடைய சிநேகிதர்கள் அறியாமல் அவர் எங்கே போனாரோ என்றும், எதிரிகள் அவரை என்ன செய்தார்களோ என்றும் கெருவாய்க் கவலைப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

He leaves Wartburg.

லுத்தர் உயர்ட்பர்க் என்னும் கோட்டையிலிருந்தபோது அவருடைய சிநேகிதனாகிய கால்ஸ்ருட் என்பவர் மார்க்கச் சீர்திருத்தத்தை நடப்பிக்க முயன்று, சபையை வைராக்கியப்படுத்திக்கொண்டு, கோவில்களிலிருந்த சொரூபங்களையெல்லாம் அடித்துடைத்து நிர்மூலம்பண்ணி இப்படிக் கலகமுண்டாக்கினார்; இந்த தாளிருக்கையிலே லுத்தர்

கேள்விப்பட்டு, தம்முடைய சவரட்சனைக் கர்த்தாவுக்குத் தெரியா மல் அந்தக் கோட்டையை விட்டுப் புறப்பட்டு உவிற்றம்பர்க் பட் டணத்துக்குப் போய்ச் சேர்ந்தார்; அருடைய கல்வி ஞலோசனை யினலும் ஒழுக்கத்தினலும் அவ்விடத்தில் சமாதானமுண்டாகிச் சகலமும் சீராய் நடத்துவந்தது; அவர் எங்கும் போய்ப் பிரசங்கம் பண்ணி, தாம் ஜர்மன்பாஷையில் மொழிபெயர்த்திருந்த புதிய ஏற் பாட்டையும் பிரசுரஞ்செய்தார்; இதற்குக் கொஞ்சகாலத்துக்குப் பிற்பாடு சத்தியவேதாகமம் முழுவதும் அந்தப் பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டது; அது ஜர்மன் தேசமெங்கும் வெகு சீக்கிரத்தில் பிரபலமானதினலே ஜனங்கள் சத்தியவேதத்தின் சுத்த உபதேசங் களையும், ரோமசபையின் தவருகளையும், ஸ்திரீத்திற்குரிய அறு வறுனுகளையும் கண்டறிந்துகொள்ளும்படி ஏதுவாயிற்று. 1522-ம் வருஷம் லுத்தர் தான் மொழிபெயர்த்த புதிய ஏற்பாட்டைப் பிரசுரம் செய்தார். 1525-ம் வருஷம் லுத்தர் என்பவர் விவாக நிலைமையில் பிரவேசித்தார். கன்னியாஸ்திரி மடத்திலிருந்து வெளிப்பட்ட கத் தரின் என்னும் உத்தமியை விவாகஞ்செய்து, லுத்தருக்கு மூன்று பிள்ளைகளும் பிறந்தார்கள், மூதல் பிள்ளையின்பேர் யோவான், இரண் டாவதுபிள்ளை எலிசபேத்து, மூன்றவதற்கு மகதலேனுள் என்ற பேர். இரண்டு பெண்குழந்தைகளும் சிறவத்திலேயே இறந்து போனர்கள். பிற்பாடு இரண்டு ஆண் பிறந்தது. லுத்தர் பாலிய தில் சேட்டிக்காரர், தேவாராதனையோடு இனிமையான பாட்டு களைக் கூட்டினவர் லுத்தரே. ஸ்ராப்பிதிஸ், பாமரேனு, ஸ்பாலாட் டின், அனிஸ்கோலா, புஸ்துயோனு, மிலாங்டன், சோனுக், சாக்த னிப்பிரப இவருடைய கண்ணுக்குக் கண்ணான சிநேகிதர்.

1521-ம் வருஷத்தில் பத்தாம் லியோ என்னும் பாப்புமானவர் இறந்துபோனர்; அவருக்குப்பின் ஆறும் ஆதி Council at Nuremburg. ரியன் என்பவர் பாப்புப்பட்டம் பெற்றார்; இவர் ருஷசாலியாயும் கல்லொழுக்கமுடைய வராயிருந்தார்; அப்படியிருந்தும் இவர் மார்க்கச் சீர்திருத்தத்துக்கு இடையூறு செய்யும்படி தினைத்து, உவர்ம்ஸ் பட்டணத்தில் கூடின சங்கத்தில் லுத்தருக்கு விரோதமாய்ப் பிறந்த தீர்ப்பை நிறைவேற்ற வேண்டுமென்று இரண்டாந்தரம் நூரம்பர்க் பட்டணத்தில் கூடின சங்கத்தாரிடத்தில் கேட்டுக்கொள்ளும்படி ஒரு தூதனை அனுப்பினர். ஆயினும் இவர் அதிகாரம் ஒரு வருஷமாத்திரம் சென்றது; அப்

பால் அவர் இறந்துபோனபடியால் அவருடைய பட்டத்தை எட் டாம் ஹெமெந்து என்பவர் பெற்றுக்கொண்டார்; இவர் உபாயதக் திரங்களில் பெயர்போனவர்; இவர் பட்டம் பெற்றவுடனே கர்டி னல் கம்பேஜியோ என்பவரை நூரம்பர்க் பட்டணத்தில் கூடின சங்கத்துக்கு அனுப்பி, லுத்தருக்கு விரோதமாய்ப் பிறந்த தீர்ப்பின் படி நடக்கத்தான்வேண்டுமென்று வற்புறுத்திப் பேசவேண்டுமெனக் கட்டளை கொடுத்தார்; சங்கத்தார் சபையிலுள்ள தவருகளையும் தாறு மாறுகளையும் பார்த்து, அவைகளையெல்லாம் ஒரு பெரிய சங்கம் கூடி ஆலோசிக்கும்பரியந்தம் லுத்தருக்கு விரோதமாய்ச் செய்த தீர்ப் பை நிறைவேற்றாமல் நிறுத்திவைக்கவேண்டுமென்று சொன்னர் கள்; நூரம்பர்க் பட்டணத்தில் கூடின சங்கத்தின் தீர்ப்புகள் பெரும் பாலும் மார்க்கச் சீர்திருத்தத்துக்கு அனுகூலமாயிருந்தன; ஹங்கே தேசத்துப் பிரபுக்கள் லுத்தர் சொன்னதெல்லாம் யதார்த்தந்தா னென்று அறிந்திருந்தினலே அவருக்கு விரோதமாய்க் கடினமான பிரமா ணங்களை விதிக்காமல், சபையின் சீர்கேட்டைப் பார்த்து அதற்கு ஒரு பரிகாரம் செய்யவேண்டுமென்று பாப்புவுக்கு யோசனை சொன் னர்கள்.

இரண்டாம் பாகம்.

சுவிற்சர்லாந்தில் அல்ரிச் சுவிங்கல் என்பவரால் மார்க்கச் சீர்திருத்தம் தூண் டித்தல். ஸாம்மன் என்பவர். அவருடைய அல்லது சுவிங்கல் வா தித்தல். சுவிங்கல் என்பவரின் பிரசங்கம். சூரிச்பட்டணத்தில் மார்க்கச் சீர்திருத்தம் பிரதிதமாகுதல். சகோதரமேலதிகப்பற்றிய வாக்குவாதம். தேசவைராபம். சுவிங்கல், எக்கலாம் பேடியு என்பவர்களின் மரணம். மற்றவர்கள்மார்க்கச்சீர்திருத்தங்களதடத்தல். தெனிவாபட்டணத்தில் மார்க்கச்சீர்திருத்தம்தூரம்பித்தல். போவான் கல்வின் பிறந்தல். அவர் செய்தனல்கள். தெனிவாபட்டணத்தில் மார்க்கச் சீர்திருத்தம் பிரதிதை மாகும்படி அவர் செய்த முயற்சிகள். இரட்போஜனத்தைப்பற்றி அவர் கொண்ட அபிப்பிராயங்கள். அவருடையமரணம். பிரான்ஸ் தேசத்தில் மார்க்கச் சீர்திருத்தம் தூரம்பித்தல். பர்தலோமேயு என்னும் பண்டிகை காளில் கடந்த வல்லோலே. இரண்டாந்தர பிரமாணமான தீர்ப்பு. சுவிட்சர் தேசத்தில்மார்க்கசீர்திருத்தம்ஆயபித்தல். தென்மார்க், ஸ்வி தென், இத்தாலி, ஸ்பானியா, நெதர்லன்ட் என்னும் தேசங்களில் உண் டான மார்க்கச் சீர்திருத்தம்.

ஜர்மன் தேசத்தில் நடந்த மார்க்கச் சீர்திருத்தமாகிய மகா ஆச் சரிய சம்பவத்தை இம்மட்டில் நிறுத்தி, ஐரோப்பா கண்டத்தின் மற்

றத் தோன்னில் அதற்கு அனுகூலமாய் நடந்த விசேஷங்களைக் கவனித்தால் உத்தமமாயிருக்கும். ஜர்மன் தேசத்தில் மார்க்கச் சீர்திருத்த முண்டானகாலத்தில் இந்நிகழ்ச்சனியையடைத்தும்பொருட்டு அற்புதகாரனுகிய கடவுள் ஓத்தர் மாமுனியை எழுப்பினதுபோல் சுவிற்சர்லாந்துதேசத்தில் அல்ரிக் சுவிங்கல் என்பவனை ஏற்படுத்தினார். இவர் 1484–ம் வருஷம் ஜனவரிமாசம் முதலாந்தேதியில் பிறந்தவர். இளம்பிராயத்திலேயே பாசில், வியன்னுமுதலான பட்டணங்களில் படித்து, கல்வியில் தேர்ந்து, சாஸ்திரி என்ற பட்டத்தைப் பெற்றார்; 1516–ம் வருஷத்தில் இவர் சூரிக்பட்டணத்துக்குக் குருவானார்; இவர் உலீக்லி, ஹால், ஜெரோம் என்பவர்களுடைய நூல்களையும், எராஸ்மு என்பவருடைய பிரபந்தங்களையும் வாசித்துவந்தார்.

Reformation in Switzerland by Ulrick Zwingle.

அக்காலத்திலிருந்த கலைக்கியானிகளில் ஈராஸ்மு என்பவர் சிறந்தவர்; இவர் 1467–ம் வருஷத்தில் ஹாலாந்து தேசத்திலுள்ள ராட்டர்டம் என்னும் பட்டணத்தில் பிறந்தவர்; இவர் ஹாலாந்து, சுவிற்சர்லாந்து, இத்தாலியா, பிரான்ஸ், இங்கிலாந்து என்னும் தேசங்களில் சஞ்சரித்துவந்தார்; இறுதியாயத்தில் இவருடைய பெற்றோர் இறந்துபோனபடியால், இவரும் ஓத்தரைப்போல் சன்னியாசமடத்தை 1486–ம் ஆண்டு சேர்ந்துகொண்டார். அதை விட்டுக் கடைசியில் வெளிப்பட்டு, 1496–ம் ஆண்டு பாரிஸ் பட்டணத்தில் உபாத்தியாசம் செய்தார். 1497–ம் ஆண்டு இங்கிலாந்துக்குப் போய், தேவ்நுபாஷையைக் கற்றுக்கொண்டு அதே காலம் புஸ்தகங்களை யெழுதினார். 1504–ம் ஆண்டு இத்தாலியா தேசத்திலுள்ள தூரின் பட்டணத்தில் சாஸ்திரிப்பட்டம் பெற்று, பின்பு இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் வேதசாஸ்திரம் படித்துக் கொடுத்தார். 1516–ம் ஆண்டு புதிய ஏற்பாட்டை முதல்முதலாய் இவர் கிரேக்குபாஷையில் அச்சடித்துப் பிரசுரம் செய்தார். இவர் எல்லாக் கல்விகளிலும் தேர்ந்த வித்வசிரோமணியாய் விளங்கினார்; இராஜாக்கள் பெரியோர்களெல்லாரும் இவரை வெகு கௌரவமாய் நடத்திவந்தார்கள்; இவர் பாவமன்னிப்புச் சீட்டுகளைப்பற்றியும், சடங்குகளைப்பற்றியும் தன்மார்க்கங்களைப்பற்றியும் வெகு வெறுப்பாய்ப் பேசினபோதிலும், கோமுச்சித்தமுள்ளவராய் ஓத்தர் கட்சியைச் சேராமல் உபாயம் பண்ணிக்கொண்டிருந்தார்; ஆயினும் ஓத்தர் வேலைக்கு இவர் அநுகூலமான தினைபாகேயிருந்தார். இவர் 1536–ம் ஆண்டு

Erasmus.

வருஷத்தில் பாசில்பட்டணத்தில் இறந்துபோனார்; இவர் பிறந்த பட்டணம் இறந்தவிடம் எல்லாவற்றையும் ஜனங்கள் வெகு மதிப்பாய்ப் போய்ப் பார்த்துவருவார்கள்.

இவருடைய நூல்களையெல்லாம் அல்ரிக் சுவிங்கல் என்பவர் கரிசனமாய் வாசித்துவருவார்; ஆயினும் மத்தெல்லாப் பிரபந்தங்களைப்பார்க்கிலும் விசேஷமாய்ச் சத்தியவேதத்தை அதிபக்தியுடன் வாசித்துவந்தார்; அதனாலே கிறிஸ்துமார்க்கத்தின் சத்தியங்களையும், ரோமமார்க்கத்தின் தவறுகளையும் கண்டு அறிந்துகொண்டார்.

His writings read by Zwingle.

ஜர்மன் தேசத்தில் தெட்ஸல் என்பவன் பாவமன்னிப்புச் சீட்டுகளை விற்றதுபோல் சுவிற்சர்லாந்து தேசத்தில் கர்மெலித்தியனாசேர்ந்த சன்னியாசியாகிய மத்தேயு என்பவன் 1518–ம் வருஷத்தில் அவைகளை விற்றவந்தான்; சுவிங்கல் என்பவர் அதைக் கேள்விப்பட்டுக் கிலேசமடைந்து அதற்குவிரோதமாய்ப் பிரசங்கம்செய்துவந்தார்; கிறிஸ்துரட்சகர்: "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்" என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்திருக்க, பாவ மன்னிப்புச் சீட்டுகளை வாங்கிக்கொள்ளுங்கள் என்றும், பாப்புவினிடத்தில் போங்கள் என்றும், சன்னியாசிகளுக்குப் பணம் கொடுங்கள் என்றும், குருக்களுக்குத் தட்சணை கொடுங்களென்றும், அதனாலே உங்கள் பாவம் தொலையும், பரகதி கிடைக்குமென்றும் சொல்வது மகா மடமையாயும் பாதகமாயுமிருக்கிறது என்பதற்குச் சந்தேகமில்லை. கிறிஸ்துகர்த்தரே பாவநிவாரண பலியாயிருக்கிறார்; பரகதிக்கு வழி அவரே; அந்த இரக்ஷண்ணிய பெருமானுடைய சகல பாக்கியமும் பாபாத்மாக்களுக்கு வரவேண்டியதாயிருக்க, பாப்புமார்க்கத்தார் இதைச் சொல்லாமல் ஜனங்களை வஞ்சிப்பது கொடிய பாவம் என்று கூறினார்.

Zwingle's preaching.

ஜர்மன் தேசத்திலுண்டான மார்க்கச் சீர்திருத்தத்துக்கு ஆதிமித்திரம் பாக் பட்டணம் முதலிய ஸ்தலமாயிருந்தது போல், சுவிற்சர்லாந்து தேசத்திலுண்டான மார்க்கச் சீர்திருத்தத்துக்கு சூரிக்பட்டணம் புகழ்பெற்றதாயிருந்தது. 1518–ம்வருஷத்தில் சுவிங்கல் என்பவர் சூரிக்பட்டணத்துக்குப் போகிறதாய் வந்து, கிறிஸ்துமார்க்கத்தின் சத்திய உபதேசங்களை வெகு ஊக்கமாய்ப் பிரசங்

The work of reformation spreads in Zurich, A.D. 1518.

கம் செய்துவந்தார்; அவர் தம்முடைய சபையாரைப் பார்த்து: இறிஸ்தாக்ஷரே நீங்கள் கதியடைவதற்கு வழியாயிருக்கிறார்; அவாது திவசனமே உங்கள் ஆத்துமாக்களுக்கு ஞானாகாரம்; உங்களே அவரிடத்தில் அழைத்துக்கொண்டுபோவதே எனது கடமை என்று இமையாய்ப் பிரசங்கம்பண்ணினார்; அதனாலே சுவிற்சர்லாந்தில் ஏயிருந்த அறியாமையாகிய இருள் நீங்கிப்போகவும், சத்தியமார்த்தின் ஒளி எங்கும் வீசவும் ஏதுவாயிற்று. சூரிக் மாகாணத்திலுண்டான மார்க்கச் சீர்திருத்தம் பேரில் முதலான மாகாணங்களிலும், கால், பீயல், ஜெனீவாமுதலான பட்டணங்களிலும் உண்டாயிற்று.

Sacramental controversy, A.D. 1529.

இப்படி மார்க்கச் சீர்திருத்தம் நாலாஇடங்களிலும் பிரபலமாகிக்கொண்டு வரும்போது, லுத்தருக்கும் சுவிங்கல் என்பவருக்கும் நற்கருணை விஷயத்தைப்பற்றி வாக்குவாதம் உண்டாயிற்று; இவ்விருகட்சிக்காரரையும் சமாதானப்படுத்தும்பொருட்டு ஹெஸிகாட்டின் அதிபதியானவர் 1529–ம் வருஷத்தில் மார்பர்க் பட்டணத்தில் அவர்கள் வந்து அதுவிஷயத்தைப்பற்றிப் பேசிக்கொள்ளும்படியாக உத்தரவுசெய்தார்; அப்படியே அவர்கள் கூடிவந்து அதைக்குறித்துத் தர்க்கம் செய்தனர்; லுத்தர்பட்சத்தில் மிலாங்தன் என்பவரும், ஜொனஸ் என்பவரும் பிரன்ஷியு என்பவரும் நின்று பேசினார்கள். சுவிங்கல் பட்சத்தில் மார்ட்டின் பூசர் என்பவரும், எக்கலாம்பேடியு என்பவரும், காவினு என்பவரும், கால்ஸ்ற்றூட் என்பவரும் இருந்து பேசினார்கள். தேவநற்கருணையைப்பற்றி லுத்தர் என்பவரும், அவர் கட்சிக்காரரும், நிறிஸ்துவினுடைய சரீரமும் இரத்தமும் நற்கருணையின் அப்பரசமாகிய சடபதார்த்தத்தோடே சேர்ந்து பிரசன்னமாகிறது; பழுக்கக்காய்ச்சிய இரும்பில் நெருப்பும் கலந்திருப்பதுபோல, நற்கருணையின் அப்பத்திலும் இரசத்திலும் நிறிஸ்துவின் திருச்சரீரமும் இரத்தமும் கலந்திருக்கிறதாக வாதித்தார்கள்; இக்கோட்பாட்டிற்கு இங்கிலீஷில் (Consubstantiation) கன்சப்ஸ்டான்ஷியேஷன் என்ற பெயர்; சுவிங்கல் என்பவரும், அவர் கட்சிக்காரரும் அதற்கு மாறாய் நற்கருணையின் அப்பமும் இரசமும் நிறிஸ்துநாதரின் திருச்சரீரத்துக்கும், இரத்தத்துக்கும் அறிகுறிகளாய்மாத்திரம் இருக்கிறது என்று சொன்னார்கள்; இந்தத் தர்க்கம் நாலுநான்பரியந்தம் நீடித்தது; ஆயினும் இருகட்சிக்காரரும் அவர் சொன்னதையே சாதித்துவந்தபடியாலே அது சமாதானமாய் முடி

பாமல் ஒருவனாவிட்டு ஒருவர் பிரிந்துபோகும்படி நேரிட்டது; இது மார்க்கச் சீர்திருத்தத்துக்குப் பெரிய தடையாயிருந்தது.

Civil War, A.D. 1531 Death of Zwingle and Ecolampadius.

சுவிற்சர்லாந்தில் மார்க்கச் சீர்திருத்தம் அபிவிர்த்தியாகிவருவதைப் பாப்புமார்க்கத்தார் பார்த்துக் கிங்கோபமாகி, சுவிங்கல் என்பவருடைய கொள்கைகளை அனுசரித்தவர்கள் அவைனைத் தள்ளிவிடாவிட்டால் அவர்களைக் கொலைசெய்வோமென்று சொன்னார்கள்; ஆயினும் மதவிஷயத்தில் அவரவர் தங்கள் மன இஷ்டப்படி நடந்துகொள்ளலாமென்று, 1529–ம் வருஷத்தில் ஒரு [illegible]ந்தமுண்டானபடியினாலே, அவர்களுக்குள் யுத்தம் வருகிறதற்[illegible]ருந்தாலும் சிலகாலம் அப்படி நடவாமல் இருந்தது; [illegible]ம் 1531–ம் வருஷத்தில் சூரிக், பெர்ன் மாகாணங்களிலுள்ள சுவிங்கல் என்பவருடைய கட்சியாருக்கும், பாப்புமார்க்கத்தைச் சேர்ந்த ஐந்து மாகாணங்களிலுள்ளவர்களுக்கும் யுத்தம் நடந்தது; அதில் சுவிங்கல் என்பவருடைய கட்சியார் தோல்வியடைந்துபோயினார்; சுவிங்கல் என்பவரும் தானது நிமித்தரோடே அந்த யுத்தத்துக்குப் போனமையால் அவரும் இறந்துபோனார்; அவர் மரிக்கும் சமயத்தில் அவர்கள் என் சரீரத்தைக் கொன்றாலும் என் ஆத்துமத்தைக் கொல்லக்கூடாதென்று சொன்னார். பாப்புமதஸ்தர் அவருடைய சரீரத்தை எரித்துப் பலவகையாய்ப் பங்கப்படுத்தி, சுட்டுச் சாம்பலாக்கிப்போட்டார்கள்; அந்தச் செய்தியை அவருடைய நிநேதிதனாகிய எக்கலாம்பேடியு என்பவர் கேள்விப்பட்டு, வெகு துக்கமுற்று அதனாலே வியாதியாயிருந்து இறந்துபோனார்; அவர் இறக்கும் சமயத்தில் ஒரு நிநேதிதன் அவரிடத்திற்குப் போய் என்ன சமாசாரம் என்று கேட்க, அவர் அதற்குச் சற்றுப் பொறும், நான் உமக்குச் சமாசாரம் சொல்லுவேன்; இன்னும் கொஞ்சகாலத்துக்குள் நான் இயேசுகர்த்தரோடே இருப்பேன்; என் இருதயத்தில் சொல்லமுடியாத ஆனந்தமிருக்கிறது என்று சொன்னார்.

Work of Reformation carried on by others.

சுவிற்சர்லாந்தில் மார்க்கச் சீர்திருத்தத்துக்கு முதன்மையாயிருந்த இவ்விரண்டுபேரும் இறந்துபோனதை பாப்புமார்க்கத்தார் கேட்டுச் சந்தோஷப்பட்டார்கள்; ஆயினும் தேவசெயலால் ஆரம்பித்த அந்த நற்கிரியை அவர்களோடே நின்றுபோகாமல் விர்த்திகொண்டே வந்தது; சுவிங்கல் என்பவருக்குப் பின் சூரிக் மாகாணத்துக்கு புல்லிங்கர்

என்பவர் குருவானார்; எக்லாம்பேடியு என்பவருக்குப்பின், பேசில் மாகாணத்தில் ஸைக்கோனியு என்பவர் தேவ ஊழியத்தைப் பார்த்துவந்தார்; இவர்களும், மார்ட்டின் பூசர், பேதரு மார்ட்டர் முதலான அநேக தேவபக்தர்களும் மார்க்கச் சீர்திருத்தத்தை வெகு முயற்சியாய் நடப்பித்துவந்தார்கள்.

சுவிற்சர்லாந்தில் சீர்திருத்தமான சபைக்கு ஹெல்வெத்திக் சபை யென்ற பெயர்; ஜெனீவாபட்டணமும் அச்சபையைச் சேர்ந்தவையால் அது பென்பேலும் பெருகிக்கொண்டேவந்தது; 1530-ம் வருடத்தில் பிரான்ஸ் தேசத்தாராகிய ஊவில்லியம் வேரல் என்பவரும், பேதருவீரற் என்பவரும் அப்பட்டணத்தில் சுவிசேஷத்தை உத்தமவகையாய்ப் போதித்துவந்தார்கள்; குருக்கன்மாராயிருந்தவர்கள் பொறுமைகொண்டு அவர்களைப் பட்டணத்தைவிட்டுத் துரத்திவிட்டபோதிலும், 1534-ம் வருடத்தில் ஜனங்கள் அவர்களை மறுபடியும் தங்களிடத்துக்கு வருவித்து அதுமுதல் பாப்பு மதத்தைவிட்டுச் சத்தியமார்க்கத்தை அனுசரித்துக்கொண்டார்கள். இவ்விவகாரத்தில் வேரல், வீரற் என்பவர்களுக்கு யோவான் கல்வின் என்பவர் மிகவும் உதவியாயிருந்தார்.

Reformation commenced in Geneva by Farel and Viret, A.D. 1530.

கல்வின் என்பவர் 1509-ம் வருஷம் குலாய்மாதம் பத்தாந்தேதியில் பிரான்ஸ் தேசத்தில் பிக்கார்டி மாகாணத்திலுள்ள நோயன் ஊரில் பிறந்தவர்; இளம் பிராயத்தில்தானே பாரிஸ்பட்டணத்தில் வித்தியாப்பியாசஞ்செய்து, அவருடைய தகப்பனார் கருத்துப்படி நோயன் கலாசாலையிலும் சிலகாலம் தேவசபைவிசாரணைக்காகப் பன்னிரண்டாம் வயதில் ஏற்பட்டார்; கொஞ்சகாலம் சென்றதின்பேரில் அவருடைய பிரமாணவர் அவரைக் குறித்துக்கொண்டிருந்த எண்ணத்தை மாற்றி, அவர் தர்மசாஸ்திரம் படிக்கும்படி திட்டஞ்செய்தார்; கல்வின் என்பவரோ மற்றெல்லாச் சாஸ்திரங்களைப்பார்க்கிலும் வேதசாஸ்திரத்தின்பேரில் மட்டற்ற ஆவல்கொண்டு அதை முயற்சியோடு கற்றவந்தார்; 1534-ம் வருஷத்தில் இவர் சோமூர்ச்சபையைவிட்டு நீங்கி, பாரிஸ்பட்டணத்தில் மார்க்கச் சீர்திருத்தத்தை நடத்தும்படி முயன்றார்.

John Calvin born, A.D. 1509.

அக்காலத்தில் பிரான்ஸ் தேசத்தை அரசனிருந்த முதலாம் பிரான்சிஸ் என்பவர் மார்க்கச் சீர்திருத்தத்தை நடத்தினவர்கள்பேரில் அதி

கக் கோபங்கொண்டு அவர்களைப் பிடிக்கும்படி கட்டளையிட்டார். அப்போது கல்வின் என்பவருடைய உயிருக்கும் அபாயம்வருகிறதுபோலிருந்தது; ஆயினும் திருவுளச்செயலால் அவர் அதற்குத் தப்பிக்கொண்டார். பிரான்சிஸ் என்னும் அரசனுடைய சகோதரியாகிய நவார் நாட்டின் அரசி, மார்க்கச் சீர்திருத்தத்துக்குச் சார்பாயிருந்தமையால், அவளுடைய பிரயத்தனங்களிலுலே அவர் தப்பிப் பேசல் பட்டணத்துக்குப் போனார். அவ்விடத்திலிருந்துகொண்டு 1535-ம் வருஷத்தில் "கிறிஸ்துசமய எத்பாகேள்" என்ற பெயருள்ள ஒரு பெரிய தூலை லத்தின்பாஷையில் எழுதி, அதைப் பிரான்சிஸ் இராயன்பேரால் பிரசித்தஞ்செய்தார்; வேதசாஸ்திரத் திரட்கேளில் இதற்கு நிகரானது ஒன்றுமில்லை; இதுவுமன்றி அவர் பழைய புதிய ஏற்பாடுகளுக்கு வியாக்கியானம் எழுதியிருக்கிறார்; அதனாலும் அவர் கல்வித் திறமையும் ஆழ்ந்த புத்தியும் நன்றாய் விளங்குகிறது.

His Christian Institutes, A.D. 1535.

"கிறிஸ்துமத எத்பாகேள்" என்ற தூலைப் பிரசித்தஞ்செய்த கொஞ்சகாலத்துக்குப்பின் அவர் ஜெனீவாபட்டணத்தின் வழியாய்ப் பிரயாணம்பண்ணிக்கொண்டுபோனபோது, முன்சொன்ன படி வேரல், வீரற் என்பவர்கள் அவரைக் கண்டு, தங்களுக்கு உதவியாயிருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதின்பேரில் அவர் சம்மதித்து, 1536-ம் வருஷத்தில் அப்பட்டணத்துக்குப் பேராசிரியாகவும், வேதசாஸ்திரப் பண்டிதராகவும் ஏற்பட்டார்; இவருடைய உபதேசங்களும் கண்டிப்பான ஒழுக்கங்களும் ஜெனீவாவிலுள்ள சில ஜனங்களுக்கு வெறுப்பாயிருந்தமையால் அவரையும் அவருடைய சிநேகிதர்களையும் துன்பப்படுத்த ஆரம்பித்தார்கள்; அதனாலே அவர் அப்பட்டணத்தை விட்டு, ஸ்ருஸ்பர்க் என்னும் பட்டணத்துக்குப் போகவேண்டியதாயிற்று; அவ்விடத்திலும் அவர் சும்மாயிராமல் ஒரு சபையை ஸ்தாபித்து அங்கே வேதசாஸ்திரப் பண்டிதராஞர்; அவர் போனபிற்பாடு ஜெனீவாபட்டணத்தார் தங்கள் குற்றத்தை யுணர்ந்து அவரை மறுபடியும் வரும்படி கேட்டுக்கொண்டபடியால், அவர் 1541-ம் வருஷத்தில் ஜெனீவாபட்டணத்துக்குத் திரும்பிப்போனார்; அங்கே ஒரு சாஸ்திரசாலையை ஸ்தாபித்து, அதைப் பரிபாலிக்கும்படி தனத்தனத்தாருடைய சாதனம்பெற்று, தான் இறந்துபோகும்பரியந்தம் அதை வெகு சிரத்தையோடு நடத்திவந்தார்; மார்க்கச்

His efforts to spread the reformation in Geneva.

சீர்திருத்தத்தை உண்டாக்கினவர்களுக்குள் இவர் விசேஷித்தவரா யும், வேதசாஸ்திரிகளில் முதன்மையானவராயும் இருந்தார்.

Calvin's views of the Lord's supper.

இவர் எற்படுத்தின சபை ஒழுங்குக்கு பிரஸ்பிற்றியன் சபை ஆளு கை என்ற பெயர்; இவர் கற்கருணையைப் பற்றி லுத்தர் என்பவரைப்போல், அப்பத்தி லும் இரசத்திலும் இறிஸ்துவின் சரீரமும் இரத் தமும் எகவஸ்துவாய்ச் சேர்ந்திருக்கிறது என்று சொல்லவுமில்லை; சுவிங்கல் என்பவரைப்போல் அவைகள் இறிஸ்துவின் திருச்சரீரத் திக்கும் இரத்தத்திக்கும் அறிகுறிளாகமாத்திரம் இருக்கிறதென்று சொல்லவுமில்லை; அவைகள் அப்படி அடையாளங்களாயிருப்பது மன்றி, ஞானர்த்தமாய் ஆவியின் பிரசன்னமாகவிருக்கிறதென்று சொன்னார். பிரான்ஸ், ஸ்கொத்லாந்து, ஹாலாந்து, ஜர்மனி, போ லாந்து என்னும் தேசங்களில் சீர்திருத்தமடைத்த சபைகள் இவரு டைய பிரமாணத்தையே ஒப்புக்கொண்டார்கள்.

His death, A.D. 1564.

இவர் காலத்தில் சத்தியமார்க்கத்துக்கு விரோதமாய் நடந்தவர்கள் சிலர் இருந்தார்கள்; அவர்களில் சர்வீற்று என்பவன் ஒருவன்; இவன் திரித்துவ உப தேசத்தைப்பற்றித் தப்பிதமாய்ப் போதனை செய்திருந்தமையினாலே தேசசட்டத்தின்படி 1553–ம் வருஷத்தில் அக்கி னிதனமானான்; அதற்கு கல்வீன் என்பவரும் அனுசரணையாயி ருந்ததாகச் சிலர் சொல்லுகிறார்கள்; அதைக்குறித்து நாம் நிச்சயம் சொல்ல எதுவில்லை; அவர் நெடுகாலமாய் நிறுத்தமகருக்கு ஊழியஞ்செய்து 1564–ம் வருஷத்தில் இறந்துபோனார்; இவருடைய கொள்கைகளை அங்கோரஞ்செய்தவர்களுக்கு கல்வினிஸ்தர் என்று பெயர்.

Reformation in France. Massacre of St. Bartholomew, A.D. 1572.

மார்க்கச் சீர்திருத்தம் ஜர்மன் தேசத்திலிருந்து பிரான்ஸ் தேசத்தில் நுச் சென்றது; 1523–ம் வருஷத்தில் பிரான்ஸ் தேசத்திலிருந்த சிலர் முதலாம் பிரான்சிஸ் என்ற அரசனுக்குச் சகோதரியும், நாவார்ஸென்ற இராச்சியத்துக்கு அரசியுமாயிருந்த மார்கெரற் என்பவளைத் தங்களுக்காக வைத்துக்கொண்டு சத்தியமார்க்கத்தைப் பிரசித்தப்படுத்தவும், சுத்தாங்கமான தேவாராதனை கட்டப்பிக்கும்படி அதிகம் சொல்லிக்கொள்ளவும் தொடங்கினார்கள். இப்படிக்

சத்தியமார்க்கத்தை அனுசரித்து நடந்தவர்களுக்கு யாதுகாரணத்தி னாலோ (Hugenots) ஹியுஜின்ற்றர்கள் என்று பெயர்வந்தது; இவர் களுக்குப் பலவகையில் பிரான்சிஸ் என்னும் அரசனும் துன்பமுண் டாயிற்று; அவனுக்குப்பின் பட்டத்துக்கு வந்த இரண்டாம் ஹென்றி என்பவர் அவர்களை வெகு குரூரமாய் நடத்தினான்; அவனுக்குப் பின் இராஜபட்டம் பெற்ற ஒன்பதாம் சார்ல்ஸ் என்பவன் தன் பெய ரும் கீர்த்தியும் விளங்கும்பொருட்டு சத்தியமார்க்கத்தை அனுசரித் திருந்த ஹியுஜின்ற்றர்களையெல்லாம் ஒரேகாளில் சர்வசங்காரம் செய் யவேண்டுமென்ற பிரதிக்கினைசெய்து, சமயம் எப்போது வரு மென்று காத்துக்கொண்டிருந்தான்; அவன் தங்கைக்கும், நாவார் தேசத்துப் பிரபுவுக்கும் அவன் வீட்டில் விவாகம் நடந்தது; அந்தப் பிரபு ஹியுஜின்ற்றரைச் சேர்ந்தவராயிருந்தமையால் அவர்களுக்கு வேண்டியவர்களாய் இருந்தவர்களெல்லாரும் கலியாணத்துக்கு வந்திருந்தார் கள்; அடுத்த ஞாயிற்றுக்கிழமை பர்த்தலோமேயின் பண்டிகைகாலமா யிருந்தது; அன்று காலை ஆராதனைக்கு மணியடிக்கும்போது சத்திய மார்க்கத்தை அனுசரித்தவர்களுக்கு அபாயம் கேரிட்டது; அவர்கள் வன்கொலைபடைத்தலை அவ்வாசலும் அவன் தாயும் அரண்மனையி லிருந்து ஜன்னல்வழியாய்க் கண்குளிரப்பார்த்துச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தார்கள்; இந்தப் பாதகன் துப்பாக்கியை எடுத்து அவர் களில் அதிகமானைச் சுட்டதுமன்றி, அவர்கள் ஒருவரையும் தப்பவிடா மல் எல்லாரையும் கொல்லுங்கள் கொல்லுங்கள் என்று கூப்பிட் டான்; சோவானிஸ்தார் நாலாதிக்கிலும் ஓடி, கிராயதபாணிகளாயும் ஆதரவற்றவர்களாயுமிருந்த ஹியுஜின்ற்றர் என்பவர்கள்மேரில் பலி போல் பாய்ந்து வெட்டிக் குத்திக் கொன்றார்கள்; அவர்களுடைய இரத்தம் நெருக்களில் ஆறுபோல் பிரவாகமாய் ஓடிற்று; பாரிஸ்பட் டணத்தில்மாத்திரம் மடிந்தவர்கள் பதினயிரம்பேர் இருப்பார்கள்; அவர்களில் ஐந்நூறுபேர்வரையிலும் பட்டவர்த்தனரும், பிரபுக்க ளும், படைவீரருமாயிருந்தவர்கள்; இப்பட்டணத்தில் நடந்ததுபோ லவே பிரான்ஸ்தேசம் முழுவதும் நடந்தது; இந்தச் சர்வசங்காரத்தில் சிலர் மூப்பதினயிரம் ஜனம் மடிந்தார்களென்றும், சிலர் அறுபதினயி ரம்பேர் என்றும், சிலர் லட்சம்பேர் வீதம் இப்படிப் பலவிதமாய் தொகையிட்டுச் சொல்லுகிறார்கள். இதைப்போலொத்த சங்காரம் ஒருகாலத்திலும் நடந்ததில்லை; இது 1572–ம் வருஷம் ஆகஸ்டு மாசம் இருபத்துநாலாந்தேதி நடந்தது; அதைப் பாப்புவானவர் கேட்டு

ஆகத சந்தோஷப்பட்டு அந்த நாளை ஒரு திருநாளாக எல்லாத்திலும் கொண்டாடவேண்டுமென்று ஏற்பாடுசெய்தார்.

Edict of Nantz in favor of the Hugenots, A.D. 1593.

ஹியுஜினாத்தருக்கு இப்படித் தமதென்ன ஆபத்து நேரிட்டதால், அவர்கள் தங்கள் பிராணனைக் காப்பாற்றிக் கொள்ளவாவது யுத்தஞ்செய்யவாவது எதுவில்லாமலிருந்தது; காண்டிவர் அரசனுடைய அனுசரணை கிடைத்தபிற்பாடி அவர்கள் அதிக தைரியங்கொண்டு, சத்துருக்களை எதிர்த்து ஜெயித்து அநுகூலமடைந்தார்கள்; ஆயினும் முப்பதுவருஷகாலமாய் அவர்களுக்கு அதிகத் துன்பமும் பாடும் உண்டாயிருந்தது. 1595-ம் வருஷத்தில் நாலாம் ஹென்ரி என்பவன் ராஜபட்டம் பெற்றான்; இவன் தமியுலிங்குர்களின்பேரில் அபிமானம் வைத்து, 1598-ம் வருஷத்தில் காண்டில் பிரமாணம் என்ற ஓர் சட்டத்தைப் பிரசித்தப்படுத்தினான்; அதனால் அவர்கள் தங்கள் சமயசாரப்படி தேவாராதனை நடத்தத்தக்க சலாக்கியம் பெற்றதுமன்றி, அவர்களுடைய ஆலயங்களையும் இராணுவங்களையும் பரிபாலித்தும்பொருட்டு சில மானியங்களையும் பெற்றுக்கொண்டார்கள்; இந்த அரசன் 1610-ம் வருஷத்தில் ஒரு துஷ்ட மனுஷன் கையினால் கொலையுண்டு இறந்தான்.

Reformation in Sweden.

இப்படிமார்க்கச்சீர்திருத்தம்பிரான்ஸ்தேசத்திலுண்டானதுபோல், ஐரோப்பா கண்டத்தின் வடக்கேயுள்ள சுவீடன்தேசத்திலும்உண்டாயிற்று; லுத்தருடைய கொள்கையை அனுசரித்தவர்களில் ஒலவ் பெற்றி என்பவரும், லாரன்சியுஸ் என்பவரும் அத்தேசத்துக்குப் போய்ச் சுவிசேஷார்த்தத்தைக் கூறிவந்தார்கள்; பிற்பாடி அத்தேசத்து ராஜாவாயிய குஸ்தாவஸ்வாசா என்பவர் அதற்கு வேண்டிய அனுகூலங்களைச் செய்தார்; அவர் சத்தியவேதத்தை தாய்பாஷையில்மொழிபெயர்த்து எல்லா மனுஷரிலும் பிரசங்கஞ்செய்யும்படி சட்டமே கொடுத்தது மன்றி, ஜர்மன் தேசத்திலிருந்து அநேகம் குருமாரை அழைப்பித்து, தமது குடிகளுக்குப் பிரசங்கஞ் செய்யும்படியாகவும் ஏற்பாடு செய்தார்; அதனாலே சுவீடன் தேசத்திலே கொஞ்சகாலத்துக்குள் பாப்பு மார்க்கம் அடியோடே அற்றிப்போனதுமன்றி, சத்தியமார்க்கம் அவ் ராஜ்யமெங்கும் பிரவேசித்தது.

இத்தேசத்தில் மார்க்கச் சீர்திருத்தமுண்டானதுபோல் அக்கத்தே டென்மார்க் தேசத்திலும் அது உண்டாயிற்று; அத்தேசத்துக்கு

அரசனாயிருந்த இரண்டாம் கிறிஸ்தியன் என்பவர் கிறிஸ்துமதத்தில் சிரத்தையில்லாதவராயும் துஷ்ட மிஷ்டோ கண்டனையிலிருந்தபோதிலும், பாப்புவின் அதிகாரத்துக்கு எங்கினை கண்காணிகள் மாய்மாலமான ஆதிக்கத்துக்கு உட்படவேண்டுமென்றும், சோவில் மானியங்களைக் கட்டிக்கொள்ளவேண்டுமென்றும் அபேட்சித்து, தமது ராஜ்யத்தில் மார்க்கச் சீர்திருத்தமுண்டாவதற்கு சில முயற்சிகள் செய்தார்; கர்ல்ஸ்ற்ருட் என்பவருடைய சேஷனுபெ மார்ட்டின்ரேயினட் என்பவனை ஜர்மன் தேசத்திலிருந்து அழைப்பித்து, அவர் மூலமாய்ச் சத்தியமார்க்கம் தமது பிரஜைகளுக்கு பிரசித்தமாகும்படி செய்தார்; அப்படியிருந்தும் அவருடைய கொடுங்கோன்மையினால் அவருடைய ராஜ்யத்தை இரத்தபோஜர் அவர் புத்திரர்களைப்பெற்ற பிரபுக்க எனபவர் புத்திகலியானதால், மார்க்கச் சீர்திருத்தத்தை அதிகாரத்தோரணையாய் நடத்தாமல் மகா அமைதலாயும் விவேகமாயும் நடத்திவந்தார்; பிற்பாடி அவர் பட்டத்துக்கு வந்த மூன்றாம் கிறிஸ்தியன் என்பவர் 1539-ம் வருஷத்தில் ஒரு சங்கம் வைத்து, அவர்களுடைய தீர்ப்பினாலே சத்தியமார்க்கம் இராஜ்யமெங்கும் பரிசுத்தமாய் ஸ்தாபிதமாகும்படி ஏற்பாடுசெய்தார்.

Its establishment in Denmark, A.D. 1539.

Reformation in Hungary, A.D. 1522.

1522-ம் ஆண்டில் ஹங்கேரிதேசத்திலும் மார்க்கச் சீர்திருத்தமுண்டாயிற்று; அவ்விடத்திலிருந்த சிலபேர் உபித்தம்பர்க்பட்டணத்தில்போய் லுத்தரிடத்தில்படித்து, அவர் எழுதிய நூல்களை வாசித்து போதனைசெய்தறிந்து தங்கள் வேருக்குத் திரும்பிப்போய்க் கிறிஸ்துமதத்தின் சத்தியங்களைக் கூறினார்கள்; 1523-ம் வருஷத்தில் லுத்தர் என்பவர் புருஷிபாதேசத்துக்குப் பிராசில் கல்விபோனைச்சேர்ந்த வேதசாஸ்திரப் பண்டிதராகிய யோவான் பிரில்மன் என்பவரை அனுப்புவித்ததினாலே அத்தேசத்திலும் மார்க்கச் சீர்திருத்த முண்டாயிற்று; மறுவருஷத்தில் பின்னும் பல வேதசாஸ்திரிகள் அவ்விடத்துக்குப் போய்க் கிறிஸ்துமார்க்கத்தைப் பிரசங்கித்தபினாலே சபை அதிகமாய் விர்த்தியடைந்தது.

மற்றத் தேசங்களில் மார்க்கச் சீர்திருத்த முண்டானதுபோல் பாப்புவானவர் இருந்த இத்தாலி தேசத்திலும் உண்டாயிற்று; பாப்புவுக்கும் லுத்தருக்கும் சமரசம் கேரிட்டபிற்பாடி இத்தாலி தேசத்தினுள்ள வெனிஸ், டஸ்கனி, நேப்பிள்ஸ் என்னும் நாகேனிலிருந்த

ஜனங்கள் பாப்புமார்க்கத்தின் கொடுங்கோன்மையைப் பொறுக்கமாட்டாமல் முறையிட்டதுமன்றி, ஒத்தருடைய கொள்கைகளை அனுசரிக்கவும் ஆரம்பித்தனர்; அதனாலே 1545-ம் வருடத்தில் சேப் பிள்ளாட்டில் பெரிய கலகமுண்டாயிற்று. இரண்டாம் சார்ல்ஸ் என்னும் சக்கரவர்த்தி அமர்த்தவேண்டியதாயிருந்தது; பாப்புவை வரும் சத்தியமார்க்கத்தை அனுசரித்தவர்களைத் தண்டிப்பித்தும், துன்பப்படுத்தியும் வந்தான். ஆனாலும் இங்கிலாந்திலும் அலுப்பினர்; அதனாலே அவர்களின் அதிகம் அத்தேசத்தைவிட்டு மற்றத் தேசங்களுக்குப் போய் குடியேறும்படி நேரிட்டது.

Reformation in Italy.

ஸ்பானியா தேசத்திலும் மார்க்கச் சீர்திருத்தமுண்டாயிற்று; அத்தோடே சமயவைராக்கியம் செய்யும்படி இரண்டாம் சார்ல்ஸ் என்னும் ராயன் ஏற்படுத்தினபேத சால்திரிகன் என்பவருடைய கொள்கைகளை அனுசரித்து அவைகளைஸ்பானியாதேசத்தில் பிரசித்தஞ்செய்து வந்தார்கள்; அதைத் அங்கீகரித்துக்கொண்டவர்களுக்குச் சொல்லமுடியாத துன்பம் நேரிட்டதினால், அவர்கள் அதை விட்டுவிட்டுப் பாப்புமார்க்கத்தைச் சேர்ந்துகொண்டார்கள்; ஆயினும் மார்க்கச் சீர்திருத்தத்தைப் பற்றி அநேகருக்குள் கல்ல எண்ணமிருந்தது; இரண்டாம் சார்ல்ஸ் என்னும் சக்கரவர்த்திக்குள்ளும் அந்த எண்ணம் மரணகாலத்தில் இருந்ததாகச் சொல்லுகிறார்கள்; அது நிச்சயமில்லாவிட்டாலும் அவர் ஆண்மையிலைபச்சேர்ந்த மைதீய உத்தியோகஸ்தரெல்லாரும் மார்க்கச் சீர்திருத்தத்தைப்பற்றி கல்ல எண்ணம் கொண்டிருந்தார்கள் என்பது நிச்சயம்; அப்படியிருந்தினாலேதான் அவர்களெல்லாரும் சத்துருக்களாலே மரண ஆக்கினையடையும்படி நேரிட்டது.

Reformation in Spain.

இந்த மார்க்கச் சீர்திருத்தம் பெல்ஜியம் ஹாலாந்து என்னும் தேசங்களிலும் உண்டாயிற்று; 1521-ம் வருடத்தில்தானே அநேகர் அந்தக் கொள்கையை அனுசரித்துக்கொண்டமையால், இரண்டாம் சார்ல்ஸ் என்னும் ராயன் அவர்களைக் கொலைசெய்யும்படி கட்டளைகொடுத்தான்; அப்படியிருந்தும் அது அழிக்கப்பட்டதேயன்றி சற்றேனும் குறையவில்லை. சார்ல்ஸ் என்பவருடைய குமாரனாகிய பிலிப்பு என்பவர் ராஜ்யபட்டம் பெற்றபோது இத்தேசத்தில் சத்திய மார்க்கத்தின் உபதேசங்களை ஏற்றுக்கொண்ட ஜனங்களுக்கு ஏராள

Reformation in the Netherlands.

தமாய் வெகு கண்டிப்பான வற்பாலைச் செய்தார்; மார்க்கச் சீர்திருத்தம் வளர்ந்துவருவதைப் பார்த்து அநேகம் சேனைகளை வருப்பி, அவர்களைக் கண்டழிக்கும்படி கட்டளையிட்டார்; அதனாலே கோலாகலம் கலங்கியிருந்தது; ஆயினும் சத்திய மார்க்கக் கொள்கைகள் மேன்மேலும் அதிக அபிவிர்த்தி அடைந்துவந்தது; அதனிமித்தம் பிலிப்பு என்பவர் ஒரு பெரிய சேனையை அனுப்பினார்; அதற்குத் தலைவர்களுள்ளவர் அல்வா என்னும் பிரபுவாகும். அவர்களைப் பிடித்து, கோதிக்காலேயில் அடைத்து அவர்களைக் கொலைசெய்யும்படி உத்தரவு செய்தான்; இப்படி எல்லோர்க்காலும் அன்பு அதிகரித்தபோது ஆரஞ்சுநாட்டின் அதிபதியான உவில்லியம் என்பவர் தேசாபிமானமுள்ளவராய்த் தமதுதேசத்தை இந்த அபத்தத்தில் விலக்கவேண்டுமென்று பிரயத்தனிக்கும்போது இருபட்சக்காரருக்கும் அநேக வருஷகாலமாய் யுத்தமுண்டாயிற்று; அதனாலே பாப்புமார்க்கம் ஒழிந்து சத்தியமார்க்கம் அத்தேசமெங்கும் பிரபலமாயிற்று; ஸ்பானியாவை சேனை துரத்திப் புறப்பட்டுப்போனபின் அத்தேசங்களில் மார்க்கச் சீர்திருத்தம் பிரபலமாய் நடத்தலாகும்படி நடாவிக்கொண்டிருந்தனர்.

மூன்றாம் பாகம்.

ஞானஸ்நானத்தின் உற்பத்தி. அவர்களாலுண்டான கலகங்கள். பதினாறாம் நூற்றாண்டில். ஸ்விட்சர்லாந்தில். ஜூரிக் பட்டணத்தில் சுவிங்கிலியின் வேலை. ஸ்விட்சர்லாந்தில் பட்டணத்தில் கூடின சங்கத்தார் மார்க்க விசாரணைக்குத் தருவிசெய்த தீர்ப்பு. அப் பட்டணத்தில் இரண்டாம் விசை கூடின சங்கத்தார் அபிப்பிராயம் மாறுதல். சீர்திருத்தினர் சபையார் அதை விரோதித்தல். அதனால் அவர்களுக்குப் புரோட்டெஸ்தாண்ட் என்ற பெயருண்டாகுதல். சீர்திருத்தினர் இச்சபை. ஆல்பர்ட் சபகம் அறிக்கை. மார்ட்டின் லூதர்சின் பலவர்த்தமானஞ்செய்த குறிப்பை சாதனத்தை வாசித்தல். லைசீவியஸ் எனில் பாப்புவின் அதிகாரத்தைத் தாழ்வு படும்படி சங்கத்தார் தீர்ப்புச்செய்தல். ஸ்மால்கால் பட்டணத்தில் கூடின புரோட்டெஸ்தாண்டு இராஜரிபுருக்கள் மார்க்கசம்பந்தமான விசாரணைக்காக ஒருமிக்கும்படி ஒப்பந்தஞ்செய்தல். ஸ்மால்கால்பட்டணத்தில் இராயன் புரோட்டெஸ்தாண்டுமார்க்கத்தாரை கடாயபடுக்கை செய்தல். ஏழாம் வினோதமான ஸ்மால்கால்பட்டணத்தில் கூட்டிய சங்கம். இராயன் கட்டளைப்படி உலாம்பட்டணத்தில் சங்கம் கூடுதல். ஜூரிக் பட்டணத்தில் சுவிங்கிலியின் வேலை. ஸ்விட்சர்லாந்தில் பட்டணத்தில் சுவிங்கிலியின் வேலை. இவ்விரிவில் என்னும் சமயத்தை இராயன் நிறுத்தம்செய்தல். மார்க்கச்சீர்திருத்தர்கூடியிருந்தனர்.

கூடி ஆலோசிப்பது. நிரம்பப்பட்டதில் பெரிய சங்கம் கூடியது. பூர்ச்சமாதானம்* என்றும் உடன்படிக்கை ஆல்பர்ட்டனைத் தீர்செய்தல்.

இப்படி மார்க்கச் சீர்திருத்தம் பல தேசங்களில் அபிவிர்த்தியாகிக் கொண்டுவந்தபோதுஜர்மன்தேசத்தில்அதற்கு ஒரு விக்கினம் சேரிட்டது. 1524-ம் வருஷத்தில் ஜர்மன் தேசத்தைச்சேர்ந்த பலகாகெளர் ஞன சங்கள் பாப்பு மார்க்கத்தைப்பற்றிப் பேதமான அபிப்பிராயங்களைக் கொண்டவர்களாயிருந்தமையால் தேசத்தில் ஒரு குழப்பமுண்டாயிற்று; லுத்தர் என்பவர் எழுதிய "கிறிஸ்தவனின் சுயாதீனம்" என்ற புஸ்தகத்தை வாசித்தவர்களில் சிலர் தப்பான காரியங்களைப் பிரபலப்படுத்தினர்கள். மன்சர், மோகான் என்னும் ஜர்மன் தேசத்தார்கள், இறிஸ்துவன் சர்வ அதிகாரி, கிறிஸ்தவன் ஒருவருக்கும் பேப்படிய வேண்டியதில்லை, உலகத்திலே அதிகாரம் என்பது அநியாயமாய்க் கைப்பற்றிக்கொண்டதே என்று பல வாருப்போதித்தார்கள். இதில் ஏற்பட்டவர்களுக்கு ஞனபாப்திஸ்திஸ் என்ற பெயர்; இவர்கள் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கக்கூடாதென்றும், தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் பலபடியும் ஞானஸ்நானம் பெறவேண்டுமென்றும் சொன்னதுமன்றி, இறிஸ்தவர்களெல்லாரும், சம அந்தஸ்துள்ளவர்களென்றும், அவர்கள் தனைத்தனத்தாருக்கு அடங்கி நடக்கவேண்டியதில்லையென்றும், அவாவு இவ்விடப்படி அரசே ஸ்திரீகளே விவாகஞ்செய்து கொள்ளலாமென்றும், கடவுள் கட்டளைப்படி ஒரு புது இராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்றும், அதற்கு எல்லாத் தேசத்தாரும் அமைந்து நடக்கவேண்டுமென்றும் சொன்னார்கள்; இவர்களுக்கு மன்சர் என்ற ஒருவன் தலைவனாயிருந்தான்; இப்படிப்பட்ட விபரீதக் கோட்பாடுகளை இவர்கள் போதித்துவந்தமையால் தேசத்தின் சீலகுலைத்து எங்கும் கலகமுண்டாயிற்று. இவர்களிலிருந்து பாப்திஸ்ட் என்பவர்கள் வந்தார்கள்.

Rise of the Anabaptists in Germany, A.D. 1524.

ஞனபாப்திஸ்திஸ் என்று பெயர்பெற்ற இவர்கள் யுத்தஞ்செய்ய ஆரம்பித்தார்கள்; இவர்கள் தங்களுக்குத் தேவ ஆவேசமுண்டென்றும், அற்புதங்களைச்செய்யத்தக்க வரமுண்டென்றும் பாராட்டி அதேகமாய் வஞ்சித்தனர்; அவர்கள் போனபோன இடங்களிலெல்லாம் வார்களை அக்கினியால் கொளுத்தி, ஜனங்களைக்

Troubles consequent on the peculiar doctrines of Anabaptists.

கண்டதுண்டமாய் வெட்டி, சற்றும் இரக்கமில்லாமல் நிஷ்டூர பாதகங்களைச் செய்துவந்தார்கள்.

இவர்கள் துஷ்டகடபடிகளினால் தேசமெங்கும் கலகமுண்டாகிறதைஜர்மன்தேசத்துப் பிரபுக்கள் கண்டு, அவர்களை அடக்கவேண்டுமென்று நினைத்து, தங்களுடைய சேனைகளைக்கூச்சேர்த்துக்கொண்டு அவர்களோடே யுத்தஞ்செய்தார்கள்; அதில் ஞனபாப்திஸ்தர் தோல்வியடைத்ததுமன்றி, அவர்களுக்குத் தலைவனுயிருந்த மன்சர் என்பவனும் தலைவெட்டிண்டு 1525-ம் வருஷம் மாண்டுபோனான்; பிற்பாடு அவர்கள் உவெஸ்ட்பாலியா நாட்டிலுள்ள மன்ஸ்டர் பட்டணத்தைத் தங்கள் இராஜதானியாக வைத்துக்கொண்டு பாக்கால்ட் என்றவனைத் தங்களுக்கு இராஜனாக ஏற்படுத்தினர்கள்; ஆயினும் 1535-ம் வருஷத்தில் மன்ஸ்டர்பட்டணத்தைக் கன்காணியார் அவர்களோடு எதிர்த்துப் போர்செய்ததில் அவர்கள் இராஜதானி பிடிபட்டதுமன்றி, அவர்கள் அரசனும் இறந்துபோனான்; இச்சச் சண்டையில் மாண்டவர்கள் ஐம்பதினாயிரம்பேர் இருப்பார்கள்; அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கிலாந்துக்கும் பெல்ஜியம் ஹாலாந்து தேசங்களிலிருக்கிறார்கள்; அவர்களுக்கு இப்போது மென்னனைத்தியர் என்று பெயர்; அவர்கள் முன்னுள்ள ஞனபாப்திஸ்தரைப்போல் கலகமுண்டாக்களாயிராமல் அமைதலாய்த் தங்கள் ஜீவனத்தைப் பார்த்துவருகிறார்கள்.

Defeated in pitched battles, A.D. 1535.

மேற்சொன்ன ஞனபாப்திஸ்தருடைய கொள்கைகளை லுத்தர் என்பவர் வெகு உறுதியாய் நிராகரித்துவந்தார். "ஞானத்துக்கு மிஞ்சினால் அபிர்தமும் நஞ்சாம்" என்ற பழமொழிப்படி, மிதமிஞ்சி விகினத்தை விளைவிக்கத்தக்க அவர்களுடைய கோட்பாடுகளை அவர் வெகுவாய் ஆசோசித்ததுமன்றி, சத்தியமார்க்கத்தின் சுத்த உபதேசங்கள் இப்போப்பட்ட தாறுமாறுகளையும் தீமைகளையும் பிறப்பிக்கமாட்டாதென்று பரிஷ்காரமாய்க் காட்டியும் வந்தார்.

Luther preaches against their doctrines.

ஜர்மன் தேசத்திலே இவ்வளவு கலகங்களும் யுத்தங்களும் நடந்துவரும்போது, 1525-ம் வருஷத்தில் லுத்தருடைய சிநேகிதரும் உபகாரியுமாயிருந்த பிரடரிக் என்பவர் தேகவியோகமானார்; அவருடைய பட்டம் அவர் தம்பியாகிய யோவான் என்பவருக்குக் கிடைத்

தது; இவர் மார்க்கச் சீர்திருத்தம் கடந்தேறுவதற்குத் தம்முடைய தமையனைப்பார்க்கிலும் அதிக பலமான முயற்சிகளைச் செய்யத் தொடங்கினார்; தமது அரசுக் குட்பட்ட சபைகளுக்கடுத்த காரியங்களைத் தாமே மேலாயிருந்து நடத்திவந்தார்; அவர் செய்தவண்ணம் சமீபத்திலிருந்த மற்றச் சபைகளும் செய்யும்படி கேளிட்டமையால், பாப்புமார்க்கம் நாளுக்குநாள் குறைந்துபோகவும் மார்க்கச் சீர்திருத்தம் அபிவிர்த்தியாகவும் ஏதுவாயிற்று.

Frederic succeeded by his brother John, A.D. 1525.

சக்சோன் நாட்டின் அதிபதியும் ஜர்மன் தேசத்திலுள்ள மற்றப் பிரபுக்களும் மார்க்கச் சீர்திருத்தத்தைக் கைப்பற்றி இப்படி அதிக முயற்சி செய்துவரும் போது, ஐந்தாம் சார்ல்ஸ் என்னும் சக்கரவர்த்தியானவர் 1525-ம் வருஷத்தில் ஆக்ஸ்பர்ச் பட்டணத்தில் ஒரு சங்கம் கூடவேண்டுமென்று கட்டளையிட்டார்; ஆயினும் தேவயாதபிரகாரம் அதற்குச் சில தடைகள் நேரிட்டமையால் மறுவருஷத்தில் ஸ்பையர்ஸ் பட்டணத்தில் சங்கம் கூடிவரும்படிக்கு ஏதுவாயிற்று; அதற்கு சார்ல்ஸ் என்பவருடைய சகோதரனிய பொடினண்ட் என்பவர் அதிகாரஞ்செலுத்தியாயிருந்தார்; அக்காலத்திலே துருக்கர் யுத்தத்துக்கு வருவதாக ஒரு பிரஸ்தாபம் இருந்திலும், பிரான்ஸ் இங்கிலாந்து தேசங்களின் அரசர்களும் பாப்புவும் சேர்ந்து இராயனுக்கு விரோதமாய் உடன்படிக்கை செய்துகொண்டதினாலும், இந்தச் சங்கத்தில் மார்க்கச் சீர்திருத்தத்தை உண்டாக்கினவர்களுக்கு இடையூறாக ஒரு தீர்ப்பும் பிறவாமல் சமாதானமாயிருந்தது; இன்னொரு பெரிய சங்கம் கூடிவரும்பரியந்தம் மத விஷயங்களில் அவரவர் தங்கள் இஷ்டப்படி நடந்துகொள்ளலாமென்று தீர்ப்புண்டாயிற்று.

Diet at Spires decides that Religious liberty should be observed, A.D. 1525.

இப்படிக் கிலசால் மார்க்கச் சீர்திருத்தத்துக்கு விரோதம் சேர்ந்திருந்தபோதிலும், சக்கரவர்த்தியாகிய சார்ல்ஸ் தன்பலமும் பாப்புவும் இசைகையாய்ப் போய்விட்டதால் சார்ல்ஸ் என்பவர் அதற்கு இடையூறு செய்யும்படி முயன்றார். 1529-ம் வருஷம் ஸ்பையர்ஸ் பட்டணத்தில் இரண்டாம்வகை கூடின சங்கத்தில் மார்க்கச் சீர்திருத்தக்காரர் பட்சபாதப் பிரகாரத் தீர்ப்பு மாறிப்

Second council held at Spires in 1529 reverses this decision.

போனதுமன்றி, பெரிய சங்கம் கூடிவரும்பரியந்தம் எல்லாரும் ரோமச் சபையின் சோட்பாடுகளுக்கு அமைந்த நடக்கவேண்டுமென்று தீர்ப்புண்டாயிற்று.

புரோட்டஸ்ரண்ட் ஸ்பையர்ஸ் பட்டணத்தில் கூடி வரையறுக்கக் கொடிபிடித்தது.

இந்தக் கட்டளைக்கு அநேகர் கீழ்ப்படியமாட்டோமென்று சொன்னார்கள்; விசேஷமாய் சக்சோன் நாட்டுப் பிரபுவும், பிரான்டன்பர்க் பிரபுவும், ஹெஸிகாட்டின் அதிபதியும், லூனம்பர்க் பட்டவர்த்தனருர், இன்னும் அநேக பிரபுக்களும் சக்கரவர்த்தி செய்த அந்தத் தீர்மானத்துக்கு எதிர்த்து நின்றார்கள்; இந்தக் காரணத்தினாலே அக்காலமுதல் இக்காலம்வரைக்கும் ரோமச்சபையை வெறுத்துவிலகினவர்களுக்கு எதிர் மறுத்தவர்கள் என அர்த்தங்கொண்டும் "புரோட்டெஸ்ரண்ட்" என்ற பெயருண்டாயிற்று.

Reformed churches protest against it; hence called Protestants.

இப்படி அநேகம் பிரபுக்கள் சக்கரவர்த்தியினுடைய கட்டளையை நிராகரித்ததினால் அவர் விசனமடைந்து, அவர்களிடத்திலிருந்து வரத்தை நோய்பிடித்து கிலசால்வாக்கும் காலிலிருக்கும்படி கட்டளையிட்டார்; அது புரோட்டெஸ்ரண்ட் பிரபுக்களுக்கு வெகு மனத்

தாங்களே புண்டபண்ணிற்று; இனி சக்கரவர்த்தியினுடைய கோபத்துக்கு விலகவும், தங்களுடைய கேடமலாபத்துக்கும், மார்க்கச் சீர்திருத்தத்தின் அலுகூலத்துக்கும் எற்ற பிரயத்தனங்கள் செய்யவும், யாவரும் பற்றுக்கட்டாய் இருப்பது உத்தமமென்று அவர்கள் கூடிப் பேசிக்கொண்டார்கள்; அதைப்பற்றி முடிவான தீர்ப்புண்டாகுமுன் சக்கரவர்த்தியானவர் சகல ஜர்மன் பிரபுக்களும் குருமாரும் ஒரு சங்கமாகக் கூடிவரும்படி செய்யப்போகிறரென்று பிரஸ்தாபமுண்டாயிற்று; அப்படி அந்தச் சங்கம் கூடுமேயானால் அரசர் தங்கள் தங்கள் இராஜ்யத்துக்கடுத்த காரியங்களைத் தீர்மானித்து, அதன் விபரங்களே சக்சோன் நாட்டின் அதிபதிக்குத் தெரியப்படுத்திக்கொள்ளவேண்டுமென்று ஆலோசனை சொன்னார்கள்.

Combination of the Reformers against common dangers.

ஐந்தாம் சார்ல்ஸ் என்னும் சக்கரவர்த்தியின் உத்தரவுப்படி 1530-ம் வருஷம் ஜூன்மாசத்தில் ஆக்ஸ்பர்க் பட்டணத்தில் ஒரு சங்கங்கூடிற்று; அதில் பாப்புமார்க்கத்தாரும் புரோட்டெஸ்ருண்ட்மார்க்கத்தாரும் விவாதப்பட்டுக்கொண்டிருந்த சகல விஷயங்களையும் பேசித் தீர்க்கும்படி சக்கரவர்த்தியானவர் அபிப்பிராயங்கொண்டு லுத்தரை புரோட்டெஸ்ருண்டருடைய கொள்கைகளேப்பற்றி ஒரு சங்கேபம் எழுதும்படி கட்டளேயிட்டார்; அந்தப்படி லுத்தர் பதினேரு பிரமாணங்களேயெழுங்காய் எழுதி, சக்சோன் பிரபுவுக்குத் தோர்கா என்றவிடத்தில் கொடுத்தார். இதற்கு இதனால் "தோர்கா பிரமாணங்கள்" என்று பேர் வந்தது. இதிலிருந்து ஆக்ஸ்பர்க் விசுவாசப்பிரமாணம் என்று இக்காலமட்டும் வழங்கிவருகிற ஒரு சித்தாந்தம் செய்தார்; இதைச் செய்யும்படி லுத்தருக்கு அநேக வேதசாஸ்திரப் பண்டிதர்கள் உதவியாயிருந்தனர்; விசேஷமாய் மிலாங்தன் என்பவர் அதைப் பிழை திருத்தி கன்ருய் அமையும்படி செய்தார்; இந்தப் பிரபந்தம் இருபத்தெட்டு அதிகாரமாகவிருக்கிறது; இவைகளில் இருபத்தொன்று மார்க்கச் சீர்திருத்திகளின் அபிப்பிராயங்களேயும், மற்ற ஏழும் சோமச் சபையின் தப்பறைகளேயும் எடுத்துக் கூறுகிறது. இதில் விளங்கிய பக்திவிருத்தி வசனங்களேயும், ஆழ்ந்த கருத்துகளேயும், நியாயக் கோர்வைகளேயும் பார்த்துச் சத்துருக்கள்கூட புகழ்ந்து பேசினர்கள்; அக்காலமுதற்கொண்டு புரோட்டெஸ்ருண்டர் இதையே தங்கள் மார்க்க ஆசாரச்சட்டமாய் அறுசரித்துவருகிறார்கள்.

Diet and Confession of Augsburg, A.D. 1530.

இந்தச் சங்கத்தில் திவ்வியநற்கருணேயைப்பற்றிச் சவிங்கல் என்பவருடைய அபிப்பிராயத்தை அங்கீகாரஞ்செய்து கொண்ட பட்டணத்தார் சேர்ந்து மார்ட்டின் பூசரைக்கொண்டு புத்திபூர்வமாய் ஒரு சங்கேபம் எழுதி வரித்தார்கள். பாப்புவானவரோ புரோட்டெஸ்ருண்டருடைய கொள்கைகளே நிராகரிக்கும்படி எக்கியு என்பவனைத் தலேவராக ஏற்படுத்தினர்; இவரும் ரோமாங்மார்க்கத்தின் சாஸ்திரிகளில் இன்னும் அநேகரும் சேர்ந்து சொல்லிய நியாயங்களெல்லாம் சபலமானவைகளும் திப்பிராமில்லாதவைகளுமாயிருந்தன; அதற்கு மிலாங்தன் என்பவரும் இன்னும் மற்றவர்களும் கொடுத்த எதிர் உத்தாரங்கள் பிற்காலத்தில் பிரசுரமாயின.

Helvenistic Churches also read a Confession prepared by Martin Bucer.

சங்கத்தாருக்குமுன் அந்த விசுவாசப்பிரமாணம் வாசிக்கப்பட்டபோது, சக்கரவர்த்தியும் மற்றப் பிரபுக்களும் அதை மெத்த கனமாய்ச் செவிகொய்துக் கேட்டுக்கொண்டிருந்ததால், புரோட்டெஸ்ருண்டர் பட்சமாய்த் தீர்ப்புப் பிறக்குமென்று பிரஸ்தாபமுண்டாயிற்று; ஆயினும் அவர்களில் அநேகர்கள் நினேத்திருந்தபிரகாரம் காரியம் வாய்க்கவில்லே; சக்கரவர்த்தியானவர் தமது பிரஜைகள் யாவரும் மதவிஷயங்களில் பாப்புவுக்குக் கீழடங்கி நடக்கவேண்டுமென்றும், அதற்கு விரோதஞ்செய்பவர்களுக்கு இராஜதண்டனேயுண்டாகும் என்றும் தீர்மானஞ்செய்தார்.

Council decide that Pope's supremacy should be acknowledged in ecclesiastical matters.

சங்கம் கலேந்தபிற்பாடு புரோட்டெஸ்ருண்ட் பிரபுக்களெல்லாரும் இனிமேல் தங்கள் காரியம் பலப்படுவதற்கு வேண்டிய முயற்சிகளே ஒருமித்துச் செய்வது உத்தமமென்று யோசனேபண்ணிக் கொண்டு, காலதாமதம் செய்யாமல் அந்த ஒரு வருஷக் கடைசியில்தானே ஸ்மால்க்கால்ட் என்னும் இடத்தில் எல்லாரும் கூடிவந்து மதவிஷயத்தைப்பற்றிய சுயஇஷ்ட சலக்கரணேயைக் காத்துக்கொள்ளும்படி "ஸ்மால்க்கால்ட் உடன்பாடு" என்று பெயர்வழங்கிய பந்தக்கட்டான ஓர் ஒப்பந்தம் பண்ணிக்கொண்டு பிரான்ஸ், இங்கிலாந்து, டென்மார்க் தேசங்களி

Protestant princes met at Smalcald, bind themselves to support religious liberty.

ளுள்ள சிரோதிபதிகளுக்கு எழுதி இதற்கு உத்விசெய்யும்படி கேட்டுக்கொள்ளவேண்டுமென்று தீர்மானஞ்செய்தனர்.

இவர்கள் தங்கள் கட்சி ஸ்திரப்படும்படி இத்தப் பிரயத்தனங்களைச் செய்திருக்கிறார்களென்று சக்கரவர்த்திக்குத் தெரியவந்தபோது, அவர் மிகவும் விரைவாய் சமரசம்பண்ணி, அக்காலத்தில் துருக்கர் படையெடுத்துவருவதைப்பற்றி மனங்கலங்கி இருக்கிறதினாலே, புரோட்டெஸ்ருண்ட் பிரபுக்களை விரோதித்துக்கொள்வது புத்தியல்லவென்று அறிந்து, 1532-ம் வருஷத்தில் நூரம்பர்க் பட்டணத்தில் அவர்களோடே சமாதான உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்; அதனாலே உர்ம்ஸ் பட்டணத்திலும் ஆக்ஸ்பர்க் பட்டணத்திலும் கூடின சங்கத்தார் செய்த தீர்மானங்கள் மாறிப்போக, இனி ஒரு பெரிய சங்கம் கூடிவரும்பரியந்தம் மார்க்கச் சீர்திருத்தர் சபைக்குரிய காரியங்களைத் தங்கள் இஷ்டப்படி கடத்திக்கொள்ள வதுவாயிற்று. நூரம்பர்க் பட்டணத்தில் ஏற்பாடாகப்பட்ட இந்த மார்க்கச் சமரச உடன்படிக்கையினால் புரோட்டெஸ்ருண்டர் அதிக தைரியமடைந்து, தங்கள் கொள்கையை எதிர்க்கும் பிரசித்தஞ்செய்துவந்தார்கள்; இதற்குமுன் பாப்புவுக்குப் பயந்துபோயிருந்த அநேகம்பேர் புரோட்டெஸ்ருண்டர் பட்சத்தில் சேர்ந்து அவர்கள் உபதேசங்களைப் பரிசுத்தமாய் அங்கீகரஞ்செய்தனர்.

Emperor concluded a treaty of peace with the Protestants at Nuremburg, A.D. 1532.

நூரீம்பர்க் பட்டணத்தில் கூடின இந்தச் சமாதான உடன்படிக்கையினால் மார்க்கச் சீர்திருத்தத்துக்கு அனுகூலமுண்டாயிருந்தபோதிலும், அதனாலே மத விஷயத்தைப்பற்றியுள்ள சல்லியங்கள் முழுவதும் அற்றுப்போகவில்லை; பெரிய சங்கம் ஒன்று கூடினால்தான் காரியங்கள் ஒழுங்காகுமென்று சக்கரவர்த்தி அறிந்து, வழாம்இறைமென்று என்னும் பாப்புவினிடத்தில் அதைப்பற்றி ஓயாமல் பேசிவந்தார்; அவருடைய அலட்டுப் பொறுக்கமாட்டாமல் பாப்புவானவர் வேண்டாவெறுப்பாய் இத்தாலியிலுள்ள மாநகரமாகிய மாந்துவா என்னும் இடத்தில் இந்தச் சங்கம் கூடுவசேண்டுமென்று கட்டளையிட்டார்; அப்படிக் கூடுவதற்குமுன் வழாம் இறைமென்த என்னும் பாப்புவானவர் 1534-ம் வருஷத்தில் இறந்துபோனார்; அவருக்குப்பின் மூன்றாம் பவுல் என்பவர் பாப்புப்பட்டம் பெற்றார்.

Clement VII summons a council at Mantua, A.D. 1534.

இதனாலே பெரிய சங்கம் கூடுவது சந்தேகத்திலுமல்லோ இருக்கிறதென்று சக்கரவர்த்தி நினைத்து, உர்ம்ஸ் பட்டணத்தில் திலைக் கூட்டி அவர்கள் முன்பாக விவாதப்படுகிற பட்சத்தாரைச்சேர்ந்த பெரியவர்கள் மார்க்க சம்வாதம் செய்யும்படி கட்டளையிட்டதால் எல்லாச் சல்லியங்களும் நீங்கிப்போகுமென்று நினைத்தார்; அந்தப்படி 1541-ம் வருஷத்தில் எக்கியு என்பவரும், மிலாங்த்தன் என்பவரும் ஒருவரோடொருவர் அநேகநாளாய்த் தர்க்கம்பண்ணியும் ஒரு பயனு மில்லாமற்போயிற்று; காரியம் இப்படியிருக்கும்போது பாப்புவானவர் திரென்ற் பட்டணத்தில் ஒரு சங்கம் கூடவேண்டுமென்று தீர்மானித்தார்; இந்த இடம் ஜர்மன் ராஜ்யத்தில் அடங்கினதாயிருந்தும், அதுவும் புரோட்டெஸ்ருண்டருக்கு நிர்ப்திசமப்படவில்லை; அதனாலே சக்கரவர்த்தி கடுங்கோபமாகி, திரென்ற் பட்டணத்தில் கூடும் சங்கத்துக்கு நாமாட்டோம் என்றுவது, அதன் தீர்ப்புக்கு இணங்கி நடக்கமாட்டோம் என்றுவது சொல்லுகிற ராஜ்யத்தாரோடு யுத்தஞ்செய்வோமென்று விளம்பரம்பண்ணினார்.

Emperor orders a conference to be held at Worms, A.D. 1541.

புரோட்டெஸ்ருண்டருடைய சீர் நிருவாகங்கள் இவ்வளவு தொல்லையிலிருக்கும்பேது, லுத்தர்என்பவர் 1546-ம் வருஷம் பிப்ரவரிமாதம் 28-ம் தேதி ஒரு சங்கக் கூட்டமாக ஐஸ்லேபன் ஊருக்குப் போனார்.

Luther dies, A.D. 1546.

பெப்ரவரிமாதம் 17-ம் தேதி வரையில் சங்கத்தில் பேசி சமாயிருந்தார். காலுரசம் பிரசங்கம் செய்தார். 17-ம் தேதி இரவு சுகவீனமாயிருந்ததால், இராச்சாப்பாடு நடக்கும்போது தமது மரணத்தைப்பற்றி அதிகம் பேசினார். மறு உலகத்தில் நாம் இன்னின்னுரென்று அறியக்கூடுமாவென்று ஒருவர் கேட்டபோது, லுத்தர் ஆம் என்றார். இரவில் நாக்கம் அதிகம் வரவில்லை. காலையாய் அவர் செய்த ஜெபம் என்னவென்றால், பிதாவே, உமது குமாரனை எனக்கு வெளிப்படுத்தியதற்காக ஸ்தோத்திரம், நான் இவ்வுலகத்தை விட்டுப் பிரியப்போகிறேன், உம்மோடு சதாகாலமும் இருக்க வருகிறேன், என் ஆவி

யை உமது கரத்தில் ஒப்புவிக்கிறேன், சத்தியபரனுடைய கர்த்தாவே, நீர் என்னை மீட்டுக்கொண்டீரென்று கனிவாய் ஜெபம்செய்து, பெப்ரவரிமாசம் பதினெட்டாந்தேதியில் தமது ஜனனஊராகிய ஈஸ்லேபனிலே மிருந்த சமாதானமாய் இறந்துபோனார்; அந்த ஆபத்தான காலத்தில் லூத்தர் இருந்து மார்க்கச் சீர்திருத்த விஷயத்தைப்பற்றி வேண்டிய யோசனையைச் சொல்லுவாரொன்று ஜனங்கள் நினைத் திருந்தும், திருவுள்ளம் அப்படி நினையாமல் இந்தச் காரியம் தம் முடையதென்றும், அதை நடத்துவதற்கு வேண்டிய யோக்கிய புருஷரைத் தெரிந்துகொள்வது தமது செயலென்றும் காட்டிப் பொருட்டு, அத்தர்மாமுனியைப் பரமபதவியில் சேர்த்துக்கொண் டார். லூத்தரின் மரணம் திடீரென்று நடந்தது. அவருடைய மனைவி அவர் சமீபத்தில் இல்லை. மரிப்பேனென்று நினைத்திருந்த இடம் அதுவல்ல. இப்படியே தேவனுடைய ஊழியக்காரர் அடிக்கடி அவர்கள் நினையாத நேரத்திலும் நினையாத இடத்திலும் கர்த்தருடைய இராஜ்யம் சேர்ந்துவிடுவதுண்டு. அத்தரின் சரீரத்தை வெகு அலங் காரத்தோடு வண்டியிலேற்றி உவிற்றன்பர்க் என்ற இடத்திற்குக் கொண்டுபோய்த் தேவாலயத்தில் அடக்கஞ்செய்தார்கள். அடக்கஞ் செய்தபோது மிலாங்தன் என்பவர் சாதுரியமாய்ப் பிரசங்கம் செய்தார்.

அவர் மரணமடைந்த அவ்வருஷத்திலேயே திரென்ற் பட்டணத் தில் சங்கம் கூடின. ரோமக்சபையின் உபதேச சங்கதிகளுக்கும், மற்ற சட்டதிட்டங்களுக்கும் சார்பான அநேக தீர்மானங்கள் செய்து பிரசி தப்படுத்த ஆரம்பித்தனர்; இந்தச் சங்கத்தில் ஆறு கார்டினல்மாரும், மூப்பத்திரண்டு மேற்றிராணிகளும், இருநூற்று இருபத்தெட்டு கண் காணிகளும், குருமாரில் அநேகம்பேரும் கூடிவந்தார்கள்; இவர்கள் சபையை ஒழுங்குபடுத்தவும், குருமாருடைய ஆசார ஒழுக்கங் களைச் சீர்ப்படுத்தவும் வேண்டுமென்ற நோக்கமாய்க் கூடிவந்தபோதி லும், அப்படி சபையின் நன்மைக்கேற்ற ஒழுங்கு செய்யாமல் பாப்பு வின் அதிகாரம் ஸ்திரமடைவதற்கேற்ற முயற்சிகள் செய்தார்கள்; இந்தச் சங்கத்தில் வல்கட் என்று பெயருள்ள சத்தியவேதத்தின் லத் தின் மொழிபெயர்ப்பு மிகவும் எதார்த்தமானதும் பூர்ணமானதுமா யிருக்கிறதென்றும், பாப்புவானவர்மாத்திரம் வேதத்தின் சரியான கருத்தை அறிந்து விளக்குகிற சக்தியுடையவரென்றும், சத்தியவேதம்

Council of Trent assembles the same year.

போதகர்களுக்கேயன்றி மற்றவர்களுக்கு உபயோகமாக எழுதியிருக்க வில்லை என்றும், பாரம்பரை நியாயங்கள் தேவவசனத்துக்கு ஒத்த அதிகாரமுள்ளவைகளென்றும் தீர்மானித்தார்கள்.

திரென்ற் பட்டணத்தில் கூடின சங்கத்தாருக்கு மதவிஷயங்க ளில் இப்படிப்பட்ட அதிகாரமில்லையென்ப தாகப் புரோட்டெஸ்ருண்டர் இராத்திஸ்பன் என்னும் இடத்தில் சங்கம்கூடி நிராகரித்தார் கள்; இதனிமித்தம் சக்கரவர்த்தி அவர்களே அடக்கவேண்டுமென்று ஒரு பெரிய சேனையோடே புறப்பட்டுப்போனார்; புரோட்டெஸ் ருண்டர் வெகு தைரியமாய் யுத்தஞ்செய்தபோதிலும், சக்சோன் காட்டி அதிபதிக்கு மருமகனுயிருந்த (Maurice) மாரிஸ் என்பவர் கல்ல சமயத்தில் சக்கரவர்த்திபோடே சேர்ந்துகொண்டமையால் அவர்கள் கை விழுந்துபோயிற்று; 1547-ம் வருஷம் ஏப்பிரல்மாசம் இருபத்துநாலாந் தேதியில் மூல்பர்க் என்ற இடத்தில் யுத்தம் நடந்த போது புரோட்டெஸ்ருண்டர் தோல்வியடைந்தனர்; சக்சோன்காட் டின் அதிபதியாகிய யோவான் என்பவர் கைதியானார்; ஹெஸ்நாட் டின் அதிபதி சக்கரவர்த்தியினிடத்தில் தம்மை ஒப்புக்கொடுத்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்; மாரிஸ் என்பவர் சக்சோன்நாட் டுக்கு அதிபதியானார்.

Emperor compels the Protestants to submit, A.D. 1547.

இப்படிப் புரோட்டெஸ்ருண்டர் மடங்கிப்போனது பாப்பு மார்க்கத்தாருக்கு அதிகச் சந்தோஷமாயிருந்தது; அதற்குப் பிற்பாடு ஆக்ஸ்பர்க் பட்டணத் தில் கூடின சங்கத்தில் சார்ல்ஸ் என்னும் சக்க ரவர்த்தி புரோட்டெஸ்ருண்டரைப் பார்த்து: நீங்கள் வாதிக்கிற விஷ யங்களைத் திரென்ற் சங்கத்தினுடைய தீர்ப்பின்படி ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கேட்டபோது, அவர்களில் அநேகர் அப்படியே செய்வோமென்று உடன்பட்டார்கள்; ஆயினும் திரென்ற் பட்டணத் திலே ஒரு கொள்ளைவியாதி உண்டானதினாலே யாதொரு தீர்மானம் உண்டாகாதற்குமுன் சங்கம் குலைந்துபோயிற்று.

A Plague disperses the council of Trent.

இப்படிப் புரோட்டெஸ்ருண்டருடைய விவாதம் சீக்கிரம் தீர்ந் துபோகுமென்ற நம்பிக்கை கெட்டுப்போன தினால் சக்கரவர்த்தி அவைத் தாமாய்த் தீர்த்துப் போடவேண்டுமென்று உத்தேசம் செய்து கொண்டு, ஒரு சங்கம் கூடிவரும்பரியந்தம் இருபட்சத்தாருக்கும்

Emperor draws up a rule of Faith called the 'Interim.'

பொதுவான விசுவாசப்பிரமாண சட்டம் ஒன்று எழுதும்படி கட்டளை யிட்டார்; இது கொஞ்சக்காலத்துக்குண்டான ஏற்பாடானதால், இதற்கு மத்தியகால ஒழுங்கு என்று அர்த்தங்கொள்ளுகிற "இன்ற ரிம்" என்று பெயருண்டாயிற்று; இன்றுமும் இது இருபட்சத்தாருக் கும் சமாதானப்படவில்லை; அதனாலே தேசமெங்கும் கலகமும் இர ணைகளும் உண்டாயின; மேற்சொன்ன விசுவாசப்பிரமாண சட் டம் பாப்புமார்க்கத்தாருக்குச் சலாக்கியப்பட்டதாகவே யிருந்தது; அதில் ரோமச்சபையினுடைய முக்கிய உபதேசங்களெல்லாம் அட ங்கியிருந்தன; ஆயினும் அவைகள் யுக்தியாயும் சொற்சுவையாயும் எழுதியிருந்தன; புரோட்டெஸ்ருண்டருக்கு இடமிய கற்கருணை யில் இரசம் கொடுக்கும்படி கற்பித்திருந்தது; குருமார் விவாகம்பண் ணிக்கொள்ளலாமென்ற சட்டமுமிருந்தது; இப்படியெல்லாமிருந்த தும் இருபட்சத்தாருக்கும் கோபிட்டிருந்த விவாதங்கள் சோதனைகளும் யுத்தமும் போருமுண்டாயிற்று.

Reformers assemble at Leipsic to consider these matters, A.D. 1548.

1548–ம் வருஷத்தில் மார்க்கச் சீர்திருத்தரில் பிரதானமானவர் தங்களுக்கிருந்த ஆபத்தான நிலைமையைப் பற்றி ஆலோசிக்கும்படி லிப்சிக் பட்டணத்தில் கூடிவந்தார்கள்; இன்ற்ரிம் என்றும் சட்டத்தைப்பற்றி மிலாங்தன் என்பவருடைய அபிப்பிராயத்தைக்கேட்டபோது, அவர்மார்க் சித்தைச்சேர்ந்த முக்கிய விஷயங்களிலே மற்றவைகளை அலக்ஷி த்துக்கொள்ளலாமென்று சொன்னார்; அவருடைய அபிப்பிராயத் தை அநேகர் அங்கீகரித்துக்கொண்டார்கள்; சிலர் அதற்குக் குற்றம் கூறினார்கள்; இதனாலே அவர்களுக்குள் பிரிவினையுண்டாயிற்று.

A general council again assemble in Trent, A.D. 1552.

இவ்வளவு தர்க்கங்களும் வாக்குவாதங்களும் நடந்துவருகாலத் தில் மூன்றாம் பவுல் என்னும் பாப்புவானவர் 1549–ம் வருஷம் இறந்துபோனார்; அவ்ரு டைய பட்டத்தை மூன்றாம் ஜூலியஸ் என்பவர் பெற்றுக்கொண்டார்; இவரைச் சக்கர வர்த்தி வருந்திக் கேட்டுக்கொண்டதினாலே, 1551–ம் வருஷத்தில் திரெந்த் சங்கம் மறுபடியும் கூடிவரும்படி உத்தரவுசெய்தார்; 1563–ம் வருஷத்தில் கூடிய கடைசிச்சங்கத்துக்குமுன் மறு இருபத் தைந்துமுறை கூடிவந்தது.

Emperor concludes a treaty at Passau.

சக்சோன்நாட்டின் அதிபதியையும், ஹெசிநாட்டின் அதிபதி யையும் விடுதலைசெய்யவேண்டுமென்று ஜர்மன் தேசத்துப் பிரபுக்களும், ஐரோப்பா கண் டத்தில் எங்குமுள்ள பெரியோர்களும் சக்கரவர்த்தியினிடத்தில் வருந்திக் கேட்டுக்கொண்டபோதிலும், அவர் அவ்விருவரையும் காவற்படுத்தி வைத்துக்கொண்டேயிருந்தார்; காரியம் இப்படியிருக்கும்போது சக்சோன்நாட்டின் அதிபதிக்கு மருமக னாயிருந்த மாரிஸ் என்பவர் ஜர்மன்தேசத்தின் சுயேச்சாதிகாரத்தினை குலைக்கும்படி சக்கரவர்த்தி அபிப்பிராயங்கொண்டிருக்கிறதை யறிந்து, இன்ஸ்ப்ரக் என்னும் ஊரில் சார்ல்ஸ் என்பவர் இருக்கும்போது, மாரிஸ் என்பவர் ஒரு சேனையோடே திடீரென்று ஆவாப்போல் வளைத்துகொண்டதினாலே, சக்கரவர்த்தி வலையில் அகப்பட்ட மான்போல் தப்பிக்கொள்ள வழியில்லாதது கண்டு, ஆபத்துக்குப் பாபமில்லை என்று சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார்; கொஞ்சக்காலத்துக்குப்பின் சக்கரவர்த்தியானவர் அந்த உடன்படிக்கையை பாசா என்ற பட்டணத்தில் உறுதிப்படுத்தினது மன்றி, மதவிஷயத்திலுண்டான சகல பிரிவினைகளையும் தீர்த்தி செய்யுமொருட்டு, இன்னும் ஆறுமாசத்துக்குள் ஒரு சங்கம் கூடும் படி கட்டளை கொடுப்பேனென்று வாக்குங் கொடுத்தார்.

Another treaty formed in Augsburg, called the 'Peace of Religion', A.D. 1555.

இப்படிச் சக்கரவர்த்தியினுடைய வாக்கின்படி சங்கம் கூடிவரு தற்குப் பல தொந்தரவுகளாலே தடையுண்டா யிருந்தது; பிற்பாடு 1555–ம் வருஷத்தில் ஆக் ஸ்பர்க்பட்டணத்தில்சங்கம்கூடிவந்தது; அதற் குச் சக்கரவர்த்தியின் அனுமதியின்படி பெர்டி னண்ட் என்பவர் அக்கிராசனாதிபதியாயிருந் தார்; கெருகாலமாய்ச் சபைக்கும் இராஜாங்கத்துக்கும் உண்டாயிருந்த தொல்லைகளும், தாணைகளையுத்தங்களும் இந்தச் சங்கத்தினால் முடிந்து போயின: மார்க்க சமரச சித்தாந்தம் என்னும் பெயரால் ஒரு உடன் படிக்கையுண்டாயிற்று; புரோட்டெஸ்ருண்டருக்கு யிருந்த சலாக்கி யங்களை வருவித்த இந்த உடன்படிக்கைப்பத்திரம் 1555–ம் வருஷம் செப்டெம்பர்மாசம் இருபத்தைந்தாந்தேதியில் எங்கும் விளம்பரமா யிற்று; அதில் ஆக்ஸ்பர்க் அறிக்கையை அனுசரித்து உடனே புரோட் டெஸ்ருண்டோர்க்கட்சியார், இனிமேல் ரோமாபுரிப் பாப்புவினுடைய ஆளுகைக்கும் அதிகாரத்துக்கும் முற்றும் மீறினவர்களென்றும்,

அவர்கள் தங்கள் சபை ஒழுங்குகளுக்கும், தேகாராதனைகளுக்கும் வேண்டிய சட்டதிட்டங்களை தாங்களே செய்துகொள்ளலாமென்றும், ஜர்மன் இராஜ்யத்திலுள்ள சகல பிரஜைகளும் மதவிஷயத்தில் தங்கள் தங்கள் இஷ்டப்படி நடந்துகொள்ளலாமென்றும், மார்க்கத்தைச் சாக்கிட்டுத் துன்பம் செய்கிறவர்களுக்குத் தண்டனை வரும் என்றும் கண்டிருந்தது.

நான்காம் பாகம்.

எட்டாம் ஹென்ரிராஜன் காலத்தில் மார்க்கச் சீர்திருத்தம் ஆரம்பித்தல். இவ்வரசன் தன் மனைவியாகிய கத்தரினை நடத்தின விதம். சபைக்குச் தலை வனுகுதல். மார்க்கச் சீர்திருத்தத்துக்கு அனுகூலமாயிருந்தவர்கள். சன்னியாசமடங்கள் அழிதல். ஹென்ரி மரிக்குதல். ஆரும் எட்வார்ட்ராஜன் காலத்தில் மார்க்கச் சீர்திருத்தம் விர்த்தியடைதல், அதற்குச் சார்பாயும் விரோதமாயும் இருந்தவர்கள். ஜனங்களின் அறிவு விர்த்திக்குச் செய்யப்பட்ட முயற்சிகள். ஜெபபுஸ்தகம். வேதமார்க்கப் பிரமாணங்கள். ஆரும் எட்வார்டுக்குப்பின் மரியாள் இராஜபட்டம் பெறுதல். மார்க்கச் சீர்திருத்தருக்கு விரோதமாய் அவள் செய்த கொடிய நிர்ப்பந்தனைகள். கார்டினல் போல் என்பவர் பாப்புமார்க்கத்தைத் திரும்ப ஸ்தாபித்தல். இரத்தசாட்சிகள். ராஜீன், ரிட்லி, லாத்திமர், பிரான்மர் முதலானவர்கள். எலிசபேத்த பட்டம் பெறுதல். மார்க்கச் சீர்திருத்தத்தின் விர்த்தி. பியூரிட்டானர். எலிசபேத்தின் மரணம்.

இங்கிலாந்து தேசத்தில் நடந்த சபை சீர்திருத்தம்.

ஐரோப்பா கண்டத்திலுள்ள மற்றத் தேசங்களில் சீர்திருத்தமுண்டானதுபோல் இங்கிலாந்துதேசத்திலும் உண்டாயிற்று; அது எட்டாம் ஹென்ரி என்னும் அரசன் காலத்தில் ஆரம்பமாயிற்று; இவர் சாமர்த்தியமும் நிறமையுமுள்ளவராயிருந்தும், குணக்கேடனும் துன்மார்க்கத்தில் தேறினவனுமாயிருந்தார்; மார்க்கச் சீர்திருத்தம் ஆரம்பித்தகாலத்தில் அவர் அதற்கு விரோதியாக எதிர்பட்டு, ஜுத்தருக்கு எதிர்பாராட்டி வழு சாக்கிரமெந்தஞ்சுக்குச் சார்பாக மார்ட்டின் லுத்தர் என்பவனை விரோதித்து எழுதிய பிரபந்தமென்று ஒரு நூல் எழுதினார்; அதனால் பாப்புவானவர் அவர்பேரில் அதிகப் பிரீதிமோகி, அவருக்கு (Defender of the Faith) பக்திபரிபாலன் என்ற பட்டமும் கொடுத்தார்; அதுமுதல் இங்கிலாந்து தேசத்து அரசர்களுக்கு அந்தப் பட்டம் சுதந்தரமாய் கொடுத்தும் வழங்கிவருகிறது.

Reformation in England during the reign of Henry VIII.

அக்காலத்தில் ஹென்ரி என்பவருக்கு கத்தரின் என்பவள் பத்தினியாயிருந்தாள்; அவன் அவர் தகமையான ஆர்தரின்பெண்சாதியும், ஐந்தாம்சார்ல்ஸ் என்னும் சக்கரவர்த்திக்குச் சிறிய தாயுமாயிருந்தவள்; ஹென்ரி என்னும் அரசன் தன்னிலும் அதிக வயதுசென்றவளாயிருந்த அவளைக் கைவசப்படுத்திக்கொண்டு பதினேட்டு வருஷகாலமாய் அவளோடு வாழ்ந்திருந்ததுமன்றி, அவளால் சில பிள்ளைகளையும் பெற்றார்; அவர்களில் மேரி என்ற இந்தாளி ஒருத்திதவிர மற்றவர்கள் சிறுவத்திலேயே இறந்துபோனார்கள். பிற்பாடு அவள் விருத்தாப்பியமாய்ப் போய்விட்டதால் அவளுடைய பாங்கிமார்களில் ஒருத்தியும், மகா சவுந்தரவதியுமாயிருந்த ஆன்போலின் என்னும் ஒரு வாலிப ஸ்திரீயின்பேரில் மையல்கொண்டு அவளை விவாகஞ்செய்யும்படி யோசனைசெய்தார்; அந்த யோசனை பூர்த்தியாகும் பொருட்டு தாம் தமது சகோதரன் மனைவியை விவாகஞ்செய்துகொண்டது நியாயமல்லவென்றும், அவளைத் தள்ளிவிடும்படி ஒரு பத்திரம் தரவேண்டுமென்றும் ஏழாம் கிளெமெந்தென்னும் பாப்புவைக் கேட்டுக்கொண்டார்; அவர் அப்படிச் செய்தால் ஜர்மனி சக்கரவர்த்தியுடைய விசனம் தனக்கு வருமென்று நினைத்து, அநேகம் சாக்குப்போக்குகளைச் சொல்லி காலதாமதம் செய்துகொண்டுவந்தார்; பிற்பாடு அரசன் அதிகமாய் நெருக்கிக் கேட்டதின்பேரில் கத்தரினையே செய்த விவாக சம்பந்தம் சரியானதென்று பாப்புவானவர் தீர்மானித்து, இராஜன் மனைவாஞ்சைகொண்ட காதலியாகிய ஆன்போலினை விவாகஞ்செய்வது தகாதென்று தடுத்தார்.

Henry's conduct towards Catherine.

பாப்பு இப்படி முடிவான உத்தரவு சொல்லுமுன் லுத்தருக்கு இரகசிய ஒற்றேதரும், இங்கிலாந்தில் மார்க்கச் சீர்திருத்தத்துக்கு அநுகாரியுமாயிருந்த தோமாஸ் பிராண்மர் என்னும் ஒரு குருவானவர் அதுவிஷயத்தைப்பற்றி ஐரோப்பா கண்டத்திலுள்ள வித்தியாசாலைகளிலிருக்கும் வேதசாஸ்திரப் பண்டிதர்களிடத்தில் தெரியப்படுத்தும்படி அரசனுக்கு ஆலோசனை சொன்னார்; அவர் அந்த யோசனைப்படி செய்யவே, அந்தப் பண்டிதர்களில் அநேகர் இராஜன் செய்த விவாக சம்பந்தம் முறையல்லவென்றும், அவர் தமது இஷ்டப்படி வேறொரு ஸ்திரீயை விவாகஞ்செய்துகொள்ளலாமென்றும் தீர்மானித்தனர்; அதன்பேரில் அரசன் பாப்புவின்மேல் அதிக மனஸ்தா

He becomes head of the Church, A.D. 1533.

பமாகி, அவர் தீர்ப்பைச் சிறிதேனும் மதியாமல் தலைமைச்சற்றி எதிர்த்துவிட்டு, வேதசாஸ்திரப் பண்டிதருடைய தீர்ப்பின்படி கத்தரின் என்பவளைத் தள்ளிவிட்டு ஆன்போலின் என்பவளை மணம்புரிந்து கொண்டார்; எலிசபேத்து இந்த விவாகத்தால் பிறந்த பிள்ளை. அது முதல் இங்கிலாந்துதேசத்தில் பாப்புவின் அதிகாரத்தைத் தள்ளி, இங்கிலாந்து சபைக்குத் தானே தலைவனென்று பிரசித்தஞ்செய்தார்; இது 1533–ம் வருஷம் நடந்தது.

Principal promoters of Reformation.

ஹென்றி இராஜாவுடைய காலத்தில் இங்கிலாந்து தேசத்திலே மார்க்கச் சீர்திருத்தம் கொஞ்சங்கொஞ்சமாய் நடந்துவந்தது; பாப்புவினுடைய அதிகாரம் அரசனுக்குண்டானதும், வேதபுஸ்தகம் பிரபலமானதும், சன்னியாசிமடங்கள் ஒழிந்துபோனதுமேயன்றி, மற்ற விஷயங்களிலெல்லாம் பாப்பரசய வீண்புரளி நிலைகுலையாமலிருந்தது; அல்லாமலும் இராஜாவுடைய பிரமாணத்தை விட்டு மார்க்கச் சீர்திருத்தத்தை நடத்தத் தவிர்த்தவர்களுக்கு அதிக இம்சையுண்டாயிற்று; கல்வியில் மிகவும் தேர்ந்தவராயிருந்த தோமாஸ் மொன்மர் என்பவர் கான்றர்புரியின் சிரேஷ்ட அத்தியட்சரானது சன்னிய பரிபாலனத்துக்கு மிகவும் அனுகூலமாயிருந்தது; அவர் வேதத்திலுள்ள முக்கிய உபதேசங்களைச் சரியாய்க் கிரகித்துக்கொள்ளும்படிக்கேற்ற மனத்தெளிவுடையவராயும், மார்க்கச் சீர்திருத்தம் செழிக்கியாகும்படி அதிக முயற்சிசெய்தவராயு மிருந்தார்; இதற்கு ஆன்போலின் என்னும் புதிய அரசி சகாயமாயிருந்தாள்; மொன்மர் என்பவர் வேதபுஸ்தகங்களைத் தேசமென்னும் பிரசித்தமாக்கினால் ஜனங்களுக்குப் பிரயோசனமாயிருக்குமென்று நினைத்து, 1534–ம் வருஷத்தில் சன்னியவேதத்தை இங்கிலீஷில் மொழிபெயர்க்கும்படி ஒரு சட்டம் பிறப்பிக்கவேண்டுமென்று இராஜாவைக் கேட்டுக்கொண்டார்; அரசன் அதற்குச் சம்மதித்தினாலே சன்னியவேதம் எங்கும் பிரபலமாயிற்று; ஜனங்கள் அதைக் கேட்கும்படி கோவில்களுக்கு வசாளமாய்க் கூடிவருவார்கள். சன்னியவேதம் சுபபாஷையில் திருப்பப்பட்டதும் மிகவும் கவனிக்கப்படத்தக்கது. பழைய ஏற்பாடு முதலில் எபிரெயு பாஷையிலும் புதிய ஏற்பாடு கிரேக்கைப் பாஷையிலும் எழுதப்பட்டிருந்தது. கலாம் நூற்றண்டில் ஜெரோம் என்பவர் சன்னியவேதத்தின் ஏற்பாடுகளை லத்தின் பாஷையில் மொழிபெயர்த்தார். அதற்கு வல்கேட் என்று பெயர். உவிக்லிவ் என்பவர் 1380–ம் வருஷம்

இங்கிலீஷில் திருப்பினார். இது பழையகாலத்து இங்கிலீஷ் நடை. 1526–ம் ஜோ பின்டேல் என்பவர் புதிய ஏற்பாட்டை இங்கிலீஷில் திருப்பி முதல்விசையாய் அச்சடித்தார். 1535–ம் ஜோ கவர்டேல் முழுவேதாகமத்தையும் இங்கிலீஷில் அச்சிட்டார். 1540–ம் ஜோ ரொன்மர் என்பவரின் பெரிய வேதாகமம் புதுத் திருப்புதலாய் அச்சிடப்பட்டு தேவாலயங்களில் வைக்கப்பட்டது. இப்படி திருப்பப்பட்ட இந்த அருமையான புஸ்தகம் ரோமை குருக்களின் வெறுப்பினால் அகோரதாம் கெருப்பினால் சுட்டெரிக்கப்பட்டது. ஆயினும் கெருப்பினாலும் இது ஒழிந்துபோகாமல் உலகமெல்லாம் பரம்பி வருகிற இந்த ஒருவிஷயம் கிறிஸ்துமார்க்கம் தேவனால் உண்டான மார்க்கமென்றும், வேதபுஸ்தகம் தேவன் மனிதருக் கருளிச்செய்த சுத்த சத்தியவேத மென்பதற்கும் பலத்த ருபகாரமல்லவா!

Destruction of the monasteries.

இதற்குப்பின் ரொன்மர் என்பவர் சன்னியாசிமடங்களை ஒழித்துவிடும்படி பிரயத்தனஞ் செய்தபோது அரசன் அதற்கும் உடன்பட்டார்; 1535–ம் வருஷத்தில் அவர் அந்தச் சன்னியாசி மடங்களைப் போய்ப் பார்வையிட்டபோது அவைகள் விக்கிரகாராதனைக்கும், கொலைமக்குட, பேருணவுமுதலான தோஷங்களுக்கும் எடங்கொடுத்தென்றும், அவைகளை ஒழித்துவிடுவது நியாயமென்றும் கண்டார். அதைப்பற்றி அவர் அரசனுக்குத் தெரிவித்தபோது, அவர் சன்னியாசி மடங்களில் சிறியவைகளையெல்லாம் இடித்துவிடும்படி கட்டளை யிட்டார்; அதனால் முந்நூற்றெழுபத்தாறு மடங்கள் அழிந்துபோயின; இராஜாவுக்கு லட்சம் ரூபாய் பெறுமான பண்டபதார்த்தங்களும் பணங்களும் கைக்குவந்ததுமன்றி, வருஷத்துக்கு மூன்று லட்சம் ரூபாய் வருமானமுமுண்டாயிற்று; பதினாயிரம்பேருக்கு அதிகமான சன்னியாசிகள் சபையோடே சேர்ந்துபோனார்கள்; இது கடந்து கொஞ்சகாலத்துக்குள் பெரிய மடங்கள் ஒழிந்துபோகவும் சேரிட்டன; 1537–ம் வருஷமுதல், 1539–ம் வருஷம் வரையும் அறுநூற்று நாற்பத்தைந்து சன்னியாசிமடங்களும், மூன்றூறு கல்விச்சாலைகளும் மண்மேடாய்ப் போனதுமன்றி, அவைகளிலிருந்த இரவியங்களும், மானியங்களும், பட்டுப்பட்டாவளிகளும் இராஜாவின் பொக்கிஷத்தைச் சேர்ந்துபோயின.

ஹென்ரி என்னும் அரசன் நடப்பித்துவந்த இந்த வர்த்தமானங்களெல்லாம் ரோமாபுரி பாப்புவுக்கு வர்தெட்டினபோது, அவர் கடும்

கோபமாகி ஹென்ரி என்பவர் பூமியில் கிறிஸ்துவின் பிரசாதிகாரியஸ்தராயிருக்கப்பட்ட பாப்புகளுக்குப் பதி ; விரோதியென்றுதீர்த்ததுமன்றி, அவருக்குக் கண் கொடுத்திருந்த பக்திபரிபாலன் என்னும் பட்டங்களையும் வாங்கிப்போட்டார்; அதுவுமன்றி அவனைச் சபைக்குப்புறம்பாக்கி, அவருடைய இராஜ்யத்தையும் சபித்து, அவனை ரோமாபுரிக்கு வரும்படி கட்டளை யனுப்பினார்; உத்தண்டமும் மேட்டிமையுமுள்ள ஹென்ரி வென்னும் அரசனுக்கு முன்பாக பாப்புவினதிசயனவர் செய்த காரியங்களெல்லாம் கஜாகுளமாயிருந்தன; தூணிற்காஞ்வனுக்குத் தக்கமில்லை என்பதுபோல், அவர் காரியங்களையெல்லாம் தம திஷ்டப்படியே நடத்திக்கொண்டுபோனார்; அக்காலத்தில் கத்தோலிக்கச் சீர்திருத்தம் எவ்வளவு விர்த்தியடைந்திருந்தென்ற அறியவேண்டுமாகில், அப்போது ஜனங்கள் தர்க்கித்துவந்த முக்கிய விஷயங்களை அறியவேண்டும். 1-வது. பாப்புவின் அதிகாரம், 2-வது. ஏழு பாப்புவின் தவறின்மை, 3-வது. ஜனங்களுக்குத் தெரியாத பாஷையிலுள்ள வேத பாராயணம் பண்ணுதல், 4-வது. பாவமன்னிப்புச் சீட்டுகள், 5-வது. சொரூபவணக்கம், 6-வது. தேவசுகோரம், 7-வது. நற்கருணையில் சபையாருக்குத் திராட்சாரசம் கொடாமலிருப்பது இதுமுதலிய விஷயங்களைப்பற்றி ஜனங்கள் பலமாய்த் தர்க்கித்துவந்தார்கள். இந்த ஹென்ரி என்பவர் பாப்புவின்மேலிருந்த விசனத்தினாலே அவருடைய அதிகாரத்தைத் தள்ளிவிட்டதேயன்றி, மற்றப்படி பாப்புமார்க்கத்தைத் தள்ளிவிட்டவரென்றும், சத்தியமார்க்கத்தைப் பரிபாலனம்பண்ணினவ ரென்றும் சொல்லவேகூடாது; அவர் 1547-ம் வருஷத்தில் ஜனங்களைவிட்டு போனார்.

Henry dies A. D. 1547.

அவருக்குப்பின் அவருடைய ஏகபுத்திரனாகிய ஆறாம் எ ஒரு சட்டை என்பவர் பட்டத்துக்கு வந்தார்; இவர் காண்டார்; நியின்மூன்றாவதுமனைவியாயெஜேன்னுக்கும் பிரகுமாரர். இவர் அரசனாகபோது ஒன்பதுவயதுள்ளவராயிருந்தபோதிலும், அவரது தேவபக்தியினாலும், தயவில் திருப்தியுமுக்கத்தினாலும் மார்க்கச் சீர்திருத்தம் அபிவிர்த்தியாவதற்குப் பாடுபட்டவந்த முயற்சிகளினாலும் மெத்த சிரேஷ்டம் பெற்றவராய்ப் பாஷைனர்; இவர் இராஜபட்டம் பெற்றவுடனே ஹென்ரி என்பதோம் என் அரசாட்சியில் நடந்த கொடுமைகளெல்லாம் ஒழித்துபோர்த்தார். புரோட்டெஸ்ரண்டருக்கு இடையூறாயிருந்த சட்டங்கள் தளர்ந்தனல்

Reformation progresses in the reign of Edward VI.

பட்டன; சிறைச்சாலையில் அடைப்பட்டிருந்தவர்கள் விடுதலைபெற்றார்கள்; இராஜ்யத்தைவிட்டுத் துரத்தப்பட்டவர்களில் அநேகர் திரும்பிவந்தனர்; இவர்களில் யோவான் ஹூப்பர், யோவான் ராஜர்ஸ் என்பவர்கள் விசேஷித்தவர்கள்; ஹென்ரி என்பவருடைய அரசாட்சியின் முடிவில் பாப்புமார்க்கத்தாருக்கு அனுகூலமாக ஆறு விதிகள் அடங்கியிருந்த பிரமாணம் என்ற ஒரு குருசாட்டத்தை மகாசங்கத்தார் நிருபித்திருந்தார்கள்; இந்த விதிகளுள் நற்கருணையின் அப்பமும் இரசமும் கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாக மாறுகின்றன என்றும், நற்கருணை திருப்பொருள் இரண்டையும் சபையாருக்குக் கொடுப்பது அவசியமல்லவென்றும், குருக்கள் விவாகஞ் செய்யக்கூடாதென்றும், மடங்களில் சந்நியாச நியமங்களை சரியாயும் கண்டிப்பாயும் அநுசரிக்கவேண்டுமென்றும், உத்தரிக்கும் ஸ்தலத்திலிருப்பவர்களுக்காக நற்கருணையைத் தனிமையாய் வைத்துக் கொள்ளலாமென்றும், குருக்களிடத்தில் போய்க் கிறிஸ்தவர்கள் தங்கள் பாவங்களைக் கட்டாயமாய் அறிக்கைசெய்யவேண்டுமென்றும் இப்போர்ப்பட்ட காரியங்களையும் சேர்த்துக் காட்டியிருந்தது; இப்படிப்பட்ட சட்டங்கள் ஏற்பாடாயிருந்தபடியால் மனச்சாட்சியின்படி நடந்துவந்த அநேக உத்தம புருஷர் தங்களுடைய உத்தியோகங்களை விட்டுவிட்டு அந்நியதேசத்துக்குப் போகும்படி நேரிட்டது; அப்படிப் போகாமல் அவ்விடத்திலிருந்தவர்களில் ஐந்நூறுபேர்வரைக்கும் காவலில் வைக்கப்பட்டார்கள்; கிரான்மர் என்பவர் தப்பினதும் பெரிய ஆச்சரியந்தான்; எட்வார்ட் என்னும் பாலிய அரசன் பட்டம் பெற்றபோது இந்தத் துன்பம் நடந்துவந்தது; பின்பு அவர் அந்தக் கொடிய பிரமாணத்தை மாற்றிவிட்டதால் துன்பமும் ஒழிந்துபோட்டார்போற்று.

ஹென்ரி அக்காலத்தில் மார்க்கச் சீர்திருத்தம் அபிவிர்த்தியாவதற்கு முமோரின் பார்ட் என்னும் அரசனும், அவ்வரசனுக்கு பதுபிராட்சணைக் கர்த்தாவாய் ஏற்பட்டிருந்த அவ நல்லெரிய சிறிய தகப்பனுமாகிய சாமர்செற் என் செய்திபோவும், கான்தர்புரியின் சிரேஷ்ட அத்தியட்சராகிய ஹால் வினங்ஸ்ரன்லியும், தூரைத்தன விதராகிய உவில்லியம்பக்கெற் என்ப வருடைய சப்பல் சேவைத்தலைவராகிய லேயில் என்பவரும், உயிஸ்தர்பட்டணத்து அத்தியட்சராகிய லாத்திமர் என்பவரும், ராச்செஸ்தர்பட்டணத்து அத்தியட்சராகிய ரிட்லி என்பவரும், இன்னும் சில அத்தி

Chief promoters and opposers of Reformation.

யட்சர்களும் முக்கிய பிரயத்தனங்கள் செய்தனர்; இவர்களுக்கு எதிரியாய் இராஜாவின் தமக்கையாகிய மரியாளும், மந்திரியும், டரம்பட்டணத்து அத்தியட்சராகிய தன்ஸ்தல் என்பவரும், ஆயின்செஸ்டர் பட்டணத்து அத்தியட்சராகிய கார்டினர் என்பவரும், வண்டன்பட்டணத்து அத்தியட்சராகிய பன்னர் என்பவரும் பாப்புவின் பட்சத்திலிருந்தார்கள்; மார்க்கச் சீர்திருத்தர், அதிகமாயிருந்தமையால் அந்தக் கட்சி காளுக்குநாள் பலப்பட்டுவந்தது.

Means devised for the instruction of the people.

அரசன் பட்டாபிஷேகம் பெற்றதின்பேரில் வேதசாஸ்திரப் பண்டிதர்களில் சிலர் இராஜ்யத்திலுள்ள சபைகளெல்லாம் போய்ப் பார்த்து, அவைகள் ஞானவிஷயங்களில் தேர்ச்சியடையவேண்டிய தற்கேற்ற ஏழுங்குகள் செய்யும்படி பிரயத்தனித்தார்கள்; "பிரசங்கத் திரட்டு" என்ற ஒரு புஸ்தகத்தை எழுதி ஒவ்வொரு குருக்களுக்கும் அதில் ஒவ்வொரு பிரதி கொடுத்தார்கள், அக்காலத்திலிருந்த குருமாரில் அநேகருக்குப் பிரசங்கஞ் செய்யத்தக்க சக்தியில்லாதபடியினாலும், சாதாரண ஜனங்கள் வருவாய் வினங்கிக்கொள்வதற்கேற்ற பிரசங்கங்கள் அவசியமாயிருந்தபடியினாலும், இராண்மர் என்பவர் செய்த இந்தப் புஸ்தகம் மார்க்கச் சீர்திருத்தத்துக்கும், தேவபக்தியின் வளர்ச்சிக்கும் மிகவும் உபயோகமாயிருந்தது; அப்போது இராஜ்யத்திலுள்ள எல்லா அத்தியட்சர்களுக்கும் மூப்பத்தாறு கட்டளைகள் கொடுக்கவும், அவைகளை அவர்கள் வருவத்தில் நான்குமுறை ஜனங்களுக்கு விளம்பரம் செய்யவும்வேண்டும் என்பதாய் அந்தச் சாஸ்திரிகள் உத்தரவுபெற்றார்கள்; அக்கட்டளைகளில் சொரூபங்களையும், ஸ்தலயாத்திரைகளையும், மெழுகுவர்த்திகள் ஏற்றுதலையும், இவை போன்ற இன்னும் அநேக சடங்குகளையும் ஒழித்துவிடவேண்டுமென்று கண்டிருந்தது; அத்தியட்சரில் அநேகர் அக்கட்டளைகளை ஒத்துக்கொண்டார்கள்; பன்னர் என்பவரும் கார்டினர் என்பவரும் அதற்கு உடன்படமாட்டோம என்றதினால் கொஞ்சக்காலம் சிறைச் சாலையில் அடைபட்டிருந்தனர்.

மார்க்கச் சீர்திருத்தத்துக்கு அனுகூலமாக மகா சங்கத்தார் பொதுவான ஜெபபுஸ்தகத்தைப் பிரசாரஞ் செய்ய வேண்டுமென்று உத்தரவுசெய்தார்கள்; இப்புஸ்தகம் 1547-ம் வருஷத்தில் முதல் முதல் ஆரம்பமாயிற்று; எட்வார்ட் இராஜாவின் இராஜ்யபாரத்தின் இரண்டாம்

Liturgy, A. D. 1547.

வருஷத்தில் அது தேவாராதனையில் வழங்கவேண்டிய புஸ்தகமாக ஏற்படுத்தப்பட்டது; ஐந்தாம் வருஷத்தில் அதைப் பிழைதிருத்தினதில் சில காரியங்கள் அதிலிருந்து நீக்கப்பட்டன; ஸ்திரோணை ஆராதனையில் வைதாபிஷேகம் செய்வதையும், மரித்தவர்களுக்காகப் பிரார்த்தனைசெய்வதையும், தேவசிகர உபதேசத்தையும் நீக்கிவிட்டனர்; பிற்பாடு மரியாள் அரசாட்சிசெய்தபோது இந்த ஜெபபுஸ்தகம் தள்ளப்பட்டது; எலிசபேத்து இராஜாத்தியின் காலத்தில் அதில் மாற்றவேண்டியவைகளை மாற்றி, கூட்டவேண்டியவைகளைக் கூட்டிப் பிரசுரஞ்செய்தார்கள்.

Thirty-nine Articles.

மீண்டும் மார்க்கச் சீர்திருத்தத்துக்கு உபயோகமாக வேதமார்க்கப் பிரமாணங்களையும் பிரசித்தஞ்செய்தனர்; அவைகள் ஆதியில் நாற்பத்திரண்டு பிரமாணங்களாயிருந்தன; பிற்பாடு முப்பத்தொன்பது பிரமாணங்களாகச் சுருக்கிப் பிரசுரமாயின; ரொன்மர், நிட்லி மார்ட்டின் பூசர், பிற்றர் மார்ட்டர் என்பவர்களுடைய உலியிலே அப்பிரமாணங்கள் எழுதப்பட்டன; இவ்விலாத்தசபைக்கு இப்பிரமாணங்களே ஆதாரமாயிருக்கின்றன.

Queen Mary succeeds Edward VI, A.D. 1553.

இப்படி மார்க்கச் சீர்திருத்தம் அபிவிர்த்தியடைந்துகொண்டு வரும்போது, 1553-ம் வருஷத்தில் எட்வார்ட் எனும் பாலிய அரசன் இறந்துபோனார்; அவர் சாகும்போது இராஜ்யபாரத்தை புரோட்டெஸ்தாண்டி மார்க்கத்தைச்சேர்ந்த லேடி ஜேன் கிரே என்னும் பெருமாட்டிக்குச் சாதனப்படுத்தினவராய்; அப்படியே அவள் இராணியானாள்; ஆயினும் எட்வார்ட் இராஜாவின் சகோதரியும், பாப்புமார்க்கத்தில் மகா வைராக்கியமாயிருந்த மரியாள் என்பவள் இராஜாங்கத்துக்குத் தானே பாத்தியமுண்டென்று சொல்லி, 1553-ம் வருஷம் ஜூலைமாதத்தில் பட்டாபிஷேகம் பெற்றாள்; பெற்றவுடனே பாப்புமதத்தைப்பற்றித் தனக்கிருக்கும் அபிமானத்தை வெளியாக்கும்பொருட்டு, சாலையிலிருந்த பன்னர் என்பவரையும், கார்டினர் என்பவரையும் விடுவித்தாள், குருமார் தன் உத்தரவில்லாமல் பிரசங்கஞ் செய்யக்கூடாதென்று சொன்னாள்; இது காரியஸ்தலமாகையினாலே புரோட்டெஸ்தாண்டி மார்க்கத்தார் சத்தியமார்க்கத்துக்கு விரோதம் வரும் என்று கலங்கினார்கள்.

மார்க்கச் சீர்திருத்தத்துக்கு அனுகூலமாயிருந்த குருமாரில் அதிகார் வந்தெல்லாம் வாட்டும் என்கிற வீரதீரத்தோடி இராணியினுடைய கட்டளையை மதியாமல் பிரசங்கஞ் செய்துகொண்டே வந்தார்கள்; அவர்களையெல்லாம் பிடித்துக் காவலில் வைக்கவேண்டுமென்று இராணியுடைய கட்டளை பிறந்தமையால், ஹூப்பர் கவர்டேல், டெய்லர், ஹான்மர், லாற்றிமர் முதலான அநேகம்பேர் கைதிக்காரினர்; ஏறக்குறைய ஆயிரம்பேர்வரையில் இராஜ்யத்தைவிட்டு ஓடிப்போய்விட்டார்கள்; மகா சங்கம் கூடிவந்தபோது மதவிஷயத்தைப்பற்றி எட்வார்ட் அரசன் செய்திருந்த பிரமாணங்களையெல்லாம் தள்ளவும், எட்டாம் ஹென்ரி என்பவருடைய அரசாட்சியின் முடிவில் வழங்கிவந்த தேவாராதனைச் சடங்குகளைத் திரும்ப ஸ்தாபிக்கவும் வேண்டுமென்ற ஒரு சட்டம் பிறந்தது; இத்தியாதி காரணங்களால் மார்க்கச் சீர்திருத்தத்துக்கு இடையூறு உண்டாகவும், பாப்புவின் அதிகாரம் முன்போல் முக்கியமடையவும் ஏதுவாயிற்று; மரியாள் என்பவள் தன் அதிகாரத்தை ஸ்திரப்படுத்திக்கொள்ளவும், ரோமான் மார்க்கம் பலப்படவும் வேண்டுமென்ற நோக்கமாக, ஐந்தாம் சார்ல்ஸ் சக்கரவர்த்தியின் குமாரனுடைய பிலிப்பு என்னும் அரசனை விவாகம்பண்ணிக்கொண்டாள்; அதுவுமன்றி அவள் தங்கையாகிய எலிசபேத்து என்பவளை மதியூலில் வைக்கவும், ஜேன் கிரே என்னும் அரசியையும், அவளுடைய புருஷனையும் சிரசாக்கினை செய்யவும் கட்டளை கொடுத்தாள்; பாப்புமார்க்கம் இன்னும் அதிகமாய் ஸ்திரப்படும்பொருட்டு 1554-ம் வருஷத்தில் ஆக்ஸ்போர்ட் பட்டணத்தில் ஒரு சங்கம் கூடி பாப்புமார்க்கத்தைக்குறித்தும், புரோட்டெஸ்ற்றண்டு மார்க்கத்தைக்குறித்தும் தர்க்கம்பண்ணவேண்டுமென்று ஒரு கட்டளை பிறந்தது; இதனாலே ஹான்மர், ரிட்லி, லாற்றிமர் என்பவர்களைக் காவலிலிருந்து விடுதலையாக்கி மார்க்கச் சம்வாதம் செய்யும்படி ஏற்பாடுசெய்தார்கள்; இவர்கள் தங்கள் பட்சத்தை நாட்டி வெகு திறமையோடி வாதித்தார்கள்; அவர்கள் பாப்புமார்க்கத்தை அங்கீகரம் செய்யமாட்டோமென்று சொன்னபடியால், அவர்கள் மதப்பிரஷ்டர்களென்று சபைக்குப் புறம்பாக்கப்பட்டார்கள்.

Cruel acts of Queen Mary against the Reformers.

அவ்வருஷத்தில் கார்டினல் போல் என்பவர் பாப்புவினிடத்திலிருந்து அதிகாரம் பெற்றுக்கொண்டு, இங்கிலாந்து தேசத்துக்கு வந்து

பாப்புமார்க்கத்தை ஸ்தாபித்தார்; இங்கிலாந்து சபைக்கும் ரோமான் சபைக்கும் இப்படி ஒரு ஐக்கியமுண்டானவுடனே, மதப்பிரஷ்டர்களைத் தகனஞ்செய்யவேண்டுமென்று மகா சங்கத்தாரால் ஒரு சட்டம் பிறந்தது. அக்காள் முதற்கொண்டு அந்தச் சங்காரலீலையை ஆரம்பித்தது; அதை நடத்தும்படிக்கு இராணியாகிய மேரியென்பவள் கார்டினர் என்பவரையும், பன்னர் என்பவனையும் ஏற்படுத்தினர்; இரண்டு வருஷத்துக்குள்ளே ஏறக்குறைய காலூறுபேர் வன்கொலையடைந்தார்கள்; இப்படி இரத்தசாட்சிகளாய் மரித்தவர்களுக்குள் ராஜர்ஸ், சான்டர்ஸ், ஹூப்பர், டெய்லர், ரிட்லி, லாற்றிமர், ஹான்மர் என்பவர்கள் சிரேஷ்டமானவர்கள்.

Cardinal Pole re-establishes Popery in England. Reformers suffer martyrdom.

ராஜர்ஸ் என்பவர்.

ராஜர்ஸ் என்பவர் 1555-ம் வருஷம் பெப்ரவரிமாசம் காலாக்தேதியில் ஸ்மித்ஃபீல்ட் என்னும் இடத்தில் கொலைசெய்யப்பட்டார்; அவரைப் பிடித்து ஒரு ஸ்தம்பத்தோடுசேர்த்துக்கட்டி தகனிக்கப் போகும் தருணத்தில், அவருடைய மனைவியும் பத்துப் பிள்ளைகளும் மிகவும் பிரலாபித்துக் சோவென்று அலறி அழுதபோதிலும், அவர்

"Rogers, A.D. 1555."

சற்றேனும் தைரியத்தை விடாமல் மகா வைராக்கியத்தோடும் சமாதானத் தோடும் தமது ஜீவ ஓட்டத்தை முடித்துப் பேரின்பலோகஞ் சேர்ந்தார்.

Saunders, Hooper and Taylor, A. D. 1555.

சான்டர்ஸ் என்பவர் கவன்ற்றி என்ற இடத்தில் தகனமானார்; இவரைக் கட்டும் ஸ்தம்பத்துக்கருகே நின்று "இதுவரையே என் பாக்கியம், பிதாவினுடையவனே எனக்குச் சொந்தம்" என்று சொன்னார்; இவரோடேகூட ஹூப்பர் என்று பெயருடைய மகா பக்தியுள்ள அதியட்சரும் தகனமானார்; அக்கினி இவர்மேல் கொஞ்சங்கொஞ்சமாய்ப் பற்றி யெரித்தது; இவருடைய கரங்கள் வெந்து, விரித்து, ஒரு கை தூண்டாய் விழுந்தபின், இவர்: "இயேசுகர்த்தாவே! அநாதரட்சகா! ஆபத்பாந்தவா! அடியேனுடைய ஆவி உமக்கே அற்பணம்" என்று சொல்லி மனச்சமாதானத்துடன் மரித்துப் பரமபதமடைந்தார்; அந்த காளில் டெய்லர் என்னும் வேதசாஸ்திரியும் ஸ்மித்ஃபீல்ட் என்னும் இடத்தில் தகனமானார்.

Ridley and Latimer, A. D. 1555.

அக்டோபர்மாசத்தில் ரிட்லி என்பவரையும், லாத்திமர் என்பவரையும் ஆக்ஸ்பர்க்பட்டணத்தில் ஒருமிக்க விரித்தார்கள்; ரிட்லி என்பவர் அதிக கல்வியும் சாமர்த்தியமுமுள்ளவர்; லாத்திமர் என்பவர் மகா சாத்வீகமானவர்; இவருக்கு எண்பதுகாலு பிராயம்; இவ்விருவரும் மரணமடைவதற்குமுன் ஒருவரை ஒருவர் தழுவிக் கட்டிக்கொண்டு, முழங்கால்படியிட்டு ஜெபஞ்செய்தனர்; விறகு கட்டைகள் தகதகவென்று எரியும்போது லாத்திமர் என்பவர் ரிட்லி என்பவரைப் பார்த்து: "சகோதரனே! நீர் தைரியத்தை விடாமல் ஸ்திரமாயிரும்; இன்றைக்கு நாம் தேவகிருபையினால் இங்கிலாந்து தேசத்தில் ஏற்றப்போகிற விளக்கு ஒருபோதும் அணையமாட்டாது" என்றார்.

Cranmer, A.D. 1556.

1556–ம் வருஷம் மார்ச்மாசம் இருபத்தாறாந்தேதியில் அதிபுத்திமான புருஷனாயிருந்த சொன்மர் என்பவர் மரணமடைந்தார்; அப்போது அவருக்கு அறுபத்தேழுபிராயம்; அவர் பிடிபட்டபின் பாப்புமார்க்கத்தை அனுசரித்துக்கொள்ளும்படியாக எதிரிகள் அநேக முயற்சிகள் செய்தனர். அவர் அதற்குச் சற்றும் இணங்கி, பாப்புவின் அதிகாரத்தை ஒப்புக் கொள்ளுவதாக ஒரு பத்திரத்தில் கையெழுத்து வைத்தார்; ஆயினும் அவர் அப்படிச் செய்ததற்காக மனஸ்தாபமடைந்து, அநேக இரங்

ஞ்சுமுன தமது பாவத்தை அறிக்கையிட்டு, துயரத்தை வெளிப்படுத்தினார்; அதைச் சத்துருக்கள் கண்டு அவரை இழுத்துக்கொண்டு போய் ஸ்தம்பத்தோடே சேர்த்துக் கட்டினார்கள்; அடியில் வைத்த அக்கினி சுவாலித்து எரியும்போது, அவர் தமது வலதுகையை அதன் மேல் நீட்டி, "தேவசெய்த கையே! கெட்ட கையே!" என்று உரத்த சத்தமாய்ச் சொன்னார்; கொஞ்சநேரத்துக்குள் "கர்த்தராகிய இயேசுவே! என் ஆவியை ஒப்புக்கொள்ளும்" என்று சொல்லி ஜீவனை விட்டார்.

சொன்மர் என்னும் இரத்தசாட்சி.

Elizabeth succeeds Mary, A. D. 1558. Reformation again prospers.

"இரத்தமரியாள்" என்று சொல்லப்பட்ட இந்தக் கொடிய அரசியின்காலத்தில் புரோட்டெஸ்ரண்டு மார்க்கத்தாருக்கு இவ்விதத் துன்பங்களெல்லாம் சேரிட்டன; அவள் ஐந்து ஆறு வருஷகாலமாய் அரசாட்சி செய்தபின்பு இறந்துபோனாள்; 1558–ம் வருஷம் அவளுடைய சகோதரியாகிய எலிசபெத் என்பவள் பட்டத்துக்கு வந்தாள்; அப்போது அவருக்கு இருபத்தைந்து பிராயம்; அவள் வாழ்வதற்கு வருஷகாலமாய் மிகுந்த விவேகத்

தோடும், தருத்த முயற்சியோடும் அரசாட்சி செய்துவந்தாள்; 1559-ம் வருடத்தில் மகா சங்கம் கூடிவந்தபோது மார்க்கச் சீர்திருத்தத்துக்குச் சார்பான அநேக சட்டங்களே ஏற்படுத்தினார்கள்; மதப்பிரஷ்டர் களைத் தண்டிக்கும் சட்டங்கள் நீங்கிப்போயின; எட்வார்ட் இராஜாவின் ஆளுகையிலிருந்த பிரகாரமாகவே சபையின் காரியங்களில் ஒழுங்குண்டாயிற்று; பொதுவான ஜெபபுஸ்தகத்தைப் பிழைபார்த்துப் பிரசித்தஞ்செய்தனர்.

Rise of the Puritans, A. D. 1554.

இந்த ஜெபபுஸ்தகத்துக்குச் சில இரிஸ்துவர்கள் குற்றங்கற்பிக்கின்; அவர்களுக்குப் புனிதர் என்று அர்த்தங் கொள்ளும் பியூரிற்றன்ஸ் என்று பெயர்; இவர்கள் மரியாளுடைய காலத்துக்குத் தப்பிக் கொள்ளுமுடி, 1554-ம் வருஷம் இங்கிலாந்து தேசத்தை விட்டு ஜர்மன் தேசத்திலுள்ள பிராங்போர்ட் பட்டணத்திலும் சுவிற்சர்லாந்து தேசத்திலுள்ள ஜெனீவா முதலான பட்டணங்களிலும் போய்க் குடியேறி, கால்வின் என்பவருடைய கொள்கைப்படி சபை ஒழுங் குகளே நடப்பித்துவந்தார்கள்; மரியாள் இறந்பிற்பாடு அவர்கள் மறு படியும் இங்கிலாந்து தேசத்துக்கு வந்து தேவாராதனைக்குரிய காரியங் களைத் தங்கள் கொள்கைப்படியே நடத்திவந்தபடியால், ஜெபபுஸ்த கத்தைத் தள்ளிப்போடவேண்டுமென்று சொன்னார்கள்; இவர்களுக்கு "இணங்காதவர்கள்" என்ற அர்த்தங்கொள்ளும் (Nonconformists) நான்கான்வர்மிஸ்ற்ஸ்டன்னும் பெயர்; இதனாலே இவர்களுக்குப் பிற்காலத்தில் அநேகத் துன்பம் நேரிட்டது.

Spanish Armada.

இப்படி இங்கிலாந்து தேசத்தில் மார்க்கச் சீர்திருத்தம் அபிவிர்த்தியாகிவருகிறதைப் பாப்புவானவர் கேள்விப்பட்டு, அதிக துக்கமடைந்து, இராணியைக் கைவசப்படுத்தும்படிக்கு அநேக பிரயாசப்பட்டும், கூடாதபடியாலே அவளைச் சபைக்குப் புறம்பாக்கிப்போட்டார்; ஸ்பானியா தேசத்து அரசனும், மரியாளுடைய புருஷனுமாயிருந்த பிலிப்பு என்பவர் இங்கிலாந்து தேசத்தைப் பிடித்து, அதில் பாப்புமார்க்கத்தை மறுபடியும் நாட்டவேண்டும் என்கிற நோக்கங்கொண்டு, "ஸ்பானிஸ் ஆர்மேடா" என்றுசொல்லப்பட்ட திரளான யுத்தக்கப்பல்சேனையோடே புறப்பட்டு வந்தார்; தூக்கப்பல்களெல்லாம் பிரிட்டிஷ் வாய்க்காலில் வந்தபோது, தேவசெயலால் கடும்புயலுண்டாக அநேகம் கப்பல்கள் சேதமாயின; மீற்பாடி உண்டான கப்பல் யுத்தத்தில் ஸ்பானியா

தேசத்தார் தோல்வியடைந்தபோயினர்; அப்போது பாப்புமார்க்கத் தார் கொண்டிருந்த எண்ணம் குலைந்துபோயிற்று.

Elizabeth dies, A. D. 1603.

எலிசபேத் இராஜாதிபத்தியத்தின் காலத்தில் புரோட்டெஸ்ரண்ட் மார்க்கம் நிலைபெற்றது; அதற்கு அவள்வேண்டிய முயற்சிகளெல்லாம் செய்தபின்பு 1603-ம் வருடம் மார்ச்சு மாதம் இருபத்து நான்காந்தேதியில் இறந்துபோனாள்.

ஐந்தாம் பாகம்.

ஐரோப்பா கண்டத்தில் மார்க்கச் சீர்திருத்தம் விர்த்தியாகுதல். சோமை. சோக்கு புரோட்டெஸ்ரண்டர்கள் - லையன். பாப்புவின் அதிகாரத்தைத் தடுக்கச்செய்த முயற்சிகள். 1-வது. ஜெயித்தர் வகுப்பார்தப்பிக்கப் படல். 2-வது. பிதற்கள். 3-வது. சிறிய விஷயங்களில் சீர்திருத்தங்கள். 4-வது. தப்பும் இரு மதத்தின் பலவகைச் சாதகங்களையல்ல. சோக்கு சபையின் விருத்தாக்கம். முதியனிதன்டான சோக்கு சபை. சோக்கு சோமன் சபையை ஒப்பிட்டுப் பார்க்குதல். அந்தச் சபையின் விருத்தாக்கம். சீர்திருத்தின சபைகள்.

Progress of Reformation on the Continent.

ஐரோப்பாக்கண்டத்தில், 1555-ம் வருஷத்தில் மார்க்கச் சமரசம் உண்டானகாலமுதல், சோமாபுரி பாப்புவுடைய அதிகாரம் மேன்மேலும் குறைவுபட்டும், மார்க்கச் சீர்திருத்தம் விரிவுபட்டும் வந்தது; அக்காலவதியில் இத்தாலியா, ஸ்பானியா, போர்த்துக்கல் தேசங்களும், ஸ்பானியா அரசாட்சிக்குட்பட்டிருந்த பெல்ஜிய மாகாணங்களும் பாப்புவுக்கு அதிகாரமாயிருந்தன; டென்மார்க், நார்வே, சுவீடன், புருஷியா, இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, ஐர்லாந்து, போலாந்து என்னுந் தேசங்கள் புரோட்டெஸ்ரண்டி மார்க்கத்தைச் சேர்ந்திருந்தன; ஜர்மன் தேசம் பாதி புரோட்டெஸ்ரண்டி மார்க்கமும், பாதி பாப்புமார்க்கமுமாயிருந்தது; சுவிற்சர்லாந்து தேசத்தில் சோமானித்தாரைவிட புரோட்டெஸ்ரண்டர் அதிகமாயிருந்தார்கள்; பிரான்ஸ் தேசம் பாப்புமார்க்கத்தில் "தன்னியல்பைவிடாதபோலிருந்தும், அப்படிச் செய்யாமல் முற்றிலும் அதன் பட்சத்தில் சேராதது" டது; ஆயினும் அத்தேசத்தில் நாற்பது ஐம்பது லட்சம் புரோமானியர் இருந்தனர்.

மார்க்கச் சீர்திருத்தம் நிலைபெற்றபோது, நிறுவனர்களென்று பெயர்பெற்றவர்கள் பல சட்சேசாராய்ப் பிரிந்துகொண்டார்கள்; அவைகளில் ரோமச் சபை, கிரேக்கச்சபை, புரோட்டெஸ்ரண்டு சபை என்பனவைகளே முக்கியமானவைகள்.

Roman, Greek, and Protestant Churches.

மார்க்கச் சீர்திருத்தத்திலுல் ரோமச்சபைக்கு அநேக கஷ்டங்கள் நேரிட்டன; அக்குறைவுகளெல்லாம் நிவர்த்தி யாகவும், தங்கள் சபை முன்னிருந்த நிருக்கு வரவும் பாப்புகள் அநேக முயற்சிகள் செய் தார்கள்; இதில் இயேசசபையார் என்று அர்த்த முள்ள ஜெசுயித்தர் என்பவர்கள் எற்பட்டதே முதற் பிரயத்தனம்; இவர்கள் 1540-ம் வருஷம் ஸ்பானியா தேசத்தில் ஒரு பிரபுவாயிருந்த இக்நேஷியஸ்லாயலா என்பவனுடைய சட்டியைச் சேர்ந்தவர்கள்; இவர்கள் பாப்புவின் அதிகாரத்துக்கு ஜனங்கள் பிடிபட்டு நடப்பது முறையென்றும், அதற்குக் கஷ்டஞ்செலுத்துவது அவர்கள் முக்கிய கடமையென்றும் உலகத்தாருக்கு உணர்த்தும்படி எற்பட்டவர்கள்; இவர்களாலே ரோமச்சபைக்கு அநேக பிரயோஜனங்களுண்டா யின; எறக்குறைய நிம்பது வருஷங்களுக்குள் இவர்கள் தொகை அதிகமாய்ப் பெருகி, கல்வியிலும், சாமர்த்தியத்திலும், தந்திரோபா யங்களிலும் நிறைந்து விளங்கினார்கள்; ஜனங்களே வசப்படுத்தும்படி, இவர்கள் பற்பல சாஸ்திர விந்தைகளைக் கற்றுவந்தார்கள்; இவர்களில் அநேகர் நியாயசாஸ்திரிகளாகவும், வைத்தியர்களாகவும், கணிதசாஸ் திரப் பண்டிதர்களாகவும், பிற்பாசாரிகளாகவும், மிஷநரிமிட்டிரிகளாகவும் இருந்தனர்; இந்த நூற்றாண்டின் முடிவுக்குமுன் இவர்கள் ஐரோப்பாவிலுள்ள தேசங்கள் எங்கும் சென்று, அதிபதிகளுக்கும், பிரபுக்களுக்கும், பாலியருக்கும் குருக்களாயிருந்து, பாப்புவின் அதி காரத்தை நிலைநிறுத்திவந்தார்கள்.

Rome's efforts to regain power: first, Order of Jesuits founded.

ரோமாண்மார்க்கம் பிரபலமாவதற்கு அந்நூறாண்டுகளுக்கு அம் மார்க்கத்தைத் தெரிவிக்கும்படி முயற்சிசெய்த தே இரண்டாவது எத்தனம்; இதற்கும் ஜெசு யித்தரே தணிந்து எற்பட்டார்கள்; இவர்களிலெல்லாம் (Francis Xavier) பிரான்சிஸ் சவியார் என்பவனைப்போல் புகழ்பெற்றவர் வேறுயாருமில்லை; இவருக்கு "இந்தியர்களின் அப்போஸ்தலன்" என்பதும் பெயர் உண்டாயிருக்கிறது; இவர் 1541-ம் வருஷத்

Second: Missions.

தில் விட்டு தேசத்திலிருந்த போர்த்துக்கேயருடைய ஸ்தாபனங் களுக்கு வந்து, ஜனங்களில் அநேகம் ஆயிரம்பேரை ரோமமார்க்கத்தில் திருப்பினபின், 1549-ம் வருஷத்தில் யாப்பான் தீவுக்குப் போய் அவ்விடத்தில் ஓர் சபையை நாட்டும்படி வேண்டிய முயற்சிகள் செய்தார்; அதற்குப் பிற்காலங்களில் மற்றக் குருமாருடைய பராம் ரிப்பினுல் அந்தச் சபையில் ஆறுலட்சம் கிறிஸ்தவர்கள் இருந்ததாகச் சொல்லியிருக்கிறது; சவரியார் யாப்பானை விட்டு, சீனதேசத்திலுள் ளவர்களை மார்க்கத்தில் திருப்பவேண்டுமென்ற அவ்விடத்துக்குப் போகும்வழியில், அந்தேசத்துக்குச் சமீபத்தில் 46-ம் வயதில் மரித் தாரென்பர்; இது 1552-ம் வருஷத்தில் சம்பவித்தது. இதற்குப்பின் வேறு குருமாரும் புறப்பட்டார்கள்; அவர்களில் இத்தாலியா தேசத் தானை மத்தேயு ரிச்சி என்னப்பட்ட ஒருவர் அதிக சிரேஷ்டமான வர்; இவர் சீனதேசத்து உள்நாடுகளுக்குப் போய், அங்கே ஒரு சபையை ஸ்தாபித்தார்; அச்சபை 170 வருஷகாலம் நிலைத்திருந்தது; இவர் கணிதசாஸ்திரத்தில் பாண்டித்தியம் அடைந்திருந்தமையால், சீனச்சக்கரவர்த்தியையும் பிரபுக்களையும் கைவசப்படுத்தி, ஜனங் களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி உத்தரவுபெற்றுக்கொண் டார்; வேறே குருமார், யோம், தக்குவின், கொச்சின், சீனம் என் னும் இராஜ்யங்களுக்குப் போய் ரோமாண்மார்க்கத்தை அவ்விடங்க ளில் பிரபலப்படுத்தினார்; இன்னும் சில குருக்கன்மார் ஜெர்மனி தேசத் துக்கும் வந்தார்கள்; மலையாளகாட்டில் ஒரு வருஷத்தில் ஒரு குருவி னால் 1,000 பேர் ஞானஸ்நானம் பெற்றதாகச் சொல்லுகிறார்கள்; அமெரிக்காவிலும் அவர்கள் அநேக முயற்சிகள் செய்து அனுகூல மடைந்தார்கள் என்றும் அமெரிக்காவில் அவர்கள் சபையைச்சேர்ந்த ஜனங்கள் மற்றத் தேசங்களின் ஜனங்களைப்பார்க்கிலும் தொகை யில் அதிகப்பட்டிருந்தார்கள் என்றுஞ் சொல்லியிருக்கிறது.

ரோமாண்மார்க்கம் பிரபலமாகும்படி, அச்சபையைச் சேர்ந்தசட்ட திட்டங்களை ஒழுங்குபடுத்தினதே மூன்று வதத்தனம்; ஐரோப்பாவில் கடந்த மார்க் கத்திலுஞ்சு, ஜனங்கள் அபிமானம் வைத்தியவைடத்திலும், தங்கள் சபையிலுள்ள ஒழுங் கீனத்தைப் போட்டவேண்டுமென்று பாப்புகள் யோசித்து, என்ற விசாரணைச் சங்கத்துக்குரிய பிரமாணங் களைத் திருத்தி, கல்விச்சாலைகளை எற்படுத்தி, ஜனங்

Third: Internal reform.

கள் தர்க்கசாஸ்திரத்திலும், ரோமச்சபையின் உபதேசங்களிலும் தேறும்படி முயற்சிசெய்தனர்.

Fourth: Persecution.

புரோட்டெஸ்ருண்டரைத் துன்பப்படுத்தினது ரோமான்மார்க்கம் பிரபலப்படுவதற்கேற்ற நான்காம் எத்தனமாயிருந்தது; புரோட்டெஸ்ருண்டர் வாசஞ் செய்துவந்த நாடுகளில் ஒன்றாவது பாப்பு மார்க்கத்தாருடைய குரூரமான துன்பத்துக்குத் தப்பவில்லை; ரோமானித்தாருக்கும் புரோட்டெஸ்ருண்டருக்கும் நடந்துவந்த யுத்தங்களிலும், கேரிட்ட துன்பங்களிலும் புரோட்டெஸ்ருண்டரில் ஏறக்குறைய இத்துகோடி ஜனங்கள் மடிந்துபோனதாகத் தொகையிட்டிருக்கிறது; இத்தாலியாவிலும், நெதர்லாந்திலும், ஸ்பானியாவிலும், பிரான்சிலும், ஜர்மன் தேசத்துச் சில நாடுகளிலும், இங்கிலாந்திலும் இருந்தவர்களே அதிகமாய்த் துன்பப்பட்டவர்கள்.

Causes of failure.

என்றாலும் ரோமான்மார்க்கம் பிரபலமாகும்படி அவர்கள் செய்த இப்பிரயத்தனங்களெல்லாம் தேறிவராமல் போயின; அதற்குப் பல காரணங்களுண்டு, அவர்கள் யுத்தஞ்செய்து கட்டிக்கொண்ட அந்நியதேசங்களை இழந்து போனதும், ஐரோப்பாவிலுள்ள சில அரசர்களோடு செய்த சண்டைகளில் தோல்வியடைந்ததும், ஜெசுயித்தர் ஒடுங்கிப்போனதும், பிரான்சில் உண்டான தேசகலகமும், இல்குவிசிஷன் சங்கம் எடுபட்டுப்போனதுமே முக்கிய காரணங்கள் என்று சொல்லலாம்.

History of the Greek Church.

கிரேக்கச்சபையின் உற்பத்தியைக்குறித்து முன்னே சொல்லியிருக்கிறோம்; 1054-ம் வருஷத்தில் தலைமைச் சபை என்றும், மேலச்சபை என்றும் இரண்டாகப் பிரிந்தது; அக்காலமுதல் 1453-ம் வருஷம் வரைக்கும் கிரேக்கச்சபையின் ஸ்திதி வெகு சீர்கெட்டதாயிருந்தது; ஒரு பக்கத்தில் மகம்மதியர் அச்சபையைச்சேர்ந்த தேவாலயங்களையெல்லாம் பள்ளிவாசல்களாக்கி, ஜனங்கள் மகம்மது மார்க்கத்தை அனுசரித்துக்கொள்ளும்படி அவர்களை அதிகமாய் நெருக்கிவந்தார்கள்; மறுபக்கத்தில் குருசு யுத்தக்காரர் கிரேக்கச்சபை இழந்துவிட்ட இராஜ்யத்தைத் திருப்பிக் கொடுக்கும்படி யுத்தஞ் செய்தார்கள்; 1453-ம் வருஷத்தில் இரண்டாம் மகம்மது சுல்தான் துலுக்க அரசை கிரேக்குருடைய இராஜ்யத்தைக் கவிழ்த்துப்போட்டான்; அக்காலமுதற்கொண்டு கிரேக்கச்சபை துலுக்குருடைய

அரசாட்சியின் அடிமைத்தனத்தில் அகப்பட்டுக்கிடக்கிறது; கிரேக்குடைய மார்க்கமும் பக்தியும் வரவர குறைந்துபோயிற்று.

Greek Church in Russia.

1589-ம் வருஷத்தில் ருஷியசபை கிரேக்கச்சபையைவிட்டுப் பிரியாமற் போனபோதைக்கும், அரசாட்சியைவிட்டுப் பிரிந்துபோய்விட்டது; ஆதலால் கிரேக்கச்சபை மேன்மேலும் பெலவீனப்பட்டுப் போகும்படி கேரிட்டது; அந்தச் சபையைச் சேர்த்தவர்கள் நிகுக்கு ஒருசாரார் சிதறுண்டு, கிரேக்கு, ஐயோனியதீவுகள், உலாலேஷியா, மால்டேவியா, அபிசினியா, நூபியா, லிதியா, அரேபியா, மெசொப்பொத்தாமியா, சீரியா, பலஸ்தீனு என்னும் நாடுகளில் வாசஞ்செய்துவருகிறார்கள்.

Greek and Roman Churches Contrasted.

கிரேக்கச்சபைக்கு கொன்ஸ்தாந்தினோபுரியிலுள்ள பேத்ரியார்க் என்னப்பட்டவரே தலைவராயிருக்கிறார்; இவரைப் பின்னிரண்டு கண்காணிகள் தெரிந்துவற்பத்தவும் துருக்கியா இராஜன் அதை ஸ்திரப்படுத்தவும் வேண்டியிருக்கிறது; மற்றப் பேத்ரியார்க்குகள் தமஸ்கு, சாயிரோ, எருசலேம் என்னும் பட்டணங்களில் இருக்கிறார்கள்; உபதேசங்களிலும், சடங்காசாரங்களிலும், கிரேக்கச்சபை ரோமச்சபைக்குப் பேதப்பட்டிருக்கிறது; கிரேக்கச்சபையார் திரித்துவ உபதேசத்தையும், தீசேயா விசுவாசப்பிரமாணத்தையும், அதனுடனே விசுவாசப்பிரமாணத்திலுமுள்ள அநேக உபதேசங்களையும் அங்கீகாரஞ்செய்தபோதிலும், பரிசுத்த ஆவியானவர் "குமாரனிலிருந்து" புறப்படாமல், பிதாவிலிருந்து தோன்றினவர் என்பதை அதிகமாய்ச் சாதித்துவருகிறார்கள்; இவர்கள் பாப்புவினுடைய தலைமையையும், தவறின்மையையும், உத்தரிக்கும் ஸ்தலத்தையும், சொரூப வணக்கத்தையும், குருத்துவ விரதத்தையும், நற்கருணையில் இரண்டு திருப்பொருளையும் கொடாமலிருப்பதையும் தகாதவைகளென்று வெறுக்கிறார்கள்; இவர்கள் இப்படிப்பட்ட கொள்கைகளைக் கண்டித்தாலும், இவர்களுக்குள்ளும் பல தகாத கோட்பாடுகள் இருக்கின்றன; இவர்கள் படங்களை வைத்து நமஸ்கரித்துவருகிறார்கள்; அர்ச்சியசிஷ்டர்களை கோக்கிப் பிரார்த்திக்கிறார்கள்; சத்த திரவிய அனுமானங்களை அனுசரிக்கிறார்கள்; தேவ வசிகர உபதேசத்தை நம்புகிறார்கள்; மரித்தவர்களுக்காகப் பிரார்த்தனைகளையும் பூசைகளையும் ஒப்புவிக்கிறார்கள்; அநேக உபவாசங்களையும் உற்சவங்களையும் அனுசரிக்கிறார்

கள்; ஞானஸ்நானமே அவர்களுக்கு மறுஜன்மம்; அதையன்றி வேறே மறுஜன்மம் இல்லை.

History of the Lutheran Church.

புரோட்டெஸ்ரண்டு சபையைப்பற்றி நாம் அதிகம் சொல்ல வேண்டியதில்லை; இந்தச் சபை லூத்தர் சபை என்றும், சீர்திருத்தப்பட்ட சபைகள் என்றும் இரண்டு பிரிவாயிருக்கிறது; லூத்தருடைய கொள்கைகளை அனுசரித்தவர்களுக்கு லூத்தரானர் என்ற பெயர்; இவர்கள் டென்மார்க், நார்வே, சுவீடன், ஜர்மன் தேசத்து வடமாகாணங்கள், சக்சனி, புருஷியா என்னும் நாடுகளில் முக்கியமாயிருக்கிறார்கள்; சிலர் ஹாலாந்து, பிரான்ஸ், ருஷியா, வடஅமெரிக்கா, மேற்கு இந்திய தீவுகளிலும் இருக்கிறார்கள்; இவர்கள் தொகை உத்தேசம் இரண்டுகோடி இருக்கும்; ஆக்ஸ்பர்க் அறிக்கையே லூத்தர்சபைக்கு விசுவாசப்பிரமாணம்; சத்திய வேதாகமமே நமது விசுவாசத்துக்கும் நடக்கைக்கும் சட்டமாயிருக்கிறது என்பதும், நீதிமானாதலைப்பற்றும் விசுவாசத்தால் நீதிமான்களாகிறோம் என்பதும், தேவரூபை கைமாறல்லாததும் இரட்சிப்புக்கு அவசியமுமுள்ளது என்பதும், கற்கருணையில் அப்பத்தோடும் இரசத்தோடும் இயேசுவின் சரீரமும் இரத்தமும் வியாபித்திருக்கிறதென்பதும் அதில் குறிப்பிட்டிருக்கும் பிரதான உபதேசங்கள்; இவர்கள் ஆராதனையில் தேவாவனித்தாருடைய சில கடன்களை அனுசரித்துவருகிறார்கள்; ஞானஸ்நானம் கொடுக்குஞ் சமயத்தில், அதைப் பெறுபவர்களிடத்தில் பிசாசை தூரத்தைதும், கற்கருணையில் அப்பத்தையும் பதிலாகச் சிலுவை சொரூபங்களை வணங்குவதும், சேவிப்பதில் படங்களை வைத்து, மெழுகுவர்த்தி கொளுத்தித் தீபதூபங்காட்டுவதும், கற்கருணைப்பீடத்தின்மேல் ஒருவிதமான வஸ்திரம் போர்த்துவதுமுண்டு; இதையுமன்றி சோபசபைக்குரிய அர்ச்சியசிஷ்டர், இரத்த சாட்சிகளுடைய திருவீழாக்களையும் அனுசரிக்கிறார்கள்; அத்தர் மார்க்கம் எற்பாடாயிருக்கும் ஒவ்வொரு சட்டமும், அந்த ஜாதிக்கத்துக்கு நிலைபேறாயிருக்கிறவர்களே சபைக்கும் பிரசங்கியாயிருக்கிறார்கள்; சபையின் காரியங்களை விசாரிக்குபடி, மேலான அதிபதியினுல் ஏற்படான கில்கில்லேரிகள் என்னப்பட்ட சங்கங்களுண்டு; லூத்தரானருக்கும் அர்ச்சியசிஷ்டர்களிருக்கிறார்கள்; டென்மார்க், சுவீடன், நார்வே என்னும் தேசங்களில் இருக்கும் அர்ச்சியசிஷ்டர்கள் சபை, மற்றவர்கள் குருக்கள்மேல் அவ்வளவு அதிகாரத்தைச்

செலுத்துகிறதில்லை: டென்மார்க், சுவீடன் தேசங்களில் அவர்களுக்கு அர்ச்சியசிஷ்டர்கள் என்றும், ஜர்மன் தேசத்தில் மேல்விசாரணைக்காரரென்றும், சான்றோரென்றும், இங்கிலாந்தில் பிஷப்டென்ற் என்றும் சான்றோர் என்றும் பெயர்; அங்கேயுள்ள லூத்தரானர் இவர்கள் சங்கத்தட்டப்பிரகாரம் நடந்துவருகிறார்கள்.

Reformed Churches.

சீர்திருத்தப்பட்ட சபை என்பது, சுவிஸ்ய நற்கருணையைப்பற்றி சுவிங்கிலியு என்பவர் கொண்டிருந்த கொள்கைக்கு உடன்பட்ட ஜெனிவாவிலுள்ள சபைகளுக்கு ஆதியிலுண்டான பெயராயிருந்தது; பிற்காலத்தில் கல்வினரும், இங்கிலாந்து சபையாரும், பூனேற்றெட் ஸ்தோத்திரஞ்செய்த அர்ச்சியசிஷ்ட சபையாரும், ஸ்கொத்லாந்திலுள்ள பிரஸ்பிற்றேரிய சபையாரும், பூனேற்றெட் ஸ்தோத்திரஞ்செய்த பிரஸ்பிற்றேரிய சபையாரும், இங்கிலாந்திலும், கிழு இங்கிலாந்திலுமுள்ள காங்கிரேஷனல் சபையாரும், மொரேவியரும், பாப்டிஸ்தரும், மெதோடியஸ்தரும், குவேக்கரும் இச்சபையைச் சேர்ந்தவர்களாக எண்ணப்பட்டார்கள்; இவர்களைப்பற்றிப் பின்னுல் விபரஞ்சொல்லுவோம்.

Concluding remarks.

இந்த நூற்றாண்டில் நடந்த ஆச்சரிய சம்பவங்களையெல்லாம் இன்னும் சொல்லவேண்டுமென்றால் விரியும்; ஆயினும் சுருக்கமாய்ச் சட்டியிருக்கிறதே மேற் சொன்ன விசயங்களிலுமே, தேவருணையும், இரக்கமும், கல்லையும் என்றும் விளங்கும் சங்கதிக்குச் சந்தேகமில்லை; இந்த நூற்றாண்டில் திருச்சபையை முயலுகிற காரியஞ் சுலபமல்ல, நீதியின் தமியன் பிசாசிற்சினுல் அறியலை என்னும் அந்தகாரத்தில் நடந்திருந்த அநேக லூத்தரான் ஞானவெளிச்சமடைந்து இரட்சகருக்குத் திருப்தியாண்டாகினார்கள்.

QUESTIONS ON SIXTEENTH CENTURY.

பதினாறும் நூற்றாண்டின் சரித்திரத்தின்பேரில் கேள்விகள்.

1. இச்சகாப்தத்தில் நிகழ்ந்தவைகளில் விசேஷித்தன?
2. பாப்சுக்கு சீர்திருத்தத்திற்கு எதுகூலமான காரணங்கள் எவை?
3. லூத்தர் சம்பவங்களின் சரித்திரத்தைச் சுருக்கமாய் எழுதுக.

4. மிலாங்தன், இரால்மஸ் என்பவர்களைப்பற்றி என்ன தெரியும்?

5. மார்க்கசேநிருத்தத்திற்காக ஆதார் செய்தமுயற்சிகளெவிபரமாய்எழுதுக.

6. சற்குருணை விஷயத்தைப்பற்றி காலு லிசேஷ கொள்கைகள் உண்மை அலவுகள் என்னவென்றும், எது சத்தியவேதத்திற்குச் சரியாயிருக்கிறதென்றும் காட்டுக.

7. கல்வீன் என்பவர் இனிவ சபைக்குச் செய்த கலகம் என்ன?

8. அனபாப்டிஸ்ட்ஸ் என்பவர்களைப்பற்றி என்ன தெரியும்? இவர்களின் தப்பறை என்ன?

9. புரோட்டெஸ்ருண்டர் என்ற பேர் யாருக்கு, எக்காலத்தில், எவ்விதம் உண்டாயிற்று?

10. இங்கிலாந்துதேசத்தில் 1509–ம் ஆண்டு முதல் 1603–ம் ஆண்டு வரை நடந்த வந்தமார்க்கச் சரித்திரத்தை விபரமாய் எழுதுக.

பதினேழாம் நூற்றாண்டு.

பாப்புமார்க்கத்தின் சீர், வரதம் அலெக்சந்தருக்கும், பதினாலாம் லூயிக்கும் கோரிட்ட சச்சரவு. பாப்புமார்க்கத்தை விர்த்திசெய்யும் சங்கதிகள். பாப்புமார்க்க குருக்கள் தேவிலும் ஐப்பானிலும் செய்த முயற்சிகள். ரஷ்யாட்சோபுவியினும் மதுரையில் ஸ்தாபிக்கப்பட்ட மிஷன். ஜெனிவாத் தருக்கும் ஜான்சனிஸ்தருக்கும் கோரிட்ட சம்வாதம். அதினாலருந்து உண்டான நன்மை. உலெம்பாலியா உடன்படிக்கை. இங்கிலாந்து தேசத்தைப் பியூரிற்றனர்கள். ஆலிவர்பேர் செய்துகொண்ட மகா வெற்றி. மருந்து அபாயம். இங்கிலீஷ் வேதாகமம். முதலாம் சார்ல்ஸ். லாட் என்னும் பிரஷ்ட அதிபதியார். பியூரிற்றனரில் ஆகேர் அலெக்சாண்டர் குடியேறுதல். பாப்டிஸ்ட்டை அதிபதிகளும், முதலாம் சார்ல்ஸ் அரசனும் பிரசாதிக்க அடைதல். உலெஸ்டின் தீர்ப்பட்டனத்தில் கூடின வேத சாஸ்திரிகள். பிரஸ்பிற்தீரியன் மார்க்கம் விர்த்தியடைதல். குவேக்கர். ஜார்ஜ் பாக்ஸ். குவேக்களுடைய சோட்பாதென். இரண்டாம் சார்ல்ஸ் அரசனுடைய சபையைப் பரிபாலித்தல். இராஜாக்குடும்பத்தினுண்டான மோதல். உலிஸ்லியம் மாதன் பிரிக்க சுயாதினதை அளித்தல். சொலேமிப் அல்லது யூனிற்றேரியர். சொலேமிய மார்க்கவிர்த்தி. கல்வீனர் மார்க்கவிர்த்தி. பிரஸ்பிற்தீரிய மார்க்கவிர்த்தி. அர்மீனியர். மார்ட்பட்டனார்த்த சங்கம். கல்வீனியரால் அர்மீனியருக்கு உண்டான நன்மை. அர்மீனிய மார்க்க விர்த்தி. போவான் ராக்கல் பிறக்குதல். ஸ்கொட்லாந்தில் பிரஸ்பிற்தீரிய மார்க்கத்தை ஸ்தாபித்தல். ஸ்கொட்லந்தரசனைப்பற்றும் நம்பகமோரி ஸ்துவர்ட்டுகளின் சரித்திரம். ஸ்கொட்லந்தரசனாகிய அதற்குர் சார்லியு முன்டாகுதல். ஐரோப்பா கண்டத்திலுள்ள விக்வனோமனின். நீதி

சமாரக்கவிர்த்தி. இங்கிலீஷ் சான்சன்வர்மிக்தர். இங்கிலாந்தைப் பிரகிதம் செய்யும்பொருட்டு அவர்கள் அமெரிக்காவில் செய்த முயற்சிகள். இதற்கு இங்கிலீஷ் சபையார் செய்த முயற்சி. அமெரிக்கா, இந்தியா, இலங்கைத் தேசங்களில் டச்சுக்காரர் செய்த முயற்சி.

சென்ற நூற்றாண்டின் வர்த்தமானங்களை யுற்றுராயுங்கால் பாப்புமார்க்கமானது ஆலாவிருகூத்திற்குக் கிளைகள் அற்றிருந்தேயொழிய, ஆனிவேர் அறுபடாமலிருந்ததென்பதைக் கவனிக்கலாம்; ஆகையால் இந்த நூற்றாண்டில் அது மறுபடியும் கிளைகளிட ஆரம்பித்தது; 1605–ம் வருஷமுதல் பாப்புப் பட்டம்பெற்ற ஐந்தாம் பவுல் என்பவர் கெடு குறுகுணமுடையோராயிருந்ததால், அதேகம் கண்டிதமான வற்பாடுகளைக்கொண்டு ஆம்மார்க்கத்தைப் பிரசித்தப்படுத்தத் துணிந்தார்; அவருக்குப்பின் 1623–ம் வருஷத்தில் பாப்பவான பதினைந்தாம் கிரகரி என்பவர் சற்றுச் சாந்தகுணமுடையவராயிருந்தும், மதவிஷயத்தில் யாதொரு சாந்தத்தையும் பாராட்டாமல் கொடுமையாய் நடந்துவந்தார்; இவர் காலத்தில் போர்த்துக்கல்தேசத்தார் ஸ்பானியாதேசத்து அரசாட்சியை விட்டுப் பிரிந்து, 1640–ம் வருஷத்தில் யோவான் என்னும் ஒரு பிரபுவைத் தங்களுக்கு இராஜனாக ஏற்படுத்தினார்கள்; இவ்வாசன் தமது அதிகாரத்தை ஸ்திரப்படுத்தும்படி ரோமாபுரிப் பாப்புவை வருந்திக் கேட்டபோதிலும், அவர்கள் இந்த நூற்றாண்டின் மூடிவரைக்கும் அப்படிச் செய்யாமலிருந்தார்கள்.

State of Popery.

1655–ம் வருஷத்தில் பாப்புப்பட்டம் பெற்ற ஏழாம் அலெக்சந்தர் என்பவருக்கும், பிரான்ஸ்தேசத்து அரசனாகிய பதினாலாம் லூயி என்பவருக்கும் ஒருவாக்குவாதம் கோரிட்டது; 1682–ம் வருஷத்தில் பிரான்ஸ்தேசத்து இராஜனுடைய கட்டளையின்படி கூடிவந்த ஒரு சங்கத்தார் பாப்புவுக்கு ஞானசம்பந்தமான அதிகாரம்மாத்திரம் உண்டென்றும், பெரிய சங்கத்திலுண்டாகும் தீர்மானம் அவருடைய தீர்மானத்துக்கும் மேற்பட்டதென்றும், சபையின் சம்மதமின்றி அவரது தீர்மானங்களைத் தவறுதலையென்று ஒப்புக்கொள்ளக் கூடாதென்றும் தீர்த்தார்த்தப்படுத்தினர்கள்; இதுவுமன்றி, கோபின்ஸ், சர்டினியா, போர்த்துக்கல், ஸ்பானியாதூதலான தேசங்களிலுள்ள பாப்புவின் மானியங்கள் நீதித்தப்பட்டன; இத்தியாதி காரணங்களினால் பாப்புவின் அதிகாரம் மிகவும் குறைந்துபோய்விட்டது.

Contest between Alexander VII and Louis XIV.

இப்படி ஐரோப்பா கண்டத்தில் பாப்புகளுடைய அதிகாரஞ் செல்லாத்தினுலே மற்றக் கண்டங்களில் அதைச் செலுத்தும்படி முயற்சித்தனர்; அவர் சன் நோக்கம் சித்தியாகும்பொருட்டு, 1622-ம் வருஷத்தில் ஒரு புதுச்சங்கத்தை ஸ்தாபித்தார்கள்; அதற்கும் "பக்தி பரிபாலன சங்கம்" என்று பெயர்; இது பதினேந்தாம் கிரகரி என்னும் பாப்பானவரால் ஏற்பாடாயிற்று; அவருக்குப் பின்வந்த பாப்புகள் அதற்குச் சகாயமாக அநேக பணங்களும் வருமானங்களும் உண்டாகும்படி செய்தார்கள்; அதனுலே ரோமக்குருக்கள் தொலைதூரமான இடங்களுக்குப் போகும்படி வகுவாயிற்று; பலவகையான புஸ்தகங்களும் அச்சிடப்பட்டன; சத்தியவேதத்தையும் மொழிபெயர்த்து காலா இடங்களுக்கும் அனுப்பினர்கள்; குருக்கள்மாரும் அஞ்ஞானிகளும் படிப்பதற்கேற்ற வித்தியாசாலைகள் ஏற்பாடாயின; பலத்தாழ்ச்சியாயிருந்த குருக்களுக்குப் பொருள் சகாயத்துக்குரிய ஆகார சங்கங்களும் உண்டாயின; 1663-ம் வருஷத்தில் பிரான்ஸ் தேசத்தில் ஸ்தாபகமான பிரதேச மிஷன் குருக்களுடைய சங்கமும், பாரிஸ்பட்டணத்து வித்தியாசாலையும் வெகு பிரபலமாயிருந்தன; அவைகளிலிருந்து அநேகம் ஜெசுயித்தரும் சங்கியாசினிகளும் அஞ்ஞானிகளுக்கு உபதேசிக்கும்படி புறப்பட்டுப் போனார்கள்.

Societies for propagating popish faith.

இவர்கள் ஆசியா கண்டத்திலுள்ள பல தேசங்களுக்குப் போய்த் தங்கள் கோட்பாடுகளை வெகு ஜாக்கிரதையோடும் விடாமுயற்சியோடும் கூறிவந்தார்கள்; சீனதேசத்தில் அவர்கள் பிரயாசங்கள் அதிகமாய்ச் சித்தியாகிவந்தன; அதனுலே அத்தேசத்துச் சக்கரவர்த்தி, 1692-ம் வருஷத்தில் கிறிஸ்துமார்க்கம் தன் இராஜ்யத்துக்கு அனுகூலமுள்ளது என்றும், பிரஜைகள் தங்கள் இஷ்டப்படி அந்த மார்க்கத்தை அனுசரிக்கலாமென்றும் விளம்பரஞ்செய்ததுமன்றி, தன் அரண்மனைக்குச் சமீபமாகக் கிறிஸ்துமார்க்க ஆலயம் ஒன்றைக் கட்டும்படியாகவும் கட்டளையிட்டான்.

Efforts of Romish priests in China.

அப்படியே பாப்புமார்க்கத்துக் குருமார் சீனதேசத்துக்குச் சமீபமாயுள்ள ஜப்பான்தீவிலும் தங்கள் மார்க்கத்தைப் பிரசித்தஞ்செய்து, அனேகம் ஜனங்கள் அதை ஏற்றுக்கொள்ளும்படி முயற்சித்தனர்; ஆயினும் அவர்கள் இராஜாங்கத்துக்கடுத்த காரியங்களில் தலையிட்டு, வஞ்சனையான தந்

In Japan.

திர உபாயங்களை கடப்பித்து, கலகங்களையும் கட்சிகளையும் உண்டாக்கினபடியால், அத்தேசத்து அரசன் 1615-ம் வருஷத்தில் கிறிஸ்தவர்களைத் தண்டிப்பதற்கும்படியாயும், குருமாரைத் தூரத்திவிடும்படியாயும் சட்டம் பிறப்பித்தான்; அதனுலே அத்தீவின் கிறிஸ்துமார்க்கம் என்ற பெயரே இல்லாதபடிக்கு முற்றிலும் அழிந்துபோயிற்று; அப்படியே 1666-ம் வருஷத்தில் தொங்குவின் இராஜ்யத்திலும் கிறிஸ்துமார்க்கமே தேசத்தி விருக்கலாகாதென்று சட்டம் ஏற்பட்டது.

இந்த நூற்றாண்டில் ரோமக் குருக்களால் ஸ்தாபகமான எல்லா மிஷன்களிலும், தென்இந்தியாவிலுள்ள மதுரையில் உண்டான மிஷன் அதிக விசேஷமானது; இது ஜெசுயித்தரைச்சேர்ந்த தத்துவபோதகர் என்னும் ராபர்ட் நோபிலி என்பவரால் ஏற்பாடாயிற்று; இவர் ஜனங்களைப் பாப்புமார்க்கத்தில் இழுக்கும்படி, கிறிஸ்துமதத்துக்குப் பொருந்தாத தந்திர உபாயங்களைப் பிரயோகித்தார்; பிராமணர் உயர்ந்த ஜாதியென்று கண்டு, அவரும் பிராமணவேஷம் பூண்டு, கடை உடை பாவனைகளில் பிராமண ஆசாரம் தப்பாமல் நடந்துவந்தார்; லயோலா என்பவருக்குச் சேர்ந்தவரிருந்த இவர் பிரபுகுலத்தான் என்று காட்டினர்; அவர் இப்படிப்பட்ட தந்திரங்களைப் பிரயோகித்ததினுலே உயர்ந்த பிராமணர்களில் பன்னிரண்டுபேர் ரோமன் மார்க்கத்தை அனுசரித்துக்கொண்டனர்; அவர்களால் அநேகம் ஆயிரம் ஜனங்கள் இந்த வஞ்சனைக்கு உட்பட்டார்கள்; அவர் இறந்தபின்பு அந்த மிஷன் சீர்கெட்டுப்போயிற்று; ஆயினும் பிரான்ஸ் தேசத்திலும், போர்த்துக்கல் தேசத்திலுமிருந்துவந்த ஜெசுயித்தரைச் சேர்ந்த பிராமணர்களில் அநேகர் இந்த மிஷனை அனுகூலப்படியே நடத்திவர முயற்சிகள் செய்தனர்; ஆயினும் 1744-ம் வருஷத்தில் ரோமாபுரியில் பாப்புவாயிருந்த பதினாலாம் பெனிடிக்ட் என்பவர் ஜெசுயித்தர் செய்த தந்திர உபாயங்களையெல்லாம் கேள்விப்பட்டு, மதுரையிலும் கர்நாடகத்திலும் இருந்த மிஷன்களை எடுத்துப்போடும்படி கட்டளை பிறப்பித்தார்; ஜெசுயித்தர் கள்ளை வரும்படி நீசை செய்யலாமென்ற வாக்கியநீதத்தைத் தங்களுக்குச் சட்டமாக வைத்துக்கொண்டு, தர்மசாஸ்திரங்களையெல்லாம் அனுசரித்து, சமயபைப் பெருக்கும்படி பார்த்தார்கள்; அறிவினிதினும் துணிவார்க்கதினும் அமிழ்ந்திருந்த ஜனங்களுக்குச் சத்தியமார்க்கத்தின் சாரத்தைப்

புகட்டிக் குணப்படுத்தவேண்டுமென்று பாராமல் தொகை பெருகும் படி அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, சபையிலே சேர்த்துக் கொண்டார்போலும் என்று நினைத்தார்கள்; அதற்கு இக்காலத்தி லிருக்கப்பட்ட அனக்தம் சோமானித்தாருடைய உடன்கையே போத்த திருஷ்டாத்தமாம்.

Contest between Jesuits and Jansenists.

இப்படிப் பாப்புமார்க்கக் குருமார் அந்நியதேசங்களுக்குப் போய்த் தங்கள் மார்க்கத்தைப் பிரசித்தஞ் செய்யும்படி முயற்சித்துவந்தாலும், தங்கள் சொந்த தேசத்தில் அவர்களுக்குள் பல கட்சிகளும் கலகங்களும் உண்டாயிருந்தன; ஜெசுயித்தருக்கு ஜான்சனிஸ்தர் என்னும் வகுப்பார் ஜன்மவிரோதிகள்; இவர்களுக்கு கொருசேவியு ஜான்னேயு என்னும் கண்காணிகளாயிருந்தார்; கல்விமானுயிருந்த இவர் சிறுவயதில்தானே அகுஸ்தீன் என்பவருடைய தூல்களையெல்லாங் கற்று, மனுஷன் கடேறுவதற்குத் தேவகிருபை அவசியமாய் வேண்டியதென்ற சத்தியத்தைச் சாதித்து ஓர் புஸ்தகஞ்செய்தார்; அதை ஜெசுயித்தர் பார்த்து, கடுக்கோபமாகி, அதை தீர்மூலமாக்கிப்போடவேண்டுமென்று தீர்த்து, பாப்புவுக்குத் தெரியப்படுத்தினார்கள்; அவருக்கும் அந்தப் புஸ்தகம் வெறுப்பாயிருந்ததினாலே, அதை அக்கினிதானஞ் செய்துபோடவேண்டுமென்றும், அதை வாசிக்கிறவர்களைத் தண்டப்படுத்தவேண்டுமென்றும் கட்டளையிட்டார்; ஆயினும் பெரியோர்களிலும் வித்துவான்களிலும் அனேகர் அந்தப் புஸ்தகம் சத்திய உபதேசங்களை விளக்கிக்காட்டும் ஓர் நல்லநூல் என்று சொன்னதினாலே, ஜெசுயித்தருக்கும் ஜான்சனிஸ்தருக்கும் பெரிய வாக்குவாதமுண்டாயிற்று; ஜெசுயித்தர் தீயாயத்தினாலே தங்கள் எதிரிகளை ஜெயிக்கப் பாராமல், கட்டாயத்தினாலும் அதிகார சோணையினாலும் அவர்களை மடக்கும்படி பார்த்தார்கள்; அப்படியிருந்தும் அவர்கள் தொகையும் கொள்கைகளும் வளர்ந்துகொண்டே வந்தன.

Sufferings of Lutherans. Treaty of Westphalia, A. D. 1648.

இப்படி ஜெசுயித்தரும் ஜான்சனிஸ்தரும் போராடிகொண்டிருக்குங்காலத்தில், ஜர்மன்தேசத்திலுள்ளபுரோட்டெஸ்தாண்டர்களுக்கு சோபச்சபையாரால் பெரியதுன்பம்சேரிட்டது; ஜெசுயித்தருடைய வஞ்சகத்தினால்களுக்கு அனுகூலியே ஜாவகம் சத்தார் இடங்கொடுத்து, 1618-ம் வருஷத்தில் புரோட்டெஸ்தாண்

டர்களுக்கு விரோதமாக யுத்தஞ்செய்யும்படி ஆரம்பித்தனர்; அதில் புரோட்டெஸ்தாண்டர் தோல்வியடைந்து, பயங்கரமான இம்சைகளுப் பட்டனுபவிக்கும்படி நேரிட்டது; அவர்களுக்கு உண்டான துன்பங்களோப் பொதுக்மாட்டாமல், சுவீடன் தேசத்து இராஜாவாகிய கஸ்டேவு அடால்பு என்பவரைத் தங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்; அப்படியே அவர் 1629-ம் வருஷத்தில் சிறிது சேனையைச் சேர்த்துக்கொண்டு, ஜர்மன் தேசத்துக்கு வந்து, 1632-ம் வருஷத்தில் லுகன் என்ற இடத்தில் போர் செய்யும்போது இறந ்துபோனார்; அதற்குப்பின் அவருடைய தளகர்த்தர்கள் யுத்தத்தை நடப்பித்துக்கொண்டே வந்தனர்; இப்படி முப்பது வருஷகாலமாய்ப் போர் நடந்துவந்தபினால், இருபட்சத்தாரும் மனவெறுப்படைந்து, 1648-ம் வருஷத்தில் உவெஸ்ட்பாலியா என்ற இடத்தில் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார்கள்; இதில் ஜந்தாரானருக்குப் புதிதாய் அநேக சலுகைகளோ சோமானித்தார் ஸ்திரப்படுத்திக்கொடுக்கச் சம்மதித்தார்கள்.

Puritans of England. Millenary Petition.

ஜர்மன்தேசத்திலுள்ளபுரோட்டெஸ்தாண்டருடைய காரியம் இப்படியிருக்கும்போது, இங்கிலாந்து தேசத்திலுள்ளசபையின்நிலைமையைப்பார்ப்போம்; 1603-ம் வருஷத்தில் எலிசபேத் ராஜாத்தி இறந்துபோக, ஸ்கொத்லாந்து தேசத்துக்கு இராஜாவாயிருந்த ஜேம்ஸ் என்பவர் அவருடைய பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்; இவருடைய காலத்தில் பியூரிற்றன்ஸ் என்று சொல்லப்பட்டவர்கள் தங்களுக்கு கேமம் கிடைக்குமென்று கண்டி, சமார் ஆயிரம் போதகர்மார் கூடி ஜேம்ஸ் விண்ணப்பஞ் செய்துகொண்டனர்; அதில் கண்டிருந்த முக்கிய விஷயங்கள் எவையெனில் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்போது ஜெபவையடையாளம் போடப்படாதென்றும், பின்னோனே அச்சமயத்தில் ஒரு கேள்வியும் கேட்கப்படாதென்றும், எபிசோன் ஞானஸ்நானம் தொடுக்கப்படாதென்றும், விவாகஞ் செய்துகொள்ளத்தில் மோதிரம் போடக்கூடாதென்றும், தேவாராதனை நடத்தும்போது குருவானவர் வீசேத உடுப்பும் போட வேண்டியதில்லையென்றும், பரிசுத்த நீற்காருனை ஆசீர்வாத முறைமையை சற்றுச் சருக்கவேண்டுமென்றும், பரிசுத்த நாட்களை அனுசரிக்கவேண்டியது அவசியமில்லையென்றும், இன்னும் பல காரியங்களே. ஜேம்ஸ் என்னும் அரசன் இருபட்சத்தாருடைய காரியங்களையும் ஆராய்ந்

தன் கோர்ட்டில் கூடிவரும் சங்கத்தில் விசாரணை செய்தாசுக சொல்லியும், அவர் பியூரிற்றனர் பட்சத்திலிராதலினால், அவர்கள் இண்ணமாய் எண்ணியதெல்லாம் பின்னமாய்ப் போயிற்று; அச் சங்கத்தார் கல்வீன் என்பவருடைய கொள்கையைத் தள்ளிவிட்டு, ஆர்மீனியருடைய கோட்பாடுகளை அனுசரித்துக்கொண்டார்கள்; இச்சங்கத்தாரால் இங்கிலாந்துசபையின் ஜெபபுஸ்தகத்தில் இல மாறுதல்கள் செய்யப்பட்டன. அவை எதுவென்றால்:—ஞாயிறுபதேச வினவிடை இப்போது இருக்கிறபடி திருப்பப்பட்டது. பொது வான ஸ்தோத்திரஜெபம் தவிர மற்ற சில ஸ்தோத்திரஜெபம் இவர்களால் புதிதாய்க் கூட்டப்பட்டது. ஸ்திரீகள் ஞானஸ்நானம் கொடுக்கப்படாதென்று நிர்மானிக்கப்பட்டது. தன்னுபடி ஆலயங்களிலிருந்து தேவாராதனையில் வேதபாடம் வாசிக்கப்படாதென்று தீர்க்கப்பட்டது. சத்தியவேதத்தைப் புதிதாய்த் திருப்பவேண்டுமென்ற உத்தரவுண்டாயிற்று. அக்காலத்தில் காண்டர்புரிக்குச் சிரேஷ்ட அத்தியக்ஷராயிருந்த பாங்க்ராவ்ற் என்பவர் பியூரிற்றனருக்குக் கொடிய விரோதியாயிருந்து அவர்களைத் துன்பப்படுத்திவந்தார்; அவருடைய இம்சை பொறுக்கமாட்டாமல், பியூரிற்றனைச்சேர்ந்த அநேக குடும்பத்தார் அமெரிக்காவிலுள்ள நியு இங்கிலாந்துக்கும், வர்ஜினியாவுக்கும் வலசைபோயினர்.

அரசனும் பிரபுக்களும் மகா சங்கம் கூடும்போது, வெடிமருந்து ஏல் எல்லாவையுஞ் சர்வகாசுசெய்ய வேண்டுமென்று 1605–ம் வருஷம் கவம்பர்மீ 5டை சோமஸன்மார்க்கத்தார் சதியோசனைசெய்து, அதை நிறைவேற்றும்படி கைபோல்ஸ் என்பவனே ஏற்படுத்தியிருந்தார்கள்; ஆயினும் திருவுளச்செயலால் அத்தச் சதிமோசம் வெளியாயிற்று.

Gunpowder Treason, A. D. 1605.

ஜேம்ஸ் இராஜன் நிருபித்த முக்கியமான பிரமாணங்களில் இப்போது இங்கிலீஷில் பிரசுரமாயிருக்கும் சத்தியவேத புஸ்தகத்தை மொழிபெயர்க்கும்படிசெய்த சட்டமே விசேஷித்ததாயிருந்தது; நாலாம்முறை மாவிலைகையில் சங்கங்கூடி வந்தபோது, பியூரிற்றனர் கேட்டுக்கொண்டதினிமித்தம் ஜேம்ஸ் இராஜன் மேற்சொல்லிய திருப்புதலைச் செய்யும்படி உத்தாவுகொடுத்தார்; அதற்குப் பெயர்பெற்ற இம்பத்தேழு வேதசாஸ்திரிகள் நியமிக்கப்பட்டனர்; இவர்களில் சிலர் இறந்தும், சிலர் தேசத்தைவிட்டும் போ

Authorized Version, A. D. 1611. English Bible.

தினால், காற்பத்தேழுபேர்மாத்திரம் அவ்வேலையை ஆரம்பித்தார்கள்; அவர்கள் ஆறு கூட்டமாய்ப் பிரிந்து, ஒவ்வொரு வகுப்பார் ஒவ்வொரு பங்கைத் திருப்பும்படிக்கும், இரண்டு சர்வகலா வித்தியாசாலையிலுள்ள கலை நிபுணர்கள் பிழைப்பார்க்கும்படிக்கும் இராஜகட்டளை பிறந்தது; இந்த மொழிபெயர்ப்பு 1611–ம் வருஷத்தில் முதல் முதல் பிரசித்தமாயிற்று; இதற்குமுன் காம் கவனித்ததுபோல அக்காலத்துக்குமுன் ஒன்பது மொழிபெயர்ப்புகளிருந்தன; 1380–ம் வருஷத்தில் ஜான் உவிக்லிவ் என்பவர் செய்தி வேதாகம மொழி பெயர்ப்பும், 1535–ம் வருஷத்தில் டின்தல் என்பவர் செய்த இந்த மொழிபெயர்ப்புகளோச்சொண்டி மைல்ஸ் கவர்டேல் என்பவர் பெயர்காட்டாமல் இங்கிலீஷில் செய்த சத்தியவேத மொழி பெயர்ப்பும், 1537–ம் வருஷத்தில் தோமாஸ் மத்தேயு என்ற பெயரால் ஜான் ராஜர்ஸ் என்பவர் செய்த சத்தியவேத மொழிபெயர்ப்பும், 1539–ம் வருஷத்தில் டாவர்னர், நொங்மர் என்பவர்கள் செய்த மொழிபெயர்ப்பும், 1559–ம் வருஷத்தில் ஜெனிவாப்பட்டணத்தில் பியூரிற்றன்ஸ் என்று சொல்லப்பட்டவர்களால் உண்டான மொழிபெயர்ப்பும், 1568–ம் வருஷத்தில் அங்கிலேய அத்தியக்ஷர்கள் செய்த மொழிபெயர்ப்பும், 1582–ம் வருஷத்தில் ரோமச்சபை குருமார் தீம்ஸ் பட்டணத்தில் கூடிச்செய்த மீனிவ் புதியஏற்பாடும், 1610–ம் வருஷத்தில் பாப்புமார்க்கத்தார் டோவாய்பட்டணத்தில் செய்த பழைய ஏற்பாடும் பிரதானமானவைகள்.

1625–ம் வருஷத்தில் முதலாம் ஜேம்ஸ் இராஜன் நிர்ஜீவனாபோக, அவருடைய குமாரனுடைய முதலாம் சார்ல்ஸ் என்பவர் பட்டத்துக்கு வந்தார்; இவர் சபை சம்பந்தமான விஷயங்களில் தம் தகப்பனாருடைய பிரமாணங்களைக் கைக்கொண்டுவந்ததுமன்றி, பியூரிற்றனர் கள் முன்போல் சங்கடப்படும்படி இடைக்கொடுத்தும் வந்தார்.

Charles I, A. D. 1625.–

1633–ம் வருஷத்தில் காண்டர்புரி சிரேஷ்ட அத்தியக்ஷ உத்தியோகத்தைப் பெற்ற லாட் என்பவர் பாப்பு மதத்துக்கு அதிக சலாவியத்தை உண்டாக்கினாரும், பிற்காலத்தில் சார்ல்ஸ் என்னும் அரசனுக்கு வந்த சில பொல்லாப்புகளுக்கும் காரணராயிருந்தார்; இவர் பியூரிற்றனருக்குச் செய்த கிஷ்டங்களெல்லாம் சொல்ல யேலாமலில் பெரிய பிரபந்தமாய் வரும்; ஒரு திருஷ்டாந்தத்

Archbishop Laud, A. D. 1633.



டின்றல் சுவிசேஷத்தை மொழிபெயர்ப்பது.

திலுல் இவருடைய தன்மை மோங்கும்; பியூரிற்றனரைச் சேர்ந்த
லேற்றன் என்னும் வேதசாஸ்திரியார் அத்தியரை ஆருகைக்கு விரோ
தமாக மூறைப்பாடி செய்தனனித்தம் அவர்மேல் குற்றம் வ
படித்தி, அவருடைய காதை அறுக்கவும், மூக்கை வெரவும், மு
தைச் சூட்டுக்கோலால் பொசுக்கவும், சூன்முனைரோம் ச
கொண்டி அடிக்கவும், பதினைருவருஷம் மறியவிலிருக்கவு
புச்செய்தார்.

Many Puritans settle in America.

பியூரிற்றனர்கள் இவ்வித குருரவேதனைகளைப் பட்டதினாலே, அ
கக்கூடாதென்று அநேக ஆயிரம்பேர் ஐ
நிக்காவுக்குப் போய், பயிரிட்டு ஜீவன
னிஞர்கள்; லாட் என்பவர் அதிகாரத்
ணிக்கொண்டவந்த பன்னிரண்டு வருஷங்களில் காலாயிரம்
அமெரிக்காவுக்கு வலசைபோய்விட்டதினால், இவ்வரந்தேசம்
சுமார் அரைலட்சம் ஜனம் குறைந்துபோயினர்; அவர்கள் இராஜ்
டனேயிருல் தடைபடவிட்டால் இன்னும் அநேகம்பேர் போய்
வார்கள்.

Laud and Charles I beheaded. A. D. 1649.

அக்காலத்தில் இவ்விலாந்துதேசத்தில் கலகங்கள் அதிகமாயி
அரசனுக்கும் பார்லமென்டென்னும் மகா
கத்தாருக்கும் பெரிய சம்வாதம் கேரிட்டது
குடிகளெல்லாம் லாட் என்பவருடைய அ
டக்கைகளினுலும், அதிகாரிகளுடைய கொடுமையினுலும் அதி

க்கமடைத்தனர்; லாட் என்பவர் இராஜதுரோகஞ் செய்தவர்
ன்று நிரூபிக்கப்பெற்று, வெகுகாலம் காவலிலிருந்தபின் சிரச்சேதனை
டைத்தார்; அதோடே அத்தியரை ஆருவகை சீர்திருத்தமாயிற்று;
ருடம் வருஷம் ஜனவரிமீ 30வ்வில் முதலாம் சார்ல்ஸ் இராஜன்
ச்சேதமடைத்தார்.

இவ்வாசன் இறந்த இருபதிரண்டு காருக்குப்பின் வெஸ்ட்
ன்ஸ்டர் என்ற இடத்தில் வேதசாஸ்திரிகள் ஒரு சங்கங்கூடி, மகா ஆங்கதாளாம்போல் அத்தியரை ஆருவகையைத் தள்ளிவிட்டு, பொது வான நெடியுஸ்தகத்துக்குப்பதிலாகத் தேவாராதனைக்கேற்றவேறொரு காரணத்தை ஸ்தாபித்தனர்; அதுவுமன்றி வெஸ்ற்மின்ஸ்டர் விசுவாசப்பிரமாணம் என்ற பெயரினால்வே வேறொரு காரியும் செய்தார் கள்; ஸ்கொத்லாந்து தேசத்துச் சபைகளால் அச்சுப் புஸ்தகம் அக்கால முதற்கொண்டு அங்கீகரிக்கப்பட்டிவருகிறது; "உலெஸ்ற்மின்ஸ்டர் வேதாதிதேசச் சருக்கம்" என்ற விரிவிடைகள் அடங்கிய இன் னொரு புஸ்தகத்தையும் செய்தார்கள்.

Westminster Assembly of divines.

During the Commonwealth Presbyterianism spreads.

முதலாம் சார்ல்ஸ் என்பவர் இறந்துபோனபிற்பு, இராஜாங்கத் தைத் தாங்கத்த காரியம் நிலைகுலைந்து, சின்றது; கொஞ்சகாலத்துக்குள் ஆலிவர் குரோம்வெல் என்பவர் "தேசபாதுகாவலன்" என்றப்பட்டம் பெற்று அரசாட்சிசெய்தவர்; அவருடைய காலத்தில் பிரஸ்பித்தீரியருடைய சபைமுறை அதிகப் பிரபலமாயிற்று; அதனால் அத்தியரை சபையாரும் தவிர, மற்றப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களெல்லாரும் தங்கள் இஷ்டப்படி கூடக இடம் கொடுக்கப்பட்டனர்; இவருடையகாலத்தில் கல்வியும்தேயபத்தியும் தேசத்தில் விர்த்தியடைந்து வந்ததென்று எல்லோரும் சொல்லுகிறார்கள். இவருடைய அரசாட்சியில் குவேக்கர் என்ற பெயர்வழங்கிய வருப்பார் தோன்றினர்கள்; இவர்களுக்கு "பேசுகர் சங்கம்" என்றும் பெயர்; இதை ஏற் மகாத்மாவினர் ஜியார்ஜ் பாக்ஸ் என்பவர்; இவர் 1624-ம் வருஷம் லெஸ்டர் யாகாணத்திலுள்ள டிலேற்றம் வூரித் திறந்தவர்; தேசவத்தொழில் பார்த்துவந்த இவருடைய தகப்பன் இவ னை மாடுமேய்க்கிற வேலைக்கும், சப்பாத்துத் தைக்கிற தொழிலுக் கும் ஏற்பித்திவைத்திருந்து, அந்த வேலைகளில் திருப்திகரமில்லா

Quakers. George Fox, 1647.

இலாந்து தேசத்துச் சரித்திரத்தில் (Revolution) "ரெவலூஷன்" என்று சொல்லப்படுகிற இந்தப் பெரிய மாறுதல் 1688–ம் வருஷத்தில் நடந்தது.

Religious freedom allowed by William.

உவில்லியம் என்பவர் இங்கிலாந்துதேசத்துக்கு அரசனானது அல்லாமலும் அவர் தம்முடைய அரசாட்சியில் சத்தியமார்க்கம் விர்த்தியாவதற்கு அனுகூலமாயிருந்தது; ரோமாபுரித்தானை இராஜாங்கத்துக்கடுத்த உத்தியோகங்களில் நியமிக்கக்கூடாதென்பதாகி மகா சங்கத்தாரால் ஒரு சட்டம் பிறந்தது; அந்நியகூசபை இராஜ்யத்துக்குரிய சபையாக ஏற்பாடாயிற்று; ஆயினும் ஒருத்துவமார்க்கத்தாராகிய சொஸினியரைத்தவிர, மற்றெந்த வகையான் நான்கான்வர்மிஸ்தர்களும், மதவிஷயங்களில் தங்கள் இஷ்டம்போல் நடக்கலாமென்று உத்தாவிருந்தது; இவ்வரசன் இப்படி அரசமுறையிலும் மதவிஷயங்களிலும் வெகு உண்மையாயும் பக்திவைராக்கியமாயும் நடந்து, 1702–ம் வருஷத்தில் இறந்துபோனார்.

Socinians or Unitarians.

இவ்வரசன் காலத்தில் ஒருத்துவமார்க்கத்தாராகிய சொஸினியருக்கு மதவிஷயத்தில் அதிக சலாக்கியமில்லையென்று காட்டியிருப்பதால், இவர்கள் யார் என்றும், இவர்கள் கோட்பாடுகளின் தன்மை எவ்வகைப்பட்டதென்றும் ஒருவாறு அறிந்துகொள்வது உத்தமமாயிருக்கும். "தேவத்துவத்தில் சமமான மூவர் உண்டு" என்னும் திரித்துவ உபதேசத்தை மறுத்து, இயேசுகிறிஸ்துவைச் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு வஸ்துவென்று சாதிக்கிறவர்களே ஒருத்துவ மார்க்கத்தார். இவர்களுக்குள் பலவகுப்பார் உண்டு; அவர்களில் முக்கியமானவர்கள் அரியானரும் சொஸினியருமாம். அரியானருடைய கொள்கைகளை இதற்குமுன் எடுத்துக் காட்டியிருக்கிறோம்; இப்போது சொஸினியரைக்குறித்துச் சில விசேஷங்களைச் சொல்லுவோம்: தங்களைக் காட்டிலுள்ள சொஸினி என்னும் பிரபுத்வ குலத்தைச்சேர்ந்த லீலியு சொஸினியு என்பவரால் அவர்களுக்கு அந்தப் பெயருண்டாயிற்று; இவர்கிறித்துவம், ஜன்மப்பாவம், தேவனை அநாதித்தீர்மானம், கிறிஸ்துவின் பிராயச்சித்தம் முதலிய பிரதான உபதேசங்களைத் தள்ளிவிட்டு, "கிறிஸ்துவானவர் தேவ அருள்பெற்ற ஒரு சாதாரண மனுஷன்" என்றும், "பரிசுத்த ஆவியானவர் பிதாவானவருடைய சக்தியேயன்றி மற்றொன்றல்ல" என்றும் போதித்து, 1662–ம் வருஷத்தில் குரிச்பட்டணத்தில் இறந்துபோனார்.

Spread of Socinianism.

இந்த உபதேசங்களை இவருடைய மருமகனுடைய பால்ற்று சொஸினியு என்பவர் போலாந்திலும் அதைச் சுற்றியிருந்த தேசங்களிலும் பிரசித்தஞ்செய்தார். அவைகளை அநேகர் அங்கீகரித்துக்கொண்டனர்; 1638–ம் வருஷம் வரையில் இவர்கள் கட்சி மேன்மேலும் பலப்பட்டுக்கொண்டேவந்தது; பிற்பாடு இவர்களுக்கு ரோமானித்தாரால் துன்பங்கள் நேரிட்டபடியால் பல இடங்களுக்குச் சிதறிப்போய்விட்டார்கள்; இவர்களுடைய கோட்பாடுகள் அமெரிக்கா கண்டத்திலும் பிரபலமாகிவந்தன; இவர்களில் அநேகர் (Massachusets) மாசசூயுசெற்ஸ் என்னும் மாகாணத்தில் அதிகமாய் வசித்துவருகின்றனர்; இவர்களெல்லாரும் ஒசேவிதமாய்த் தங்கள் கொள்கைகளைப் போதிக்கிறதில்லை; இந்த நூற்றாண்டிலும், இதற்கடுத்த நூற்றாண்டிலும் கல்வியில் சிறந்தவர்களாயிருந்தவர்களில் அநேகர் இவர்கள் கட்சியைச் சேர்ந்துகொண்டனர்.

Principles and spread of Calvinism.

மேற்சொன்ன உவில்லியம் இராஜ ஆளுகை செய்யுங்காலத்தில் புரோட்டெஸ்ற்றண்டு மார்க்கம் இங்கிலாந்து தேசத்தில் வளர்ந்தேறிவந்ததுபோல், ஐரோப்பாகண்டத்திலும் சேர்ந்திருக்கப்பட்ட சபையின் காரியங்கள் விர்த்தியடைந்துகொண்டேவந்தன; விசேஷமாய், கல்வீன் என்பவருடைய கொள்கைகள் காலா இடங்களிலும் பிரபலமாகிவந்தது; பிரான்ஸ், ஹாலாந்து, இங்கிலாந்து, ஸ்கொத்லாந்து, ஹங்கேல்ஸ், பீட்மண்டு, ஜர்மன், போலாந்து, புருஷியா முதலான தேசங்களில் அவர் கோட்பாடுகள் அதிகமாய்ப் பிரசித்தமாயின. இவருடைய கொள்கைகளில்; 1–வது. கடவுளின் அநாதித்தீர்மானம்; 2–வது. இச்சத் தீர்மானத்தின்படி அநாதியில் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு இயேசுகூசுகர் சம்பாதித்த மீட்பு; 3–வது. மனுஷருடைய சீர்கெட்ட நிலைமை; 4–வது. தேவனுடைய பலிசமுள்ள அழைப்பு; 5–வது. இப்படி அழைக்கப்பட்டவர்கள் முடிவுபரியந்தம் நிலைத்திருப்பது நிச்சயம்; இவைகளேமே விசேஷமானவைகள்.

Presbyterianism.

முன்சொல்லியிருப்பதுபோல், இவர் ஏற்படுத்தின சபை ஆளுகைக்குப் பிரஸ்பிற்றீரியன் ஆளுகை என்று பெயர். பிரஸ்பிற்றீரி என்பதுல் கிரேக்கு பாஷையின் மொழி; அதற்கு மூப்பர் என்று அர்த்தம். பிரஸ்பிற்றீரிய சபையார் அந்தச் சபையின் குருவும், அதிலிருக்கிற மூப்பர்களுக்

கூடிய (Session) செஷன் சங்கத்தையும்; ஒவ்வொரு எல்லைக்குட்பட்ட சபைகளிலிருக்கிற போதகர்களும் மூப்பர்களுங்கூடிய (Presbytery) பிரஸ்பிற்றீரியன் சங்கத்தையும், ஒவ்வொரு மாகாணத்திலிருக்கிற பிரஸ்பிற்றீரிகளெல்லாங்கூடிய (Synod) சினட் என்னும் சங்கத்தையும், தேசமெங்குமுள்ள சினட்கள் எல்லாஞ்சேர்ந்த (General Assembly) ஜெனரல் அசம்பிளி என்னும் பெரிய சங்கத்தையும் ஏற்படுத்தி ஆண்டுவருகின்றனர்; தாழ்ந்த நியாயஸ்தலங்களின் தீர்ப்புகளைப்பற்றி, உயர்ந்த நியாயஸ்தலங்களுக்கு முறையிட்டுக்கொள்வதுபோல், அந்தச் சினட்களிலிருக்கும் முறைப்பாடுகளை ஜெனரல் அசம்பிளிகளுக்குத் தெரியப்படுத்திக்கொள்வார்கள்.

Its spread.

ஐடில்பேர்ச் வினுவிடைப் புஸ்தகத்தில் அமைந்திருக்கும் கல்வீன் என்பவருடைய அபிப்பிராயங்கள் மேற்சொன்னபடி பல இடங்களிலும் பிரபலமடைந்திருந்தபோதிலும், சபைகளெல்லாம் போதனையிலாவது, சபை ஆளுகையிலாவது ஒன்றுபோலிருக்கவில்லை. ஹாலாந்து, போலாந்து, ஹங்கெரி என்னும் தேசங்களிலிருக்கிற சபைகள் தேவனுடைய ஆதித் தீர்மானமென்னும் உபதேசத்தைத் தள்ளிவிட்டன; இங்கிலாந்துசபை அத்தியக்ஷ ஆளுகையை முன்போல வைத்துக்கொண்டது; பொஹீமியா, மொரேவியா தாகிசளிலுள்ள சபைகள் கல்வீன் என்பவருடைய விசுவாசப்பிரமாணத்தை அங்கீகரித்தாகொண்டாலும், தங்களுக்கிருந்த அத்தியக்ஷ ஆளுகையை நீக்காமல் வைத்துக்கொண்டார்கள்; பிரான்ஸ் தேசத்திலும், ஸ்கொத்லாந்து தேசத்திலுமுள்ள சபைகள் கல்வீன் என்பவருடைய கொள்கைகளை அனுசரித்துக்கொண்டன; ஸ்கொத்லாந்து தேசத்துச் சபை ஜெனிவா வினுள்ள கன்சிஸ்தரி சங்கத்தோடுகூட ஒரு பிரதான சங்கத்தையும் ஏற்படுத்திக்கொண்டது.

Arminianism.

இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் "அர்மீனியர் பிரிவினை" என்ற ஒரு பெரிய பிரிவினை யுண்டாயிற்று. லேடன்பட்டணத்து வேதசாஸ்திரப் பண்டிதராயிருந்த ஜேம்ஸ் அர்மீனியு என்பவர் கல்வீன் என்பவருடைய கொள்கைகளை ஆதியில் அங்கீகரித்தவராயிருந்தும், பிற்பாடு தேவனுடைய ஆதித் தீர்மானத்தையும் இருவகையைபும்பற்றிய விஷயங்களைத் தள்ளிவிட்டு, மேற்சொன்ன பிரிவினைக்குத் தலைவரானார். 1-வது. தேவன் முடிவுபரியந்தம் நிலைநிற்கத்தக்க மனுஷர்களை

இரட்சிக்கவும், சாகும்பரியந்தம் பாவத்தில் நிலைத்துத் தேவகோபத்தினாலே பிரபத்தனங்களை எதிர்த்துநிற்பார்களென்று முன்னறிந்தவர்களை நித்தியமாய் வேதனைப்படுத்தவும் அநாதியில் தீர்மானஞ்செய்ததால் பாவிகளை ஏற்றுக்கொள்வதும் தள்ளிவிடுவதும் அவர்களுக்குச் சுதந்தரமிருக்குமென்றும்; 2-வது. இயேசுகிறிஸ்து தமது புண்ணியபலத்தினால் எல்லா மனுஷருடைய பாவங்களுக்கும் பிராயச்சித்தஞ்செய்ததால் அவர்பேரில் விசுவாசம் வைக்கிறவர்களெவனுமே, மற்றெவரும் அவரது புண்ணியபலத்திற் பங்குடையார்களென்றும்; 3-வது. மனுஷர்கள் பாவஜென்மிகளாயிருப்பதால் அவர்கள் சீர்படுவதற்கு தேவாவியின் அருள் வேண்டுமென்றும்; 4-வது. மனுஷர்களைச் சீர்ப்படுத்தும் தேவகிருபை எதிர்க்கப்படாததல்ல என்றும்; 5-வது. மெய் விசுவாசத்தினால் நிலைநிறுத்தாகதரோடு இணையப்பட்டிருக்கிற பக்தர்களும், அந்தப் பாக்கியதசையை விட்டு மரண வீழ்ந்து, நித்தியகேடு அடைவது சாத்தியம் என்றும் போதித்தார்.

Synod of Dort, A. D. 1618.

அர்மீனியு என்பவர் 1609-ம் வருஷத்தில் இறந்துபோனார்; அதற்குமுன் அவருடைய கொள்கைகளோக் கல்வியிலும் செல்வத்திலும் திறந்திருந்த பிலர் ஒப்புக்கொண்டனர்; இந்தப்பட்சத்தாருக்கும், கல்வீன் பட்சத்தாருக்கும் ஓயாத வாக்குவாதம் உண்டாயிருந்தது; அதனாலே ஆளுஞ்சாட்டின் அதிபதியாயிய மாரிஸ் என்பவர் அவர்கள் தர்க்கத்தைத் தீர்க்கும்பொருட்டு, ஹாலாந்து தேசத்திலுள்ள டார்ட்பட்டணத்தில் ஒரு சங்கங் கூடிவரவேண்டுமென்று கட்டளை விட்டார்; அப்படியே அது 1618-ம் வருஷத்தில் கூடிற்று; இச்சங்கத்துக்கு ஹாலாந்துதேசத்து வேதசாஸ்திரிகளும், இங்கிலாந்து, ஸ்கொத்லாந்து, சுவிற்சர்லாந்து, பிரேமென், ஹெஸ்பலத்தினு என்ற நாடுகளிலிருந்து கல்வியில் திறந்தவர்களாய் விசேஷித்த ஸ்தானுபதிகளும் வந்திருந்தனர்; சங்கம் துவங்கினபோது, அர்மீனியர் முந்தி கல்வீனர் சாதித்துவந்த தேவதீர்மான உபதேசத்தை நிராகரிப்பதற்கு உத்தரவு கொடுக்கவேண்டுமென்று கேட்டார்கள்; அதற்குக் கல்வினர் தங்களுடைய கொள்கைகள் தப்பென்று அர்மீனியர் ருபிக்குமுன் அவர்களுடைய கோட்பாடுகள் சரியென்றி நிருவ்டாக்கப்படத்தவேண்டுமென்று சொல்லுகிறார்கள்; இப்படிச் செய்ய அர்மீனியர் சம்மதியாததினாலே அவர்களைச் சங்கத்தைவிட்டு நீக்கி, அவர்களுடைய கோட்பாடுகள் தப்பென்று சங்கத்தார் நிர்ப்பந்தஞ்செய்தனர்.

Persecution of Arminians by Calvinists.

இந்தத் தீர்மானம் உண்டானதின்பேரில் கல்வீனர் கர்வங் கொண்டு, அர்மீனியர்களை அநியாயமாய்த் துன்பப்படுத்த ஆரம்பித்தார்கள்; மோன்களாயும் உயர்ந்த அந்தஸ்துள்ளவர்களாயும் இருந்தவர்களில் அநேகரை அவர்கள் உத்தியோகங்களைவிட்டு நீக்கிவிட்டனர்; அவர்கள் போதகர்கள் பிரசங்கிக்கக்கூடாதென்று உத்தரவுண்டாயிற்று; அவர்களுடைய சபைகளுக்குப் பலவிதத் துன்பங்கள் நேரிட்டன; சங்கத்தார் செய்த தீர்மானத்தை எல்லாரும் சர்வசம்மதமாய் ஒப்புக்கொள்ளாததினாலே, அர்மீனியருக்குண்டாயிருந்த துன்பத்தைப் பற்றி அநேகம்பேர் முறையிட்டார்கள்; அதனாலே அவர்கள் பட்ட துன்பம் திகிர்ந்தது; அக்காள்முதற்கொண்டு இங்கான்பரியந்தம் ஐரோப்பாவின் பல தேசங்களிலும், இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும், அர்மீனியருடைய கொள்கைகளை அனுசரித்தவர்களில் அநேகர் அதிக மேம்பாடையவர்களாயிருக்கிறார்கள்.

Spread of Arminianism.

மற்றெல்லாரைப்பார்க்கிலும் ஹாலாந்து தேசத்தார் அர்மீனியரை அதிகக் குரூரமாய் நடத்திவந்தார்கள்; அக்காலத்தில் இராஜ்யபாரஞ்செய்த மாரிஸ் என்பவருடைய வுதவினால் அவர்களுக்குள் புகழ் பெற்றவராயிருந்த பானிவெல்ட் என்பவர் சிரச்சேதமடைந்தார்; இன்னும் அநேகம்பேர் துன்பத்தைப் பொறுக்கமாட்டாமல் அந்திய தேசங்களுக்கு ஓடிப்போனார்கள்; 1625-ம் வருஷத்தில் மாரிஸ் என்பவர் இறந்தபின் அவர் பட்டத்தைப்பெற்ற பிரடெரிக் ஹென்றி என்னும் அரசன் பல இடங்களிலும் சிதறுண்டுபோயிருந்த அர்மீனியரைத் தன் இராஜ்யத்துக்கு வரவழைத்து, அவர்கள் தங்களுடைய கொள்கைகளைத் தங்கள் இஷ்டப்படி அனுசரித்து நடக்கலாமென்ற கட்டளைகொடுத்தார்; அதன்பேரில் அவர்கள் அநேகம் கோயில்களைக் கட்டிக்கொண்டார்கள்; இக்கிய மாகாணங்களில் அவர்களுக்கு 34 சபைகளிருந்ததுமன்றி, 84 குருமாருமிருந்தார்கள். ஹாம்ஸ்டர்டம் பட்டணத்தில் அவர்கள் ஒரு விதஇயிர்சாலேயை ஸ்தாபித்திருக்கள்; அதில் அநேகம் வித்துவான்கள் இருந்தனர். பிற்காலங்களில் அவர்களுடைய கொள்கைகள் புரோட்டெஸ்டாண்டு தேசங்களிலெல்லாம் பிரசித்தமாயின; லாட் என்னும் அத்தியகாரின் அனுமதியினால் அவைகள் இங்கிலாந்துதேசமெங்கும் பரம்பின.

John Knox born, A.D. 1505.

இப்படி இங்கிலாந்தில் அர்மீனியருடைய கொள்கை பிரசித்தமானபோதிலும், ஸ்கொத்லாந்துதேசத்தில் கல்வீன் என்பவருடைய கொள்கைகளே அதிகமாய் வழங்கிவந்தன. இத்தேசத்தில் மார்க்ஸ் சரித்திரம் எப்போது உண்டாயிற்றென்று நிச்சயமாய்த் தெரியாது; ஆயினும் அது விர்த்தியடையும்படி செய்தவர்களில் யோவான் நாக்ஸ் என்பவர் பெயர்பெற்றவராயிருந்தார்; இவர் 1505-ம் வருஷத்தில் பிறந்து, வேதாகமசாஸ்திரத்தை கன்முக்க்ற, புரோட்டெஸ்டாண்டுடைய கொள்கைகளைப் பிரபலப்படுத்த ஆரம்பித்தார்; இவர் பிரான்ஸ தாஷ்டிரத்தினாலும், பதினைஸாங்கியத்தினாலும் ஸ்கொத்லாந்தின் அப்போஸ்தலன் என்றும் கனமான பெயரைப் பெற்றுக்கொண்டார்; இவர் ஜர்மன் தேசத்துக்குப் போயிருந்தபோது, கல்வீன் என்பவர் வாசஞ்செய்த ஜெனிவாபட்டணத்துக்குப் போய் அவரைக் கண்டு, பிரஸ்பிற்றீரியனபை ஆளுகைக்குரிய அபிப்பிராயங்களைக் கற்றுக்கொண்டார்; தம்விடம் விட்டு ஸ்கொத்லாந்துக்குத் திரும்பிப் போனபோது, அந்த அபிப்பிராயங்களை ஜனங்களுக்குத் தெரியப்படுத்தினார்; அவர்கள் அவைகளை ஒப்புக்கொண்டு பாப்மார்க்கக் கொள்கைகளையும், அதற்கியைந்த சபையின் ஒழுக்குரீதிகளையும் தள்ளிவிட்டனர்.

Establishes Presbyterianism in Scotland, A.D. 1560.

பிரிதிருத்தப்பட்ட மார்க்கம் ஸ்கொத்லாந்து தேசத்திலே 1560-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டதென்று சொல்லலாம்; அவ்வருஷத்திலே அதன் பிரதான சபை முதல்முதல் கூடியதாக. நாக்ஸ் என்பவர் அதை அந்தேசத்தார் யாவரும் அங்கீகரித்துக்கொண்டனர். இவ் வருஷத்துக்குமுன்பின் "கோவெனன்ற்கள்" விஷயமாக அறிக்கை" என்ற பிரமாண புஸ்தகம் உண்டாயிற்று; இப்படி நாக்ஸ் என்பவர் ஸ்கொத்லாந்து தேசத்தில் பிரஸ்பிற்றீரிய சபையை நாட்டி, பலராலும் புகழ்பெற்றவராய் 1572-ம் வருஷத்தில் இறந்துபோனார்.

இவர் இறந்துபோனபின்பு இவர் ஸ்தாபித்தின சபைக்கு அநேக துன்பங்கள் சேரிட்டன; 1603-ம் வருஷத்தில் இங்கிலாந்துதேசத்துக்கு இராஜனான முதலாம் ஜேம்ஸ் என்பவர் பிரஸ்பிற்றீரிய சபையில் வளர்ந்தவராயிருந்தும், இங்கிலாந்துதேசத்துக்கு அரசனான

வுடனே அவ்விடத்திலுள்ள அத்தியகு ஆளுகையையே ஸ்கொத்லாந்திலும் ஸ்தாபிக்கும்படி எத்தனித்தார். அவருக்குப்பின் பட்டத்துக்கு வந்த அவருடைய குமாரனுமிய முதலாம் சார்ல்ஸ் என்பவரும், தம்முடைய பிதா செய்ததுபோல் தாமும் செய்யவேண்டுமென்று யோசித்து, பொதுவான ஒரு ஜெபபுஸ்தகத்தை உண்டாக்கி, அதை ஸ்கொத்லாந்து தேசத்துச் சபைகளில் வாசிக்கும்படி கட்டளையிட்டார்; அதனாலே ஜனங்களுக்குள் பெரிய கலகமுண்டாயிற்று. 1643–ம் வருஷத்தில் ஸ்கொத்லாந்து தேசத்தார் இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் இருந்த பியூரிற்றனரோடு ஓர் உடன்படிக்கை செய்து, அதில் பாப்புமார்க்கத்தைத் தள்ளிவிட்டு, யாவரும் ஒருமித்துச்சேர்ந்து தங்களைக் காத்துக்கொள்ளும்படி ஒப்பந்தஞ் செய்தனர். 1648–ம் வருஷத்தில் அத்தியகு ஆளுகை நீங்கி, மறுபடியும் பிரஸ்பித்தீரிய ஆளுகை ஸ்தாபகமாயிற்று. ஜாம்வெல் என்பவர் இங்கிலென்டென்றாகன் என்னும் சமாதீனர்கள் பட்சமாயிருந்து அவர்களுக்கு அனுகூலஞ்செய்துவந்தபோதிலும், அவருடைய ஆளுகையில் ஸ்கொத்லாந்து தேசத்திலுள்ள பிரஸ்பித்தீரியர்களுக்கும் க்ஷேமமுண்டாயிருந்தது; முதலாம் சார்ல்ஸ் என்னும் அரசன்காலத்தில் தேசம் இரண்டு கட்சியாயிருந்தது. அரசனுக்கு ராஜாங்கத்தை நடத்தும் திறமையில்லை; மாறுமாறிப் பேசிவந்ததால் ஜனங்கள் இவனைப் பிடித்து இவர் 49 வயதாயிருக்கையில் 1649–ம் வருஷத்தில் சிரச்சேதம் செய்துவிட்டார்கள். 1649–ம் வருஷமுதல் 1659–ம் வருஷம் வரையில் தேசம் ஜாம்வெல் என்பவரால நடத்தப்பட்டு "காமென் வெல்த்" (Commonwealth) என்ற அரசாட்சியிலிருந்தது. ஆயினும் இரண்டாம் சார்ல்ஸ் என்பவர் 1660–ம் வருஷத்தில் அரசனானபோது, அத்தியகு ஆளுகையைத் திரும்பவும் ஏற்பித்தும்படி கட்டளையிட்டார்; அதனாலே ஸ்கொத்லாந்து தேசத்திலுள்ள பிரஸ்பித்தீரிய சபையாருக்கு அநேக பாதகங்கள் நேரிட்டன; அவர்களுக்குப்பின் ராஜாவான இரண்டாம் ஜேம்ஸ் என்பவரும் அவர்களுக்கு அதிக இம்சை செய்தார்; அநேகர் அந்நியாயமாய் மரணத்தினை யடைந்தார்கள். இக்காலத்தில் அரசன் செய்த அதிரமத்திற்குக் கணக்குவழுவில்லை. பாப்பு மார்க்கத்தாருக்கு சகாயஞ்செய்யும்படி தேசசட்டங்களை மாற்றும்படி வெகுகாய்ப் பிரயாசப்பட்டார். பார்லிமெந்தார் அதற்கிணங்காதபோது அதைக் குலைத்துவிட உத்தரவு கொடுத்தார்.

Church of Scotland in trouble.

சர்வலோகசாலைகளில் தனதிதமான பாப்பமார்க்க ஆட்களை வைக்க யோசித்தார். எல்லாருக்கும் மார்க்க சுயாதீனம் என்னும் விளம்பரத்தை ஒவ்வொரு ஆலயத்தில் கூறும்படி உத்தரவு கொடுத்து, அதற்கிணங்காத ஏழு கண்காணிமாரை காவலில் போடுவித்தார். அமர்கள விதகலேபடைத்தபின், ஜேம்ஸ் என்பவனைத் தள்ளிப்போட யோசித்தார்கள்.

அப்படியே 1688–ம் வருஷத்தில் உவில்லியம் என்பவரும், அவரது இராஜபத்தினியாகிய மரியாளும் இங்கிலாந்துதேசத்தை ஆளும்படி ஏற்பட்டபோது, தங்கள் பிரஜைகள் யாவரும் அவரவர் இஷ்டப்படி மதாசாரங்களை நடப்பித்துக்கொள்ளலாமென்ற விளம்பரஞ் செய்ததால் ஸ்கொத்லாந்து தேசத்திலுள்ள பிரஸ்பித்தீரிய சபையார் அத்தியகு ஆளுகையை முற்றிலும் தள்ளிவிட்டு, தங்கள் சுய ஆளுகையை ஸ்தாபித்துக்கொண்டனர். அக்காலத்தில் ஏற்பாடான சபை ஆளுகை ஸ்கொத்லாந்து தேசத்தில் இக்காலம்வரைக்கும் நிலைநிலையாமலிருக்கிறது.

Acquires freedom under William and Mary.

இந்த நூற்றாண்டில் சாஸ்திரவித்தைகள் மிகவும் அபிவிர்த்தியாகிக்கொண்டுவந்தன; மேதாவிசோமனிகளாயிருந்த அநேகர் பற்பலதேசங்களில்வாசஞ்செய்தனர்; பிரான்ஸ் தேசத்தில் டிக்கார்ட்டி என்பவரும் காசண்டி என்பவரும் கல்வியிற் சிறந்தவர்களாயிருந்தார்கள்; இங்கிலாந்து தேசத்தில் லார் பேகன் சிபூற்றன், பேக்கன், லாக், பாயில் என்பவர்களிருந்தார்கள்; டென்மார்க் தேசத்தில் ஹைக்கோபிராஹி என்பவரும், ஜர்மன் தேசத்தில் கெபலர் என்பவரும், இத்தாலி தேசத்தில் கலிலியோ என்பவரும் இருந்தார்கள்; இவர்களால் நத்சசாஸ்திரம், வானசாஸ்திரம், அணி இலக்கணம், இதிகாசம் முதலிய சாஸ்திரவித்தைகள் மிகவும் விர்த்தியாயின; இவர்களில் சிபூற்றன், லாக், பாயில் என்பவர்கள் கல்வியில் நிபுணர்களாயிருந்ததுபோல் தேவபக்தியிலும் சிறந்து விளங்கினார்கள்.

Eminent scholars in Europe.

ஆயினும் இந்த நூற்றாண்டில் கல்விவிர்த்தியடைந்ததுபோல் அவபக்தியும் பெருகியுந்தது; கல்விமான்களில் சிலர் கிறிஸ்துமார்க்கத்தை அலங்கரிக்கத்தக்கவிதமாய் நடந்தாலும், அநேகர் அதற்கு விரோதமாய்ப் பல நூல்களை எழுதினார்கள்; அப்படி எழுதினவர்களில்

Spread of Atheism and Infidelity.

இங்கிலாந்து தேசத்தில் ஹாப்ஸ், ஹர்பெர்ட் என்பவர்களும், ஹாலாந்தில் ஸ்பைலேஸா என்பவனும், பிரான்ஸ் தேசத்தில் வனீனி என்பவனும் பெயர்பெற்றவர்களாயிருந்தார்கள்; இவர்களிற் சிலர் தேவனே இல்லையென்று சொன்ன நாஸ்திகராயும், சிலர் ஒரே தேவன் உண்டென்று போதித்துக் கிறிஸ்துமார்க்கத்தின் முற்றச் சத்தியங்களே மறுத்தவர்களாயுமிருந்தனர்; இவர்களுடைய உபதேசங்களை அநேகர் வற்புறுத்திக்கொண்டு சத்தியமார்க்கத்துக்கு விரோதமாகத் தீய ஒழுக்கங்களில் நடந்துவந்தார்கள்; "தீயார்சொல் கேட்பதுக்கு நீதி" என்றபடி, மேற்சொன்ன கல்விமான்களுடைய உபதேசங்களைக் கேட்டு நடந்தவர்களுக்கு அதிகத் தீமையும் ஆத்தும நஷ்டமும் சேரிட்டது.



பதரு வால்டோ என்பவர் தேசாந்தரியாய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல்

இந்த நாற்றுப்பாடில் சோமக்குருக்கள் தங்கள் மார்க்கத்தைப் பூலோகமெங்கும் பிரதிஷ்டைசெய்யவேண்டுமென்று பிரயாசப்பட்டதுபோல், புரோட்டெஸ்ருண்மோர்க்கத்தார் தேவனது அருள்வேதத்தை யாவருக்கும் கூறவேண்டுமென்று கருதி நடந்ததாகத் தோன்றவில்லை;

English Nonconformists. A.D. 1615.

அக்காலத்தில் பக்திமான்களாயிருந்த சிலர் அதற்கு வேண்டிய சில அற்ப முயற்சிகள் செய்தார்களேயன்றி, மற்றவர்கள் அப்படிச் செய்தார்களென்று சொல்ல வழியில்லை. முதலாம் சார்ல்ஸ் என்பவர் இங்கிலாந்து தேசத்தில் அரசாளும்போது, அமெரிக்காவண்டத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி 1647-ம் வருஷத்தில் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது; ஆயினும் தேசத்திலுண்டான கலகத்தினாலும் தொந்தவுகளினாலும் அச்சங்கத்தார் முயற்சியின்றி சும்மா இருந்துவிட்டார்கள்; இரண்டாம் சார்ல்ஸ் என்னும் அரசன்காலத்தில் அச்சங்கம் மறுபடியும் எற்பட்டபோதிலும், அதைச் சேர்ந்தவர்கள் முன்போலவே அஞ்ஞானிகளுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி தருக்க முயற்சிகள் செய்யாமலிருந்தார்கள்; ஆயினும் கன்ஃபார்மிஸ்ட்ஸ் என்று சொல்லப்பட்டவர்களால் இங்கிலாந்து சபை அமெரிக்கா கண்டத்தில் பிரசித்தமாயிற்று; அதைக்குறித்துச் சில விசேஷங்களைச் சொல்லுமுன் இவர்களுடைய உற்பத்தியைப்பற்றி இரண்டொரு வார்த்தை சொல்வது தகுதியாயிருக்கும். இங்கிலாந்து சபையின் அத்தியக்ஷ ஊழியரை வேண்டாமென்று தள்ளினவர்களுக்கு இத்தப் பெயருண்டாயிருந்தது; இவர்களுக்கு டிசென்டர்கள் என்றும், காங்ரிகேஷனலிஸ்ட்ஸ் என்றும், நான்கான்வர்மிஸ்ட்ஸ் என்றும், இன்டிபென்டென்ட்ஸ் என்றும் பல பெயர்களுண்டு. இங்கிலாந்து தேசத்தில் முதல்முதல் காங்ரிகேஷனல் சபையை ஸ்தாபித்தவருக்கு ரொபர்ட் ப்ரௌன் என்று பெயர்; இவர் லேடன்பட்டணத்துக்குப் போய் இன்டிபென்டென்ட் சபைக்குப் போதகராயிருந்த ராபின்ஸன் என்பவரோடு சிநேகமாகி, அவருடைய அபிப்பிராயங்களை அனுசரித்துக்கொண்டு, 1616-ம் வருஷத்தில் இங்கிலாந்துக்கு வந்து, பியூரிற்றனாஸ்சேர்ந்த சில பக்திமான்களை வசப்படுத்திக்கொண்டு அச்சபையை ஸ்தாபித்தாரெனினும், எட்டு வருஷகாலம் அதை விசாரித்து, பின்பு 1624-ம் வருஷத்தில் ஹாலினியாவுக்குப் போய்விட்டார்; இவருக்குப்பின் ஜோவான் லேப்பிரா என்பவர் சபைக்குப் போதகரானார்; பிற்பாடி இச்சபையாருக்குத் தண்பம் உண்டானதால், இவர் 1634-ம் வருஷம் அமெரிக்காவிலுள்ள பிரு இங்கிலாந்துக்குப் போய்விட்டார்; இவருக்குப்பின் ஸான் என்பவர் போதகரானார்; இவர்தான் சத்தியவேதத்துக்கு முதல்முதல் தர்ஜமா இங்கிலீஷ் செய்தவர்; 1640-ம் வருஷமுதல் இந்தக் காங்ரிகேஷனல் சபை அபிவிர்த்தியாகிக்கொண்டே வந்தது; கல்வியிலும்

பக்தியிலும் சிறந்தவர்களாயிருந்த அநேகர் அதற்குப் போதகர்களா யிருந்தனர்; இவர்களுக்குள் பாக்ஸ்டர், ஓயன், பிளேவல், ஹெனரி, உவாட்ஸ், டாட்ரிஜ், ஹென்ரி, லார்ட்னர் முதலானவர்கள் பெயர் பெற்றவர்கள்; இந்தச் சபை அமெரிக்காவிலுள்ள சியூ இங்கிலாந்தி லும் ஸ்தாபகமாயிற்று; இங்கிலாந்து தேசத்திலுள்ள இச்சபையாருக்கு அதிக தண்பழுண்டாயிருந்தபடியால் இவர்களில் அநேகர் சியூ இங் கிலாந்துக்கு வலசைபோய்க்கொண்டே யிருந்தார்கள்; 1650-ம் வரு ஷத்தில் அக்காட்டில் நாற்பது சபைகளுண்டாயிருந்தன; அவைக ளில் 80 போதகன்மார்களும் 7750 சபையார்களுமிருந்தனர்.

இந்தச் சபையைச்சேர்ந்த போதகர்கள் அமெரிக்கா கண்டத்தில்

Their Missionary efforts in America under John Elliot.

அஞ்ஞான அந்தகாரத்தில் அமிழ்ந்தியிருந்த இந்தியர் என்னும் மூடஜனங்களுக்குக் கிறிஸ் துவின் இரக்ஷண மகத்துவங்களைக் கூறும் படி வேண்டிய முயற்சிகள் செய்தார்கள்; இவர் களில் யோவான் எல்லியற் என்னும் பக்திமான் புகழ்பெற்றவராயி ருந்தார்; இவர் அந்த ஜனங்களுக்குள் அதிமாய்ச் சென்று, அவர்க ளுடைய பாஷைக்கு எழுத்துக்களையும் இலக்கண நூல்களையுஞ் செய்து, அந்தப் பாஷையில் சத்தியவேதத்தை மொழிபெயர்த்து, ஒப்பில்லா கண்ணிகளைச் செய்தவரானமையால் அவருக்கு "இந்திய ரின் அப்போஸ்தலன்" என்ற சிறந்த பெயருண்டாயிற்று; கடவுள் அவருடைய பிரயாசங்கள் சித்தியாகும்படி செய்ததால், இருபதுவரு ஷங்களுக்குள் சியூ இங்கிலாந்தில் அனந்தம் இந்தியருக்கு ஞானஸ் நானங்கொடுத்து, ஆறு சபைகளை ஸ்தாபித்து, அவைகளில் 24 சுதேச போதகன்மார் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி திட்டஞ்செய்தார்; இதில் அநேகம் போதகன்மார் அவருக்கு உதவியாயிருந்தனர்.

அமெரிக்காகண்டத்தில் மேற்சொன்ன போதகன்மாரால் கிறிஸ்து

Efforts of the English Church to spread the Gospel.

மார்க்கம் அபிவிர்த்தியடைவதை இங்கிலாந்து தேசத்திலுள்ள பக்திமான்கள் கேள்விப்பட்டு, தாங்களும் அத்தன்மையான முயற்சிகளைச் செய்யவேண்டுமென்று எற்பட்டார்கள்; அதற் கென்று இந்த நூற்றாண்டின் கடையில் பிரதேசங்களில் சுவிசே ஷத்தைத் விர்த்திசெய்யும் சங்கம் என்ற ஓர் சங்கத்தை ஸ்தாபித்தனர்; இந்தச் சங்கத்தாரால் கிறிஸ்துமார்க்கம் உலகத்தில் காலா இடங்களிலும் பிரசித்தமாயிற்று.

இங்கிலாந்து தேசத்துச் சபைகள் செய்துவந்த முயற்சிகளை ஹா லாந்துதேசத்துக் கிறிஸ்தவர்கள் பார்த்து, அவர்

Missionary efforts of the Dutch in America, India and Ceylon.

களும் சிறிது பிரயத்தனங்கள் செய்தார்கள்; அமெரிக்காகண்டத்திலும், இந்து தேசத்தி லும், இலங்கைத்தீவிலும் கிறிஸ்து சபைகளை நாட்டும்படிக்கு அவர்களில் அநேகர் முயற்சிசெய்துவந்தனர்; போர்த் துக்கீஸ்காரருக்குப்பின் இத்தேசத்திற்கு வந்த ஹாலாந்து தேசத்தார் அறியாமையில் அமிழ்ந்தியிருந்த ஜனங்களுக்கு முத்திவழியைக் காட்டவேண்டுமென்று கருதினவர்கள்போல நடந்தார்கள்; ஆயினும் அவர்கள் செய்த முயற்சிகள் இலங்கைத்தீவில் சித்தியானதுபோல வேறெந்த தேசத்திலும் சித்தியாகவில்லை; சிங்களவரில் அனந்தம்பேர் கிறிஸ்துமார்க்கத்தை அனுசரித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண் டனர்; ஆயினும் அவர்கள் கிறிஸ்துராஜாசர்பேரிலுள்ள பக்தியினாலே அப்படிச் செய்யாமல், வெளிகே பிரயோஜனத்துக்காகக் கிறிஸ்தவர்க ளானதாகவே தெரிகிறது; இப்போது அவர்களுடைய குண குணங்களையும் நடக்கைகளையும் பார்க்கும்போது, அவர்களுக்குக் கிறிஸ்து மார்க்கத்தின் சன்மையும் சாரமும் தெரியாதென்றே குறிப் பிடவேண்டும்; அதை அறியாமல் கிறிஸ்துமார்க்கத்தைச் சேருகிறவர் களுக்குப் பாதி இடையாதென்பது உள்ளங்கை நெல்லியங்கனி போலப் பிரத்தியக்ஷமான காரியமே.

QUESTIONS ON SEVENTEENTH CENTURY

பதினேழாம் நூற்றாண்டின் சரித்திரத்தின்பேரில் கேள்விகள்.

1. இந்த நூற்றாண்டில் பாப்புமார்க்கத்தின் நிலை என்ன?
2. பாப்புமார்க்கத்தார் தென்னிலும் மலையாளத்திலும் கிறிஸ்துமார்க்கத்தை ஸ்தாபிக்கச்செய்த முயற்சியென்ன?
3. உலெம்பாலியர் கடன்படிக்கையின் விசேஷமென்ன?
4. பியூரிற்றனர்களைப்பற்றிச் தெரிந்ததை விபரமாய் எழுதுக.
5. குவேக்கர் யார்? எப்படி அவர்களுக்கு இந்தப் பேர் வந்தது? அவர்கள் கோள்கையென்ன?

6. சொஸினியர், யூனிற்றேரியனைப்பற்றி என்ன தெரியும்? அவர்கள் கொள்கையென்ன?

7. கல்வினர், அர்மீனியர் என்பவர்களின் ஆரம்பமென்ன? இவர்கள் கொள்கையில் காணப்பட்ட வேதாபேதமென்ன?

பதினெட்டாம் நூற்றாண்டு.

பிரான்ஸ் தேசத்தின் அரசாட்சியில் கடந்த மாறுதல். அதன் காரண [illegible] ராணியம்மாள். கெப்போலியன் போனப்பார்ட். ரோமாபுரி பாப்புவான். கடை[illegible]யோகு ரே. பாப்புமார்க்க தேசங்கள். மிஷனன், பாப்புமார்க்கத்திற்கு [illegible]ன் தே. வெல்லியன் மிஷன் சங்கத்தின் வேலைகள். பாப்திஸ்து மிஷன் சங்கத்[illegible]வேலைகள். லண்டன் மிஷனரி சங்கங்கள். பலப்பிரி சமுத்திரத்திலுள்ளபெப்பின தீவுகளில் நடக்கும் வேலைகள். அபிடேதத்தை நிச்சயித்தவர்கள் ஒல்வுடியார் [illegible]ர். ஞசனிக்கும் விதம். சுவிசேஷ பிரபலத்துக்காகச் செய்யும் முயற்சி[illegible]. பார்ய் மிஷனெரி சங்கமகிட்டத்தில் ஒர் சதேசக் நிர்ணயன் பிரசங்கரு தல்: ஓர் தகிணன் செய்த பிரசங்கம். ஓர் உபதேசி செய்த பிரசங்கங்கள். இன்னும் இரண்டுபேர் செய்த பிரசங்கங்கள். போவான் உலியம் அதரன் பேர் இரத்தசாட்சியாய் மரிக்குதல். தென் திருவிதாங்கோட்டில் [illegible]தி டன் மிஷன் சங்கத்தார் வேலை. குப்பிரிக்காவில் சர்ச் மிஷனரிகள் [illegible]தி தென்னாபிரிக்காவின் சர்ச் மிஷன் சங்கத்தார்கள். தென் இந்தியாவிலுள்ளசர்ச் மிஷனரிகள். திருநெல்வேலியிலுள்ள மிஷன்கள். திரிசினாபள்ளி லூத்தரன் சங்கத்தைச் சேர்ந்த மிஷனரிகள். சுவிசேஷ பரிபாலனத்தின் கீழ் மிஷனரிகள் சேருதல். சென்னபட்டணத்திலுள்ள மிஷனரிகள், பாடசாலைகள். கல்கத்தாவிலுள்ள மிஷனரிகள். ஆர்காட்டில் அமெரிக்கன் மிஷன். பம்பாயிலுள்ள மிஷனரிகள். பாடசாலைகள். கல்குத்தா அத்தியட்சகர்கள். பம்பாய் அத்தியட்சகர்கள். மதராஸ் அத்தியட்சகர்கள். சென்னபட்டணத்து அத்தியட்சகர்கள். பம்பாய் அத்தியட்சகர்கள். வேதாகம சங்கம், தமிழ் வேதாகம விருத்தாந்தம். சமாசார்க்கர் இது புஸ்தக சங்கம். சுதேச நிர்ணய கல்வி விருத்தி சங்கம். முதருஸ்தா மண்டலிக் பட்டணத்திலுண்டான சங்கங்கள். தினசரி நிலைமை. மதுரை அமெரிக்கன் மிஷன். அமெரிக்கன் பாப்திஸ்து மிஷன். புத்தகசாலை. ஐடன் முதலான குருமார். கோதாமலா என்பவர். சதாலத்தை சேர்ந்த. தோத்தசேஷிகள். குடியேற்றம். மார்க்க வைதிகம் விரிவடைதல். ஸ்வி ஆபிரிக்கா. பிரமசமாஜம். வேதசமாஜம். நிர்ணயர்களின் சரித்திரம். இல்லாந்து புரோட்டெஸ்தாண்டி மார்க்கம். திருச்சபையின் பிரிவினை நிலைமை. உலகத்திலுள்ள மதங்கள் தொகை. சதேசக் நிர்ணயர்களின் பரு கடமைகள். முடிவுரை.

சென்ற நூற்றாண்டின் கடையில் பிரான்ஸ்தேசத்தில் கோரமான கலகமும், அதற்கு ஏற்பட்ட நாசமும் தலைமுறை மாறினதும் மகா முக்கியமான சங்கதி. இதற்குப் பல காரணங்களுண்டு; இராஜாக்களுடைய தண்மார்க்க வைராக்கியமும், அவர்கள் அரசாட்சியில் கடந்த காலமாறுகளும், பாரமான வரிகளும் இந்தப் பெரிய மாறுதலுக்குக் காரணமாயிருந்ததன்றி, அஞ்ஞானமும் அவபக்தியும் பெருகினதும் முக்கிய காரணமாயிருந்தது. அந்தசமயத்தில் (Voltaire) வால்ற் தேயர் என்று ஓர் வல்லமான் இருந்தான்; இவன் சமாமுறைமையைத்

French Revolution, A. D. 1793, its causes and effects.

தெய்வம் என்று பாவித்து, அதே பொய்யான உபதேசங்களைப் போதித்தான். மனுஷன் ஒன்றுக்கும் கீழ் அடங்கி நடக்கவேண்டியதில்லை என்றும், இவ்வுலகமே அவன் சகல சுகங்களோடும் அனுபவிக்கத்தக்க இடம் என்றும், இதற்குப்பின் மோக்ஷமும் நரகமும் உண்டு என்று சொல்வது அபத்தம் என்றும் இப்படிப் பலவிதமாய்ப் போதித்தான். இந்த விபரீதக்கொள்கைகள் தேசமெங்கும் பாவினதால் ஜனங்கள் எல்லாரும் கடவுள் பயமில்லாமல் சன்மார்க்கதெய்வமில்லாமல் துன்மார்க்கமாய் நடந்தார்கள். கோவில், வேதம், குரு, ஜெபம் என்ற தேவபக்திக்குரிய ஆசாரங்கள் ஒன்றும் விடையாது. சிற்றின்பத்திலும் கீய ஒழுக்கங்களிலும் தோய்ந்தவர்களாயிருந்தார்கள். சாகுமாத் கடவுளையும், அவர் அருளின சத்திய மறையையும் தள்ளுகிறவர்கள் இப்படியே நாசமடைந்துபோவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. பரமராஜாவின் அதிகாரத்தைத் தள்ளுகிறவர்கள் உலக ராஜாக்களின் அதிகாரத்தை அமைப்பது ஆச்சரியமல்ல; அதையால் பிரான்ஸ் தேசத்தார் தங்கள் அரசனுடைய பதினாறாம் லூயி என்பவனைக் கொலைசெய்துபோட்டார்கள். இது 1793-ம் வருஷம் நடந்தது; இதற்குத்தான் (French Revolution) "பிரான்ஸ் செலவுஷன்" என்ற பெயர். இதற்குப்பின் நெப்போலியன் போனப்பார்ட் என்பவர் ராஜபட்டம் பெறுமளவாகும் அவ்விராஜ்யம் தன்னாசு நாடுபோல் மகா சேர்கெட்ட நிலைமையிலிருந்தது.

இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் பிரான்ஸ் தேசத்துக்குச் சக்கரவர்த்தியாயிருந்த நெப்போலியன் போனப்பார்ட் என்பவரால் ஐரோப்பா கண்டமெங்கும் அமளிபுண்டாயிருந்தது; இவர் துவக்கத்தில் பிரான்ஸ் இராஜ்யத்தைச் சேர்ந்த ஓர் தாழ்ந்த உத்தியோகத்திலிருந்தும், அதே யுத்தகளத்துக்குப் போய் வீரதீரமாய்ப் போர்செய்து ஜெயமடைந்ததினாலே, பெரும் புகழும் காட்டி, கடையில் சக்கரவர்த்தியானார்; இவரால் இறுதி சமயக்கு இடையூறுகள் உண்டாயிருந்தேயன்றி அனுகூலம் ஒன்றுமில்லை. இவர் 1814-ம் வருஷத்தில் இங்கிலிஷ்காரரோடும் புருஷியரோடும் (Waterloo) வாற்றர்லூ என்னும் இடத்தில் செய்த யுத்தத்தில் தோல்வியடைந்து, ஹெலினு என்னும் தீவுக்கு அனுப்பப்பட்டதில் கொஞ்சகாலத்துக்குப்பின் இறந்துபோனார்.

Napoleon Bonaparte.

1800-ம் ஆண்டில் 7-ம் பையஸ் என்பவர் ரோமாபுரிக்குப் பாப்புவானார்; இவர் போனப்பார்ட் என்பவரால் வெகு சிறைமைட

க்து, அதே தன்பக்கோப் பட்டம், அந்த மன்னன் யுத்தத்தில் அப

Popes of Rome. Pio Nono, A. D. 1846.

ஜெயமடைந்ததினால் இவர் முன்போல மேன் மையடைந்தார்; இவர் வேதாகம சங்கத்துக்கு விரோதமாக ஒரு சட்டம் பிறப்பித்து, அது அபிவிர்த்தியாகாதபடிக்கு வேண்டிய முயற்சிகள் செய்தார். 1823–ம் வருஷத்தில் இவர் மரித்துப்போனபின்பு, 12–ம் லீயோ என்பவர் இவர் பட்டத்தைப் பெற்றார்; இவரும் வேதாகம சங்கத்துக்கு இடை யூறுகளே யுண்டாக்கும்படியாகப் பல பிரயத்தனங்கள் செய்தார். ரோ மாண்மார்க்கக் குருமாருக்கும் மற்றவர்களுக்கும் கிருபைகளே எழுதி இச்சங்கத்துக்கு எவ்விதத்திலும் விக்கினத்தை யுண்டாக்கும்படி யோ சனை சொன்னார்; இவர் 1829–ம் வருஷத்தில் மரித்துப்போக 8–ம் பையஸ் என்பவர் பாப்புவானார்; இவர் அற்ப ஆயுசுள்ளவராய் மறு வருஷத்தில் இறந்துபோனார்; அவருக்குப்பின் 14–ம் கிரகரி என் பவர் பாப்புப்பட்டம் பெற்றார்; இவர் 1846–ம் வருஷத்தில் இறந்து போனபின்பு, 9–ம் பையஸ் என்பவர் அவர் உத்தியோகத்தைப் பெற்றார்; இவர் பாப்புப்பட்டம் பெற்றகாலத்தில் ஸ்பெயின் தேசத் தாருக்கும் லம்பர்டி நாட்டாருக்கும் யுத்தக்கலகங்களும் கலகக்களும் நடந்துவந்தன; அப்போது பாப்புவின் அதிகாரத்துக்கு அபாயம் வர வதுவாயிருந்தால், பிரான்ஸ் தேசத்தரசன் அவருக்குத் தனேயராக நின்று அவருடைய சத்துராதிகளே ஜெயித்ததுமன்றி, அக்காலமுதல் பிரான்ஸ் இராஜ்யத்தைச் சேர்ந்த சில படைவீரரைப் பாப்புவானவரைப் பாதுகாக்கும்படி ரோமாபுரியில் வைத்தார். இந்தப் பாப்பு வானவர் சன்னிமரியான் அலைஜெனனமுடையவனென்றும், மாஸில் லாக் கன்னிகையென்றும் ஒரு தூதன உபதேசித்ததை ஸ்தாபித்து, 1854–ம் வருஷத்தில் லோகமெங்கும் பிரசித்தஞ்செய்தார்.

இவருடைய ஸ்திரீகளுக்குட்பட்ட நிலம் இத்தாலியா

Roman Catholic Countries and Missions.

யில் போ என்னும் நதிக்குத் தென்பாகமாயிருக்கிற பதினேயாயிரம் சதுரமைல் விசாலமுள்ள ஒரு காடு; அதில் 25 லட்சம் ஜனம் வாசஞ்செய்கின்றனர். பாப்புவின் வசிய ஸ்திரீகளுக்குட்பட்டு உலகமெங்கும் வசித்துவருகிற ஜனங்களின் தொகை ஏறக்குறைய 8 கோடிக்கு மேலேயுண்டு. இத்தாலியா, ஸ்பானியா, போர்த்துகல் தேசங்களும், தென் அமெரிக்காவும் முற்றிலும் பாப்புமார்க்கத்தைச் சேர்ந்திருக்கின்றன. பிரான்ஸ், ஆஸ்திரியா, பிலாந்து, கனடா என்

னும் தேசங்கள் முக்கால்வாசி ரோமாண்மார்க்கத்தைச் சேர்ந்தவை கள். சுவிற்சர்லாந்தில் 7 லட்சம்பேரும், இங்கிலாந்தில் 5 லட்சம்பே ரும் பாப்புமார்க்கத்தைப் பற்றினவர்கள். இவைமன்றி ருஷியா, சுவீ டன், டென்மார்க், மேற்கு இந்திய தீவுகள், ஐக்கியதேசம் ஆகிய இவைகளில் அதேகரிருக்கிறார்கள். அங்கிலேய அரசாட்சிக்குட் பட்ட இந்த தேசத்திலும், மற்றத் தீர்காதிகளிலும் அதேகர் பாப்பு மார்க்கத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். 1862–ம் வருஷத்தில் இங்குதேசத்திலும்கொழும்பிலும் ரோமாண்மார்க்கத்தைச் சேர்ந்த 779 குருமாரும், 878,691 கையாரும், 653 பாடசாலைகளும், 22,657 பள்ளிப்பிள்ளைகளும், கோவையைச் சேர்ந்த பிரிவினைக்காராகிய போர்த்துகேசரில் 118 குருக்களும், 90,331 கையாரும் இருந்தார கக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

இவர்களில் அதேகர் அறிவீனத்திலும் அவபக்தியிலும் அமிழ்ந் தினவர்கள். வேதாகம சங்கத்தார் செய்யும் பிர

State of Popery.

யத்தனங்களால் சத்தியவேத புஸ்தகங்கள் இந்த நாடுகளில் பிரபலமாகிக்கொண்டுவருகின்றன. ரோமாண் மார்க்கத் தைக் கெடுத்தலங்களாகிய இத்தாலியா, ஆஸ்திரியா, ஹங்கேரி என் னும் நாடுகளிலும் அதேகர் சத்தியவேதத்தைப் புத்தியாய்ப் படித்து வருகிறார்கள்; ஆதலால் ஜனங்களுக்குள் ரோமாண் மார்க்கத்தின் பேரிலுள்ள அபிமானம் குறைந்துவருகிறதென்று சொல்லலாம்; சில ருக்குள் அது வளர்ந்துவந்தாலும் அதேகருக்குள் அது குறைந்துவரு கிறது. பாப்புவின் மட்டிலலாத அதிகாரம் சீக்கிரம் ஒழிந்துபோகும் என்பதற்கு யாதொரு சந்தேகமில்லே. "மகா பாபிலோன் விழுந்தது, விழுந்தது; அது பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகல வித பறவைகளுடைய கூடுமாயிற்று" என்ற திருச்சபை கம்பீரமாய்ச் சொல்லும் கான் அதிசீக்கிரம் உதிக்கும்படி பிரார்த்திப்போமாக.

இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் மூன்றும் வியார்ஜ் என்ப வர் இங்கிலாந்து தேசத்தில் அரசளுகிருந்தார்.

Missions of Wesleyan Mission Society.

போன நூற்றாண்டின் கடையில் அத்தேசத் தில் நிலவின்ற சமயத்தை அஞ்ஞான தேசங்க ளில் பிரசித்தஞ்செய்வதற்குப் பல மிஷன்கள் உண்டானதாகத் காட்டியிருக்கோம்; அவைகளில் 1786–ம் வருஷத்தில் எம்பாடான வெஸ்லியன் மிஷன் சங்கத்தார் முதல்முதல் மேல் இந்தியாவிலுள்ள

தீவிரோ ஜனங்களுக்கு முத்திவழியைக் காட்டவேண்டுமென்று உத்தேசஞ்செய்து, அவ்விடத்துக்கு நாலு போதகன்மாரை அனுப்பினார்கள்; பிற்பாடு அவர்கள் உலகத்தின் நாலாதிக்குகளுக்கும் போய்ச் சத்தியமார்க்கத்தைப் பிரசித்தஞ்செய்யவேண்டுமென்று தீர்மானஞ்செய்துகொண்டனர். இப்போது அவர்களோச் சேர்ந்த அநேக குருமார் தென் அமெரிக்கா, மேல் ஆப்பிரிக்கா, தென் ஆப்பிரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலேஷிய, பாலினேஷிய முதலான அநேகம் தேசங்களுக்கும் தீவுதீவாந்தரங்களுக்கும் போய்ச் சபையை நாட்டி, அஞ்ஞான இருளில் அகப்பட்டு மோட்சவழி தெரியாது மயங்கிக்கிடந்த அநேகம் பர்பாத்துமாக்களுக்குச் சற்குருவாகிய இரிஸ்துநாதருடைய அருள்வேதத்தைக் கூறி, அவரது திருப்பாதம் சேரும்படி அரிய முயற்சிகள் செய்துவருகிறார்கள்.

Baptist Mission Society.

1792–ம்வருஷத்தில் ஸ்தாபகமான பாப்திஸ்த் சங்கத்தார் இந்து தேசத்துக்குப் பக்திமான்களாயிருந்த இரண்டு குருமாரை அனுப்பினார்கள்; அவர்களுக்கு போவான் தோமாஸ் என்றும், கேரி என்றும் பெயர். இவர்கள் வட இந்தியாவிலுள்ள செரம்பூர் என்னும் பட்டணத்தில் போய் வாசஞ்செய்துவந்தார்கள். கொஞ்சகாலத்துக்குள்ளாக உவில்லியம் உவார்ட் என்றும், யோசுவா மார்ஷ்மன் என்றும் இரண்டு போதகன்மார் அவ்விடம் போய்ச் சேர்ந்து, எல்லாரும் இரிஸ்துமார்க்கத்தை மகா முயற்சியுடன் போதித்துவந்தார்கள். அவ்விடத்தில் ஒரு அச்சுக்கூடத்தை ஸ்தாபித்து, 1801–ம் வருஷத்தில் புதிய ஏற்பாட்டை பங்காளபாஷையில் அச்சடித்துப் பிரசித்தஞ் செய்ததுமன்றி, இன்னும் அநேக பாஷைகளில் சத்தியவேதத்தை மொழிபெயர்த்துப் பிரகாஞ்செய்தனர்; 1818–ம் வருஷத்தில் ஒரு வித்தியாசாலையை ஸ்தாபித்து, அதில் அநேகம் பாலியருக்கு உயர்ந்த வல்வினைக் கற்றுக்கொற்த்ததுமன்றி, இரிஸ்துமார்க்கத்திற் சேர்ந்த பாலியருக்கு வேதசாஸ்திரத்தைப் படிப்பித்து, வேலியர் தொழிலுக்கு யோக்கியராகும்படி முயற்சி செய்தார்கள்; இந்த மிஷன் இக்கால வரையிலும் செரம்பூரில் பிரபலமாய் நடந்தேறிவருகிறது.

1795–ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்ட லண்டன் மிஷன் சங்கத்துக்கு அநேகப் பெயரும் புகழுமுண்டு; இந்தச் சங்கத்தார் ஆபிரிக்கா தேசத்திலும் அஞ்ஞான இருளிலும் அமிழ்ந்திக்கிடக்கிற ஜனங்களுக்குக் கிறிஸ்துவின் அருள்வேதத்தைக் கூறும்படி அரிய முயற்சிகள்

செய்துவருகிறார்கள். 1796–ம் வருஷத்தில் தென்சமுத்திரத் தீவுகளுக்குப் போய் அவ்விடங்களில் வசிக்கும் துஷ்ட ஜனங்களுக்குப் பாதிரிமார்க்கத்தைக் காட்டும்படியாக 29 போதகன்மாரை அனுப்பினார்கள். இத்தீவுகள் ஆபிரிக்கா கண்டத்துக்கும் அமெரிக்கா கண்டத்துக்கும் மத்தியிலுள்ள பசிபிக் என்னப்பட்ட பெரிய சமுத்திரத்தில் இருக்கின்றன. இரவில் பொன்மலர்போன்ற வானஜோதிகளால் ஆகாயவெளி அலங்காரமாய்த் தோன்றுமாப்போல், இச்சமுத்திரமும் எண்பொருந்திய அநேக தீவுகளால் அலங்காரமாயிருக்கிறது. அவைகளில் ஒன்றாகிய தாஹித்தி தீவுக்குப் போதகன்மார்கள் போய், 16 வருஷம் கிறிஸ்துமார்க்கத்தை மிக பக்திவைராக்கியத்துடன் பிரசங்கித்துவந்தபோதிலும் ஒரு பயனு முண்டாகவில்லை. மேலே வானம் வெண்கலம்போலும், கீழே பூமி இரும்புபோலும் தோன்றிற்று. அத்தீவிலிருந்த துஷ்டஜனங்கள் ஒருவரோடொருவர் போர்செய்து அருவருப்பான விக்கிரகாராதனையை கடத்திக்கொண்டு வந்தார்கள்; அந்த யுத்தத்தினாலே போதகன்மார் நிலகாலம் தாரதேசத்துக்குப் போய் வாசஞ்செய்யும்படி நேரிட்டது. இப்படி இருக்குங்காலத்தில் தேவன் அத்தீவானா ருணுதிஷ்டியைத்துப் பார்த்தமையால், அவர்களுக்குள்ளிருந்த அஞ்ஞான இருள் நீங்கவும், மெய்ஞ்ஞான ஒளி பிரகாசிக்கவும் ஏதுவாயிற்று. முன்னே போதகன்மாருடைய வேலைக்காரராயிருந்த சுதேசிகளில் இரண்டு பேர் அவர்கள் அறியாதவண்ணம் கிறிஸ்துமார்க்கத்தின் சத்தியக்கிரமத்தை எற்றுக்கொண்டு ஒன்றுப்க்கூடி ஜெபஞ்செய்துவந்தார்கள். அநேக ஜனங்கள் அதைக்கண்டு அவர்களிடத்தில் நாளுக்குநாள் சேர்ந்து கிறிஸ்துமார்க்கத்தை அனுசரித்துக்கொண்டார்கள். இப்படி அவ்விடத்தில் தொடங்கின அந்த கல்ல கிரியை மேன்மேலும் வளர்ந்து கொண்டேவந்தது. அத்தீவிலுள்ளவர்கள் தாங்கள் வணங்கிக்கொண்டுவந்த பொய்த்தேவர்களாகிய விக்கிரகங்களை உடைத்துத் தவிடு பொடியாக்கிவிட்டு, இராஜாமுதல் குடிகள்வரை சகல ஜனங்களும் ஞானஸ்நானம் பெற்றுச் சபையைச் சேர்ந்தார்கள்; இது 1815–ம் வருஷத்தில் நடந்தது. இத்தீவிலுண்டான வெளிச்சம் மற்றத் தீவுகளுக்கும் வீசிற்று. சாந்துவிச்ச தீவுகள், ராயோற்றியா தீவு, சோசைத்தி தீவுகள், தாவையா தீவு, ஜீபார்ஜியன் தீவுகள், சாமோவா தீவு, ஹர்வை தீவுகள் முதலான அநேகத் தீவுகளில் கிறிஸ்துமார்க்கம் பிர

London Mission Society. Work in South Sea Islands.

சித்தமாயிற்று. விக்கிரகக் கோவில்களிருந்த இடங்களில் இப்போது கிறிஸ்துமார்க்க ஆலயங்களைப் பார்க்கலாம்; பாலவனம்போலிருந்த இந்தத் தீவுகள் சந்தவனம்போல் கன்றும்பச் செழித்திருக்கின்றன. துஷ்டகுணமும் கிர்மூடமும் குரூரச்செய்கையுமுள்ளவர்களும், கர மாம்ச பதுமைகளுமாயிருந்த மேற்சொன்ன தீவார்களுக்குள் கிறிஸ் தாதனின் அருள்வேதத்தால் உண்டாயிருக்கிற மாறுதல்கள் மகா ஆச்சரியமானவைகள்தான்; அவர்களெல்லாரும் இப்போது ஒழுங் கும், ஒழுக்கமும், உண்மையும், நிதேகமும், நாகரீகமுமுள்ளவர் களாயிருப்பதுமன்றி, அவர்களில் அநேகர் தேவபக்தியில் நிறைந்தவர் களாயும் இருக்கிறார்கள்.

Their devout observance of Lord's day.

அவர்கள் கர்த்தருடைய காலை மகா பக்தியாய் ஆசரித்துவரு கிறார்கள். ராரோத்தொங்கா என்னும் தீவில் இருக்கும் கிறிஸ்தவர்கள் ஒய்வுகாளின் அரு ணோதயத்தில் கூடிவந்து, அன்று பகலில்நடக் கும் தேவாராதனையைக் கடவுள் ஆசீர்வதிக்கும்படி பிரார்த்திப்பார் கள்; 9 மணிக்கு அவர்களெல்லாரும் கோவிலுக்கு வரும்போது போதகர் ஆராதனை நடத்துவார்; அதற்குமுன் அவர்களில் பத்து பன்னிரண்டு குடும்பத்தார் ஒன்றாகக் கூடி, பிரசங்கத்தில் அவரவர் ஞாபகம் பண்ணிக்கொள்ளவேண்டிய பாகத்தைக்குறித்து ஒழுங்கு செய்வார்கள். ஒருவன் பிரசங்கவாக்கியத்தையும், ஒருவன் முக வுரையையும், ஒருவன் பிரதான வகுப்புகளையும், ஒருவன் அவை களை விளக்கும் நியாயங்களையும், ஒருவன் அதற்கடுத்த ஒத்துவாக்கி யங்களையும், ஒருவன் முடிவுரையையும், இப்படிப் போதகருடைய பிரசங்கத்தை எல்லாரும் பங்கிட்டு, அவரவர் ஒரு பாகத்தை ஞாப கப்படுத்திக்கொண்டு, ஆராதனை முடிந்தபின்பு எல்லாருங்கூடி ஒரு வரையொருவர் அதைக்குறித்து விசாரித்துக்கொள்வார்கள்; அதனாலே அவர்களுக்கு வேத அறிவும் ஆராய்ச்சியும் அதிகமாயிருக்கிறது. மத்தி யானத்தில் நடக்கும் ஆராதனையில் குருவானவர் காலையில் பிரசங்கித்ததைக்குறித்து அவர்களிடத்தில் விசாரிக்கும்போது, அதைக் குறித்து அவர்கள் வெகு திட்டமாய் உத்தரவு சொல்வார்கள்; அவர்கள் ஒய்வுகாளில் ஒரு வேலையும் செய்யமாட்டார்கள்; சாப்பாட்டுக்கடுத்த காரியங்களைச் சனிக்கிழமையன்றே திட்டப்படுத்தி வைத்துக்கொள் வார்கள்; ஞாயிற்றுக்கிழமையில் பிரயாணஞ் செய்கிறதில்லை; படவில் ஏறமாட்டார்கள்; வியாபாரஞ் செய்யமாட்டார்கள்; கோவிலுக்குப்

போய் ஆராதனை செய்வதிலும், பிரசங்கம் கேட்பதிலும், வேதத்தை வாசித்துத்தியானஞ் செய்வதிலும், ஜெபஞ் செய்வதிலும் அந்தகாளைப் பிரயோஜனமாய்க் கழிப்பார்கள். கிறிஸ்து சபையாரெல்லாரும் இவ் விதமாய்க் கர்த்தருடைய காளை ஆசரிப்பார்களானால் எவ்வளவு சிறப் பாயிருக்கும்.

Their Missionary efforts.

மேற்சொன்ன தீவில் வாசஞ்செய்த ஜனங்கள் தாங்கள் அறிந்த சத்தியத்தை அஞ்ஞான அந்தகாரத்தில் அமிழ்ந் திக்கிடந்த மற்றவர்களும் அறியவேண்டு மென்று அபேக்ஷிகொண்டு, அதற்கேற்ற முயற்சிகள் செய்துவந்தனர். ஒருவிசை அவர்கள் சகமாக்கூடி வந்தபோது, அவர்களில் அநேகர் மிக இனிமையாய்ப் பிரசங்கஞ் செய்தார்கள். இராஜனுடைய தாமத்தோவா என்பவன் அச்சங்கத்துக்கு அக்கிராசனாதிபதியாயிருந்தான்; ஞானப்பாட்டுகளைப் பாடி, தேவ பிர சன்னத்துக்காகப் பிரார்த்தனை செய்தபின்பு, முதலாவது ஒரு சுதேச கிறிஸ்தவன் எழுந்து நின்று பேசத்தொடங்கினான்.

Address of a Native Christian at a Missionary Meeting.

"என் சிநேகிதரே! இன்றைக்கு நம்முடைய ஆதிநிலைமையைச் சற்றுயோசித்துப்பார்ப்போமாக: முன்னேநம் முடைய பிள்ளைகளில் எத்தனையோபேர் வன் கொலையடைந்தார்கள்; உயிரோடே இருந்த வர்கள் எத்தனையோ கொஞ்சம்! இப்போது அப்படி ஒன்றுமில்லை; தாய்தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளை வைத்துக் கொஞ்சிக் குலாவு கிறார்கள். காருண்ய கடவுள் நமக்குத் தமது அருள்வேதத்தை அளுப் பிரகம் செய்யாவிடில், இதற்குள்ளாக நமது பிள்ளைகளில் அநேகம் பேர் பிரேதங்களாயிருப்பார்கள்; இப்பொழுதோ தேவனுக்கேகத் தால் நாடோறும் நூற்றுக்கு அதிகமான பிள்ளைகள் தேவவசனத்தைப் படித்துவருகிறார்கள். முன்னே நமக்கு அறியாத ஆத்துமா ஒன்று உண்டென்று தெரியவேமாட்டாது. நமது முன்னோர்களாவது, நாம் வணங்கிவந்த தூரோ என்னும் தேவனுவது, மற்றத் தேவர்களில் யாராவது அதை நமக்குச் சொன்னதுமில்லை. திருபாசமுத்திரம் போல் விளங்காநின்றதேவன் இங்கிலாந்து தேசத்திலுள்ள பக்திமான் களைக்கொண்டு நமக்கு அழியாத ஆத்துமாக்களுண்டென்றும், நம் மைக் கரையேற்றும்படி சற்குருவாகிய இரட்சகர் இப்பூவுல கில் திருஅவதாரஞ் செய்துவந்தாரென்றும் நாம் அறிந்துகொள்ளும் படி கடாக்ஷித்திருக்கிறார்; ஆயினும் அஞ்ஞான அந்தகாரத்தில் கிடக்

கும் ஜனங்களுக்கு இந்த மங்கள சமாசாரம் தெரியுமா? அவர்கள் தங்களுக்கு விலையேறப்பெற்ற ஆத்துமா உண்டென்றும், மாணத்துக்குப்பின் மோட்சம் நரகம் உண்டென்றும் அறிந்திருக்கிறார்களா? பாவிகளே ரட்சிக்கும்படி இயேசுசுவாமி உலகத்தில் வந்தாரென்கிற நற்செய்தி எல்லாருக்கும் தெரியுமா? அநேகர் இன்னும் விக்கிரகங்களே வணங்குகிறார்கள்; அநேகர் தற்கொலை செய்துகொள்ளுகிறார்கள்; அநேகர் சிசுவதை செய்கிறார்கள். ஐயோ! எத்தனையோ லட்சம் ஜனங்கள் சற்குருவைச் சிறிதேனும் அறியாமல் சாகிறார்களே; நாம் அவர்களுக்குத் இரட்சணுமார்க்கத்தை அறிவிக்கும்படி போதகன்மாரை அனுப்புவோமாக" என்றான்.

Address of a Native Chief.

அதற்குப்பின் ஹாயார்த்தீவின் அதிபதியாகிய பெனுவாப்பிலோ என்பவன் எழுந்து நின்று சொல்லத்தொடங்கினான்: "தேவனுக்கு தற்கோத்திரங்களைச் செய்வது நமக்கு ஏற்காரியம்; என்றாலும் நம்முடைய வாக்கும் மனமும் ஒத்து அப்படிச் செய்யவேண்டும். நமது இருதயகமலத்தை இரட்சகபெருமானுடைய பாதாரவிந்தத்தில் காணிக்கையாக வைக்கவேண்டும். முன்னே நாம் தேள்களும், பல்விகளும், பாம்புகளும் நிறைந்த இருண்ட வீடுகளில் குடியிருந்தோம். நம்மைச் சூழ நமக்கு அபாயம் வருவிக்கும் இந்த விதை ஜெந்துக்கள் இருக்கிறதென்று நமக்குத் தெரியாது. தேவசனமாகிய திருவினக்கு நமது மத்தியில் வந்தபின், இருளிலே கிடந்த இந்தக் கெட்ட ஜெந்துக்களைப்பார்த்துப் பகைத்துவருகிறோம். ஐயோதேவே! சற்று யோசித்துப் பாருங்கள்: நாம் சந்தோஷப்படுகிற இந்த நாளில் எத்தனையோபேர் ஒருவனையொருவர் கொலைசெய்திருக்கிறார்கள்; எத்தனையோபேர் தங்கள் பிள்ளைகளே வதைத்துக் கொல்லுகிறார்கள்; நாம் கவிசேஷமாகிய தடாகத்திலே நீராடுகையில் எத்தனையோபேர் தங்களே அக்கினியில் தகனித்துக்கொள்ளுகிறார்கள்; இப்படிப்பட்டவர்களுக்கு நாம் ஒன்றும் செய்யவேண்டியதில்லையா? அவர்களிடத்தில் போதகன்மாரை அனுப்பவேண்டியதில்லையா? இதற்காக நாம்போருஞ் சகாயஞ் செய்யவேண்டுமே. நமக்குப் பொருளுண்டே; அதை நாம் மனஉற்சாகமாய் இந்த நல்ல விஷயத்துக்குக் கொடுக்கலாம் அல்லவா; ஆதலினாலே நாம் கடவுளைப்பார்த்து உறுதியாய்ப் பிரார்த்தனை செய்யவேண்டும்; அவர் நமது எதியோப்பியனைத்தொடும்படி இருபை பாவித்தருள செபஞ் செய்யவேண்டும்" என்றான்.

அதற்குப்பின் உபதேசவேலை செய்துவந்த மதுரா மிஷன் சங்கத்தில் எழுத்துநின்று பேசத் தொடங்கினான்: "முன்னே நமக்குள் இரண்டு வகையான சிறையிருப்பு உண்டு. முதலாவது பொய்யான தேவர்களுக்கும், இரண்டாவது இராஜாவின் வேலைக்காரருக்கும் இறைப்பட்டிருந்தோம். இப்போது நமக்குள்ளிருக்கிற ஒருவன் முன்னே துஷ்டதேவதைகளுக்கு அடிமையாயிருந்தவன்; அவர்களுக்கு நரபலி செலுத்தினவன்; இப்போது அவன் உலகரட்சகராகிய இயேசுநாதருடைய அடைக்கலம் சேர்ந்திருக்கிறான். முன்னே நம்முடைய வீடுகள் ஆந்திகள் ஒன்றும் நமக்குச் சொந்தமென்று சொல்ல வொத நிலைமையிலிருந்தோம்; இராஜாவின் உத்தியோகஸ்தர் எண்ணவோப்போல நமது வீடுகளில் நுழைந்து, சாமான்களெல்லாவற்றையும் கைப்பற்றிக்கொண்டுபோய்விடுவார்கள்; அந்தத் துஷ்டருடைய கண்ணுக்குத் தெரியாதபடி தன் பொருள் கிடக்க மனதுக்குள் புதைத்திருந்தவன் நமக்குள் இல்லையா? இப்போதோ இந்தக் கொடிய வழக்கங்களெல்லாம் அற்றுப்போயின; நாம் சமாதானமாய் நமது காலத்தைத் தள்ளிக்கொண்டிருக்கிறோம்; இதற்கெல்லாம் காரணமென்ன? நமது புண்ணியமா? சத்துவமா? ஞானமா? இல்லை இல்லை; இரட்சணுசுவாமியின் கவிசேஷமே அழகாகவெல்லாம் அகற்றிவிட்டது. நமக்கு இப்போது இருக்கிற நல்ல வீடுகளும், பக்கச் சிறப்பான கட்டில்களும் இருக்கின்றன; தேவனுக்கே ஸ்தோத்திரம்" என்றான்.

"Address of another Catechist.

காவிகேம்தர்ஸ் தீவுகளில் உபதேசவேலை செய்துவந்த இன்னொருவன் எழுந்துநின்று சொல்லுவான்: "தேவன் சூரிய சந்திராதிகளாகிய இரண்டு பெரிய சுடர்களேயுண்டாக்கி அந்தரவெளியில் காட்டினதைத் திருக்கிறார்; இருளே நீக்கும்படிக்கே அவைகளைச் சிருஷ்டித்திருக்கிறார்; நம்முடைய மிஷன் சங்கமும் அதுபோல் ஒரு பெரிய வெளிச்சமாயிருக்கிறது; உலகத்தில் பிரபலித்திருக்கும் இருளையும் அந்தகாரத்தையும் அகற்றி, இரட்சணுநாதருடைய இரட்சணியத்தை எல்லாருக்கும் தெரிவிப்பதே அதன் நோக்கமாயிருக்கிறது; நீசகையால் இருளிலும் மரணநிழலிலும் உட்கார்ந்திருக்கிற பாவாத்மாக்கள்மேல் இந்த வெளிச்சம் பிரகாசிக்கும்படி நமது பொருளைக் கொடுத்து உதவிசெய்வோமாக" என்றான்.

இதற்குப்பின் ஆபூரோ என்பவன் எழுந்துநின்று பிரசங்கம் பண்ணினான்: "தேவன் நமது அற்ப உதவியின்றி எதையும் செய்ய வல்லவர். "வெளிச்சம் உண்டாகக்கடவது" என்று சொல்ல, வெளிச்சமுண்டாயிற்று; ஆயினும் அவர் கம்மைக்கொண்டு தமது கிரியையை நடத்தத் திருவுளங்கொண்டிருக்கிறார்; ஆகையால் நாம் இங்கிலாந்து தேசத்திலுள்ள தாய்ச்சங்கத்தாருக்கு உண்மாலியன்ற பொருள்சகாயத்தை உற்சாகமாய்ச் செய்வோமாக. ஆத்மகோடிகளை ஈடேற்றும் விஷயத்தில் பிதாவாகிய தேவனுக்கும், குமாரனுகிய தேவனுக்கும், பரிசுத்த ஆவியாகிய தேவனுக்கும் அநேக கிரியைகள் உண்டு; இப்படித் திரியேக தேவன் கிரியைசெய்துவரும்போது நாம் சும்மாயிருக்கலாமா" என்றான். Another address.

இதற்குப்பின் வேறொருவன் எழுந்துகின்று: "இயேசுசுவாமியின் திருத்தொண்டர் சமஸ்த ஜனங்களுக்கும் அவரது சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யாதிருக்கமாட்டார்கள்; இந்த விஷயத்தைத் சென்று கொடுக்கும் காணிக்கைக்கு எந்தப் பெயர் வந்தாலுமிருக்குமென்று நான் யோசித்துப் பார்த்தால், "கெட்டுப்போன ஆத்துமாக்களைத் தேடும் பொருள்" என்னும் பெயர் தகுதியாயிருக்குமென்று நினைக்கிறேன். அந்தகாரத்தில் அமிழ்ந்து கிடக்கும் பாபாத்துமாக்கள் கெட்டுப்போன ஆத்துமாக்களல்லவா? ஆகையால் அவர்களைக் கரையேற்றும்படி செய்யும் முயற்சிகளுக்கு அனுகூலமாய்க் கொடுக்கப்படும் பொருள், "கெட்டுப்போன ஆத்துமாக்களைத் தேடும்பொருள்" என்று சொல்லலாமல்லவா? நமக்கு ஒரு காரியம் தேவையென்றால் பணங்கொடுத்து வாங்குகிறோம்; ஒரு படகு தேவையானால் அதற்குப் பொருள் கொடுக்கிறோம்; ஒரு வலை தேவையானால் அதற்கு விலை கொடுத்து வாங்குகிறோம்; அப்படியிருக்க, கெட்டுப்போன ஆத்துமாக்களைக் கிறிஸ்துகர்த்தரின் திருப்பாதம் சேர்க்கும்பொருட்டுப் பொருள் கொடுக்கவேண்டியதில்லையா? ஐயோசால சகோதரரே! நீங்கள் இதை கன்றாய்ச் சிந்தித்து, அதற்குத் தக்க முயற்சிகளைச் செய்யுங்கள்" என்று சொல்லிப் பிரசங்கத்தை முடித்தான். அந்தகாரத்தில் அதோகதியாய் அமிழ்ந்திக் கிடக்கும் ஜனங்களுக்குக் கிறிஸ்துமார்க்கத்தை அறிவிக்கவேண்டுமென்ற விஷயத்தைப்பற்றி இந்த ஜனங்களுக்குள்ளிருந்த ஆவலைக் இத்தேசத்துக் கிறிஸ்தவர்களுக்கு இருக்குமாயில் எவ்வளவு மனமையாயிருக்கும்? Another address.

மேற்சொன்ன தீவுகளிற் போய்க் கிறிஸ்துமார்க்கத்தைப் பிரசித்தஞ்செய்த போதகன்மாரில் யோவான் வில்லியம்ஸ் என்பவர் மிகவும் கீர்த்திபெற்றவர்; இவர் 1796-ம் வருஷம் லண்டன்பட்டணத்தில் பிறந்தவர். 1816-ம் வருஷத்தில் குருப்பட்டம் பெற்று, அவரும் அவர் பத்தினியும் லண்டன்பட்டணத்தை விட்டுப் புறப்பட்டு, இங்கிலாந்து தீவுக்குப் போய் வாசஞ்செய்து, அவ்விடத்திலிருந்து அநேகம் தீவுகளுக்குச் சென்று கிறிஸ்துமார்க்கத்தை மகா பக்திவைராக்கியத்துடன் பிரசங்கித்து, அநேகம் பாபாத்துமாக்கள் சற்குருவின் சாயலுகியடையும்படி அரிய முயற்சிகள் செய்தார்கள். ஒரு சமயம் அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்பொருட்டு எர்மாங்காத் தீவுக்குப் போனபோது, அவ்விடத்திலுள்ள சில துஷ்ட ஜனங்கள் அவரைத் தடியினால் அடித்துக் கொன்றுபோட்டார்கள். இப்படி இந்த மாதாத்துமா 23 வருஷம் தமது பரமகாயராகிய கிறிஸ்தேசு சுவாமிக்கு ஊழியஞ்செய்து, 1839-ம் வருஷத்தில் அவருக்காகத் தமது ஜீவனையும் விட்டுப் பேரின்பலோகம் சேர்ந்தார். தென்சமுத்திரத் தீவுகளில் நடந்த ஆச்சரிய சம்பவங்களையெல்லாம் "சுவிசேஷ நெறும்" என்னும் புஸ்தகத்தில் சவிஸ்தாரமாய்ச் சொல்லியிருப்பதால், இவ்விடம் அவைகளை அதிகமாய் விரித்துச்சொல்லாமல் விட்டு விட்டோம். John Williams, a martyr, A.D. 1839.

மேற்சொன்ன லண்டன் மிஷன் சங்கத்தார் இப்படி மூலமுதல் தென்சமுத்திரத் தீவுகளில் கிறிஸ்துமார்க்கத்தைப் பிரசித்தஞ்செய்யும்படி முயற்சிகள் செய்தபோதிலும், "நீங்கள் உலகமெங்கும் போய்ச் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்ற திருக்கற்பனையை நினைத்து, மற்ற அநேக தேசங்களுக்கும் போதகன்மாரை அனுப்பி, ஜனங்களுக்கு மூத்திவழியைக் காட்டி வருகின்றனர். இந்தியா, சீனா, மலாக்கா, சிங்கப்பூர், ஜாவா, ருஷியா, தென் ஆப்பிரிக்கா, மடகஸ்கார் முதலான அநேக தேசங்களில் இச்சங்கத்தைச் சேர்ந்த குருமார்கள் ஒரு பத்திரசார்பியத்துடன் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துச் சபைகளை ஸ்தாபித்திருக்கிறார்கள். விசேஷமாய்த் தென் திருவிதாங்கோட்டில் அவர்களுக்கு ஒரு கல்ல மிஷன் இருக்கிறது; அதில் சுமார் 28,000 ஜனங்கள் கிறிஸ்துமார்க்கத்தைப் பிடித்துவருகிறது Other Missions of London Mission Society, particularly in South Travancore.

மன்றி, அவர்களில் அநேகர் அறிவிலும், தேவபக்தியிலும், தர்ம சிக்ஷையிலும் சிறந்து விளங்குகின்றனர். நாகர்கோவிலில் சான்றோர் பள்ளிக்கூடம் ஒன்றிருக்கிறது; அதில் வாசித்த அநேகர் தேவஊழியஞ் செய்துவருகிறார்கள்.

Church Mission Society. Bishop Crowther in Africa.

1799-ம் ஆண்டில் ஸ்காட், ஸ்மியன், கிபூற்றன், உவில்பர் போர்ஸ், தாண்றன் என்னும் காமதேயங்களையுடைய பக்திமான்கள் கூடி, சர்ச் மிஷன் சங்கத்தை ஸ்தாபித்தனர். இச்சங்கத்தாருக்குத் துவக்கத்தில் அநேக இடையூறுகள் சேரிட்டன. இந்தியாவில் கும்பினியாராலும், ஆப்பிரிக்காவில் அழகை வியாபாரிகளாலும் இவர்களுக்குப் பலத்த தடைகள் உண்டாயிருந்தன; ஆயினும் அவர்கள் மனந்தளர்ந்துபோகாமல் தேவாலுக்கிரகத்தை முன்னிட்டுத் தங்கள் முயற்சிகளை மகா ஊக்கத்துடன் செய்துவந்தமையால், அத்தடைகளெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கிப்போயின. அவர்கள் முதலாவது மேல் ஆப்பிரிக்காவிலுள்ள சீரலியோன்பட்டணத்தில் தங்கள் வேலையை ஆரம்பித்தார்கள். இங்கிலிஷ் தரைத்தளத்தார் அப்பட்டணத்தில் ஒரு இராணுவத்தை வைத்து; அடிமைகளைக் கொண்டுபோகும் கப்பல்களைப் பிடித்து அவர்களை விடுதலைசெய்யும் படியாக ஒழுங்கு செய்திருக்கிறார்கள். அப்படி விடுதலைபெற்ற அடிமைகளாகிய காப்பிரிகளுக்குச் சர்ச் மிஷன் சங்கத்தார் கிறிஸ்துமார்க்கத்தால் உண்டான விடுதலையைக் கூறலும், பரகதிமார்க்கத்தைக் காட்டவும் அவ்விடத்திற்குப் போதகன்மாரை அனுப்பினார்கள். இப்போது அவ்விடத்திலும் அதைச் சுழ்ந்த காடெனிலும் கடந்திருக்கிற மானுதல்களைப் பார்க்குமபோது வெகு ஆச்சரியமாயிருக்கிறது. அறிவீனத்திலும் அந்தகாரத்திலும் அமிழ்ந்திக் கிடந்த அநேகம்பேர் கிறிஸ்துசபையைச் சேர்ந்து வெகு ஒழுக்கமாய் நடந்துவருகிறார்கள். அநேகம் பிள்ளைகள் கல்வி கல்வியைக் கற்றுவருஞார்கள். அநேகம் பாலியர் தேசசாஸ்திரங்களைப் படித்து வேதியர் தொழில் செய்துவருகின்றனர். இவர் குருக்களாக ஏற்படுத்தித் தங்கள் தேசஸ்தருக்குக் கிறிஸ்துமார்க்கத்தை மனோக்கியத்துடன் பிரசங்கித்துவருகிறார்கள். சபையாரில் அநேகம்பேர் தங்கள் குருமாருக்கும், பாடசாலைகளுக்கும் செல்லும் செலவுகளையெல்லாம் மன உற்சாகமாய்க் கொடுப்பதினாலே அவ்விடத்திலுள்ள சபை சுயாதினமடைந்திருக்கிறது. சில வருஷங்களுக்குமுன் கறேசனில் ஒருவர் அச்சபைகளுக்குக் கண்

காணியாளராயிருந்தார்; அவருக்குச் சாமுவேல் கிறௌதர் என்று பெயர். அவர் பூர்வோத்தரம் வெகு விசேஷமுள்ளது; அவர் 13 பிராயமாயிருக்கையில் அடிமை வியாபாரிகள் வந்து அவரைப் பிடித்துக் கொண்டு போகும்போது, இங்கிலிஷ் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் அந்தக் கப்பலைப் பிடித்து மற்றவர்களோடுகூட அவரையும் விடுதலை செய்தனர். அதற்குப்பின் அவர் இங்கிலாந்து தேசத்துக்குப் போய் வித்தியாப்பியாசஞ்செய்து, தமது சுயதேசத்துக்குத் திரும்பி, குருவாக ஏற்பட்டு, சத்தியமார்க்கத்தை மனோக்கியத்துடன் பிரசங்கித்து வந்தார். அதைச் சேர்ந்தவர்களுள்ள பக்திமான்கள் பார்த்து, அவர் உயர்ந்த அத்தஸ்துக்கு பேர்க்கியர் என்று கிறீனத்து, கண்காணி என்ற சிறந்த பட்டத்தைக் கொடுத்தார்கள். அவர் வெகுகாலம் ஆப்பிரிக்காவிலுள்ள கைஜர் மிஷனிலிருந்து தமது வழியத்தைப் பார்த்துவந்தார். அவர் செய்துவந்த வேலையால் ஆப்பிரிக்கா சபைக்கு நன்மை வரும்படி தேவன் இருபைபுரிவாராக.

C.M.S. Missions.

இப்படிச் சர்ச் மிஷன் சங்கத்தாருக்கு மேல் ஆப்பிரிக்காவில் நல்ல சபைக ளிருக்கிறதுபோல், இன்னும் அநேக இடங்களிலும் சபைகளிருக்கின்றன. மேற் ஆப்பிரிக்கா, தென் ஆப்பிரிக்கா, மத்திய ஆப்பிரிக்காவிலுள்ள யூகண்டா, அபிசீனிக்கூட்டா, இந்தியா, இலங்கை, சீனா, ஜப்பான், பிரேசிலாந்து, மேல் இந்தியா, வட அமெரிக்கா முதலான அநேக தேசங்களில் இச்சங்கத்தைச் சேர்ந்த போதகன்மார் கிறிஸ்துமார்க்கத்தைப் பிரசங்கித்துச் சபைகளை ஸ்தாபித்திருக்கிறார்கள்.

Missions in South India, A.D. 1813.

1813-ம் வருஷம் வரைக்கும் கிறிஸ்துமார்க்கக் குருமார் தங்கள் மார்க்கத்தை இந்தேசத்தாருக்குப் போதிக்கக் கூடாதென்று இராஜாங்கத்தார் சட்டம் பிறப்பித்திருந்தனர். அதை அவ்வருஷத்தில்தானும் பினியார் மறுபடியும் இந்தேசத்தைக் குத்தகையெடுத்தவுடனே மாற்றிப்போட்டார்கள். அதனாலே 1814-ம் வருஷத்தில் சர்ச் மிஷன் சங்கத்தார் தென் இந்தியாவில் மிஷனை ஸ்தாபித்தார்கள். சென்னபட்டணம், திருநெல்வேலி, திருவிதாங்கோடு, மசூலிபட்டணம், எல்லூர், பெல்லாடா என்னும் இடங்களில் அவர்களுக்குச் சபைகளுண்டு; அவைகளில் சுமார் 50,000 ஜனங்கள் இருக்கிறார்கள்.

மேற்சொன்ன மிஷன்களிலெல்லாம் திருநெல்வேலியிலிருக்கப்பட்ட மிஷன் முக்கியமானது. அங்காட்டில் முதன் முதல் கிறிஸ்து

மார்க்கம் உண்டான விஷயீ்தைப்பற்றிப் போன நூற்றாண்டின் சரித்திரத்தில் சொல்லியிருக்கிறோம்; இதற்குமுன் செய்யப்பட்ட முயற்சிகளெல்லாம் தஞ்சாவூரிலிருந்தவனுத்தரன் ஐயன்மாராலும், இங்கிலாந்திலுள்ள இறிஸ்துமதக் கல்வி அபிவிர்த்தி சங்கத்தாராலும் நடத்துவர்தன. இப்போது சர்ச் மிஷன் சங்கத்தார் திருநெல்வேலி நாட்டில் இறிஸ்துமார்க்கத்தைப் பிரசித்தஞ்செய்யும்படி அரிய பிரயத்தனங்கள் செய்தார்கள்.. 1814–ம் வருஷத்தில் அவர்கள் ஸ்வாரே ஐயரையும், இரேனியஸ் ஐயரையும் தரங்கம்பாடிக்கு அனுப்பினார்கள். அவர்கள் அப்படியே தரங்கம்பாடிக்குப் போய்த் தமிழ்ப்பாஷையைக் கற்று, மதுரைவருஷத்தில் சென்னபட்டணத்துக்குப் போய்ப் பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்தார்கள். சில காலைக்குப்பின் இரேனியுஸ் ஐயர் சென்னபட்டணத்திலும், ஸ்வாரே ஐயர் தரங்கம்பாடியிலுமிருந்து பள்ளிக்கூடங்களை விசாரித்து வரும்படி ஒழுங்கு செய்தனர். ஸ்வாரே ஐயர் தரங்கம்பாடியில் சபைவிசாரணை செய்துவரும்போது, கிறிஸ்தியான் தாவீது ஐயரும், பொவான் தேவசகாயம் ஐயரும் அவருக்குள் அறவல் பார்த்துவந்தார்கள். இரேனியுஸ் ஐயர் சென்னபட்டணத்தி லிருந்துகொண்டு திருப்பாச்சூர் சித்தூர் முதலான இடங்களுக்குப் போய், இந்துக்களுக்குக் கிறிஸ்துமார்க்கத்தைப் போதித்துவந்தார்; அன்றியும் சென்மார்க்க புஸ்தக சங்கமும், வேதாகம சங்கமும் ஸ்தாபிக்கப்பட்டபோது, அவருக்கு கூடவிருந்து வேண்டிய உதவிசெய்தார். இப்படி அவர் தமது திருப்பணிவிடையை பத்திசுவாலாபியத்துடன் செய்துவரும்போது, திருநெல்வேலியில் இலெவிஷ்ட இராஜாவுத்தைச் சேர்ந்த குருவாகிய ஹாப் ஐயர் அங்காட்டிற்குப் போதகன்மாரை அனுப்பவேண்டுமென்று சர்ச் மிஷன் சங்கத்தாரைக் கேட்டுக்கொண்டதின்பேரில், அவர்கள் 1820–ம் வருஷத்தில் இரேனியுஸ் ஐயரை திருநெல்வேலிக்கு அனுப்பினார்கள். அவர் பாளையங்கோட்டையில் மிதராபமாயிருந்துகொண்டு ஜனங்களுக்கு முத்திவழியைக் கூறிவந்தார். அவ் வருஷத்தில் சென்னபட்டணத்திலிருந்த ஸ்மித் ஐயரும் அவ்விடத்திற்குப் போய், 10 வருஷகாலமீராக இருவரும் சேவையழியாதை சீர்வணக்கமாதையுடன் செய்துவந்தார்கள். இவர்களாலும் இவர்களுக்குப் பின்வந்த அநேக குருமாராலும் திருநெல்வேலி நாட்டில் அனேகம் பேர் கிறிஸ்து சபையைச் சேர்ந்திருக்கிறார்கள். தஞ்சாவூர், தரங்கம்பாடி, திருநெல்வேலி முதலான இடங்களில் கிறிஸ்துமதக் கல்வி அபிவிர்த்தி சங்கத்தார் விசாரித்துவந்த சபைகள் 1826–ம் வருஷத்தில் சுவிசேஷ பிரபல்யத்தினைச் சேர்ந்துபோயின; ஆயினும் அந்த ஆதி சங்கத்தார் இச்சொன்னபரியந்தம் பொருளுசகாயம் புஸ்தகசகாயஞ்செய்து, இங்கிலாந்து சபையைச் சார்ந்த மிஷனைப் பரிபாலித்துவருவதுண்டு. சர்ச் மிஷன் சங்கத்தையும், சுவிசேஷ பரிபாலன சங்கத்தையும் சேர்ந்திருக்கிற சபையார், சுமார் லட்சம்பேரிருப்பார்கள்; அவர்களில் அனேகர் கல்வியிலும், ஞானத்திலும், பக்தியிலும், தர்மசிக்ஷையிலும் மேன்மேலும் வளர்ந்துவருகிறார்கள். சில வருஷங்களுக்குமுன் சர்ச் மிஷனில் ஒரு சதோ குருமாத்திரம் இருந்தார்; இப்போ தரங்கம்பாடி, மாயவரம், திருநெல்வேலி முதலான இடங்களில் சுமார் 50 வருஷகம் சேவையியற்றை மகா வைராக்கியத்துடன் பார்த்துவரும், இந்தியாவிலும் இங்கிலாந்திலும் யாவராலும் புகழ்பெற்றவருமாயிய யோவான் தேவசகாயம் ஐயர் இப்போதோ இரண்டு மிஷன்களிலும் 198 பேர்வரையும் குருப்பட்டம் பெற்ற சேவையழியாதை முயற்சியுடன் பார்த்துவருகிறார்கள். பாளையங்கோட்டையில் சர்ச் மிஷனைச் சார்ந்தாய் வேத வித்தியாசாலை ஒன்றும், சாஸ்திர வித்தியாசாலை ஒன்றும், பெண்களுக்காகப் போதனை வித்தியாசாலை ஒன்றும், மூயர் தர இங்கிலிஷ் பாடசாலை ஒன்றும் ஸ்தாபித்திருக்கின்றன. திருநெல்வேலியில் உயர்ந்த கல்விச்சாலை ஒன்று அந்தப் பட்டணத்தில் சர்ச் மிஷனைச் சார்ந்தாய் ஸ்தாபகமாயிருக்கிறது. அதில் மேல்ஜாதியைச் சார்ந்த 400 இந்துப்பிள்ளையர் படிக்கிறார்கள், அவர்களில் சிலர் கிறிஸ்துமார்க்கத்தை அறுசரித்திருக்கிறார்கள். சுவிசேஷ பிரபல மிஷனைச் சார்ந்தாய்ச் சாயர்புரத்தில் அநேகவருஷமாயிருந்த சாஸ்திரப் பள்ளிக்கூடம் இப்போது தூத்துக்குடியில் உயர்ந்த கல்விச்சாலையாக வளர்ந்திருக்கிறது. கல்வியிலையத்தில் மாத்திரமல்ல, சபைவிஷயத்திலும், இக்காட்டில் அதிக அபிவிர்த்தியிருந்தால் 1876–ம்வருஷம் திருநெல்வேலிச் சபைகளில் அநேக வருஷங்களாய்த் சேவையழியாது செய்துவந்த இரண்டு ஸோப்பிய குருமார் கல்குத்தாகமியில் அத்தியகூர்காக அபிஷேகம் பெற்றனர். அவர்கள் பெயர் மகா கனம்: கால்ட்

S.P.G. and C.M.S. Missions in Tinnevelly.

S.P.G.K. Missions transferred to S.P.G. A.D. 1826.

வெல் அத்தியக்ஷரும், மகா கனம் சார்ஜென்ற் அத்தியக்ஷர்களுமே. இவர்கள் இருவரில் சார்ஜென்ற் அத்தியக்ஷர் சர்ச் மிஷன் சபைகளையெல்லாம் சுற்றி அதேக தேசிகளாகிய உபதேசிமாருக்குக் குருப்பட்டமும், ஞானஸ்நானக்கான சபையாருக்குத் திட்டப்படுத்தலும் கொடுத்து யாவருக்கு முன்பாகவும் நிதமாநிரியாய் நடந்து 1889-ம் வருஷத்தில் பாத்தருக்கு அதிபக்ருவமுடையவராய் மரித்துப்போயினர். காள்ட்வெல் அத்தியக்ஷரும் சுவிசேஷ பிரபல மிஷன் சபைகளில் மேற்சொன்ன வகையாகவே நடந்து விருத்தாப்பியத்திலுலே தேவனழியத்தைச் செய்ய எலாமையால் தனது வேலையை ராஜினாமா செய்துவிட்டுப் பழனிமலையில் வசித்துக் கடைசியில் பரலோகஞ் சென்றுவிட்டார். இவ்விருவர்பார்த்து வந்த பெரிய சபைகளை மகா கனம் உயிர்ஸிலீஸ் அத்தியக்ஷர் பார்த்து வருகிறார். இவர்களால் திருநெல்வேலி ஜில்லாவில் இறிஸ்தவர்களுக்குள்ளும் இந்துக்களுக்குள்ளும் கல்விவிர்த்தி அதிகம். சர்ச் மிஷன் சங்கத்தாருக்கு மலையாளதேசத்திலும் கல்வி சபைகளுண்டு. அவ்விடத்திலும் 10,000 பேர்வரையும் தங்கள் முன்னேர்களுடைய மார்க்கத்தை விட்டுவிட்டுச் சத்தியமார்க்கத்தை அனுசரித்திருக்கிறார்கள். அவர்களில் சிலர் இப்போது குருக்களாக ஏற்பட்டு, தங்கள் தேசத்தாருக்குக் இறிஸ்துமார்க்கத்தை வைராக்கியத்துடன் போதித்துவருகிறார்கள்.

Missions in Madras.

இப்படியே சென்னபட்டணத்திலும் சபையின் காரியம் விர்த்தியடைத்துவருகிறது. சுவிசேஷபிரபலமிஷன், சர்ச் மிஷன், லண்டன் மிஷன், வெஸ்லியன் மிஷன், ப்ரீ சர்ச் மிஷன், சர்ச் ஆப் ஸ்காட்லாந்து மிஷன், லுத்தரன் மிஷன், டேனிஷ் மிஷன், பாப்திஸ்து, மெதடிஸ்து முதலிய ஆசை மிஷன்களைச் சேர்ந்த போதகர்மார் இருந்துகொண்டு இறிஸ்து மார்க்கத்தைப் பிரசித்தஞ்செய்து வருகிறதுமன்றி, கதேசிகள் கல்வியில் தேறும்பொருட்டுப் பாடசாலைகளை ஸ்தாபித்து இங்கிலிஷ்பாஷையையும் தமிழ் தெலுங்கு இந்துஸ்தானி முதலான பாஷைகளையும் கற்றுக்கொடுத்துவருகிறார்கள். சர்ச் மிஷனைச் சார்ந்த ஜோப்பிய ஐயன்மாரில் இருவர் சென்னபட்டணத்துச் சுற்றுமதில்களில் அஞ்ஞானிகளுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டுவருகிறார்கள். அவர்களில் ஒருவர் இப்போது சர்ச் மிஷன் வேதசாஸ்திரப் பள்ளிக்கூடத்தின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

Educational Institutions.

இப்படிக் இறிஸ்துமதக் கல்வி விர்த்தியடையும்படி முயற்சி செய்தவர்களில் ப்ரீ சர்ச் மிஷனைச் சேர்ந்த யோவான் ஆண்டர்சன் ஐயர் புகழ்பெற்றவராயிருந்தார். இவரும் இவருடைய சிநேகிதரும் இந்துக்களாகிய பாலியருக்கும் பெண்களுக்கும் நல்ல கல்விகளைக் கற்றுக்கொடுக்கும்படி அரிய முயற்சிகள் செய்தார்கள். இப்படி இவர்களிடத்தில் கல்வி கற்றவர்களில் அநேகர் இறிஸ்துமார்க்கத்தை அனுசரித்திருக்கிறார்கள். சிலர் குருக்களாயும் இருந்து திருப்பணி விடை செய்கிறார்கள். தற்காலத்தில் அந்த மிஷனைச் சார்ந்ததாகச் சென்னைக் இறிஸ்தவ கல்விச்சாலை யொன்று வெகுகாலமாய் நடந்து வருகிறது. அதற்கு முதல் தலைவர் கனம் மில்லர் ஐயர் என்னும் பண்டிதர். சுமார் 1,500 பிள்ளைகளும் வாலிபரும் இக்கல்விச்சாலையில் படித்து வருகிறார்கள். தற்காலம் டாக்ட்டர் ஸ்பின்னர் இதன் தலைவர். அப்படியே லண்டன் மிஷன், வெஸ்லியன் மிஷன், சர்ச் ஆப் ஸ்காட்லாந்து மிஷன் ஸ்தலங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கல்வி கற்றவர்க இந்த பாலியரில் சிலர் தங்கள் பந்து ஜனங்கள் பாஷையும் விட்டுவிட்டுச் சற்குருவின் சரணத்தி அடைத்திருக்கிறார்கள்.

American Reformed Dutch Mission, Arcot.

சென்னபட்டணத்துக்கு நாலு ஐந்து காதத்துக்கப்பாலுள்ள ஆற்காடு, வேலூர், சித்தூர், ஆரணி முதலான இடங்களில் ஒரு மிஷன் உண்டு; அதற்கு "அமெரிக்கன் சீர்திருத்த புரோட்டெஸ்துண்டு மிஷன்" என்று பெயர். இதை ஆற்காட் மிஷன் என்றும் சொல்வார்கள். இந்த மிஷனைச் சேர்ந்த சபையார் 3,000 பேர் உண்டு. இந்த ஐயன்மார் சுவிசேஷத்தைக் இறிஸ்தவர்களுக்கும் அஞ்ஞானிகளுக்கும் கதேசபாஷைகளில் வைராக்கியத்துடன் பிரசங்கித்துவருவதுமன்றி, தமிழிலும் தெலுங்கிலும் சில நல்ல புஸ்தகங்களைப் பிரசுரஞ்செய்தும் வருகிறார்கள்.

Missions in Bengal.

இவ்விதமாய்க் இறிஸ்துமார்க்கம் சென்னை இராஜதானியில் பிரபலமாகிவருவதுமன்றி, பம்பாய் பங்காள இராஜதானிகளிலும் பிரசித்தமாகிவருகிறது. பங்காளாட்டில் பரகதிமார்க்கத்தைப் போதிக்கும்பொருட்டு, 1768-ம் வருஷத்தில் யோர்தான்டர் ஐயர் போனார்; அவருக்குப்பின் கேரி, மார்ஷ்மன் முதலான பாப்திஸ்த் மிஷன் குருமார் போனார்கள்; அவர்களைப்பற்றி இதற்குமுன் சொல்லியிருக்கிறோம். பங்காளத்தில் இங்

லிவிங்ஸ்டன் இராணுவத்தைச் சேர்ந்த ஒரு நல்ல குரு இருந்தார்; அவருக்கு ஹென்ரி மார்ட்டின் என்று பெயர். இவர் கல்வியிலும் பக்தியிலும் மிகச் சிறந்தவர். இவர் இந்தேசத்தார் சத்தியமார்க்கத்தை அறியவேண்டுமென்று அபேஷைகொண்டுவேதத்தைப் பார்ஸ்பாஷையில் மொழிபெயர்த்ததுமன்றி, தம்வசனத்தோறும் ஜனங்களுக்குப் பிரசங்கித்தும்வந்தார். அதைக் கேட்டவர்களில் அப்துல் மேசே என்பவர் ஒருவராயிருந்தார்.

Abdool Messeh first convert and minister.

இவர் மகம்மதியனும் பார்ஸ் அரபி பாஷைகளை நன்றாய்க் கற்றவராயுமிருந்தார். இவர் 1810-ம் வருஷத்தில் சான்புரியிலிருந்த மார்ட்டின் ஐயர் பிரசங்கத்தைக் கேட்டு, ஆத்துமவிசாரங்கொண்டு, மதப்பரீட்சை செய்யும்படி ஏற்பட்டார். மேற்சொன்ன குருவினிடத்தில் அவர் அடிவல் பெற்றதினாலே கிறிஸ்துமார்க்கத்தின் சத்தியங்களை ஒருவாறு அறிந்துகொள்ள ஏதுவாயிற்று. மார்ட்டின் ஐயர் இக்கஸ்தானிபாஷையில் மொழிபெயர்த்திருந்த புதிய ஏற்பாட்டை அப்துல் மேசே என்பவர் வாசித்துப் பார்த்து, கிறிஸ்துவேமே சத்திய மார்க்கமெனத் தெளிந்து, 1811-ம் வருஷத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். சிலகாலத்திற்குப்பின் சேரி ஐரோப்பாகூட ஆக்ரா புட்டணத்துக்குப் போய், அவ்விடத்தில் சர்ச் மிஷன் சங்கத்தைச் சேர்ந்து உபதேசி ஆலவல்பார்த்து, அநேக ஜனங்களுக்கு முத்திவழியை காட்டிவந்தார். இப்படி அவர் கிறிஸ்துமார்க்கத்தைப் பக்திவைராக்கியத்துடன் பிரசங்கித்துவந்தினாலே, 1825-ம் வருஷத்தில் குருப்பட்டம் பெற்று இலங்மணபுரியிலிருந்து சுவிசேஷத்தைப் போதித்துவந்தார். இப்படி வெகுகாலமாய் அவர் கிறிஸ்தராக்ஷகருக்குத் தொண்டுசெய்துமகம்மதுமார்க்கத்தாரில் அநேகரைப் புண்ணிய வழியில் திருப்பி, 1827-ம் வருஷத்தில் மரித்துப்போனார்.

இப்படி பங்காளாநாட்டில் சர்ச் மிஷன் சங்கம், சுவிசேஷ பிரபல சங்கம், பாப்டிஸ்ற் மிஷன் சங்கத்தாரைச் சேர்ந்த குருமார் இருந்து கிறிஸ்துமதத்தைப் பிரசித்தப்படுத்திவிருவதுபோல, லண்டன் மிஷன், ப்ரீ சர்ச் மிஷன், வெஸ்லியன் மிஷன் முதலான தங்களோச் சேர்ந்த பிரசங்கிமாரும் இருந்து சத்தியமார்க்கத்தைக் கூறிவருகிறார்கள். இவர்களில் ப்ரீ சர்ச் மிஷனைச் சேர்ந்த டவ் ஐயரும், லண்டன் மிஷனைச் சேர்ந்த மல்வன்ஸ் ஐயரும் புகழ்பெற்றவர்கள். இவர்

Educational Institutions.

கள் இந்துபாலியருக்கு உயர்ந்த கல்விகளைப் புகட்டும்படி பாடசாலைகளை ஏற்படுத்தி, மெனகெட்டு வைதீக கல்விகளை விர்த்திசெய்துவந்தார்கள். அவர்களிடத்தில் படித்தவர்களில் பலர் கிறிஸ்துமார்க்கத்தை அனுசரித்துக் குருப்பட்டம் பெற்றதற்கள் தேசத்தாருக்கு முத்திவழியை காட்டிவருகிறார்கள். மல்வன்ஸ் ஐயருடைய பத்தினி அறிவினத்தில் அமிழ்ந்திக்கிடக்கும் இந்துஸ்திரீகளுக்கு நன்மை செய்யும்படி கருதி, அந்தப்புர பாடசாலைகளை ஸ்தாபித்து, அநேகமோட்டிகளுக்குக் கல்வி கற்றுக்கொடுத்துவந்தார்கள்; அவர்களுக்குப் பிரயோஜனமாக "மாதர் பூஷணம்" என்னும் புஸ்தகத்தையும் எழுதினார்கள்.

இப்படி மிஷன் சங்கங்களாலே இந்தேசத்தில் கிறிஸ்துமார்க்கம் பிரபலமானதுபோல ரும்பினியார் செய்த சில ஏற்பாடுகளினாலும் சபை அனுகூலமடைந்தது. 1814-ம் வருஷத்தில் இந்தேசத்திற்கு ஒரு கண்காணியாளை ஏற்படுத்தவேண்டுமென்றும், அவர் கல்குத்தா நகரிலிருந்துகொண்டு ஒருவராய் இத்தேசத்திலுள்ள சபைகளெல்லாம் விசாரித்துவரவேண்டுமென்றும் சட்டம் ஏற்பட்டது. இப்படி முதல்முதல் கல்குத்தாவில் கண்காணியாளாயிருந்தவருக்கு மிடில்டன் என்று பெயர். இவர் கல்குத்தாவில் ஒரு வித்தியாசாலையை ஸ்தாபித்தார்; அதற்கு (Bishop's College) "அத்தியகூர் ஸ்தியாசாலை" என்று பெயர். அவருக்குப்பின் ஹீபர் என்பவர் 1822-ம் வருஷத்தில் அத்தியகூரானார். இவர் கல்வியில் தேர்ந்தவராயும் பக்தியில் சிறந்தவராயுமிருந்தார். இவர் சபைகளை விசாரித்துக்கொண்டு போகுமார்க்கத்தில் திருச்சிராப்பள்ளிக்கு வந்து, ஒரு தெப்பக்குளத்தில் ஸ்நானஞ்செய்யும்போது தவறி விழுந்து மூழ்கிப்போனார். அதற்குப்பின் 1827-ம் வருஷத்தில் ஜேம்ஸ் என்பவர் அத்தியகூரானார். இவர் கொஞ்சகாலத்தில் இறந்துபோனதின்பின் 1829-ம் வருஷத்தில் டர்னர் என்பவர் அத்தியகூரானார். இவருக்குப்பின் பாடசாலையும் புகழ்பெற்ற தானியேல் உவில்சன் என்பவர் 1832-ம் வருஷத்தில் அத்தியகூராகி, 25 வருஷகாலம் இந்த உயர்ந்த உத்தியோகத்தைப் பார்த்து, சபைகளுக்கு அதிகம் நன்மைகள் செய்தார். இவர் இறந்தபின்பு 1858-ம் வருஷத்தில் காட்டன் என்பவர் கண்காணிப்பட்டம் பெற்றார். இவர் வித்தியாசோமணிகளிலும் பரோபகாரிகளிலும் விளங்கினார். இவராலே இத்தேசத்துக்கு அநேக நன்மைகள் வினையுமென்று எல்லாரும் நம்பிக்கொண்டிருக்குங்காலத்தில், சிலகாலத்திற்

முன் கப்பலேயிட்டுக் கரைக்கு வரும்போது, கால் தடுமாறி விழுந்து காணாமற்போனார். பின்புமில்மன் என்பவர் அவர் பட்டத்தைப் பெற்று உத்தியோகஞ்செய்துவந்தார். இவர் சரித்திரக்காரனுடைய மில்மன் என்பவருக்கு மூமைகள்முறை. இங்கிலாந்தில் 28 வருஷம் குருவாக வராயிருந்து, 1867–ம் வருஷத்தில் இத்தேசம் வந்து சேர்ந்தார். இவர் கல் தேசசபை அதிகம் விஸ்தாரமடைந்தது. சர்த்தருக்கென்ற கல்ல ஊழியனுகெப்பு கடைசியில் 1867–ம் வருஷம் மரித்துப்போனார். பின்பு ஜான்சன் என்பவர் அந்த உத்தியோகத்தைப் பார்த்துவந்தார்கள். தற்காலம் மகா கனம் கோப்ல்ஸ்டன் இந்த வேலைசெய்கிறார்கள்.

Bishops of Madras.

துவக்கத்தில் இப்படிக் கல்குத்தாவில்மாத்திரம் ஒரு அத்தியக்ஷர் இருந்துகொண்டு, இந்த தேசம் இலங்கையைத் தவிரவுள்ள சபைகளையெல்லாம் விசாரிக்கும் படி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. சிலகாலத்திற்குப்பின் இது ஒரு வருக்கு அதிக பாரமான வேலையாயிருக்குமென்று கும்பினியார் தீர்மானித்து, சென்னபட்டணத்திலும், பம்பாயிலும், கொழும்பிலும் அத்தியக்ஷர்களை ஏற்படுத்தினார்கள். இப்படி 1835–ம் வருஷத்தில் சென்னை இராஜதானிக்கு முதல் அத்தியக்ஷராக ஏற்பட்டவர் தானியேல் "காறி" என்பவர். இவருடைய பெயராலே ஒரு இலக்கண பாடசாலை யுண்டாகி இக்காலவரைக்கும் நடத்தேறிக்கொண்டுவருகிறது. இவர் இறந்தபின்பு 1837–ம் வருஷத்தில் ஸ்பென்ஸர் என்பவர் கண்காணியானார். இவர் சில வருஷகாலமிருந்து பிற்பாடு இங்கிலாந்து தேசத்துக்குப் போய்விட்டார். 1849–ம் வருஷத்தில் அவருடைய பட்டத்தைத் தோமாஸ் டால்ரிமிரி என்பவர் பெற்றுச் சபைகளுக்கு அதிக கன்மைகள் செய்தார். இவர் இறந்தபின்பு 1861–ம் வருஷத்தில் மிடெனிக் ஜெல் என்பவர் அத்தியக்ஷரானி, தமது பரமராயருடைய ஊழியத்தைப் பரிவைராக்கியத்துடன் வெகு சாலபரியந்தம் பார்த்துவந்தார். இவர் 1820–ம் வருஷம் பிறந்து 1843–ம் வருஷத்தில் பி. ஏ. பட்டமும், 1861–ம் வருஷத்தில் டி. டி. என்ற வேதசாஸ்திரப் பட்டமும் பெற்று இந்தியாவுக்கு அதேவருஷம் அத்தியக்ஷராகப் புறப்பட்டு வந்தார்கள். அவருடைய பக்தியையும், புத்தியையும், தேவஊழியத்திலிருக்கும் வைராக்கியத்தையும் இவ்வளவென்று சொல்லிமுடியாது. அவருக்குத் தேவன் தீர்க்காயுசைத் தந்து, அவரால் இந்த இராஜதானியிலுள்ள கிறிஸ்தசபைகளுக்கு எண்ணிறந்த நன்மைகள் விளையும்படி அருள்புரிந்தார்.

பம்பாய் இராஜதானிக்கு முதல் அத்தியக்ஷர் தோமாஸ் கார் என்பவர்; இவர் 1836–ம் வருஷத்தில் பட்டம் பெற்றார்; அவருக்குப்பின் 1851–ம் வருஷத்தில் ஹார்டிங் என்பவர் கண்காணியானார். பின்பு டகலஸ் என்பவர் அத்தியக்ஷராயிருந்து சபைகளை விசாரித்துக்கொண்டுவந்தார். 1876–ம் வருஷம் மில்னே என்பவர் அத்தியக்ஷராகி தேவ ஊழியத்தை வெகுகாலம் நடத்திவந்தார். கொஞ்சக்காலமாக நமக்கு வேறு ஸ்தானங்களில் அத்தியக்ஷர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அது எக்கேயென்றால், திருவிதாங்கோடு, அயோத்திநகரி, சோட்டாநாக்பூர், பஞ்சாப்தேசம் என்பனவேயே.

Bishops of Bombay.

Noble efforts of the British and Foreign Bible Society.

போன நூற்றாண்டில் அதிக மிதன் சங்கங்கள் தோன்டானது போல இந்த நூற்றாண்டிலும் சில சங்கங்கள் ஏற்பாடாயின; அவைகளில் வேதாகம சங்கம் மகா விசேஷித்தது. உவேல்ஸ்காபிடல் தோமாஸ் கூசார்ல்ஸ் என்ற பக்திபுள்ள ஒரு ஒரு இருந்தார்; அவர் 1802–ம் வருஷம் லண்டன்பட்டணத்திற்குப் போய், "ஓய்வுநாள் பள்ளிக்கூடங்களுக்கு வேதாகம புஸ்தகங்கள் இல்லாததால் அதிகம் பின்னேகன் தேவசனத்தைப் படிக்க எதுவில்லை" என்றும், "அப்புஸ்தகங்களை அச்சிட்டுப் பிரசித்தஞ்செய்யும் ஒரு சங்கத்தை ஸ்தாபிப்பது உத்தமமாயிருக்கும்" என்றும் தம்முடைய நேதெதில் சில பக்திமான்களுக்குச் சொன்னார். அவர்களெல்லாருங்கூடி அவர் சொன்ன கல்ல யோசனையை அங்கீகரித்து, 1804–ம் வருஷத்தில் ஒரு சங்கத்தை ஏற்படுத்தி, அதற்கு "பிரிட்டானியா அந்நியதேச வேதாகம சங்கம்" என்று பெயரிட்டார்கள். தேவன் அருளின சத்திய வேதத்தை வியாக்கியானமில்லாமல் சுத்தாங்கமாய் உலகத்திலுள்ள பாஷைகளிலெல்லாம் பிரசித்தஞ்செய்வதே இச்சங்கத்தின் நோக்கம். உலகத்தில் மூவாயிரம் பாஷைகளும் பாஷைகளின் விகற்பமுமாய் வழங்கிவருகிறதாம். அவைகளில் 1,200 பாஷைகள் அமெரிக்கா கண்டத்திலும், 278 பாஷைகள் ஆப்பிரிக்கா கண்டத்திலும், 545 பாஷைகள் ஐரோப்பா கண்டத்திலும், 977 பாஷைகள் ஆசியா கண்டத்திலும் வழங்கிவருகிறதாம். இவைகளில் சத்திய வேதாகமம் சுமார் எண்ணூறு பாஷைகளில் பிரசித்தமாயிருக்கிறது; அதில் இங்கிலிஷ்பாஷையிலுள்ள வேதாகமத்தைப் பதினேந்துகோடி ஜனங்களும், சீன பாஷையிலுள்ள வேதாகமத்தை

மூப்பத்தாறுகோடி ஜனங்களும், மற்றப் பாஷைகளிலுள்ள வேதாகமத்தை இரண்டுகோடி ஜனங்களும் வாசிக்க வகுவிருக்கிறது. இப்படிப் பார்க்கும்போது உலகத்திலுள்ள நூறுகோடி ஜனங்களில் பாதிக்குமேல் சத்திய வேதத்தை வாசிக்கத்தக்கதாக இச்சங்கத்தார் தேவாலுக்கிரகத்தினாலே முயற்சிசெய்து வந்திருக்கிறார்கள். இச்சங்கம் ஏற்பாடான காலமுதல் இதுவரை சுமார் 13½ கோடி சத்திய வேதாகமமும் அதின் பங்குகளும் அச்சிட்டுப் பல விடங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

History of the Tamil Bible.

இச்சங்கத்திற்கு உதவிச்சங்கங்கள் அகத்தமுண்டு; ஆலமரத்துக்கு விழுதுகள் அநேகமாயிருப்பதுபோல, இந்த வேதாகமசங்கமாகியமரத்துக்கு அநேகம்பாகங்கள் உண்டு. கம்முடைய தேசத்திலும் இதைச் சேர்ந்த உதவிச்சங்கங்கள் சிலவுண்டு; இச்சங்கங்களாலே வேதாகமம் இத்தேசத்திலுள்ள பல பாஷைகளில் பிரசித்தமாகிவருகின்றன. இதில் தமிழ்ப்பாஷையிலுள்ள வேதாகமத்தின் ஆரம்பத்தைக்குறித்து இதற்குமுன் இரண்டொரு விசேஷங்களைச் சொல்லியிருக்கிறோம். தரங்கன்பாடியிலுள்ள குருமார்களில் சேன்பால்க் என்பவர் புதிய ஏற்பாட்டையும் பழைய ஏற்பாட்டில் ஒரு பங்கையும் தமிழில் மொழிபெயர்த்தாரென்றும், பிற்பாடுபெப்ருவரியில்ஐயர் பழையஏற்பாட்டை முடித்து எல்லாவற்றையும் பார்வையிட்டு பிரசுரஞ்செய்தாரென்றும் காட்டியிருக்கிறோம். அப்பால் திருநெல்வேலியிலிருந்த இரேனியஸ் ஐயர் புதிய ஏற்பாட்டைத் திருத்திப் பிரசித்தஞ்செய்தார்; அது அநேக வருஷகாலமாய்ச் சில தமிழ்ச்சபைகளில் வழங்கிவந்தது; பிற்பாடு யாழ்ப்பாணத்திலிருந்த பெர்சிவல் ஐயர் முழுவேதாகமத்தையும் திருத்திப் பிரசுரஞ்செய்தார். அது வடமொழியின் மிகுத்ததாயும் செம்பாகமான தமிழ்நடைக்குச் சற்றுப் பேதிப்பட்டதாயும் இருந்தமையால், தமிழ்த் தெரிந்தவர்கள் அதை அதிகமாய் வழங்கவில்லை. கடைசியில் பவர் ஐயரும், இண்ணஞ்சில ஐயன்மாருங்கூடி, வேதாகமசங்கத்தாருடைய அனுமதிப்படி மேற்சொன்ன திருப்புதல்களையெல்லாம் பார்த்து, புதிய ஏற்பாட்டைத் திருத்திப் பிரசித்தஞ்செய்திருக்கிறதுமன்றி, பழைய ஏற்பாட்டையும் அப்படியே பார்வையிட்டார்கள்; இனித் தமிழ்ச் சபையில் இந்தத் திருப்புதலே வழங்கிவருமென்று சொல்லலாம்.

1800-ம் வருஷத்தில் இங்கிலாந்து தேசத்தில் சன்மார்க்கச் சிறு புஸ்தக சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. ஜியார்ஜ் பார்டர் என்னும் ஒரு பத்தியுள்ள குருவானவர் இச்சங்கத்தைவற்புறுத்தவேண்டுமென்று தமது இஷ்டர்களுக்குச் சொன்ன யோசனையை அவர்கள் ஒப்புக்கொண்டு அதன்படி செய்தார்கள். வேதாகம சங்கத்திற்கு உலகமெங்கும் உதவிச் சங்கங்களிருப்பதுபோல இச்சங்கத்திற்கும் அநேக உதவிச்சங்கங்களுண்டு. அதில் ஒன்று சென்னபட்டணத்திலிருக்கிறது; அது 1818-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. அதற்கு இரேனியஸ் ஐயர் முதலாம் காரியதரிசியாயிருந்தார். கல்குத்தாபட்டணத்திலும் 1825-ம் வருஷத்தில் ஒரு உதவிச்சங்கம் உண்டாயிற்று. இன்னும் அநேக இடங்களில் இப்படிப்பட்ட சங்கங்களுண்டாகிச் சன்மார்க்கச் சிறு புஸ்தகங்களைக் கணக்கிலடங்காதவிதமாய் அச்சடித்துப் பிரசாரஞ்செய்து வருகிறார்கள். 1850-ம் வருஷத்தில் இச்சங்கத்தார் ஐம்பதாம் வருஷமாகிய ஜூபிலி பண்டிகையைக் கொண்டாடினபோது, அதுவரைக்கும் அவர்கள் நூற்றுப்பத்துப் பாஷைகளில் பிரசுரஞ்செய்த புஸ்தகங்கள் ஐம்பதுகோடி என்று கணக்கிட்டார்கள். இந்த மதிப்பின்படி தற்காலபரியந்தம் அவர்கள் பிரசித்தஞ்செய்த புஸ்தகங்கள் எழுபதுகோடிக்குமேல் இருக்குமென்று உத்தேசிக்கலாம். இந்த இராஜதானியில் தமிழ்முதலான திராவிடபாஷைகளில் பிரசுரமான புஸ்தகங்களும், சிறு புஸ்தகங்களும் பலகோடியுண்டு. இவ்வளவு ஏராளமான புஸ்தகங்களாலே எத்தனையோ ஜனங்களுக்கு இவர நன்மைகள் உண்டாயிருக்குமென்று சொல்வதற்கு என்ன சந்தேகம்?

Religious Tract and Book Society, A.D. 1800.

இந்தச் சங்கத்தினாலும் வேதாகம சங்கத்தினாலும் இத்தேசத்திலுள்ள கிறிஸ்து சபைக்கு அநேக அனுகூலங்கள் உண்டாயிருப்பதுபோல, கிறிஸ்த சுதேச பாஷை கல்விவிர்த்தி சங்கத்தினாலும் அதற்கு அதிக அனுகூலமுண்டாயிருக்கிறது. 1857-ம் வருஷத்தில் பங்காள நாட்டில் அங்கிலேயதுரைத்தனத்தைச் சேர்ந்த சிப்பாய்களாலே பெரிய கலகமுண்டாயிருந்தது யாவருக்கும் தெரிந்தசாரியம்; அதனாலே அங்கிலேயருக்கு அதிகப் பொருள் நஷ்டமும் பிராணநஷ்டமும் உண்டாயிற்று. அதற்கு காரணம் என்னும் ஒரு கர்மசண்டாளன் சூரனாயிருந்தான். இந்தக் கலகம் அமர்ந்தபின்பு இங்கிலாந்து தேசத்திலுள்ள சில பக்திமான்கள்: "தீமையை நன்மையினாலே வெல்லு"

Christian Vernacular Education Society.

என்ற வேகசத்தியத்தை மினைத்து, இவ்வளவு தன்பத்தை உண்டாக் கின தேசத்தாருக்கு என்ன கன்மை செய்யலாமென்ற யோசித்து, பல இடங்களில் பாடசாலைகளை ஸ்தாபிக்கவும், பாலியருக்குச் சதேச பா ஷைகளில் கிறிஸ்துமார்க்கக் கல்விகளைக் கற்றுக்கொடுக்கவும், அதற்கு வேண்டிய புஸ்தகங்களைப் பிரசாரஞ்செய்யவுக்க நோக்கத்தைக் கொண்டு இச்சங்கத்தை எற்படுத்தினார்கள். இப்போது மிஷன் பள் ளிக்கூடங்களில் உபயோகித்துவருகிற பஸ்தகங்களெல்லாம் மூக் காலுவாசி இச்சங்கத்தார் பிரசாரஞ்செய்யும் புஸ்தகங்களாம். இக்கா லத்தில் அதின்பேரை கிறிஸ்தவ கல்விவிர்த்தி சங்கம் என்று மாற்றியி ருக்கிறது. தென்பாகத்தில் வெகுகாலம் இதில் காரியதரிசியாயிருந்து வேலையை நடத்தினவர்கள் டாக்டர் மர்டாக் துரையவர்கள்.

1808-ம் வருஷத்தில் யூதருக்குக் கிறிஸ்துமார்க்கத்தைப் பிரித் தஞ்செய்யும்படி லண்டன்பட்டணத்தில் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இதைப்போல இன்னும் இரண்டு சங்கங்களுண்டு. இந்த மூன்று சங்கத்தாரும் லண்டன், எருசலேம், தூர்க்கி, ஜர்மன், ஹா லாந்து, போலாந்து முதலான நாடுகளில் வசித்துவருகிற யூதருக் குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வருகிறார்கள். அவர்களுக்குச் சா ஸ்திரப் பள்ளிக்கூடங்களையும், வைத்தியசாலைகளையும், பாடசாலைக ளையும் ஏற்படுத்தி, அவர்கள் கல்விவிஷயங்களில் தேறும்படி முயற்சி செய்கிறார்கள்.

* London Society's Mission to the Jews, A. D. 1808.

கி. பி. 70-ம் வருஷத்தில் எருசலேம்பட்டணம் அழிந்ததுமுதல் இக்காலபரியந்தம் யூதருடைய நிலைமையை நோக்குங்கால், மகாவிசித்திரமாயிருக்கிறதென் றே சொல்லவேண்டும். அவர்கள் எல்லா ஜாதியாருக்கும் ஒரு பழ மொழிபோலிருக்கிறார்கள். அவர்கள் பட்ட துன்பங்களும் சங்க டங்களும் கொஞ்சமல்ல. இப்போதிருக்கிற யூதர்களின் தொகை ஏறக்குறைய 77 லட்சத்துப் பதினையாயிரம். இதில் ஐரோப்பா கண் டத்தில் இருபதுலட்சம், ஆசியா கண்டத்தில் எழுலட்சம், ஆப்பிரிக் காகண்டத்தில் ஐந்துலட்சம், அமெரிக்கா கண்டத்தில் பதினையாயி ரம் என்று உத்தேசிக்கிறார்கள். "இவர்களில் கொஞ்சப்பேர் போக மற்றவர்களெல்லாரும் புதிய ஏற்பாட்டை சம்பூரணமும் நிஷேகரித்த சே சங்கள் மேசியாவாகிய உலகரக்ஷகர்" என்ற அறியாமலும் இருக்கி றார்கள்; இதிலும் பேற்சொன்ன சுவிசேஷகரின் முயற்சிகளினால்

State of the Jews.

